முற்போக்குக் காலகட்டத்துச் சிறுகதைகள்

தொகுப்பாசிரியர்
செங்கைஆழியான்
க. குணராசா

பூபாலசிங்கம் பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்போக்குக் காலகட்டத்துச் சிறுகதைகள்

தொகுப்பாசிரியர்

செங்கை ஆழியான் க. குணராசா

பதிப்பாசிரியர்

பூ. ஸ்ரீதரசிங்

9852
894



பூபாலசிங்கம் பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : முற்போக்குக் காலகட்டத்துச் சிறுகதைகள்

தொகுப்பாசிரியர் : செங்கை ஆழியான் (கலாநிதி க.குணராசா)

பதிப்பாசிரியர் : பூ. ஸ்ரீதரசிங்

பதிப்பு : மாசி 2010

வெளியீடு : பூபாலசிங்கம் பதிப்பகம்
202, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொ.பே.: 011 2422321, 2435713
மின் அஞ்சல்.: pbdbo@sltnet.lk

Title : Murpokkuk Kalakkattatuch Sirukataikal

Compiled By : Senkai Aaliyaan (Dr. K. Kunarasa)

Published By : R.P. Sritharasingh
Poobalasingham Pathippakam
202, Sea Street, Colombo - 11.
Tel: 011 2422321, 2435713
E.mail: pbdbo@sltnet.lk

ISBN 978-955-9396-40-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரை

பூபாலசிங்கம் புத்தகசாலை ஒரு வியாபார நிலையமாக மட்டுமன்றி ஓர் அறிவுக் கூடமாகவும் விளங்கியமைக்கு எமது தந்தையாரே காரணமாவார். அவர் காலத்தில் இலக்கியகர்த்தாக்கள் ஒன்றுகூடும் இடமாக எங்கள் புத்தகசாலை விளங்கியது. இன்று பெருமைபடப் பேசப்படும் பல பேரறிஞர்கள் எங்கள் தந்தையின் நண்பர்கள். வியாபாரமே நோக்கமாக அல்லாது வாசிப்பினையும் ஊக்குவிக்க வேண்டும் எனும் நோக்கோடு எங்கள் தந்தையார் ஆரம்பித்த பூபாலசிங்கம் புத்தகசாலை இன்றும் அப்பணியைத் தொடர்கிறது.

இதன் தொடர்ச்சியாக வெளியீட்டு முயற்சியிலும் ஈடுபட வேண்டும் எனும் பெருவிருப்பு உண்டாகியது. அந்த விருப்பத்தால் யாழ்ப்பாணத்தில் இருந்த போது 'பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடு' என்ற பெயரில் மூதறிஞர் 'சொக்கன்' அவர்களின் 'பத்திக் சந்' எனும் மொழிபெயர்ப்பு -லினை முதன்முதலில் வெளியிட்டோம். தொடர்ந்து ஓரிரு புத்தக வெளியீடுகளோடு போர்ச்சூழலால் அம்முயற்சி நின்றுபோனது. பின் 1993இல் கொழும்புக்கு இடம்பெயர்ந்து இங்கு எங்கள் புத்தகசாலையை ஆரம்பித்ததும், அடிமனதில் கிடந்த -ல் வெளியீட்டு விருப்பம் மீண்டும் தலை தூக்கியது. 1993இல் 'பூபாலசிங்கம் பதிப்பகம்' எனும் அமைப்பைத் தொடங்கி தரமான -ல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டோம். இம்முயற்சியின் பெறுபேறாக பத்துக்கும் மேற்பட்ட -ல்களை இதுவரை வெளியிட்டுள்ளோம்.

ஈழத்தைப் பொறுத்தவரை வெளியீட்டு முயற்சிகள் இன்னும் வளர்ச்சி பெறவில்லை என்பதே உண்மை நிலை. தமிழகத்தைப் போல விரிந்த வாசகர் வட்டம் இங்கில்லாதிருப்பது பெரிய குறை. அரசாங்கத்தின் ஆதரவும், ஏற்றுமதி வசதியும் இல்லாத நம் நாட்டுச்சூழலில் வெளியீட்டு முயற்சி என்பது மிகச் சிரமமான காரியம். இந்நிலையில் புத்தக விற்பனைத் தொடர்புகள் இருப்பதால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வெளியீட்டு முயற்சியில் தொடர்ந்து துணிந்து முயன்று வருகிறோம்.

'முற்போக்குக் காலகட்டத்துச் சிறுகதைகள்' எனும் இத் தொகுப்பு -ல் பிரபல எழுத்தாளரும், நிர்வாக அதிகாரியும், புவியியலாளரும், இலக்கிய முயற்சிகளில் ஓயாது உழைப்பவரும், தனக்கென ஓர் சொந்தப்பார்வை உடையவரும் எங்கள் நண்பரு மான செங்கை ஆழியான் க. குணராசா அவர்களால் தொகுக்கப் பட்டுள்ளது. அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

இதுவரை எங்கள் ஆக்கங்களுக்கு ஆதரவு தந்த வாசகர்களை நன்றியோடு வணங்குகின்றோம். இந்-லுக்கும் தங்கள் ஆதரவு வேண்டி ஈழத்து இலக்கிய உலகுக்கு 'முற்போக்குக் காலகட்டத்துச் சிறுகதைகளை' மகிழ்ச்சியோடு சமர்ப்பிக்கிறோம்.

30.01.2010 **பூ. ஸ்ரீதரசிங்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்போக்குக் காலகட்டத்துச் சிறுகதைகள்

ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் 1950 தொட்டு 1960 வரையிலான காலகட்டத்தை முற்போக்குக் காலமென வகுத்துக் கொள்ளலாம். எனது ஈழத்துச் சிறுகதை வரலாறு என்ற நூலுக்கு முன்னுரை எழுதிய பேராசிரியர் அ. சண்முகதாஸ். 'முற்போக்குக் காலம் 1950 - 1960 என அமைக்கும் காலப்பகுப்பு பொருத்தமோ வென ஆராய வேண்டியுள்ளது' என ஐயம் எழுப்பியுள்ளார். நியாயமான ஐயப்பாடு. ஈழத்துப் படைப்பாளிகள் அனைவரும் மானிடத்தின் முன்னேற்றத்திற்காக தமது பேனாக்களை முன்னெடுக்க முன்வந்த காலம் இதுவாகும். ஈழத்தமிழ் சமூகத்தின் விடிவை நோக்கி, அதாவது சமூகப்பிரச்சினைகளான வறுமை, சாதிய அடக்குமுறை, சமூக ஏற்றத்தாழ்வுக்கு எதிராகவோ, இனவொடுக்கலுக்கு எதிராகவோ மக்களைச் சமூகப் புரட்சிக்கு ஒன்றிணைக்கின்ற பணியை இக்காலகட்டத்துப் படைப்பாளிகள் முன்னெடுத்துள்ளனர். இதனைத்தான் பேராசிரியர் கா. சிவத்தம்பி, 'இந்நூற்றாண்டில் நின்று கொண்டு பின்னோக்கிப் பார்க்கும் போது, ஈழத்தமிழ் நவீன வளர்ச்சியில் முற்போக்கு வாதம் குறிப்பாக 1950 களின் பின்னர் முக்கியமான ஓரிடத்தைப் பெறுகின்றது என்பது பற்றி கருத்தொருமைப்பாடே உண்டு' என்கிறார். படைப்பிலக்கியத்தில் முற்போக்குக் காலகட்டத்தை பத்தாண்டுகளுள் அடக்கிவிட முடியாது. ஆனால் ஆய்வு நோக்குக்காக அவ்வாறு வகுத்துக்கொள்வது அவசியமாகின்றது. முற்போக்குக் காலம் இன்றும் தொடர்ந்து இயங்கிவருகின்றதென்பது மறுக்க முடியாது. ஆனால் 1960 களில் ஈழத்தில் நவீன இலக்கியத்தில் தோன்றிய ஒரு புதிய மாற்றத்தை அல்லது மேலோங்கி நிற்கின்ற பண்பை அதாவது புத்தெழுச்சியைக் குறிப்பதற்கு முற்போக்குக் கால கட்டத்தை 1960 களுக்குள் அடக்கிவிடுவது அவசியமாகின்றது.

இரு பேராசிரியர்களின் (கைலாசபதியும் சிவத்தம்பியும்) இலக்கியப்பிரவேசம் முன்னைய சமுதாய சீர்திருத்தக்கால படைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலக்கியத்தை முற்போக்கு இலக்கியப்பாதைக்கு எடுத்துச் சென்றது. நவீன இலக்கியத்துக்கான இலக்கண எல்லைகள் அவர்களால் வகுக்கப்பட்டன. தேசிய இலக்கியம், மண்வாசனை இலக்கியம், யதார்த்த இலக்கியம், மார்க்சிய யதார்த்த இலக்கியம் என்பன போன்ற செல்நெறி வரம்புகள் சுட்டிக்காட்டப்பட்டன. அதனால் முற்போக்குக் காலகட்டத்து எழுத்துக்கள் சுதந்திர இலங்கையின் படைப்புகளாக மாறின. காந்தியம், பெரியாரியம் என்ற கருத்தியல்புகளோடு, மார்க்சியம் முதன்மை பெற்று இலக்கியச் செல்நெறியில் பெரும் தாக்க விளைவுகளை ஏற்படுத்தின. இலவசக் கல்வி சகலருக்கும் கிடைத்ததால் அந்த வாய்ப்பினைத் தவற விட்டிருந்த அடிமட்ட மக்களிடையே விழிப்பும், தாம் சமூக மட்டத்தில் அடக்கியொடுக்கப்பட்டிருப்பதன் மெய்மையையும் உணர வைத்தது. சாதியக் கொடுமைகளுக்கு எதிரான போர்க் குரலாக அக் காலகட்டத்து எழுத்துக்கள் எழுந்தன.

முற்போக்குக் காலகட்டத்தில் இலக்கியம் பற்றிய சிந்தனைப் போக்கு வரையறுக்கப்பட்ட இலக்கணத் தெளிவு கொண்டதாக விளங்கியதை மறுக்க முடியாது. முன்னோடிச் சிறுகதை ஆசிரியர்கள் காலத்தில் (1930 - 1949) புனைகதை எழுதியவர்கள் பலரும் 'இலக்கியம் இலக்கியத்துக்காக', 'இலக்கியம் பொழுது போக்கிற்காக' என்ற எண்ணக்கருக்களைக் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அவர்களது எழுத்துக்களில் பொழுது போக்கு அம்சங்கள் மிகுதியாகவும், மனோரம்மியக்கற்பனைகள் கொண்டதாகவும் விளங்கின. எனினும் அவர்கள் இலக்கியம் மக்களுக்காக என்பதிலும், இலக்கியம் தாம் வாழும் மண் சார்ந்த வாழ்வையும், பிரச்சினைகளையும் பிரதிபலிக்க வேண்டுமென்பதில் அக்கறையில்லாதிருந்தார்கள் எனக் கூட்டு மொத்தமாக ஒதுக்கிவிட முடியாது. முற்போக்குக் காலகட்டத்தில் எழுத்தாளர்களிடையே தெளிவான இலக்கிய நோக்கு இருந்தது. கைலாசபதி, சிவத்தம்பி, வித்தியானந்தன், பொன்னுத்துரை, கனகசெந்திநாதன் போன்றோர் அணிகளாகப் பிரிந்து நின்றாலும் புனைகதை இலக்கியம் பற்றிய பொது நோக்கில் அவ்வளவு தூரம் கருத்தியல் வேறுபாடுகளைக் கொண்டிருக்கவில்லை என்பது தெரிகின்றது.

1. இலக்கியம் மக்களுக்கானது மக்களின் விடிவிற்கும் விடுதலைக்குமானது.
2. அடக்கியொடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் துயரங்களை இலக்கியம் பிரதிபலிக்க வேண்டும். சுரண்டலையும் சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கு முறைகளையும் ஒழித்து, ஓர் உன்னதமான ஏற்றத் தாழ்வற்ற சமூகக் கட்டமைப்பை இலக்கியம் உருவாக்க வேண்டும்.

3. சாதியக்கொடுமை, வறுமை, இனவொடுக்கு முறை, வாழ்க்கை உரிமைகளை மறுப்பது, சீதனக்கொடுமை, பெண்ணடிமைத் தனம் முதலான சமூக அநீதிகளுக்கு எதிராக நவீன இலக்கிய வடிவங்கள் முற்போக்காக வீறு கொண்டுழைக்க வேண்டும்.

4. படைப்புக்கள் வெறும் கருத்து வளம் கொண்டனவாக இருக்காமல் கலை வளம் கொண்டனவாக அமைதல் வேண்டும். இலக்கியத்தில் கலையழகும் தேடலும் இருக்க வேண்டும்.

5. எல்லாவற்றிற்கும் மேலாக நவீன இலக்கியங்கள் யதார்த்தப் பண்பு கொண்டனவாகவும், மண்வாசனையைப் பிரதி பலிப்பனவாகவும், தேசிய இலக்கியமாகவும், ஈழத்துத் தமிழ் இலக்கியமாகவும் அமைதல் வேண்டும்.

மேற்குறித்த பண்புகள் முற்போக்குக் காலகட்டத்து ஈழத்தின் அனைத்து அணிகளிலுமுள்ள எழுத்தாளர்களினாலும் தம் படைப்பு களில் பலத்தோடோ, பலவீனத்தோடோ முன்னெடுக்கப்பட்டன. அத்தோடு அவையே இக்காலகட்டத்து ஈழத்துப் புனைகதை இலக்கியத்தின் பொதுச்சுட்டிகளாகவும் மாறிவிட்டன.

முற்போக்குக் காலகட்ட இலக்கியக் கருத்தியல்புகள்

முற்போக்குக் காலகட்டத்து இலக்கியப் போக்கையும், படைப்பாளிகளையும் படைப்புக்களையும் எடுத்து நோக்கும் போது நான்கு இலக்கியக் கருத்தியல் நிலைகள் காணப்பட்டன. அவை:

1. **மரபு வாதம் :** 1950 களில் ஈழத்து இலக்கிய கர்த்தாக் களிடையே இலக்கிய மரபு சம்பந்தமான வாதங்கள் எழுந் தன. ஈழத்துப் புனைகதைகள் யதார்த்தமாகவும் மண் வாசனையோடும் அமையத் தொடங்கியதால் மக்களின் பேச்சு வழக்கு இலக்கிய மரபை மீறி வரத் தொடங்கின. அதனைத் தமிழ்ப்பண்டிதர்கள், கற்ற மரபு வாதிகள் ஏற்கத் தயாராகவில்லை. மரபு மீறப்படலாகாது என்றனர். அதனை எதிர்த்து ஒரு சாரர் மரபு தெரிந்து மீறப்படலாம் என்றனர். இன்னொருசாரார் மரபை மீறலாம் என்றனர். பேச்சு வழக்கு இழிசனர் வழக்கு என்றும் இழிசினர் வழக்கு என்றும் விளக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந் தந்து, சாகித்ய மண்டல கூழ் முட்டையெறியில் வந்து நின்றது.

2. **மார்க்சிய முற்போக்கு வாதம் :** முற்போக்குக் காலகட்டத்தில் முதன்மை பெற்ற வலுவான ஒரு சக்தியாக இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் விளங்கியது. இது முற்றாக மார்க்சியக் கோட்பாடுகளைத் தன் இலக்கியக் கருத்தியலாகக் கொண்டது. புனைகதைத்துறையையும் மார்க்சியக் கோட்பாடுகளின் பிரச்சாரத் தளமாகக் கொண்டன. 'மார்க்சிய முற்போக்கு இலக்கியத்தின் முக்கிய இலக்கியக் கோஷமாக அமைந்தது ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்னும் கோட்பாடேயாகும். ஈழத்தின் தமிழ் இலக்கியம் தென்னிந்தியத் தமிழ் இலக்கியத்தின் பிரதியாக அமையாது, ஈழத்தின் மண் வாசனையைப் பிரதிபலிப்பதாக இருத்தல் வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது' எனப் பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிட்டார். இந்த அணியில் எஸ். பொன்னுத்துரை, செ.கணேசலிங்கம், என். கே. ரகுநாதன், கே. டானியல், டொமினிக் ஜீவா, காவலூர் இராசதுரை, நீர்வை பொன்னையன், சோமகாந்தன், அ.ந. கந்தசாமி, அகஸ்தியர் முதலானோர் ஆரம்பத்தில் விளங்கினர்.

3. **எதிர்க்கருத்து வாதம் :** இலங்கையில் முற்போக்குவாதம் பேசியவர்களின் கருத்துக்களுக்கு எதிர்க்கருத்துவாதம் இலக்கியத்தில் இடம் பெற்றமைக்கு முற்போக்கு எழுத்தாளர் சங்க அமைப்பிலிருந்து விலகியவர்களும், பேராசிரியர்களான கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரின் தலைமைத்துவத்தை விரும்பாதவர்களும், தமிழ்த் தேசிய வாதத்தால் கவரப்பட்டவர்களும் காரணமாயினர். சிற்பி சரவணபவன், கனக செந்திநாதன், செம்பியன் செல்வன், எஸ். பொன்னுத்துரை, வ.அ. இராசரெத்தினம், மு. தளையசிங்கம் முதலானோர் முற்போக்கு எழுத்தாளர் இயக்கத்திற்கும் அவர்கள் தெரிவித்த மார்க்சியவாத முற்போக்கு இலக்கியக் கருத்துக்களுக்கும் எதிராக கண்டனம் தெரிவித்தனர். இவர்கள் மார்க்சியத்துக்கோ முற்போக்குக்கோ எதிரானவர்களல்லர். ஆனால் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் இயக்கத்தைச் சேராத எழுத்தாளர்களின் முற்போக்குப் படைப்புகள் அறவே நிராகரிக்கப்பட்டன. அப்படி ஒரு தேவை இருந்ததெனப் பின்னாளில் ஒரு பேராசிரியர் ஏற்றுக்கொண்டார். முற்போக்கு எழுத்தாளர் அமைப்பில் தொடர்ந்து தொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாக இருக்க விரும்பாத எஸ். பொன்னுத்துரை, நற்போக்கு இலக்கியம் என்றொரு கருத்தியல் நிலையை முன் வைத்தார். இவர்கள் இலக்கியத்தில் அழகியலை முன் வைத்தனர். இலக்கியத்தில் உள்ளடக்கத்தோடு கலையழகும் முதன்மை பெற வேண்டும் என்றனர்.

4. **தமிழ்த்தேசிய வாதம் :** 1956 ஆம் ஆண்டுத் தனிச்சிங்களச் சட்டம் தமிழ் மக்களிடையே ஒரு பெரும் ஆவேசத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்தி இலக்கியத்திலும் எதிரொலித்தது. அவை தேசிய இலக்கியத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் இனவாதக் கதைகள் என மார்க்சிய விமர்சகர்கள் பாராது விட்டனர். பேரினவாதத்தைக் கண்டிக்கும் படைப்புகள் ஏளனப்படுத்தப்பட்டன. இன்று தமிழ்த் தேசிய வாதமாக வளர்ந்துவிட்டது. இலக்கியத்தில் தவிர்க்க முடியாத அம்சமாகி விட்டது.

மரபு வாதம் பேசியோரைத் தவிர ஏனைய மூன்று வாத அணியினரும் மக்களுக்கான இலக்கியமே படைத்தனர். அது ஈழத்தமிழிலக்கியமாகவே விளங்கியது. மானிட விடிவுக்காகவும் விடுதலைக்குமானதாகவே இருந்தது. இந்த மண்ணையும் மக்களை யும் தம் படைப்புக்களின் குவி மையமாகக் கொண்டனர். ஆனால் அவரவர் வரித்துக் கொண்ட கருத்து நிலைகளில் சமூக மேம்பாட்டை நோக்கினர். ஆரம்ப கால முற்போக்குப் படைப்புகளில் சாதியும் வறுமையும் சமூகமும் முதன்மைபெறும் உள்ளடக்கமாக இருந்தன. பின்னர் மொழியும் இனமும் முதன்மை பெறத் தொடங்கின. இன்று மண்ணும் மக்களும் இலக்கியத்தில் முதன்மை பெற்றுவிட்டன. சாதியத்தாலும் இனத்தாலும் அடக்கி யொடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்கான குரலாக இலக்கியம் அமைய வேண்டிதாகிவிட்டது.

முற்போக்குக் காலகட்டத்தின் இலக்கியப் படைப்புக்களை முன்னெடுத்துச் சென்ற பத்திரிகைகளாக சுதந்திரன், வீரகேசரி, தினகரன், ஈழகேசரி, ஈழநாடு, புதினம் ஆகியவையும், சஞ்சிகை களாக கலைச்செல்வி, மரகதம், விவேகி, இளம்பிறை, வசந்தம் என்பனவும் விளங்கின. அவற்றோடு சரஸ்வதி, சாந்தி, தாமரை முதலான தென்னிந்தியச் சஞ்சிகைளும் தக்க பணி ஆற்றியுள்ளன. இன்றைய முன்னோடி முற்போக்குப் படைப்பாளிகளை உரு வாக்கியதில் சுதந்திரனின் பங்கும் ஈழகேசரியின் பங்கும் அதிகம், இளம் முற்போக்குப் படைப்பாளிகளை உருவாக்கியதில் கலைச் செல்வியின் பணி அதிகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்போக்குக் காலகட்டத்துப் படைப்பாளிகள் யார்?

ஈழத்தின் புனைகதை இலக்கியத்தில் 'முன்னோடிப் படைப் பாளிகள்' என 25 எழுத்தாளர்கள் என்னால் அடையாளம் காணப்பட்டனர். சுயா, சோ. சிவபாதசுந்தரம், ஆனந்தன், பாணன், சம்பந்தன், சி. வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், பவன், சி.வி.வேலுப்பிள்ளை, அ.செ.முருகானந்தன், சோ. தியாகராஜன், நவாலியூர் நடராஜன், வரதர், அ.ந. கந்தசாமி, கனக செந்திநாதன், சு.வே. நவாற்குழியூர் நடராஜன், இராஜ அரியரெத்தினம், கே. கணேஸ், கசின், சொக்கன், அழகு சுப்பிரமணியம், சு.இராஜ நாயகன், தாழையடி சபாரத்தினம், கு.பெரியதம்பி என்போரே ஈழத்தின் முன்னோடிப் படைப்பாளிகளாவர். அவர்களின் சிறுகதை கள் தொகுக்கப்பட்டு பூபாலசிங்கம் புத்தகசாலையினரால் ஒரு தொகுதியாக 2001 இல் வெளியிடப்பட்டது. இன்று முற்போக்குக் காலகட்டச் சிறுகதைகள் தொகுப்பாக வெளிவருகின்றது.

இக்காலகட்டத்தில் வெளிவந்த சிறுகதைகள் இரண்டு தெளி வான செல்நெறிகளைக் கொண்டமைந்தன. மார்க்சியச் சித்தாந்தங் களின் சுவர்களுள் தமது சிந்தனைகளை அடக்கிக் கொண்ட படைப் பாளிகளாக எஸ். பொ., டானியல், டொமினிக் ஜீவா, ரகுநாதன், அ.ந. கந்தசாமி, பிரேம்ஜி, கணேஸ், அகஸ்தியர், நீர்வை பொன்னையன், செ. கணேசலிங்கன் முதலானோர் அமைந்தனர். சித்தாந்தச் சிறைக்குள் தம்மை அடக்கிக் கொள்ளாது மனித குல மேன்மைக்காகவும் தமிழ்த்தேசிய நலனுக்காகவும் ஆக்கவிலக் கியத்தைப் பயன்படுத்துகின்ற சுதந்திர எழுத்தாளர்களாக வரதர், இராசநாயகன், பித்தன், அ.முத்துலிங்கம், சு.வே., சொக்கன், கனகசெந்திநாதன், குறமகள், பத்மா சோமகாந்தன், சோமகாந்தன், நந்தி, புதுமைலோலன், அன்புமணி, சிற்பி, தளையசிங்கம், பவானி, நாவேந்தன், உதயணன் என்றொரு பரந்த கூட்டம் அமைந்தது. இவர்களது சிந்தனைகளை எதுவும் எவரும் கட்டுப்படுத்தவில்லை. இதில் என்ன இலக்கியத் தவறென்றால் முற்போக்கு இலக்கியம் என்பது முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த படைப் பாளிகள் ஆக்கியவை மட்டுந்தான் என்ற எண்ணம் இதுவரை இருக்கின்றது. அவ்வாறன்று. முற்போக்குக் கால கட்டத்துக்குள் படைப்பிலக்கியத்தில் தரமாக எழுதிய அனைத்துப் படைப்பாளி களையும் அது குறிக்கும். சாதியத்தையும் வர்க்கியத்தையும் பற்றிச் சிந்தித்தவர்கள் மட்டும் தாம் முற்போக்கான சிந்தனையாளர்கள் என்று அர்த்தமில்லை. மனித குல அடக்கு முறைகள், மனுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலத்தைப் பாதிக்கும் சமூகப்பிரச்சினைகள் என்பன பற்றிச்சிந்தித்து புனைகதை படைத்தவர்களும் முற்போக்குச் சிந்தனையாளர்கள் தாம். அதனால் ஒரு குறிப்பிட்ட வரம்புக்குள் முற்போக்குக் காலகட்டத்துச் சிறுகதைகளை வேலியிட்டு அடக்கிக் கொள்ளும் குறுகிய நோக்கு எனக்கில்லை. ஒரு கைவிரல்கள் எண்ணிக்கையில் பட்டியலிட்டு இவர்கள் தாம் முற்போக்காளர்கள் என்றால் மற்றைய வர்கள் என்ன பிற்போக்காளர்களா? இலக்கியத்துக்காகப் பேனை யைத் திறந்தவன் எவனும் பிற்போக்காளனாக இருக்க முடியாது.

முற்போக்குக்காலப் படைப்பாளிகள்

முற்போக்குக் கால கட்டத்தின் குறிப்பிடத்தக்க படைப் பாளிகளில் பின்வருவோர் அடங்குவர்: வரதர், வ.அ.இராசரத்தினம், கனகசெந்திநாதன், சொக்கன், எஸ். பொன்னுத்துரை, சு.வே., பித்தன், என்.கே.ரகுநாதன், புதுமைலோலன், கே. டானியல், செ.கணேசலிங்கம், சு.இராசநாயகன், டொமினிக் ஜீவா, வாழ்வு, தேவன் - யாழ்ப்பாணம், எஸ்.அகஸ்தியர், என். எஸ். எம். ரமையா, சோமகாந்தன், அன்புமணி, சிற்பி, குறமகள், அ.முத்துலிங்கம், அருள் செல்வநாயகம், மு.தளையசிங்கம், பத்மா சோமகாந்தன், பவானி ஆழ்வாப்பிள்ளை, நீர்வை பொன்னையன், உதயணன், நவம், பொ. தம்பிராசன், செந்தூரன், இ.நாகராஜன், நந்தி, கே.வி.நடராஜன், எஸ்.எஸ்.எம்.ஹனிபா, பிரேம்ஜி, சசி. பாரதி சபாரத்தினம், அ.ஸ.அப்துஸமது, சில்லையூர் செல்வராசன், எஸ்.எல்.சவுந்தர நாயகம், ஆரையம்பதி தங்கராசா, கச்சாயில் இரத்தினம் முதலான 42 எழுத்தாளர்கள் இனங் காணப்பட்டனர். இவர்களோடு த. ரஃபேல், ஆ.பொன்னுத்துரை, ஏ.வி.பி.கோமஸ், ம.த.லோறன்ஸ் முதலானோரும் அடங்குவர்.



1. ஈழத்துப் புனைகதைத்துறையின் மூத்த படைப் பாளி **வரதர்** என்ற வரதராசனாவார். ஈழத்துப் புனைகதைத்துறையில் அவர் ஒரு சகாப்தம் எனலாம். ஈழத்தின் முன்னோடிச் சிறுகதை ஆசிரியர். (கற்பு, வீரம், மாதுளம்பழம்) ஈழத்து இதழியலுக்குப் பங்களிப்புச் செய்தவர். (மறு மலர்ச்சி, ஆனந்தன், புதினம், வெள்ளி, தேன் மொழி), ஈழத்தில் புதுக்கவிதையைத் தொடக்கி வைத்தவர், (ஓரிரவில், அம்மான் மகள், யாழ்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணத்தார் கண்ணீர்) ஈழத்தின் முக்கியமான பதிப்பாளர். (இலக்கிய வழி, வள்ளி, தமிழ்மரபு, சிலம்பின் சிறப்பு, கோபுரவாசல், செங்கை ஆழி யானின் 5 நூல்கள்) நாவலாசிரியர். (காவோலை யில் பசுமை). சில நல்ல நாவல்களைப் படைத்தவர். (வென்றுவிட்டாயடி இரத்தினா, தையலம்மா, உணர்ச்சி ஓட்டம்). நல்லதொரு கட்டுரையியலாளர். (நாவலர், வாழ்க நீ சங்கிலி மன்ன, மலரும் நினைவுகள், பாரதக்கதை, சிறு கதைப்பட்டறிவுக் குறிப்புகள், வரதரின் பல குறிப்புகள்). இவ்வாறு வரதர் இலக்கியத்தில் பல் பரிமாணம் கொண்டு விளங்கினார். அவருடைய சிறுகதைகள் தனித்துவமானவை. மனிதனுடைய அக வாழ்வைப் பண்படுத்துகிற கருத்துக்கள் தாம் புற வாழ்க்கைப் பிரச்சினைகளை விட முக்கியமானவை எனக் கருதினார். சமூகத்தின் மூடப்பழக்க வழக்கங்களைத் தன் சிறுகதை களில் வரதர் பக்குவமாகச் சுட்டிக் காட்டினார். பெரும்பாலான சிறுகதைகள் சமூக விமர்சனங் களாகவுள்ளன. கற்பு என்ற சிறுகதை வரதரின் உன்னதமான ஈழத்துச் சிறுகதையாகக் கருதப் படுகின்றது. வீரத்துக்குப் புதுவிளக்கம் தரு கின்றது. இந்நூலில் இணைத்துள்ள வீரம் என்ற சிறுகதை.



2. ஈழத்துச்சிறுகதை இலக்கியத்துக்குக் கனதியான பங்களிப்புச் செய்த பெருமை **வ.அ. இராச ரத்தினத்துக்கு** உரியதாகும். 1953இல் அவரின் உன்னதமான சிறுகதையான தோணி ஈழ கேசரியில் வெளிவந்தபோது ஈழத்துச் சிறுகதை இலக்கியம் தன்னை ஒரு கணம் சிலிர்த்துக் கொண்டது. ஆசிரியரின் புனை கதைக்கான கருத்தியல் நிலை தெளிவானதாகும். கொழு கொம்பு, கிரௌஞ்சவதம், தோணி, ஒரு காவியம் நிறைவுறுகிறது, கொட்டியாரக் கதைகள் முதலானவை நூலுருவில் வெளிவந்துள்ளன. இலக்கியத்தை ஒரு சமூக சத்தியாகக் கருதி அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டிருக்கின்றார். இராசரத்தினத்தின் சிறு கதைகள் அவர் வாழும் மண்ணின் மக்களைத் தான் பேசுகின்றன. இன மத பேதமின்றி மானிட ஐக்கியத்தினை அவர் கதைகள் வலியுறுத்து கின்றன. தோணி, அறுவடை என்பன சர்வதேச தரத்தினவான சிறுகதைகள். புரசாங்கற்ற சகஜ மான மொழியில் சமூக முரண்பாடுகளையும், சமூக அவலங்களையும் அனுபவ ரீதியாக வ.அ. இராசரத்தினம் தன் கதைகளில் தந்துள்ளார். எல்லாவற்றிற்கும் மேலாக இச்சிறுகதைகளில் அவற்றின் படைப்பனுபவத்தினை நாம் தரிசிக்க முடியும்.




3. ஈழத்தின் இலக்கிய வரலாற்றில் ஓர் இயக்கமாக வாழ்ந்தவர் இரசிகமணி **கனக செந்திநாதன்.** யாழ் இலக்கியவட்டத்தின் பிதாமகர். கனக செந்திநாதன் பல்துறைகளிலும் ஆளுமையுடை யவர். சிறுகதை, ஆய்வு, கட்டுரையியல், கவிதை எனப் பல்துறைகள் கைவரப்பெற்றவர். 1941இல் யாழ்ப்பாடி என்ற புனைபெயருடன் சிறுகதைத்துறைக்குள் இவர் புகுந்தார். ஒரு பிடிசோறு, பிட்டு, சமர்ப்பணம், செம்மண், வெண்சங்கு என்பன அவரின் உச்சமான சிறு கதைகளாகும். வெண் சங்கு என்ற சிறுகதைத் தொகுதியையும், வெறும் பானை, விதியின் கை என்ற நாவல்களையும், கரவைக்கவி கந்தப்பனார் என்ற புனைபெயரில் ஈழத்துப் பேனா மன்னர் களையும் அறிமுகப்படுத்தி வைத்தார். நட மாடும் நூல்நிலையமாகத் திகழ்ந்தார். 'ஈழத்து இலக்கிய வரலாறு' என்ற ஆய்வு நூலை வெளி யிட்டார்.



4. ஈழகேசரிப்பண்ணையில் முகிழ்த்த முன்னோ டிச் சிறுகதை ஆசிரியர் **சு.வேலுப்பிள்ளை** என்னும் சு.வே. ஆவார். முன்னோடிக் கால கட்டத்திலும் தொடர்ந்து எழுதியவர். உருவக் கதைகளின் பிதாமகர். சு.வே.யின் சிறுகதை களின் தொகுப்புக்களாக மண்வாசனை, பாற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவடி என்பன வெளிவந்துள்ளன. மணற் கோயில் இவரது உருவக்கதைகளின் தொகுப் புக்களாகும். மண்வாசனை, பாற்காவடி என்பன நல்ல சிறுகதைகளாகும். மணற்கோயில் என்ற உருவகக்கதை ராஜாஜியால் பாராட்டப்பட்ட தாகும்.




5. ஈழத்து முன்னோடிப் படைப்பாளிகளில் ஒருவர் **சொக்கன்** என்ற புனைப்பெயரில் எழுதிய **க. சொக்கலிங்கம்** ஆவார். இவர் ஓர் இலக்கியக் கலாநிதி, மூதறிஞர். பழைய இலக் கியப் புலமையும் நவீன இலக்கியத் தெளிவும் கொண்டவர். இலக்கியத்துறையில் நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், ஆய்வுக்கட்டுரை, பாடநூல் என பல்துறைகளிலும் ஆழமாயும் அகலமாயும் கால் பதித்தவர். 1947இல் புனை கதைத் துறைக்குள் பிரவேசித்து 21ஆம் நூற் றாண்டு வரை இலக்கியப் படைப்பாளியாகச் செயற்பட்டவர். கடல் என்ற சிறுகதைத் தொகுதி, 20 ஆம் நூற்றாண்டு நாடக வரலாறு, சிங்ககிரி காவலன் போன்ற நாடக நூல்கள் எனப் படைத்தளித்துள்ளார். செழுமையாகவும் இனிமை யாகவும் தமிழைக் கையாளுவர். அவரின் சமுதாயச் சீர்திருத்தக்காலக்கதைகளிலும் பார்க்க முற்போக்குக் காலகட்டத்துக் கதைகள் ஈழத்து இலக்கியத்துக்கு வலுச் சேர்ப்பன.



6. ஈழத்துச்சிறுகதை வரலாற்றில் **எஸ்.பொன்னுத் துரை** ஒரு மைல் கல்லாவார். 'பல்வேறு இலக் கியத்துறைகளில் ஆற்றலும் கற்பனை வளமும் சொல்லாட்சித்திறனும் வாய்ந்தவர் எஸ்.பொன் னுத்துரை. இலக்கியவுலகில் தவிர்க்கப்பட முடி யாத ஓர் உருவமாக இன்றுள்ளார்' என்கிறார் டொமினிக் ஜீவா ஓரிடத்தில். 'ஈழத்தில் அதிகம் புனைப்பெயர்களுள் மறைந்து நின்று பல இலக்கியப் பரிசோதனைகளை நடாத்தியுள்ளார். சிறுகதைக் துறையில் உருவ அமைப்பிலும், உத்தி முறைகளிலும் பல பரிசோதனைக் கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை எழுதி, புதிய வழிகளையும் அறிமுகம் செய்து வைத்துள்ளார். ஆபாசம் என்று சொல்லி மற்றைய எழுத்தாளர்கள் அணுகவும் கூசும் விடயங்களை வருணனைகளின் மேன்மை யாலும் கவர்ச்சியான நடையாலும் வாசர் களுக்குச் சொல்லக் கூடியவர் என்பதற்குச் சான்றாகத் 'தீ' என்னும் அவரது நவீனம் அமைந்துள்ளது. 'எஸ்.பொ.வின் புனைகதை களில் கற்பனை வளத்திலும் பார்க்க அவரின் நடைவளம் மேலோங்கி நிற்கிறது'' என்பது கனக. செந்திநாதனின் கணிப்பாகும். எஸ். பொன்னுத்துரையின் இக்காலகட்டத்துச் சிறு கதைகளில் ஈழத்துச் சிறுகதை உலகிற்கு அவரு டைய சேர்ப்பது தேர் என்பேன். எஸ்.பொ. பல்வகையான சிறுகதைகளை எழுதியுள்ளார். சரித்திரக்கதைகள், சமூகக்கதைகள், புராணக் கதைகள், பரிசோதனைக் கதைகள் எனப் பலவகை. ஆனால் ஒவ்வொன்றுக்கும் தனித் தனி உருவம், உத்தி, நடை என்பனவற்றைக் கையாண்டுள்ளார். சிறுகதைக்குரிய கலாபூர் வமும், படைப்பனுபவமும் அவற்றில் இருக்கும்.



7. ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் மட்டக்களப்புப் பிரதேசத்தின் சிறுகதைப் பிதாமகர் **பித்தன்** என்ற **கே.எம்.ஷா** ஆவார். புதுமைப்பித் தனின் சிறுகதைகளால் ஆகர்ஷிக்கப்பட்டு பித்தன் என்ற புனைப்பெயரில் சிறுகதை களைப் படைக்கத் தொடங்கினார். பித்தனின் சிறுகதைகள் 16 தொகுக்கப்பட்டு பித்தன் கதைகள் என மல்லிகைப்பந்தல் வெளியீடாக வெளிவந்துள்ளது. பித்தனின் சிறுகதைகள் சமுதாய விமர்சனங்களாகவுள்ளன. இந்தச் சமூகம் இப்படி நடந்து கொள்கிறதே என்ற அங்கலாய்ப்பு பல கதைகளில் காணப்படு கின்றது. பாதிக்குழந்தை, இருட்டு, ஒருநாள் ஒரு பொழுது என்பன குறிப்பிடத்தக்க சிறுகதை கள். பித்தனின் பெரும்பாலான சிறுகதைகளில் சுத்தமான தமிழே உரையாடலுக்கும் பயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தப்பட்டிருக்கும். ஆனால் இருட்டறையில் பேச்சு வழக்கு உரையாடல் கையாளப்படுவ தனால் அச்சிறுகதைக்கு ஒரு கலையழகு ஏற்பட் டிருக்கிறது. இந்த மண்ணில் இனமத வேறு பாடின்றி அல்லற்படும் சமூகத்தின் ஒவ்வொரு சமூகக் கட்டத்தையும் தன் சிறுகதைகளில் சித்தரித்துள்ளார்.



8. முற்போக்குக் காலகட்டத்தில் பிரச்சார வாடை யற்ற முற்போக்குச் சிறுகதைகளைப் படைத் தவர் **என்.கே. ரகுநாதன்** ஆவார். வெண் ணிலா, எழிலன், துன்பச்சுழல், வரையண்ணல் என்ற பல புனைப்பெயர்களில் சிறுகதைகள் எழுதியுள்ளார். 1950 களில் சுதந்திரன் மூலம் சிறுகதையுலகிற்குள் காலடி வைத்த ரகுநாதன், 1951 இல் வெளியே நல்ல நிலவு என்ற சிறுகதை ஈழகேசரியில் வெளிவந்தபோது அவர் பால் தன் கவனத்தைத் திருப்பிக் கொண் டது. 1962 இல் ஆசிரியரின் 11 சிறுகதைகள் நிலவிலே பேசுவோம் என்ற தலைப்புடன் வெளிவந்தது. அவரது கதைகளில் நாம் காண்பது அவரது சமூகப்பிரக்ஞை ஆகும். தீண்டாமை ஒழிப்பு, வகுப்பொற்றுமை, வேலையில்லாத் திண்டாட்டம், கூட்டுறவியக்க ஊழல்கள், பிரசா வுரிமைச் சிக்கல்கள் போன்ற சமுதாய விடயங் கள் அவரின் கதைப் பொருளாகின. நிலவிலே பேசுவோம் என்றும் அவரை நினைவுகொள்ள வைக்கும் சிறுகதையாகும்.



9. ஈழத்தின் சிறுகதை வரலாற்றில் 1950 - 1963 காலகட்டத்தில் **புதுமைலோலனின்** பங்க ளிப்பு குறிப்பிடத்தக்கது. சிறந்த மேடைப் பேச்சாளரான இவரின் இயற் பெயர் **கந்தசாமி.** 'எழுத்தாளன் ஒருவன் ஏதோ ஓர் அரசியல் சார்ந்தவனாக இருக்கவேண்டும்' என்பது அவ ரின் நிலைப்பாடு. இலங்கை, இந்தியப் பத் திரிகைகளில் நிறையவே எழுதியுள்ள புதுமை லோலனின் சிறுகதைகளின் தொகுப்பாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமைலோலன் கதைகள் வெளிவந்துள்ளது. 1956 இல் அப்பே லங்கா என்ற சிறுகதை சுதந்திரனில் வெளிவந்தபோது அவரை இன வாதி என முத்திரை குத்தினர். புதுமைலோல னின் சிறுகதைகளில் பல கௌதம புத்தரோடு சம்பந்தப்பட்ட ஒழுக்க விடயங்களுக்கான சிந்தனை அவதாரம், அழகு மயக்கம், புத்தன் பரிசு, கௌதமி, மாகந்தி என்பன அவ்வகைச் சிறுகதைகளாகும். எளிமையான நடையில் சுவைபட விபரிப்பார்.

10. ஈழத்தின் உன்னதமான படைப்பாளிகளில் ஒருவர் **கே.டானியல்** ஆவார். அடக்கியொடுக் கப்பட்ட மக்களினதும் பஞ்சப்பட்ட மக்களின தும் விடுதலைக்காகப் போராடியவர். எழுத்தை அதற்கான கருவியாகப் பயன்படுத்தியவர். மார்க்சிய முற்போக்கு எழுத்தாளர். சுதந்திரன் பத்திரிகை நடாத்திய சிறுகதைப் போட்டியில் அமரகாவியம் என்ற அன்னாரின் கதை முதற் பரிசினைப் பெற்றது. முற்போக்குக் கால கட்டத்தில் அவர் எழுதிய சிறுகதைகளில் இயற் பண்பும், யதார்த்தமும் கலாபூர்வமாக அமைந் துள்ளன. டானியல் சிறுகதைகள், உலகங்கள் வெல்லப்படுகின்றன என்பன டானியலின் சிறுகதைத் தொகுப்புகளாகும். சிறுகதைப் படைப்பாளியான டானியல் ஈழத்தின் முக்கிய மான நாவலாசிரியராக பிற்காலத்தில் மலர்ந்தார். பஞ்சமர், தண்ணீர், கானல், பஞ்சகோணம் என்பன முக்கியமான அவரின் பெயர் பதிக்கும் நாவல்களாகும்.




11. தமிழுலகு நன்கு அறிந்த ஒரு நாவலாசிரியர் **செ.கணேசலிங்கன்** ஆவார். நீண்ட பயணம், சடங்கு, செவ்வானம் என்பவை அவரின் முக் கியமான நாவல்களாகும். அவர் ஆரம்பத்தில் குறிப்பிடத்தக்க சிறுகதை ஆசிரியராக விளங் கினார். முற்போக்குக் காலகட்டத்தில் பிரசவம், வேதனையும் விளையாட்டும், பூச்சாண்டிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறியில் நடந்தது, விளம்பரம் காவிகள் என்பன அவர் படைத்த முக்கியமான சிறுகதைகள். கணேசலிங்கனின் கதைகளில் சமூகத்தின் அடி மட்ட தொழிலாள மக்களே வருகின்றனர். தனது கதைகளில் கருத்தம்சத்திற்கு முதன்மை கொடுத் திருப்பார். ஒரே இனம், சங்கமம் என்பன கணேசலிங்கனின் சிறுகதைத் தொகுதிகளாகும்.



12. ஈழத்தின் முற்போக்குச் சிறுகதைப் படைப் பாளி **டொமினிக் ஜீவா** ஆவார். தண்ணீரும் கண்ணீரும், சாலையின் திருப்பம், பாதுகை, வாழ்வின் தரிசனங்கள் என்பன ஜீவாவின் சிறுகதைகளின் தொகுப்புகளாகும். இலங்கை யில் புனைகதைக்காக முதன் முதல் சாகித்ய மண்டலப் பரிசு பெற்றவர் டொமினிக் ஜீவா ஆவார். ஈழத்தின் புகழ் பூத்த சஞ்சிகையான மல்லிகையின் ஆசிரியர். 40 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து வெளியிட்டுச் சாதனை படைத்துள்ளார். மல்லிகைப்பந்தல் என்ற மூலம் 30க்கு மேற்பட்ட நூல்களை வெளி யிட்டுள்ளார். டொமினிக் ஜீவாவின் சிறுகதை களில் சமூக நோக்கு சமநிலை தளும்பாது விளங்கும். தண்ணீரும் கண்ணீரும், கொச்சிக் கடையும் கறுவாக்காடும், பாதுகை, ஞானம் என்பன குறிப்பிடத்தக்க அன்னாரின் சிறுகதை களாகும். ஜீவாவின் சிறுகதைகள் 50 ஒரு பெருந் தொகுதியாக வெளியிடப்பட்டுள்ளது.


13. ஈழத்துச்சிறுகதை வரலாற்றில் ஒரு காலகட்டத் தில் நிறையவே எழுதியவர் **நாவேந்தன்** என்ற **தம்பிராசா திருநாவுக்கரசு** ஆவார். தினகரன், ஈழகேசரி, வீரகேசரி, சுதந்திரன் முதலான பத்திரிகைகளில் பல சிறுகதைகளை எழுதி யுள்ளார். இவருடைய எழுத்துக்களில் பெரி யார், அண்ணாத்துரை, ப.ஜீவானந்தம் ஆகி யோரின் கருத்துக்கள் பதிந்திருக்கும். இவரு டைய எழுத்துத்திறனை வளர்த்துவிட்டது சுதந் திரனாகும். சிறந்த பேச்சாளர். தமிழன் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பத்திரிகையின் ஆசிரியர். இவருடைய சிறுகதைகள் தொகுக்கப்பட்டு, வாழ்வு, தெய்வ மகன் என்ற இரு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. பட்டமரம், ஆசைமயக்கம், சலனம் என்பன இவரின் சிறந்த சிறுகதைகளாகும். நாவேந்தனின் சிறுகதைகளில் மொழி மரபும் தூய்மையும் கூடியவரை பேணப்பட்டுள்ளன. பேச்சு வழக்கை அவர் சிறுகதைகளில் காண முடியாது. யாழ்ப்பாண மாநகரசபையின் முதல் வராக விளங்கியவர்.




14. ஈழத்து இலக்கியவுலகுக்கு **இளையப்பா மகா தேவா** என்ற **தேவன்** - யாழ்ப்பாணம் செய்த சிறுகதைப்பங்களிப்பு எண்ணிக்கையில் குறை வாயினும் கனதியானது. தென்னவன் பிரம ராஜன், விதி, இருசகோதரர்கள், பத்தினியா பாவையா, வீரபத்தினி, நளதமயந்தி என்பன தேவனின் நாடகப்பிரதிகளாகும். நாடகம் எழுதுவதிலும் மேடையேற்றுவதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். வாடிய மலர்கள், மணிபல்லவம், கேட்டதும் நடந்ததும் அவரின் நாவல்களாகும். கேட்டதும் நடந்ததும் ஈழத்து நாவல் துறைக்குப் பெருமை சேர்த்துள்ளது. இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பரம் பரைகளை எடுத்து நாவலாக்கினார். இவரின் எழுத்துக்களில் மெல்லிய நகைச்சுவை எப் போதும் விரவிக் காணப்படும். அவருடைய சிறுகதைகள் தொகுக்கப்பட்டு தேவன் - யாழ்ப்பாணம் சிறுகதைகள் என்ற பெயரில் வெளிவந்துள்ளன.




15. ஈழத்து இலக்கிய உலகில் சுமார் 40 ஆண்டு களுக்கு மேலாக எழுதி வந்த முற்போக்கு எழுத் தாளரான **எஸ். அகஸ்தியர்** நூற்றுக்கணக்கான சிறுகதைகளை எழுதியுள்ளார். இருளினுள்ளே, கோபுரங்கள் சரிகின்றன, ஒரு குப்பி விளக்கு எரிகிறது என்பன அவரின் குறுநாவல்கள். திருமணத்திற்காக ஒரு பெண்காத்திருக்கிறாள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில் தெரியுது ஒரு தோற்றம், எரிமலை என்பன அவரின் நாவல்கள். மக்களின் வாழ்க்கை அனுபவங்களை எடைபோட்டு உணர்வு பூர்வ வெளிப்பாடுகளாக அகஸ்தியரின் சிறுகதைகள் அமைகின்றன. அவரின் சிறுகதைகள் யதார்த்த பூர்வமானவை. கொக்கு தவம், தவிர்ப்பு, வட்டி, பொறி, கடல் சிவந்தது என்பன அகஸ்தியரின் குறிப்பிடத்தக்க சிறுகதைகளாம். அவரின் பேனா அடக்கியொடுக்கப்பட்ட மக்களின் விளைவுக் காக எழுதியது.



16. ஈழத்துச் சிறுகதைத்துறைக்கு வளம் சேர்த்த வர்களில் ஒருவர் **சு. இராஜநாயகன்** ஆவார். சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் என எழுதியுள்ளார். பொத்தல், நாகதோஷம், இதயத் துடிப்பு என்பன தரமான சிறுகதைகளாம். அவரது சிறுகதைகள் 'சொந்தமண்' என்ற பெயரில் தொகுக்கப்பட்டு வெளிவந்துள்ளன. தெரிந்த சொற்களைப் பயன்படுத்தி நனவோடை உத்தியில் சிறுகதைகளைப் படைத்தார். இராஜ நாயகன் சிறுகதைகளைக் கூறும் பாணி சற்று வித்தியாசமானது. வாசகனின் எதிர்பார்ப்புக்கு முற்றிலும் வேறுப்பட்ட நோக்கில் அவரது சிறுகதைகள் அமையும், ஈழநாடு நாவல் போட்டியில் அவரின் பிரயாணி முதற் பரிசு பெற்ற நாவல்களில் ஒன்றாகும்.




17. **நீர்வைப்பொன்னையனின்** சிறுகதைகள் கலா பூர்வ வெளிப்பாட்டை மீறி அவர் வரித்துக் கொண்ட அரசியற் கருத்துக்கள் படைத்து நிற் கும். வாக்கியம் சார்ந்த கருத்துக்கள் இவரது சிறுகதைகளில் கருக்களாகவுள்ளன. அவரது சிறுகதைத் தொகுதிகளாக முற்போக்குக் கால கட்டத்தில் மேடும் பள்ளமும், உதயம் என்பன வுள்ளன. இவரது சிறுகதைகளில் மே தினம், எழுச்சி, முடிவிலிருந்து ஆரம்பம், உதயம், சோறு ஆகிய சிறுகதைகள் தரமானவையாக வுள்ளன. இலங்கையின் குடியேற்றக் கிராமங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் குளத்து நீர் விநியோகத்தில் நிகழும் பாரபட்சத்தை மிக அற்புதமான ஒரு கதை யாக உதயம் என்ற சிறுகதையில் நீர்வைப் பொன்னையன் படைத்துள்ளார்.


18. ஈழத்து இலக்கியத்தில் **சிற்பி** என்ற புனை பெயரில் மறைந்திருந்து எழுதிவரும் **சரவண பவன்** முக்கியமான ஒரு படைப்பாளி. அவர் நடாத்திய கலைச்செல்வி என்ற சஞ்சிகை ஈழத்து இலக்கிய உலகில் ஆற்றிய பணி அற்பமன்று. அத்தோடு அச்சஞ்சிகை உருவாக்கிய எழுத் தாளர்கள் இன்றைய புனைகதைத் துறையில் பிரபல்யங்களாகவுள்ளனர். சிற்பி அவர்கள் சிறுகதைப் படைப்பாளியாகவும் நாவலாசிரியரா கவும் ஆய்வாளராகவும் விளங்கிவருகின்றார். உனக்காகக் கண்ணே, சிந்தனைக் கண்ணீர் என்பன அவரது நாவல்களாம். கோயில் பூனை, பிறந்த மண், மக்கள் தொண்டு, அம்மன் அருள் என்பன சிற்பியின் உன்னதமான சிறுகதைகளாக வுள்ளன.



19. ஈழத்துப் பெண் எழுத்தாளர்களில் குறிப்பிடத் தக்க ஒருவர் **பத்மா சோமகாந்த**னாவார். புதுமைப்பிரியை என்ற புனைப்பெயரில் தமிழ் மொழி உணர்வு, இனவிடுதலை, பெண்ணியம் ஆகிய கருத்துக்களை வைத்துச் சிறுகதைகள் ஆக்கியுள்ளார். கடவுளின் பூக்கள், கரும்பல கைக் காயங்கள், பெண்மை வென்றது, சருகும் தளிரும், நல்முத்து, இரத்தப்பாசம், பேடு என்பன அவரின் நல்ல சிறுகதைப் படைப்பு கள். 'ஆரம்ப காலத்தில் இனவுரிமை, பெண் விடுதலை என்பனவற்றில் பெரிதும் ஈடுபாடு காட்டி வந்த இவர், பிற்காலத்தில் தனது படைப் புத்தளத்தை சமூகம், மொழி, பண்பாடு, குழந்தை இலக்கியம் என விரிவுபடுத்திக் கொண்டார்' என தமிழக எழுத்தாளர் திலகவதி குறிப்பிடு வார். இவரது சிறுகதைகளின் தொகுப்புக்களாக கடவுளின் பூக்கள், புதிய வார்ப்புகள் வெளி வந்துள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



20. 1957 காலகட்டத்துக்குப் பின் ஈழத்துச் சிறு கதைப் படைப்பாளிகளில் குறிப்பிடத்தக்கவர் **ஈழத்துச் சோமு** என்று புனைப்பெயர் கொண்ட **சோமகாந்தன்** ஆவார். கலைமதி, கலைப்பித் தன், கருணையூர்சோமு என்பன இவரது புனைப் பெயர்கள். சோமகாந்தனின் சிறுகதைகள் 15 ஆகுதி என்ற பெயரில் தொகுதியாக வெளி வந்துள்ளன. ஆகுதி, நிலவோ நெருப்போ?, விடியல் என்பன தரமான சிறுகதைகள். சிறு கதைகளில் பேச்சு வழக்கு மிக இயல்பாக அமைந்திருக்கும். நாவலாசிரியர் சோமகாந்தன் சமூக உணர்வொடு மக்களின் பழக்க வழக்கங் களையும் வாழ்க்கையும் வாழ்க்கைத் துடிப்புக் களையும் நல்ல சொற் சித்திரங்களாக்கியுள்ளார் என வல்லிக்கண்ணன் குறிப்பிடுவார்.



21. ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் **அன்புமணி** என்ற புனைப்பெயரில் மறைந்துள்ள **இரா. நாகலிங்கத்தை** மறப்பதற்கில்லை. மட்டக் களப்புக்குப் பெருமை சேர்க்கும் எழுத்தாளர். சிறுகதை, கட்டுரை, நாவல், நாடகம், விமர்சனம் எனப் பல துறைகளில் கால் வைத்தவர். 'மலர்' என்ற தரமான இலக்கியச் சஞ்சிகையை நடாத் தியவர். மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கத்தை உருவாக்கி நடாத்தியவர். மதிப்பு, இல்லத்தரசி, போனால் வராது, பாடும் மீன், பித்தம் தெளி, பூர்ணிமா நெசவுக்குப் போகிறாள் என்பன அவரின் தரமான படைப்புக்கள். அன்புமணி யின் சிறுகதைகளில் பகைப்புல வருணனைகள் மிகவும் தத்ருபமாக அமையும். கண்முன் கதைக் களத்தைப் படம் பிடித்துக் காட்டும். சமூகப் பிரக்ஞையோடு சிறுகதைகளைப் படைப்பார்.



22. ஈழத்தின் சிறுகதைப் படைப்பாளிகளில் **அ. முத்துலிங்கம்** சற்று வேறுபட்டவர். இன்று அவரது சிறுகதைகளின் உள்ளடக்கம் உலகளா வியது. ஆனால் முற்போக்கு கால கட்டத்தில் ஈழம் தழுவியதாகவும் மண்வாசனை கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகவும் இருந்தன. கோடைமழை, பக்குவம், அக்கா என்பன அ. முத்துலிங்கத்தின் தரமான சிறுகதைகளாம். முத்துலிங்கத்தின் சிறுகதை களில் மானிட உணர்வுகளும் கிராமியச் சூழலும் காணப்படும். முத்துலிங்கம் தனது சிறுகதை களில் அவை நிகழ்கின்ற களத்தை தத்ருபமாகக் காட்டிவிடும் சிறுகதை ஆசிரியர். அத்துடன் முத்துலிங்கத்தின் நுட்பமான சமூக அவதானிப் பினை அவரது சிறுகதைகளில் காணலாம். பண்பாட்டுக் கோலங்களையும் காணலாம். அவரது சிறுகதைகள் தொகுக்கப்பட்டு 'அக்கா' என்ற பெயரில் முற்போக்குக் கால கட்டத்தில் வெளிவந்துள்ளன.

23. ஈழத்துச் சிறுகதை இலக்கியத்துக்கு வரலாற்றுச் சிறுகதைகளை அதிக அளவில் தந்தவர் **அருள் செல்வநாயகம்** ஆவார். தமிழக வாசகர் களுக்கு நன்கு அறிமுகமாகியவர். குலமகள், அமுதசுரபி, காவேரி, உமா, கல்கி முதலான தமிழக சஞ்சிகைகள் அவரது சிறுகதைகளை விரும்பிப் பெற்று வெளியிட்டன. ஏறத்தாழ 95 சிறுகதைகளைத் தந்துள்ளார். பன்னிரண்டு சிறுகதைகளின் தொகுப்பாக 'தாம்பூலராணி' வெளிவந்துள்ளது. 'அவரது சிறுகதைகளில் பெரும்பாலானவை இலங்கைச் சரித்திர சம்ப வங்களை ஒட்டியனவாகவுள்ளன. மேற்படி கதைகளில் இதிகாசக் கற்பனைகள், சரித்திர சம்பவங்கள் மறைந்து நிற்கின்றன' என கனக செந்திநாதன் குறிப்பிட்டுள்ளார்.



24. ஈழத்தின் மூத்த பெண் படைப்பாளி **வள்ளி நாயகி** என்ற இயற் பெயர் கொண்ட **குறமகள்** ஆவார். பயிற்றப்பட்ட ஆசிரியை. 1955 களில் சிறுகதைப்பிரவேசம் செய்தார். சலனம், ஆளு மைகள் அழிகின்றன, புளியங்கொப்பு, அவள் கொடுத்த விலை, வாழ்வைத்தேடு என்பன குறமகளின் தக்க சிறுகதைகளாகவுள்ளன. இவரது சிறுகதைகள் விரக்தியின் வெளிப்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக இல்லாது, நம்பிக்கையூட்டும் உணர்ச்சிச் சித்திரங்களாகவுள்ளன. இவருடைய சிறுகதை களில் பெண்ணியம் சம்பந்தமான கருத்துக்கள் நிறைந்திருக்கும்.



25. ஈழத்துச் சிறுகதைகளை மரபு மீறிய உத்தி, உருவம், கரு என்பன பயன்படுத்தி எழுதியவர் என்ற வகையில் **மு. தளையசிங்கம்** கணிப் புக்குள்ளாகிறார். அவரின் முதற்கட்டச் சிறு கதைகளில் பெப்ரவரி 4, தமிழ்த்தேசியப் பண்பு பொருந்திய சிறுகதையாகும். அவரின் இரண்டாம் கட்டச் சிறுகதைகள் 'புதுயுகம் பிறக்கிறது' என்ற தொகுதியாக வெளிவந்துள்ளன. வீழ்ச்சி, புதுயுகம் பிறக்கிறது, தேடல், கோட்டை, இரத்தம் என்பன ஆசிரியரின் தரமான சிறுகதை களாம். இச்சிறுகதைகளில் ஆண் - பெண் உறவு மிகத் தூக்கலாகத் தொனிக்கும் கருப் பொருளாகும். இலக்கிய நயமிக்க உரை நடை தளையசிங்கத்தின் படைப்புக்களில் காணப் படும். ஒரு தனி வீடு அவரின் நாவலாகும். ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி, போர்ப்பறை என்பன அவரின் ஏனைய வகை நூல்களாம்.


26. ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் முதன் முதலாக பெண்ணியல் வாதத்தை முன் வைத்தவர் **பவானி ஆழ்வாப்பிள்ளை** ஆவார். 1960 களில் மிகத் துணிச்சலாக தன் சிறுகதைகள் மூலம் முன் வைத்த பெண்ணியல் சார்ந்த கருத் துகள் பலரையும் அவர் பால் திருப்பின. முத லில் எழும் எண்ணங்களை எழுத்தில் வடிக்கும் பவானி, பல்வேறு வகையான மனிதர்களின் உணர்வுகளைத் தம் சிறுகதைகளில் மரபு மீறிய கருத்துக்களோடு தந்துள்ளார். மன்னிப்பாரா?, காப்பு, விடிவை நோக்கி, சரியா தப்பா?, பிரார்த்தனை என்பன பவானியின் தரமான சிறுகதைகளாகவுள்ளன. கடவுளரும் மனிதரும் அவர் சிறுகதைகள் அடங்கிய தொகுதியாகும் 'மன்னிப்பாரா?' என்ற கலைச்செல்விச் சிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை மூலம் எல்லாரதும் கவனத்தையும் ஈர்த்தார். பல வாதப்பிரதி வாதங்களை இச் சிறுகதை ஏற்படுத்தியது. இதற்கு மாற்றுச் சிறுகதைகள் எஸ். எம். சவுந்தரநாயகம், செந்தாரகை என் போரால் எழுதப்பட்டன. இவருடைய சிறுகதை களில் சமூகக் கட்டவிழ்ப்புகள் காணப்படும்.



27. **உதயனின்** சிறுகதைகளில் சம்பவங்கள் நிறைய இடம் பிடிக்கின்றன. சில கதைகளில் இலேசான நகைச்சுவையுடன் யாழ்ப்பாண மக்களின் விசித்திரமான குணங்களை கிண்டல் செய் துள்ளார். ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், எழுது வினைஞர்கள் ஆகிய மத்திய தர வகுப்பைச் சேர்ந்த பாத்திரங்களை அவர் கதைகளில் காண லாம். இளம்பூரணன் என்ற புனைபெயரிலும் சிறுகதைகள் படைத்துள்ளார். கடவுளும் மனிதரும், பூவரசம் பூ, வடு என்பன தரமான சிறுகதைகளாகவுள்ளன.



28. கல்கி நடாத்திய ஈழத்துச் சிறுகதைப் போட்டி யில் 'நந்தாவதி' என்ற சிறுகதைக்காக முதற் பரிசினைப் பெற்றுக் கொண்டதன் மூலம் ஈழத்துச் சிறுகதை துறையில் பேசப்பட்டவர் **நவம்.** 1945 இல் சிறுகதை உலகுக்கு வந்தார். 50 சிறுகதைகளுக்கு மேல் எழுதியுள்ள நவம், 3 குறுநாவல்களையும் படைத்துள்ளார். நவத்தின் சிறுகதைகளில் தமிழ்த்தேசிய சிந்தனைகள் ஆழமாகப் பதிந்திருக்கும். உரிமையான உரை நடையும், சீராகக் கதை சொல்லும் பாங்கும் நவத்தின் சிறுகதைகளில் காணப்படும் பண்பு கள். நந்தாவதி, கபந்த மனிதன், கூத்து என்பன நவத்தின் தக்க படைப்புகள். நந்தாவதி என்பது நவத்தின் 12 சிறுகதைகளின் தொகுதியாகும்.

29. ஈழத்தின் முற்போக்கு எழுத்தாளர் வரிசையில் **காவலூர் இராசதுரை**யின் படைப்புத்தளத் தைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. தினகரன் உருவாக்கிய படைப்பாளியான காவலூர் இராசதுரை, அடக்கியொடுக்கப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் பிரச்சினைகளைத் தன் சிறுகதைகளில் சமூகப்பிரக்ஞையொடு பதித்து வைத்துள்ளார். அவரது நல்ல சிறுகதைகளின் தொகுப்பாக 'குழந்தை ஒரு தெய்வம்' என்ற தொகுதி வெளி வந்துள்ளது. அவர் படைத்த 'தொட்டாற் சுருங்கி' ஈழத்தின் தரமான சிறுகதைகளில் ஒன்று எனப் பலராலும் விதந்துரைக்கப்படு கின்றது.

30. 1959 ஆம் ஆண்டு கல்கி நடாத்திய ஈழத்துச் சிறுகதைப் போட்டியில் பரிசில் பெற்றதன் மூலம் பலரினதும் கவனத்தைக் கவர்ந்த சிறு கதை ஆசிரியர் **செந்தூரன்** ஆவார். உரிமை எங்கே? என்ற அச்சிறுகதை ஈழத்துப் பரிசுச் சிறுகதைகள் என்ற நூலில் இடம் பெற்றுள்ளது. மலையகத் தொழிலாளரின் உரிமைக்குரலாக இச்சிறுகதை அமைந்தது. நுட்பமான அவ தானிப்பும், காட்சிப்படுத்தும் விபரணமும் இவருடைய சிறுகதைகளின் சிறப்பம்சங்க ளாகும். செந்தூரனின் சிறுகதைகளில் உரிமை எங்கே?, நடுக்கடலில் என்பன தரமானவை.




31. ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் நிச்சயமாகச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியவர்களில் ஒருவர் **இ. நாகராஜன்** ஆவார். அவர் சிறுகதை, நாவல், கவிதை ஆகிய துறைகளில் ஈடுபட் டிருந்தார். தமிழன் என்ற பத்திரிகையின் ஆசிரி யராக விளங்கினார். 1955 இல் சிறுகதைத் துறைக்குட் புகுந்தார். நிறை நிலா, கடன், திரை என்பன அவரின் சிறப்பான சிறுகதைகள். இ. நாகராஜனின் சிறுகதைகளின் தொகுப்பாக நிறைநிலா என்ற தொகுதி வெளிவந்தது. அவரின் சிறுகதைகளில் யாழ்ப்பாண மனிதர்களின் உணர்வலைகள் உருக்கமாகச் சித்திரிக்கப்பட் டிருக்கும். கவிதா பூர்வமான எளிமையான உரை நடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



32. ஈழத்தின் குறிப்பிடத்தக்க சிறுகதைப் படைப் பாளி **நந்தி** என்ற **சிவஞானசுந்தர**மாவார். 1947 இல் சிறுகதை உலகுக்குள் காலடி பதித்தார். கதையும் சாமியாரும், கிழவனும் கிழவியும், பச்சைப் பூக்கள், பாவதரிசனம் முதலான சிறு கதைகள் முற்போக்குக்கால கட்டத்தில் எழுதிய தரமான கதைகள். 'நந்தியின் எழுத்தில் நிலை பெற்ற சத்தியமும் ஆன்மாவின் உள்ளுணர் வும், எல்லையற்ற இரக்கமும் கலந்துறவாடு கின்றன. ஆடம்பரமற்ற ஆனால் அழுத்தமும் வேகமும் நிறைந்த ஓர் உரைநடையில் நந்தி படைத்த சிறுகதைகள் உள்ளன என்பர். நந்தி ஈழத்தின் சிறந்ததொரு நாவலாசிரியர். மருத் துவர். பிற்காலத்தில் அவர் எழுதிய பதுங்கு குழி, கேள்விகள் உருவாகின்றன முதலிய சிறுகதைகள் அற்புதமானவை.



33. ஈழத்தின் தரமான சிறுகதைகள் பலவற்றைப் படைத்தவர்களில் **கே.வி. நடராஜன்** ஒருவ ராவார். யாழ்ப்பாண சமூகத்தின் முகமூடிகளை இவரது சிறுகதைகள் கிழிக்கின்றன. கதைகளின் கருப்பொருட்கள் சமூகத்தை உலுப்பிவிடக் கூடியவை. இவருடைய சிறுகதைகள் ஒரு காலகட்டத்து யாழ்ப்பாணத்தைப் படம் பிடிக் கின்றன. யாழ்ப்பாணத்துக்கதைகள், வேலி, ஊரும் உலகமும் என்பன இவருடைய சிறு கதைத் தொகுதிகளாகவுள்ளன. இழவு, கறை, அப்புவைத் தின்னிகள், கள்ளும் கருப்ப நீரும் என்பன இவரின் தரமான சிறுகதைகளாகும்




34. **சசிபாரதி சபாரத்தினத்தின்** சிறுகதைகளின் சிறப்பு அவற்றின் சுருக்க வடிவத்திலும் கருத்து வளத்திலுமே தங்கியுள்ளது. அசுரபசி, கடன் காரி, பாவியும் கடவுளும், குயிலின் ஓசை என்பன குறிப்பிடத்தக்க படைப்புக்கள். மனித சமூகத்தின் ஆசாபாசங்களும் அவலங்களும் அங்கலாய்ப்புகளும் இச்சின்னஞ் சிறுகதைகளில் காட்டப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



35. **வன்னியூர்க்கவிராயர்** என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதிப் புகழ் பெற்ற **எஸ்.எல். சவுந்தரநாயகம்** நல்லதொரு சிறுகதை ஆசிரியருமாவார். 1953களில் எழுத்துலகிற்குள் வந்தார். விவசாயிகளின் வாழ்க்கைப் பிரச்சினைகளையும் அவர்களின் மனத்துயர்களையும் தன் சிறுகதைகளில் சித்தரித்துள்ளார் 'ஈழத்துக் காவிய தீபகம்' என்பது அவரின் 15 சிறுகதைகளைக் கொண்ட சிறுகதைத் தொகுதியாகும். மண்வாசனை கொண்ட நடை அவரது சிறுகதைகளில் சிறப்பாக அமைந்திருக்கும். அபேட்சகர் அம்பலம், அந்தக்காரணம், கண்ணோட்டம் என்பன தரமான சிறுகதைகள்.



36. முற்போக்குக் காலகட்டத்துப் படைப்பாளிகளில் ஒருவர் **பொ.தம்பிராசா** ஆவார். 1950 - 1963 காலகட்டத்தில் கதையின் முழுப்பொலிவிலும் உள்ளடக்கத்திலும் நன்கு அமையச் சிறுகதை படைத்தவர் பொ. தம்பிராசா. இவருடைய ஒரு சிறுகதை பென்குயின் நூலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. மீண்டும் 'காலைவரும்' என்ற சிறுகதை. நனவோடை உத்தியை நன்கு கையாளுவார்.



37. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் ஸ்தாபகர்களில் முக்கியமானவர் **பிரேம்ஜி** ஆவார். சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் எஸ்.டி. சிவநாயகத்துடன் பணியாற்றியவர். அரிதாகவே சிறுகதைகள் படைத்துள்ளார். வெளியேற்றப்பட்டவன் நல்லதொரு சிறுகதை.



38. 1950 களில் சிறுகதைத் துறைக்குள் **அ.ஸ. அப்துல்ஸமது** பிரவேசித்தார். கிழக்கு மாகாண முஸ்லீம்களின் சமூக வாழ்க்கையை நுட்பமாகவும் யதார்த்தமாகவும் தன் படைப்புகளில் சித்தரித்துள்ளார். 100க்கு மேற்பட்ட சிறுகதைகளைப் படைத்துள்ளார். 'எனக்கு வயது பதின் மூன்று' இவரின் சிறுகதைகளின் தொகுப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனிமலர், கனவுப்பூக்கள், தர்மங்களாகும் தவறுகள் என்பன இவரின் நாவல்களாகும்.



39. முற்போக்குக் காலகட்டத்துப் படைப்பாளிகளில் **சில்லையூர்ச் செல்வராசன்** முக்கியமானவர். ஈழத்தின் புகழ்பூத்த கவிஞர், நாடகாசிரியர், வானொலிக் கலைஞர், சிறுகதை ஆசிரியர் எனப் பல்பரிமாணங் கொண்டவர். பல்கலை வேந்தன், தான்தோன்றிக் கவிராஜர் என்பன இவரையே குறிக்கும். 'ஊரடங்குப் பாடல்கள்' என்பது இவரது குறும்பா தொகுதியாகும்.



40. ஈழத்துச் சிறுகதைத்துறைக்கு கிழக்கிலங்கையின் பங்களிப்பில் **ஆரையம்பதி தங்கராசா** ஒருவர். 1950களில் சிறுகதைத்துறைக்கு வந்தவர். ரிஷிமூலம், சருகு தளிர்ந்தது, அவளுக்கு வயது வந்தபோது, இரவு விடிந்தது என்பன குறிப்பிடத்தக்க சிறுகதைகள்.

'முற்போக்குக் காலகட்டத்துச் சிறுகதைகள்' என்ற இத் தொகுதியையும் பூபாலசிங்கம் புத்தகசாலையினரே வெளியிடுகின்றனர். முன்னோடிச் சிறுகதைகள் என்ற தொகுதியை வெளியிட்டதன் மூலம் ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் மறைக்கப்பட்டிருந்த பல முன்னோடிகளை இலக்கியவுலகு அறிய வைத்தனர். முற்போக்குக் காலகட்டத்துச் சிறுகதைகள் என்ற இத்தொகுதி மூலம் இதுவரை இலக்கிய வரலாற்றில் நிலவிய மாயையை அகற்றுகின்ற பணியைச் செய்கின்றனர். இத்தொகுதியை வெளியிடும் பூ. ஸ்ரீதரசிங் அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

கலாநிதி செங்கை ஆழியான் க. குணராசா
75/10A, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

1.	வீரம் - வரதர்	1
2.	தோணி - வ.அ. இராசரத்தினம்	13
3.	பிட்டு - கனக செந்திநாதன்	23
4.	மண்வாசனை - சு.வே.	33
5.	தபாற்காரச் சாமியார் - சொக்கன்	43
6.	தேர் - பொன்னுத்துரை	52
7.	பாதிக் குழந்தை - பித்தன்	71
8.	நிலவிலே பேசுவோம் - என்.கே. ரகுநாதன்	79
9.	அப்பே லங்கா - புதுமை லோலன்	83
10.	வள்ளி - கே. டானியல்	89
11.	ஆண்மையில்லாதவன் - செ. கணேசலிங்கன்	100
12.	பாதுகை - டொமினிக் ஜீவா	110
13.	வாழ்வு - நாவேந்தன்	121
14.	மாமி - தேவன்	126
15.	கொக்கும் தவம் - எஸ். அகஸ்தியர்	130
16.	ஓநாய்கள் கவனம் - சு. இராஜநாயகன்	138
17.	பாதை - நீர்வை பொன்னையன்	148
18.	சத்திய தரிசனம் - சிற்பி	163
19.	பனங்காணி - பத்மா சோமகாந்தன்	174

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. நிலவோ நெருப்போ? - சோமகாந்தன் 182

21. பூர்ணிமா நெசவுக்குப் போகிறாள் - அன்புமணி 190

22. பக்குவம் - அ. முத்துலிங்கம் 198

23. அம்மன் அருள் - அருள் செல்வநாயகம் 207

24. புளியங் கொம்பு - குறமகள் 219

25. பெப்பரவரி - 4 - மு. தளையசிங்கம் 225

26. மன்னிப்பாரா? - பவானி ஆழ்வாப்பிள்ளை 235

27. கூத்து - நவம் 243

28. எழுத்தாளன் நாடி! - காவலூர் ராசதுரை 257

29. உரிமை எங்கே? - செந்தூரன் 260

30. துணை - இ. நாகராஜன் 271

31. காப்பு - நந்தி 282

32. பிரம்ம ஞானி - கே.வி. நடராஜன் 289

33. பிச்சைக்காரி கடன்காரியான கதை - சசி பாரதி சபாரத்தினம் 296

34. அபேட்சகர் அம்பலத்தார் - எஸ்.எல். சவுந்தரநாயகம் 299

35. மீண்டும் காலை வரும் - பொ. தம்பிராசன் 307

36. வெளியேற்றப்பட்டான்! - பிரேம்ஜி 317

37. சாணைக் கூறை - அ.ஸ. அப்துஸ்ஸமது 325

38. கதவு திறந்தது - சில்லையூர் செல்வராசன் 332

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரம்

வரதர்

மூர்த்தி மாஸ்டர் பிள்ளையார் கோயிலுக்குப் போன போது- கோயில் வெறிச்சென்று கிடந்தது. சென்ற பதினைந்து நாட்களாக 'திருவிழா' என்ற பெயரால் நடந்த ஆர்ப்பாட்டங்களெல்லாம் ஒரு கனவு போல மறைந்துவிட்டன. தினம் தினம் நூற்றுக்கணக்காக வந்து கூடிய மக்கள் - பக்தர்! - கூட்டத்தினர், கோயில் என்று ஒன்றிருப்பதையே மறந்துவிட்டது போல, அவரவர் வாழ்க்கைப் பிரச்சினையில் இறங்கிவிட்டனர். பிள்ளையாருக்கும் கணபதி ஐயருக்கும் இனி அடுத்த சித்திரை மாதம் வரையும் ஓய்வு தான்.

பதினைந்து நாட்களுக்கு மேலாக ஐயரோடு ஆற அமரக் கதைக்காமலிருந்து மூர்த்தி மாஸ்டருக்கு விடாய் எடுத்து விட்டது. ஐயருக்கும் அந்தமாதிரி ஒரு மன நிலை தான். ''வாருங்கோ மாஸ்டர்!'' என்று மகிழ்ச்சியுடன் வரவேற்றார் அவர்.

''எல்லாம் ஒரு வழியாய் முடிந்துவிட்டது...'' என்று மூர்த்தி மாஸ்டர் ஆரம்பிக்கவும், ''எங்கே முடிகிறது? இதுகளெல்லாம் அந்தந்த இடத்தில் ஒதுக்கி ஒழுங்கு படுத்தி முடிக்க இன்னும் பத்து நாளாவது செல்லும். அதற்குப் பிறகுதான் மனுஷனுக்கு நிம்மதி'' என்று தமக்கிருக்கும் பொறுப்புக்களை எடுத்துச் சொன்னார் கணபதி ஐயர்.

''அது சரி ஐயா; முந்தை நாள் தேரிலன்று யாரோ ஒருவனைப் போட்டு அடித்து விட்டார்களாமே?''

''ஓமோம், நானும் பார்க்கவில்லை. ஆனாலும் விசாரித்துத் தெரிந்துகொண்டேன்.....யாரே ஒரு பிற ஊர்க்காரன்; கீழ்ச்சாதி - தீண்டத்தகாதவன் - கோயிலுக்குள்ளே வந்து நின்றானாம்...''

''சாமியைக் கிட்ட நின்று பார்க்க ஆசைப்பட்டானாக்கும்!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்படியிருக்குமென்று நான் நினைக்கவில்லை. அந்த மாதிரி ஒரு பக்தி, பக்குவம் உள்ளவன் கட்டு மீறி வர மாட்டான். தெரியாதா, 'போனால் என்ன' என்று ஒரு கெறுக்கு.....''

''பிறகு?''

''இதை யாரோ இனம் கண்டு பிடித்து, சீனித்தம்பியருடைய மகன் வடிவேலன் இப்போது லீவில் நிற்கிறாரல்லவா, அவரிடம் சொல்லிவிட்டார்கள்.....''

''நல்ல ஆள் சந்தித்தான்!''

''அவர் வந்து இரண்டாம் பேச்சுப் பேசவில்லையாம். அவனை மடியில் பிடியோடு இழுத்துக் கொண்டு போய் வெளி வீதியில் வைத்துக் கும்பிடக் கும்பிடக் கொடுத்தாராம். அடி யென்றால் அடிதானாம். அகோரமாம்! - நேரில் பார்த்தவர்கள் சொன்னார்கள்....''

''இருக்கும். வடிவேலன் குத்துச் சண்டை, மல்யுத்தம் என்று இப்படிக் கொஞ்சம் பழகின ஆளாம்..... நல்ல பிள்ளை தான் படித்த வித்தையை இப்படிச் சாமி காரியத்தில் உபயோகித் திருக்கிறான்.''

''என்ன இருந்தாலும் அவனை இவர் அவ்வளவு மோசமாக அடித்திருக்கக் கூடாதென்றுதான் எனக்குத் தோன்றுகிறது. ஏதோ கண்டும் காணாமலும் வந்துவிட்டுப் போகிறான். உங்கே 'திறந்து விட்ட' கோயில்களிலெல்லாம் சாமிகள் எழும்பி ஓடிவிட்டனவா? ஆனால் கோயிலடியில் வடிவேலன் மாதிரி ஒரு ஆளும் வேணுந்தான். சும்மா தொட்டதற்கெல்லாம் நடப்பு நாட்டாண்மை காட்ட வெளிக்கிடுகிற சண்டியன்மார் இம்முறை வடிவேலன் நிற்கிறார் என்றதும் மூச்சுக்கூடக் காட்டவில்லை!''

மூர்த்தி மாஸ்டர் சிரித்தார். ஏளனச் சிரிப்பு!


''என்ன சிரிக்கிறீர்கள் மாஸ்டர்? வடிவேலன் அப்படி ஒன்றும் மோசமான ஆளல்ல. ஓரளவுக்கு நீதி நியாயம் தெரிந்தவர். நான் சும்மா சொல்லவில்லை; பத்துப்பேருக்கு முன்னால் தனியாக நின்று வகை சொல்லக்கூடிய ஆள் உங்களுக்குத் தெரியாதா? கொழும்பிலேயே 'வடிவேலன்' என்றால் சிங்களக் காடையர் முதலாகக் குலை நடுக்கமாம். ஒருமுறை பத்துப் பதினைந்து காடையர் சேர்ந்து இதுவரை அடித்துக் கொல்லவென்று திட்டம் போட்டு வந்தார்களாம். இவர் துவக்கெடுத்துச் சுட்டதில் அந்த இடத்திலேயே இரண்டு பேர் பிணமாய் விழுந்தார்களாம். மீதிப் பேர் நின்ற இடமும் தெரியாமல் ஓடிவிட்டார்களாம்.....''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தி மாஸ்டர் சிரித்தார். ஏளனச் சிரிப்பு!

"நீங்கள் என்ன நினைத்தாலும் சரி. வடிவேலன் ஒரு வீரன் தான், அவருடைய தோற்றமும் ஆளும் உடம்புக் கட்டும்....."

மூர்த்தி மாஸ்டர் சிரித்தார். ஏளனச் சிரிப்பு!



கணபதி ஐயரால் 'வீரன்' என்று பாராட்டப்பட்ட - மூர்த்தி மாஸ்டரின் ஏளனச் சிரிப்புக்கு ஆளான - இந்த வடிவேலன் சிறுவயதில் இதே கிராமத்துப் புழுதியிலே அலைந்து விளையாடித் திரிந்தவன். அவனுடைய தகப்பனார் சீனித்தம்பிக்கு கொழும் பிலே உத்தியோகம் பலத்துக் கொண்டதும், வெள்ளத்தையிலே நல்லதாக ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு 'குடும்பத்' தையும் அங்கே அழைத்துக்கொண்டார். அதற்குப்பிறகு சென்ற வருடம் பென்சன் வாங்கியதோடு தான் ஊருக்கு வந்து குந்திக் கொண்டார். வடிவேலன் மட்டும் உத்தியோகத்தின் நிமித்தம் கொழும்பிலேயே தங்கிவிட்டான். பிள்ளையார் கோயிலில் திருவிழா தொடங்கியதும் அந்த மகனைப் பார்க்க ஆசைப்பட்ட அவன் அம்மா, கடிதத்துக்கு மேல் கடிதம் எழுதி அவனை வர வழைத்துவிட்டார். அவன் வருமுன்பே அவனுடைய வீரப் பிரதாபம் ஊருக்கு வந்து விட்டது. இரண்டு பேரைச் சுட்டு வீழ்த் தியவன் என்றார்கள். செத்தது ஏழெட்டுப்பேர் என சிலர் விவரித் தார்கள்; இன்னும் சிலரோ. "ஐம்பது அறுபது பேரை ஒரேடியாகச் சுட்டுப் பொசுக்கிட்டான்" என்று விரிவுரை நிகழ்த்தினார்கள்.

அது எப்படியிருந்தபோதிலும், அந்த வீரசிகாமணி தன்னு டைய பிரதாபத்துக்குப் பங்கமில்லாமல் பிள்ளையார் கோயில் திருவிழாவிலே அவ்வப்போது தன்னுடைய 'வீரத்தைக் காட்டி வந்து, கடைசி நாள் தேரிலன்று அந்தத் தீண்டத் தகாதவன்' மீது தன் கைவரிசையைக் காட்டி வீரத்தின் உச்சிக்கே ஏறிவிட்டான்!

இப்படியாக வடிவேலன் ஊரிலே ஒரு கதாநாயகனாக உலாவிக் கொண்டிருந்தபோது -

கயல் விழி

கயல் விழியைப் பற்றிச் சொல்லமுன்பு, இளங்கோவைப் பற்றிச் சொல்கிறேன். இளங்கோவைப் பற்றிச் சொன்னால் அவள் தானாக வந்து புகுந்துக் கொள்வாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்கோவைத் தெரியாதவர்கள் அந்த ஊரில் இல்லை. அதற்குக் காரணம் அவன் அந்த ஊர்ப் பாடசாலையில் ஆசிரியனாக இருந்தது மட்டுமல்ல, நல்ல குடும்பத்திலே பிறந்தவன். இன்னும் சொன்னால், அவனுடைய ஒழுக்கமும் நடத்தையுமே அவனுடைய குடும்பத்தின் கௌரவத்தை ஒருபடி உயர்த்தி வைத்திருந்தன. அவன் இதுவரை யாரையும் விரோதித்தவனல்லன். யாரைக் கேட்டாலும் 'நல்லபிள்ளை' என்று சொல்வார்கள். அவனுடைய உள்ளத்திலே எண்ணங்கள், கொள்கைகள் மலை போலக் குவிந்து கிடக்கும். ஆனால் மூர்த்தி மாஸ்டரைப் போன்ற இரண்டொருவரைத் தவிர வேறு யாரோடும் அவற்றை அளந்து கொட்ட மாட்டான். வேண்டுமென்று மறைப்பதுமில்லை; அநாவசியமாக வாக்குவாதம் செய்வதுமில்லை. இதனால் அவன் எப்போதாவது ஏதாவது ஒரு விஷயத்தில் அபிப்பிராயம் சொன்னால் மற்றவர்கள் நிச்சயம் அதற்கு மதிப்புக்கொடுப்பார்கள்.

அதைவிட அவன் ஒரு எழுத்தாளன்! உள்ளத்திலே குமுறிக் கொப்பளிக்கிற எண்ணங்களுக்கு எழுத்துருவம் கொடுத்துச் சிறுகதைகள் புனைவான். ஆனால் அவனுடைய கதைகளைப் படிப்பவர்களை அந்த ஊரில் - விரல் விட்டு எண்ணிவிடலாம்.

ஒன்று மூர்த்தி மாஸ்டர், அவரோடு சேர்ந்த பழக்கத்தால் கணபதி ஐயர்; மற்றது -

கயல் விழி!

கயல் விழி எஸ். எஸ். சி. படிக்கிறபோதே அவளுடைய புத்தகங்களுக்கிடையில் ஏதாவதொரு கதைப்புத்தகமும் இருக்கும். எஸ். எஸ். சி. சித்தியடைந்த பிறகு சென்ற ஐந்தாறு வருடகாலமாக அவள் வீட்டிலிருந்து படித்தாள் - அவ்வளவும் கதைகள், கதைகள், கதைகள்!

'கல்கி'யைப் படித்து. கு.ப.ரா வைப் படித்து, புதுமைப் பித்தனை' யும் படித்துச் சுவைக்கிற அளவுக்கு அவள் வளர்ந்து விட்டாள்! வெறுமனே கதையை மட்டும் படித்து விட்டுப் போகாமல், கதாசிரியரை கவனிக்கிற போக்கில் புகுந்ததால், அவருடைய கவனத்துக்கு - கவர்ச்சிக்கு - ஆளானான் இளங்கோ, 'ஆ! எவ்வளவு அருமையாக எழுதுகிறார்!' என்று வாயூறுவாள்!

இளங்கோவை அவள் காதலித்தாள் என்று என்னால் எழுத முடியவில்லை. அவள் அவனுக்கு ஒரு காதல் கடிதம் எழுதவில்லை. எப்போதாவது அருமையாகச் சந்தித்துக் கதைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது கூட 'காதல்' என்ற பேச்சுவந்ததில்லை. சும்மா ஒரு கவர்ச்சி: அவ்வளவுதான்.

இளங்கோவின் நிலையும் இதேதான். தன்னுடைய கதை களை அவள் பாராட்டும் போது அவனுக்கு உச்சி குளிர்ந்து போகும். கதைகளை எழுதும்போதே 'இதைக் கயல்விழி படிப் பாள்' என்று எண்ணுகிற மனநிலை அவனுக்கு உண்டாயிற்று. யாராவது ஒரு நல்ல விமர்சகர் தன்னுடைய கதையைப்பற்றிப் பத்திரிகையில் அபிப்பிரயாம் எழுதினால் அதைப் படிப்பதில் எவ்வளவு ஆர்வம் இருக்குமோ, அவ்வளவு ஆர்வம் கயல் விழியின் அபிப்பிராயத்தை அறிவதிலுமே ஏற்பட்டது.

இவர்கள் இருவருக்குமிடையில் இருந்த உறவில், சாதாரண 'எழுத்தாளன் - வாசகி' என்ற தொடர்போடு இனக்கவர்ச்சியும் சேர்ந்திருந்தது என்பதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

ஆனால் 'காதல்'-

அது இன்னும் வரவில்லை. இன்னும் சில மாதங்கள் இப்ப டிப் பழகி வந்தால் அது வந்துவிடக்கூடும். அதற்கிடையில் தான்-

வடிவேலன் வந்து சேர்ந்தான்! அவனைப் பார்த்தது முதல், அவனுடைய வீரப்பிரதாபத்தைக் கேள்விப்பட்டது முதல், அந்தக் கம்பீரமான வாலிபனைத் தமது மருமகனாக ஆக்கிக்கொண்டால் நல்லதென்று கயல்விழியின் தகப்பனார் நினைக்கலானார். 'நல்ல குடும்பம்; உத்தியோகம்; அழகு; ஆண்மை'..... இவற்றைவிட வேறென்ன வேண்டும் ஒரு நல்ல மாப்பிள்ளைக்கு?

சாடையாக அப்பாவும் அம்மாவும் இதைப்பற்றிப் பேசிக் கொண்டது, கயல்விழியின் காதிலும் விழுந்தது. அவளுடை மனம்-

அதிர்ந்து விடவில்லை; ஒரு கணம் இளங்கோவின் எண்ணம் வந்துபோயிற்று; ஆம், அது போய்விட்டது! அவனை அவள் காதலித்திருந்தால் தானே அது போகமாட்டேனென்று குழப்பம் செய்திருக்கும்? அது போய்விட்டதும் அவள் நெஞ்சிலே வடி வேலன் வந்து சிரித்தான். 'ஆம், இவர் அழகர்; வீரர்; கொழும்பிலே நல்ல உத்தியோகம் பார்க்கிறவர்.....'

∴ ∴ ∴

கணபதி ஐயர் சொன்னார்,

''மாஸ்டர், சீனித்தம்பியருடைய மகன் வடிவேலனுக்கும் நடராசருடைய மகள் கயல்விழிக்கும் ஒரு பேச்சுக்கால் இருக்கிறது போல் தெரிகிறது..... இன்னும் கதை வெளியில் வரவில்லை.....''

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மூர்த்தி மாஸ்டருக்கு யாரோ தாக்கியது போலிருந்தது. "ஆ! கயல்விழிக்கா? - அவள் நல்ல பெண்ணல்லவா!....."

"ஓம்....வடிவேலனுக்கு மென்ன...."

மூர்த்தி மாஸ்டர் சிரித்தார். ஏளனச் சிரிப்பு!

ஃ ஃ ஃ

வீட்டோடு இருந்த கதை இன்னும் வெளியே போக வில்லை. விரைவில் போக இருந்தது. அதற்கிடையில்

அது 1958ம் ஆண்டு ஆனிமாதம் 29 ம் திகதி.

அன்று தான் யாழ்ப்பாணத்தில் ஒரு பேய்க் கூட்டம் வெறி யாட்டம் ஆடிற்று. வருங்காலத்தமிழன் தன்னுடைய சரித்திரத் தைப் பார்த்து வெட்கித் தலைகுனியக் கூடியதாக அன்று ஒரு ரௌடிக் கூட்டம் தெருவெல்லாம் அட்டகாசம் செய்தது. கீழ்த்தர மான கொள்கைக்காரர்களும், எரிகிற வீட்டில் பிடுங்கியது இலாப மென்ற கருத்துடைய சில சுயநலப் பிசாசுகளும் அந்த ரௌடி களுடன் சேர்ந்து கொண்டன.

எங்கெங்கு சிங்களவருடைய கடைகள் இருந்தனவோ, அங்கெல்லாம் இந்தப் 'போர்வீரர்கள்' படையெடுத்தார்கள்! எத்தனையோ கஷ்டமும் நஷ்டமும் பட்டுச் சம்பாதிக்கப்பட்ட பொருள்கள் நடுறோட்டிலே தீயிலிடப்பட்டன! விலைமதிப்புள்ள பொருள்களைக் குப்பை கஞ்சல்போல நெருப்பிலே போட்டு எரித்தனர் அந்தக் குப்பைகள்!

இந்தக் குப்பைக் கூட்டத்திலே இருந்தவர்கள் சில நூறு பேர்தான். ஆனால் இதைச் சகிக்காத ஆயிரக்கணக்கானவர்கள் பார்த்துக்கொண்டிருந்தார்கள்; கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. அவர்கள் தனித்தனியாக நின்றார்கள்; இவர்களோ கூட்டமாகக்கூடித் திரண் டிருந்தார்கள்!

நல்லவேளையாகச் சிங்களவர்கள் அனைவரும் பொலீஸ் நிலையத்துக்குப் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். அவர்களில் பலரை மனிதர்களான தமிழர்களே - அங்கே கொண்டு போய்ச் சேர்த்து விட்டார்கள்.

இந்தக் கொடுமை யாழ்ப்பாண நகரத்தில் நடந்த அன்று மாலையிலே -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே இந்தக் கிராமத்தில் -

பிள்ளையார் கோயிலுக்குச் சற்றுத் தள்ளிச் சந்தியில் ஒரு 'பேக்கரி'. சென்ற பதினைந்து வருடங்களுக்கு மேலாக பண்டா தன்னுடைய குடும்பத்தோடு அந்தப் பேக்கரிக்குப் பின்னால் உள்ள வீட்டிலிருந்து, இந்த ஊரில் தானும் ஒருவனாக - நன்மை தீமைகளில் பங்கு கொண்டு வாழ்ந்து வருகிறான்.

அன்று மாலை பண்டாவின் வீட்டுக்கு முன்னால் ஒரு கூட்டம்; இருபது முப்பது பேர் இருக்கும். அந்தப் படைக்குத் தளபதியாக நின்றான் வடிவேலன்!

''சட சடவென்று வீட்டுக்குக் கல்லெறி விழுந்தது. வீட்டுக் குள் ஒருவரும் இல்லையென்று தெரிந்தது. வேலியை வெட்டிக் கதவுகளை உடைத்துச் சிலர் உள்ளே புகுந்துவிட்டார்கள்.''

''எல்லோரும் வெளியே வாருங்கள்.... டேய் கொண்டு வா நெருப்புப் பெட்டியை!'' என்று வடிவேலன் உத்தரவிட்டான்.

நெருப்புப் பெட்டி கைக்கு வருவதற்குள்-

யாரோ ஒருவன் ஓடி வந்து வடிவேலனின் காதுக்குள் சொன்னான்; ''பண்டாவையும் பெண்சாதி பிள்ளைகளையும் மூர்த்தி மாஸ்டர் கூட்டிக் கொண்டு போய்த் தன்னுடைய வீட்டிலே வைத்திருக்கிறாராம்!''

வடிவேலன் 'மூர்த்தி மாஸ்டர்?' என்று ஒரு கணம் நின்றான். பிறகு ''அது எதுவாயிருந்தாலென்ன இந்த விஷயத்தில் எவ ருடைய முகத்தையும் பார்க்க இயலாது! அவர் தானாக விட்டால் சரி.....'' என்று சொல்லிக் கொண்டே திரும்பி நடந்தான். கூட்ட மும் நெருப்புப்பெட்டியை மறந்து ஓட்டமும் நடையுமாக அவ னைப் பின்பற்றிச் சென்றது.

ஆம், அது மூர்த்தி மாஸ்டர் வேலைதான்! பட்டணத்தில் நடைபெற்ற அக்கிரமத்தை அன்று மத்தியானம் கேள்விப்பட்டதும் அவர் ஆத்திரப்பட்டார். ஆனால் ஆத்திரத்திலும் சிந்தித்துச் செய லாற்றத் தவறவில்லை. உடனடியாக அவர் பண்டாவின் வீட்டுக் குச் சென்று, அவனுடைய குடும்பத்தையும், பெறுமதியுள்ள பொருள்களையும் தம்முடைய வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்த்து விட்டார். பிறகும் நிலைமையைக் கவனித்துக் கொண்டு எச்சரிக்கை யாகவே இருந்தார்.

பண்டாவின் வீட்டை நோக்கிப் 'பட்டாளம்' புறப்படப் போகிற செய்தியை எப்படியோ அறிந்துகொண்டு, முன்னரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோசித்து வைத்திருந்தபடி இளங்கோவைக் கூப்பிட்டுத் தம்முடைய வீட்டில் காவலிருக்கும்படி விட்டு விட்டு, தாம் சைக்கிளை எடுத்துக் கொண்டு விரைந்தார், மூன்று மைல்களுக்கப்பாலுள்ள பொலிஸ் நிலையத்தை நோக்கி.

இங்கே-

மூர்த்தி மாஸ்டரின் வளவுக்குள் ஆரவாரத்துடன் நுழைந்தது கூட்டம். ஒழுங்கையில் சத்தம் கேட்டபோதே, பண்டாவின் குடும்பம் இருந்த அறையைப் பூட்டித் திறப்பை எடுத்து ஒளித்து வைத்துவிட்டு இளங்கோ தயாராக நின்று கூட்டத்தை வரவேற்றான்.

'பண்டாவை வெளியே விடு!'

'தமிழா, தமிழனுக்குத் துரோகம் செய்யாதே,'

'பழிக்குப் பழி வாங்குவோம்!'

இந்தச் சத்தங்களுக்கிடையே ஒரு மிருகத்தின் குரல் கேட்டது.

'அவனுடைய குமரியை மட்டும் என்னிடம் விடு, நான் போய்விடுகிறேன்!'

கூட்டம் 'கொல்' என்று சிரித்தது! 'நாய்கள், இவர்கள் அக்கா தங்கைகளுடன் பிறந்ததில்லைப்போலும்!'

வடிவேலன் முன்னுக்கு வந்தான்.

இளங்கோ, எதிர்கொண்டான்.

''மூர்த்தி மாஸ்டர் எங்கே?''

''அவர் இல்லை''

''பண்டாவுக்கு நீர் தான் காவலோ?''

இளங்கோவும் உணர்ச்சி துடிக்கும் இளைஞன் தான். வடிவேலனின் கேலிக்குரல் அவனுக்கு ஆத்திரத்தை மூட்டிற்று. ஆனால் அதை அடக்கிக்கொண்டு சொன்னான்:

''வடிவேல், அவர்கள் யாருக்கு என்ன தீமை செய்தார்கள்? இவ்வளவு காலமும்.....''

''உம்முடைய உபதேசம் எனக்குத் தேவையில்லை!'' என்று வடிவேலன் வெடித்துச் சீறினான். பிறகு பின்னால் திரும்பி, ''போங்கள்! உள்ளே போய் இழுத்து வாருங்கள்!'' என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நில்லுங்கள்; ஒருவரும் உள்ளே நுழையக்கூடாது!" என்று இளங்கோ கைகளை அகல விரித்தான், ஆனால் இருபது முப்பது கைகளுக்கு முன்னால் அவனுடைய இரண்டு கைகள் வலுவிழந்து மடிந்தன.

அவன் உடம்பெல்லாம் துடித்துப் பதறியது. எத்தனையோ விதமான உணர்ச்சிகள்!

உள்ளே போனவர்கள் திரும்பி "கதவு பூட்டியிருக்கிறது!" என்றார்கள்.

வடிவேலன் இளங்கோலைப் பார்த்துக் கேட்டான்: "திறப்பு எங்கே?"

இளங்கோ, "என்னிடமே அதை வாங்கப்போகிறீரா?" என்று திருப்பிக் கேட்டான்.

"மரியாதையாகக் கேட்கிறேன்...."

"நீர் எப்படிக் கேட்டாலும் சரிதான்!"

"ச்சீ தமிழ்த் துரோகி!....."

ஆம், அந்த வீரசிகாமணி, தமிழ்த்தாதா, தமிழையே தன் மூச்சாகக் கொண்ட வள்ளல் அப்படித்தான் விளித்தான்; அதுவும் இளங்கோவைப் பார்த்து விளித்தான்.

"ச்சீ, தமிழ்த்துரோகி! நீ சிங்களவனுக்கு உதவிசெய்யப் போகிறாயா?.... கொடடா திறப்பை"

இளங்கோ பதிலே பேசவில்லை. பேசும் சக்திக்கு அப்பால் நின்றான் அவன்

மறுகணம் -

அவன் கன்னத்தில் வடிவேலனின் கை கேட்டது: "கொடடா திறப்பை!"

யாரோ ஒருவன் பின்னால் நின்று உதைத்தான். ஒருவன் குத்தினான். மற்றவன் அடித்தான்.

ஒரு பாட்டம் முடிந்ததும் வடிவேலன் விலக்கினான்.

"எங்கேயடா திறப்பு?"

"நாய்களே! நீங்கள் என்னைக் கொன்றாலும்....."

வடிவேலன் கூட்டத்துக்குச் சொன்னான்: "இவனைப் பிறகு பார்த்துக்கொள்வோம். நீங்கள் கதவை உடையுங்கள். வருவதற் கெல்லாம் நான் இருக்கிறேன்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை அடித்து இழுத்தார்கள். கதவிலே காந்தம் இருந்ததோ? அது இளங்கோ என்ற இரும்பைத் தன்னிடம் இழுத்து இழுத்து ஒட்டிக்கொண்டது!

கதவுக்கு விழுந்த உதைகளில் பாதி இளங்கோவின் மீது விழுந்தன காலிலே, கையிலே, முதுகிலே, நெஞ்சிலே வயிற்றிலே...

வீரம்!

அந்த உணர்ச்சியைப் பார்க்க அகில உலகமே அங்கே வந்திருக்க வேண்டும்! உதவியற்ற ஒரு மனிதகுடும்பத்தை, கொடூரமான இனவெறியர்களின் கையிலிருந்து காப்பாற்றுவதற்காகத் தன்னுடைய உடம்பிலே அவ்வளவு வேதனையும் தாங்கிகொண்டு நிமிர்ந்து நிற்கிறானே. அவனுடைய நெஞ்சிலே நிரம்பி நிற்கும் வீர உணர்ச்சியைப் பாடுவதற்குக் கம்பனால் முடியாது. அவன் பாடிய 'வீரம்' வேறு! புதுயுகக் கவிஞர்கள், முடியுமானால் நீங்கள் பாடுங்கள்! மொழி என்று ஓசையிலே அதற்கு உருவம் கொடுக்க முடியுமானால், பேனா மன்னர்களே! நீங்கள் செய்து பாருங்கள்!

யாரோ ஒருவன் எதனாலேயோ அடித்த அடி இளங்கோவின் தலையில் பட்டு -

கேவலம், வெறும் இரத்தத்தை தான் அவர்களால் வெளிப்படுத்த முடிந்ததே தவிர, அவனுடைய உறுதியில், வீரத்தில் ஒரு துளிக்கூட அவர்களால் வெளியேற்ற முடியவில்லை.

அவனுடைய உடம்பு என்ன இரும்பா? இன்னும் சில நிமிடங்களில் -

நல்ல வேளை!

வெளியே மோட்டார்ச் சத்தம் கேட்டது.

மூர்த்தி மாஸ்டர் வந்துவிட்டார்!

'பொலிஸ்' என்று ஒரு குரல்.

'பொலிஸ், பொலிஸ்' என்று அதைப் பிரதிபலித்துப் பல குரல்கள். 'நான் முந்தி, நீ முந்தி' என்று வீராதிவீரர்கள் ஓடுகிற காட்சி - அது என்ன கனவா?... எல்லாம் மங்கலாக..... எல்லாம் மங்கலாக.....

இளங்கோவின் உடல் சோர்ந்து விழுந்தது!

∴ ∴ ∴

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்பத்திரியில் கிடந்த இளங்கோவை ஊரே திரண்டு வந்து பார்த்தது. அவனுடைய வீரத்தைப் புகழ்ந்தது. அவனை அடித்து உதைத்தவர்கள் கூடப் பலர் வந்து பார்த்தார்கள். தாங்களும் அந்தக் கூட்டத்தில் இருந்ததாகச் சொல்லி மன்னிப்புக் கேட்கு மளவுக்கு அவர்கள் பெரிய மனிதர்களல்லர்; ஆயினும் அதற்காக மனதுக்குள்ளே பச்சாதாபப்பட்டார்கள் - மனிதர்கள் தான்!

மூர்த்தி மாஸ்டர் இளங்கோவை விட்டு அகலாமலிருந்தார், கூட இருந்து அவனைப் பார்ப்பது தமக்கு ஒரு பெறுபேறு என்று அவர் கருதினார். ஒரு வாரம் கழித்து அவனுக்குக் கொஞ்சம் தென்பு வந்த பிறகு மூர்த்தி மாஸ்டர் சொன்னார். 'அன்று நான் பிழைசெய்துவிட்டேன். நான் போன கையோடு பொலீசை அழைத்து வராலாமென்ற எண்ணத்துக்கு முதலிடம் கொடுத்து, உம்மை வீட்டிலே விட்டு விட்டுப் போனேன். இவ்வளவு தூரம் நடக்குமென்று தெரிந்திருந்தால், நான் நின்றுகொண்டு உம்மை அங்கே அனுப்பியிருப்பேன்.''

''நல்லவேளை மாஸ்டர்! அப்படிச் செய்திருந்தால் எனக்குக் கிடைக்க இருந்த ஒரு பெரிய இன்பம் எட்டாமல் போயிருக்கும்!''

இளங்கோவின் புன்சிரிப்பையும் முகமலர்ச்சியையும் கவ னித்த மூர்த்தி மாஸ்டர், ''எதைச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

இளங்கோ மெதுவாகத் திரும்பி தலையணையை உயர்த்தி, அதற்குக் கீழிருந்த ஒரு கடிதத்தை எடுத்து மூர்த்தி மாஸ்டரிடம் கொடுத்து; ''நேற்றுக் கயல்விழி என்னைப் பார்க்க வந்திருந்தாள். போகும் போது இதைத் தந்துவிட்டுப் போனாள்... பரவாயில்லை நீங்கள் படித்துப் பாருங்கள் மாஸ்டர்'' என்றான்.

மூர்த்தி மாஸ்டர் படித்தார் -

அன்பரே, ஒரு கசாப்புக் கடைக்காரனை வீரனென்று நினைத்தேன், உங்கள் செயலை அறிந்த பிறகு... எனக்கு என்ன எழுதுவதென்று தெரியவில்லை. இப்போது என் மனத்தில் திரும்பத் திரும்ப நினைத்து இரசிப்பது உங்கள் கதைகளையல்ல, உங்களை!..... எனக்கு என்ன எழுதுவ தென்று தெரியவில்லை.

உங்கள்

கயல்விழி

கடிதத்தை மனதுக்குள் படித்துவிட்டு மூர்த்தி மாஸ்டரும் முகமலர்ந்து சிரித்தார். ''தம்பி இனி உமக்கு எல்லா நோவும் மாறிவிடும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்கோவுக்குச் சிறிது வெட்கமாகவும் இருந்தது. அதை மறைப்பதற்குப் போலும், "அவள் எழுதியிருக்கிற அழகைப் பார்த்தீர்களா? இரசிப்பது என்னுடைய கதைகளையல்லவாம்...." என்றான்.

".....இனி அவளும் ஒரு 'எழுத்தாளி' ஆகிவிடுவாள்!" என்று சொல்லி மூர்த்தி மாஸ்டர் சிரித்தார். அது ஏளனச் சிரிப்பல்ல, மகிழ்ச்சியின் சிரிப்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோணி

வ.அ. இராசரத்தினம்

கரு நீலமாகப் பரந்து கிடக்கும் வங்காள விரிகுடாவைப் பார்த்தவாறு எங்கள் கிராமம் இருக்கிறது. கிராமம் என்றா சொன் னேன்? பூமி சாத்திர, சமூக சாத்திர நியதிப்படி, கிராமம் என்றால் எப்படியிருக்கும் என்று எனக்குத் தெரியாது. சோழகக் காற்றுச் சர சரத்துக் கொண்டிருக்கும் தென்னை மரங்களடியிலே அங்கொன் றும் இங்கொன்றுமாக ஏறக்குறைய முப்பது ஓலைக் குடிசைகள் இருக்கின்றன. ஒரு குடிசையிலிருந்து மற்றக் குடிசைக்குப் போகப் பெண்களின் தலைவகிடு போல ஒற்றையடிப்பாதைகள் செல்கின் றன. இந்தக் குடிசைகள் எல்லாவற்றையும் சேர்த்துத்தான் கிராமம் என்று சொல்கிறேன். சரியோ, பிழையோ? உங்கள் பாடு.

எங்கள் குடிசைகளுக்கு முன்னால் தென்னை மரங்கள் இரண்டைச் சேர்த்து நீண்ட கம்பு ஒன்று எப்போதும் கட்டப் பட்டிருக்கும், அதிலேதான் தூண்டிற் கயிறுகளையும், தோணி யைச் செலுத்த உதவும் சவளையும் என் தந்தையார் வைப்பது வழக்கம், அதன் கீழே தென்னை மரத்தினடியிற் பென்னம் பெரிய குடம் ஒன்று இருக்கும். அந்தக் குடத்திலே தண்ணீர் எடுப்ப தற்காக ஒற்றையடிபாதை வழியாக அம்மா அடுத்த குடிசைக்குப் போகும் போதெல்லாம் நானும் கூடப் போயிருக்கிறேன்.

அநேகமாக காலைவேளையில் அம்மாவும் அப்பாவும் வீட்டில் இருக்க மாட்டார்கள். அப்பா கோழி கூவும் போதே எழுந்து கடலுக்குப் போய்விடுவார். அம்மாவிற்கு வெளியே என்ன வேலை இருக்குமோ, என்னால் ஊகித்துக் கொள்ள முடியாது. ஆனால், அம்மா வீட்டிற்கு வரும்போதெல்லாம் பனையோலைப் பெட்டியில் அரிசியும், மரவள்ளிக் கிழங்கும், தேங்காயும் கொண்டு வருவதை நான் பார்த்திருக்கிறேன். அம்மா வீட்டுக்கு வந்து சிறிது நேரத்திற்கெல்லாம், அப்பாவும் தூண்டிற் கயிறுகளோடும் சவளோடும், மீன்கோவையோடும் வீட்டுக்கு வந்து விடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவும் அம்மாவும் வீட்டில் இல்லாத நேரங்களில் ஒரே குஷிதான். ஏறுவெய்யிலின் மஞ்சட் கிரணங்கள் சரசரக்கும் தென்னோலைகட்கூடாகவும், முகடு பிய்ந்து கிடக்கும் எங்கள் வீட்டுக் கூரைக்கூடாகவும் துள்ளிப் பாய்ந்து நிலத்தில் வெள்ளித் துண்டுகளைப் போல வட்ட வட்டமாக ஒளியைச் சிந்தும். அந்த வட்ட ஒளியை நான் என் கையால் மூட, அந்தஒளி என் புறங்கையில் விழ, அடுத்த கையால் நான் அதை மறைக்க, அவ்வொளி அடுத்த கையிலும் விழ, நான் கைகளை ஒளி விழுமாறு உயர்த்தி உயர்த்திக் கொண்டே போவது எனக்குப் பிடித்தமான விளையாட்டாக இருக்கும். ஆனால், கூரைக்கூடாக ஒளி பாய்ந்துவரும் துவாரம், என்னால் எட்ட முடியாத உயரத்தில் இருக்கிறபடியால் நான் என் விளையாட்டை முடித்துக் கொள்வேன்.

குடிசைக்கு வெளியே வந்தால், அங்கே பக்கத்து வீட்டிலிருந்து என் நண்பன் செல்லனும் வந்திருப்பான். செல்லன் என்னைவிட நோஞ்சான் - பாய்மரக் கம்புபோல நீளமாக இருப்பான். 'இன்னமும் ஐந்தாறு வருடம் சென்றால் அவன் தென்னை மரத்து வட்டைத் தொட்டு விடுவான்' என்று என் அம்மாகூட அவனைப் பரிகசிப்பதுண்டு.

செல்லன் வந்ததும், நான் வீட்டுப் படலையை இழுத்துச் சாத்திவிட்டு, அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே ஆற்றங்கரைக்கு ஓடுவேன்.

ஆற்றங்கரை, வீட்டிலிருந்து அதிக தூரமில்லை. வங்காளக் கடல் சிறிது உள்ளே தள்ளிக் கொண்டு வந்து ஒரு சிற்றாறாக எங்கள் கிராமத்திற்கூடாக சென்று கொண்டிருந்தது. அந்த ஓடையில் பூரணையன்று வெள்ளம் வரும்போது, தண்ணீர் எங்கள் வீட்டு முற்றத்திற்கே வந்துவிடும்.

அந்த ஆற்றங்கரையின் ஓரமாக, ஆற்றில் நீண்டு வளர்ந்த கோரைப்புற்கள் சடைத்துக் கிடக்கின்றன. அந்தப் புற்களினடியில் நீருக்குள் ஓசைப்படாமல் இரு கையையும் கூட்டி வைத்து இறால் பிடிப்பதில் எங்கட்குப் பரம திருப்தி; என்றாலும், இந்த விளையாட்டில் எங்கட்கு அலுத்துப் போய்விடும். அதன் பின், நாங்கள் நேரடியாகக் கடற்கரைக்கே போய்விடுவோம்.

கடற்கரையில் கச்சான் காற்று சுழற்றிச் சுழற்றி அடிக்கும். அந்தக் காற்றில் இராவணன் மீசைகள் எல்லாம் நிலத்தில் பட்டும் படாமலும் உருண்டு, உருண்டு, பந்தயக் குதிரைபோல வேகமாக எங்களை நோக்கி ஓடி வரும். அவைகளைத் துரத்திப் பிடிப்பதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக, நானும் செல்லனும் எங்கள் அரையில் கட்டியிருக்கும் துண்டைக் கழற்றிக் கழுத்தை வளைத்துப்போட்டு கொண்டு, கோவணத்தோடு ஓடுவோம். இரண்டு மூன்று இராவணன் மீசை களைத் துரத்திப் பிடித்த பின், அந்த விளையாட்டிலும் எங்கட்கு அலுப்பு ஏற்பட்டுவிடும்.

அதன் பின்னால், நாங்கள் இருவரும் கடற்கரை வெண் மணலில், மதாளித்துப் படர்ந்து கிடக்கும் அடம்பன் கொடிகளில் மேல் குந்திக்கொள்வோம். பதைபதைக்கும் வெய்யிலில் அந்த அடம்பன் கொடி மெத்தை எங்களுக்கு 'கோடையிலே இளைப் பாறிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தரு' வாகத்தான் இருக் கும். அந்தப் பட்டு மெத்தையின் மேல் வீற்றிருந்து கொண்டு, எதிரே கடவுளைப்போல ஆதியும் அந்தமும் அற்றுப் பரந்து கிடக்கும் கருநீலக் கடலிலே, அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பாய் விரித்தாடும் பாய்த்தோணிகளைப் பார்த்துக் கொண்டிருப் போம். கடற்பரப்பிலே வெள்ளைச்சீலைப் பாய்கள் வட்ட வட்ட மாக, வண்ணாத்திப் பூச்சிகளைப் போல அழகாக இருக்கும், அவைகளில் ஏதோ ஒன்றில் தான் தகப்பனார் இருப்பார். ஆனால், எதிலே அவர் இருக்கிறார் - என்று திட்டமாக எனக்குத் தெரியாது. எனினும், ஏதாவது ஒரு தோணியைக் குறிப்பிட்டு, அதில் தான் அவர் இருப்பதாக எண்ணிக் கொள்வேன். அந்த நம்பிக்கையில். முகத்தில் 'சுள்' என்றடிக்கும் சூரியக் கிரணங்களை நெற்றிப் பொட்டில் கைகளை விரித்து மறைத்துக்கொண்டு, அந்தத் தோணி யையே பார்த்துக் கொண்டிருப்பேன். அந்தச் சமாதி நிலையில், என்னுள்ளே இன்பகரமான கனவுகளெல்லாம் எழும். இன்னும் சில நாட்களில் நான் பெரியவனாகி விடுவேன்; அப்போது அப்பாவிற்குப் போல, எனக்கும் ஒரு தோணி சொந்தமாகக் கிடைத்து விடும். அந்த வெள்ளை வெளேரென்று அப்பழுக் கில்லாத ஒரு பாயைப் போட்டுக் கொண்டு நான் கடலிற் செல் வேன்; ஒரு தென்னை மர உயரத்திற்கு எழுந்துவரும் கடல் அலைகளில் என் தோணி தாவித்தாவி ஏறி இறங்கிக்கொண்டே செல்லும். எல்லாத் தோணிகளையும் விட வேகமாக ஓடுவதற்காக என் தோணியின் பாய் பெரியதாக இருக்கும். அந்தப் பாய்க்குள் சோழகக் காற்றுச் சீறியடித்துக் கொண்டிருக்கையில், என் தோணி கடற்பரப்பில் 'விர்'ரென்று பறந்து செல்லும், நான் பின்னணியத் தில் தலைப்பாகைக் கட்டோடு தைரியமாக நின்று, சுக்கானைப் பிடித்துக்கொள்வேன்; செல்லன் முன்னணியத்தில் நின்று, எனக்குத் திசை காட்டுவான். எங்கள் தோணி முன்னே முன்னே ஏறிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று, கடைசியாய், கடல் வானத்தைத்தொடும் இடத்திற்குப் போய்விடும். அங்கே அம்மா இராத்திரிச் சொன்ன கதையில் வரும் ஏழுதலை நாகத்தைக் காண்பேன்.

தூரத்தே நான் குறி வைத்திருந்த தோணி சமீபித்து விட்டது. அதிலே என் தகப்பனார்தான் இருந்தார். தோணி கரையை அடைந்ததும், அவர் பாயைக் கழற்றி வைத்துத் தோணியை ஓடை வழியாக இழுத்துச் சென்றார். நானும் அவரோடு சேர்ந்து கொண்டேன். பிறகு, நாங்கள் எங்கள் வீட்டின் முன்னால் தோணியைக் கரையில் கொறகொற என்று இழுத்து வந்தோம். அப்பா தூண்டிற் கயிறுகளை வளையமாக்கி சவளில் போட்டு என்னிடம் கொடுத்தார். தோணிக்குள் இருந்த பழஞ்சோற்றுப் பானையையும், மீன் கோவையையும், நங்கூரத்தையும் எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு அப்பா பின்னே வர, நான் சவளைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு, சப்த சமுத்திரங்களையும் கடந்து வந்த வீரனைப்போல முன்னே நடந்தேன்.

அன்றிரவு முழுவதும் எனக்குத் தூக்கமே வரவில்லை. பசித்தவன் விருந்துண்ணக் காண்பது போல் நானும் தோணியைப் பற்றியே கனாக் கண்டேன். எங்கள் வீட்டுக்கு முன்னாலுள்ள ஓடையில் ஐந்து புத்தம் புதிய தோணிகள் இருந்தன. நான், முன்னணியம் உயர்ந்து சவாரிக் குதிரைபோல இருந்த தோணியின் மேல் ஏறிக்கொண்டேன். வாடைக் காற்றானபடியால் எல்லோருடைய தோணிகளும், முன்னேற முடியாமல் கரையை நோக்கியே வருகின்றன. என்னுடைய தோணி மட்டும் எரிந்து விழும் நட்சத்திரம் போலக் கனவேகமாகக் காற்றை எதிர்த்துப் போகிறது. கலங்கரை விளக்கின் ஒளிகூடக் கண்ணுக்குப்படாத அத்தனை தூரத்திற்கு ஆழ்கடலின் நடு மையத்திற்கே என் தோணி போய் விடுகிறது!..

நான் திடீரென்று விழித்துக் கொண்டேன். காலையில் எழுந்த போதுகூட எனக்குத் தோணியின் நினைவு மாறவில்லை. அன்று நான் ஓடைக் கரையில் பழுது பார்க்க இழுத்து வைக்கப் பட்டிருக்கும் தோணி ஒன்றைத் தள்ளிக்கொண்டு கடலிற்குப் போவது எனத் தீர்மானித்துக் கொண்டேன். செல்லனைக் கூட்டிக் கொண்டு போய், இருந்த தோணியை எங்கள் பலத்தையெல்லாம் கூட்டித் தள்ளிப் பார்த்தேன், தோணி அசையமாட்டேன் என்றது. அப்படியானால் நான் தோணி விடவே முடியாதா? சப்த சமுத்திரங்களையும் என்னால் தாண்ட முடியாதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கவலைப்பட்டுக் கொண்டேயிருக்கையில் ஓடையில் முருக்க மரத்துண்டு ஒன்ற மிதந்து வந்தது. அதைக் கண்டதும் எனக்கு ஒரே சந்தோஷமாகப் போயிற்று. ஆம்; எனக்கென்று ஒரு தோணி கிடைத்து விட்டது! அந்த முருக்கங் கட்டையை முன்னாலும் பின்னாலும் கொடுவாக் கத்தியினால் செதுக்கி உள்ளே குடைந்து தோணி ஒன்றைச் செய்தேன். பின்னர், அந்தத் தோணியில் செல்லனையும் ஏற்றிக்கொண்டு, என் ஆசை தீருமட்டும் ஓடையில் தோணிவிட்டு விளையாடினேன்.

மதியம் திரும்பிவிட்டது. என் தந்தை கடலிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தார். தோணிவிட்டு விளையாடிக் கொண்டிருந்த என்னைக் கண்டதும் "அடே பயலே, தோணி விடுறியா? அப்படியெண்டா நாளைக்கு என்னோட கடலுக்கு வா" என்றார்.

அதைக் கேட்டதும் எனக்குத் சந்தோஷம் தாங்க முடியாமற் போய்விட்டது. "சரியப்பா, நாளைக்கு நானும் வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டே, சவளைத் தூக்கிக் கொண்டு முன்னால் நடந்தேன். பெரிய தோணியில் போகப் போகிற ஆனந்தத்தில் என் முருக்கந் தோணியை மறந்துவிட்டேன்.

அன்றிரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. தென்னோலைச் சரசரப்பும் சிள் வண்டுகளின் கீச்சுக் குரலும் கேட்டுக் கொண்டிருந்தன. படுக்கையிற் புரண்டு கொண்டே ஆனந்தக் கனவுகள் கண்டு கொண்டிருந்தேன். கடைசியாய் எங்கோ ஒரு சேவல் கூவிற்று. அதைத் தொடர்ந்து எங்கள் கிராமத்துச் சேவல்களெல்லாம் போட்டி போட்டுக் கொண்டே கூவின. அம்மா எழுந்து, கை விளக்கைக் கொளுத்திக் கொண்டு சமையல் செய்யத் தொடங்கினாள்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த குடிசைகளிலிருந்து ஒருவர் மற்றவரைக் கூவியழைக்கும் சப்தம் கேட்டது. கடைசியாய், அப்பாவும் எழுந்து. "தம்பி, டேய்!" என்று என்னை எழுப்பினார். நான் சுட்ட பிணம் போல வளைந்து நெளிந்து உட்கார்ந்து கொண்டேன். இரா முடுவதும் தூக்கம் இல்லாததனால் கண்ணிமைகள் கல்லாய்க் கனத்து அழுத்தின. ஆனாலும் உற்சாகத்தோடு எழுந்திருந்தேன். அப்பா சோற்றுப் பானை நிறையத் தண்ணீரை ஊற்றி எடுத்துக் கொண்டு, நங்கூரம் தூண்டில் கயிறு சகிதம் வெளிக்கிளம்பினார். நானும் சவளைத் தோளில் வைத்துக்கொண்டு புறப்பட்டேன்.

படலையைத் திறந்து வெளியே வந்ததும், முகத்தில் வாடைக் கடுவல் ஊசி குத்துவதைப் போலச் சுளீர் சுளீரென்று அடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு உடம்பெல்லாம் நடுக்கமெடுத்தது. மேல் துண்டை முகத்தை வளைத்துக் கட்டிக்கொண்டு முன்னால் விறுவிறு என்று நடந்தேன். தூரத்தே குடிசைக்குள் இருந்த அகல் விளக்குகள் இருளைக் 'குத்து குத்'தென்று குத்தின.

ஓடைக் கரையை அடைந்த போது பரமார்த்த குருவின் ஆறு சீடர்கள் கண்ட ஆற்றைப்போலத் தூங்கிக் கொண்டிருந்தது. கண்டல் இலைகள் பொட்டுப் பொட்டென்று ஆற்றில் எங்கே போகிறோம் என்ற பிரக்ஞையே அற்ற வண்ணம் போய்க் கொண் டிருந்தன. கோரைப் புற்களின் மேலே சிலந்தி வலை போலப் பனிப் படலம் மொய்த்துக் கிடந்தது.

அப்பா கரையிலே இருந்த தோணியை ஓடையிலே தள்ளி னார். அதற்குள்ளே சோற்றுப் பானையையும் மற்றைய சாமான் களையும் வைத்தார். உடனே தோணியை ஆற்றிலே விட்டு விட்டுக் கோரைப் புற்களினடியில் 'அத்தாங்கை' வீசி, இறால் பிடிக்கத் தொடங்கினார். நான் வெடுவெடுக்கும் குளிரில், வள்ளத் தின் முன்னணியத்தில், ஒடுங்கிப்போய் குந்திக் கொண்டிருந்தேன். கிழக்கே கூரையில் தொங்கும் புலிமுகச் சிலந்தியைப் போல, வானத்தில் விடிவெள்ளி நடுங்கிக் கொண்டு இருந்தது. இன்னமும் கீழே கிழக்கு வெளுக்கத் தொடங்கியது.

பறி நிறைய இறால் பிடித்ததும், அப்பா வள்ளத்தில் ஏறிக் கொண்டார். வள்ளமும் சமுத்திரத்தை நோக்கி ஓடத் தொடங்கியது. பலாரென்று விடிந்தபோது வள்ளம் நடுச் சமுத்திரத்தை அடைந்து விட்டது. அப்பா நங்கூரத்தைத் தண்ணீரில் எறிந்துவிட்டு தூண்டி லில் இறாலைக் குத்திக் கடலில் எறிந்தார். நானும் தூண்டில் போட்டுக் கொண்டிருந்தேன். சமுத்திராதேவி நிர்க்கதியான தன் குழந்தைகளைத் தன் அலைக்கரங்களை எறிந்து எறிந்து தாலாட் டிக் கொண்டிருந்தாள்.

வெய்யில் ஏறிக்கொண்டே வந்தது. முதுகுத்தோலை உரித்து விடுவதுபோலச் சுளீரென்று அடிக்கும் வெய்யிலுக்கு ஆற்றாமல் அப்பா தன் சட்டையில் கடல் தண்ணீரை அள்ளி அள்ளி ஊற்றிக் கொண்டேயிருந்தார்.

மதியத்தை அண்மியப்போது, நாங்கள் ஆளுக்கு ஐந்து ''கருங்கண்ணிப் பாரைகள்'' பிடித்துவிட்டோம். என் உழைப் பைக் கண்டு எனக்கே திருப்தி ஏற்பட்டது. அந்தத் திருப்தியில் பழஞ்சோற்றைக் கரைத்துக் குடித்த தண்ணீர் எனக்குத் தேவாமிர்த மாகத் தான் பட்டது. வயிறு நிறைந்ததும், நங்கூரத்தை தூக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து, தோணியைத் திருப்பத் தொடங்கினோம். வள்ளம் ஓடிக்கொண்டிருக்கையில் என் உள்ளம் பகற்கனாக் காணத் தொடங்கியது. ''இந்தப் பத்துக் கருங்கண்ணிப் பாரைகளைக் கண்டதும் அம்மா சந்தோஷப்படுவா. பக்கத்துப் பட்டினத்துச் சந்தைக்கு அதைக்கொண்டு போனால், பத்து ரூபாய்க்கு விற்க லாம். சந்தையிலே, எதிரே வரும் பொங்கலுக்காகக் கமுகம்பூப் போன்ற பச்சையரிசியும், பாசிப்பயறும், சர்க்கரையும், முட்டி நிறையப் பாலும் வாங்கிக் கொள்ளலாம். ''எங்கள்'' வீட்டுத் தென்னை மரத்தின் கீழே புதுப்பானை 'களக் களக்' என்று பொங்கும் போது நான் புது வேட்டியை உடுத்து, கரும்பைக் கடித்துக் கொண்டு.....

வள்ளம் கரையை அண்மிவிட்டது. கடற்கரையிலே புத்தம் புதிய பைசிக்கிளிற் சாய்ந்தவாறு ஒருவர் நின்று கொண்டிருந்தார். சூரிய கிரணங்கள் பைசிக்கிள் தகடுகளின்மேற் பட்டு ஜொலித்தன. அப்பா ஏதோ மந்திர சக்தியால் கட்டுண்டவரைப் போலத் தோணியை அங்கே திருப்பினார்.

தோணி கரையை அடைந்ததும் மீன்களையெல்லாம் பைசிக்கிள்காரரிடம் போட்டுவிட்டுத் திரும்பவும் வீட்டை நோக்கித் தோணியை விட்டார்.

எனக்கு ஏமாற்றமாக இருந்தது.

தோணி வந்து கொண்டிருக்கையில் நான் கேட்டேன்: ''ஏன் அப்பா மீன்களையெல்லாம் அங்கே போட்டு விட்டு வருகிறீர்கள்?''

அப்பா சொன்னார் ''அவர் தான் நம் முதலாளி, இந்த தோணி - எல்லாம் அவருடையது தான், நாம் மீனைப் பிடித்து அவருக்குத்தான் கொடுக்க வேண்டும்.''

''நமக்கு காசு தர மாட்டாரா?''

''நம் கடனிலே கழித்துக் கொள்வார் விலையை. நமக்குச் சாப்பாட்டிற்காக மேலும் கடன் தருவார்.''

''அப்படியானால், நாம் ஒரே கடன்காரராகத்தானே இருக்க வேண்டும்?''

''என்னவோ அப்பா; நானும் தலை நரைக்கு மட்டும் உழைத்து விட்டேன், கடனை இறுக்க முடியவில்லை. நமக் கென்று புதிதாக ஒரு தோணி வாங்கவும் முடியாது.''

''எல்லாத் தோணிகளும் அந்த முதலாளியுடையதுதானா அப்பா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆம், ஓடைக்கரையில் இழுத்து வைக்கப்பட்டிருக்கும் எல்லாமே அவருடைய தோணிகள் தான்.''

வள்ளம் ஓடைக்கரையை அடைந்து விட்டது, நாங்கள் தோணியை கரையில் இழுத்துவைத்துவிட்டு வீட்டை நோக்கி நடந்தோம். என்னுள்ளே ஒரு பயங்கரமாக உண்மை புலனாகியது இந்தத் தோணி எனக்குச் சொந்தமில்லை; ஆம், தூண்டிற்காரனுக்கு தோணி சொந்தமில்லை; அப்படியே உழுபவனுக்கு நிலம் சொந்தமில்லை; உலகில் உழைப்பவனுக்கு எதுவும் சொந்தமில்லை.

அன்றிலிருந்து தோணி எனக்குக் கனவுப் பொருள் ஆகி விட்டது. எப்படியாவது கஷ்டப்பட்டு உழைத்து ஆகக் குறைந்து ஒரு தோணியாவது சொந்தமாக வாங்கிக் கொள்ள வேண்டும். அதன் பின் மீன் பிடித்தால் சந்தையில் கொண்டு போய் நம் இஷ்டத்திற்கு விற்கலாம். பொங்கலுக்குக் கரும்பும், பாலும், பச்சையரிசியும், சர்க்கரையும் வாங்கலாம்..... பிடித்த மீனையெல்லாம் முதலாளிக்குக் கொடுத்துவிட்டு வெறுங்கையோடு திருப்பிவரத் தேவையில்லை.

நாட்கள் கடந்து விட்டன. நான் பெரியவனாகி விட்டேன். சொந்த தோணி இன்னமும் வெறுங் கனவாகவே இருந்து வந்தது. தகப்பனார் வாழ்ந்துவரும் அதே பாதையிற்றான் என் வாழ்வும் போய்க் கொண்டிருந்தது. இந்த வாழ்வில், எனக்கு நேரகாலத்தில் கல்யாணம் முடித்து வைத்துவிட வேண்டும் என்பது அம்மாவின் ஆசை.

ஒரு நாட் சாயந்திரம் ஓடைக்கரையில் இராட்டினத்தில் நூல் முறுக்கிக் கொண்டிருந்தேன். மேலே நீல நிறமான ஆகாயம் ஓடையின் தெளிந்த தண்ணீரிலும் விழுந்து பிரதிபலித்துக் கொண்டிருந்தது. ஓடை முகத்துவாரத்தில் இருந்த மணற்தீவில் கடற் புட்கள் கூட்டங் கூட்டமாக வந்து விழுந்து கொண்டிருந்தன.

''தண்ணீர் எடுத்துக் கொண்டு வருகிறேன்'' என்று வீட்டுக்குப் போன அம்மாவை இன்னமும் காணவில்லை. எனக்குத் தாகமாயிருந்தது. வீட்டுப் பக்கம் திரும்பிப் பார்த்தேன், கனகம் செம்பிலே தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்தாள்.

கனகம் எங்கள் கிராமத்துப் பெண்தான். நீரின் இடை மட்டத்தில் ஆடும் பாசிக்கொடியைப் போல எப்போதும் மென்மையாக ஆடிக்கொண்டுதான் அவள் நடப்பாள். கற்பாரில் நிற்கும் செம்மீனைப்போலச் செக்கச் செவேலென்று அழகாக இருப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டலிலே மின்னும் கிளிஞ்சல்போல் இருக்கும் அவள் கண் களை இன்றைக்கு முழுவதுமே பார்த்துக் கொண்டிருக்கலாம்.

அம்மா சொன்னாள் : ''என்ன வெட்கமாம் அவளுக்கு? நாளைக்கு அவளைத்தானே நீ கல்யாணம் முடிக்கப் போகிறாய்?''

''போ அம்மா, எனக்கென்று ஒரு தோணி இல்லாமல் எனக்குக் கல்யாணமே வேண்டாம்'' என்றேன் நான்.

''ஏண்டா? அவள் அப்பாவிடம் ஒரு தோணி சொந்தமாக இருக்கிறது. அதை உனக்கே கொடுத்துவிடுவார் அவர்'' என்றாள் அம்மா.

நான் யோசித்தேன். எனக்குக் கல்யாணத்திலோ கனகத் திடமோ அக்கறை இல்லாவிட்டாலும், தோணி கிடைக்கப் போகி றதே! தோணி மட்டும் கிடைத்து விட்டால், என் உழைப்பின் பயனை நானே அனுபவிக்க முடியும். என் குடும்ப வாழ்வும் இன்பமாகவே இருக்கும்.....

அதன் பிறகெல்லாம் நான் கனகத்துடன் தைரியமாக நெருங் கியே பழகினேன். மனோகரமான மாலைவேளைகளில், ஓடைக் கரையில் இழுத்து வைக்கப்பட்டிருக்கும் தோணி மூலையில் குந்திக்கொண்டு, நானும் கனகமும் எவ்வளவோ கதைத்திருக் கிறோம்! கனகம் எப்பொழுதுமே தன் தோணியைப் பற்றிப் பெருமைப்பட்டுக் கொள்வாள். அந்தத் தோணி அவள் தகப்ப னாரின் சொந்தமாக இருக்கிறபடியாற்றான் கனகம் நல்ல சேலை கட்டியிருக்கிறாளாம்! கையில் தங்கக் காப்பு போட்டிருக்கிறாளாம்! அவள் என்றைக்குமே அப்படி இருக்கவேண்டும் என்று என் மனதுள் எண்ணிக்கொள்வேன்.

ஆனால், இரண்டு வாரத்துள் அந்த துக்ககரமான செய்தி கிடைத்தது. கிராமமே பரபரப்படைந்தது. கனகத்தின் தந்தை மீன் பிடிக்கப்போனவர் புயலில் அகப்பட்டு மாண்டுபோனார்' தோணி யும் திரும்பி வரவில்லை...

என் இருதயத்தில் சம்மட்டியடி விழுந்தது போன்றிருந்தது எனக்கு. பாவம்! எனக்குத்தான் சொந்தத் தோணி இல்லை யென்றால் கனகத்திற்குக் கூடவா இல்லாமற் போக வேண்டும்.

இரண்டு மூன்று நாட்கள் கழித்துக் கனகம் கடற்கரைக்கு வந்தபோது அவளை நிமிர்ந்து பார்க்கவே என்னால் முடியவில்லை. அவள் கண்கள் கலங்கியிருந்தன. என்னைக் கண்டதும் அழுகை பொத்துக்கொண்டு வந்து விட்டது அவளுக்கு. விம்மி விம்மி அழத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினாள். என் மடியிற் தலையைப் புதைத்துக் கொண்டு, கனகம் என்னிடம் எதை எதிர்பார்த்தாள்?

கனகத்தை மடியில் வைத்துக் கொண்டே நான் எண்ணினேன், என்னிடமோ தோணி கிடையாது. இந்த நிலையில் அவளை நான் சுகமாக வாழ்விக்க முடியாது. என் தகப்பனாரைப்போல நானும் தலை நரைக்கும் வரை உழைத்து உழைத்துச் சாகவேண்டியது தான். என்னோடு சேர்ந்து கனகமும் ஏன் சாகவேண்டும்? பாவம், கனகம்.....

எனவே, கனகத்தை யாராவது சொந்தத் தோணியுள்ள ஒருவனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்துவிட வேண்டும். என் கண் முன்னால் அவள் அழகான சேலையும், தங்கக் காப்பும் அணிந்து கொண்டு, என்றென்றைக்கும் ஆனந்தமாக வாழ வேண்டும். அவள் வாழ்வுதான் எனக்கும் ஆனந்தம்....

நான் எண்ணியது சரியாகப் போய்விட்டது. அமாவாசையன்றிரவு, புங்கை மரத்தின் கீழே இருந்த வைரவர் கோவிலடியில் கனகத்துக்கும் செல்லனுக்கும் கல்யாணம் நடந்தது. கல்யாணத்தன்று பேசிப் பார்க்கவே எனக்குக் கண்ணீர் வந்துவிட்டது. என் கையில் இருந்த அரும்பொருள் இன்னொருவனுக்கும் போய் விட்டது... ஆனாலும், என் கண் முன்னால் அவள் ஆனந்தமாகவே வாழ்வாள். செல்லனிடம் ஒரு தோணி இருக்கிறது. அவன் என்னைப்போலக் கடன்காரனல்ல. செல்லனோடு கனகம் என்றென்றைக்கும் ஆனந்தமாகவே வாழட்டும், எனக்கென்று தோணி ஒன்று கிடைக்காமல் நான் எந்த பெண்ணின் வாழ்வையும் பாழாக்கப் போவதில்லை.

ஆனால், இன்னமும் தோணி எனக்குக் கனவுப் பொருளாகத்தான் இருக்கின்றது. அதனாலென்ன? உயர்ந்த கனவு செயல்மிக்க நனவின் ஆரம்பந்தான், எப்போதாவது ஒரு நாளைக்குக் காலம் மாறத்தான் போகிறது. அன்றைக்கு எனக்கு மட்டுமல்ல, என் நண்பர்கள் எல்லோருக்குமே சொந்தத் தோணி இருக்கும். எங்கள் தோணிகள் சப்த சமுத்திரங்களிலும் சுதந்திரமாகச் சென்று மீன் பிடிக்கும். அந்த மீன்களைச் சந்தையில் பகிரங்கமா விற்போம். விற்ற பணத்திற்குச் சந்தையில் அரிசி வாங்குவோம். அரிசி வாங்கும் பணம் என்னைப் போன்ற உழைப்பாளியான ஒருவனுக்கு நேரடியாகக் கிடைக்கும். அப்போது உழவனுக்கு நிலமும் சொந்தமாக இருக்கும் அல்லவா?

(ஈழகேசரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்டு

கனக செந்திநாதன்

புராண படனம் ஆரம்பமாயிற்று. இந்தப் புராண படனம் மார்கழி மாதத்துத் திருவெம்பாவைக் காலத்தில் உச்சக் கட்டத்தை அடையும். சாதாரண கோவில்களிற் கூடத் திருவாதவூரடிகள் புராணம் படிக்கப்படும்.

மாஞ்சோலைக் கிராமத்து அம்பாள் ஆலயமும் இதற்கு விதிவிலக்கல்ல.

கிழக்கு வாயிலையுடைய அந்தக் கோவிலில் பலிபீடத் துக்கும் தேவசபைக்கும் நடுவே உள்ள சிறிய மண்டபத்தில் புராண வாசிப்பு நடைபெறப் போகிறது.

சிங்கப்பூர்ப் பென்சன்காரர் - பொன்னம்பலம் - குத்துவிளக் குக்குப் பக்கத்தில் தென்திசையில் உட்கார்ந்து புத்தகத்தை விரிக் கிறார். உள்ளூர்ப் பாடசாலையின் உபாத்தியார் - சிற்றம்பலம் - வடக்குப் பக்கத்திலே கிழக்குப் பார்த்த முகமாக இருந்து கர்ப் பூரத்தைக் கொளுத்துகிறார்.

தேங்காய் உடைக்கப்படுகிறது; காப்புப் பாடல் ஆரம்ப மாகிறது.

"பவளமால் வரையி னிலவெறிப் பதுபோற்
பரந்தநீற் றழகுபச் சுடம்பிற்
றிவழமா துடனின் றாடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும் போர்
தவளமா மருப்பொன் றொடித்தொரு கரத்திற்
றரித்துயர் கிரிப்புறத் தெழுதுங்
கவளமா களிற்றின் றிருமுகம் படைத்த
கடவுளை நினைந்துகை தொழுவாம்"

பாடுகிறவரதும் உரைகாரரதும் குரல்கள் ஒன்றாய் இணைந்து கேட்போரது சிந்தையை ஒரு முகப்படுத்தி வேறோர் உலகத்துக்கு அழைத்துச் செல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான் பொன்னம்மாக் கிழவி அங்கு வந்து சேர்ந்தாள்.

ஒட்டகத்தின் முதுகு போல் வளைந்த கூனல் முதுகைச் சாத்தி இருப்பதற்கு வசதியாகச் சுவர்ப்பக்கத்திலே வந்து, ஊன்றி வந்த பொல்லைப் பக்கத்தில் வைத்து விட்டுக் குந்துகிறாள். அவள் வாய், 'அம்மாளாச்சி! தாயே!' என்று முணுமுணுக்கிறது.

சிங்கப்பூர்ப் பென்சன்காரர் முதல் நாள் விட்ட இடத்திலிருந்து வாசிப்பைத் தொடங்குகிறார்.

''இரும்பசியுடையேன் அன்னே இனிய பிட்டளிப்பையாகில்
குரம்பை கொண்டடைப்பன் யானே கோலறை முழுதும் என்ன''

என்ற பாடலை ஏற்ற இராகத்தில் வாசிக்கிறார்.

பொன்னம்மாக் கிழவி பாட்டைக் கிரகித்த படியே சுற்று முற்றும் பார்க்கிறாள். நேற்றைய நாளிலும் பார்க்க இன்று பெண்களும் குழந்தைகளும் அதிகமாகத் தென்படுகிறார்கள். அதிகமாக என்றால் நூறோ இருநூறோ அல்ல. நேற்று இரண்டு மூன்று பேர்தான் கேட்டார்கள். இன்று பத்துப் பதினைந்து பெரியவர்களும் பதினெட்டு இருபது குழந்தைகளும் இருக்கிறார்கள். அவ்வளவுதான்!

அவளுக்குக் கண்ணில் நீர் துளிர்த்தது.

அவள் இருபத்தைந்து வயதுக் கட்டழகியாய் இருந்த காலத்தில் 'அவரோடு' கூடி வந்து பிட்டவித்துக் கொடுத்து, 'ஜாம், ஜாம்' என்று இந்தப் பிட்டுத் திருவிழாவை நடாத்திய காட்சி அவள் மனக்கண்முன் விரிகிறது...

ஆசிரியர் சிற்றம்பலம் உரை சொல்லத் தொடங்கி விட்டார்.

''கூலியாளராக வந்த எம்பெருமான், பிட்டு விற்றுச் சீவிப் பவளாகிய அந்தச் செம்மனச் செல்வியென்னும் நரை மூதாட்டியைப் பார்த்து, 'தாயே! நானோ அதிக பசியுடையவனாக இருக்கிறேன். நீ அவித்த பிட்டினை எனக்கு உண்ண அளித்தாயானால்?....''

உரை சொன்னவர், வாசித்த வரிக்கேற்ற பொருளை விரித்துக் கூற அவ்வளவில் நிறுத்துகிறார்.

வாசித்தவர், *'குரம்பை கொண்டடைப்பன் யானே'* என்று ஏற்ற இராகத்திலே பாடி நிறுத்துகிறார்.

பொன்னம்மாக் கிழவி பழைய காட்சியை மறந்து கதையில் ஒன்றி விடுகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் மனக்கண் முன் வைகை ஆறு பெருகுகிறது. சனங்கள் அல்லோலகல்லோலப்பட்டு: அரண்மனையை நோக்கி ஓடுகிறார்கள். அரிமர்த்தன பாண்டியன் வாதவூரரை அழைத்து, இருக்கை நல்கி, செய்த பிழையைப் பொறுத்து வைகை ஊர் கொளாமல் காக்க வேண்டுகிறான். வாதவூரரே தலைமை தாங்கி ஏவலாளர்களை ஏவி அரச கட்டளையே நிறைவேற்றுகிறார். வைகைக் கரை பங்கு போடப்படுகிறது. தன்னைப் போன்ற செம்மனச் செல்விக்கும் ஒரு பங்கு கொடுக்கப்படுவதையும் அவள் அதை அடைக்க முடியாமல் தவிப்பதையும் அகக்கண்ணால் நோக்குகிறாள்.

கிழவியின் கண்களில் இருந்து நீர் தாரை தாரையாக ஒழுகுகிறது. ஆம் ; அவள் செம்மனச் செல்வியேயாகிவிட்டாள்.

பென்சன்காரர் அடுத்த பாடலுக்குப் போய் விட்டார். அவருக்கு இது வெறும் கதை; இராக வாசிப்பு. ஆனால் பொன்னம்மாக் கிழவிக்கோ? தன் வாழ்க்கையோடு பிணைந்து விட்ட சோக நிகழ்ச்சி.

''கூற்றடுங்கமலபாதர் குறுந்துணிக்கரியசீரை ஏற்றிடும் பிட்டு வாங்கி'' என்ற அடுத்த பாட்டு வாசித்து நிறுத்தப்படுகிறது.

மணிகள் ஒலிக்கின்றன. மேளம் முழங்குகிறது. சங்கு ஊதப்படுகிறது.

மூலஸ்தானத்திலும் 'உற்சவமூர்த்தி' இருக்கும் இடத்திலும் பிட்டு வைத்து நைவேத்தியம் செய்கிறார் குருக்கள். கூடியிருந்த சிறு கும்பல் 'அம்மாளாச்சிக்கு அரோகரா' என்று ஏக காலத்தில் கத்துகிறது. ஒன்பது வயதுப் பையன் ஒருவன் அழுகிற தன் தம்பியிடம், ''இனி ஐயர் பிட்டுத் தருவார், வாங்கிக் கொண்டு வீட்டை போவோம்'' என்று அரவணைப்பது சிறிது உரத்த தொனியிற் கேட்கிறது. பொன்னம்மாக் கிழவி எழும்பவுமில்லை; 'அரோகரா'ப் போடவுமில்லை. அவள் கனவு நிலையிருந்து விடுப்படவேயில்லை. அவள் தேகம் நடுங்குகிறது. ''ஐயோ, வெள்ளம் வருகின்றதே, அடைப்பார் யாருமில்லையே'' என்று கத்துவது சிலருக்குக் கேட்கிறது. 'பாவம், கிழவி தன் மகளைப் பிரிந்ததிலிருந்து இப்படித் தான் ஏதாவது அலட்டுகிறது' என்கிறாள் ஒருத்தி மற்றொருத்தியிடம்.

கிழவி செம்மனச் செல்வியின் துயரம் போன்ற ஒரு துயரக் கனவில் மூழ்கிவிட்டாள். சென்ற வருடம் மார்கழி மாதத்தில் நடந்த சம்பவம் அது. அதுவும், வெள்ளம் வந்த சம்பவந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானநாயகன் பூமாதேவியை நெடுநாட் பிரிந்திருந்து திடீ ரென்று ஒரு நாள் தன் கரம் நீட்டித் தழுவியது போல மழை காற்றோடு சேர்ந்து சோனாவாரியாகப் பெய்கிறது. பனை வட் டெல்லாம் பேயாட்டம் போடுகிறது. தொழுவத்தில் நிற்கும் மாடும் கன்றும் குளிரினால் கொடுகுகின்றன. வாழைகள் தலை சாய்ந்து பூமாதேவியை முத்தமிடுகின்றன. காவோலைகளும் பனைமட்டை களும் யுத்த களப்பூமி போல வளவுக்குள்ளே காட்சி கொடுக் கின்றன.

பொன்னம்மாக் கிழவியின் குடிசை தெருவோரத்தில் சிறிய மேட்டு நிலத்தில் இருந்தது. அவளுக்குத் தொலைவில் வெள்ளம் வந்தாலும் தன் குடிசையை ஒன்றுஞ் செய்யாது என்று எண்ணம். ஆனால், அப்போது பெய்த 'பேய்மழை' அவளது எண்ணத்தில் மண்ணைப் போட்டுவிட்டது. தெருக்கானில் ஓடிய வெள்ளம் எங்கேயோ தடைபட்டுத் தேங்கி அவள் குடிசையின் வாயிலில் தளம்பி 'இப்பவோ பின்னையோ' என்று உட்புகக் காத்துக் கிடப்பது போலக் காட்சியளித்தது.

அவள் கத்தத் தொடங்கி விட்டாள். அவளுக்கு இருக்கிற உடைமையெல்லாம் அந்தக் குடிசை ஒன்று தான். அதிலும் வெள்ளம் புகுந்து சேதப்படுத்துவதென்றால்? ''ஐயோ! வெள் ளம்! வெள்ளம்!! என் சட்டி போகப் போகிறதே! பிட்டவிக்கும் பானை, நீத்துப்பெட்டி, குண்டான் எல்லாம் வெள்ளத்தால் அள்ளுப்படப் போகின்றனவே. ஐயோ! தெய்வமே! இதற்கு நான் என்ன செய்யப் போகிறேன்?'' என்று கத்தினாள்.

அப்போது தான் அவன் வந்தான்; கண் கண்ட தெய்வம் போல வந்தான். வெள்ளையன் என்ற பெயர் கொண்ட அவனைக் கண்டதும் கிழவிக்கு உச்சி குளிர்ந்தது. அவன் எதுவும் பேச வில்லை. தான் கொண்டு வந்த பிக்கானால் தெருவைக் கொத்தி தேங்கி நின்ற வெள்ளத்தை மறுபக்கம் விடப் பெருமுயற்சி செய் தான். அவன் கூலி பேசி நேரத்தைப் போக்கவில்லை. ஆருமற்ற வருக்குத் தான் செய்ய வேண்டிய உதவி - தன் கடமை - என்று எண்ணிச் செய்யத் தொடங்கி விட்டான். வைரம் பாய்ந்த அவ னது தேகத்தில் மழைத்தண்ணீர் பட்டுச் சிதறுகிறது. அவன் குளிரால் நடுங்கவோ கொடுகவோ இல்லை. பொன்னம்மாக் கிழவி அவன் வயிற்றைப் பார்க்கிறாள். அவளுக்கு விடயம் புரிகிறது. தாயில்லாத் தன் குழந்தைக்கு ஏதாவது வாங்கிச் சாப்பிடக் கொடுக் கவோ, ஒவ்வொரு நாளும் தான் அவித்துக் கொடுக்கும் பிட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கிக் கொண்டு போகவோ அல்லது தன் பசிக்கு எதாவது வாங்கவோ தான் அவன் வந்திருக்கவேண்டும். ஆனால், பிக்கானும் கையுமாக வந்து நிற்கிறானே... எதுவாயிருந்தாலும் அவனுக்குப் பசி!

அந்தக் காற்றிலும் மழையிலும் நடுங்குங் கரங்களால் அவள் பிட்டவிக்கத் தொடங்கி விட்டாள். பெரும் போராட்டத்திற்குப் பிறகு அடுப்புப் புகைகிறது. இனி என்ன? பிட்டு அவித்து முடிந்த மாதிரிதான்... கிழவிக்கு அது ஒரு நிமிட வேலை. ஆண்டாண் டாய்ப் பழகிய கை. வேலை பரபரவென்று நடக்கிறது.

வெள்ளையனும் கற்களைப் பெயர்த்து, தடைகள் எல்லா வற்றையும் நீக்கி, சிறிய பூண்டுகளைக் கூடக் கொத்தி எறிந்து, வெள்ளம் ஓடுகின்ற அழகை இரசித்து கிழவியின் குடிசையின் ஒதுக்குப் புறத்திலே வந்திருந்து கொண்டே "கமக்காறிச்சி எப்படி வேலை?" என்று கேட்டான்.

"பொடியா, உன் வேலைக்கென்ன? இன்னும் அஞ்சு நிமிடத்திலை என் வேலையையும் பாரன்" என்கிறாள் கிழவி.

"எனக்குத் தெரியும் கமக்காறிச்சி? நீ பிட்டுத் தான் அவிப்பா யென்று, இந்தக் குளிரிலை பிட்டுத் தின்றால் எப்படி இருக்கும். தெரியுமே?"

கிழவிக்கு ஒரு நிமிடம் ஒரு யுகம் போலப்படுகிறது. அவன் பசிக்கு உடனே பிட்டைக் கொடுத்து விட வேண்டும் என்பது அவள் பரபரப்பு. பானையில் தண்ணீர் வடிகிறதா என்று அவள் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டேயிருக்கிறாள்.

அவன் பேச்சுத் தொடருகின்றது...

"ஒருக்காலும் இல்லாத மழை கமக்காறிச்சி. விடும் விடும் என்று பார்த்தன். விடவில்லை. தோட்டத்துக்குப் போய் மாடு கண்டுகளை அவிழ்த்துக் கொண்டு வந்து எங்கடை அண்ணமார் கோயிலுக்கை விட்டு விட்டேன். பாவம். வாயில்லாச் சீவன்களை முதலிலை பார்க்க வேண்டும். வீட்டை போனேன். என்ரை ஆத்தை கத்தத் தொடங்கி விட்டுது. கமக்காறிச்சியின்ரை வீடு என்ன பாடோ ஓடடா, ஓடடா எண்டு... அது தான் பிக்கானையும் எடுத்துக் கொண்டு ஓடி வந்தனான்."

தன்னுடைய பேரக் குழந்தை பசியினால் கத்துவதையும், தனக்கு நல்லாகப் பசி பிடுங்குவதையும் அவன் சொல்லவில்லை. கிராமத்துத் தொழிலாளியின் தம்மானம் அப்படிப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவி குண்டானை வெளியே எடுக்கிறாள். நீத்துப் பெட்டியிலிருந்து ஆவி பறக்கிறது. பிட்டின் வாசனை மூக்கைத் துளைக்கிறது.

அவள் ஓர் ஓலைப் பெட்டியில் பிட்டைப் போட்டு அவனுக்குக் கொடுக்கிறாள். ''நீ தின்றுவிட்டு அந்தக் குஞ்சுப் பொடியனுக்கும் கொண்டு போ'' என்கிறாள்.

ஆனால், அவன் உண்ணவில்லை, ''நான் வீட்டிலை கொண்டு போய் தின்னுகிறன். கமக்காறிச்சி, இந்தப் பிட்டுக்கு காசு நாளைக்குத் தாறேன்.''

''காசை ஆரடா கேட்டா? காசுக்காகவா இந்த மழையிலையும் குளிரிலையும் பிட்டவித்தேன். இந்த மழையிலை வேலை செய்து என்ரை குடிசையைக் காப்பாத்தி விட்டியே சிவபெருமான் கூட பிட்டுத் தின்று விட்டுத்தான் வேலை செய்தார். அவராலை கூடப் பசி பொறுக்க முடியவில்லை. நீ என்றால் வேலை செய்தாய். நானோ பிட்டுத் தந்தேன். காசைப் பத்தி இரண்டு பேருமே பேசக்கூடாது. ''

கனவு நினைவில் இருந்து கிழவி கண்ணை விழிக்கிறாள். அப்போது ''பேத்தி! இந்தா நைவேத்தியம்'' என்று குருக்கள் நீட்டுகிறார். பொன்னம்மாக் கிழவி பக்கத்தில் கிடந்த வாழையிலையைக் கிழித்து சிறிது பிட்டை தன் அருகில் வைத்துக் கொள்கிறாள். பிட்டை வாங்கிய கையோடு பலர் அவசரம் அவசரமாக வீட்டுக்குப் போகப் புறப்படுகிறார்கள். வாசிப்பவரும் உரை சொல்பவரும் நாலைந்து 'கிழடு கட்டைகளும்', மூலஸ்தானத்து 'அம்மாளும்', தூண்களும், குத்துவிளக்கும் தான் மிச்சம்.

பொன்னம்மாக் கிழவிக்கு வீட்டு வேலை ஒன்றுமில்லை. 'போறவழிக்குப் புண்ணியமாக' புராணத்தையாவது கேட்போம் என்று வந்தவள் அவள். இருப்பிடத்தை விட்டு அவள் அசையவேயில்லை.

பென்சன்காரர் முன் வாசித்த பாடலையே மறுபடியும் வாசிக்கிறார்.

''கூற்றடுங் கமலபாதர் குறுந்துணிக்கரிய சீரை
ஏற்றிடும் பிட்டு வாங்கி இன்புற அமுது செய்து
மாற்றரும் பசியை யன்னே மாற்றினை இனிப்போய்
வைகை ஆற்றில்நின் கூற்றிலுண்டாம் அருங்கரை
அடைப்பன் என்றார்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு முடிகிறது. பாடலைப் பொருளுக்கேற்பப் பிரிக் கிறார். 'கூற்றடுங் கமலபாதர்' என்று சிங்கப்பூர்ப் பென்சன்காரர் இராகத்தோடு நிறுத்தியதும், ஆசிரியர் சிற்றம்பலம் அதே இராகத் தில் "மார்க்கண்டேய முனிவரின் பொருட்டு இயமனை உதைத் தருளியவராகிய அழகிய திருவடிகளையுடைய சிவபிரானென் னுங் கூலியாளர்" என்று பொருள் கூறுகிறார். அருமையாக அவர் கூறிய பொருள் கிழவியின் செவிகளில் அரைகுறையாகவே விழுகிறது.

வெளியே கூக்குரல். பெருஞ்சத்தம். குழந்தைகளின் 'அடிபிடி'!

"ஐயா, எனக்குப் பிட்டுத்தரவில்லை. அவன் வாங்கினவன், பிறகும் வாங்குகிறான்" - ஒரு குழந்தையின் முறையீடு இது.

"இவன் என் தலைக்கு மேலாலை கையை நீட்டி என்ரை பிட்டை வாங்கிப் போட்டான்" - கட்டைப் பையனின் புகார் இப்படி.

"நெடுக அவனுக்குத்தான் கொடுக்கிறீர்? எங்களுக்கும் கொஞ்சமாவது பிட்டுத் தாருங்கள்" பிறிதொரு குரலின் கெஞ்சல்.

"எல்லாம் முடிந்து விட்டது. நாளைக்கு வாருங்கள். கடலை யும் வாழைப்பழமும் தருகிறேன்" என்று சொல்லியபடியே அவசரம் அவசரமாகத் தட்டத்தில் இருந்த சிறிது பிட்டை யாரோ ஒரு குழந்தையில் கையிலே தட்டிக் கொட்டிவிட்டு, கிழவி ஒருத்தி நீட்டிய அர்ச்சனைப் பணத்தில் குறியாகத் திரும்புகிறார் குருக்கள்.

"வாடா, போவோம்."

"இல்லை, எனக்குப் பிட்டு வேணும்."

"வீட்டை வாடா அவிச்சுத் தாறேன்."

"எனக்கு இப்ப இங்கே பிட்டு வேணும்."

'படார், படார்' என்று குழந்தைக்கு அடி விழுகிறது. அதன் அலறல் கோவில் முழுவதும் துல்லியமாகக் கேட்கிறது.

"ஆத்தை எனக்குப் பிட்டு வேணும்" சலிப்பு. பின்பும் அதே குழந்தையின் கதறல்.

கதையிலே இலயித்திருந்த பொன்னம்மாக் கிழவிக்கு கதறல் கேட்கிறது அவளுக்கு அத கேட்டுப் பழகிய குரலாகப்படுகிறது. அவள் பிட்டையும் பொல்லையும் எடுத்துக் கொண்டு புறப்படு கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நன்று நன்றின்னுமன்னே நயந்து பிட்டளிப்பையா கில்' என்ற அடுத்த பாடலைப் பென்சன்காரர் பாடுவது அவள் காதிலே பட்டதும் படாததுமாக விழுகிறது. அவள் கோவில் முகப்பிலே வந்து பார்க்கிறாள். வெள்ளையனின் அந்தக் 'குஞ்சுப்பையன்' தான் அழுது கொண்டிருக்கிறான். அவனுக்கும் ஐந்தாறு பையன் களுக்கும் பிட்டுக் கிடைக்கவில்லை. விபரம் தெரிந்த சிறுவர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆனால் விபரம் தெரியாத பிஞ்சு, குழந்தை. தன் மழலைமொழியால் பிட்டுக் கேட்டதற்கு வெள்ளை யனின் தாய் - கறுப்பி - அடித்துக் கொண்டிருக்கிறாள். கிழவிக்குத் தன் பேரக்குழந்தையை யாரோ அடிப்பது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. அவள் தன் முழுப்பலத்தையும் சேர்த்து ''கறுப்பி! அடியாதையடி குழந்தைக்கு'' என்று உரப்புகிறாள்.

குழந்தை திருப்பிப் பார்க்கிறது.

''பாட்டி, பாட்டி, பிட்டு! பிட்டு!'' என்று கத்திக் கத்திக் குழந்தை ஓடிவருகிறது.

''உனக்குத்தானே மேனே கொண்டு வந்தனான்? இந்தா தின், புட்டு'' என்று ஆதரவோடு கொடுக்கிறாள்.

குழந்தை ஆசையோடு தின்னுகிறது. சிறிது தின்ற பின்பு துப்புகிறது.

''ஏண்டா, துப்புகிறாய்?''

''இது கூடாது பாட்டி'' என்கிறது கொச்சை மொழியில் குழந்தை. பொன்னம்மாக்கிழவியும் மென்று பார்க்கிறாள். பாதி அவிந்ததும் பாதி அவியாததுமாகப் பிட்டு இருக்கிறது.

'சுவாமிக்கு நைவேத்தியம் செய்யும் பிட்டைக் கொஞ்சம் கவனமாக அவிக்கக் கூடாதா? என்று அவள் மனதுள் நினைக் கிறாள். ஆனாலும், ''சுவாமிக்கு வைத்த பிட்டை கூடாதென்று சொல்லக் கூடாது'' என்று குழந்தைக்குச் சொல்கிறாள்.

குழந்தை மறுபடியும் ''பாட்டி, பிட்டுவேணும்'' என்று சிணுங்குகிறது.

''வாடா, வீட்டை போவோம். வீட்டிலை நல்ல பிட்டாய் அவித்துத் தாறேன்'' என்கிறாள் அவள். குழந்தையின் கையைப் பிடித்தபடி பொன்னம்மாக் கிழவி நடக்க ஆயத்தமாகிறாள். கறுப்பி ஓடி வந்து குழந்தையைத் தூக்குகிறாள்.

''கமக்காறிச்சி செல்லம் குடுத்து இது கெட்டுப் போச்சு. எந்த நாள் பார்த்தாலும் எழும்பின நேரந்தொட்டு 'புட்டு, புட்டு' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தியபடி... நான் ஆரட்டைப் போறது? இண்டைக்குக் கோயி லிலை குடுக்கினம் என்று கேள்விப்பட்டு இங்கை வந்தேன். இங்கையும் தந்தால் தானே? இந்தக் கூப்பன் காலத்திலை அவை யையும் ஏன் தான் குறை சொல்லுவான்?''

''ஏன்ரி கறுப்பி புறுபுறுக்கிறாய்? நான் தான் இவனுக்கு எப்போதும் பிட்டுக் கொடுக்கிறேனே? நீயும் வெள்ளையனும் கல்லடிக்கப் போய் விடுவியள். இவனை யார் வளர்த்தது? இவன்ரை தாயும் பெத்த வீட்டுக்கை செத்துப் போய்விட்டாளே. பாவம் தாயில்லாப் பிள்ளையென்று கொஞ்சம் செல்லம் கொடுத்திட்டேன்.''

''என்ன கமக்காறிச்சி எனக்கு இது தெரியாத கதை போலப் புதிதாய்ச் சொல்லுது. எண்டாலும் இனிமேல் அடிச்சுப் பயப் படுத்தி வளக்கவேணும். குழந்தைகளுக்கு செல்லம் கூடாது. பணக்கார வீட்டுப் பிள்ளையள் எப்படியெண்டாலும் வளரலாம். எங்கடை பொடியன் அப்பிடி வளரலாமோ? கமக்காறிச்சி, இன்று மேற்பட்டு இவனை உங்கடை வீட்டை விடேன். கல்லடிக்கிற இடத்துக்கு நானே கொண்டு போவேன். நீங்க குடுக்கிற செல் லத்தைப் பார்த்து ஊரார் எல்லாம் சிரிக்கினம். கமக்காறிச்சிக்கு விசர் என்று கூடச் சொல்லுகினம்.''

பொன்னம்மாக்கிழவிக்கு கறுப்பியின் இந்த வார்த்தைகள் ஆவேசத்தைக் கிளப்பி விட்டன. அவள் உருத்திரமூர்த்தியானாள். ''என்னடி சொன்னாய் நீ வெள்ளையன் செய்த உதவிக்கு இந்தக் குழந்தைக்குப் பிட்டுக் கொடுத்து வளர்க்கிறேன் என்று நினைக் கிறாய் நீ. இல்லைடி இல்லை. எனக்கும் ஒரு பொம்பிளைப் பிள்ளை இருந்து இருபத்தொரு வயதிலை செத்துப் போச்சே அதுவும் கலியாணம் செய்து ஒரு பிள்ளையும் பெத்தால் ஆசை யாய் வளர்ப்பேன் என்று நினைத்தேன். முடியவில்லை. இந்தத் குஞ்சுப் பொடியனைக் காணும் போதெல்லாம் அந்த நினைப் புத்தான் வருகுது. அந்த நினைப்பிலே தான் பிட்டுக் கொடுக்கின் றேன். வளர்க்கின்றேன். ஊரில் ஆட்கள் விசர் என்று சிரிக்கினம் எண்டியே. சிரிக்கட்டும்; சிரிக்கட்டும். எனக்கென்ன? உவையே என்னைத் தூக்கிச் சுடப்போகினம்? எனக்காக அழப்போகினம்? என்னுடைய கையாலை பிட்டுத்தின்ற நீங்கள் தானே சுடப் போறியள் அழப்போறியள்; ஏண்டா உன் ஆத்தை உன்னை இனிமேல் என்னட்டை விடமாட்டாளாம். நீயும் அப்படியே அவள் சொல்லைக் கேட்டு நின்று விடுவாயா? நிண்டா அவ்வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். பிட்டுக்காரக் கிழவி அடுத்த நாள் செத்தே போய்விடுவாளடா''

கறுப்பியின் கண்கள் கலங்கின. 'இப்படியும் ஒரு மனுஷப் பிறவி இருக்க முடியுமோ? ' என்று உருகுகிறாள்.

வீடு வந்து விட்டது. கிழவி பரபரவென்று அடுப்பை மூட்டினாள். மாவைக் குழைத்து நீத்துப் பெட்டியில் வைத்துக் குண்டானால் மூடினாள்.

அந்தச் சிறு 'குஞ்சுப் பொடிய' னும் முற்றத்தில் கிடந்த சிறு சுள்ளிகளை எடுத்து வந்து கிழவிக்கு நீட்டுகிறது.

கறுப்பி சிரிக்கிறாள். பொன்னம்மாக் கிழவியோ, ''அடே! சின்னப்பயலே, வெள்ளையனும் வேலை செய்து போட்டுத்தான் பிட்டுத் தின்னுவான். அதிலும் ஒழுங்காகச் செய்வான். அவன் நல்ல பொடியன், நீயும் வேலை செய்கிறாயா? செய். செய். வேலை செய்தால் தான் வாழமுடியும்'' என்கிறாள்.

பானையில் தண்ணீர் வடிகிறது. கிழவி பிட்டைக் கீழே இறக்குகிறாள். வழமை போல ஒருகை பிட்டை தட்டில் செருகியிருக்கும் 'அம்மன்' படத்தின் முன் படைக்கிறாள். பின்பு குழந்தைக்குச் சிறிய அழகிய சிரட்டை ஒன்றில் போட்டுக் கொடுக்கிறாள்.

குழந்தை பிட்டைத் தின்றபடியே, ''பாட்டி, பாட்டி இது நல்ல பிட்டு'' என்கிறது. உள்ளத்தில் கிளர்ந்த இன்ப உணர்ச்சியின் பேறாக, பொக்குவாய் தென்னம்பாளை போல் வெடித்துக் கொள்ள, அவளது கொடுப்புப்பற்கள் இரண்டும் வெளியே தெரிகின்றன.

அப்போது கோவிலில் நடைபெறும் புராண படனத்தில் 'கட்டு மரைத்துணிச்சீரை' என்ற பாட்டு வாசிக்கப்படுகிறது.

(ஈழகேசரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்வாசனை

சு.வே.

"உஸ்..... ஸ்..... அப்பாடா."

காலை முழுவதும் காட்டியும் மறைத்தும் கண்ணாம் பூச்சி ஆட்டமாடி, ஈற்றிலே வைரமுத்தரிற் கவிந்து, அவரைப் பரிபூரண மாக ஆட்கொண்டுவிட்ட களைப்பின் சொல் வடிவங்கள் அவை. அவர் தமது தோளிற் கிடந்த கலப்பையையும் நுகத்தையும் அநாயாசமாக, ஆனால் வெகு பரிவுடன் இறக்கி, பல்லாண்டு பல்லாண்டாகக் கலப்பையும் நுகமும் கிடந்து தழும்பு கண்ட அந்தச் சுவரிலேயே சார்த்திவிட்டு, தலையிற் கட்டியிருந்த துண்டை அவிழ்த்து உதறி முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

அவர் இப்பொழுதும் வயலில் நின்றிருப்பாரானால் இன்னுங் கொஞ்சநேரம் உழுதிருப்பார்; கால்கள் மாடுகளின் பின்னால், அலையலையாகச் சரிந்துகிடக்கும் உழவுச் சால்களில் நடக்க, அங்கிருந்து பரவும் அபூர்வமான புதுமண் வாசனையை முகர்ந்து கொண்டு, சிறுகுழந்தையைப் போலத் தள்ளாடித் தள்ளாடி நடை பழகியிருப்பார்; அப்பொழுது அவர் மனம் பலபல எண்ணங் களை ஓடவிட்டு, அவற்றுக்கு அருத்தமும் அழுத்தமும் கொடுக் காமல், தொட்டுந் தொடாமலும் அலைந்து திரிய, நெற்றி வியர்வை வழிந்து நெற்றிப் பொட்டைக் குளிர்வித்துக் கீழிறங்கி வாயில் நுழைந்து, வெற்றிலைச் சாற்றோடு இணைந்து புதுச்சுவை கூட்ட, அவையெல்லாவற்றையும் அநுபவித்துச் சுவைத்துக் கொண்டு உழுதிருப்பார். இரண்டு நாட்களுக்குமுன் மழை பெய் திருந்தபோதிலும் பங்குனிமாத வெயில் தன் தனித்தன்மையைக் காட்டிக் கொண்டு தழலைச் சொரிந்து தகித்தது. பாவம்! மாடுகள் களைத்துப்போய் நுரை கக்கத் தொடங்கி விட்டன. வாய் பேசாது ஏவியவற்றை முடிக்கும் அந்த எருதுகளே வைரமுத்தரின் கண் கண்ட தெய்வம். தெய்வமும் வாய் பேசுவதில்லையன்றோ? அவர் இலக்கணப்படி மாடுகள் உயர்திணைப் பொருள்கள்; அதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைகளை - அவர்களை - மேலும் வருத்தாமல் அவிழ்த்து விட்டார். அவை பக்கத்திலிருந்த குளத்தை நாடிச் சென்றன.

அவிழ்த்து விட்ட மாடுகள் இன்னும் வீடு வந்து சேரவில்லை. துண்டை உதறி விரித்துவிட்டு முற்றத்து மாமரத்தின்கீழ்ப் படுத்து விட்டார் வைரமுத்தர். களைப்பு வேசிப்பெண்ணைப் போன்றது. இரண்டும் சமயசந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்து, முடிவிலே அவனவன் பெலவீனத்தை வாயிலாகக் கொண்டு, அவனவனை முழுதும் வசமாக்கி மயக்கிவிடும். இவ்வளவு நேரமும் எங்கோ பதுங்கிக் கிடந்த களைப்பு, அவரை முற்று முழுதாக ஆட்கொள்ள, அவர் அதனோடு புணர்ந்து, மோனநிலையிற் கிடந்து கண்களைச் சொருக விட்டு, அதைச் சுவைத்துச் சுவைத்து அநுபவித்தார். களைப்பிலே பிறந்த சோர்வை, உள்வாங்கி அனுபவிப்பதென்பது பலருக்குக் கிட்டாத ஓரின்ப அனுபவம்.

"பூரணம்" என்று மனைவியைக் கூப்பிட்ட பின்னர்தான், தனது மோனப் பெருநிலையில் ஒரு பொள்ளல் விழுந்துவிட்டதை அவரால் உணரமுடிந்தது. ஆண்டாண்டு காலமாகக் கூப்பிட்டுப் பழகிய வாய், குரல் கொடுத்ததையும் அவராலே தடுக்க முடிய வில்லை.

இத்தனை மூடுசூளையாய் இந்தக் களைப்பு எப்போது தன்னிலே கவியத் தொடங்கியது என்று எண்ணிய போது, அவருக் குச் சிரிப்பு வந்தது. வயது ஒவ்வொன்றாக நழுவி நழுவி விழ, அந்த இடத்திலே சோர்வு வெற்றிக்கொடி நாட்டிவிடுகிறது. 'என்ன! என்னில் இன்னும் வாலிபமா கொப்பளிக்கும்! போன தையோடு அறுபத்து நாலு முடிந்து அறுபத்தைந்தாகி விட்டதே! காடு வா வா எனக் கூப்பிடுகிறதே. இந்தப் பருவத்திலும் வயலைப் பாராம லிருக்க மனம் கேட்டால் தானே' என்று எண்ணிக் கொண்டார்.

"மே..... மே ஏ எ....ஏஎ" - வீட்டுக் கோடியிற் கட்டியிருந்த தாயாடு அளபெடை சேர்த்துக் கத்தியது. பின் தாயோடு சேர்ந்து குட்டிகளும் முறைவைத்துக் கத்தின. 'நான் வீட்டுக்கு வந்த சங்கதியை இவைகளுக்கு யார் சொன்னவர்.... பாக்குக் கடிக்கிற நேரம் பொறுங்கோ..... ஏ! பூரணம், இவைகளுக்கு ஒன்றும் போடவில்லையோ? ' - அவர் மனத்தளவில் ஆடுகளோடும் பூரணத்தோடும் பேசினார். வாய்விட்டுப் பேசமுடியாத அவ் வளவு சோர்வு!

அவர் அசையாமல் அண்ணாந்து கிடந்து, மீண்டும் கண்மூடி மௌனியாய் எண்ணமும் நினைப்புமற்றதொரு நிலையில் லயித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டார். எல்லாம் பழுத்து உதிர்ந்து, புதிய தளிர்களுக்கு இடங் கொடுத்துவிட, தப்பித்தவறிக் கிடந்த ஒரு பழுத்த மாவிலை, அவர் நெஞ்சில் விழுந்தது. அவர் திடுக்கிட்டுப் போய்க் கண்விழித்தார். கண்கள் மேலே சென்று, மாமரத்தின் பசிய இலைகளெல்லா வற்றையும் அளாவி அலைந்து சுழன்றன; கை பழுத்த இலையை எடுத்துச் சுழற்றியது. 'பழுத்துவிட்டால் இலையல்ல எதுவுமே விழவேண்டியது தான். புதிய இலை வரும்வரையில் இருந்ததே பெருங் காரியம். ஆசைக்கும் ஓரளவு வேணும். இந்தக் காணி பூமியில் எத்தனையோ ஆண்டுகளாகப் புரண்டுருண்டும் ஆண் டனுபவித்தும் சலிப்புத் தட்டவில்லையே! இந்த மண்வாசனை பூரணத்தின் கூந்தல் மணம்போல, நெஞ்சின் நெஞ்செல்லாம் இனிக்கிறது. ஆதி தெரியாத இந்தக் குல விருட்சத்திலும் எத்த னையோ பழுத்தல் இலைகள், புதுத் தளிர்களிடம் அதை வளர்க் கும் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, அதனடியில் வீழ்ந்து அதற்கே உரமாகிவிட்டன. உடனடியாக இரு பிள்ளைகளையும் அழைத்து, காணி பூமி, பொருள் பண்டமெல்லாவற்றையும் பங்கிட்டு ஒப்படைத்து விடவேண்டும். எப்போது காற்று வீசும்; எப்போது பழுத்தலிலை விழும் என்று யாருக்குத் தெரியும்?' - இந்த எண்ணம் மின்னலாய் வெட்டி, அவரது மனத்தின் மூலத் தானத்திலே பெருஞ் சோதியை எறிக்கவிட்டு மறைந்தது.

மின்னலையடுத்துப் பயங்கரவிருள் முழு மூர்க்கத்தனமாய் வந்து அவருள்ளத்திலே உறைந்தது. மனக் கண் அந்தவிருளிற் கூர்மையிழந்து தட்டுத்தடுமாறி ஊர்ந்தது. ஏதோ ஒருவகைத் தவிப்பு, மெல்ல மெல்லப் பெருகிப் பெருங்கடலாய் அலை மோதி, நெஞ்சச் சுவர்களைத் தாக்கியது. உள்ளத்தை இழக்குந் தவிப்பா? உள்ளதை இழக்குந் தவிப்பா? உள்ளத்திலே ஊறி ஊறி உயிருடன் கலந்துவிட்ட தன் மானத்தின் மரணாவத்தையிற் பிறந்த தவிப்பா?

'இனி, நானும் பூரணமும் யாருக்குப் பாரமாவது? மூத்தவ னுக்கா? இளையவனுக்கா? ஒவ்வொருவரும் ஒவ்வொருவருக்கா? யாருக்கும் யாரும் பாரமாக வேண்டாம். படுக்கையில் விழுந்து கிடக்கிறபோது, இருவரும் வந்து எது வேண்டுமானாலும் செய்யட் டும்' எங்கு வேண்டுமானாலும் கொண்டு போகட்டும், இப்போது நான் யாருக்காவது பாரமாவதோ, யார் நிழலையாவது அண்டு வதோ முடியாது. ஆகவே பூரணத்தாலும் முடியாது' இந்த எண்ணங்கள் அவரது தவிப்பின் பயங்கரக் கொந்தளிப்பை ஓளரவு தணித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிப்பு அடங்கிய நிலையிலே, சந்தேக வித்தொன்று முளைத்து மகாவேகமாக வளர்ந்து, கணப்பொழுதிலே பெருமர மாகிவிட்டது. அது நிரந்தரமாகி உண்மைத் தன்மை பெற்று விட்டால், அதனால் விளையும் பயனை அவர் தெளிவாக உணர்ந் தார். அந்த மனச்சாட்சியின் ஒவ்வொரு சிறு தோற்றமும் புரண்டு நெளிந்து வழுக்கி ஊர்ந்து புழுக்கூட்டம் போலக் கிலுமொலுத்தது.

"மூத்தவனுக்கு நிலத்திலும் பார்க்க உத்தியோகமே பெரிது. இளையவனுக்கு வியாபாரமே பெரிது. இருவரின் இந்தப் பற்றுக் களின் முடிபு நிலத்தின் பற்றின்மைதானே. ஆமாம், அவர்களுக்கு ஒன்றைத் தீர்மானமாகச் சொல்லிவிட வேண்டும். 'அடே, இங்கே பாருங்கோ, நீங்கள் சிரித்துச் சிரித்து வாழக் காரணம் உங்கள் படிப்பென்றும் வியாபாரமென்றும் நினைத்தால் நீங்கள் சுத்த மடையரே, அதற்குக் காரணம் இந்த நிலம்; இந்த நிலத்திலே பரம்பரை பரம்பரையாகச் சிந்திய வேர்வை; அதனால் ஏற்பட்ட செழிப்பு. இந்தப் பூமித்தாய் வரண்டு வெடித்துப் பாழாய்க் கொட்டாவி விட்டு, பெருமூச்சுவிட்டால் அவ்வளவு தான்; குல விருட்சம் படவேண்டியது தான். இதோ ஒன்றாய்க் கிடைத்த நிலம் இரண்டாகி உங்களிடம் வருகிறது. இதோ உறுதிக் கடதாசி, குத்தகைக்கு விடுவேன்; வராத்துக்கு விடுவேன்; அப்படியிப்படி என்ற பேச்செதுவும் இருக்கக் கூடாது. ஒன்றில் நீங்கள் நிலத்துக்கு வரவேண்டும்; அவ்வளவுதான்' என்று அறுத்துறுத்துச் சொல்ல வேண்டும். பாம்பு மாதிரி நழுவி நொழுவிப் பேசுகிற பேச்சுக் கிடமில்லை. பிறகு அவரவர்கள் வந்த வந்த வழி."

அவர் மனத்திலே கிடந்து நெளிந்த மனக்காட்சிகளெல்லாம் ஒன்றில் ஒன்று அடங்கி, அந்த ஒன்றில் மற்ற ஒவ்வொன்றும் ஒவ்வொன்றா யடங்கி ஈற்றில் எல்லாம் ஒன்றுள் அடங்கி அந்த ஒன்றும் இல்லையாய் மறைந்தது. இந்நிலையில் அவர் மனம், ஆழ்ந்து அனுபவித்துத் தூங்குகிற குழந்தையாய், அது கனவிலே 'நரி வெருட்டச்' சிரிப்பது போலச் சிரித்தது; அவரும் சிரித்தார்.

"என்ன சிரிப்பு; கால் முகம் கழுவியாச்சோ" என்ற குரல் தூங்கும் இதயத்தை அருட்டி எழுப்பி இனிமையூட்டியது. வைரமுத்தர் ஒருக்கணித்துத் திரும்பி, தலைக்குக் கையை முட்டுக் கொடுத்துக் கொண்டு பார்த்தார். பூரணம் அவரை நோக்கி வந்துகொண்டிருந்தாள்.

உயர் சாதிப் பிராமணப் பெண்போல, மஞ்சளிலே சிறிது செம்மையைக் கொட்டிய நிறம்; வாட்டசாட்டமான பாரிய சரீரம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கும் போது சதை அதுங்கிப் பிதுங்கிக் குலுங்குவதும் ஒரு கவர்ச்சியாகத்தானிருந்தது. முன் நெற்றியிலே தொடங்கி நடு வகிட்டின் இரு கரையையும் பற்றிக்கொண்டு மேலே மேலே பரவிச் செல்லும் நரை; பளிச்சென்ற முகம்; குளித்த பிறகு நெற்றியிலிட்டுக் கொண்ட ஒரு சத அகலக் குங்குமப் பொட்டு; பார்த்தால் மனத்தூய்மையைப் பரவவிட்டுச் சிலிர்க்கச் செய்யும் முழுப்பொலிவு; அவள் அன்னபூரணி தான்; பூரணம் தான்.

அவள் தாமரையிலையால் மூடப்பட்ட சருவச்சட்டியொன்றை ஒரு கையில் ஏந்திக் கொண்டு, மறு கையிலே செம்புந் தண்ணீருங் கொண்டு வந்தாள்.

அவளிலே கண்ணைப் பதித்து, மனத்தால் விழுங்கி, பின் இரண்டினாலும் அளவிட்டுப் பூரித்தார் வைரமுத்தர். எத்தனையோ ஆண்டாண்டாய், ஒவ்வொரு நாளிலும் எத்தனை எத்தனையோ முறை பார்த்துங் கூட, அவருக்கு அலுக்கவில்லை; அலுக்கப் போவதுமில்லை. இப்போது அவளைப் பார்த்து மெல்லச் சிரித்தார். நாணம் என்றுமே நித்தியகன்னி. முதுமையின் எல்லையைத் தொட்டு நிற்பவளிடங் கூட, தன் தனித்தன்மை மாறாமற் பரந்து நிற்கும் மகாமந்திர சக்தி அதனிடமுண்டு. அது ஐம்பத்திரண்டு வயதிலும் அவளையறியாமலே, அவள் முகத்தே செம்மை காட்டி, பதிலுக்குச் சிரித்து விட்டு மறைந்தது.

"என்ன சிரித்துக்கொண்டு..... எழும்புங்கோவன்....."
அப்போது தான் கணகணவென்ற கழுத்து மணியோசையோடு, எருதுகள், சுதந்திரமாகத் திரிந்துவிட்டு, அதுவும் சலித்துவிட உள்ளே நுழைந்தன.

"உதை இப்படி வை. மாடுகளைப் பிடித்துக் கட்டி, வைக்கல் இழுத்துப் போட்டிட்டு வா."

"இதைத் தின்னுங்கோவன். பிறகுபோய்க் கட்டினா லென்ன"

"எனக்கென்ன அவசரம்' வாயில்லாச் சீவன்கள் பாவம்! இன்றைக்கு நல்ல களை. அவைகளைக் கட்டி ஒரு திரணை வைக்கல் போட்டிட்டு வாணை; என்ரை ராசாத்தி....."

கிழவன் வாய்விட்டுச் சிரித்தான். முன்னமே நாணத்தால் ஓரளவு செம்மைச் சாயம் தோய்ந்திருந்த கிழவியின் முகம் முழுவதும் சிரித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சீச்சீ.... கிழவனுக்கு வயது போனாலும் பகிடி போகாது."

"ஒகோ, அப்ப நான் கிழவன். நீ இப்பவும் வாலைக் குமரி என்று நினைப்போ. அதுக்கென்ன போட்டு வா."

வாயாட வாயில்லை பூரணத்துக்கு. சருவச் சட்டியையும் செம்பையும் 'தொம்' என்று வைரமுத்தருக்கு முன்னே வைத்து விட்டு, மாடுகட்டப் போய் விட்டாள் கிழவி.

வைரமுத்தர் எழுந்து கால்முகங் கழுவிக் கொண்டு வந்து அதேயிடத்தில் அமர்ந்தார். பூரணம் இன்னும் வரவில்லை. மெதுவாக இலையைத் தூக்கிப் பார்த்தார். உள்ளே பழஞ்சோறு; ஒடியற் பிட்டோடு மரவள்ளிக் கிழங்குப் பழங்கறியும் சேர்த்துத் தயிர்விட்டுக் குழைத்த கொழுகொழென்ற குழையல்; பார்க்கப் பார்க்க வாயூறியது. பசி கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. என்றாலும் எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டார். அதற்குக் காரணம் இருந்தது. பூரணம் திரட்டித் திரட்டிக் கையில் வைத்தா லல்லவா அவராலே தின்ன முடியும். மூடிவைத்து விட்டு இருந்தார்.

பூரணம் கடுகடுப்போடுதான் வந்தாள்; நெற்றியிலே முத்து முத்தாக வியர்வை துளிர்த்திருந்தது. கன்னம் இரண்டிலும் வியர்வை ஆறு, கால்வாய்கள் கண்டு ஓடியது. வாளிப்பான அந்த உடலை அசைத்தெடுத்தது நெடுமூச்சு.

"இந்த வேலையெல்லாம் இனிமேல் என்னாலை ஏலாது. என்னாலை ஏலாதென்றால் உங்களாலும் ஏலாது தான். பேசாமல் ஒரு பிள்ளையோடு போயிருப்பம்" - எத்தனையோ காலமாகச் சிறுச்சிறு ஊற்றாக ஊறி உள்ளே நிறைந்து அலைமோதிய ஆசைவெள்ளம். கிழவனது ஆண்மை ஆணையிட அடங்கிக் கிடந்த அது, வேளைகிடைத்த வேளையிலே வெளியே பெருகத் தொடங்கியது.

"என்ன, அழையா விருந்தாய்ப் போகச் சொல்லிறியோ?" - கிழவன் வேடிக்கை பண்ணினான். ஆனால், அதனுள்ளீடாகப் புருடத்துவ கம்பீரம் நிமிர்ந்து நின்றது.

"பேச்சைப் பாருங்கோ பேச்சை; இவர் பெரிய மகாராசா; கொடி, குடை, ஆலவட்டத்தோடு வந்து அழைக்க வேணுமாம், மீசை நரைச்சாலும் ஆசையும் அதிகாரமும் நரைக்கவில்லை."

"பின்னை என்ன, உனக்கும் எனக்கும் என்ன குறைவாம். நான் இராசா; நீ இராசாத்தி. அவர்கள் வந்து கூப்பிட்டபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துக் கொள்ளலாம்; இப்ப உனக்கோ எனக்கோ எதுவும் வந்துவிடவில்லையே.''

''ஐயையோ, மறந்து போனன். காலமை இரண்டு காயிதம் வந்தது. ஒருவேளை வரச்சொல்லித்தான் இரண்டு பேரும் எழுதியிருக்கோ என்னவோ. கொண்டு வரட்டோ'' - பூரணத்தின் ஆசை வெகு மூர்க்கமாக நிமிர்ந்தது. இரு கடிதங்களையும் பற்றிக் கொண்டு, தன்னை வெளிக்காட்டியது.

''கொஞ்சம் பொறு, அதுக்கு இப்ப என்ன அவசரம். சாப்பிட்டு முடியட்டும்.'' வைரமுத்தர் கிழவியின் ஆசைக் கலவைகளைப் பிரித்துப் பிரித்துத் தனிக் கூறுகளாக்கிப் பார்த்தார். கிழவனிடம் குறும்பு முளைத்தது.

''ம் கோயியாதை, உள்ளதைச் சொல்..... பிள்ளைகளைப் பார்க்க ஆசைப்படுகிறாயா? பேரப்பிள்ளைகளைக் கொஞ்சிச் சீராட்டவோ அல்லது சாகக்கு முந்திக் கொஞ்ச நாளைக்காவது மாமியார் அதிகாரம் பண்ணவோ... அல்லது...''

''எப்பவும் நையாண்டிதான். இன்னும் எத்தனை நாளைக்கோ. உள்ளே அழுகத் தொடங்கிவிட்ட இந்தப் பூசணிக்காயைப் பெருமான் எப்ப தூக்கி எறிகிறாரோ' அப்ப சளிஞ்சு போய், வாயைப்பிளந்து கிடக்க வெண்டியது தான். அதுக்கிடையிலை கொஞ்ச நாளைக்காவது.....'' பூரணம் வெம்பி வெடித்துக் கண்ணீர் சிந்தினாள். பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் நினைத்த போது அவள் உள்ளத்தின் உள்ளெல்லாம் உருகி நெகிழ்ந்தது, தாய்மைத் துடிப்பு உடலணுக்கள் எல்லாவற்றிலும் ஊறியது; பழஞ்சோறு திரட்டி எடுத்த கை நடுங்கியது. அவள் உணர்ச்சிப் பெருநெருப்பிலே கருகி, ஒரு கணம் தன்னை மறந்து மூச்சிழந்திருந்து வெளி வந்தாள். அவளைக் கண்டு, வைரமுத்தரின் கண்களும் குளமாகி விட, தனது சால்வைத்துண்டையெடுத்துப் பூரணத்தின் கண்ணீரைத் துடைத்தார்.

''என்ன பூரணம், உன்னத்தனை பாசமும் வருத்தமும் எனக்கில்லையோ; உன்னது தாய்ப்பாசம்; அடங்காது. என்னதை அடக்கியடக்கி, குமைந்து குமைந்து பார்க்கிறேன். நினைத்தவைகளை நினைத்து நினைத்து, நினைக்க முடியாதவைகளையும் நினைத்துப் பார்த்து நான் படும்பாடு..... எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்த பிறகு ஒரு முடிபுக்கு வந்துவிட்டன்.....''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணம் கண்களை அகல விரித்துக் கொண்டு, அந்தக் கண்களிலே ஆசை, இரசவோட்டமாய் ஓட, அந்தக் கண்களினாலே கேட்டாள், 'என்ன' என்று.

''இரண்டு பேரையும் வரச் சொல்லி இண்டைக்கே எழுதப் போறன். வந்ததும் சொத்தெல்லாத்தையும் இரண்டாய்ப் பிரிச்சு எழுதிப்போட்டு...''

கிழவனைக் கட்டியணைத்து, கொஞ்சிக் குலவவேண்டும் போல அத்தனை மகிழ்ச்சி கிழவியிலே கிளர்ந்தெழுந்தது. அதற்கு அணையிட அவள் விரும்பாவிட்டாலும். வயது அணையிட்டது.

''அது தான் சரி, நாங்கள் வாழ்ந்தது போதும். சின்னஞ் சிறுசுகள் ஆண்டனுபவிக்கட்டும். இந்தாருங்கோ தண்ணி. சருவச் சட்டிக்கை கையைக் கழுவிப் போட்டுக் குடியுங்கோ; காயிதத்தை எடுத்துக் கொண்டு வாறன்.''

பூரணம் சேலைத்தலைப்பிலே கையைத் துடைத்துக் கொண்டு குடுகுடுத்தாள். அடுத்த நொடியிலே கண்ணாடிக் கூடும் இரண்டு கடிதங்களுங் கொண்டு வந்தாள்.

வைரமுத்தர் கண்ணாடியைத் துடைத்து மாட்டிக் கொண்டு, ஒரு கடிதத்தைப் பிரித்து வாசித்தார். அவர் முகத்திலே கணத் துக்குக் கணம் உணர்ச்சித் திவலைகள் அள்ளித் தெளிக்கப்பட்டன. அந்தத் திவலைகளைக் கொண்டே, கடிதத்தில் என்ன இருக்கிற தென்று கண்டு கொள்ள முயன்று தவித்தாள் பூரணம். ஈற்றில் முகத்திலே துலாம்பரமாகத் தெரிந்த வெறுப்போடு அக்கடிதத்தை மடித்து வெகு நிதானத்தோடு துண்டு துண்டாகக் கிழித்தார். படபடென அடித்துக்கொள்ளும் மனப்பறவையின் ஒரு சிறகை யாரோ வெட்டி விடுவது போலத் துடித்தாள் கிழவி.

''என்னவாம்.....'' - அவள் குரலில் ஏக்கம் குடியிருந்தது.

''இது உன் மூத்தமகன் எழுதினது. உன்ரை மூத்த பேரன் பூனாவுக்கோ எங்கேயோ விவசாயம் படிக்கப் போறானாம். இப்ப தன்னிடம் பணம் இல்லையாம்; தன்ரை பங்கை வித்துத் தரட்டாம்.''

''அதுக்கென்ன, என்ரை செல்வங்கள் படிச்சு நல்லாய் வரட்டும். அப்பனே முருகா! அந்தக் குஞ்சுகளுக்கு ஒரு குறையும் வரவிடாதை.''

''ம்... அப்படியே? ''... வைரமுத்தர் கடைவாய்க்குள் சிரித்துவிட்டு மற்றக் கடிதத்தைப் படித்தார். மீண்டும் பூரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது முகத்தில் எழுதப்படும் உணர்ச்சி வரிகளை வாசிக்க முயன்றாள். கடிதத்தைப் படித்து முடித்த வைரமுத்தர் மிக மிக நிதானத்தோடு அதையும் துண்டாக்கினார். மற்றச் சிறகும் அரிபட்ட பூரணத்தின் மனப்பறவை மேலுங்கீழுந் தொங்கி அவத்தைப் பட்டது.

''என்ன'' - பூரணம் ஏங்கினாள்.

''இளையவன் இன்னுமொரு கடை எடுத்துவிட்டானாம். வியாபாரத்தைப் பெருக்க வேண்டுமாம்; பெருவாரியாகக் காசு தேவையாம். அதற்காகத் தன் பங்குக் காணி பூமிகளைத் தரட்டாம், விற்பதற்கு.''

''இளையவன் எப்பவும் கெட்டிக்காரன்தான். பாவம், நாலு பெண்ணைப் பெற்றுவிட்டான். சம்பாதிக்கத் தானே வேணும்.''

''ம்.....அப்படியா'' - அதற்குமேல் எதுவும் பேசாமல், பல பல எண்ணங்களை உள்வாங்கி மனக்கல்லில் மோதி மோதிச் சிதறு தேங்காயடித்து விளையாடினார் வைரமுத்தர்.

''இப்ப என்ன செய்யப் போறியள்; எழுதுங் கோவன்.''

''எழுதத்தான் போறன்....''

''என்ன எழுதப் போறியள்?''

''உடனே வாருங்கோ என்று தான்.''

''இப்படி எழுதுங்கோ, இந்தக் கடிதத்தைத் தந்தியாய்ப் பாவிச்சு உடனே வரச் சொல்லி, என்ன....''

''வேறென்ன எழுதவேணும்.....''

''வாறபோது தனியே வரவேண்டாம். பெடிச்சி, பேரப் பிள்ளைகள் ஒருத்தர் தவறாமல் வரவேணும்.... அதுவும் பத்துப் பதினைஞ்சு நாள் நிக்கக் கூடியதாய் வரவேணும்....''

''வேறென்ன.....''

''வேறென்னத்தை நான் செல்ல.....''

''பார் பூரணம், எழுதப்போறன்; எல்லாரும் உடனே வாருங்கோ; பெண்சாதி பிள்ளைகளோடு வாருங்கோ. பத்து நாளல்ல ஒரு மாதம் நிற்கக் கூடிய ஆயத்தத்தோடு வாருங்கோ... ஆனால், நீயும் நானும் இருக்கிறவரையில் எதையும் விற்பதற்காக ஒருவனும் வரவேண்டாம். இந்த நிலந்தான் இந்தக் குலத் தாய். அவளை விற்றுவிட்டுக் கிடைக்கிற படிப்பும் வேண்டாம்; வியா பாரமும் வேண்டாம். நாங்கள் இப்போது யாருக்கும் எதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிக் கொடுக்கிற யோசனையில்லை; இப்படித்தான் எழுதப் போறன், சரிதானே.....''

பூரணம் விக்கித்துப் போனாள். மடை திறந்தாற் போலக் கண்ணீர் ஆறாகப் பெருகியது. கண்ணீர்த் திரையினூடாக அவள் தன் கணவனைப் பார்த்தாள்; தன் முப்பத்திரண்டு வருடக் குடும்ப வாழ்க்கையிலே கண்டிராத புதுமைக் கணவனை அவள் கண்டாள். மனம் பெருமையால் விம்மிப் பொங்கிப் பூரித்தது;

''நான் ஒரு மடைச்சி''

''சீ, யார் அப்படிச் சொன்னது? நீ ஒரு பெண்; என் மனைவி; இரு பிள்ளைகளின் தாய்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபாற்காரச் சாமியார்

சொக்கன்

1.

அன்று காலையிலிருந்து சந்திரனின் மனம் ஒரு நிலையி லில்லாது தத்தளித்த வண்ணம் இருந்தது. தனது தொழிலுக்கான காக்கிச் சட்டையை அணிந்துகொண்ட போது, நெஞ்சில் ஏதோ குடைச்சல் ஏற்படுவது போல அவன் உணர்ந்தான்.

காற்சட்டைப் பையிலிருந்து ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைத்து இரண்டு தம் இழுத்தான். அப்பொழுது கூட அவனைப் பற்றி நின்ற சோர்வுநிலை விட்டு நீங்கவில்லை.

முற்றத்திலே இறங்கி வேலியிலே சார்த்தியிருந்த சைக்கிளை எடுத்தபோது, வழக்கம்போல ஜிம்மி வாலையாட்டியபடி வந்து அவன் காலை நக்கியது. சந்திரன் எரிச்சலோடு 'சீ! நாயே' என்று அதைக் காலால் உதைத்தான். ஜிம்மி ஓலமிட்டபடி தலை வாயிலைப் பார்த்து ஓடியது.

''பாவம்! வாயில்லாச் சீவன். உங்கடை எரிச்சல் அதுக்குத் தெரியுமா?'' என்ற மனைவியின் அனுதாபக் குரலைக் கேட்டும் கேட்காதவன்போல அவன் சைக்கிளில் ஏறினான். பழக்கப்பட்ட சைக்கிள், கால்களின் உந்தலால் ஓர் ஒழுங்கிற் சென்று தபாற் கந்தோரை அடைந்தது.

'மெயில்' பிந்திவிட்டது என்பதால் தபாற்காரர்கள் அங்கங்கே கூட்டமாய் நின்று உலக விவகாரங்களைப் பிளந்தெறிந்து கொண்டிருந்தார்கள்.

''மச்சான்! இதைக் கேட்டியே? கொழும்பிலையோ எங் கேயோ நம்ம சகோதரத் தொழிலாளி ஒருவனிலை, அவன் தபால்களைச் சரிவர 'டிலிவரி' பண்ணுறதில்லை எண்டு கொம்பி ளெயின்ற் வந்துதாம். சந்தேகப்பட்டு அவன்ரை வீட்டை போய்ப் பரிசோதித்துப் பார்த்ததிலை நூற்றுக்கணக்கான கடிதங்கள் டிலிவரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணப்படாமலே கிடந்ததாம். எப்பிடி வேலை? அங்காற் பக்கங்களிலே அவங்களெல்லாம் இப்பிடித்தான் போலை''. தனது 'டக்ளஷ் பெயர்பிறாங்' மீசையைப் பெருவிரலால் முறுக்கியபடி கதிரவேலு உதிர்த்த வார்த்தைகள் இவை.

''அதையேன் கேட்கிறாய்? அவங்கள் மணி ஓடர், போஸ்டல் ஓடர்களைக் கூடக் கள்ளக் கையெழுத்து வைத்து மாற்றிப்போடுவாங்களாம். இங்கை நாங்கள் தான் கடவுள், கடமை, மனச்சாட்சி எண்டு சாகிறது. என்ன சாமியார்! சொல்லும் பார்ப்பம்.'' வந்த நேரத்திலிருந்து அத்துவானக் கிறக்கத்தில் மனத்தையும், சிந்தனையையும் ஓட்டிக்கொண்டிருந்த 'தபாற் காரச் சாமியா'ராகிய சந்திரனை நோக்கிச் சுப்பிரமணியம் இவ்வாறு சொன்னான். நாள் தவறினாலும் கடவுளைப் பற்றியும், மனச் சாட்சியைப் பற்றியும், கடமையைப் பற்றியும் தவறாது தர்மோப தேசம் செய்யும் தன்னைச் சீண்டிவிடத்தான் சுப்பிரமணியம் இவ்வாறு பேசுகிறான் என்பதைச் சந்திரன் உணர்ந்தாலும், வழக்கத்திற்கு மாறாக அவன் மௌனம் சாதித்தான். இதனால் சுப்பிரமணியத்தின் ஆயுதம் 'பூமறாங்' ஆகிவிட, அங்கு அதிர்ச்சி யும், ஆச்சரியமும், அமைதியும் சில கணங்கள் நிலவின.

அந்த அமைதி கலைந்தபோது சந்திரன் அவ்விடத்தில் இல்லை. அவன் மெதுவாக அவ்விடத்திலேயிருந்து நழுவிக் கடிதப் பிரிப்பறைக்குச் சென்று ஒரு ஸ்டூலிலே அமர்ந்து கொண்டான்.

கட், கட், கட, கட என்று ஓய்வொழிவில்லாதபடி தட்டிக் கொண்டும், தந்திச் செய்திகளை அவ்வப்போது தந்திக்காரரிடம் கொடுத்துக்கொண்டும் டெலிபோனிஸ்டுகள் மும்முரமாக வேலை செய்து கொண்டிருந்தனர். ''கொஞ்சம் பொறுமன் காணும். என்ன அவசரம்?... உங்களுக்கென்ன? முத்திரையோ..... நீங்கள்? றிஜிஸ்றேஷனா? அடுத்த கவுண்டர்'' என்று கதம்பமாக எழுகின்ற இலிகிதர்களின் ஒலி வேறு காதில் நாராசமாக விழுந்தது ஆனால். அவையொன்றும் சந்திரனின் ஏகாந்தயோகத்தைக் குலைக்க வில்லை.

'வார்' ஓட்டத்தில் எதிராளியின் கையிலே தட்டி விட்டு ஓட அவன் துரத்தி வருவதுபோலச் சிந்தனையைத் தட்டிவிட்டு அது தன்னைத் துரத்திவர ஒளிப்பதற்கே இடமின்றிச் சந்திரன் தத்த ளித்துக் கொண்டிருந்தான் .

தான் செய்தது பிழை என்று முடிவு கட்டவுங் கூடவில்லை 'சரி' என்று தனக்குத்தானே 'சபாஷ்' போடவுங் கூடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன், திரிசங்கு சொர்க்கத்தின் அந்தரத்திலே தொங்கித் தவித்தான்.

2.

"பபா! தபாற்கார மாமாவாக்கும், போய்த் தபாலை வாங்கிக் கொண்டு வாங்கோ." தனது மணியோசைக்குப் பதிலாக வீட்டி னுள்ளேயிருந்து வந்த குரலின் கனிவிலே சந்திரன் மெய்மறந்து போனான்.

"தபாற்காரன் வந்திட்டானே? தபாற்காரனோ? அவனிட் டைப் போய்த் தபாலை வாங்கு" என்றெல்லாம் அலட்சியமான குரல்களையும், வரவேற்புக்களையும் வீடுகள் தோறும் கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்ட அவனுக்கு இந்த அனுபவம் புதுமையாக இருந்தது.

அந்தப் புதுமையனுபவத்தைச் சுவைத்தபடி அவன் நின்ற பொழுது, நாலே வயது மதிக்கத்தக்க சிறுமி ஒருத்தி வந்து, "மாமா! தபால் தாருங்கோ" என்று தனது குஞ்சுக் கரங்களை நீட்டினாள். சந்திரன் தபாலைக் கொடுத்தபோது. "நன்றி, வணக்கம்" என்று சொல்லியபடி அவள் தபாலை மரியாதையோடு வாங்கிச் சென்றமையைச் சந்திரனால் என்றுமே மறக்கமுடியாது.

அன்றிலிருந்து சந்திரனது உலகத்தில் அந்தக் குழந்தையும், குழந்தையை ஏவிய அந்தத் தாயின் குரலும் இடம் பெற்றுச் சிறிது சிறிதாய் ஆக்கிரமிக்கக் தொடங்கி விட்டன. அந்தக் குடும்பத்திலே தானும் ஓர் அங்கத்தவனாகிவிட்ட உள்ளுணர்வு அவனுக்கே தெரிந்த பரமரகசியமாக அவனுள்ளே இதய அந்தரங்கத்தில் ஒளி விட்டு மின்னியபடி இருந்தது.

சிறுமி வராத நேரங்களில் தாயே வந்து தபாலை வாங்கிச் செல்வாள். மென்மையும், பெண்மையும் நெற்றியிலே குங்கும மாகத் திகழ, அதன் பின்னணியில் உலகின் பரிசுத்தமே ஓர் உருவமாகி வருவது போல அந்தப் பெண் வரும்பொழுது அவன் மானசீசமாக அந்தத் தாய்க்கு அஞ்சலி செய்யத் தவறியதே யில்லை.

சகோதர பாசமே இன்னதென்றறியாதவனும், குழந்தைப் பேற்றையே அடைமுடியாத மலடனுமாகிய தனக்கு ஒரு சகோதரி யும், ஒரு குழந்தையும் கிடைத்துவிட்டது போன்ற பைத்தியகாரக் கனவிலே சந்திரன் மிதந்து கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தபாற்கார மாமா' என்ற சொல்லுதான் இத்தனைக்கும் காரணமா....?

'இல்லை.....இருக்க முடியாது. இது பல பிறவிகளின் சொந்தம்..... பிராரத்துவம் என்பது இது தான்'

சந்திரன் மனத்தினுள்ளே பலவாறு போராடிப் போராடி அந்த இருவரையும், தன் நெஞ்சிலே நிரந்தரமாகக் குடியேறி வாழ்வதற்கு அனுமதித்துவிட்டான்.

இத்தனைக்கும் அவன் அந்தப் பெண்ணோடு ஒரு வார்த்தை பேசியதில்லை. குனிந்த தலை நிமிராது வந்து கடிதத்தைப் பெற்று அவள் செல்லும்வரையில் ஏதோ ஒரு புனிதமான உலகம் தன்னைச் சூழ்ந்து நிற்பது போல உணர்ந்து அவன் பயபக்தியோடு குறுகி வளைந்து நின்று விடுவான்.

பபாவோடு ஒரு சிறு புன்னகை; செல்லமாக அவள் கன்னத் திலே ஒரு தட்டல்; அவ்வளவுதான்! ஆனால், இரண்டு அனுபவங் களுக்குமாகச் சந்திரன் தவமே கிடந்தான் என்று சொல்ல வேண்டும்.

3.

இரண்டு வாரங்கள் வரை அவளின் விலாசத்திற்குக் கடிதம் ஒன்றும் வரவில்லை. சந்திரன் துடித்துப்போய் விட்டான். எந்த முகாந்திரத்தைக் கொண்டு அந்த வீட்டு வாயிலிலே போய் நிற்பது? சந்திரனுக்கு அந்தக் கச்சடா வேலைகள் ஒன்றும் செய்யத் தெரியாது. எந்தச் சந்தர்ப்பத்திலும் 'மனிதன்' என்ற முழுமையி லிருந்து இறங்கிவிட அவன் தயாராய் இல்லை. அதனால் அந்த வீதியாற் செல்லும் போது கூட மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு விறைத்த நேர்ப்பார்வையோடு அவன் சென்றான்.

அவளின் குரல் கேட்கவில்லை. அந்த 'பபா' வின் தரிசன மும் கிடைக்கவில்லை. சந்திரனின் நெஞ்சுக்குள்ளே சொல்லவும், மெல்லவும் முடியாத வேதனை குமுறிக்கொண்டு எரிமலையாய்க் கனிந்து கொண்டிருந்தது.

இந்த நிலை நீடித்தால் தனக்குப் பைத்தியமே பிடித்து விடுமோ என்று சந்திரன் சந்தேகப்படுகின்ற நிலைக்கு வந்த பொழுது அந்த வீட்டிற்கு மீண்டும் கடிதம் கொண்டு செல்ல வேண்டிய தேவை அன்று ஏற்பட்டது.

சீதை, இராமனின் கணையாழியைக் கண்டதும் அடைந்த மனநிலையில், சைக்கிள் புட்பக விமானமாகி விடச் சந்திரன் பறந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று 'கிணிங், கிணிங்' என்று அவர் வீட்டு வாயிலிலே மணியோசை எழுப்பினான்.

அவன் எதிர்பார்த்த 'பபா' வரவில்லை. தாயும் வரவில்லை. மாறாக அவளின் கணவன், சந்திரன் கொண்டு சென்ற விலாசத்திற்கு உண்மையாகவே உரியவன் வந்து நின்றான்.

சிரிப்பே அறியாத கடுகடு என்ற முகம். காலத்திற்கு முன்பே நரைதட்டிப்போன தலையும், சோர்வும், களைப்பும் நிறைந்த உடலுமாக வந்து அவன் நின்ற பொழுது சந்திரனுக்குப் பேசவே தோன்றவில்லை. தாங்கமுடியாத அதிர்ச்சி ஏற்பட்டது. அவனுக்கு.

நளாயினி சாவித்திரி கதைகள் அவனுக்குத் தெரியாதனவல்ல. ஆனால், இன்று உண்மையிலேயே ஒரு நளாயினியின் கதைதான் தனக்குமுன் திரையில்லா நாடகமாக நடப்பது போன்ற எண்ணம் ஏற்படுவதினின்றும் அவனால் விலகிக் கொள்ளக் கூடவில்லை.

வந்தவன் கடிதத்தைப் பறிக்காத குறையாக வாங்கினான். கடித விலாசத்தைப் பார்த்தபொழுது அவனது முகம் ஏன் இப்படி மலர்கிறது? கடிதத்தைப் பிரிப்பதற்கு இவ்வளவு அவசரம் ஏன்? பதற்றம் ஏன்?

சந்திரன் தன் வாழ்நாளிலே செய்யாத ஓர் அருவருக்கத்தக்க செயலை அந்தக் கணத்திலே செய்துவிட்டான். வீட்டுக்குடையவன் திரும்பிச் சென்றபொழுது விரித்துச் சென்ற அந்தக் கடிதத்தின் தொடக்கத்தை அவனது கண்கள் கண்டுவிட்டன.

அதில்.....

'என் ஆயிருர்க் காதல',

என்று எழுதப் பெற்றிருந்தது.

சந்திரன் ஒன்றும் குழந்தையல்ல. நாலும் மூன்றும் ஏழு என்று கூட்டிப் பார்க்க அவனுக்கு யாரும் சொல்லித் தரவேண்டியதில்லை. அந்தப் பெண்ணின் கணவன் ''கடிதத்தை வேறோருவரிடமும் கொடுக்க வேண்டாம். என்னிடமேதான் தர வேண்டும்'' என்று சொன்னதன் அர்த்தத்தை அவனால் புரிந்து கொள்ள முடியாமற் போய்விட்டது என்று சொல்வது, சந்திரனுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும்.

'அட பாவி! தெய்வம் பொல ஒரு பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு பேயின் பின்னால் அலைகிறாயே?' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுறிக் கதறி ஓலமிட அவனது உதடுகளும், உள்ளமும் விரைந்தது உண்மைதான். 'அந்த இடத்திலேயே அந்தப் பாதகனின் கழுத்தை முறித்துப் போட்டால் என்ன?' என்று அவனது கைகள் துரு துருத்ததும் உண்மைதான். ஆனால் அந்த உணர்ச்சிகளை அவன் பலவந்தமாக அடக்கியது ஒரு மகத்தான சாதனையே.

'இத்தனைக்கும் அவன் ஓர் ஆசிரியர்' என்றபொழுது ஆசிரியர் சமூகத்திலேயே சந்திரனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. சம்பள உயர்வுக்காகவும், இட மாற்றத்திற்காகவும் போராடிக் கொண்டிருக்கும் சயநலக் கும்பல் தாம் ஆசிரியர்களென்றும், கடமையுணர்ச்சியற்ற ஏமாற்றுக்காரர்கள் தாம் அவர்களென்றும் அவ்வப்போது கேட்டும் கண்டும் வந்தவற்றை உண்மையல்ல என்று ஒதுக்க முயன்று வந்த அவனுக்குக் கண் முன்னால் காணு கின்ற உண்மை பயங்கரமாகத் தோற்றியதில் வியப்பதற்கு ஒன்று மில்லை. ஒரு காலத்தில் தெய்வங்கள் போல விளங்கி மாணவர் உள்ளங்களிலே அறிவொளியேற்றிய ஆசிரியர் கூட்டத்தில் இன்று புல்லுருவிகள் தாம் பெருகிவிட்டனர்' என்பதற்கு அவனது மானச சகோதரியின் கணவன் ஓர் எடுத்துக்காட்டாய் விளங்கினான்.

அதைச் சந்திரனாற் சகிக்கக்கூடவில்லை. அநாதரவாக நிற்கப் போகும் அந்தப் பெண்ணையும் அவளது பபாவையும் நினைத்துக் கொண்டபொழுது அவன் நெஞ்சு குருதிக் கண்ணீர் வடித்தது.

4.

சந்திரன் தீர்மானித்துவிட்டான். தன் 'சகோதரி'யின் வாழ் வைப் பாதிக்கும் எந்தச் தீயசக்திகளையும் அழிக்க அவன் கங்கணங் கட்டிக் கொண்டான். ஆனால் அது எவ்வளவு பயங்கரமான விஷயம்! நினைக்கவே அவன் நெஞ்சு நடுங்கியது.

எந்தத் தொழிலால் அவனது வயிறு கழுவப்படுகின்றதோ, எந்தத் தொழிலின் புனிதத்தையும், சிறப்பையும் பாதுகாக்க அவன் தன் சக தொழிலாளரோடு போராட்டம் நடத்தி வருகின்றானோ அந்தத் தொழிலுக்கே கறை ஏற்படுத்த அவன் துணிந்து விட்டான்.

கொழும்பிலிருந்து அவன் 'சகோதரி' க்குச் சக்களத்தியாக மாறிவிட்ட யாரோ ஒருத்தியின் கடிதங்களை அந்தக் கடிதத்தின் விலாசதாரர் அடைய முடியாத வகையைக் கையாள அவன் தீர்மானித்துச் செயற்படவும் தொடங்கியிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமுறைக் காலத்தில் கொழும்புக்காரி எழுதிய இரண்டாவது கடிதம் சந்திரன் கையில் கிடைத்ததும்

அவன் அதை உடைத்து வாசித்து....

அது கடிதமா? ஏதோ ஒரு சுவை நிறைந்த நாவலில் எழுச்சி நிறைந்த அத்தியாயம் போல அந்தச் சிறுக்கி என்னவெல்லாமோ எழுதியிருந்தாள். தன் காதலுக்குரியவன் ஒரு குழந்தைக்குத் தந்தை என்பதையும் ஒரு பெண்ணின் கணவன் என்பதையும் அறிந்திருந்துங் கூட அவற்றின் புனிதத்தை, முக்கியத்தைக் குப்பையில் வீசிவிடுவது போல வீசிவிட்டுத் தனது அன்பையும், ஆசையையும் எல்லாம் சொல்லோவியமாக அவள் வடித்திருந்தாள்.

சந்திரனுடைய கையை அந்தக் கடிதம் நெருப்பாய்ச் சுட்டது. அடுத்த கணம் அது உண்மையான நெருப்பையே தஞ்சம் அடைந்து தகனமாயிற்று!

அன்று சம்பள நாள். சந்திரன் தனது சம்பளப் பணத்தைப் பெற்ற பொழுது அவன் கைகள் நடுங்கின. உள்ளம் நார் நாராய்க் கிழிந்து அவனைச் சித்திரவதை செய்தது. கடமை என்ற நூற்பாலம் அறுந்துவிட அதலபாதாளத்தில் தலைகீழாகத் தான் விழுந்து கொண்டிருப்பது போன்ற உணர்ச்சியிலே அவன் கலகலத்துப் போனான்.

அடுத்த நாள் 'சகோதரி'யின் கணவனுக்கு அரசாங்கக் கடிதம் ஒன்றை அவன் கொண்டு சென்றான். சம்பளம் பணமாய் இருக்கலாம்.

அவனோ அதைத் திறந்துகூடப் பார்க்காமல் 'வேறு கடிதம் இல்லையா?' என்று ஆவலும் வேகமும் விழிகளிலே சுடர்விடச் சந்திரனைக் கேட்டான். சந்திரன் பதில் சொல்லவில்லை. கையை விரித்துவிட்டுத் திரும்பி வேகமாகச் சைக்கிள் பெடலை உதைத்தான்.

ஏமாற்றத்தோடு திரும்பிச் சென்ற ஆசிரியர் தனது குழந்தையின் முதுகிலே 'மொத்து மொத்து' என்று அகாரணமாக அடித்த சப்தமும் குழந்தையின் அலறலும் அவனுக்குக் கேட்கவேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று பல கடிதங்கள் வந்தன, கொழும்புக்காரியிடமிருந்து. அத்தனையும் 'தூய' காதலின் பரிசுகளையும், காணிக்கைகளையும், கண்ணீர்த் துளிகளையும் ஏந்தி வந்தன. தன்னால் இனியும் பொறுக்க முடியாதென்றும் தன் காதலன் அவனது விவாகத் தளையை அறுத்துக் கொண்டு தன்னிடமே நிரந்தரமாக வந்துவிடும் நாள் எப்பொழுது என்றும் அவள் கேட்டுக்கேட்டு எழுதினாள்,

சந்திரன் கடிதத்திற்குரியவனது முகத்திலே ஏமாற்றக் கரியை அள்ளிப் பூசி அவனை ஏங்க வைத்துவிட்டுக் கிரமமாகக் கடித தகனம் செய்து கொண்டிருந்தான்.

சாடைமாடையாக ஆசிரியரது வீட்டின் அமைதியின்மையும், அவனது குரூரமான நடத்தைகளும் சந்திரனுக்குத் தெரியவந்தன. ஆனாலும், சந்திரன் பயங்கர பொறுமையோடு இதயச் சித்திர வதையையுந் தாங்கிக் கொண்டு தனது தகன காரியத்தை விடாது நடத்தியே வந்தான்.

அன்று சந்திரனது இரண்டாவது திட்டம் செயற்படும் நாள். என்றும் இல்லாதது போல "மாஸ்டர்! நீங்கள் எதிர்பார்த்த கடிதம் இதோ" என்று அவன் ஆசிரியரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்த பொழுது வாயெல்லாம் பல்லாக முத்திரையின் சீலைக்கூடக் கவனிக்காது, ஆசிரியர் கடிதத்தை உடைத்த காட்சியைச் சந்திரன் இரசித்தபடி தனது உற்சாகத்தை மணி அடிப்பதில் காட்டியபடி விரைந்தான்.

'முட்டாள்! நான் கொழும்புக்காரியின் கையெழுத்திலே எழுதிய கடிதத்தை உண்மையென்று நம்பிவிட்டான். எல்லாம் நன்மைக்கே. இனி அந்தச் சாகசக்காரியை ஐயா திரும்பியும் பார்க்கமாட்டார். "என்னை மறந்துவிடுங்கள். நீங்கள் விடுமுறை கழிந்து திரும்பும் போது நான் ஸ்ரீமதி ஆக இருப்பேன்" என்று இருக்கும் போது வேறு என்ன தான் செய்வது?

சந்திரன் சிரித்தபடியே சைக்கிளில் ஒருநாளுமில்லாத பெரு நாளாய் விரைந்து சென்ற காட்சி பலருக்கும் வேடிக்கையாகவும், வியப்பாகவும் இருந்தது.

அன்று வெள்ளிக்கிழமை. நல்லூர் முருகன் சந்நிதியில் சந்திரனது 'சகோதரி'யும் கணவனும் 'பபா'வும் நின்று கும்பிட்ட வண்ணம் இருந்தனர். கண்களை மூடிப் பக்திபரவசனாய் நின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் கன்னங்களிலே வழிந்த நீரில் அவனது குடும்பத்தின் நல்வாழ்வு மலர்வதைக் கண்ட சந்திரன் முருகனை நோக்கிப் பின்வருமாறு வேண்டிக் கொண்டான்.

''நல்லூரானே! எனது கடமையைப் புறக்கணித்து எனது மானச சகோதரியின் வாழ்வில் ஒளியேற்றி வைத்தேன். ஆனால், இனியும் என் மனச்சாட்சியை ஏமாற்றமுடியாது. நான் செய்த பெரும் பிழைக்காக என்னையே தண்டித்துக் கொண்டேன். நான் இனித் தபாற்காரச் சாமியாரல்ல, வெறுஞ் சாமியார்தான்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்

எஸ். பொன்னுத்துரை

முகத்தார் என்றழைக்கப்படும் ஆறுமுகம் துயிலெழுவது ஒரு திருக்காட்சி. தலையணையையும் போர்வையையும் உட் திணித்துப் பாயைப் பக்குவமாகச் சுருட்டி வைப்பது ஒரு கலை. கொட்டாவியை மறைபொருளெதுவுமின்றி ஊளைவிட்டு, கைகளை நீட்டி மடக்கி, உடலை உலுப்பிச் சோம்பலை முறித் தால், துயிலெழு படலத்தின் ஓரம்சம் நிறைவுறும். தலைமாட்டில் நெருப்புப் பெட்டியும், தாவடிப் புகையிலைச் 'சுத்து'ம் எப் பொழுதும் தயாராக இருக்கும். 'சுத்தை' நேர்த்தியாகப் பற்ற வைத்தால், கால்கள் தம் இச்சையாகவே கொல்லைப் பக்கம் நடக்கத் தொடங்கும். எப்பொழுது தொடக்கம் வைகறை துயி லெழும் வழக்கத்தை வாலாயப்படுத்திக் கொண்டார் என்பது அவருக்கே ஞாபகமில்லாத சங்கதி.

அறுபது ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்துவிட்டார். கடிகாரத் தைப் பார்க்கிலும் நுணுக்கமான நேரக் கணக்கில் இயங்குவது அவருடைய இரத்தத்திலேயே ஊறியிருக்கின்றது. கொல்லை யிலே கழிவுக் கருமத்தை முடித்து, அடிக் கழுவி, கிணற்றடிக் கமுக மரத்திலே தொங்கும் குரும்பைப் பாதியிற் கிடக்கும் உமிக்கரி யினாற் பற்களைச் சுத்தஞ் செய்து, திண்ணைக்கு மீளுவர். 'இறப் பில்' தொங்கும் வெண் சங்கிலே கதிர்காமத்து விபூதி இருக்கும். வலக்கை விரல்களுக்குள் எடுத்து. ''சிவ... சிவா...'' என்று உச்சரிக்கும் பொழுது, நல்லூர்க் கந்தனின் உதயகாலப் பூசை மணி கேட்கும்.

இன்னும் ''சிவ... சிவா...'' என்று விபூதி பூசும் பொழுது, உதயகாலப் பூசை மணி கேட்கின்றது. கால ஓட்டத்திலே தரிக்காது நடைபெறும் நித்தியகருமங்கள்.

'இன்று வருடப் பிறப்பு...' முதன் முதலில் இந்த எண்ணந் தான் முகத்தாருக்கு ஏற்படுகின்றது. எத்தனையோ வருடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்புகள் வந்து போய்விட்டன. அவற்றுடன் எத்தனையோ வருடங்களும் ஓடி மறைந்து விட்டன. பார்வதிப்பிள்ளையைக் கல்யாணஞ் செய்த முதல் வருடம் வந்த வருடப்பிறப்பு; இராமேசுவர நேர்த்திக் கடனுக்குப் பிறகு சுப்பிரமணியனைப் பெற்று, முருகண்டியிலே மயிர்நீக்கக் கடன் செய்த மறு நாள் வந்த வருடப் பிறப்பு; சௌந்தரம் கல்யாணமாகி, மருமகனுடன் வந்த வருடப் பிறப்பு; தகப்பனுக்குத் தலைக் கொள்ளி வைத்து, கோடி கட்டாதே கழிந்த வருடப் பிறப்பு; பார்வதிப்பிள்ளை போய், நாளே காடாகிக் கிடந்த வருடப் பிறப்பு; - இப்படிப் பல, கால ஓட்டம் அவர்தம் உழைப்பை விழுங்கி, உடலைச் சருகாக்கி விட்டது. முன்னர் போல சுறுசுறுப்பில்லை. நல்லெண்ணெய்யில் வெதுப்பிய கத்தரிக் காயுடன் மூன்று நீற்றுப் பெட்டி பிட்டுச் சாப்பிட்டும், நாலு மரவள்ளிக்கிழங்கைச் சுட்டுப் பச்சைமிளகாய் சகிதம் போட்டுக் கொண்டாற்றான் காலைப் பசி அடங்கும் என்பன இளைஞப் பருவ நினைவுகள். பிள்ளைகளைப் படிக்க வைத்து உத்தியோகக் காரராக்கியதினால் இரண்டு பாண் துண்டுகளைக் 'கொறி'க்கும் பழக்கம் முகத்தார் வீட்டிலும் பரவி விட்டது. படுத்த படுக்கையாக வைக்கும்படியாக உடம்பிற்கு அப்படியொன்றுமில்லை. முதுமை உணர்வு வலுக்கின்றது. சிறிது வாதக்குணம் போன்ற எண்ணமும் மேலிடுகின்றது. திடீரெனக் குந்தி எழும்பச் சிரமப்படுகின்றார். இதனைப் பிள்ளைகள் அறிந்து கொள்ளாத வகையில் நடந்து கொள்ளுகின்றார். கடைக்குட்டி மகளைப் பற்றித்தான் கொஞ்சம் கவலை.

திண்ணையிற் குந்தி, கப்புடன் சாய்ந்து கொள்கின்றார்.

'அவள் பொடிச்சிதான் பாவம், தாயத்தின்னியாப் போயிட்டுது. படிப்பை முடிச்சுப் போட்டு, மூலையிலே கிடந்து பெருமூச்சு விடுகுது. அவளை மேலை படிக்க வைக்கலாமெண்டு மூத்ததுகள் விரும்பினதுதான். வேணுமெண்டால், உதுகளின்ரை பொம்பிளைப் பிள்ளையள் படிச்சு உத்தியோகம் பாக்கட்டும். இளையவனின்ரை பாடு பிழையில்லை. ஒரு மாதிரி ஒரு வேலையிலை கொழுவீட்டான். ஏதோ கொம்பனியிலை தான் வேலையாம். ஆனா, சம்பளம் புழையில்லை. மேலுக்கு நல்லா வரலாமெண்டு மூத்தவனும் மச்சான்மாரும் சொன்னாங்கள். அவன் கடைக்குட்டி எண்டு வீட்டோடை இருந்து சாப்பிட்டுப் பழகியவன். மூண்டு நாலு மாசம் அதுவுமில்லை. கயிற்றப்பட்டு வாழ்ந்தால் தானே, பேந்து பின்னடிக்குத் தங்கடை பாடுகளைத் தாங்களே பாக்குங்கள். நல்லூரான்ரை புண்ணியத்திலை எல்லாம் தங்கடை சீவியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகளைப் பாக்கக் கூடிய நிலைக்கு வந்துட்டுதுகள். என்ரை கெட்டித்தனம் என்ன இருக்கு? ஆண்டவன் அளந்தபடி நடக்குது... விடியப்புறக் கோச்சியிலே மூத்தவன் வருவான். அவன் மறந்தாலும் அலுத்தாலும் அவன்ரை மனுஷி கமலா இஞ்சை வராமலிருக்காள். என்னெட்டைக் கைவியளம் வாங்கிறதிலை அவளுக்கு அவ்வளவு நம்பிக்கை... ஒம்.....அதுகளின்ரை மூத்துக்கும் - உந்தப் புது நாணயப் பேர் சட்டெண்டு மனசிலை வாறேல்லை.... அவள்தான் அம்சதொனிக்குப் பத்து வயசுக்கு மேலை இருக்க வேணும்..... என்ன பத்து? பதினொண்டுக்கு மேலை. கடுக்கண்ணுற பருவம்... ஓ, இவ போயே நேற்றெண்டாப் போலை இருக்குது..... ஆனா, வருசம் அஞ்சாகுது. அவள் புண்ணியஞ் செய்தவள். எல்லாப் பாரத்தையும் என்ரை தலையிலை சுமத்திப்போட்டுப் போயிட்டாள்.'

இடைவெட்டில், மனோகரன் நேற்று எழுதியிருந்த கடிதம் முகத்தாருடைய ஞாபகத்துக்கு வருகின்றது. வருடப்பிறப்பன்றே கொழும்புக்குத் திரும்பிவிட வேண்டுமென்று எழுதியிருந்தான்.

'அதுவும் சரிதான். எங்கடை வாகடங்கள் நெடுகச் சரி வருமே? இப்ப தான் போய் வேலையிலை சேந்திருக்கிறான். லீவு கீவு எடுத்துப் பழுதாக்கப்படாது.'

''அப்பனே முருகா''

வீட்டின் சின்ன அறைக்கதவு திறக்கப்படுகின்றது. 'கடைக்குட்டி' பத்மாதான் வருகிறாள்.

'என்னதான் பேரளவிலை பெரிய பிள்ளை எண்டாலும், வீட்டிலே சின்னப்பிள்ளை தானே? சரியா, இவ பார்வதிப்பிள்ளையை உரிச்சு வைச்ச மாதிரி இருக்கிறாள். இவளை ஒப்பேத்திப் போட்டனெண்டால், பேந்தென்ன? சிவனே எண்டு கண்ணை மூடலாம். இவன் மனோகரனை இவ்வின்ரை அண்ணரின்ரை பொடிச்சிக்குத்தான். பெடியங்களின்ரை காரியத்தை நிதானமாச் சொல்லேலா.'

முதற் காரியமாகப் பத்மா வீட்டு முற்றத்தைக் கூட்டி, சாணகத் தண்ணீர் தெளிந்து முடிக்கின்றாள். வருடப் பிறப்பன்று விடியும் முன்னரே, அன்றைய வழமையான கடமைகளைச் செய்து முடிக்கும் வேட்கை. வருடப் பிறப்பன்று எல்லாக் காரியங்களையும் விக்கனமன்றி உரிய முறைப்படி நிறைவேற்றிவிட்டால், வருடம் முழுவதும் அவ்வாறே அமையுமென்னும் நம்பிக்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊறித் திளைத்த மனம். வருடப் பிறப்பன்று பழங்கறிகளுக்கு மதிப்பில்லை. கறிச் சட்டிகளை அடுக்களைக்கு வெளியே, இடப் பக்கமாகவுள்ள செவ்விளநீர்க் கன்றடியிற் பரப்பி வைத்து, சாம்பல் தோய்த்தெடுக்கப்படும் 'பொச்சு' மட்டையாற் தேய்த்துக் கழுவத் தொடங்குகின்றாள். திண்ணையிலே குந்தியிருந்து, சிந்தனையி லாழ்ந்திருக்கும் தந்தையை அவள் கண்கள் கவனிக்கின்றன. மரவள்ளிக்கிழங்கு காய்ச்சிய சட்டியில் அடிப்பிடித்திருந்த பாகத் தைப் பொச்சு மட்டையால் நன்றாகச் சுரண்டிக் கொண்டே பேச்சுக் கொடுக்கின்றாள்.

''என்ன அப்பு..... இண்டைக்கு காலமைக் கோச்சியிலை மூத்தண்ணர் வருவாரல்லே? ''

''ஓம் புள்ளை, சுப்பிரமணியம் வராமல் வருஷம் பிறக் குமே? என்னதான் இருந்தாலும் அவன் வருஷத்துக்கு வராமல் இருப்பானே? ''

'எப்பிடியும் அவன் வருவான். காதுப் பிடியிலை கமலா கூட்டியந்திடுவாள். கோச்சி இன்னும் நாவற்குழியைத் தாண்டி யிருக்காது. இப்ப நடக்கத் துவங்கினாலும், நேரத்தோடை ஸ்ரே ஷனுக்குப் போயிடலாம். ஆனா, அவனுக்கு உதொண்டும் புடிக்கிறேல்லை. ''நான் எங்கடை வீட்டுக்கு வாறதுக்கு ஆரும் வந்து வழிகாட்டத் தேவையில்லை'' எண்டு எத்தினை கோசு கோவிச்சது எனக்கல்லோ தெரியும்?....,

''புள்ளை, தேத்தண்ணிக்கு உலை வைக்கல்லையே?''

''வைச்சிட்டன்''

''கொக்கா பரிமளம் இன்னும் எழும்பல்லையே?... உங்கடை அத்தாரும் வலு நேரஞ்செண்டுதான் வந்தவர். சரியாச் சாப்பிட்டிருக் கவும் மாட்டார்.''

முகத்தாரின் இன்னொரு மகளான பரிமளத்தின் கணவனும் கொழும்பிலேதான வேலை பார்க்கின்றான். பரிமளம் தைப்பொங் கலுக்குத் தந்தையின் வீட்டிற்கு வந்தவள், திரும்பிப் போக வில்லை. கணவன் சதாசிவம் நேற்றிரவு யாழ்தேவியிலே தான் திரும்பியிருக்கிறான்.

'பாவம், அதுகளுக்கு ஆண்டவன் ஒண்டும் குறை வைக் கேல்லை. இதுக்கிடையிலை முப்பதினாயிரம் கொட்டி புது மோடி யிலை ஒரு வீடும் கட்டிப் போட்டுதுகள். கதைச் சாங்கத்திலை வைகாசி நாளுக்குத்தான் குடியேறுவினம் போலை கிடக்குது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேந்தென்ன நெடுகிலும் குடியிருக்கப் போகினமோ? வாடகைக்குத் தான் விடுவினம். காரும் ஒண்டு வாங்கியிருக்கினமாம். அதை இன்னும் ஒருநாளும் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரல்லை. அதுகளின்ரை அன்புக்கும் அந்நியோன்யத்துக்கும் ஒரு குழந்தையைத் தான் ஆண்டவன் குடுக்கேல்லை. சாதகத்திலை பின்னடிச் சந்ததி விருத்தி எண்டுதான் இருக்கு. ஏழு வருஷத்துக்குப் புறகுதான் சதாசிவமும் தலைச்சனாப் பிறந்தவனாம். கொழும்பிலை பேர்போன டாக்குத்தரிட்டை எல்லாம் காட்டினவை. அதுகளுக்கு ஒரு குறையுமில்லை எண்டுதான் சொன்னவையாம்...

''கோப்பியை ஆர்றதுக்கிடையிலை குடியுங்கோ அப்பு'' என்று பத்மா கோப்பி கிளாஸை நீட்டுகிறாள்.

''என்ன புள்ளை, முட்டைக்கோப்பி அடிச்சிருக்கிறாய். அத்தாரும் நிக்கிறார். இப்ப சுப்பிரமணியமும் வந்திடுவான்..... அவன்ரை அசோகன் முட்டைக் கள்ளனல்லே?''

''இஞ்சை தாராளமா முட்டையள் இருக்குது. புட்டுக்கும் பொரிச்சும் வைக்கலாம்.''

முகத்தார் கோப்பியைக் குடிக்கின்றார்.

''மெய்ய புள்ளை.... கொக்கா சௌந்தரம் இஞ்சை நேத்து வந்திட்டுப் போனவளல்லே? என்ன சொல்லிப் போட்டுப் போனவள்? மத்தியானச் சாப்பாட்டிற்கு வருவாளாமோ?''

''அத்தான் நேத்துத்தான் வந்தவராம். அவரின்ரை சகோதரி - அவைதான் பறங்கித் தெருவார் - மத்தியானச் சாப்பாட்டுக்கு வீட்டை வருவினமாம். பின்னேரம் போலை தான் வரவசதிப்படும் எண்டுசொன்னவ. எதுக்கும் கைவியளத்துக்கு முகுந்தனை அனுப்பி வைக்கிறாவாம்.''

சௌந்தரம் பெரிய குடும்பக்காரிதான். இருந்தாலும் சீமாட்டி ஒரு சீதேவி. ஆறு பஞ்சானும் குஞ்சுகளையும் ஒரு குறையுமில்லாமல் படிப்பிக்கிறாள். ஏதோ ஆனைசேனையையே சீதனமாகக் குடுத்தனான்? புருஷன் தங்கராசா உண்மையிலை ஒரு தருமராசா தான். புள்ளையனின்ரை படிப்புக்காக குடும்பத்தை ஊரோடை விட்டிட்டுப் போயிட்டான். அங்கை கடைச் சாப்பாட்டோடை வயித்தை வாயைக் கட்டிச் சீவிக்கிறான். அங்கையும் இங்கையுமாக ரெண்டு சிலவுகளைச் சமாளிக்கிறதுக்கு கந்தோர் விட்டாப்புறகு வேற வேலயளையும் பாக்கிறதாம். அந்தந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயசிலை ஓடியாடிப் பிராயாசைப்பட்டு உழைச்சு சம்பாதிக்கத்தான் வேணும். அதுக்கு ஏத்த சாப்பாடு வேண்டாமே? நல்ல வேளை.... பெட்டையள் கீழக்கண்டுகள் தான். அந்த அளவிலை ஒரு ஆறுதல்.... வந்தவனுக்கு ரெண்டு வேளை தன்ரை கையாலை சமைச்சுக் குடுக்காமல் இஞ்சை ஓடியாறாளோ? பொம்பிளைப் புள்ளையள் கரை சேருமட்டுந்தான் எங்கடை...'

''என்ரை மடிசஞ்சையும் சால்வையையும் எடுத்துத்தா புள்ளை.''

''இவ்வளவு வெள்ளணத்தோடை கடைக்குப் போகப் போறியளே? ''

''இல்லை, உந்த முச்சந்திமட்டும் போயிட்டு வாறன். தச் சேலா ஏதேன் அரியது நரியது கிடைச்சால்....''

சாறணை உதறிக் கட்டிக்கொண்டு, 'மடிசஞ்சை' இடுப்பிலே சொருகி, ஏகாவடமிடச் சால்வையை எறிந்து படலையைக் கடக்கிறார்.

ரோஜா இதழ்ப் படுக்கையான மென்மைசேர் நினைவுகளில், ஏதோ ஒரு முள்ளின் உறுத்தல், கால்களின் இயக்கத்திலேயே படரும் நடை. சந்திக்கடைப் பசுபதியின் குரல் அவரைக் கடைப் பக்கம் ஆகர்ஷிக்கின்றது.

''எப்பிடி அண்ணர்? வருஷம் எத்தினை மணிக்குப் பிறக்கு தாம்? கைவியளம், நாள்வேலைக்கு நேரம் எப்பிடிப் போட் டிருக்கு?'' பத்துப் பேரிடம் கேட்டும் பசுபதிக்குப் பொச்சந் தீரவில்லை.

''பத்து இருபத்தெட்டுக்குத் தான் வருஷம் பிறக்குது. கைவியளத்துக்கு இண்டைக்கு நாள் போடேல்லை. ஆனா, பொதுநாள். உடனையே குடுத்தாலும் பாதகமில்லை.''

முகத்தார் பஞ்சாங்கம் பார்த்து வைப்பதில் வெகு ஒழுங்கு. கடிகாரம் பார்க்கும் பழக்கமில்லாத அவர், எந்தச் சுபவேளையை யும் விநாடி தப்பாமற் சொல்லுவார்.

''நான் ஒரு நாளும் இந்த நேரம் காலம் பாத்துக் கொண் டிருக்கிறேல்ல.... வருஷம் பிறப்பண்டைக்கே துவங்கீட்டால் சரிதானே? இல்லாட்டில் இழுவல். ரெண்டு: மூண்டு நாளைக்கும் நாள் போடமாட்டாங்கள்.... அதுக்காகக் கடையைப் பூட்டி வைக்கிறதே? ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓமோம்..... எல்லாம் நம்பிக்கையைப் பொறுத்தது தான் பசுபதி'' என்ற முகத்தார், ''கோச்சி இன்னும் வரேல்லைப் போலை'' என வேறு திசையிற் கதையைத் திருப்புகின்றார்.

''நேரமாயிட்டுது.... வருஷத்துக்கு இஞ்சினை வாற சனக் கூட்டத்தோடை வாற ரயில் கொஞ்சம் முந்திப் பிந்தித்தான் வந்து சேரும். உங்கடை மற்ற மேன் குமாரசாமியும் இண்டைக்கு வாறார் போலை இருக்குது. தம்பியும் இஞ்சாலைப் பக்கம் வந்து வெகு காலமாப் போச்சுது.''

நெஞ்சிற் குத்திக்கொண்டிருந்த முள், ரோஜா இதழ்ப் படுக் கைக்குள் இனிதாக மறைகின்றது.

குமாரசாமி வருவான் என்பது முகத்தாருக்குத் தெரியாது. அவனை எந்த விசேடத்திற்கும் வீட்டில் யாருமே எதிர் பார்ப்ப தில்லை. அவனுடைய போக்கு அப்படி. இருப்பினும், குமாரசாமி வருவது தனக்குப் புதினம் என்பதை முகத்தார் வெளியே காட்டிக் கொள்ள வில்லை.

''இஞ்சை பாத்தியளே நோட்டீசை, முத்தமிழ் மன்றம் வருஷக் கொண்டாட்டம் நடத்துதாம். நாடகங்களும் நடத்துறாங் களாம், அதுகளுக்குத் தலைமை தாங்க குமாரசாமி வருகுதாம்.''

பசுபதி நோட்டீசைக் கொடுக்கின்றான்.

இப்பொழுது முகத்தாருக்குக் கண் கொஞ்சம் வெள் ளெழுத்து. ஆனாலும் கொட்டை எழுத்தில் அச்சடிக்கப்பட்டுள்ள மகனுடைய பெயரைக் கண்டு பிடிக்கின்றார். மனம் மலர்கின்றது. முகபாவம் மாறாமல் நோட்டீசைத் திருப்பிக் கொடுக்கின்றார்.

''கண்ணும் புகைச்சலாய்க் கிடக்குது.''

''நான் வாசிச்சுக் காட்டட்டே...?''

''வேண்டாம் பசுபதி. நான் வாறன். மூத்தவன் போறான் போலை இருக்குது காரிலை.''

மூத்தவனைச் சொல்லி விடை பெற்றுக் கொண்டாலும் முகத்தாருக்குக் குமாரசாமியைப் பற்றிய எண்ணமே மேலோங்கி யிருக்கின்றது. குமாரசாமி முகத்தாரின் இரண்டாவது புத்திரன். சிறுவயதிலேயே படித்து முன்னுக்கு வந்து கொண்டிருந்தான்.

'அவன்ரை மூளைக்கு அவள் உப்புடியே இருக்க வேணும்? சீமைப்படிப்பெல்லாம் முடிச்சு, ரெண்டு மூண்டு காரும் நாலைஞ்சு பங்களாவும் வைச்சல்லோ வாழவேணும்? அந்தக் காலத்திலை கண்ணூறுபட்டுப் போறாப்போலை சொல்லுவானுகள். சுப்பிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியனைச் சாட்டி சௌந்தரத்துக்கு மாப்பிள்ளை; குமாரசாமியைக் காட்டி பரிமளத்துக்கு மாப்பிள்ளை....'

அதே நாக்குகள் திசை திரும்பி, அவரை மல்லாத்திக் கிடத்திக் குறி சுட்டபொழுது.....

'பிஞ்சிலை பழுத்தவன். தமையன் இருக்கக்கூடியதாக, ரெண்டு குமருகள் வீட்டுக்குள்ளை பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கக் கூடியதாக, இவனுக்குக் கலியாணப் பைத்தியம்..... அதுவும் ஊர் பேர் தெரியாத வேதக்காரிச்சியாம்..... தூ, இவன்ரை படிப்பு நாக்கு வழிக்கத்தான் உதவும், இவன் தன்ரை படிப்பை தூக்கி எறிஞ்சு போட்டு கக்கூசு வாளியைத் தூக்கித் திரியட்டும்...'

இத்தகைய வார்த்தைகள் மார்பு மயிரைப் பொசுக்கி, இதயக் குலையை வெதுப்பியெடுத்த பொழுது.... குறுக்கு இழைகளைத் தறி தலையிலே மின்சார வேகத்தில் இணைக்கின்றன. சின்னத் தலையிடிக்கும், காய்ச்சலுக்குங் கூட சீனிச் சுருளும், தேயிலைச் சரையும், வெற்றிலை பாக்குப் பெட்டியுங் 'காவி'க் கொண்டு வந்தவர்கள். குமாரசாமியின் அவசரக் கலியாணத்தின் பின்னர், முகத்தார் வீட்டுப் படலையைத் திறக்க முகஞ் சுழித்துக் கூசினார்கள். அப்பொழுது சுப்பிரமணியம் எல்லாவற்றிற்கும் ஆறுதலாக இருந்துங்கூட, முகத்தார் இந்தப் பென்னம் பெரிய உலகத்திலே தன்னந் தனியாக விடப்பட்ட உணர்வுகளுடன் தத்தளித்தார்.

'நானோ, அவனோ என்னத்தைச் செய்கிறது? எல்லாம் அளந்தபடிதான் நடக்கும். அவன் தான் ஒரு புத்தியிலை செய்திட்டான். இனி, விரலை வெட்டியே எறியிறது? வெக்கம் ரோஷத்தை விட்டிட்டு ஒருக்காப் போய் அதுகளைப் பாத்தன், அவள் பொடிச்சி புழையில்லை. குணவதி எண்டதை முகத்தைப் பார்த்தோடனை சொல்லுவினம். இவன்ரை குணத்துக்கு அவளிலை தான் பச்சம் வைக்கவேணும். வேதக்காரிச்சி எண்டாப் போலை என்ன? சாதி குலம் பார்த்துக் கூழ்ப்பானைக்கை விழுந்தவை எத்தனை பேர் இருக்கினம்? இவன் எண்டாப்போலை ஒழுங்காக கோயில் குளம் போறவனே? விபூதி பூசுறவனே? அவள் பொடிச்சியையும் கோயிலுக்குப் போகாமல் மறிச்சுப் போட்டானாம், அவனுக்கு உடம்பு மட்டும் பயித்தங்காய் போலை. ஆனா, உடும்மைப் போலைத்தான் பிடிவாதம். இவ பார்வதிப் பிள்ளை எண்டாப்போல குறைஞ்ச பிடிவாதக்காரியோ?... அவன்ரை போக்கு ஒரு தனிப் போக்கு. இஞ்ச ஒருத்தருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிறேல்லை. "உங்கை யாழ்ப்பாணத்துக் கிடுகு வேலியளாலை சங்கையை மறைச்சுக் கொண்டு மனச் சாட்சிக்கு விரோதமாக நடித்துக் கொண்டே வாழ்பவருக்கு என்ரை போக்கு விளங்காது. என்ரை போக்கு எனக்கு விளங்கும்" எண்டு ஒரு நாள் உங்கினை சத்தம் போட்டான். இதுகளிலையும் புழையில்லை. ஒட்டி நடக் காதவனோடை என்ன சகவாசம் எண்டு விலகிக் கொண்டுதுகள். புறம்பு காட்டி நடக்கிற உவையளோடை எனக்கென்ன தொடர்சல் எண்டு அவனும் விலகிக் கொண்டான். அவன்ரை மூண்டு பிள்ளையளும் படிப்பிலை வலு விண்ணராம். எனக் கொண்டா அதுகளைப் பார்க்க ஆசைத்தான். இவவின்ரை ஆண்டுத் திவசத் துக்குத்தான் ஒரு பொடியனைக் கூட்டியந்தான். 'அப்பப்பா' எண்டு அவன் வாழைப்பழத்தோடை என்ரை மடியைவிட்டு இறங்கவும் மாட்டான். பொங்கல் - புதுவருஷம் - தீபாவளி எண்டு மூண்டு கொண்டாட்டம் வருகுது. ஒண்டுக்கும் வாறேல்லை. எப்பவாவது இருந்திட்டு ஒருநாள் தனியா வருவான். புள்ளையளின்ரை சுக பலனைப் பற்றிச் சளப்புவான். குசினிக்கை போய் தானே ஏதாவது போட்டுத் தின்னுவான். அங்கை கூட்டம் இஞ்சை கூட்டம் எண்டு சொல்லுவான். உடனையே போயிடுவான், பேந்து விசாரிச்சுப் பாத்தால் அண்டைய கோச்சியிலையே ஊருக்குத் திரும்பீட்டான் எண்டு தெரியவரும்..... மெய்தான். அவன்ரை போக்கு இஞ்சை ஒருத்தருக்கும் விளங்கேல்லை. அதோடை அந்தப் போக்கிலை ஒருத்தருக்கும் விருப்பமில்லை. ஒரு மாதிரியான கோபத் தனல் இவையளின்ரை மனங்களிலை இருக்குது. என்ன இருந்தாலும் சகோதர பாசம் எண்ட சாம்பல் அதுகளை மூடி வைச்சிருக்குது. வீட்டிலை எல்லாரும் அவனைக் குறையாத்தான் பேசுவினம். நான் மட்டுந்தான் அவன்ரை பக்கத்திலை பேசுகிறது. என்ன இருந்தாலும் அவனும் என்ரை மேன்தானே? இதுகள் இதுகளின்ரை போக்கு. அவன் அவன்ரை போக்கு. கையிலே இருக்கிற அஞ்சு விரலும் சமமே? ஒண்டுக் கொண்டு வித்தியாசமில்லையே? வீட்டுக்குள்ளை யும் உப்புடித்தான்.... ஊருக்குள்ளை அவனுக்குத் தானே பேரும் நடப்பும்? அவன் இவ்வளவு உதவரங் கெட்டவனனெண்டால் ஊரிலை உப்புடிப் பேர் இருக்குமே? இதுகளுக்குப் படிச்சும் புத்தியில்லை, இவங்களைக் குடும்பத்துக்காகப் பெத்தன். குடும்பம் தேர் போலை நடக்குது. அவனை ஊருக்காகப் பெத்தன். அவன் றோட்டளக்கிறான் எண்டு வைச்சுக் கொள்ளுவம். அதுக்காக அவனை நான் மெச்சிக் கதைக்கிறதும் இதுகளுக்குச் சில நேரம் புடிக்கிறேல்லை. ஓரவஞ்சக மனுஷன் எண்டு கூட நினைக்குதுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்கள் என்னத்தைத்தான் சொன்னாலும், அவனும் என்ரை புள்ளைதான்'' எண்டு சொல்லுவன். இதுகளும் பேக்கூத்துத்தான் ஆடுகிறது. ஏதோ நான் அவன் தான் என்ரை புள்ளை எண்டு சொல்லிப்போட்டதைப் போலை. தாய் மனம் பித்துத்தான், இவவும் இப்ப இல்லை. என்ரை மனமும் பித்துத்தான். இது ஒண்டை மட்டும் நான் குமாரசாமியைப் பற்றி மறக்க மாட்டன். இவையள் ஆயிரத்தைச் சொல்லட்டும். சுப்பிரமணியமா இருக்கட்டும்; சவுந்தரம் பரிமளமாக இருக்கட்டும்; மனோகரன் - பத்மாவாக இருக்கட்டும் ; - முகத்தார் ஆறுமுகத்தின்ரை புள்ளைய ளெண்டு தான் ஊர்தேசத்திலை தெரியும்..... ஏன், சதாசிவம் தங்கராசா எண்டாப் போலை என்ன? என்ரை மருமக்கள் எண்டாத் தான் நல்ல விளப்பமாகத் தெரியும். ஆனா, கடைத் தெருவிலை எத்தினை பேருக்கு என்னைக் குமாரசாமியின்ரை அப்பனெண்டு தான் தெரியுமெண்டு இவையளுக்குத் தெரியுமே? அண்டைக்கு பஸ்ஸிலை நான் தெல்லிப்பழைக்குப் போகேக்கிள்ளை ஒரு பொடியன் ''நீங்கள் குமாரசாமியின்ரை தகப்பனல்லோ?'' எண்டு கேட்டுப் போட்டு, தான் குந்தியிருந்த இடத்தை எனக்குத்தாறான். அந்தப் பொடியனும் பெரிய படிப்புத் தானாக்கும்.'

''என்ன முகத்தார்? என்ன பொடியள் எல்லாம் வந்திட்டினமோ?'' ஐயம்பிள்ளை தன்னுடைய படலையில் நின்றபடி குரல் கொடுக்கிறார்.

''கோச்சி அப்பவே வந்திருக்கவேணும்.''

''சுப்பிரமணியம் வராமல் நிற்க மாட்டான். மனோகானும் வாறானாமோ?''

''ஓம், கடுதாசி போட்டிருந்தான்.''

''படலையிலை நிண்டுகதைக்கிறியள்? கடைக்குப் போற துக்கு முந்திக் கொஞ்சம் பாவிச்சிட்டுப் போகலா மெண்டால்..... என்ரை மனுஷியைத் தெரியாதே? ஆற்றையேன் சாட்டிலை தான்.....உள்ளுக்கை வாருங்கோவன்''

''இப்ப வாதக்குணமாகவும் இருக்குது. ஒத்துக் கொள்ளுது மில்லை.''

''இது நித்தமே முகத்தார்? ஒரு வருஷம் பெருநாளுக்குத் தானே? உங்களைத் தூரத்திலை கண்டோடனையே, உங்க ளோடைதான் வருஷத்தைத் துவங்க வேணுமெண்டு ஆசை வந்திட்டுது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் தான் உன்ரை ஆசையையும் கெடுப்பான்?"

முகத்தார் ஐயம்பிள்ளையுடன் கொஞ்சம் 'மூஸ்பாத்தி' பண்ணி விட்டு, அவருடனேயே கடைக்குச் சென்று, மக்கள்-பேரப்பிள்ளைகள் ஆகிய சகலருக்கும் இதமாகக் கறி - காய்கறி - பழவகைகள் வாங்கிக் கொண்டு வீடு திரும்பும் பொழுது பத்து மணியாகிவிட்டது.

ஃ ஃ ஃ

வீடு கலகலப்பு நிறைந்து காணப்படுகின்றது. சுப்பிரமணியமும் குடும்பமும் வந்தால் சத்தத்திற்குக் குறைவில்லை. பிள்ளைகள் புத்தாடை புனைந்து காணப்படுகின்றார்கள்.

'ஐயம்பிள்ளையோடை மினக்கட்டு நான் தான் நேரம் பிந்தீட்டன் போலை கிடக்குது. சுப்பிரமணியம் எல்லாப் புள்ளைகளுக்கும் ஒரு நிறத்திலைதான் உடுப்புகள் வாங்கியிருக்கிறான்... இஞ்சை பாருங்கோவன் இவன் கடைக்குட்டி தன்ரை சட்டை தான் திறமெண்டு சண்டை பிடிக்கிறதை... ஓ, பரிமளமும் சதாசிவமும் கூட முழுகீட்டினம். உந்த உடுப்புகள் சரியான விலையாம். வருஷப்பிறப்புக்கு நெடுகிலும் உவை உப்புடித்தான் எடுக்கிறவை. கோயிலுக்குப் போகப் புறப்பட்டு நிற்கினை போலை. நல்லூரானே இதுகளுக்கு ஒரு புள்ளைப்பாக்கியத்தைக் குடு... சே, கண்ணூறு பட்டிடப் பிடாது.... பத்மாவுக்கு உந்தச் சீலை வடிவாத் தான் கிடக்குது. சாமத்திய வீட்டுக்குள்ளை சீலையோடு பாத்துக்கு இப்பதான் சந்தனக்கலர் நிறத்திலை தனக்கொரு சீலை வாங்கியர வேண்டும் எண்டு மனோகரனுக்கு எழுதினவள். அவன் தான் வாங்கியந்திருக்க வேணும்... இன்னும் சுப்பிரமணியமும் கமலாவும் முழுகி முடிக்கேல்லைப் போலை..... உங்கை கிணத்தடியிலை நிக்கினம்.'

"புள்ளை பத்மா! இத்தக் கறிசாமான்களைக் கொண்டுபோய் குசுனீக்கை வை."

"அப்பு காலைச் சாப்பாடும் இல்லாமலே கடைக்குப் போனவர்? நீங்கள் வருவியளெண்டு முட்டையும் பொரிச்சுக் காத்திருந்தது தான் மிச்சம்."

"அவன் ஐயம்பிள்ளை விடேல்லை. அவனோடை அப்படியே கடைக்குப் போனதும் நல்லதாப் போச்சுது. சவ்வு கிவ்வு இல்லாத நல்ல இறைச்சி கிடைச்சுது. சின்னதுகள் உறைப்புத் தின்னாயினம். பால்கறி வைக்க ஈரல் கிடைச்சுது. கொத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைச்சி வகை தின்னாதவர். நல்லதொரு பாரை கிடைச்சுது. மிச்சம் பொரியலுக்கும் உதவும். கைவியளத்தை முடிச்சிட்டுப் போயிருந் தால் கடையிலை ஒரு மண்ணும் வாங்கியிருக்கேலாது.''

''அப்புவுக்கு இந்த வருஷப்பிறப்பு நல்ல முழுவியளத் தோடை துவங்கியிருக்குது.'' என்று சொல்லிக் கொண்டே, பெரிய உமலைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு அடுக் களைப் பக்கம் பத்மா போகின்றாள்.

''இந்த வேட்டிதான் பெத்தப்பாவுக்கு'' என்று கூறிக் கொண்டே 'பீஸ்' வேட்டி ஒன்றை 'ரீப்போ'வில் அசோகன் வைக்கின்றான். ''சித்தப்பாவும் அப்பாவுக்குக் கரை போட்ட வேட்டி ஒண்டு வாங்கியந்தவர்'' என்பதையும் அறிவிக்கின்றான். எவ்வளவோ தடுத்தும் பரிமளம் கேட்கவில்லை. அவள் நேற்றே 'பரமாஸ்' சோடி ஒன்று எடுத்துக் கொடுத்துவிட்டாள். தான் முன்னர் கொண்டுவந்த வேட்டியுடன் பெத்தப்பாவின் மற்றைய உடுப்புக்களையுங் கொண்டு வந்து அடுக்கி ''டோய், பெத்தப்பா வுக்கு இந்த முறை நாலு புது வேட்டி'' என்று உரக்கக் கத்தினான்.

''மூன்று வேட்டிதானே? ஒன்று சால்வையல்லோ?' என்று மூலையில் நின்று மூத்தவள் ஹம்ஸதொனி திருத்துகின்றாள்.

''வீண் சிலவு. எவ்வளவு சொன்னாலும் கேக்க மாட்டுதுகள். அதுகளுக்கு ஏதோ செய்யவேணுமெண்ட ஆசை. வீட்டோடை நிக்கேக்கிள்ளை உதெல்லாத்தையும் மனோகரன்தான் உடுத்துக் கிழிப்பான். இப்ப அவருமல்லோ எடுத்துத் தரத் துவங்கியிருக் கிறார். இதுகளை இனி உடுத்துக் கிழிக்கிறதற்கு சௌந்தரத்தின்ரை மூத்தவன் முகுந்தன்தான் இருக்கிறான். அவனும் இந்த மார்கழி யிலை சீனியர் சோதினை எடுக்கப் போறானாக்கும்.'

ஈரச் சீலையுடன் கமலா பெரிய அறைக்குள் ஓடுகிறாள். முற்றத்தில் கம்பிக்கொடிக்குப் பக்கத்தில் நின்று தலையைத் துவட்டிக் கொண்டிருந்த சுப்பிரமணியம், ''மருத்துநீர் அந்தா கிணத்துக் கட்டிலை இருக்குது. போய்க் குளிச்சிட்டு வாருங்கோ அப்பு'' என்கிறான்.

''என்ன அவசரம்? மனோகரனும் முழுகீட்டு விடட்டன். எங்கை அவனைக் காணேல்லை?''

''உதுகள் ஏதோ ஐஸ்கிறீம் வேணும் சீனிச் சித்தப்பா எண் டதுகள். அவன் வாங்கப் போயிட்டான் போலை கிடக்குது. அவன் ஆறுதலாகக் குளிக்கட்டும். நீங்கள் முதலிலை குளியுங்கோ; வருஷம் பிறக்கப் போகுது, கும்பம் வைக்கவல்லோ வேணும்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓமோம்.'' முகத்தார் கிணற்றடிக்குப் போகின்றார். கட்டியிருக்குஞ் சாறத்துடன் குளிப்பது அவருடைய வழக்கம். 'சனி நீராடு' என்று வாரத்திற்கு ஒரு முறை; மூன்று பெருநாள் நீராட்டம் பிரத்தியேகமாக வந்து சேரும். தலையிலே மருத்துநீரை வைத்து நன்றாகத் தப்புகின்றார்.

''சித்தப்பா, சித்தப்பா'' என்று அசோகன் ஆர்ப்பரிக்கிறான்.

'குமாரசாமி வந்திட்டானோ?''

ஆசையுடன் எட்டிப் பார்க்கிறார். தொட்டாச் சுருங்கி இலை கள் கூம்புகின்றன.

'இல்லை, அவன் மனோகரன்தான். மூண்டு நாலு மாசத் திலை கொஞ்சம் வளந்திருக்கிறான். சொந்தமாச் சம்பாரிக்கத் துவங்கீட்டால் கொஞ்சம் பூரிப்புத்தானே? நல்ல தாராளமாகச் சிலவழிக்கிறார். ஓம், போய்க் கொஞ்ச மாசந்தானே? இன்னும் கொழும்புப் பழக்கங்கள் நல்லாப் புடிபடேல்லைப் போலை... குமாரசாமியை இன்னும் காணேல்லை. சிலவேளை, நல்ல நாளும் பெருநாளுமா எல்லாரும் கொண்டாட்டத்திலை நிக்கேக்கிள்ளை நான் ஏன் குழப்புவான் எண்டுபோட்டு நிண்டிடுவானோ?''

இந்த எண்ணம் ஏற்பட, காலையில் இலேசாக உறுத்திய நெஞ்சில் முள் ஆழமாக இறங்குகின்றது. வலி தாங்க மாட்டாது. அவஸ்தைப்படுகின்றார். அவஸ்தைப் பரிகார எத்தனத்தில் பெரு மூச்சொன்று நீள்கின்றது.... இயந்திர வேகத்தில் கைகள் துலாக் கயிற்றை மேலும் கீழுமாக இழுக்க வாளி வாளியாகத் தண்ணீர் தலையிலேயே கொட்டப்படுகின்றது.

''நானும் நல்ல வேளைக்குத்தான் வந்திருக்கிறன். எல்லாரும் மருத்து நீராட்டம் முடித்தாயிற்றுப் போலை... பத்மா இதைப் புள்ளையளுக்குப் பிரிச்சுக்குடு.''

'இது நிச்சயமாக் குமாரசாமியின்ரை குரல் தான். உந்த வெண்கலக்கடை யானையின்ரை குரல் அவன்ரைதான்.'

தண்ணீர் காதுக்குள் புகுந்து, தன் மனக்குகை நினைவு களுக்கு உருவங்கொடுத்தது. மாரீச ஜாலம் நடைபெறுகின்றதோ என்று கூட ஒரு கணம் நினைக்கின்றார். இருந்தாலும் ஆசை இழுக்கின்றது.

''அப்பு எங்கை?''

''அவர் குளிக்கிறார்..... அப்பு! சின்னண்ணர் வந்திருக் கிறார்.'' என்று பத்மா குரல் வைக்கின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளிர்க்கும் நம்பிக்கை, பச்சையின் பசுமையை உறிஞ்ச, மறைப்புத் தட்டிக்கு மேலால் எட்டிப் பார்க்கின்றார்.

முற்றத்தில் குமாரசாமி சிரித்தபடி நிற்கிறான். அவன் பக்கத்தில் பத்மா நின்று, அவன் கொடுத்த 'சரை'யிலிருந்த இஞ்சு விசுக் கோத்துகளைப் பங்கிடுகின்றாள். சுப்பிரமணியத்தின் கடைக்குட்டி, வேற்று முகத்தைக் கண்டு பயந்தமாதிரி, கதிரையின் பின்னால் மறைவதை அவள் கவனிக்கத் தவறவில்லை. அவனுடைய பயத்தைக் கவனித்த குமாரசாமி, ''நானுஞ் சித்தப்பாதான்.... ஒருத்தருஞ் சொல்லித் தரேல்லையா?'' என்று சொல்லி மீண்டுஞ் சிரிக்கின்றான்.

'அதே சிரிப்பு. இவன்ரை சிரிப்பு ஒரு நாளும் மாறாது... என்னைப் போலை அந்தச் சுருட்டை மயிர் முன் குடும்பி வைச்சது போலை நிக்கிறதும் மாறாது. என்னதான் மனக் கோவங் கள் இருந்தாலும், அவன்ரை அந்தச் சிரிப்பைக் கண்டோடனை ஒருத்தருக்கும் அவனை ஏசப் பேச மனம் வராது. ஆரையும் மருட்டும்.'

''என்ன வாறனெண்டு அறிவிக்க ஒரு போஸ்டு கார்டு கிடைக்காமல் போச்சுது உனக்கு'' என்று முகத்தார் கடிந்து கொள்ளுகிறார்.

''எல்லாம் அவசரந்தான், அப்பு... போஸ்ட் காட் என்னத் துக்கு? நான் தான் நேரிலை வந்திட்டனே... அது கிடக்க, பத்மா வருஷத்துக்குச் சீலை கட்டியிருக்கிறாள்....'' குமாரசாமி பத்மாவை அந்தக் கோலத்தில் அப்பொழுதான் முதன் முறையாகப் பார்க் கின்றான்.

''ஓம். இவன் மனோகரன் தன்ரை முதல் சம்பளத்திலை எடுத்துக் கொண்டந்து குடுத்திருக்கிறான்'' - வாளிக் கயிற்றைப் பிடித்துக் கொண்டே முகத்தார் சம்பாஷணையில் ஈடுபடுகின்றார்.

''அத்தான் எங்கை பத்மா? காரிலையே வந்தவர்?''

''இல்லை. ராத்திரி உத்தரதேவியிலை வந்து சேந்தவர்..... இப்ப அக்காவோடை கோயிலுக்குப் போயிட்டார்'' என்று கூறிக்கொண்டே பத்மா அடுக்களைப் பக்கம் போகின்றாள்.

''புதுக் காரொண்டு எடுத்ததெண்டு கேள்விப் பட்டன். என்ன சாதிக் காராம்?''

''எனக்கென்னடா தெரியும்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காரின்ரை விலையளும் இப்ப என்ன மாதிரி ஏறிக்கிடக்குத் தெரியுமே? உங்காலை வீட்டுப் பொடியன் - அவன் தான் ரத்தினகோபால் - காரை வித்துப் போட்டு 'ஸ்கூட்டர்' வாங்கியிருக் கிறானாம்..."

"காரை விக்கேல்லையாம்... இசுக்கூட்டரும் வாங்கினவ னாம்."

"இப்ப ஏதும் சாமான் கீமான் வாங்க முடியுமே? அது தான் வித்துப் போட்டான். அவன்ரை காரை ராசாத்தோட்ட சங்கரப் பிள்ளை தான் வாங்கினதாம்... அவன்ரை கல்யாணப் பேச்சுக்கால் எப்பிடியாம்?"

"அது குழப்பிப்போய்க் கிடக்குதாம்."

"நீங்கள் மானிப்பாய்ப் பகுதியிலை இருந்து வந்த சம்பந் தத்தையல்லோ சொல்லுறியவள்? இது இங்காலை கோப்பாய்ப் பகுதியிலையாம்..."

"அதைப் பற்றி நான் கேள்விப்படேல்லை"

தூணுடன் சாய்ந்து கொண்டு நிற்கும் மனோகரனைப் பார்த்து, "தம்பி, உங்கடை கொம்பனியை அரசாங்கம் கெதியா எடுக்கப் போகுது போலை, தென் யூ வில் ஒல்சோ பிக்கம் ஏ கவுண்மென்ட் சேவண்ட்..." என்கிறான்.

"அப்பிடி நடக்காது."

"நீ இருந்து பாரன் தம்பி.....அப்பு! தங்கராசா அத்தானுக்கு அடுத்தமாசம் உத்தியோக உயர்வு கிடைக்கப் போகுதாம். தெரியுமோ?"

"உதுகள் எனக்குத் தெரியுமே?"

"முந்தநாள் அவரை ஸ்டேசனிலை கொண்டாந்து விடேக் கிள்ளை தான் அப்பிடி ஒரு புரமோஷன் கிடைச்சாலும் கிடைக்கும் எண்டு அத்தான் சொன்னவர்." மனோகரன் தனக்குத் தெரிந்த சமாசாரத்தைச் சொல்லுகிறான்.

"இவன் ஊருக்கு வாறதோ அத்திபூத்தாப் போலை. ஆனா, ஊரிலை நடக்கிற ஒண்டையும் விடாமல் அறிஞ்சு வைச்சிருக் கிறான்.'

முகத்தார் அவசர அவசரமாக மூன்று நான்கு 'பட்டை' களை ஊற்றி, 'முழு'க்கைச் சுபத்துடன் முடிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து கொண்டே, ''ஆனைக்கோட்டை வைத்தியரின்ரை பொடிச்சியைப் பற்றிக் கேள்விப்பட்டனீயே....'' என்கிறார்.

''ஓமோம். நான் கேள்விப்பட்டன். சாதி ஒரு மாதிரி எண்டு தான் இவை கூத்தாடினவை. அவன் நல்ல கொடியன் கெலகதரையிலை படிப்பிக்கிறான்.''

''ஓ... என்னவோ உப்பிடித்தான் ஒரு பேர் சொல்லுகினம்...''

தலையைத் துவட்டும் பொழுது, எந்தப் புத்தாடையை அணிவது என்னும் யோசனை அவரை ஆக்கிரமித்துக் கொள்கின்றது. சிறுபிள்ளைத்தனமன்று. பெரிய பிள்ளைகளுக்குள் தன்னுடைய செயலால் மனத்தாங்கல் ஏற்படக்கூடாது என்பதில் அக்கறை.

அதற்கிடையில், ''நீங்கள் ஏன் ஈரத்தோடை நிக்கிறியள்? இதைக் கட்டுங்கோ, நீங்கள் விரும்பிக் கட்டுவியளே, நீலக்கட்டம் போட்ட சாறன்'' என்றபடி கையில் வைத்திருந்த ஒரு பார்சலை நீட்டுகின்றான்.

குசேலனின் அவல் முடிச்சை அவிழ்த்து உண்ட கண்ணனின் உள்ளத்திலே கூட இவ்வளவு மகிழ்ச்சி தோன்றியிருக்க முடியாது.

விரித்தது உடுக்கின்றார்.

சலனமெதுவுமின்றி மற்றவர்களைப் பார்க்கிறார்.

மௌனம்.

''அப்புவுக்கு நல்லாத்தான் இருக்குது....'' வெளியே வந்த பத்மா மௌனத்தைக் கலைக்கின்றாள்.

''நீ நிண்ட ஊராலை வந்தனீயே? இரன்; கும்பம் வைக்கப் போகிறன். பொது நாளா இருக்கிறதாலை உடனையே கைவியளம் குடுக்கலாமெண்டிருக்கிறன்.''

''இல்லை அப்பு. எனக்கு உதுகளிலை அவ்வளவு நம்பிக்கை இல்லை எண்டது தெரியுந்தானே? அதோடை விடியக் காலமையே கார்க்காரனிட்டைக் கைவியளம் வாங்கீட்டன்.''

முகத்தாரின் முகத்தில் மூட்டம்

''இவன்தான் புது நாணயமாப் புறந்தவன். ஒண்டிலும் நம்பிக்கை இல்லாதவன் டேய்! புத்தகப் படிப்பு நீ எழுதுற கதையளும் நாடகங்களும் படிப்பில்லை. ஆவது அறிவது அறிவல்ல; வீட்டிலை வேவது அறிவது தான் அறிவு. ஊரோடை ஒத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழுறதுதான் படிப்பு'' - இவ்வளவு நேரமும் அமைதியாக இருந்த சுப்பிரமணியம் சொல்லுகிறான்.

''அதுக்கில்லை அண்ணை நான் அஞ்சாறு பேரோடை வந்திருக்கிறன். ஊராங்கடை காசிலை அவங்களை இவ்வளவு தூரம் கூட்டியந்தனான். இந்த ஊருக்கு அவங்கள் புதிசு. அவங் களை ஹோட்டலிலை விட்டிட்டு நான் இஞ்சை மினக்கடுறது அவ்வளவு வடிவில்லை எண்டுதான் சொல்ல வந்தனான்... அப்ப நான் வாறன்'' பதிலுக்குக் காத்திருக்காமல் திரும்புகின்றான்.

'என்ன இருந்தாலும் மரியாதை தப்பாது, ஆர் சொன்னா லும் தலையைக் கவண்டு கொண்டுதான் கேப்பான். மரியாதைக் காகத்தான். ஆனா, தான் நினைச்சதைத்தான் செய்வான்.'

''சின்னண்ணை... இஞ்ச கோப்பி கொண்டந்துட்டன். குடியுங்கோவன்...'' என்று பத்மா கோப்பி கிளாஸை நீட்டுகிறாள். பதிலொன்றும் பேசாமல் அதை வாங்கிக் குடித்து விட்டு, கிளாஸைத் திருப்பிக் கொடுக்கின்றான்.

முற்றத்து மாங்கன்றில், கும்பத்துக்கு மாவிலைகள் ஒடித்துக் கொண்டே, ''அப்ப மத்தியானச் சாப்பாட்டுக் கெண்டாலும் வாறியோ?'' என்று முகத்தார் கேட்கின்றார். நப்பாசையின் உள்முடிச்சு அவ்வினாவிற் காளத்திரியாட்டமிடுகின்றது.

''அவன்தானே அப்பு சொல்லிப் போட்டான். கூட்டாளி யளை விட்டுப் போட்டு வரேலாது எண்டு'' என்று சுப்பிரமணியம் சொல்லுகின்றான். வழக்கத்தில் மூத்தவன் அதிகம் பேசுவதில்லை.

''அப்ப வாறன்... எல்லாருக்கும் வாறன்'' என்று கூறி அவசரமாகப் படலையைத் திறக்கும் குமாரசாமி, ஒரு கணத் தரித்து, ''அப்பு, இண்டைக்கு எங்கடை நாடகம் பின்னேரம் முத்தவெளியிலை நடக்கும்... நல்லா இருக்கும்... நேரம் இருந்தா வாருங்கோவன்'' என்று குரல் கொடுத்துச் செல்லுகிறான்.

கும்பம் வைத்து கைவிசேடம் பரிமாறப்பட்டாகி விட்டது. விறாந்தையிலுள்ள 'செற்றி'க் கதிரைகளில் அமர்ந்து சுப்பிர மணியமும், சதாசிவமும் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்க ளுடைய பேச்சு சதாசிவம் புதிதாக வாங்கியுள்ள காரைச் சுற்றிச் சுழல்கின்றது. அவர்களுக்குச் சற்றுத் தூரத்தில், தூணிலே சாய்ந்த வாறு சௌந்தரத்தின் சார்பாக கைவிசேட வைபவத்திற் கலந்து கொண்ட முகுந்தன் நிற்கிறான்.

'அவன் மூத்த மாமனுக்கு நல்ல மரியாதை.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலா, பரிமளம், பத்மா ஆகிய மூவரும் சமையல் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். ஹம்ஸ்தொனியும் பெரிய மனுஷிமாதிரிக் கூடமாட வேலை செய்கின்றாள். 'குத்தி'ப் பலகையில் இருந்து கொண்டு, அவர்களுக்கு மனோகரன் தன்னுடைய கொழும்பு அநுபவங்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறான்.

கறித் தேங்காய்களை யெல்லாம் 'போர்'த் தேங்காய்களாக்கி முற்றத்திலே, போர்த் தேங்காயடி நடைபெறுகின்றது. யாருடன் என்ன விளையாட்டில் ஈடுபட்டிருந்தாலும், அசோகன் 'குழப்' பாமல் இருக்க மாட்டான். கல்லிலே பட்டுத்தான் தன்னுடைய 'கையான்' உடைந்ததாக அவன் சண்டை பிடிக்கிறான்.

புதுவருடத்துக்கு ஏனைய மக்களின் அன்பளிப்பாகக் கிடைத்த புத்தாடைகள் 'ரீப்போ'யில் இருக்கின்றன. அவற்றை முகத்தாரின் கண்கள் மேய்கின்றன.

"புள்ளை பத்மா"

அவள் கைவேலைகளை விட்டுவிட்டு வருகின்றான்.

"உந்த உடுப்புகளை எடுத்து வைபுள்ளை. பின்னேரம் ஒருக்கா முத்தவெளிக்குப் போக வேணும் நாடகம் பார்க்க. போகேக்கை மூத்தண்ணர் வாங்கித் தந்த வேட்டியையும், கொத்தார் வாங்கித் தந்த சால்வையையுந்தான் போட்டுக்கொண்டு போவேணும்"

"ஐயோ, இளையண்ணர்தான் பாவம்."

"ஓம் தங்கச்சி, எளியவனாப் பிறந்தாலும், இளையவனாப் பிறக்கக் குடாது" என்று மனோகரன் அடுக்களையிலிருந்தபடியே சொல்லுகின்றான்.

இதிலே என்ன நகைச்சுவையைக் கண்டார்களோ? அண்ணரும் அத்தானும் விழுந்து விழுந்து சிரிக்கின்றார்கள். மனோகரன் கையில் ஒரு நெருப்புக் கொள்ளியைத் தூக்கிகொண்டு, அடுக்களையின் மறைவான மூலையைப் பார்த்து நகருகின்றான்.

"இப்ப தம்பியும் பெரியாக்களைப் போலை" என்று பரிமளம் குரல் எழுப்புகின்றாள்.

"சும்மா சத்தம் போடாதை பரிமளம். இளையவன் எண்டாப் போலை நெடுகிலும் சின்னப்பொடியன் எண்ட நினைப்பே? அவனும் உழைக்கின்றான்; சம்பாரிக்கிறான்" என்று மச்சான் சார்பில் கமலா பேசுகின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனோகரன் சிகரெட் குடிக்கத் துவங்கீட்டான் போலை, ஓ, உங்கை கிறாதியாலை புகை வருகுது. வளந்தாப் பிறகு. அது அது, அதுகளின்ரை விருப்பம்.

"என்ன மருமகன்? சயன்ஷ் பாடங்கள் தானே? பேத்தனமா இங்கிலீஸை நெக்லட் பண்ணாதை."

"ஹி இஸ் குட் இன் இங்லிஸ். கிறடிற் எடுப்பான்" என்று சதாசிவம் முகுந்தனின் சார்பாக உத்தரவாதமளிக்கின்றான்.

"தூண் விழுந்திடப் போகுது. அந்தக் கதிரையிலை இரன்."

"அத்தான், உந்தத் தூணடியிலை நிண்டு பாத்தால் ஹமஸ தொனி அடுப்படியிலை இருந்து வேலை செய்யிறது தெரியு தாக்கும்."

"சதாசிவம்.. வானதிக்குக் கூடப் பிந்தீட்டியள்... அசோக னுக்கெண்டாலும் முந்தலாம்,"

சதாசிவத்தின் கண்கள் பரிமளத்தைத் தேடுகின்றன,

வாயைப் பொத்தும்படி சுப்பிரமணியத்திற்குக் கமலா சைகை காட்டுகின்றாள்.

ஃ ஃ ஃ

விறாந்தை ஓரத்தில் விழுந்து கிடந்த ஓர் இஞ்சி விசுக்கோத்தை எட்டியெடுத்த முகத்தார், குழந்தையின் சுபாவத்துடன் ஒருவருக்குந் தெரியாமல் தன்னுடைய தளர்ந்து போன பற்களுக்கிடையில் நசுக்குகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக் குழந்தை

பித்தன்

''உலகமெல்லாம் தேடினேன் ஒரு மனிதனை கூடக் காண வில்லை!'' என்று யாராவது சொன்னால் அவனைப் பைத்தியக் காரன் என்றோ தான் உலகம் முடிவு கட்டும். ஆனால் மனிதனைப் போல் அலங்காரம் செய்து கொண்ட பயங்கர மிருகங்கள் தான் உலகத்தில் அதிகம் என்று சொன்னால் அதை யாவரும் மறுக்க மாட்டார்கள்.

நல்ல பாம்பு என்று சொல்வதனால் அதனிடம் விஷமில்லை யென்று சொல்ல முடியுமா? அது பாம்பு, மனிதன் ஏன் படமெடுத் தாடுகிறான்? இதுதான் இன்றைய உலகத்தில் முற்றுப் பெறாமல் விடப்பட்ட வசனம்; அல்லது வசனம் முடிவு பெறாத முற்றுப் புள்ளி. இது ஆண்டவனுக்குப் புரியவில்லை. மனிதர்கள் எப்படி விளங்கிக் கொள்ளப் போகிறார்கள்?

ஏன் மனிதனுக்குப் பகுத்தறியும் தன்மை கிடையாதா? விஷத்தை விடக் கொடியவர்கள் மனிதன் என்ற போர்வையில் நடமாடுவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறானே! ஏன்? உலகம் அத்தகையவர்களை மதித்து மரியாதை செய்கிறதே ஏன்?

உருவமே இல்லாத ஆண்டவனைப் போல், உண்மையும் உருவற்றுப் போய்விட்டதா? எல்லாம் பைத்தியக்காரத்தனம் சீ...!

சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு குடிசைக்குள் இருந்தபடியே பாதி திறந்திருந்த கதவிடுக்கால் உலகத்தை எட்டிப் பார்த்தாள் சுபைதா. அவள் கண்களுக்கு ஒன்றுமே தெரிய வில்லை. உலகம் உருண்டு கிடந்தது.

இரவுப் பெண் அன்னநடை போட்டுக் கொண்டிருந்தாள். தென்றல் அவள் முந்தானையை இழுத்துப் பிடித்தாள். கருப்பு முந்தானை விரிந்து பரந்து உலகத்தை மறைத்தது. அந்தத் திரை மறைவிலே எத்தனையோ அற்புத அக்கிரமங்கள்! இன்று மட்டுமா? யுகம் யுகங்களாக நடந்துகொண்டிருக்கும் சம்பவம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபைதாவின் குடிசைக்குள்ளும் இருட்டுப் புகுந்துவிட்டது. ''விளக்கேற்ற வேண்டும்'' என்று அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள். அதைச் செய்ய அவளால் முடியவில்லை. கால்கள் இரண்டையும் நீட்டியபடி அந்தக் களிமண் சுவரிலே சாய்ந்து கொண்டிருந்தாள் சுபைதா. காரணம் அந்த வேதனை! அத என்ன வேதனையோ?

வயிற்றுக்குள் தொங்கும் மற்றொரு உயிர் வெளியே குதிப் பதற்காக வழி செய்து கொண்டிருந்தது. சற்று நேரத்துக்கு முன்பு தான் ஆரம்பமாகிறது அந்த வேதனை. ஆரம்ப வேதனையையே அவளால் தாங்க முடியவில்லை!

அப்பொழுது இரவு ஏழு மணி இருக்கும். இருட்டு, அவள் குடிசைக்குள் புகுந்து வெகு நேரமாகிவிட்டது. இன்னும் விளக் கேற்றவில்லை காரணம் அவளால் எழுந்திருக்க முடியவில்லை. சுவரில் சாய்ந்தபடியே உட்கார்ந்திருந்தாள்.

அது புது அனுபவம் அவளுக்கு. தெரிந்து கொள்ள முடி யாத ஒரு பயம் அவள் மனதைத் துவைத்துக் கொண்டிருந்தது. என்ன நேரம் போகிறது என்று அவள் உள்ளத்தில் எழுந்த கேள் விக்கு விடை கிடைக்கவில்லை. அவளுடைய துடிதுடிப்பு காலத் திற்குத் தெரியுமா? தொழிலாளியின் துன்பம் தெரியாத முத லாளியைப் போல் மெத்தையில் புரண்டு கொண்டிருந்தது அந்த இரவு! உடல் வேதனையும், உள்ள வேதனையும் ஒன்று சேர்ந்து அவளைப் பேயாட்டமாட்டியது. நோவு அவள் உள்ளத்தைத் துவைத்துக் கொண்டிருந்தது.

துன்பத்திலே மறைந்து போன நாட்களின் மறந்துபோன சம்பவங்கள் வந்து மனதில் வட்டமிட ஆரம்பிக்கின்றன. இந்த அனுபவம் சுபைதாவுக்கு எப்படி ஏற்பட்டது? அவளுடைய எண்ணம் வந்தவழியே திரும்பிச் செல்கிறது.

சுபைதா அந்தக் குடிசைக்கு வரும்பொழுது தனிமையாகத் தான் வந்தாள். சுபைதா வந்த சில நாட்களில் கிழவி காலை நீட்டி விட்டாள். இப்பொழுது சுபைதா தனிமைக்கும், அந்தக் குடிசைக் கும் சொந்தக்காரியாகி விட்டாள். இன்றிரவோ அல்லது நாளைக்கோ அவள் தனிமையைப் போக்க வயிற்றிலிருக்கும் குழந்தை பிறந்து விடும். இதை நினைத்த பொழுது அவள் முகத்தில் சந்தோச ரேகை மின்வெட்டியது. மறுகணம் கிழவியின் முகம் போலாகிவிட்டது அவள் முகம். பிறக்கப்போகும் குழந்தை அவளுடையதுதான். ஆனால்? அவள் அதை விரும்பவில்லை. உண்மை விரும்பாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது உடல் விரும்பாத போது அந்தக் குழந்தை அவள் வயிற்றுக்குள் உருவாகிவிட்டது! அப்படியானால்? மனம் எட்டித் தாவியது ஆரம்பகாலத்திற்கு.

சுபைதா இந்த உலகத்துக்கு வந்து பதினாறு வருடங்களாகி விட்டன. என்றாலும் எட்டு வருட வாழ்க்கைதான் அவளுக்கு ஞாபகம் இருக்கிறது. தாய் தந்தையர்களைப் பற்றி எதுவும் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் தான் இருந்தாள் அவள். தாயின் மடியில் உறங்கிய குழந்தை கண்விழிக்கும் பொழுது தொட்டிலில் கிடப்பதை உணருவதைப்போல, சுபைதாவுக்கு ஞாபகம் தெரிந்தபொழுது ஹாஜியார் உமரு லெப்பையின் வீட்டில் வேலைக்காரியாக இருந்தாள்.

ஹாஜியார் உமரு லெப்பை அந்தக் கிராமத்துக்கே பெரிய மனிதன். பாபமும், பணமும் அவரைப் பெரிய மனிதனாக்கி விட்டது. வாங்கியக் கடனைத் திருப்பிக் கொடுப்பதுபோல செய்த பாவங்களைத் தீர்ப்பதற்காக ஒருமுறை மக்காவுக்கு போய் வந்தார். பிறகு திரும்பவும் அகரத்தில் ஆரம்பித்துக் கொண்டார் தனது சுபாவத்தை.

பாபமூட்டைகளைத் தாங்கிக் கொள்ள மக்கா என்றொரு சுமைதாங்கியை அமைத்துக் கொண்ட பிறகு பணக்காரன் பாபம் செய்யப் பயப்படவேண்டியதில்லையல்லவா? இந்தத் தைரியத்தில் கண் மூடிக் கழித்தார் ஹாஜியார். வீட்டிலே மனைவி. தென்னந்தோட்டத்தில் ஒரு ஆசைநாயகி - ஊருக்குக் கடைசியிலே ஒரு கள்ளக்காதலி இவைகளையெல்லாம் விட சந்தர்ப்பத்துக்கேற்ப பகல் காட்சிகள் பல. அவருடைய பணத்திற்கும் பருத்த உடலுக்கும் பணிந்து போகாத பருவப்பெண்களே இருக்க முடியாது அந்த வட்டாரத்தில்.

இப்படி செய்வது தவறு என்று அவர் கருதவில்லை. நாலு கல்யாணமும், நாற்பது கள்ளக்காதலிகளும் வைத்துக் கொள்ள இடம் அளிப்பதாக அவர் கருத்து.

பணம் என்றால் ஹாஜியாரின் உயிர் என்று அர்த்தம். ஏழைகளின் வயிற்றில் இருக்கவேண்டியது ஹாஜியாரின் பணப் பெட்டியில் தூங்கிக் கொண்டிருந்தது. நூற்றுக்கணக்கான வயல் பூமிகளை மிகவும் அற்பமாகத் தன் சொந்தமாக்கிக் கொண்டார் அவர். எவ்வளவுக்கெவ்வளவு பணம் அதிகரித்ததோ, அவ்வளவுக்கவ்வளவு சந்தானம் குறுகிக்கொண்டே போயிற்று. பிறந்தது ஒரே குழந்தை! அதுவும் இறந்து போயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனின் கொடுமைகளைக் கண்டு மனம் பொறுக்கா மலோ அல்லது பணத்தின் பாரம் தாங்காமலோ ஒரு நாள் அவர் மனைவியும் இறந்துவிட்டாள். அவள் இறந்தது ஒரு பாபம் கழிந்த மாதிரி அவருக்கு! வீட்டில் தட்டிப் பேச ஆளில்லை. அவருடைய தாயார்! உலகமே தெரியாது. மூத்துப் போனவள் முடங்கிக் கிடந்தாள் ஒரு மூலையில். தனது கடைசி நாளை எதிர்பார்த்த வண்ணம்.

சுபைதாவுக்கு அப்பொழுது பதினாறு வயது பூர்த்தியாகி விட்டது. இளமையின் பூரிப்பில் மணம் வீசிக் கொண்டிருந்தது அவள் மேனி! இஸ்லாமியப் பெண்களுக்கு இயற்கை அளித் திருக்கும் அழகு கொஞ்சம் அதிகமாகவே ஆட்கொண்டிருந்தது அவளை. என்ன இருந்துமென்ன அவள் உமரு லெப்பை ஹாஜி யாரின் வேலைக்காரி அவ்வளவோடு திருப்தியடைய வேண்டியது தான்.

நாளடைவில் ஹாஜியாரின் போக்குக் கலக்கத்தை உண்டாக் கியது சுபைதாவுக்கு. எனவே எப்படியாவது அங்கிருந்து விடு தலை பெறவேண்டுமென்று நினைத்தாள். பலன்? முதலை வாயில் இருந்து மீண்டு, புலியை நாடிய கதையாகத்தான் முடியு மென்பதை உணர்ந்தாள்! இந்தச் சமூகம் அப்படித்தான் காட்சி யளித்தது அவளுக்கு.

இளமை ஒரு காந்தம். அத உமருலெப்பை ஹாஜியாரைப் போன்ற கம்பியாணிகளை இலகுவாக இழுத்துக்கொள்ளும். துருப்பிடித்துக் போன அவரது இரும்பு உள்ளத்திற்கு சுபைதாவின் பருவம் பாயும் மின்சாரம். ஆனால் அவளது அடக்கமும் அமைதி யும் அவளை அண்டவிடவில்லை.

தங்கம் சொக்கத் தங்கமாகவேண்டுமானால் அதை நெருப் பில் புடம் போட்டாக வேண்டும். ஆனால்! மனிதன் தன்னைத் தானே புடம் போட்டுக் கொண்ட பிறகு? காலமும் மனிதனைப் புடம் போட்டுப் பார்க்கிறது. மனிதன் அதை விடுத்து ஆண்டவன், விதி என்ற குப்பை கூழங்களை அள்ளித் தலையில் போட்டுக் கொண்டு திரும்பவும் சீரழிந்து போகிறான். யாத்திரை போனால் மனிதனாகலாம் என்பதை விடுத்து கடமையாலும், நேர்மை யாலும் மனிதனாகலாம் என்பதைப் புரிந்து கொள்ள முடியாத சூழ்நிலையில் உமருலெப்பை ஹாஜியார் குற்றமற்றவர்தான். ஆனால்! மனச்சாட்சி மரக்கட்டையாகி விட்ட ஹாஜியாரின் வீட்டில் ஒரு நாள்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு எட்டுமணியிருக்கும். இராச் சாப்பாட்டை தயார் செய்து விட்டு ஹாஜியாரின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் சுபைதா. மணி ஒன்பது அடித்தது வரவில்லை. வீட்டிலுள்ள ஏனைய பகுதிகளையெல்லாம் சாத்திவிட்டு மண்டபத்துக்குள் வந்து அங்கே கிடந்த கட்டிலில் உடம்பைச் சாய்த்தாள் அவள். நேரம் ஆக ஆக அவள் கண்களை தூக்கம் கவ்வியது. அப்படியே உறங்கிவிட்டாள்.

இரவு மணி பனிரெண்டிருக்கும். ஹாஜியார் வீட்டுக்கு வந்தார். மண்டபக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்த அவர் கண்கள் தூக்கத்தில் கிடந்த சுபைதாவைப் பார்த்துவிட்டன. வேலை செய்த களைப்பால் தன்னிச்சையாக உறக்கத்தில் கிடந்த சுபைதாவின் சேலை அங்குமிங்குமாக விலகிக்கிடந்தது. காலத்தின் வரவால் கன்னியின் பூரிப்பில் தலைநிமிர்ந்து நின்ற அவளது மார்பகம் ஹாஜியாரின் உள்ளத்தைக் கிள்ளிவிட்டது. உழைப்பின் மிகுதியால் உரமேறிப்போன அவளது அவயங்கள் நிலையழிந்த ஒருவித போதையை ஏற்படுத்தி விட்டன அவருக்கு. நடு இரவும் சுடுகாட்டமைதியும் இச்சையின் சுறுசுறுப்பும் எல்லாமாகச் சேர்ந்து சுபைதாவின் எதிர்காலத்தைப் பாழ்படுத்திவிட்டன. அவள் அனாதை.

சாப்பிட்ட எச்சிலை விட்டுவிட்டு எழுந்து போகும் முதலாளி யைப் போல ஹாஜியார் நடந்தார் கிணற்றடியை நோக்கி. வாயால் உமிழ்ந்ததை கையால் வாரி எடுக்கும் தொழிலாளியைப் போல தன் சேலையை வாரி உடம்பை மூடிக்கொண்டு சமையலறையை நோக்கி ஓடினாள் சுபைதா. பணக்கார வீட்டில் இதுவும் ஒரு வேலைதானோ என்னவோ? ஆனால் அந்த அனுபவம் அன்று ஏற்பட்டது அவளுக்கு.

ஹாஜியார் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொண்டார். நீண்ட காலச் சுமையை இறக்கி வைத்த மனநிம்மதி அவருக்கு.

சுபைதாவுக்குத் தூக்கம் வரவில்லை. உள்ளம் விம்மிக் கொண்டிருந்தது. கண்களில் இருந்து நீர் வடிந்து கொண்டிருந்தது. வெட்கமும் பயமும் கலந்து துன்ப வேதனை அவளைக் கசக்கிப் பிழிந்தது.

காலத்திற்கு யாரைப் பற்றியும் கவலை இல்லை. அதிகாலை மணி ஐந்தடித்தது. ஹாஜியார் அவசர அவசரமாக எழுந்து காலைக் கடன்களை முடித்து விட்டு வழக்கத்துக்கு மாறாக அதிக நேரம் காலை வணக்கத்தில் ஈடுபட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் வேலைக்காரி. அடிமை தன் கடமைகளைச் செய்ய வேண்டுமல்லமா? வெட்கத்தையும் வேதனைளையும் அடுப்பங் கரைச் சாம்பலுக்குள் புதைத்துவிட்டு, வீட்டு வேலையில் ஈடுபட் டாள்.

ஹாஜியாரின் வீட்டில் இருந்த அராபி மாதக் காலண்டரில், மூன்று தாள்கள் கிழிக்கப்பட்டு விட்டன. சுபைதாவின் அடிவயிறு பெருத்து விட்டது! ஒரு குழந்தைக்காக ஓராயிரம் தவம் புரிந்தும் கிட்டாது என்று மனம் ஒடிந்து போனவர்கள் எத்தனையோ பேர்? இந்த உலகத்தில். வேண்டாம் என்று சொல்லும் பொழுது வேண்டு மென்றே வாய்க்குள் திணிப்பது போல் விரும்பாத பொழுது அவள் உடலுக்குள் உருவாகிக் கொண்டிருந்தது அந்தப் புது ஜீவன். அதன் உற்பத்திக்குக் காரணமாக இருந்த அந்த இரத்தம் அநீதி என்ற அழுக்கேறி அசுத்தப்படுத்தப்பட்ட கிழட்டு இரத்தம். சீ! அவள் தேகம் குலுங்கியது. சிந்தனையும் கலைந்தது.

மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தாள் சுபைதா. பாதி திறந்திருந்த கதவின் வழியாக வானத்தில் சிதறிக் கிடந்த நட்சத் திரங்கள் தெரிந்தன அவளுக்கு.

பிரசவ வேதனை அதிகரித்துக் கொண்டே இருந்தது. உடல் மெதுவாக அசைந்தது. ''உம்மா!'' என்று முனகினாள். அங்கே அந்தக் கிழட்டு நாய் வாலை ஆட்டிக் கொண்டு படுத்திருந்தது.

அந்த நாய் அந்தக் குடிசையைத்தான் தனது இராப்படுக் கைக்கு இடமாக்கிக் கொண்டிருந்தது. கிழவிக்கு அந்த நாய் தான் தோழன். அவள் அந்த நாயை அன்பாகத் தடவியபடி சொல்வாள் 'இந்த உலகத்தில் மனிதனைவிட இது எவ்வளவோ மேல்' என்று. அந்த உண்மை சுபைதாவுக்கு இப்பொழுது தான் தெரிந்தது.

தனிமையில் தவித்துக் கொண்டிருந்த அவளுக்கு அந்தக் கிழ நாயின் கூட்டு எவ்வளவோ ஆறுதலாக இருந்தது.

இந்த உலகத்தில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஏன்! உமருலெப்பை கூடத்தான் இருக்கிறார். அவருக்கு நன்றாகத் தெரியும். தன்னுடைய இரத்தத்தில் இருந்து ஒரு புது ஜீவன் உதயமாகப் போகிறது என்று. ஆனால்! அவர் என்ன செய்து விட்டார்? இந்தக் கிழ நாயை விட அவ்வளவு கிழமாவிட்டாரா? இல்லையென்றால் என்னை, வீட்டை விட்டு வெளியேற்றி இருப்பாரா? உம்....! அவர் என்ன செய்வார்? அவர் குடியேறி இருக்கும் உலகம் அப்படி. ஏன் இந்தச் சமூகமும் அப்படித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுக்கு பதில் இரண்டு உயிர்களைத் துன்புறுத்துவதைத் தவிர வேறு நல்ல காரியம் இந்த சமூகத்துக்குத் தெரியாது. உயிரும் உண்மையும் அற்றுப் போன இந்த சமூகம் எனது இன்றைய நிலையைத்தான் ஆதரிக்கும். இவைகளையெல்லாம் நினைத்து நடக்கப்போது என்ன? அவள் ஒரு முட்டாள்.

முடிவில்லாத அந்த இரவு நீண்டுகொண்டே இருந்தது. உள்ளத்திற்கும் உடலுக்கும் வேதனையை தந்து கொண்டே இந்த இரவு நீண்டது. விடிந்து விட்டால் எப்படியாவது அந்த வெட்ட வெளியில் போய் படுத்துக் கொள்வாள். அங்கே சூரியனின் சுடு வெய்யிலும், சோலைக்காற்றும் அவளுக்கு ஆறுதல் அளிக்கக் கூடும்.

பிரசவ வேதனை நிமிசத்திற்கு நிமிசம் முன்னேறிக் கொண் டிருந்து. மார்பின் மேல் ஒரு கல்லைத் தூக்கி வைத்தது போல் இருந்தது அவளுக்கு. வாயைத் திறந்து மூடினாள். உடலை அசைக்க முடியவில்லை. எண்ணங்கள் தடைப்பட்டன. பிணம் போல் கிடந்தாள். இருதயம் துடித்துக் கொண்டிருந்தது துண்டிக் கப்பட்ட புழுவைப்போல.

மெல்ல மெல்ல உலகம் தெளிவடைந்து கொண்டிருந்தது. இருள் மங்கை தன் முந்தானையை இழுத்துத் தன்னை மறைத்துக் கொள்ள முயன்றாள். குடிசை வாசலில் படுத்துக்கொண்டிருந்த நாய் தனது நாலு கால்களையும் நீட்டி உடம்பை நெளித்தது. அப்பொழுது அதற்கு ஒரு புது வாசனை மூக்கு வரை வந்து மோதி யது. மோப்பம் பிடித்துக் கொண்டே சுபைதாவை நெருங்கியது அந்த நாய். சுபைதாவின் படுக்கை நீரால் நனைந்திருந்தது. நாய் தன் முகத்தை தாழ்த்தி முகர்ந்து பார்த்தது. அதற்கு என்ன தோன் றியதோ? உறுமிக் கொண்டே தன் இடத்தில் வந்து படுத்துக் கொண்டது!

சுபைதா மரக்கட்டையாகிக் கொண்டிருந்தாள். அவளது வேதனைக்கும் நீண்ட இரவுக்கும் காரணமாக இருந்த அந்த புது ஜீவன் உதயமாகிக் கொண்டிருந்தது.

குழந்தை பிறக்கும் வரை சுபைதா காத்துக் கொண்டிருக்க வில்லை. முடியவில்லை அவளால். குழந்தையின் உதயத்துக்காக உயிரைப் பிடித்துக் கொண்டிருந்தாள் அவள். ஆனால்! உயிர் அவள் பிடியிலிருந்து பாய்ந்துவிட்டது! சுபைதா பிணமாகி விட் டாள். குழந்தை கழுத்தை நீட்டி உலகத்தை எட்டிப்பார்த்தது. இந்த உலகத்தைப் பற்றி என் நினைத்ததோ? பாதி வழியிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கிவிட்டது. பூமியில் குதிக்காத குழந்தை வந்த வழியே போக முடியாமல் தத்தளித்தது. முடிவு....? பிறப்பதற்கு முன்பே பிணமாகி விட்டது. அந்தப்பாதிக் குழந்தை!

சிருஷ்டி தத்துவத்தின் சீர்கேட்டைப் பார்த்த சிரித்திருக்க வேண்டும் அந்த நாய். அது தன் தலையைத் தூக்கி ஆகாயத்தைப் பார்த்து ஊளையிட்டது. அந்த நாயின் குரலோடு ஒரு மோட்டார் காரின் ஊதுகுழல் சத்தமும் வந்து கலந்து கொண்டது.

சிறிது நேரத்தில் ஒன்றன்பின் ஒன்றாக நாலைந்து கார்கள். அந்த வழியே பறந்தன. அதில் முதலாவது காரில் உமருலெப்பை ஹாஜியார் இரண்டாவது முறை மக்காவுக்குப் போகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவிலே பேசுவோம்

என்.கே. ரகுநாதன்

மாலையிலே மது ஒழிப்புக் கூட்டம் நடைபெற்றது! ஆயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்த அந்த மாபெருங் கூட்டத்திலே ஆண் சிங்கம் போலத் தோன்றி, மதுவினால் ஏற்படும் தீமைகளை யும், அது ஒழிக்கப்பட வேண்டிய அவசியத்தையும், அதற்கான வழி வகைகளையும் அள்ளி விளாசி, இடையிடையே காந்தியத் தைப் பூசி, அழகு தமிழிலே அனல் பறக்கப் பேசிவிட்டுச் சற்று முன்புதான் வந்திருந்தார் ஸ்ரீமான் சிவப்பிரகாசம் அவர்கள்.

அப்போது மணி எட்டு இருக்கும். அவருக்குப் பசி; அத்துடன் கூட்டத்திற் பேசிய களைப்பு வேறு.

சாப்பிட்டு முடிந்ததும், அறுசுவையுண்டியின் ருசியில் நாவைத் திளைக்கவிட்டபடியே, உள்ளே இருந்த 'ஓர் குலம்' பத்திரிகையைக் கையில் எடுத்துக் கொண்டு வெளியே வந்தார். விறாந்தையின் மூலையொன்றில் கிடந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு ஜகஜ்ஜோதியாகப் பிரகாசித்துக் கொண்டிருந்த மின்விளக்கின் ஒளியில் பத்திரிகையைப் புரட்டிப் படிக்கத் தொடங்கினார்.

ஒரு பத்தி கூட வாசித்திருக்கமாட்டார். வெளியே, வாசற் பக்கமாகச் சிலர் பேசுவது கேட்டது. பத்திரிகையில் படிந்திருந்த பார்வையைத் திருப்பி அங்கே நோக்கினார்.

யாரோ பத்துப் பன்னிரண்டு பேர்கள் - நசித்துப் போன கூட்டம் - அதாவது 'உழைத்தாற்றான் உணவு' என்ற நிலையி லிருக்கும் உழைப்பாளி வர்க்கம்! அவர்களில் ஒருவன், தயங்கித் தயங்கி இவரண்டை வந்தான். மற்றவர்கள் அங்கேயே நின்று விட்டார்கள். சிவப்பிரகாசம் எழுந்து இரண்டடி முன்னே நடந்து, வந்தவனை உற்றுப் பார்த்தார்.

"அடடே! நீயா கந்தா! என்ன சேதி?! என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்களைக் காணவேண்டுமென்று வந்தோம். இந்த மது விலக்கு சம்பந்தமாக.....'' என்று தயக்கத்துடன் சொன்னான்.

''ஆகா! அதற்கென்ன, நல்லாய்ப் பேசலாமே!'' என்று சொன்னார் சிவப்பிரகாசம்.

''இன்னும் சிலர் வந்திருக்கிறார்கள். அப்படியானால் அவர் களையும் கூப்பிட்டு.....'' வார்த்தையை முடிக்காமல் வாசற் பக்கம் திரும்பி, அங்கே உள்ளவர்களைக் கூப்பிட எத்தனித்தான் அவன்.

சிவப்பிரகாசம் ஒரு கணம் திக்குமுக்காடினார். மனதிலே ஒரு பரபரப்பு - தடுமாற்றம்! தலையைச் சொறிந்து, நெற்றிப் புருவங் களை உயர்த்தி ஏதோ யோசனை செய்தவர், திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தார்.

''வேண்டாம் கந்தா கூப்பிடாதே! இதெல்லாம் இரண்டாம் பேர் அறியக்கூடாத விஷயங்கள். மனைவி மக்களென்றாலும் இந்தக் காலத்தில் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதென்று யாருக்குத் தெரியும்? அதோ பார்! வெளியே நல்ல நிலவு! அத்துடன் பால் போன்ற மணல். அங்கே போய் பேசிக்கொள்ளலாம்; வா!'' என்று அவன் பதிலை எதிர்பாராமலே, கீழே இறங்கி நடந்தார். அவன் பின் தொடர்ந்தான்.

பின், வாசலில் நின்றவர்களையும் அழைத்துக் கொண்டு, சற்றுத் தூரம் போய் ஒரு நல்ல இடத்தில் அமர்ந்து பேசினார்கள்.

வந்தவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். கள் சேர்ப்பது அவர்கள் தொழில், ஊர் முழுவதும் ''மது ஒழிக!'' என்ற கூச்சல். இந்த நிலையிலே அவர்கள் கதி.....?

மது ஒழிப்புக் கூட்டத்திலே, சிவப்பிரகாசம் காரசாரமாகப் பேசியதை அவர்களும் கேட்டார்கள். எனவே, அவரிடமே வந்து சேர்ந்தார்கள், தமது ஜீவப் பிரச்னைக்கு ஆலோசனை கேட்பதற்கு.

''....நாங்களும் மதுவிலக்குக்கு ஆதரவு தருகிறோம். மது வினால் உலகத்துக்கே ஆபத்து என்பது நமக்குத் தெரியும். நமக்குக்கூட அது ஒரு மகிழ்ச்சியான தொழிலல்ல; ஊர் மக்களிடம் வசை கேட்கிறோம்; 'எக்ஸைஸ்' உத்தியோகத்தர்களுக்கு சம்பளத் துக்கு மேலே 'கிம்பளம்' கொடுத்தும் ஒளித்தோடுகிறோம்... அது மட்டுமா? ஒவ்வொரு நொடிப்பொழுதும் உயிரைப் பணயம் வைத்துத் தான் நாம் வாழவேண்டியிருக்கிறது. ஆகாயத்தை அளாவி நிற்கும் மரங்களில் இருக்கும் போது, நமது நிலைமையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிப் பாருங்கள். மிகப் பயங்கரமான தொழில்தான்! என்றா லும்...'' என்று இழுத்தான், அங்கு வந்திருந்த ஒரு வாலிபன்.

''ஏன் இழுக்கிறாய்? சொல்லு தம்பி!'' என்று வற்புறுத்தினார் சிவப்பிரகாசம்.

''நமக்கு வேறு தொழில் வேண்டுமே!''

சிவப்பிரகாசம் சிரித்தார். ''இதென்ன பிரமாதம்? இந்தப் பரந்த உலகத்தில் தொழிலுக்கா பஞ்சம்?'' என்றார்.

''எத்தனையோ தொழில்கள் இருக்கின்றனதான்; என்றாலும் நாம் செய்வது சாத்தியமா?''

''ஏன்?''

''ஒரு தேனீர்க் கடை வைத்தால் யாராவது நம்மிடம் வந்து தேனீர் குடிப்பார்களா? அல்லது ஒரு பலசரக்குக் கடை வைத் தாற்கூட நம்மிடம் வந்து சாமான் வாங்குவார்களென்பது என்ன நிச்சயம்? ஏன் ஒரு இரும்புக் கடையில் நம்மவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள மாட்டார்களே; இரும்புப் பொருட்களில் தீட்டு ஒட்டிக் கொள்ளுமென்று! அதிகம் வேண்டாம்; என்னை நீங்கள் உங்கள் வீட்டில் ஒரு கூலியாக வைத்துக்கொள்ளுங்கள் என்றால் சம்மதிப்பீர்களா? இந்த நிலைமையில்...'' என்று அந்த வாலிபன் மிகவும் உணர்ச்சியுடன் பேசிவிட்டு அவர் முகத்தைப் பார்த்தான். அப்போதும் அவர் சிரித்தார்.

''அப்படிச் சொல்லாதே தம்பி! அதெல்லாம் வேறு விஷயம். இவைதான் தொழில்களா? வேறு கைத்தொழில் செய்கிறது!''

வாலிபன் பேச வாயெடுத்தான். அவனைத் தடை செய்து விட்டு இதுவரை மௌனமாக இருந்த ஒரு நடுத்தர வயதினன் கோபத்துடன் கேட்டான்;

''ஆமாம்! அதெல்லாம் வேறு விஷயங்கள். உங்களுக் கென்ன எத்தனையோ சொல்வீர்கள். இதோ பாருங்கள்! நான் இருக்கிறேன். எனக்கு இப்போது ஐம்பது வயதாகிறது. இந்த வயதில் நான் வேறு புதுத் தொழில் பழகித் தேர்ச்சியடைவதற்கும் காலன் வந்து என் கழுத்தில் கயிறு போடுவதற்கும் சரியாயிருக்கும். தொழில் பழகுகிற காலத்திலே நல்ல ஊதியம் கிடைக்குமா? அவ்வளவும் நானும் என் பெண்டாட்டி பிள்ளைகளும் பட்டினி கிடக்க வேண்டியது தான்! அப்படித்தானே உங்கள் திட்டம்?''

சிவப்பிரகாசம் ஆபத்தான கட்டத்தில் அகப்பட்டுக் கொண் டார். எனினும் சமாளித்துக் கொண்டு, ''ஆத்திரப்படாதீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் ஒருங்கே திரண்டு உங்கள் தேவைகளை அரசாங்கத்திடம் கேளுங்கள். நீங்கள் கள்ளுஞ் சேர்க்க வேண்டாம். கருப்ப நீர் இறக்குங்கள். ஒரு சீனித் தொழிற்சாலை நிறுவித் தரும்படி உங்கள் தொழில் அமைச்சரைக் கேளுங்கள். கவனிக்காமல் விட்டுவிடப் போகிறார்களா?'' என்று நொண்டிச் சமாதானம் கூறினார்.

கூட்டத்திலிருந்து ஒரு புதிய எழுச்சிக் குரல் கேட்டது.

''அதொன்றும் வேண்டாம். மதுவினால் நன்மையோ தீமையோ! நமது சாதி கொஞ்சம் முன்னேறி வருகிறது. அது உங்களுக்குப் பிடிக்கவில்லை. ஆனபடியால் தான் மதுவிலக்கு வேண்டுமென்கிறீர்கள். நீங்கள் மதுவை ஒழியுங்கள். காந்தி மகாத்மாவின் பெயரைச் சொல்லிக் கொண்டே எங்கள் வாழ்வைப் பறியுங்கள். நாங்கள் பசி கிடந்து சாகிறோம். தீண்டாமை ஒழிய வேண்டுமென்று மகாத்மா காந்தி சொன்னாரல்லவா? நாம் ஒழிந்து விட்டால் தீண்டாமையும் கொஞ்சம் ஒழிந்துவிடும். உங்களுக்கு ஒரு கல்லில் இரண்டு மாங்காய். அதே நேரத்தில் 'ஜின்' னும், 'பிரண்டி'யும் மருந்துக் கடைகளில் விலைப்படட்டும், மருந்து என்ற பெயரில்!''

''சைச்சை! இது தவறான வாதம்! அப்படி எண்ணவே கூடாது!''

''பின் எப்படி எண்ணுவது? காந்தியின் பெயரைச் சொல்லி மது ஒழிக்கக் கிளம்பிவிட்டீர்களே. முதலில் தீண்டாமையை ஒழிக்க வேண்டாமா?'' என்றது அந்தக் குரல்.

சிவப்பிரகாசம் சிலையாய்விட்டார். இப்படிப் பேசுவார்கள் என்று அவர் எதிர்பார்க்கவேயில்லை.

வந்தவர்கள் எழுந்தார்கள்.

''நாங்கள் போய் வருகிறோம். சிந்தித்து நல்லதைச் செய்யுங் கள். 'மதுவிலக்கு அவசியம் வேண்டும்!' அதே நேரத்தில் நாம் மகிழ்வுடன் வாழவேண்டும். இந்த அடிப்படையிலே தொண்டாற் றுங்கள். உங்களுடன் நாமும் சேர்ந்துகொள்கிறோம்'' என்று சொல்லிவிட்டு நடந்தார்கள்.

''வெளியே நல்ல நிலவு - அங்கே போய்ப் பேசிக் கொள்ள லாம்!'' என்று சிவப்பிரகாசம் சொன்னதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள அவர்களுக்கு அதிக நேரம் செல்லவில்லை.

(ஈழகேசரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பே லங்கா

புதுமை லோலன்

சிறைச்சாலைக் கதவு திறந்தது. அதிகாலையில் பறவைகள் வீட்டை விட்டு வெளியேறும் மகிழ்வு போல, சிறையிலே அடக்கி யொடுக்கிக் கிடந்த கைதிகள் புறப்பட்டனர். நாளை புத்தஜெனந்தி. ஆகையால் தண்டனை முடியாத கைதிகள் பலர் மன்னிக்கப்பட்டு - தண்டனைக் காலம் குறைக்கப்பட்டு - நாட்டிலே நடமாட விடப் பட்டனர். இக்கைதிகளுள் ஒருவன் ஏங்கிய முகத்துடன், சோர்ந்த உள்ளமுடன் வெளியேறினான். உடைகள் மாற்றப்பட்டு, வேறு உடை தரித்துக் கைதிகள் வீட்டை நோக்கிப் புறப்படும் போதும் கூட அவன் தயங்கினான். நாடு போவதிலும் சிறைக்கூடம் சிங்கார மானது என எண்ணினானோ? சிறைக்கூடத்திலும் பார்க்க நாடு பொல்லாதது என நினைந்தானோ? அவன் பெயர் புஞ்சிசிங்கோ. காலிக்கணித்தாயுள்ள கிராமம் அவன் பிறந்து வளர்ந்த சொந்த நாடு.

புஞ்சிசிங்கோ மனம் ஏன் வீடு செல்ல மறுக்கிறது!

ஆறு மாதங்களுக்கு முன்பு;

இரவு கருமிருட்டு உலகத்தை தன்னுள்ளடக்கி உனது விஞ் ஞான வெளிச்சங்கள் கூட என் கப்பிய இருள்களை அகற்ற முடி யாது என மனிதர்களை பார்த்து சவால்விடுவது போலிருந்தது.

அவள் கண்ணிலே நீர், புஞ்சிசிங்கோவின் உள்ளத்திலே புயல். அவள் புஞ்சிசிங்கோவின் மனைவி மெனிக்கே. 'மெனிக்கே' என அவளைச் சிங்கோ அழைக்கும் போது மேனியெல்லாம் அன்புக்குரலால் உணர்ச்சிப்பட்டு; உந்தப்பட்டுக் காதல் உலகம் கண்டவள். அவளின் முழுப் பெயர் 'றன்மெனிக்கே' ஆனல் சிங்கோ அழைப்பது மெனிக்கே என்று தான்.

'மெனிக்கே' அழகிய எழில் கூடும் பாவை வண்ணப் பதுமை, புதுவனப்புச் செறிந்த பூவை, காவிய நாயகி, கண்ணைப் பறிக்கும் மின்வெட்டு, தங்கமொழி தையல் என்று வர்ணிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்களே அப்படிப்பட்டவளல்ல! அவள் அழகிய அமாவாசை இருட்டு. அவளின் உடம்போ அழகாகவமையாத சதைப்பிடிப்பு அளவுக்கதிகமான அவலட்சணம் நிறைந்தது. அவள் வதனத்தில் எவ்விதக் கவர்ச்சியும் கிடையாது. பாலைவனம் போன்று செழுமை காட்டா கறுப்பு முகம் மெனிக்காவினது. அது மட்டு மல்லாது அவளின் கண்ணிற்குக் கீழே ஒரு வடு. அவ்வடு கறுப்பி மெனிக்காவின் முகத்தில் ஒரு தழும்பாக இருந்தது. அத்தழும்பு உணர்த்தும் பாடம் ஏழ்மையைத்தான். 10 வயது சிறுமியாக இருந்த போது ஒரே துணையாக இருந்த தாய் கிழவியுடன் பசி வயிற்றுடன் ஏங்கிய வாழ்வு வாழ்ந்தாள் மெனிக்கா. தாய்கிழவி பிச்சை எடுப்பவள். மெனிக்கா பிச்சையிலே பங்கு பெற்று வாழ் பவள். ஒரு நாள் பசியின் ஆட்சியில் கிழவியும் மெனிக்காவும் ஆட்பட்டனர். ஒருவரும் உதவவில்லை அன்று. ஆகையால் மெனிக்கா பசியால் சுழன்றாள்; அழுதாள். தாங்கமுடியாத பசி. உயர்ந்தவர்கள், பணத்தால் வளர்ந்தவர்கள், பணத்தால் புகழ் பெற்றவர்கள், பணத்தால்..... இப்படியே பணத்தால் பல வாழ்வு வசதிகொண்டு வாழும் அக்கிராமத்திலே ஏழ்மையிலே ஆழ்ந்து கிடந்தனர் தாயும் மகளும் தாங்க முடியாத பசியால். அயல் வீட்டு பலாமரம் அழைத்தது. அம்மரத்திலே பல பலாப் பழங்கள் தொங்கின. சொந்தக்காரரை கேட்டால் கொடுப்பார்களா - ஒரு பலாக்காய்ப் பிஞ்சையாவது கொடுப்பார்களா? திருடி யானாள் மெனிக்கா.....?

வாழ்வு வசதி ஒரு பக்கம் குவிக்கப்பட்டு வாழ முடியாத மக்கள் தொகையை இன்னோர் பக்கம் வாழவிட்டு கிடக்கும் சமூதாயத்திலே திருடர் "பிட்பொக்கட்" ஆசாமிகள் உருவாக்கப் படுகிறார்கள்.

மெனிக்கா திருடியல்லள், திருடமனங் கொண்டவளல்லள். புத்தன் மொழியை உணர்ந்த பூவை தான். ஆனால் பசி - கோரப் பசி. கம்பி வேலியால் புகுந்தாள். ஒரு தடியால் பலாப்பழத்தைத் தட்டினாள். பழம் விழவில்லை. காய் ஒன்று விழுந்தது. அதுவும் அவள் கண்மேல் விழ வந்தது. கொஞ்சம் தவறிக் கண்ணின் கீழே விழுந்தது. பலாக்காய் முள்கீறிவிட இரத்தம் ஓடியது. பலாக்காய் சொந்தக்காரர் கண்டுவிட்டால் என்ற பயத்தால் இரத்தம் ஓட ஓட ஓடினாள். தாயை நாடினாள். தாய்க் கிழவி இரத்தம் கண்டு துக்கப்பட்டதிலும் பார்க்க பலாக்காயை கண்டு மனம் மகிழ்ந்தாள். காரணம் தாங்க முடியாத பசி. பலாக்காயை உண்டனர். அவ்வூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மாஸ்பத்திரி மருந்து அவள் காயத்தை நீக்கியது. ஆனால் தழும்பு அப்படியே இருந்தது.

வாழ்வின் வரட்சியின் அந்தம்வரை வாழ்ந்து பழகிய மெனிக்கா, காலவளர்ச்சியால் பருவமங்கையானாள். ஒவ்வொரு தினமும் வேதனைக் குரலொலியிட்டபடியே மெனிக்காவுக்குக் கழிந்தது. இந்த நிலையிலே உறுதுணையாயிருந்த தாய்க்கிழவி மூச்சுவிட மறந்தாள்; அதனால் ''வான்வீடு'' சென்றாள். பட்டினியால் இறந்த அக்கிழவி மெனிக்காவைத் தனிமையாக்கி விட்டாள். பருவக்குமரி, செங்காய்ப்பருவம். ஆனாலும் அவளிதழ் கொவ்வையல்ல. அவள் கண் மீன் அல்ல, அவள் கன்னம் ரோஜாவல்ல. அவள் மேனி தங்கமல்ல! ஆகவே ஆண்களின் விழியம்பு பாயவில்லை; பாய முடியவில்லை. மெனிக்காவின் அவலட்சணம் அவளைக் காப்பாற்றியது. ஏழை மெனிக்கா எழிலுடனிருந்திருந்தால், 'மைனர்' களின் கண்வீச்சு, பணக்காரரின் அன்பளிப்பு, பெரிய மனிதரின் 'ஒரு நாள் இன்பம்', காதல் கீதமியற்றும் வாலிபரின் 'புது உலகம்' கண்டிருப்பாள். அவள் விரும்பாவிட்டாலும் அந்த உலகுக்கு ஏழ்மை இழுத்திருக்கும் அல்லது இழுக்கப்பட்டிருப்பாள். அது இயல்பு. ஆனால் மெனிக்காவின் உடல் தோற்றமும் உடையழகும் யாரையும் அவள் பக்கம் திரும்பச் செய்யவில்லை.

மெனிக்கா தாய் இறந்தபிறகு தானே பிச்சையெடுத்து உண்ண ஆரம்பித்தாள். காலி புகையிரத ஸ்தாபனத்தை தனது பிச்சை உத்தியோகத்தின் கேந்திர ஸ்தானம் எனக் கண்டாள். ஒரு பக்கத்திலே இருந்து பிச்சை எடுப்பாள். மந்திரிகள் வந்தனர்; சமூக தொண்டர் வந்தனர்; பிக்குகள் வந்தனர். அவர்கள் கண்ணில் ஒரு வினாடி மெனிக்கா படுவாள். ஒரு சதம் வீசப்படும். புண்ணியம் அவர்களுக்கு சேர்க்கப்படும். அவ்வளவே!

புஞ்சிசிங்கோயும் ஏழைகளின் உலகிலே உண்டாக்கப்பட்ட ஒரு திருடன். ''பிட்பாக்கட்''. சிலவேளைகளில் கண்களை மூடி குருடனாகி பிச்சை ஏந்தி நடித்து வாழ்பவன். அவனும் மெனிக்காவின் இனம். காலி ஸ்தானத்திலே இருவரும் இரண்டுமுறை சந்தித்ததும் ''பருவத்தேவை'' ஒன்றாக்கி விட்டது. அவர்களுக்குக் காதல் தெரியாது. ''லவ்'' புரியாது. ஆனால் தேவையேதோ ஒன்றாக்கியது. ஒன்றாகினர்.

அவர்கள் வாழ்வு ஓடியது. இவரும் பிச்சையேந்தினர். வயிறு குளிரக் காணவில்லை. சிங்கோவின் திருட்டு வேலையும் ஆரம்பமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சளுடையிலே மக்கள் மத்தியிலே புத்தர் நாமம் கூறித் திருடிவாழும் பலரைக் கண்ட சிங்கோ, தான் மட்டும் திருடனாவதை வெறுக்கவில்லை.

பஸ்சுடன் பஸ்ஸாக ஓடுவான், சனத்திரளில் புகுவான். ''மனிபர்சு''டன் வெளிவருவான். அப்படியே ஒரு நாள் மின் வெட்டும் நேரத்தில் ஒரு பர்சுடன் வெளிவந்தான். ஆனால் பர்சின் சொந்தக்காரன் கண்டு விட்டான். பொலீசாரிடம் ஒப்படைக்கப் பட்டான். ஆறுமாதம் சிறைவாசம் கிடைத்தது. தன் சிறை வாசத்தை நீக்கி விடுமாறு பாராளுமன்ற உறுப்பினரிடம் கூடக் கெஞ்சினான். ஏனெனில் தேர்தல் காலங்களில் அந்த உறுப்பினருக்கு எவ்வளவோ திருட்டுதவிகள் புரிந்தவன். ஆனால் அவ்வுறுப்பினர் விரும்பினாலும் சட்டம் அவனை ஆறுமாதம் சிறைக்கம்பி எண்ணத்தான் செய்தது.

சிங்கோ சிறையிலிருந்த காலத்திலே இலங்கையில் தேர்தல் முடிவு அரசாங்கத்தை மாற்றிவிட்டது. ஆட்சிபீடம் முழுதான மாற்றம் பெற்றது.

புத்தஜெயந்தியும் வந்தது. ஆறுமாதம் நிறையுமுன்பே விடுதலையும் சிங்கோவுக்குக் கிட்டிவிட்டது. சிறை செல்லும் போது மெனிக்காவுக்குக்கூடச் சொல்லவில்லை; சொல்ல வசதியுண்டாகவில்லை. மெனிக்காவின் கதி? உழைக்கத் தெரியாத வளா...? இருந்தும் பிச்சையேந்த வேண்டியது தானே!

துயரத்துடன் காலிப்புகையிரத ஸ்தானத்திற்கு வந்தான். மெனிக்கா உட்காருமிடத்தைப் பார்த்தான். அவள் அங்கே இருந்தாள். ஆனால் மெலிந்து - உருமாறி நோய் கொண்டவளாயிருந்தாள். சிங்கோவை இழந்த ஏக்கமும். பசியின் கோரமும் அவளை உருமாற்றின. சிங்கோவைக் கண்டதும் மெனிக்காவின் மனதிலே ஓர் மகிழ்ச்சி, உடலிலே ஓர் குதூகலம்!

நாட்கள் சில ஓடின.

மொழி மனிதனின் நாகரிக வளர்ச்சி காட்டும் உயிரிய பொருள். தாய்மொழியைத் தம் விழியாகக் கொள்ளல் மனிதர் கடன்.

இலங்கையில் சிங்களமும் தமிழும் ஆட்சிபீட மேற் வேண்டியது நீதி, உரிமையும் கூட. ஆனால் ஹிட்லரின் வாரிசுகள். ரஸ்புடீனின் வழி செல்லும் மஞ்சள் காவிகள் ஆட்சியைத் தன்பக்கம் திருப்பி, சிங்களமே ஆட்சிமொழியாக்க முனைந்தனர். தாய் தடுத்தாலும் நம்மொழி வீழவிடேன் எனத் தமிழர் உரிமை முழக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிட்டனர். தோள் நிமிர்த்தி சிங்கமாகி, மனத்திண்மை கொண்டு சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பிக்கத் துணிந்தனர்.

காலிமுக மைதானத்தில் தமிழரின் சாத்வீகப் போராட்டம். தமிழுரிமைகோரி சத்தியாக்கிரகம்! காந்தியின் வழியிலே போர் - அறப்போர் - அது தமிழரின் உரிமைப்போர்.

அறப்போரை அழித்து விட - தடுத்துவிட ஆட்சி பீடமேறிய பிரமுகர்களின் ஆணவப்பார்வை. அதனால் பல திருடருக்கும், ஏழைகளுக்கும் உழைப்பு. புஞ்சிசிங்கோவின் கையிலே நீல ரூபா நோட்டு. சத்தியாக்கிரகிகளுக்குத் துன்பம் கொடுக்கத்தான்; அடி பழகத்தான், காலியிருந்து கொழும்பு நோக்கிப் பிரயாணமானான். அறப்போர் வீரர்களைத் துரத்தும் திருட்டுப்படையில் அங்க மானான். சிங்கோவின் கையிலே ஒரு மணிக்கூடு. பையிலே இரண்டு 'மணிபர்சு'. 'பர்சு' நிறையப் பணம். மகிழ்வுடன் காலி வந்தான்.

''ஒரு நாளுமில்லாத மகிழ்வுடன் உள்ளீர்களே'' என்றாள் மெனிக்கா.

''மெனிக்கே, 'அப்பே லங்கா'...'சிங்கள லங்கா...' ஜெய வேவா'' - புஞ்சிசிங்கோ மகிழ்வுடன் கூறினான். தன் கையிலிருந்த மணிக்கூட்டை எடுத்தான். பணத்தை வெளியே எடுத்து எண்ணி னான்.

மெனிக்கா திகைத்தாள். சிங்கோ எங்கேயோ திருடி விட் டானே; திரும்பவும் சிறைக்கூடமல்லவா போகப் போகிறானே யென துயரடைந்தாள்.

சிங்கோ சிரித்தான்.

''இதுவெல்லாம் தமிழாக்களின் பொருட்கள். களவல்ல. பார்க்கப் பார்க்க - சொந்தக்காரர் அறிய, ஆட்சியறிய எடுக்கப் பட்டது.''

ஆச்சரியமுடன் பார்த்தாள் மெனிக்கா.

''திகைக்காதே மெனிக்கா, தமிழுக்கு உரிமை கேட்டுச் சத்தியாக்கிரகமென்று ஏதோ தமிழர் செய்கிறார்கள் தெரியுமோ? அதற்கு நம் ஆட்சியினர் எதிர்ப்பு. தமிழரைக் கலைக்க நமக்குப் பணம், அதுமட்டுமல்லாது, சத்தியாக்கிரகிகளிடம் இருக்கும் பணம் பொருட்கள் யாவும் நமக்கு''

''சிறைக்கு அனுப்பாதா அரசாங்கம்'' எனக்கேட்டாள் மெனிக்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவர்கள் நம் துணைவர். நாம் சிறு திருடர்... அவர்கள்... பெரும்.....''

கைகொட்ட முடிந்தது அவளால். ஏனா? ஏழையின் பசி நீங்க முடிகிறதல்லாவா?

''இனி மேல் நமக்குப் பயமில்லை'' எனக் குரலிட்டாள் மெனிக்கா.

''ஆமாம் மெனிக்கா! இது நமது லங்கா (அப்பேலங்கா) சிறைக்கு என்போன்ற கொள்ளைக் கூட்டம் போகாது இனிமேல். வேண்டுமானால் 'அப்பேலங்கா'ப் பாராளுமன்றத்துக்கு நாம் போவோம்!''

மெனிக்காவின் கன்னம் சிங்கோ கரத்தால் தடவப்பட்டது. அம்முரட்டுக்கை கறுப்புக் கன்னத்தை ஊன்றித் தடவினதால் ஓர் சிறு ஒலி எழுந்தது. அவ்வொலி ''அப்பேலங்கா'' என்பது போலிருந்தது.

(சுதந்திரன் 24.06.1956)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி

கே. டானியல்

வள்ளிக்கு வயது அறுபதுக்கு மேல் ஆகிவிட்டது ஆனாலும், அவளை வள்ளிக் கிழவி என்றோ, வள்ளிப் பாட்டி என்றோ யாருமே அழைப்பதில்லை. அவளுக்கு முன்னால் பல்லுத் தெறிக்க 'வள்ளி' என்பார்கள்; அவள் இல்லாத இடத்தில் 'சாக்காட்டு வள்ளி' என்பார்கள்.

கூன் விழுந்து, குறுகி, கண்கள் பஞ்சடைந்து, சதைவற்றித் தொங்கலாகி, தோல் சுருங்கி, பற்களற்று, உதடு தடித்து முன் தள்ளி, தலை பஞ்சு நிறமாகிப்போகும் வரையில் அவள் வாழ்ந்து விட்டாள். இத்தனை வயதாகியும் - கிழடு தட்டியும், அந்தக் குரல் மட்டும் - வெண்கல நாதமாக - தெட்டத் தெளிவாக ஒலிக்கின்றது.

சீமான் வீட்டுக்காரர்களுக்கெல்லாம் வள்ளியிடம் பேரன்பு! வள்ளி செல்லப்பிள்ளை. அரை வேளையாவது பட்டினியே கிடக்க மாட்டாள். அவள் பட்டினி கிடக்க யாருமே விடமாட்டார்கள். அந்தக் கிராமத்திலுள்ள கல்லாலான வீடுகளைக் கணக்கிட்டால், சுமார் ஐம்பது வீடுகளாவது தேறும். அப்படித் தேறிய கல்வீட்டுப் படிகளை, நாளொன்றுக்கு ஒன்று வீதம் தாண்டிச் சென்றால் அவள் வாழ்வு பக்குவமாகக் கழிந்துவிடும் ஆமாம், வள்ளி அப்படித்தான் வாழ்ந்தாள். அதில் அவளுக்குப் பரம திருப்தி மட்டுமல்ல, பெருமையுங்கூட.

"பாட்டி, நீ இந்தக் கல் வீட்டுக்காரங்களை நம்பி எத்தனை காலம் தான் வாழப் போறாய்? உன்ரை சாவுக்கு யாருமே வந்திடமாட்டாங்க." - இப்படி வள்ளியின் தூரத்து உறவுப் பேரனான கிட்டிணன் அவளை ஆயிரந் தடவை எச்சரித்திருக்கிறான்.

"போதுமடா, கிட்டிணா போதும்! நீ செல்வச் சீமானாகி இந்த ஊரையே ஆளப்போறாய்! உன் பொஞ்சாதி பிள்ளையளைக் காப்பாத்த முடியாம ஆலாப் பறக்கிற நீ, என்னைச் சாக்காட்டப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போறாய்! என் கால் படாத கல்வீட்டுப்படி இருக்கா இந்த ஊரிலே? கிட்டிணா, நீ தான் பாரன், என்னைக் கண்ணாடிப் பெட்டியிலே வைச்சு, பல்லக்கிலே சொமந்து கொண்டுபோக, பணக்காரங்க ளெல்லாம் நான் நீயெண்டு சண்டை போடுறதை நீ தான் இருந்து பார்க்கப்போறே. ஒரு சல்லிக்காசும் எனக்காகச் செவழிக்காம நீ தான் இருந்து பார்த்துக் கொள்வாய்!''

கிட்டிணனின் எச்சரிக்கைக்கு வள்ளி இப்படித்தான் பதில் சவால் விடுவாள். ஆயிரந்தடவை சொல்லித் தீர்த்துவிட்டாள்.

பொக்கை வாய்க்குள் வெற்றிலையைக் குதப்பி, கடை வாயால் செங்குருதி போன்று வெற்றிலைச்சாறு உமிழ் நீராய் வடிய, நெஞ்சை நிமிர்த்தி - ஆணவமாக வள்ளி இதைக் கூறும் போது அவள் குரலிலே இருக்கும் மிடுக்கும், தெளிவும், நம்பிக்கை யும் யாருக்கு வரும்?

2.

வள்ளி.

இந்த வள்ளியென்ற தனிப்பெயர் மாறிச் சுமார் நாற்பது வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இப்போது அவளின் பெயர் சாக்காட்டு வள்ளி!

சுமார் ஐநூறு குடும்பங்கள் உள்ள அந்தப் பிரதேசத்தில் வள்ளி அவதரித்தாள். சுருட்டுக்கார அப்புக்குட்டிக்கும், சீதேவிக் கும் அவள் செல்வமகள்!

பதினாறாவது வயதில் கல்யாணம் செய்து கொண்டு இருப தாவது வயதில் தாலியை அறுத்துவிட்டு, அதைத் தொடர்ந்து பெற்றோரையும் பறிகொடுத்துவிட்டு, ஒண்டிக்கட்டையாக வள்ளி வாழ்ந்து வந்த காலம்; பொல்லாத காலம்!

''வள்ளி, வாழற வயசு. நடந்ததெல்லாம் கனவிலே நடந்ததாக நினைத்துக் கொண்டு புதிசாக வாழத் தொடங்குவமே!''

''வள்ளி, ஒண்டிக் கட்டையாக எவ்வளவு காலத்துக்குத்தான் இப்படி வாழப் போறாய். உறவு சொந்தமெண்டு ஆயிரமிருந் தாலும், நீ படர்ந்து பிடிக்க கொம்புக்கு ஆத்திரத்துக்கு யாரும் நிக்கமாட்டான். உனக்குப் பிடிச்சு ஒருத்தனை.....''

''ஊம் மென்று ஒரு சொல்லுச் சொல்லடி பிள்ளை. நான் பேசி முடிவு செய்யிறன்! செல்லன்ரை மோன் அப்பையன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தவளைப் பறிகுடுத்திட்டு ஒண்டியாத்தான் இருக்கிறான். நான் சொன்னா அவன் தட்டிப் பேசமாட்டான். சொல்லடி வள்ளி!''

''இந்தா வள்ளி நீ என் சிநேகிதியாயிருந்தாக் கட்டாயம் கட்டித்தான் ஆகவேண்டும்! என் அண்ணன் உன்னைக் கட்ட மாட்டனெண்டு சொல்ல மாட்டார்! உன்னைப் பத்தி அவர் வாய் நிறைய அனுதாபப்படுகிறார்!''

''ஏன் வள்ளி, நீ இப்படித் தனியா வாழுறாய்? உனக்கு ஒண்டும் அவசியமாகப்படவில்லையே!''

''வள்ளி, உன் உடம்பெல்லாம் தங்க நகையாய் அலங்கரிக் கிறன். உன்பேருக்கு நிலங்கூட எழுதி வைக்கிறன். பிறக்கும் குழந்தைக்கு என் சொத்து முழுதும் குடுக்கிறன். உன்னை என் ராஜாத்தியாட்டமா வெச்சுக் காப்பாத்துறன், ஊம் எண்டு சொல் லிடு. 'இவன் என்ன ஒரு பொஞ்சாதி பத்தாதெண்டு இரண்டு பொஞ்சாதி வைக்கப் பார்க்கிறான்' எண்டு தப்பா நினைச்சுடாதே. அவ சும்மா பேருக்கு - உலகத்துக்குச் சொல்றதுக்கு, ஆனா, நீ மட்டுந்தான் என் நெஞ்சில லச்சுமியாயிருப்பாய். நிச்சயமாகச் சொல்றன் வள்ளி; ஊம் எண்டு சொல்லிடு வள்ளி!''

இப்படி எழுந்த ஓராயிரம் கேள்விகளுக்கெல்லாம், வள்ளி ஒரே பதிலைத்தான் சொல்லி வந்தாள்!

''அவசியம் வாறபோது கட்டாயமாக நான் சொல்லுறன்''

அப்போதைக்கப்போது ஏதோ ஆபாசமான உணர்ச்சிகள் - துடிப்புகள் - எண்ணச் சுழற்சிகள் வந்தும் போயும் கொண்டே இருந்தன. ஆனாலும் வள்ளி ஒழுக்க வரம்புக்கு மீறி வாழத் துணியவில்லை. ஏதோ ஒன்று - மனதோடு ஒட்டிப் போய்விட்ட ஒன்று - அவளை அப்படி வாழ வைத்தது.

இரண்டு பால்மாடுகளை வைத்துக்கொண்டு, பால் போத்தில் களுடன் மாடி வீட்டுப்படிகளில் எல்லாம் ஏறி இறங்கும் வாய்ப்பை அவள் தேடிக் கொண்டாள். அந்தச் சீமான் வீட்டார்களுக்கெல்லாம் அவள் ரொம்பவும் பிடித்துப் போய்விட்டாள்.

3.

காலம் அந்தப் பகுதியில் ஒரு பொருளாதார மாற்றத்தைக் கொண்டு வந்து விட்டது. கிராமத்தின் மேற்குப் புறத்தில் சுமார் ஐம்பது குடும்பங்கள் ஒதுங்கி வாழும் நிலையை, காலம் தானாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டி வைத்தது, ஒரே உறவினர் என்று நீண்ட காலம் வாழ்ந்து விட்ட அவர்களுக்கும் தெரியாமல், ஆனால் பகிரங்கமாகத் தாங்களாவே ஒதுங்கி வாழ்ந்து வந்தவர்கள், வள்ளியின் காலத்திலேயே மற்றவர்களிடமிருந்து முற்று முழுதாக விடுபட்டு, தனி ஒரு வர்க்கமாகி விட்டார்கள். அதனால் அந்தப் பகுதி 'வியாபாரி மூலை' என்ற பெயர் பெற்றுவிட்டது.

அத்தனையும் கல் வீடுகள்!

ஒருவருக்குப் பட்டணத்திலேயே இரும்புக் கடை, அவரைச் சுற்றி இரும்புக் கடை வைத்தியலிங்கம் குடும்பம் என்ற பெயர்.

மற்றவர் ஜவுளிக் கடை, அவரைச் சுற்றி ஜவுளிக்கடைச் செல்லையா குடும்பம் என்ற பெயர்.

அடுத்தவர் பலசரக்குக் கடை. அவரைச் சுற்றிப் பல சரக்குக் கடை வேலுப்பிள்ளை என்ற பெயர்.

அதற்கும் அடுத்தவர் வெளிநாட்டுப் புகையிலை வியாபாரி, அவரைச் சுற்றிப் புகையிலை ஆறுமுகம் குடும்பம் என்ற பெயர்.

இன்னொருவர் சோடாக் கம்பனி வைத்திருந்தார். அவரைச் சுற்றி சோடாச் சுப்பையா பிள்ளை குடும்பம் என்ற பெயர்.

வேறொருவர் நிலப் பிரபு. அதாவது நிலம் குத்தகைக்கு விடும் முதலாளிக் கமக்காரன். அவரைச் சுற்றி கமக்காரக் கந்தப்பு குடும்பம் என்ற பெயர்.

இப்படியே குடும்பம் குடும்பமாகப் பிரிந்து, பின் ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் அத்தனை கல்வீட்டுக்காரர்களும் ஒரே பந்தி போசனம், ஒரே வர்க்கம்!

கிராமத்தின் ஏகப்பட்ட உறவு என்பது விட்டுப் போய், கல்யாணம் செய்து கொள்வதிலிருந்து, கட்டையிலே போகும் சம்பவங்கள் வரையிலே அந்த ஐம்பது குடும்பங்களும் ஒரே வட்டத்துள் நின்றன. யாரும் பிடித்து வைக்காமலே ஏனைய குடும்பங்களும் வேறோர் வட்டமாகியே விட்டன. ஆனால் பெரிய வட்டம்; எண்ணிக்கையில் அதிகமானோரைக் கொண்ட வட்டம்!

பெரிய வட்டத்துள் நின்று புறப்பட்டு, பால் வியாபாரியாக, தூரத்து உறவு முறை சொல்லிக் கொண்டு மாடிப் படிகளில் ஏறி இறங்கிய வள்ளியை, புதிதாக சந்தித்த ஒரு தொழிலால், அந்தச் சிறிய வட்டம், விநோதமான ஒரு பாத்திரமாக்கி தன்னுள்ளே இழுத்துக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐவுளிக் கடைச் செல்லையா பிள்ளையின் தாயார் அன்னம் மாளாச்சி, கூனிக் குறுகிய கிழம்! இரண்டு வருடங்களாக அது பாயோடு ஒட்டிக் கிடந்தது.

சுய உணர்வற்று, என்றோ செத்துப் போய்விட்ட உறவினர் களுடன் சம்பாஷித்துக்கொண்டு, அன்னம்மாளாச்சி கடந்த பதி னைந்து நாட்களாகக் கிடக்கிறாள். மூச்சுத் திணறி, மார்பு உயர்ந்து, கண்கள் சொருகி, வாய் அகலத் திறந்துகொண்டு சாவு வரும். எல்லோரும் தொண்டையைக் கனைத்துக் கொண்டும், கண் வாய் பொத்தத் தயாராகிக் கொண்டும் பாலை வாயிலே ஊற்றுவார்கள். மறுகணம் மூச்சுத் தெளிவாகி, மார்பு பதிந்து, கண்கள் தணிந்து, வாய் மூடி அன்னம்மாளாச்சி எல்லோருக்கும் 'டிமிக்கி' கொடுத்தாள்.

இப்படி எத்தனையோ தடவைகள்!

பதினைந்து நாட்கள்! கூடியிருந்த பெண்களுக்கெல்லாம் சலிப்புத் தட்டிவிட்டது. ''நூறு வயதாகியும், உலகத்துப் பந்த பாசங்களை விட்டிட்டுப் போக மனமில்லாது கிடக்குதே'' என்ற முணுமுணுப்பும் கேட்டது. குடு குடு கிழம் இப்படி ஏமாற்றிக் கொண்டேயிருந்தால் சலிப்பு வராமல் வேறென்ன வரும்?

கைராசிக்காரர் என்று கூறிக்கொண்டு எத்தனைபேர் கிழவி யின் வாய்க்குள் பால் வார்த்துப் பார்த்துவிட்டனர். அன்னம்மா ளாச்சி இலேசுப்பட்ட பேர்வழியல்ல. எல்லோரையும் வென்று விட்டு மிடுக்காகவே இருந்தாள்.

அப்போதுதான் வள்ளி வந்தாள். அன்னம்மாளாச்சியின் மேல் வள்ளிக்குப் பெருமதிப்பு, கிழத்தின் மார்பிலே கையை வைத்து - நிலைமையை அனுதாபத்தோடு நோக்கினாள். அதே வேளை அன்னம்மாளாச்சியின் மூச்சுத் திணறி, மார்பு உயர்ந்து. கண்கள் சொருகி, வாய் அகலத் திறந்து....

''வள்ளி, கைராசிக்காரி! உன் கையாலேயே பாலை எடுத்து ஆச்சியின் வாயில் ஊற்று''

எங்கோ இருந்து வந்த இந்தக் குரலுக்கு இயந்திரம் போலாகி, கோப்பைக்குள் இருந்த பாலைக் கரண்டியால் எடுத்து அன்னம் மாளாச்சியின் வாயில் விட்டாள் வள்ளி.

அன்னம்மாளாச்சியின் மூச்சு..... ஆமாம் நின்று விட்டது; நின்றே விட்டது.

வள்ளி 'கோ வென்று கத்தினாள். உறவெல்லாம் விட்டுப் போய்விட்ட அந்த அன்னம்மாளாச்சியின் மேல் அனுதாபப் பட்டா? அல்லது கொலைகாரி ஆகிவிட்டேனே என்பதற்காகவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கிழம் சாகுதில்லையே!'' என்று அலுத்துக் கொண்டவர் களெல்லாம் விழுந்தடித்துக் கொண்டு. ''ஐயோ பேத்தி ஐயோ ஆச்சி எங்களை விட்டுட்டுப் போறியே, எங்க ராசாத்தி போகாதை யணை'' என்றெல்லாம் பிலாக்கணம் கொடுத்தார்கள்!

கண்ணீர்; ஒப்பரி; பிரலாபம்!

முதற் குரல்கள் ஓய்ந்து கொண்டு போயின.

''வள்ளி கைராசிக்காரிதான்!''

அடுத்து இந்தக் குரல் பல கோணங்களிலுமிருந்து எழுந்தது. இது வள்ளியின் மார்பைக் குத்திக் குத்திக் கிழித்தது. அவள் இன்னும் விம்மிவிம்மி, அழுது கண்ணீர் விட்டுக் கொண்டே இருந்தாள்.

4.

ஒன்று, அதை அடுத்து இன்னொன்று, அதற்குப் பிறகு வேறோன்று, இப்படியே வள்ளியின் கைராசி ஊர்ஜிதமாகியது. ஆரம்ப காலத்தில் பயமாகவும், நமைச்சலாகவும் இருந்த உணர்வு கள் மாறி, மனசு கல்லிப்போய் வந்தது. பாலை எடுத்து வாய்க்குள் வார்க்கும் வேளையைத் தொடர்ந்தது. ஆள் காட்டி விரல், மோதிர விரல்களால் இமைகளை மருவி மூடி, உள்ளங்கையின் அடிப் பாகத்தால் நாடியை நெருடி அலகுப் பூட்டை இறுக்கி விடவும், மறுகரத்தால் பிணத்தின் இரு கரங்களையும் தூக்கி மார்புக்கு நேரே பின்னி விடவும் வள்ளி கற்றுக் கொண்டாள்.

அது ஒரு நுட்பமான கலை! எல்லோருக்குமே சுலபத்தில் கைவராத ஒன்று. புதிய தொழில் வள்ளிக்குக் கிராக்கியை உண்டு பண்ணியது. வள்ளியைக் கெட்ட நோக்கத்தோடு அணுகியவர் களெல்லாம் இப்போது கௌரவத்துடன் அணுகினார்கள். எதற்குமே இறங்கிவராத கல்வீட்டார்களெல்லாம் சாவு வரும் நேரங்களில் வள்ளியை அணுகியே ஆக வேண்டியிருந்தது. பிரசவ வேதனை கண்டவுடன் எப்படி நாட்டு மருத்துவச்சியிடம் ஓடிச் சென்று அழைத்து வருவார்களோ, அதேபோல, வைத்தியர் கைவிட்டு மரண வேதனையானதும் வள்ளியிடம் ஓடிச்சென்று வள்ளியை அழைத்து வருவது அந்தக் கிராமத்துச் சம்பிரதாயமாகி விட்டது.

வள்ளியின் கைராசி! அவள் போய், நோயாளியைத் தொட்டு, பாலை வார்த்ததுதான் தாமதம், மூச்சுத்திணறி, மார்பு உயர்ந்து, கண்கள் சொருகி, வாய் அகலத் திறந்து....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண நோட்டுக்களை அள்ளி வீசிக் கொலைகளைச் செய்விப் பவர்கள் குடும்பத்துள் சாவு வருகிறது என்றவுடன், வள்ளியின் தயவைத்தான் நாடி நிற்கின்றனர். கோழைகள்!

அந்தப் பகுதியின் குடிசை வீட்டார்கள் யாருமே வள்ளியின் உதவியை நாடுவதில்லை. ஏனெனில் சாவைப் பற்றி அவர் களுக்குப் பீதி வருவதில்லை! வெளியூர்க்காரர்களே வள்ளியின் பெருமையை உணர்ந்து வாகனங்கள் கொண்டு வந்து அவளை ஏற்றிச் செல்லும்போது, இந்தக் குடிசையில் வாழ்பவர்கள் எல் லாரும் அவளை அலட்சியம் செய்வதென்றால் அவளுக்கு ஆத்திரம் வராமல் வேறென்ன வரும்?

சாவிலும் எத்தனையோ வகையறாக்கள்! ஒவ்வொரு சாவும் வரும்போது வள்ளிக்குப் புதிய புதிய அனுபவங்களும் வரும்!

செத்துப் போன உறவினர்களோடு பேசும் மனிதர்கள். வியாபார வீழ்ச்சியைச் சொல்லி ஏங்கும் ஜீவன்கள், பாகப் பிரிவினையைப் பற்றியே பேசிக்கொள்ளும் ஆத்மாக்கள், ஜாதி மரபு சொல்லும் அப்பாவிகள்... இப்படி அந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போயிற்று. இத்தனை உயிர்களின் கடைசிக்காலப் பேச்சுக்களில்.....ஆசா பாச உணர்வுகளில் வள்ளி தன்னை லயிக்க விட்டதே கிடையாது.

சாக்காட்டுவது மதிப்புக்குரிய ஒரு தொழில் என்ற கண் ணோட்டத்தோடு தான் வள்ளி ஒரு கணிப்பு வைத்திருந்தாள். அந்தக் கண்ணோட்டத்தோடுதான் அவள் உயிர்களைப் பார்த்தும் வந்தாள். ஆனால் யாரிடமிருந்தும் ஒரு சல்லிக்காசேனும் அவள் பெற்றதில்லை.

சாக்காடு முடிந்ததும், முதல் முதலாகக் குரல் வைப்பவள் வள்ளிதான். அதற்குப் பின்புதான் ஏனையோர் குரல் வைப் பார்கள். எப்படியோ இது சம்பிரதாயமாகி விட்டது.

''நீங்கள் பாலோ பருக்கவில்லை... பக்குவங்கள் செய்ய வில்லை ....''

- வள்ளியின் இந்த முதற் குரலைத் தொடர்ந்து, சீமான் வீட்டாரின் நாகரீகப் பிரலாபங்கள் கேட்கும். ஓய்வு நேரங்களில் வள்ளியிடம் அழும் முறையையும், ஒப்பாரி வைக்கும் லயத்தை யும் கற்றுக்கொண்ட ஒரு சிலர் வள்ளிக்கு விட்டுக்கொடுக்காமல் லயத்தோடு அழுவார்கள். ஆனால் வள்ளிக்கு நிகர் வள்ளியே தான்! பிரேதம் எடுத்துச் செல்லும் வரையில் பந்தலுக்குள் நின்று,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர்களுக்கெல்லாம் கைகொடுத்து, பம்பரமாகச் சுழன்று மாரடித்து அழுது தீர்ப்பாள் வள்ளி.

''நீங்கள் கண்ணில் முழிக்கயில்லே... ஐயாவடை கைக் கடனோ தீர்க்கயில்லே...'' என்று வந்தோருக்கெல்லாம் ஒப்பாரி யால் குறைபாடுவாள்.

உறவு - சொந்தம் என்று சொல்லக்கூடிய யாருக்குமே வராத அளவுக்கு வள்ளி கண்ணீர் விடுவாள்- ஆறாகப் பெருக்குவாள்! எந்த உறவைக் கொண்டு தான் அவள் இப்படியெல்லாம் கண்ணீர் விட்டுத் தீர்க்கிறாளோ! இந்த நாற்பது வருடங்களில் எவ்வளவு கண்ணீர்!

5.

மில் முதலாளி சுப்பையா பிள்ளையின் வீட்டு வாயிற் படியைத் தாண்டும் போது வள்ளிக்கு மயக்கமாக வந்தது. கண்க ளுக்கு முன்னே ஏதோ ஒரு மஞ்சள் உலகம் தெரிவதைப் போல...

''வள்ளி...'' முதலாளி வீட்டார் எல்லோரும் ஏககாலத்தில் அழைத்தனர்.

''என்ன வள்ளி, மயக்கம் வருகிறதா?''

''தலையைச் சுற்றுகிறதா வள்ளி?''

''தண்ணீர் தரட்டுமா வள்ளி?''

எல்லோரும் கேள்வி கேட்டு அவளைத் திணறடித்தனர்.

''ஐயோ, இந்த வயசான வேளையில் படிக்கட்டுகளில் ஏறி இறங்கினால் மயக்கம் வராமல் வேறென்னவரும்?'' நோஞ்சலான சிங்காரி, தனது கிராப்புத் தலையைத் தட்டிவிட்டுக் கொண்டே கூறினாள். குடும்பத்தின் சகலருடைய அனுதாபமும் வள்ளியைக் குளிர வைத்தது.

வள்ளி பக்குவமாகச் சிமெந்து நிலத்தில் கிடத்தப்பட்டாள். அவசர அவசரமாக அடுத்த வீட்டில் விடுமுறைக்கு வந்திருந்த டாக்டர் மாணவன் தருமலிங்கம் அழைக்கப்பட்டான்.

அந்த வீட்டில் காலடி எடுத்துவைக்கச் செய்த வள்ளியைத் தருமலிங்கம் உள்ளுக்குள் வாழ்த்தினான். அந்த வீட்டுக் கிராப்பு மோகினி சரசாவிடம் அவனுக்கு மையல்! டாக்டர் கிடைப்ப தென்றால் அவளுக்கும் ஆசை இருக்காதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஸ்டெதஸ்கோப்' சகிதமாக தருமலிங்கம் ஓடோடி வந்தான் நெற்றியைச் சுருக்கிக் கண்களைக் கூசி, தோள் மூட்டுக்களை உயர்த்திச் சிலிர்த்து, தளுக்குமினுக்காக வைத்தியம் பார்த்தான். சரசாவும் பக்கத்திலே தான் நின்றாள்.

பரிசோதனை முடிந்ததும் சரசாவின் அம்மாவை - மாமியை அடுத்த அறைக்கு அழைத்துச் சென்று ஏதோ பேசினான்.

''கிழவிக்கு நோய் கெட்டது. திரும்பவும் மயக்கம் வந்தால் கிழவி செத்தே போய்விடும். ஒரு மணி நேரத்திற்குள் திரும்பவும் மயக்கம் வரலாம்''

வள்ளியின் காதுகளுக்கு இந்த வார்த்தைகள் தெளிவாகக் கேட்டன. அவளுக்கு மனம் சுள்ளிட்டது; உடலெல்லாம் வியர்த் துத் கொட்டியது.

''வள்ளி, இப்போ என்ன செய்யுது?''

''கொஞ்சம் பரவாயில்லாம இருக்கு.....''

''ச்சோ... ச்சோ... மெதுவாக எழுந்திரு. அங்குமிங்குமாகத் திரிஞ்சு உடம்பை துடைத்து விட்டு கொண்டே அவளை ஊக்கு வித்தாள்.

முண்டித் தாவிக் கொண்டு வள்ளி எழுந்திருக்க முயற்சித் தாள்; முடியவில்லை, சுயமரியாதை உணர்வு அவளை எழுப்பி வைத்தது.

வாயிற்படி வரையில் வந்து வள்ளியை வழி அனுப்பி வைத்து விட்டு, வெளிக் கதவை மூடிக்கொண்டாள் சீதேவி அம்மாள்.

வள்ளிக்கு அழுகை வந்து விட்டது. சீதேவி அம்மாளை மட்டும் வைத்துக்கொண்டு. அவள் தன்னுடைய தோல்வியை ஒப்புக்கொள்ள விரும்பவில்லை.

''வள்ளிக்கு நோய்! ஒரு மணிநேரத்தில் செத்துப் போய் விடுவாள்'' என்ற வதந்தி எங்கும் பரவிவிட்டது.

அடுத்து வந்த கல்வீட்டுப் படிகளில் கால் வைத்தாள்.

''ஏன் வள்ளி, உனக்குச் சுகமில்லையாமே? இந்தக் காலத் திலே திரியலாமோ? போ வள்ளி, போய் வீட்டிலே பக்குவமாகப் படுத்துக்கொள்ளு! சுவர் இருந்தாத்தான் வள்ளி சித்திரம் வரைய லாம். போய் ஓய்வெடுத்துக்கொள்!'' வாயிற் கதவின் குறுக்கே நின்று கொண்டு. செல்லையா பிள்ளையின் மனைவி வள்ளிக்கு ஆலோசனை கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளியின் உடம்பிலே நெருஞ்சி முட் கற்றையால் அடிப் பது போல இருந்தது அந்த ஆலோசனை. கண்களிலே கண்ணீர் தேங்கத் தலை குனிந்தபடி நடந்தாள் வள்ளி, சிறிது நேரத்திற்குப் பின், அவள் கமக்காரன் வீட்டுப் படிக்கட்டில் நின்றாள்.

''ஏன், வள்ளி, இப்படி அவதி அவதியாக நடந்திட்டு வாறாய்? கொஞ்சம் கூட யோசனையில்லையே. நோய் வந்திட்டா வீட்டோடு கிடந்து ஓய்வெடுத்து நோயைக் குணப்படுத்தாமல் காத்தாப் பறந்திட்டுத் திரியிறாய். இந்த நிலையிலே கூட, நீ காத்தாப் பறந்தா வேலை செய்ய வேணும்? போ வள்ளி, போய் ஓய்வு எடுத்துக் கொள்'' கமக்காரன் இலேசான கண்டிப்பாக வள்ளியிடம் உரிமை வைத்துப் பேசினான்.

வள்ளி மரமாக நின்றாள்.

கள்ளுக் கந்தன் கள்ளுமுட்டி சகிதம் வந்து கொண்டிருந்தான்.

''கந்தா வள்ளியைக் கூட்டிப் போய் அவ வீடு மட்டும் பக்குவமாய் விட்டிட்டு வா. பாவம், வள்ளி நடக்க முடியாமக் கஷ்டப்படுவது. லேசாகப் பிடிச்சிட்டுப் போ!''

''வள்ளியாச்சி, வாங்காச்சி!''

கந்தன், வள்ளியின் தொங்கு சதைக் கரங்களைப் பரிவோடு பற்றினான்.

வள்ளிக்கு இதுவரை மனசோடு புதைத்து வைத்திருந்த ஒன்றை அப்படியே வைத்திருக்க முடியவில்லை. விம்மிப் பொருமி வெடித்து அழுதாள்.

கண்கள் மின்னியது, மறுபடியும் இந்த மஞ்சள் உலகம் தெரிவது போல...

தலையைச் சுற்றிக் கொண்டு வந்தது. வள்ளி துவண்டு சரிந்து.....

நல்ல காலம், கள்ளுக் கந்தன் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

கந்தன் மடியிலே வள்ளியின் தலை கிடந்தது.

மூச்சுத் திணறி, மார்பு உயர்ந்து, கண்கள் சொருகி வாய் அகலத் திறந்து.....

வள்ளிக்குப் பால் வார்க்க யாருமில்லை; பாலும் இல்லை.

அவசர அவசரமாகக் கையை நீட்டி, பக்கத்தே. இருந்த முட்டிக்குள் துழாவி ஒரு கை கள்ளு மண்டியை அள்ளி வள்ளி யின் வாயிலே விட்டான் கந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி முடறு முறிக்கும் ஓசை தெளிவாகக் கேட்டது. அந்த முகத்திலே ஒரு பொலிவும் தென்பட்டது.

அவசரப்படாமல், நிதானமாகக் கண்ணையும் வாயையும் பொத்தி கனகச்சிதமாகக் கந்தன் காரியத்தை முடித்து விட்டான்.

வள்ளி, கந்தனின் மடியிலே பிணமாகக் கிடந்தாள்.

கல்வீட்டுக்காரர்கள் அத்தனைபேர்களும் கூடி நின்றார்கள். கந்தனின் கண்ணீர்ச் சொட்டுக்கள் வள்ளியின் முகத்தை நனைத்தன. மற்றவர்கள் வள்ளிக்காக ஏன் அழ வேண்டும்?

சீமான்களும் சீமாட்டிகளும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்த படி நின்றார்கள்.

தொலைவில் எங்கோ ஜன இரைச்சல் கேட்டது.

குழந்தைகள், குட்டிகள், கிழங்கள், குமர்களாக ஜனக்கூட்டம் வள்ளியைச் சுற்றிச் சுற்றிக் கதறியது.

வள்ளியின் தூரத்துப் பேரன் கிட்டிணன், கால்மாட்டில் இருந்து கண்ணீர் வடித்துவிட்டு, கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, வள்ளியை அள்ளித் தூக்கினான்.

''கிட்டிணா, பொறு! நாமெல்லாம் தலைக்கு ஒன்றோ இரண்டோ போட்டு வள்ளியின் தகனத்தை முடிச்சிடறோம்.

''இங்கே யாரும் பிச்சை எடுக்க வரயில்லை, உங்களை யாரும் பிச்சையும் கேக்கயில்லை!''

கமக்காரனின் நீண்ட அனுதாபத்திற்கு முகத்தில் அறைந்தது போன்று பதில் கொடுத்துவிட்டு, வள்ளியை நிமிர்த்தினான் கிட்டிணன்.

கந்தனும் கால்புறத்தே பிடித்து நிமிர்த்தினான். வெள்ளாடிச்சியை தூக்குகிறோமே என்ற கூச்சம் அப்போது அவனுக்கு இல்லை.

கள்ளுக் கந்தனும், தோட்டக்கார ஏழைக் கிட்டிணனும் வள்ளியை எடுத்துச் செல்ல, அந்த ஜனக்கூட்டம் -அநாகரிகக் கூட்டம் - கந்தல்த் துணிக் கூட்டம் - அழுக்குப் பிடித்த கூட்டம் - வள்ளிக்குப் பின்னால் அழுது கொண்டே சென்றது.

இதைக் காண வள்ளி இல்லை. உலக வியாபகமான இந்த நடைமுறைச் சம்பவத்தைக் காணக் கொடுத்து வைக்காமல். அவள் அந்த மனிதக் கூட்டத்தின் ஆத்மாக்களில் ஐக்கியமாகி விட்டாள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்மையில்லாதவன்

செ. கணேசலிங்கன்

"அண்ணா, உங்களிடம் ஒரு உதவி கேட்க வந்தேன். நீங்க எனக்கு எப்படியும் இந்த உதவியைச் செய்ய வேண்டும்."

அன்று காலைதான், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தில் என் கிராமத்துக்கு உறவினரின் திருமணத்திற்காக வந்திருந்தேன். கிணற்றடியில், கால் முகம் கழுவிக் கொண்டிருந்தேன். குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். எதிர் வீட்டுப் பெண் புஷ்பம். சோர்ந்த முகத்தில் புன்னகையை வரவழைத்தபடி வாஞ்சையுடன் நின்றாள். உதவியை உரிமையுடன் கேட்கும் வார்த்தைகள்.

எங்கள் கிணறு பங்குக் கிணறு. நாலு குடும்பங்களுக்கு உரிமை. இரண்டு ஏற்றமிறைக்கும் துலா, கிணத்தில் தண்ணீர் அள்ளியே தண்ணீரைக் குடிப்பேன். அந்தத் தண்ணீரின் சுவையே தனி, கொழும்பில் குளோரின் கலந்த தண்ணீர் நாள் முழுவதும் குழாயில் ஓடினாலும் கிராமத்திலுள்ள எங்கள் கிணற்றுத் தண்ணீர் போலாகாது. கால் முகம் கழுவுவது, குளிப்பதற்கும் கிணற்றடிக்கே செல்வேன்.

புஷ்பம் எங்கள் வீட்டுக்கு வருவதில்லை. தம்பி மனைவியோடு பிரச்சனையாயிருக்கலாம். அது பற்றி நான் விசாரிப்பதில்லை. கிராமத்தில் தங்கும் வேளை, காலையில் வேப்பங்குச்சியுடன் ஒரு தடவை அவர்கள் வீட்டுக்குச் சென்று சுகம் விசாரிப்பேன். விதவையான தாயாரும் மற்றொரு சகோதரியுமே வீட்டில், ஆட்டுப் பால் கலந்து காப்பி தருவார்கள். அது ஒரு தனிச்சுவை.

"என்ன புஷ்பம் அப்படி உதவி - சொல்லு. என்னால் முடிந்தால் செய்வேன் தானே"

"அது தான் கேட்க வந்தேன். எனக்கு உதவ இங்கு ஒருவருமில்லை. மகேந்திரனைப் பொலிஸில் பிடித்து....." அதன் மேல் வார்த்தைகள் எதுவும் வெளிவரவில்லை. நெஞ்சு அடைத்து விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நிலை சங்கடமாகி விட்டது. முகத்தைத் துடைத்தபடி அவளது முதுகில் தட்டித் தேற்ற முயன்றேன். கிணற்றடி. சுற்றிவர உள்ளவர்கள் விம்மல் சத்தம் கேட்டு எங்களைப் பார்க்கலாம் என்பதையே மறந்து அழுது கொண்டிருந்தாள். மச்சினி வந்து எட்டிப்பார்த்து விட்டு போய் விட்டாள்.

கிராமத்திற்கு வந்து விட்டால் கிணற்றடியில் அடுத்த வீட்டாரைப் பார்த்து சுகம் விசாரித்துக் கொள்வதும் வழக்கம். என்னை கிணற்றடியில் கண்டதும் மற்ற வீட்டுக்குப் பெண் குலவதி வந்து விடுவாள்.

''ஊரில் என்ன புதினம்'' என்று கேட்டுவிட்டால் போதும். அவள், ஊர்ச் செய்திகள் அனைத்தையும், சில நிமிடங்களில் தொகுத்துக் கூறிவிடுவாள். கலியாணம், சாவு, வாய் சண்டைகள் தொடக்கம் அரசியல் செய்திகள் யாவும் சொல்வாள். விடுதலை இயக்கங்கள் முகிழ் விடும் காலம். பொலிஸார் வேட்டை உட்பட யாவும் அவளிடமிருந்து அறிந்து விடலாம். கொழும்பிலிருந்து ரெயிலில் படிப்பதற்காக எடுத்து வரும் நூல்களை வீட்டிற்கே வந்து உரிமையுடன் எடுத்துக் கொள்வாள்.

சென்ற தடவை வந்து போதே, புஷ்பம், இயக்கம் சார்ந்த மகேந்திரனைக் காதலிக்கும் செய்தியை குலவதி சொல்லியிருந்தாள். அதன் பின், மறுநாட் காலை புஷ்பம் வீட்டிற்குச் சென்று. தாயாரிடம் சுகம் விசாரித்து, காப்பி சாப்பிடும் போது - புஷ்பம் முகமலர்ச்சியாகச் சிரித்துப் பேசினாள். அவளின் காதல் விஷயம் பற்றி எதுவும் பேசவில்லை. நானும் கேட்கவில்லை.

''எப்படி கவனமாகப் படிக்கிறாயா'' என்று மட்டும் கேட்டேன்.

''ஒரே அரசியல் பேச்சுத்தான் இங்கே. படிப்பிலே ஆருக்குக் கவனம்?'' தாயார் குறைபட்டாள்.

புஷ்பம் நிலத்தைப் பார்த்தபடி சிரித்தாள். எப்படியும் தன் காதல் விஷயம் பற்றி என் செவிக்கு எட்டியிருக்கும் என்பதை அறிந்திருப்பாள். குலவதியை சுற்றுவட்டத்தில் யாவரும் அறிவர்.

''இப்பொழுது மகேந்தரன் எங்கே.....?'' விம்மலும் அழுகையும் சிறிது ஓய்ந்ததும் கேட்டேன்.

''கொழும்பில் நாலாவது மாடியில் விசாரணை முடித்து விட்டு, பூஸா காம்புக்குக் கொண்டு போய் விட்டதாகச் சொன்னார்கள்''

வாராது கலைந்த முடியைப் பின்னி விட்டிருந்தாள். ஸ்கேர்ட்டும், கலர்விட்ட சர்ட்டும், முகத்தில் வடிந்த கண்ணீரை புறங்கையால் துடைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வீட்டுக்குப்போ, நாளைக்கு மாலைதான் கொழும்புக்குப் புறப்படுவேன். காலையில் அம்மாவையும் பார்க்க வருவேன், உனக்குத் தெரிந்த விபரங்களை எல்லாம் எழுதி வை கொழும்புக் குச் சென்றதும் என்னால் முடிந்தவரை முயல்வேன்.''

ஆறுதல் கூறி அனுப்பியதும், வேலிப்பக்கமாக நின்று யாவையும் கவனித்துக்கொண்டிருந்த குலவதி வந்தாள். அவள் என்னோடு வீட்டுள் நுழைந்து மகேந்திரன் கைதுசெய்யப்பட்ட விபரம் யாவும் கூறினாள். என் மச்சினியோடும் அவள் ஊர்வம்பு பேசிப் பொழுதுபோக்குவதில் நெருக்கம்.

''தாயார் காதலை எதிர்க்கவில்லையா.....?''

''முன்னர் பொலிடோலைச் சொல்லி மிரட்டுவார்கள். இப் போது தானே இயக்கத்தில் சேர்ந்து விடுவேன் என்று வெருட்ட முடிகிறது.''

குலவதி சிரித்தபடியே அங்குள்ள யதார்த்த நிலைமையைக் கூறினாள். மகேந்திரனையும் நன்கு அறிவேன்.

கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தான், தெருவிலே கண் டால் இடைநிறுத்தி, சுகம் விசாரித்து, அரசியல் பேசுவான், தர்க்க நியாயத்திலும் பார்க்க உணர்ச்சியே அவன் பேச்சில் முன்னிற்கும். எதிர்காலத்தில் வீசப்போகும் புயலுக்கு அவனது உணர்ச்சி வெறி முன்னுதாரணமாயிருந்ததை இன்று எண்ணிப் பார்க்க முடிந்தது.

''கொழும்பிலே நீங்கள் பழகும் சிங்களவர் நல்லவர்களா யிருக்கலாம். ஆனால் இங்கே நாங்கள் அறியாத சிங்களத்தில் பேசி உதைக்கும் பொலிஸாரையும், தமிழர் மேல் சுட்டுப் பழகும் சிங்கள இராணுவத்தாரையுமே எங்களுக்கு தெரியும் அடிக்கடி பார்க்கிறோம்.''

கடைசித்தடவை, சந்தியில் கண்ட போது கூறினான். உயர் கல்வியில் புறக்கணிப்பு, வேலையில்லாத் திண்டாட்டம். சிங்கள மொழித் திணிப்பு பற்றியெல்லாம், அவன் போலவே மற்றைய இளைஞர்கள் மட்டுமல்ல, கல்லூரிப்பெண்களும் பேசிக் கொண் டனர். வீட்டில் தம்பியாரின் பெண்களுடன் கூட என்னால் விவாதிக்க முடியவில்லை.

விடுதலை இயக்கத்தில் உள்ளவர்களிடையே ஏற்படும் காதலின் ஆபத்துப் பற்றி நான் அறிவேன். இயக்கங்களில் இறுக் கமான கட்டுப்பாடுகள் ஏற்படாத காலம்.

பொலிஸ், இராணுவக்கெடுபிடி இளைஞர்கள் மேல் கடுமை யாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புக்குத் திரும்பிய வேளை ரெயிலில் மகேந்திரனின் பிரச்சினை பற்றியே என் மனமும் அலைந்தது. புஷ்பத்தின் விம்மலும், கண்ணீரும் வேண்டுதலும் தூக்கத்தைக் கலைத்தன.

கலைஞர்கள் யாவரும் காதலுக்கு அளவு மீறிய முக்கியத்துவம் கொடுத்து, இளம் வயதினரை தூண்டி வேடிக்கை பார்க்கிறார்கள் என்பதே என் கருத்து. ஆயினும் காதலிப்பவர்களைப் பிரிக்க வேண்டும் என எங்கும் நான் வாதிடுவதில்லை, முயல்வதுமில்லை. காதலரைப் பிரிப்பதால் ஏற்படும் தற்காலிக துன்பத்திலும் பார்க்க, ஒன்றிணைந்து குடும்பம் என்ற நிறுவனத்தில் போராடி அனுபவம் மூலம் காதலின் பொய்மையை அறிந்து கொள்ளட்டும் என்றே விரும்பினேன். தாமே விரும்பி மணக்கும் போது, தம் தோல்வியை மற்றவர்களின் தலையில் போட வேண்டிய தேவையும் ஏற்படாது என்பதையும் கூறி ஆதரித்து வந்தேன்.

கொழும்பில் சேர்ந்து வேலைகளில் ஈடுபட்டேன். புஷ்பத்திற்கு அன்று ஆறுதல் கூறிய போதும் செயலாற்றி வெற்றி பெறுவதிலுள்ள சிரமத்தை அறிவேன். விசாரணைக்காலமா? வழக்குப் பதிவு செய்து விட்டார்களா? எதையும் அறிய முடியாதிருந்தது.

நெருக்கடியான வேலைப்பளுவில் ஈடுபட்டபோதும் அடிக்கடி புஷ்பத்தின் விம்மலும் கண்ணீரும் என் நெஞ்சில் பளிச்சிட்டுத் துன்புறுத்திக் கொண்டே இருந்தது.

வக்கீல் நண்பர் ஒருவரிடம் உதவும்படி கூறினேன். ''18 மாதம் தடுத்து வைக்கக் கூடிய பி.டி .எ சட்டம் அவர்கள் கையில் உள்ளது. எப்படியும் விசாரித்துப் பார்க்கின்றேன்'' என்றார். பயங்கரவாத தடுப்புச் சட்டம் பற்றி அறிவேன்.

வக்கீல் நண்பர்கள் கூட நம்பிக்கை தரவில்லை. ஆயினும் அத்தகைய விசாரணைக்குப் பொறுப்பான இன்ஸ்பெக்டர். பொலிஸ் டிப்பாட்மென்ட் பிரிவு பற்றி மட்டும் தெரிவித்தார்.

வாரங்கள் கழிந்தன. புஷ்பத்திற்கு எவ்வித செய்தியும் அனுப்ப முடியவில்லை. காலம் தான் உதவ வேண்டும் என மனதைச் சாந்தப்படுத்திக் கொண்டிருந்தேன்.

அன்று கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு லண்டனிலிருந்து வரும் நண்பன் ஒருவரை அழைத்துவரச் சென்றிருந்தேன். நண்பரின் வருகைக்காக காத்திருந்த போது முன்பு நன்கு பழகியிருந்த ஏ.எஸ்.பி. எக்கநாயக்காவைக் கண்டேன். ஒரு விசாரணை அலுவலாக முன்னர் பழகிய எக்கநாயக்கா பொலிஸ் அதிகாரிகளின் கிளப்பின் செயலாளராக கொழும்பில் இருந்தான். அவனுக்கு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வேண்டிய அவசர அச்சு வேலைகளுக்கு என்னிடம் வருவான். நான் பல வகையிலும் உதவியிருந்தேன். இன்ஸ்பெக்டராக இருந்தவன் ஏ.எஸ்.பி. யாக பதவி உயர்வு பெற்று வேறு மாவட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தான்.

சுகம் விசாரித்த பின்னர் அவனது பதவி உயர்வுக்கு பாராட்டி விட்டுச் சொன்னேன்;

''வழியில் கேட்டு விட்டேன் என்று எண்ணாதே... எனக்கு ஒரு உதவி வேண்டும்.''

''அதிலென்ன? என்னால் இயலுமென்றால் உங்களுக்குச் செய்வேன் தானே. நிட்சயமாகச் செய்வேனே.''

நான் விபரம் யாவையும் சுருங்கக் கூறி, என் கிராமம், அடுத்த வீட்டுப் பெண்ணுக்கு உறுதி கூறி வந்ததையும் தெரிவித்தேன்.

''பையனின் விசாரணைக்குப் பொறுப்பான இன்ஸ்பெக்டரின் பெயர் தெரியுமா''

''சனத் சில்வா''

''அட அவனா? பொல்லாதவனாயிற்றே? இன்று வரையில் என்ன செய்தானோ தெரியவில்லை. அவன் ஒரு சாடிஷ்ட். உண்மையைப் பிடுங்க என்னவும் செய்வான். நாங்கள் சொல்வதைக் கூடக் கேட்கமாட்டான். ஆனாலும் நான் தவறாது முயன்று பார்க்கிறேன். மற்றது உங்கள் அதிர்ஷ்டம்.''

பொலிஸ்காரன் பற்றி மற்றொரு பொலிஸ் அதிகாரி தரும் சர்டிபிக்கெட் எனக்கு அச்சமூட்டியது.

மகேந்திரனின் பெயர் மற்ற விபரங்களைக் குறித்துக் கொண்டான். ஏதோ ஒரு நல்ல முயற்சிக்கு வாய்ப்புக் கிடைத்தது என்ற திருப்தி. இதுவே கடைசி முயற்சியும் என்று எண்ணிக் கொண்டேன்.

தம்பியாருக்குக் கிராமத்திற்கு எழுதிய கடிதத்தில் அடுத்த வீட்டில் புஷ்பத்திடம் சொல்லும்படி சில வார்த்தைகளில் சுருக்கமாக செய்தி அனுப்பினேன்.

''தக்க நண்பர் ஒருவரிடம் சொல்லியுள்ளேன். மிகுதி உன் அதிர்ஷ்டம்''

யாழ்ப்பாணத்திலிருந்து வரும் செய்திகளில் இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்படுவது பற்றி நாள் தோறும் பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருந்தது. கட்டுப்படுத்த முடியாத நிலைக்கு சம்பவங்கள் நடந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீப்பில் ஆயுதம் தாங்கியவர் தவிர தனியே பொலிஸாரை யாழ்ப்பாணத்தில் எங்கும் காணமுடியாது.

இரண்டு மாதம் வரை கழிந்திருக்கும். என் சித்தப்பா திடீரென இறந்ததாக இரவு செய்தி வந்தது. காலையில் புறப்படும் யாழ் தேவி ரெயிலில் புறப்பட்டு நண்பகல் ஸ்ரேஷனிலிருந்து நேரடியாக கிராமத்தில் மரண வீட்டுக்கே சென்றேன். மரண, மயான சடங்குகள் முடிய பொழுது கருகிவிட்டது. அங்கேயே நீராடி விட்டு இரவு வீட்டுக்கு வந்து தூங்கினேன். ஒரே பிரயாண அலுப்பு.

காலையில் கிணற்றடிக்குச் சென்ற போது புஷ்பம் சிரித்தபடி ஓடி வந்தாள்.

''அண்ணா, உங்கள் உதவிக்கு எப்படி நன்றி கூறுவதென்று தெரியவில்லை, உங்கள் செய்திவந்த ஒரு வாரத்திலேயே அவரை வெளியேவிட்டு விட்டார்கள்'' நன்றிச் சிரிப்பு. அடுக்கான அவளது பற்கள் பளிச்சிட்டன.

ஏ.எஸ்.பி. எக்கநாயக்காவின் உதவியை அப்பொழுதே அறிந்து என் நெஞ்சு குளிர்ந்தது. அவன் மேல் என் மதிப்பும் உயர்ந்தது.

''மகேந்திரனை ஒரு தடவை நான் பார்க்க வேண்டும். வரச்சொல்லு''

''நாங்கள் இவ்வளவு கஷ்டப்பட, நீங்க உதவி வெளியே வந்தும் அவர் இந்தப்பக்கமே இன்னும் வரவில்லை பாருங்கோ.... அண்ணா.....''

அதன் மேல் எதுவும் பேசமுடியவில்லை. விம்மி அழத் தொடங்கிவிட்டாள்.

என் நிலை மீண்டும் தர்மசங்கடமாகி விட்டது.

''என்ன நடந்தது? எங்கே அவன்? கடிதமாவது எழுத வில்லையா?

அவளது அழுகையும் விம்மலும் ஆற சில நேரம் சென்றது. பின்னரே குழந்தையைப்போல் விக்கி விக்கிச் சொன்னாள்.

''கடிதம் எதுவுமே எழுதவில்லை. தன் வீட்டுக்கும் தெரிவிக்க வில்லை''

''அப்போது எங்கே போனான்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தலவாக்கொலையில் நிற்பதாக அங்கே கடை வைத்திருக்கும் கந்தையர் வீட்டாருக்கு எழுதிய செய்தி வந்து நானும் அறிய முடிந்தது."

"அங்கே என்ன செய்கிறானாம்"?

"தோட்டத் தொழிலாளர் சங்கத்தில் வேலை செய்கிறார் பாருங்கோ அண்ணா, முன்னர் அவர் என்ன மாதிரியெல்லாம் என்னோடு பழகினார். ஊரெல்லாம் தெரியும். எத்தனை உறுதி மொழியெல்லாம் சொன்னார். பிறகு இத்தனை மாதங்களாக அழுது கொண்டிருந்த என்னை வந்து ஒரு தடவை பார்க்கப் படாதா? எனக்கு ஆறுதல் சொல்லப்படாதா....."

மீண்டும் அழத்தொடங்கினாள். மகேந்திரன்மேல் எனக்கு ஆத்திரமே வந்தது.

இப்படிப்பட்டவர்களா விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவது? ஆண்மையில்லாத அயோக்கியர்கள்.

என் மனம் திட்டியது.

"அண்ணா கடிதம் எழுதிப் பார்க்க விலாசமேயில்லை. எனக்காக நீங்கள் அவரைப்பார்த்து என் நிலைமையைச் சொல்லி, ஒரு தடவை இங்கே அனுப்பிவிடுங்கோ. அது எனக்கு மன ஆறுதலாயிருக்கும். ஊர்வாய்க்கும் பதில் சொல்லும். இப்பொழுதே என்னைப் பற்றி வம்பளக்கத் தொடங்கிவிட்டார்கள்."

இரத்தக் கண்ணீர். இது எங்கே நிற்கப்போகிறது? எத்தனை இளவயது வாலிபர்கள் உள்ளே. எத்தனை பெண்களது மனக் கோட்டைகள் எல்லாம் உடைக்கப்படுகின்றன. என் மனம் பரவலாக எண்ணி நொந்தது.

இக்கவலைகளுடனேயே கொழும்புக்குத் திரும்பினேன். ரெயிலில் மீண்டும் தூக்கமில்லை.

தலவாக்கொல்லை கொழும்பிலிருந்து மலை நாட்டுப் பகுதியில் 200 கிலோ மீட்டர்வரை இருக்கும். சென்று அவனைத் தேடிப்பிடித்துப் பேசிவர ஒரு நாள் போதாது. இரண்டு நாளாவது வேண்டும். அதுவும் உறுதியில்லாத பயணம்.

வாய்ப்பான வார இறுதிக்காகக் காத்திருந்தேன். சனி அதிகாலையில் புறப்பட்டால் ஞாயிறு இரவு திரும்பிவிடலாம் என்ற நப்பாசை. அங்கும் என் இலக்கிய நண்பர்கள், தொழிற்சங்கத் தோழர்களையும் பார்த்துப் பேசலாம். பசுமைக் காட்சிகளில் நகரத்தை ஓரிரு நாளாவது மறக்கலாம் எனவும் மனம் கூறிக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலவாக்கொல்லை, மலை நடுவே உள்ள சிறிய நகரமே. நண்பகலிலும் குளுமையான காற்று, பஸ்ஸால் இறங்கியதும் தொழிற்சங்க நண்பன் சந்திரனின் அலுவலகம் சென்றேன். முதலில் ஒரு சுவையான தேநீர் ஓட்டலிலிருந்து வரவழைத்துத் தந்தான். உயர்தர தேயிலை வளரும் பிரதேசம். பின்னர் சாப்பாட்டுக்கு வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

மகேந்திரனை நண்பன் அறிந்திருந்தான். இரண்டு மாதத்திற்கும் மேலாக அங்கு தொழிற்சங்கம் என்ற போர்வையில் இயக்க வேலையில் ஈடுபட்டிருப்பதாக சந்திரன் இரகசியமாகச் சொன்னான்.

''நான் மகேந்திரனை ஒரு தடவை பார்த்துப் பேச வேண்டும். அவன் எங்க கிராமம் தான்''

அதற்கு மேலாக நண்பனிடம் எதுவும் கூறவில்லை. 'காதல்' விஷயமாக வந்தேன் என்று கூறின் நண்பன் கேலி செய்திருப் பான்.

சந்திரனே அழைத்துச் சென்று மகேந்திரனைப் பார்க்க ஏற்பாடு செய்வதாகக் கூறினான்.

பொழுது சாயும் வேளை, ஏற்றமும் இறக்கமுமாக வளைந்து வளைந்து செல்லும் தெருவில் அரசியல், இலக்கியம் பேசிய படியே ஓய்வாக உலாவுதல் போல நடந்து சென்றோம். பின்னர் புல்தரையில் இருந்து பொழுது மறையும் வரை அரட்டையடித் தோம்.

பொழுது கருகி விட்டது. தெருவிலிருந்து கீழ்நோக்கிச் செல்லும் ஒற்றையடிப்பாதையில் அழைத்துச் சென்றான். கால் களை விழிப்போடு வைத்து இறக்கத்தில் நடந்தேன். நண்பனின் வேகத்தில் என்னால் நடக்க முடியவில்லை.

ஒரு வீட்டு வாயிலில் வந்து சந்திரன் கதவைத் தட்டினான். சிறிய வீடு. உள்ளே வெளிச்சம் தெரிந்தது.

''தோழரே வாருங்கள். என்ன ஆச்சரியம் இந்தப் பக்கம்'' வியப்போடு ஒரு தேயிலைத் தோட்டம் சார்ந்த இளைஞன் வரவேற்றான். சந்திரன் என்னை அவனுக்கு அறிமுகப்படுத்தி விபரம் சொன்னார்.

''நீங்க சொன்னால் போதும். ஏற்பாடு செய்யலாம். அவர் இங்கே இருக்கட்டும்''

''நண்பர் பார்த்துப் பேசியபின் எங்கள் வீட்டுக்கு வழி காட்டி அழைத்துவா''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சரி தோழர்''

சந்திரன் போய்விட்டன். அந்த இளைஞன் வெளியே சென்று மகேந்திரனைத்தேடி அழைத்து வருவதாக, என் பெயர் விபரத்துடன் சென்றான்.

வீட்டிலிருந்த சில நூல்களை நான் புரட்டிக் கொண்டிருந்தேன். வந்த வேலையை விரைவில் முடித்துவிடலாம் என்ற நப்பாசை.

அரை மணி நேரம் கழிந்தது.

''அண்ணாவா வாங்க, பார்க்கக் கிடைத்தது பெரிய சந் தோஷம்''

கட்டம் போட்ட சாரத்துடனும், சேட்டுடனும் மகேந்திரன் உள்ளே நுழைந்தான். சிறிது மெலிந்திருந்தான். முகத்தில் எவ்வித சலனமுமில்லை.

''நான் உங்களுக்கு எவ்வளவோ நன்றி கூற வேண்டும். நீங்கள் முயல்வதாக முதலில் செய்தி வந்தது. முக்கியமான ஒருவர் சொன்னபடியாலேயே என்னை வெளியே விட்டான் அந்த மிருகம். ஏ.எஸ்.பி எக்கநாயக்கா என அங்கு பழகிய ஒருவன் இரகசியாக சொல்லியிருந்தான்.''

சிரித்துப் பேசியவனின் முகத்தில் கடுமை தொனித்தது.

''கொழும்பில் என்னை ஒரு தடவை பார்த்துவிட்டு வந்திருக் கலாமே''

''அப்படியும் நினைத்தேன். பின்னர் என்னோடு வெளி யேறிய தேயிலைத்தோட்டத் தோழரோடு இங்கு வந்துவிட்டேன். மன்னித்துக்கொள்ளுங்கள்''

கண்ட இடத்தில் மன்னிப்பு. என் மனம் குறுகுறுத்தது. மகேந்திரனை இத்தனை விரைவில் பார்த்துப் பேசி, அந்த வேலையை முடித்திருக்கலாம் என நான் எதிர்பார்த்திருக்கவில்லை. எப்படியும் புஷ்பத்தின் கண்ணீரைத் துடைத்து விடலாம் என்ற நம்பிக்கை.

கதவு சாத்தப்பட்டதும் என் குரலில் என்னையறியாமலேயே கண்டிப்புத் தொனித்தது.

''நீ வெளியே வந்ததும், என்னிடம் வராதபோதும் பின்னர் ஏன் யாழ்ப்பாணம் செல்லவில்லை?''

''நான் போக விரும்பவில்லை''

''என்னடா பேசுகிறாய் அந்தப் பிள்ளை புஷ்பம் நீ கைதான நாள் தொட்டு எத்தனை கஷ்டப்பட்டாள் தெரியுமா? அழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே இருந்தாள். என்னை உதவும்படி கண்ணீர் விட்டு அழுதாள். அந்த இரத்தக் கண்ணீருக்காகவே நானும் உன்னை வெளியே கொணர முயற்சி செய்தேன்'' என்னை அறியாது என் பேச்சில் கடுகடுப்பு ஏற்பட்டது.

''அதற்காக நான் என்னண்ணே செய்யவேண்டும்'' தயவான குரல்.

''நீ ஒரு தடவை ஊருக்கு வந்து ஆறுதல் சொல்லி விட்டா வது வந்திருக்கலாமே. மீண்டும் அவள் அழுது கொண்டிருக் கிறாள். ஊரிலே அவள் தலை காட்ட முடியாது தவிக்கிறாள்''

''புஷ்பத்தை நான் பார்க்க விரும்பவில்லை. அதனால் தான் அங்கு போகவில்லை'' உதாரமான குரலில் கூறினான்.

மகேந்திரன் போட்ட குண்டு, எனக்கு மேலும் அதிர்ச்சியை மட்டுமல்ல, ஆத்திரத்தையும் ஊட்டியது.

''என்னடா சொல்லுறாய், அவள் உனக்கு என்ன தவறு செய்தாள்? உன்னைவிட்டு வேறு மாப்பிள்ளை தேடுறாள் என்று எவனாவது கதை விட்டானா? அதை நம்புகிறாயா''

''அப்படியெல்லாம் நான் சந்தேகப்படவில்லை. அவள் என்னை மறந்துவிட்டு வேறு மாப்பிளை பார்க்கட்டும். அவள் கல்யாணம் கட்டும் வரை நான் வரமாட்டேன்''

''இப்படியெல்லாம் பேச உனக்கெல்லாம் எப்படியடா துணிச்சல் வந்தது. காதல் பேசி பெண்களை ஏமாற்றி விட்டு விடுதலை இயக்கம் வேறு. இப்படியான ஏமாற்றுப் பேர்வழி களைக் கொண்டதா நீ சேர்ந்த இயக்கம்''

அவனது பதில்கள் என் ஆத்திரத்தைத் தணிக்கவில்லை. அதிகரிக்கவே செய்தன.

''இதற்குள் இயக்கத்தை ஏன் அண்ணே இழுக்கிறீர்கள். இது என் தனிப்பிரச்சினை''

''அப்படியானால் நீ ஒரு கோழை, ஏமாற்றுக்காரன், துரோகி''

''எப்படியும் திட்டித்தீருங்கள். நான் கவலைப்பட மாட்டேன்''

''நீ ஒரு பேடி. ஆண்மையில்லாதவன்''

''சரியாகச் சொன்னீர்கள் அண்ணா, ஆண்மையில்லாதவன், நான் ஏற்கிறேன். இதோ பாருங்கள் அந்த மிருகம் செய்த வேலையை....''

அதன் மேல் அவன் வார்த்தைகள் ஓடவில்லை, கட்டியிருந்த கையை அவிழ்த்துக் கீழே விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகை

டொமினிக் ஜீவா

உள்ளங்காலைத் தகித்த உஷ்ணம் உச்சம் தலையில் போய் உறைந்த போது, பதைபதைப்புடன் தட்டுத் தடுமாறி இடது கால் பாதத்தை தூக்கித் திருக்கூத்தாடிய பாவத்துடன் துள்ளிக் குதித் தான், முத்து முகம்மது.

வைரித்த கெட்டியான உதடுகளும், பிடிவாதம் தேங்கிய முகமும் அப்போதைக்கு வலிப்புவாதை கொண்ட நோயாளியைப் போல, அவனைக் காட்டிக் கொண்டான்.

'- சே! காலிலை ஒரு செருப்புக் கிடைத்தால்?

திரும்பித் தார்ரோட்டைப் பார்த்தான்.

புகைத்த பின்பு குறையாக வீதியில் வீசி எறியப்பட்டிருந்த சிகரட் துண்டொன்று தரையோடு தரையாக நசுங்கிக் கிடந்தது. அவன் திரும்பிப் பார்க்கும் பொழுது நிலத்துடன் ஒட்டிக் கொண் டிருந்த அந்தக் குறள் சிகரெட், தனது கடைசிப் புகையைக் கக்கிக் கொண்டிருந்தது.

உள்ளங்காலைப் பதம்பார்த்துச் சுட்ட உஷ்ணத் தகிப்பு இன்னும் முற்றாக நீங்காத நிலை.....மனம் எரிந்தது.

ஒருகாலத்தில் செம்மா தெரு ஒழுங்கை என்ற பெயரால் அழைக்கப்பட்டு இன்று மாநகர சபையாரின் ஜனநாயகக் கண் களுக்குத் தவறாகத் தெரிந்த சாதிப்பெயர் அகற்றப்பட்டு, அந்த ஒழுங்கையின் மடக்கு மூலையில் பெரிய பள்ளிவாசலின் பெய ரைத் தாங்கி, அறிவிப்புப் பலகையுடன் பிரபலப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஜூம்ஆ மொஸ்க்லேன் வழியாக நடந்து, கஸ்தூரியார் வீதியின் முகப்பிற்கு வந்து, திரும்பிக் கொண்டிருந்த சமயம்தான் முத்து முகமது இப்படி நடனம் ஆடிக் காலை தூக்கி நிற்கும் சம்பவம் நிகழ்ந்தது.

வடிகாலோரம் துணையாக நின்ற டெலிபோன் கம்பத்தை பற்றிப் பிடித்த வண்ணம் வலதுகாலை சிக்காரமாக ஊன்றி, இடது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை மடக்கி மடித்து, தலை குனிந்து, பாதத்தை உற்றுப்பார்த் தான்.

சாம்பல், ஒரு சத நாண அளவிற்கு படிந்து, அப்பியிருந்தது.

வாயில் ஊறிய உமிழ்நீரைத் தொட்டு, வழித்து, இரண்டு மூன்று தடவை பூசிப்பார்த்தான்.

முதற் சிகிச்சை வெற்றியளிக்கவில்லை.

உள்ளங்கால் எரிந்தது.

பக்கத்து வடிகாலிலிருந்து வயிற்றை குமட்டி வாந்தி எடுப்பது போன்ற துர்நாற்றம் வீசியது.

இடது பாதத்தைத் தரையில் ஊன்றி, மண்ணு எச்சிலும் ஒன்று கலக்க உள்ளங்காலை நிலத்தில் அழுத்தி அழுத்தி வைத்துப் பார்த்தான். சுடுபட்ட எரிவு ஓரளவு குறைந்து சுகம் கண்டது போன்ற பிரமை.

நண்பகல் தொழுகைக்காகப் பள்ளிவாசலுக்குப் போய் தொழுது விட்டு வந்து கொண்டிருந்தான் முத்து முகமது. மனசஞ் சலம் நிழலாடிய அவன் நெஞ்சில் நாளை வரப்போகும் பெருநாள் 'ஈதுல் அழ்கா' விஸ்பரூபம் எடுத்து மனதைப் போட்டு உளைய வைத்தது. தொப்பி தரித்திருக்க வேண்டிய தலையில் கைக்குட் டையை இரண்டாக மடித்து கட்டிருந்தான். அக்கைக்குட்டையை கூட இன்னமும் அவிழ்க்கவில்லை. கைக்குட்டையின் கூர்மூலை இரண்டும் காற்றில் இலேசாகப் படபடத்தன.

நினைவுக்குமிழில் சிறு வெடிப்பு. 'இன்று வெள்ளிக்கிழமை. விடிஞ்சால் ஹஜ்ஜுப் பெருநாள்!'

சூடுபட்ட உணர்வில் இருந்து முற்றாக விடுபட்டு, நாளை வரப்போகும் புதுத் திருநாளைப் பற்றிய மன அவசத்தைச் சற்றே மறந்து, நினைவைத் திசை திருப்பிய பார்வையை அர்த்தமற்றுத் திரும்பினான் வீதியை கடக்கலாம் என்று எண்ணி எத்தனித்தான்.

'ஏதாவது கார்கீர் குறுக்கே மறுக்கே வந்து விட்டால்?'

புத்தம் புதிய நீல நிறக்கார் ஒன்று காலோரம் ஊர்ந்து போய், ஒழுங்கை முகப்பைப் தாண்டி, சற்று அப்பால் தள்ளி நின்றது. இரண்டு நாகரிக நவயுக நாரிமணிகள் காரிலிருந்து 'பொத்', 'பொத்' தென்று, தார் ரோட்டின் முதுகு நெளியும்படியாகக் குதித்தனர். பராக்குப் பார்த்தவாரே, சிரிப்புச் சிதறிய வாயைத் திறந்த தமக்குள் தாமே குசுகுசுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதட்டுச் சாயப் பகைப்புலத்தில் பற்கள் பொய்ப்பற்களைப் போல மின்னின. ஒருத்தி பக்கத்திலுள்ள ''ஷூபாலஸி'' ற்குள் பரபரவென்று நுழைந்தாள். மற்றொருத்தி சாவகாசமாக ஆடி அசைந்து, அக்கடையின் முதற் படிக்கட்டில் ஏறினாள். ஏறி இரண்டாம் படிக்கட்டில் ஏறிக் காலை வைக்கும் போது ஷோகேஸில் இருந்த நவீன காலணி ஒன்று அவளது கண்ணையும் கருத்தையும் தன்பால் கவர்ந்து இழுத்துக் கொண்டது. ஆவல் ததும்பும் கண்கள் 'ஷோகே'ஸில் கண்ணாடி சட்டத்துக்குள் புதைந்து, அமிழ்ந்து கொண்டன.

மேற் படிக்கட்டில் ஒரு காலும் கீழே மறுகாலுமாக நின்ற வாறே தேக அப்பியாசம் செய்யும் பாணியில் தவளை நடை பயின்றாள் அந்த யுவதி. கண்களுக்கு விருந்தளிக்கும் உடை நாகரீகத்திலிருந்து, முடிமயிர்க் கொண்டை மோஸ்தர் வரைக்கும் உற்றுபார்த்துக் கடைச்சரக்கின் மகிமையை ரசித்து வியந்து பார்த்துக் கொண்டே நின்ற முத்து முகமதுவின் பார்வை, கீழிறங்கி ''கியூடெக்ஸ்'' பூசி அலங்கரிக்கப்பட்டிருந்த அவளது மென் பாதங்களில் போய்த் தைத்தது .

அப்பூம்பாதங்களில் கண்கள் நிலைகுத்தி நின்றன.

அவள் காலில் அணிந்திருந்த புத்தம் புதுக் காலணியில் அவனுடைய எண்ணங்கள் எல்லாம் ஒருமுகப்பட்டுக் குவிந்தன.

மனம் விழித்துக்கொண்டது.

இதைப்போலத் தானே அதுவும் ?..... அந்த லேடிஸ் ஷூஸும்? மனவண்டு, திரும்பத் திரும்ப அவளுடைய காலடியையே மொய்க்கின்றது.

கனவு காண்பவனைப் போன்று, ஒரு கணம் கண்களை மூடி ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த முத்து முகமது வீதியின் ஒரு வழிப் பாதையால் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஓடிக் கொண்டிருந்த இபோ.ச பஸ்ஸின் கடகடத்த இரைச்சல் சத்தத்தைக் கேட்டு, சுயப்பிரக்ஞை பெற்று, வீதியோரத்துக்கு ஒதுங்கிக் கொண்டான்.

அந்த ஆரவாரத்தில் - அந்தப் பட்டணத்துப் பரபரப்பில் அனைத்துமே அதிதுரிதவேகமாக இயங்கும் மும்முரத்தில் - முக்கி மூழ்கியிருந்தது. நகரத்தின் இதய இரத்தக் குழாயான கஸ்தூரியார் வீதி.

தெரு சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

காலணியின் நினைவு பார்வையைத் திருப்பியது, முத்து முகமது மனதை மீண்டும் அலைய விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செருப்புக் கடையின் 'ஷோகே'ஸில் பறிகொடுத்து நின்றவள், பாதத்தை இடம் மாற்றிவைத்து மேலேறி, நடந்துவிட்டாள்.

.....பார்க்கப்போனால் காலில் அணியும் செருப்பு!

இதைப்போன்ற லேடி பலரினா ஷூஸினால் ஏற்பட்ட மனவுலைச்சல் காரணமாக காலையிலிருந்து அவன் பட்டுவரும் நெஞ்சத் தவிப்பு இருக்கிறதே, அது அவன் வாழ்வில் என்றுமே அனுபவிக்காதது; என்றுமே அறிந்திராதது .

நெஞ்சுக் கவலையை மேழுக்கிழுத்து நெடுமூச்சாகி, 'ஹூம்!' என்று பெருமூச்சு விடுவதின் மூலம் போக்கடித்து விடலாம் என்ற தோரணையில் பெருமூச்சொன்று அவனிடமிருந்து விடைபெறு கின்றது.

...ஆனால், நெஞ்சுப் பாரம் இன்னமும் குறையவில்லையே!

முத்து முகமது தான் தொழில் பார்க்கும் கடையை நோக்கித் திரும்பினான்.

நெஞ்சையழுத்தும் நினைவின் சுமை.

எட்டி முப்பது கவடு தெற்குப்பக்கமாக வைத்து நடந்தான், அவன் தொழில் பார்க்கும் கடையை அடைந்து விடலாம் அதைக் கடையென்று பென்னாம்பெரிய பெயரில் அழைப்பதைவிட, புறாக்கூடு என்று சுருக்கமாகச் சொல்லி வைக்கலாம். வளர்ந்து வரும் காலமாற்றத்துடன் குச்சுக்கடைகளெல்லாம் கோபுரமாடங் களாக மாறி நவயுக நாகரீகத்தை விற்பனைப் பண்டமாக வியாபாரம் செய்யும் அந்த வீதியில், இன்னமும் தனது பத்தாம்பசலி நிலை யுடன் காட்சியளிக்கிறது, அந்த பழைய சப்பாத்துக் கடை. கிழிந்து, அறுந்து துவைந்து போன செருப்புச் சப்பாத்துகளுக்கு புனர் வாழ்வளித்து, தெருக்களில் உலாவரக் காரணமாக விளங்கும் தொழிற்சாலை இது. இத்தனைக்கும் வாடகை 30 ரூபாய். அதன் ஏகபோக உரிமையாளன் சாஷாத் முத்து முகம்மதுவே! அவன் திறமையான தொழிலாளி, பெரியகடை வட்டாரத்தில் அவனுக்கு மவுசு அதிகம். இளம்வயதானவனாக இருந்தாலும் தொழில் நுணுக் கங்கள் அத்தனையும் கைவரப்பெற்றவன். கை உதவிக்கு சிறுவன் ஒருவன்.

போதும்.

காலை 8 மணிக்கு வந்து பட்டறையில் குந்தினால் மத்தியானம் ஒரு தடை எழும்புவான் சாப்பிட, தொழுகைக்குப் போகவென்று. மற்றப்படி இருந்தது இருந்ததுதான் கடையின் முன்பக்கத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டறையில் இருந்த வண்ணம், சுவருக்கு முதுகை முட்டுக் கொடுத்தவாறு போவோர் வருவோரது முகங்களையும், பாதங் களையும் பார்த்துப் பார்த்து சலிப்பது தான் அவனுடை தினசரி வேலை.

இப்படி தினமும் புதுப்புது முகங்களை பார்த்துப் பார்த்து தொழில் நிமித்தம் பொழுதைப் போக்கி கொண்டிருக்கும் போது தான் இந்த மலாய பென்சன்காரர் வாடிக்கையாளராக வந்து சேர்ந்தார்.

''சிங்கப்பூரிலை நான் இருக்கேக்கை'' என்று அவர் தனது பிரதாபத்தை முதன் முதலில் தானே ஆரம்பித்த போதே அவர் ஒரு மலாயப் பென்சன்காரர் என்று அநுமானித்துக் கொண்டான் முத்து முகமது

15 நாட்களுக்கு முன்.....

ஒரு மாட்டுக் கடதாசியில் இங்கிலீஷ் பலரினா லேடி ஷூஸ் களைப் பத்திரமாக மடித்து மடித்துச் சுற்றிவைத்திருந்தவர், வெகு கவனமாகவும் சாவதானமாகவும் கடதாசியைப் பிரித்து அந்த லேடி ஷூஸ்களைப் பட்டறைப் பலகை மீது வைத்தார்.

''இது சிங்கப்பூரிலை எடுத்தது, மோனை..... இதைப் பார் இதுகின்ரை வார் ஒண்டு விட்டு போச்சு மற்றதுக்கு இரண்டு ஆணி வைச்சுத் தர வேணும். அவ்வளவு தான் என்ன, முடிச்சுத் தாறியா?

அவற்றைத் திருப்பியும், புறட்டியும் வார்ப்பட்டைகளை இழுத்தும், அசைத்தும் பரிசோதனைகள் நடைபெற்றன.

''ஓம், இருங்களேன். முடிச்சுத் தந்திடுறன். ஒண்டுக்குத் தோல் கொஞ்சம் வைச்சுத் தைக்க வேணும். மற்றதின்ரைக்கு குறிக்கு ஆணி அடிச்சு இறுக்க வேணும். இந்தா செஞ்சு தந்திடுவன் ரூபா ஒண்ணு குடுத்திடுங்கோ.''

''ஏதோ நீதியாக் கேள். எழுவத்தைஞ்சு சதம் தந்திடுறன். ஆனா, வேலை திறமாய் இருக்கட்டும். என்ன, விளங்குதோ?''

பேரம் முடிவடைகின்றது.

''சரி, இப்படி குந்துங்களேன் ஒரு நிமிட்டிலை தந்திடுறேன், ஒரு நிமிட்டிலை!''

''எனக்கு இருக்க நேரமேங்கே இடக்கு? உதாலை சுத்திக் கொண்டு வாறன். கெதியாய்ப் பாத்து முடிச்சுவையன்.''

''சரி; ஜல்தியா சட்டென்று வந்திடுங்க முடிச்சு வைக்கிறன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனவர் வரவில்லை. அன்று திரும்பவில்லை அதற்கு அடுத்த நாளும் வரவில்லை, அதற்கு அடுத்த நாள் விட்டு அடுத்த நாள் கூட .....

ஊஹூம் ! திரும்பவேயில்லை!

பெருநாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

மனதில் ஒரு நப்பாசை

''இனி அந்த அறாம் பிடிச்ச மனுசன் வரமாட்டான் போல இருக்கு. அது கிடந்து இனி ஆருக்கு என்ன லாபம்? என்ற நெஞ்சில் நினைவு அலைகள் சுழியிட்டன, அவன் துணிந்து விட்டான். நாளை ஒரு நாள் போனால் ஹஜ் பெருநாள். அப்புறம் நாட்கள் கடந்து போனால் அவனிடம் வக்கென்ன இருக்கிறது?

'அதைப் புத்திசாலி ரகீலாவுக்கே பெருநாள் பரிசாகக் குடுத்து விட்டால்...? '

ரகீலாவின் பெயரை வாய் உச்சரிக்கும் பொழுதே நெஞ்சம் இனித்தது!

கடந்த மெளலத் மாதமே அவர்கள் இருவருக்கும் நிக்காஹ் நடந்தேறியது... எண்ணி ஒருவருடம் கூட ஆகவில்லை. அதற்குள் ஹஜ் பெருநாள். ''எதைக் குடுப்போம்?''.... என்னத்தைப் பரிசாக அளிப்போம்?'' என்று மனம் துடிதுடித்த வேளையில்தான் பென்சன்காரரின் நினைவு அவன் மனதில் குதிர் விட்டது. அவர் தந்துவிட்டு எடுக்காமல் இருக்கும் பலரினா லேடி ஷூஸ் ஞாப கத்தில் தட்டுப்பட்டது.

ரகீலா அப்படியொன்றும் அவாக் கொண்ட பெண் அல்லத் தான்.

...'ஆனா, ஒழுங்கையில் என்ட மதிப்பு? நாளைக்கி நம்ப பீபியை இந்த ஒழுங்கை பெண்டுகள் மதிக்காட்டி போனா, அவ என்னை மதிப்பாளா? '

ஹஜ் பெருநாளன்று இந்த பட்டணத்து பெண்களெல்லாம் தொழுகைக்குப் போவார்கள். ஒழுங்கைத் திருப்பத்திலுள்ள பெரிய வீடுதான் பெண்கள் தொழுகை இடம். ஒழுங்கை பூராவிலுமுள்ள அத்தனை முஸ்லிம் பெண்களும் அங்கு ஒன்று கூடுவார்கள்.

''அந்த இடத்திலை, அவுங்களுக்கு மத்தியிலை நம்ம பீபி மதிப்பா இல்லையெண்டால், நாளைக்கு நம்மளை இவங்கள் மதிப்பாங்களா, என்ன?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நப்பாசை செயலாகப் பரிணமிக்கின்றது. இரவோடு இரவாய் கண்விழித்து, அந்த பலரினா லேடி ஷூஸ்களை நகாசு பண்ணித் தனது கைவண்ணத்தைக் காட்டிப் புதிது போல சிருஷ்டித்து விட்டான்.

...அடேயப்பா! இப்போது அதன் மவுசு தான் என்ன!

தனது பீபிக்கு அன்புப் பரிசாக பலரினா லேடி ஷூஸ்களை பெருநாளன்று கொடுத்து விட்ட மனப்பூரிப்பில் அவன் திளைத்துக் களித்தது நேற்று.

அந்த நினைவில் தான் எத்துணை இனிமை!

அவனுடைய அகத்தில் குழுமிய பெருமித அலைகள் முகத்தில் இழைந்தன. இடையிடையே பைத்தியம் போன்று சிரித்துக் கொண்டான். நெஞ்சில் கவிந்திருந்த ரகீலாவின் சிரித்த முகம் அவனைப் பூரிப்பில் ஆழ்த்தியது. உலகத்தில் இன்பங்கள் எல்லாமே தன் காலடியில் என்று இறுமாந்து நேற்று நடைபயின்று உலாத்தி வந்தும் இதே வீதியில் தான்.

ஆனால், இன்று?

இன்று காலையில் சொல்லி வைத்தது போல, கடையைத் தேடிவந்து விட்டார் அந்த பென்சன்காரர்.

"என்ன, நான் தந்திட்டுப் போன செருப்பு தைச்சாச்சா?"

கடைப் பையன் தான் கடையில் இருந்தான்.

அப்போது முத்து முகமது பட்டறையில் இல்லை. முன்னாலுள்ள தேனீர் கடையில் தேனீர் குடிக்க சென்றவன் தேனீர் அருந்திவிட்டு, பீடியைப் பற்றவைத்துக் கொண்டு கடையின் கதவுடன் சாய்ந்து கொண்டே புகையை ஊதி ஊதி வாயாலும் மூக்காலும் வெளியே இட்டுக்கொண்டிருந்தான்.

அவருடைய தலைக் கறுப்பை தனது கடைக்கு முன்னால் கண்டதும், தேனீர்க் கடையின் முன் வாசல் வழியாக பாய்ந்து சென்று மறைந்தது, தப்பித்துக் கொண்டான் முத்து முகமது.

...அதற்காக முழு நாளுமே கடைக்கு வராமல் இருந்து விடமுடியுமா?

அதுவும் நாளைக்கு ஹஜ் பெருநாள். வேலையோ மலை போல் இருக்கு. நாளு காசு உழைச்சால்தானே நாளைக்குப் பெருநாள் கொண்டாட்டம் ...?

கடையை நோக்கி நடந்து கொண்டிருந்தவன் மனதில் இப்படியான பிரச்சனைக்குரிய சர்ச்சைகள் நடந்துகொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'- அந்தச் சவத்தை வாங்கி, அந்த மனுசன்ரை முகத்திலை வீசி எரிந்துவிட்டால்?'

''நிக்காஹ் செய்து முதல்லை குடுத்த பரிசு, அதிலையும் நாளைக்குப் பெருநாள் நாத்து அதைக் காலிலை போட்டுக் கொண்டு தொழுவப் போகும் வீட்டுக்குப் போகாட்டி, நம்மளுக் குத்தான் நல்லா இருக்குமா?''...

'.....இன்டைக்குப் போகட்டும், நாளைக்குப் பெருநாள். கடை பூட்டுவம். நாளைக்கு மக்க நாள் திரும்பிக் குடுத்திடுவம்''....

மனத்துடன் தர்க்கவாதம் புரிந்து பார்த்தான். சஞ்சல உணர்ச்சி செத்து மடிந்தது. தான் கட்டிய வலைக்குள் தானே விழுந்து தவிக்கும் சிலந்திப் பூச்சியைப் போல தனது சிந்தனை வலைக்குள் சிக்குப்பட்டுத் தவிதவித்து தன்னையே தேற்றிக் கொண்டான்.

கடைப்படியில் ஏறிப் பட்டறையில் அமர்ந்ததே நினைவில் இல்லை.

பையன் ஒரு சோடி சப்பாத்துக்களையும் இரண்டு சிறு வர்களின் செருப்புக்களையும் முன்னால் வைத்தான்.

''இதுகளை கால்சட்டைக்கார துரைதந்திட்டு போனார். செய்து வைக்கட்டாம். சப்பாத்து இரண்டுக்கும் நல்ல குதி அடிச்சு வைக்கட்டாம் இப்ப வருவாராம்.''

''சரி சரி; நீ ஊட்டுக்குப் போய் சோறு தின்னுட்டு வா!...''

மனதின் குரங்காட்டத்தை அடக்க, இதயத்தின் எழுச்சியை இறக்க, தொழிலில் மனத்தை இலயிக்க விட்டான். கை பரபர வென்று பழக்கப்பட்ட வேலையை இயந்திர கதியில் செய்கின்றது. மனம் காட்டில் மேயும் மான் குட்டியைப் போல, அலைந்து திரிகின்றது. அது சுற்றி சுற்றி.....

ஒரு பூட்சிற்குக் கீல் அடித்தாயிற்று. அடுத்ததை எடுத்துக் குறட்டினால் ஆணிகளைக் கழற்றினான். படக்கென்று குறடு விடுபட்டு முழங்கை சுவரில் மோதியது, 'லேசான வலி. முகத்தில் வேர்வை சரம் கோத்து நிற்க, தலைமயிர் ஒழுங்கு கெட்டு, முன் னால் கவிந்து கண்களை மறைக்க, பூட்ஸை வைத்து விட்டு, நெற்றியில் விழுந்த மயிர்க்கற்றைகளை கையால் கோதி மேலேற்றித் தலையில் படிய அழுத்தி விட்டுக் கொண்டே உடுத்திருந்த சாரத்தின் கீழ் தலைப்பை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

தொடர்ந்து வேலை நடக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்ஸ் இரண்டிற்கும் பாலிஸ் பண்ணி வேலையைத் துப்புர வாக முடித்தாகிவிட்டது. அடுத்தது குழந்தைகளின் செருப்புக்கள்.

"இந்தாப்பா! உன்னட்டை எத்தனை தடவை அலையிறது?"

பழக்கப்பட்ட குரல்.

நிமிர்ந்து பார்த்தான் .

...'சே! இந்த நசராணி புடிச்ச மனுஷன் இவ்வளவு நாளும் ஊட்டிலே சும்மா குந்தி இருந்திட்டு, இப்ப வந்து துலைக்கிறானே?'

அந்த மலாயாப் பென்சன்காரர் ஒவ்வொரு படியாக மேலேறு கின்றார். உருவம் உயர்ந்துகொண்டே வருகின்றது.

வெந்து கொண்டிருக்கும் சுடுமணலில் கால் வைத்தவனைப் போல், ஒருகணம் திணறுகின்றான், முத்து முகம்மது.

மனம் மருளுகின்றது

சற்று மௌனம்.

"இந்தாப்பா.....தலையை நிமிர்த்திப் பார்."

நிமிர்ந்து தலையைத் திருப்புகின்றான். நெஞ்சம் ஆட்டுக் குட்டியின் வாலைப்போலப் பதறுகின்றது.

"அண்டைக்குத் தந்த அந்தச் செருப்புச் சோடியை எடு!"

கடையைச் சரியாக அடையாளம் கண்டு கொள்ளாமல் இடம் தவறி வந்துவிட்டவரைப் பார்ப்பதுபோல, அலட்சியமாகப் பார்த்த வண்ணம் நடித்து, "எதைக் கேட்கிறீங்க? எந்தச் செருப்பு?" என்றான்.

"அதுதானப்பா..... அண்டைக்குத் தந்தேனே, அந்தச் செருப்புகளைத்தான்....."

"எப்ப உங்களுக்குத் தாற தவணை?"

"அண்டைக்கு வாறனெண்டன், வர முடியாமல் போச்சு, அதுதான் இண்டைக்கு வந்திருக்கிறேன். ம்.....! எடு.....!" - சொல்லிக் கொண்டே மடியைப் பிரித்து மணிபர்ஸை எடுத்து, விரித்துத் துழாவி ஒரு ஐம்பது சத நாணயத்தையும் இருபத்தைந்து சத நாணயம் ஒன்றையும் எடுத்தார்.

"தவணை தப்பிப் போச்சானால் செருப்பு இங்கே இருக்காது. வெளியிலை குப்பை கூடைக்கை எறிஞ்சிருப்பம்" - வார்த்தைகளை அளந்து அவருடைய முகத்தை ஊடுருவிப் பாத்தவண்ணம் கூறினான், முத்து முகம்மது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரலில் கூச்சம், சற்று அச்சமும் நிழலாடியது.

அவர் இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை. 'வெள்ளைக்கார னான வெள்ளைக்காரனுக்கே கண்ணில் விரலைவிட்டு ஆட்டிய என்னை இந்தப் பொடிப்பயல் ஏமாத்தவா!' என்ற எண்ணம் பென்சன்காரருடைய மனதில் இழையோடினாலும், ஆத்திரத்தை வெளிக்குத் தெரியால் மறைத்தவாறு, "என்னப்பா, விளையாடு கிறாய்? புத்தப் புதிசு. குப்பேக்கை எறிஞ்சு போட்டன் என் கிறாயே? பதினெட்டு ரூபாயல்லவா?" என்றார்.

"சும்மா சத்தம் வேண்டாம். குப்பைக்கை எறிஞ்சு போட்டன் எண்டால் எறிஞ்சு போட்டன். ஆமா, இப்ப என்ன செய்யச் சொல்றீங்க? - இந்தத் தடவை அவனுடைய பேச்சில் ஓர் அசாதாரணமான போலிக் கோபத்தொனி ஒலித்தது.

ஆத்திரத்தை அடக்கிக் கொள்ள அவர் சற்றுச் சிரமப்பட் டாலும் முடிவில் நெஞ்சுக் கொதிப்பை அடக்கிக் கொண்டு, "என்னப்பா இப்படிப் படுபொய் சொல்லுறியே! சத்தியம் பண்ணிச் சொல்லுவியா?" என்று கேட்டார். தொடர்ந்து, "உன் பெத்த தாயைக் கொண்டு சத்தியம் பண்ணு! எறிஞ்சு போட்ட னென்டு உன் தாயைக் கொண்டு சத்தியம் பண்ணுவியா?" என்றார்.

"உம்மா மேலாணையா எறிஞ்சு போட்டன்!"

"உன்ரை அப்பனைக் கொண்டு சத்தியம் பண்ணு, பார்க்க லாம்?"

"வாப்பா மேலாணையா குப்பேக்கை எறிஞ்சிட்டன்!"

"ஆ!".....வாயைப் பிளந்தார். சிந்திப்பதற்கும் அப்பாற் பட்ட நிலை. ஒரு வெறி. 'ஏமாற்றுகிறானே!' என்ற நினைப்பில் ஏற்பட்ட ஒருவித ஆக்ரோஷம். உலைப்பட்டறை போன்று நெருப்பை உமிழும் அளவிற்கு உணர்ச்சி கொதிக்கின்றது. "உன்ரை கடவுளைக் கொண்டு சத்தியம்!" என்று ஆத்திரமாகக் கத்தினார். கூச்சலிட்டார். என்றே சொல்லாம். சொல்லிக் கொண்டே படியேறித் தாவி மேலேறி, கதவின் கீழ்நிலைப் படியுடன் பொருத்தப்பட்டிருந்த ஒரு சாண் அகலமுள்ளதும் பட்டறைப் பலகையுடன் இணைக்கப் பட்டிருந்ததுமான நிலைத்தளத்தில் நின்று கொண்டார்.

"ஆண்டவன் ஆணையாக எறிஞ்சுபோட்டான்!"

-'அட படுபாவி! கடைசிலை கடவுளைக் கொண்டு கூடச் சத்தியம் பண்ணிப்போட்டானே?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதமற்று, யுத்தகளத்தில் நிற்கும் போர்வீரனின் மனநிலை. உலகமே தன்னைத் தன்னந்தனியாகக் கைவிட்டு விட்டதோ என்ற தவிப்பு பென்சன்காரரின் நெஞ்சில். நீதியை நிலைநிறுத்தி, கடவுளைப் காப்பாற்றி விடுவதைவிட, தன்னுடைய சுய கௌரவத்தை எப்படியாவது நிலை நிறுத்தியாக வேண்டுமென்ற அசட்டுப் பிடிவாதத்துடன் சுற்று முற்றும் பார்க்கின்றார்.

ஒன்றுமே சட்டென்று மனதில் பிடிபடவில்லை.

நினைவுக்கோணத்தில் மின்னல் பளிச்சிட்டது.

தனது காலில் அணிந்திருந்த செருப்புக்களைக் காலை விட்டு நகர்த்திக் கழற்றினார்.

-'ப்பூ! இனி என்னத்தைத்தான் செஞ்சு கிழிச்சிடப் போறார், பார்ப்போமே?''

இப்படி நினைத்திருந்த முத்து முகம்மதுவின் காதுகளில் பென்சன்காரர் உச்சரித்த வார்த்தைகள் தெளிவாக விழுந்தன.

''இது தான் கடைசித் தடவை! ஓமோம், கடைசிமுறை. எங்கை, இதை தொட்டுச் சத்தியம் பண்ணு, பார்ப்பம்? உனக்குச் சோறு போடுகிற இந்தச் செருப்பைத் தொட்டு சத்தியம் பண்ணு, உண்மையாய் எறிஞ்சு போட்டாயென்று!'' - கண்கள் தரையில் தாழ்ந்து, பதிந்து, தரையோடு உறவாடிக் கொண்டிருந்த, கீழே அனாதையாக விடப்பட்டிருந்த, அந்தச் செருப்புகள் இரண்டையும் அர்த்தத்தோடு வெறித்துப் பார்த்தன. அவனுடைய விழிகளில் சலனம். மனச்சாட்சியின் மருண்ட பார்வை அவனுள்.

''- இதைத் தொட்டா நான் சத்தியம் பண்ணுறது? எனக்குத் திங்கச் சோறு தாற இதைக் கொண்டா நான் பொய் பேசுறது?'

மௌனம்.

அந்த மௌனம், பென்சன்காரரின் ஆவேசம் அலைக் கழிக்கும் நெஞ்சில் வெற்றிப் பெருமித அலைகளைப் பாய்ச்சு கின்றது.

''என்ன, பேசாமல் சும்மா இருக்கிறாய், ஹூம்! சத்தியம் பண்ணன்.....!''

''முடியாது!,, என்பதற்கு அடையாளமாக அவன் தலை அங்குமிங்கும் ஆடி, அசைந்து, மறுப்புத் தெரிவித்தது. ''ஏலாது! இதைக்கொண்டு நான் சத்தியம் பண்ண மாட்டேன்!'' என்றான், முத்து முகம்மது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு

நாவேந்தன்

எனக்கு ஒரே ஓர் ஆசை. எண்பது வருடங்கள் தூல சரீரத் துடன் இந்த உலகத்தில் உலாவும் சிதம்பரம் என்றைக்காவது ஒரு நாள் சாகவேண்டிய தென்னவோ நிச்சயம். அப்படிச் செத்துப் போன பின்புதான் என் ஆசை நிறைவேறவேண்டும். "அப்பனே, ஆனைமுகத்தனே இந்த ஏழையின் ஒரே ஆசையை நிறைவேற்ற மறந்துவிடாதே!"

கோவில் மணியின் புளகாங்கித சப்தத்துடன் ஆனைமுக னைப் பக்தி சிரத்தையுடன் பணிந்தெழுந்தேன். உடல், உள்ளம் எல்லாம் இலேசாகி விட்ட உணர்ச்சி! விருத்தெரிந்த காலந்தொட்டு, விருத்தாப்பியதசை கப்பிக்கொண்ட இந்நாள்வரை கரிமுகக் கட வுளிடம் கணமும் நான் வேண்டும் வரம் இந்த ஒன்றுதான்.

அந்த ஒரு வரமும், நான் உலகத்தில் வாழ்வதாக மற்றவர்கள் நினைத்துக்கொண்டிருக்கும்போது எனக்கு வேண்டியதில்லை. என்றோ இம்மாய உலகைவிட்டு மறைந்த பின்புதான் எனக்கு அது வேண்டும்.

நினைத்து, நினைத்து வேண்டுதல் செய்து பழகிப் போன மனம் கரிமுகன் சந்நிதியில் மீண்டும் மீண்டும் அதையே கூறி ஓலமிட்டது. கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக ஒழுகியது. மண்ணுலக நினைவுகள் கொஞ்சங் கொஞ்சமாக மங்கி மறைந்து கொண்டிருந்தன. இப்படி எவ்வளவு நேரம் இருந்தேனோ தெரி யாது. கோவில் குருக்கள் குரல் கொடுத்த போது தான் என் நிட்டை கலைந்தது.

'சிதம்பரம்.....என்ன அழுகிறாயா?'

"இல்லைச் சுவாமிகாள்..."

என் குரல் தழுதழுத்தது. ஏனோ...?

அருச்சனைக்குப் பணம் இல்லாவிட்டால் பரவாயில்லை. நான் அருச்சனை பண்ணித் தருகின்றேன்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில் குருக்களின் அன்பு மொழிகளில் என் இதயம் மீண்டும் நெக்குருகியது; விம்மியது. உதடுகள் உணர்விழந்தன. நான் என்னை இழக்கலானேன். குருக்களின் ஈரநெஞ்சத்தின் தன்மையில் என்னிடமிருந்த வறுமை என்றோ பூண்டற்றுப் போய்விட்டது. ஆனைமுகனை அருச்சனையோடு சந்திக்க வழியற்று வருந்திய போதெல்லாம் குருக்கள் என் நெஞ்சைக் குளிர்வித்தார். இன்றும் அதேபோல நினைத்துவிட்டார்.

''மன்னிக்கவேண்டும் சுவாமி! அருச்சனை இன்றைக்கு வேண்டியதில்லை. இன்றுடன் என்னையே அவனுக்கு அருச்சனை யாக்கிக் கொண்டேன்!''

என் உடல் கிடு கிடுவென நடுங்கியது. என்றுமில்லாத பிரேமையில் மனம் சிக்கிக்கொண்டதா? பேசுவது நானா, அல்லது வேறொன்றா.....?

குருக்கள் மௌனமாக மெல்லடி எடுத்து வைத்துத் திருவுள் ளைக் கடந்து வெளியே நடந்தார். சிறிது நேரம் மீண்டும் அதே மௌன நிலையில் நின்றுவிட்டு நான் வீடு திரும்பினேன். வயது எண்பதல்லவா உடலுக்கு? ஒரே அசதியாக இருந்தது? வீடு வந்ததும் விழுந்து படுக்கத் தோன்றியது. மனம் மாத்திரம் மண்ணி லிருந்து விண்ணுக்குத் தாவிக்கொண்டிருந்தது!

நான் விழித்துக்கொண்டபோது, எல்லாம் புதுமையாக இருந்தது. வீட்டின் மையத்தில் கிடந்த கட்டிலைச் சுற்றிப் பத்துப் பதினைந்து பேர் பெண்கள், ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்தனர். அட, அது நான் படுத்துக் கொண்ட கட்டிலல்லவா? பக்கத்தில் சென்று பார்த்தேன். அங்கு நானா படுத்திருக்கிறேன்...? அழுகைக் குரலதிகரித்தது! ஈதென்ன மாயமோ? உள்ளுக்குளிருக்க எனக்குப் பிடிக்கவில்லை. 'சட்'டென்று வெளியே வர எண்ணினேன். எண்ணி முடியவில்லை. வெளியே வந்துவிட்டேன். தள்ளாத வயதில் எப்படி என் பார உடம்பு இதற்கெல்லாம் வளைந்து கொடுக்கிறது? உற்றுக் கவனித்தேன்; எனக்கொன்றும் அப்படி ஒரு உடலிருப்பதாகவே தெரியவில்லை! எள்ளுக்குள் எண்ணெ யாகவிருந்து எண்ணெய்க்குள் எள்ளாக மாறி விட்டேனா? என் னவோ ஒரு கட்டுக்குள்ளிருந்து விடுதலை பெற்றுவிட்டதைப் போன்றதோருணர்ச்சி என்னை ஆட்கொண்டது! அத்துடன் சுற்றிவர நிகழும் செயல்களைக் காண வேடிக்கையாகவும், ஆவ லாகவுமிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இவ்வளவு நேரமாக, வெளிப்படையாகத் திரிகிறேனே, ஒருவரும் என்னைக் கவனிக்கிறார்களில்லையே! கவனிக்கா விட்டாற் போகட்டும்! எனக்கென்ன பெரு நட்டமா விளையப் போகிறது.....? மீண்டும் சுற்றி வந்து ஒரு நோட்டம் விட்டேன். அடே, அப்பா! எனக்குத் தெரிந்த எத்தனை மனிதர்கள், பெண் கள், பிள்ளைகள் கூடியிருக்கிறார்கள். என்ன விசேடமோ? அதோ, என் மூத்த மகன் அழுதுகொண்டு போகிறானே! அவனுக்குக் கூடவா அழுகை வருகிறது? அட, எமகாதப் பயலே! அங்கே பாருங்கள்! என் மனைவி எதற்காக அழுது தொலைக்கிறாள்? என்னிடம் வந்த காலந்தொட்டு ஐம்பது வருடங்களுக்கு மேலாக அழுகிறாள், அழுகிறாள் இன்னும் இந்த அழுகையில் சலிப்பு தட்டவில்லையா இவளுக்கு.....?

எங்கிருந்தோ சுகந்த வாசணை மிதந்து வந்து என்னைத் தாக்கியது. நேரே அங்கு பறந்தேன்!

தோல் நீக்கிய உருளைக்கிழங்கைப் போன்ற மழுங்கச் சிரைத்த தலை மனிதர் ஒருவர் ஏதோ மந்திரங்களை முணுமுணுத் துக் கொண்டிருந்தார். அவரைச் சுற்றியுள்ளவர்கள் - எல்லோரும் எனக்குத் தெரிந்தவர்கள் தான். வெகு பக்தி, சிரத்தையுடன் கண்ணீர் மல்கத் தேவார திருவாசகங்களைப் பாடிக்கொண்டிருந் தனர். அவர்கள் ஒவ்வொருவரும் தனி வாழ்வில் ஒவ்வொரு வகையினர்! என்னவோ திடீரென்று இப்படி மாறி விட்டார்கள்.

நடுவிலே அனல் ஒளிவிட்டு எரிந்து கொண்டிருந்தது. சுகந்தவர்க்கங்கள் அதில் அர்ப்பணிக்கப்பட்டு நறிய வாசனை யைப் பரப்பிக்கொண்டிருந்தன. எங்கு நோக்கினும் மக்கள், கச முசவென்று ஏதேதோ பேசிக்கொண்டிருந்தனர். என் பிள்ளைகள் கூட என்னைக் கவனியாமல் துக்கந் தோய்ந்த முகபாவத்துடன் செல்கிறார்களே! ஏன்...?

அதோ என் வயது நண்பர்கள் மாணிக்கமும், அம்பலம் வாத்தியாரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். என்ன பேசுகிறார் களோ....?

"அட கடவுளே, இப்பத்தானே விடயம் புரிகிறது! "நான் இறந்துவிட்டேனாம்..." நன்றாய்ச் சொன்னார்கள்! பைத்தியக்கார மனிதர்கள். இதோ, அவர்கள் முன்பு அவர்கள் பேசுவதையே கேட்டுக் கொண்டிருக்கிறவனைச் செத்துப்போனான் என்று கதையளக்கிறார்கள்! நான் செத்தாபோனேன்...? சதையுணர்வில் பிறந்த இவர்களுக்குச் சதைப்பிண்டமற்ற அருவவாழ்வு அறியாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுதானே! நிகழும் சம்பவங்களையும், கூடி நிற்கும் மனிதர் களையும் காண எனக்கு ஒரே வேடிக்கையாக இருக்கிறது. எவ் வளவு நேரம் இப்படித் 'தடபுடல்' செய்யப்போகிறார்கள்? எனது அன்புக்குரிய பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் ஒவ்வொருவரையும் காண வேண்டுமென்ற ஆசை என்னை அலைக்கழித்தது! ஒவ் வொருவராகத் கவனித்துக்கொண்டு சென்றேன். அவர்களுக் குத்தான் என்னைப் பார்க்கச் சகிக்கவில்லைப் போலும்.

அந்த வீட்டுத்திண்ணையின் தென்கோடியில் ஓர் இளம் பெண் தலைவிரிகோலமாகத் தன் கரங்களுக்குள் தலையப் புதைத் துக் கொண்டு 'தாத்தா, தாத்தா' என்று கரைகிறாளே!அவன் தான் என் பேர்த்தி பத்மா! மூத்தமகனின் மகள். நல்ல பெண்! அவளுக் குச் சற்றுத் தூரத்தில் சிந்தனை தேங்கிய முகத்துடன் காட்சியளிக் கிறானே ஒரு வாலிபன், பத்மாவின் கணவன் அவன்.

சமீபகாலமாகப் பெண் வீட்டாருடன் மனத்தாபமாக இருந்து விட்டு, இன்று தான் 'என் சாவீட்டுக்கு' வந்திருக்கிறானாம். பத்து உரத்து அழுவதற்கு என்மீது கொண்ட அன்பு மாத்திரமல்ல, பெற்றோரின் பிடிவாதத்தால் கணவனைப் பிரிந்திருந்த வேதனை யும் கூட ஒருவேளை காரணமாகலாம்! பாவம் பத்மா! இனியாவது கணவனுடன் குடித்தனஞ் செய்ய வழிபிறக்கட்டுமே...! என் வாழ்த்துப் பலிக்குமோ?

மேலே கவனித்துக் கொண்டு சென்றேன். என்ன விசித்திரம்! நான் உயிருடன் இருக்கிறவனாகக் கருதப் பட்டபோது அணு வளவும் ஆதரவு காட்டாதவர்கள் கூட இப்பொழுது உயிரை மாய்த்துக் கொண்டல்லவா புலம்புகிறார்கள்! எனக்குப் பசித்த போது, பணம் தேவைப்பட்டபோது, தேக நலமற்றிருந்தபோது, திரும்பிப் பார்க்கவும் விரும்பாதவர்கள் இன்றைக்குக் காட்டுகிற அருவருப்பு நிறைந்த அன்பைக் காண என்னாற் சகிக்க முடிய வில்லை. மனிதனுக்குச் செத்தபிறகுதானா சிறப்புத்தேவை? நல்ல சித்தாந்திகள் இவர்கள்! யார், யாரையோ பிரிந்த துக்கத்தை யெல்லாம் நான் செத்து விட்டதாகக் கருதி இங்கே அழுது தீர்க் கிறார்கள்.

திடீரென்று அழுகைக் குரலதிகரித்தது. பறை மேளம் வான மேயதிரக் கொட்டிமுழக்கியது. சுகந்தவர்க்கங்களின் வாசனைப் புகை மூட்டமிட்டது. சனங்கள் ஊர்வலமாக நடக்க ஆரம்பித்து விட்டனர். அவசரம், அவசரமான அந்தப் பக்கம் சென்றேன்! பாடையைத் தூக்கிக்கொண்டு கிளம்பிவிட்டனர்! அந்தப் பாடைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குள் பழைய மனிதன் சிதம்பரம் இறுதி யாத்திரை செல்கிறான். 'செத்தாரைச் சாவார் சுமந்து' செல்ல ஆரம்பித்து விட்டார்கள். நாடகமே உலகமல்லவா? அவர்களைத் தொடர்ந்து செல்ல எனக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் போய் வரட்டும் ! நான் வீட்டிலேயே தங்கிவிட்டேன்?

மாலை மயங்கி இருள் கவியத் தொடங்கி விட்டது. சத்தம் ஓய்ந்து விட்டது. கூட்டம் குறைந்து விட்டது. பகல் முழுவதும் அழுது புரண்ட அலுப்புடன் வீட்டாரிற் பலர் சோர்ந்து, துவண்டு, சுருண்டு துயின்று கொண்டிருந்தனர்!

மின் விளக்கின் ஒளி வெள்ளம் இருளைப் பிளந்து சிரித்துக் கொண்டிருந்தது. அந்த விசித்திர ஆசை மீண்டும் என்னுள் தலை யெடுத்தது.

"பத்மாவும் கணவனும்...?"

ஒருவேளை அவன் 'இழவு' காரியம் முடிந்ததும் போயிருப் பானோ...? எதற்குத் தயங்க வேண்டும். என் நடமாட்டத்தை யார் கவனிக்கப் போகிறார்கள்?

ஒவ்வொரு அறையாகப் பார்த்துக் கொண்டு வந்தேன், கடைசி அறையில் கைவிளக்கு மங்கி எரிந்து கொண்டிருந்தது. பேச்சுக் குரல் கேட்டது. உள்நுழைந்தேன்.....! அதோ பத்மாவும் கணவனும் ஒரே படுக்கையில்..!

எல்லையற்ற மகிழ்ச்சி என்னை ஆட்கொண்டது. இனிப் பத்மாவும் கணவனும் ஒரு போதும் பிரியமாட்டார்கள்.

"தாத்தா, தன்னைக் கொடுத்து எங்களை இணைத்து விட் டார்."

கணவனை அணைத்தபடியே பத்மாவின் பவள உதடுகள் முணுமுணுத்தன. பிரிந்தவர் கூடினாற் பேசவும் வேண்டுமா? வாழ்க அவர்கள்.

வெளியே வந்தேன். சாவிலே வாழ்வு மலர்கிறது! புதிய சீவகளை உயிர்க்கிறது. ஏன் சஞ்சலப்பட வேண்டும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமி

தேவன்

எனக்கு அப்பா அம்மாவைத் தெரியாது. நான் பிறந்தவுட னேயே அம்மா போய் விட்டார். கொஞ்சக் காலத்துக்குப் பின்பு என் அப்பாவும் காலமாகி விட்டார். ஆனால் அவர்களில்லையே என்று நான் தவிக்கவில்லை. என் பாட்டி - அது தான் அம்மாவின் அம்மா - தான் என்னை வளர்த்து வந்தா, இதெல்லாம் பழைய கதை இப்போது மறந்து விட்டவை. நான் படித்து வளர்ந்து பெரியவனாகி ஒரு உத்தியோகமும் பெற்று விட்டேன். உத்தி யோகமாகி கொழும்புக்கு வந்ததிலிருந்து என் மாமாவுடனேயே இருக்கிறேன். என் மாமாவென்றால் அம்மாவின் தம்பி. எனக்கு ஒரு மாமா தான். அவர் பிரம்மச்சாரி, எனக்கு மேற்பார்வையா யுள்ள ஒரு ஆண் அவர்தான். மற்றது தான் என்னை வளர்த்த பாட்டி, அவவும் செத்து இப்போது நாலைந்து வருஷமாகிறது. எனக்கு ஊருக்குப் போக வேண்டிய தேவையேயில்லை. என் மாமா மட்டும் நில புலன்களை இடையிடை போய்ப் பார்த்து விட்டு வருவார்.

அன்றொருநாள் ஒரு நடன நிகழ்ச்சி ஒன்றுக்குப் போனேன். என் மாமாவுக்கு இதெல்லாம். பிடிக்காது. ஆனால் எங்கள் கந்தோர் ஊழியர்களின் நலவுரிமைச் சங்கத்தின் நிதிவளர்ச்சிக்காக நடந்த நாட்டியக் கச்சேரி அது. கட்டாயமாக என் மீது ஒரு நுழைவுச் சீட்டு திணிக்கப்பட்டது. அது ''காட்டிலை போகாமல்'' வீணாக்காமல்- இது என் பாட்டியிடமிருந்து எனக்கு ஊறிய குணம். கச்சேரி பார்க்கப் போனேன். போன இடத்தில் தான் அந்தச் சம்பவம் நடந்தது. அன்று நல்ல மழை. நான் குடையோடு மண்டப வாயிலில் நின்றேன். ஒரு கார் வந்து நின்றது. அதில் வந்தவள் தான் அன்று நாட்டியமாடிய பெண். வீட்டிலேயே ''மேக் -அப்'' எல்லாம் செய்து கொண்டு வந்தாள். கதவைத் திறந்ததும் நான் விரித்த குடையுடன் காருக்குப் பக்கத்தில் நின்றேன். பிறருக்கு உதவுகின்ற சுபாவமும் என் பாட்டியின் ரத்தத்திலிருந்தே ஊறியது. ஏற்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தவர்கள் அங்குமிங்கும் அலுவலாக இருந்தவர்கள் ஓட்டமாய் வந்தார்கள்.

அதற்கிடையில் காரிலிருந்தும் மண்டபம் வரை - பத்து அடிதூரமிருக்காது - என் குடையின் கீழ் வந்தாள். அந்தப் பத்து அடியும், அவளுடைய உடையின் சரசரப்பும் அவளுடைய உடலில், முகத்தில், தலையில் தடவியிருந்த வாசனைத் திரவியங்களின் வாசனையும் என்னைத் திணறடித்தன. அப்புறம் நான் சபையின் ஒரு மூலையில். அவள் ஒளி விளக்குகளின் மத்தியில். மேடையின் நடுவில் பார்த்தவர் கண்ணுள், இதயத்துள். ஆட்டம் முடிந்தது. வீட்டுக்குப் போனேன். "மழையில் என்ன நடனம்?" என்று பேச்சு வாங்கினேன்.

மறுநாள் என் நண்பன் ஒருவனை ஊருக்குப் போகிற ரயிலில் சந்திக்க வேண்டியிருந்தது. ஒவ்வொரு பெட்டியாக தலையை நீட்டிக் துழாவிப் பார்த்துக் கொண்டே போனேன். ஒரு இரண்டாம் வகுப்புப் பெட்டியில் அவள். "நீங்கள்"... என்றாள்.

"ஆம், நான்...." என்றேன். புரிந்து கொண்டேன். குடை பிடித்த விஷயத்தைத் தவிர வேறென்ன இருந்தது நமக்குள்ளே? "அப்புறம் நீங்கள் முழு ஆட்டத்தையும் பார்த்தீர்களா? எப்படியிருந்தது?"' என்றாள். நரைக் கீறல்களுடன் ஒரு முதியவர் என்னை நிமிர்ந்து என்ன சொல்லப் போகிறனென்று பார்த்தார். தகப்பனாராயிருக்க வேண்டும்.

"இல்லை, ஏன்? நன்றாயிருந்தது....?" என்றேன்.

"இது தான் கொழும்பில் முதல் தடவை. அது தான் கேட்டேன்" என்று சொல்லி விட்டுச் சிரித்தாள். அவளுடைய பற்களின் வெண்மையும் கன்னத்தில் விழுத்த குழிகளும் என்னை உற்றுப் பார்க்கச் செய்தன.

"நான் புரொபெஷனல்"' என்றாள். எனக்கு பொருள் சரியாகப் புரியவில்லை. "அமெச்சூர், புரொபெஷனல்" என்ற பதங்களையெல்லாம் நன்கு கேள்விப்பட்டிருக்கிறேன். இவள் குறிப்பிடுவது... தொழிலாய் கொண்டு விட்டேன். நன்றாயிருந்தால் தானே இனிமேலும் "சான்ஸ்" வரும் என்பதையா? இருக்கலாம்.

நான் என் நண்பனைக் காணவில்லை. புகையிரதம் நிலையத்தை விட்டு இரையும் போது நான் அவளுக்கு கைகளை உயர்த்தி ஆட்டிக் காட்டிக் கொண்டிருந்தேன். எனக்கு காதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி, இப்படியென்றொரு வியாதியிருக்கவுமில்லை. அப்போது ஏற்படவுமில்லை. கல்யாணத்தைப் பற்றிதான் முன்பு சிந்தித் திருக்கிறேன். பின்னேயென்ன? எல்லாருக்கும் என்றோ நடக்க வேண்டியதைப் பற்றி நினைத்துப் பார்ப்பதில் தவறென்ன? இதில் ஒளிப்பு மறைப்பு எதற்கு!

எனக்கு வருகிறவள் லட்சணமாய், சிக்கனமாய் குடும்பத்தை நடத்தத் தெரிந்தவளாய் இருந்தால் போதும்... இதற்கு மேலே யோசிக்க எனக்கு நேரமிருப்பதில்லை. இந்த யந்திர வாழ்க்கையில், வேகம், அவசரம் என்று ஆலாய்ப் பறக்கையில் யார் யோசிக் கிறார்கள்? எதைப் பற்றி? ஏன்? எந்த நேரமும் எந்த மனிதனும் காதல் கலியாணம் என்று கனவு கண்டபடியே இருக்கிறானா. என்ன?

அன்று வீட்டுக்குப் போய்ப் பேசிக் கொண்டிருக்கையில் மாமாவிடம் ''ஊரில் உங்களுக்கு வடிவேலு என்றொருவரைத் தெரியுமா?'' என்று கேட்டேன். ரயிலடியில் முழு விபரமும் சேகரித்து விட்டேனே?

''எந்த வடிவேலு''

''அவருக்கு ஒரு மகள் ''டான்ஸ்'' ஆடுகிறாளே?''

''சீ, சீ! விட்டுத்தள்ளு. மேனி மினுக்கியவள், தேவடியாச் சாதி...

ஏதோ தொடக்கூடாத அழுக்கைப் போல, மிகவும் அசிங்க மான பொருள்போல முகத்தைச் சுளித்து வெறுப்பைக் காட்டினார் மாமா, மேலே நான் பேசவில்லை.

வெகுநாட்களுக்குப் பிறகு எங்கள் வீட்டு வழியாகப் போனாள், அந்த மோகன சுந்தரி. நம்புவது கஷ்டமாகத்தானிருக் கும். ஆனால் அப்படித்தான் நடந்தது. கொழும்புக்கு ஒரு நாடக கோஷ்டியுடன் சேர்ந்து நடிப்பதற்காக வந்திருந்தாள். ஒத்திகை களுக்காக சில தினங்களுக்கு முன்பாகவே வந்துவிட்ட அவள் எங்கள் வீட்டுக்கு அப்பால் ஒரு வீட்டில்தான் தங்கியிருக்கிறாளாம். மாமா இல்லாத வேளையில் அவளைக் கண்டேனா?

வெளியே பேச்சுக் குரல் கேட்டு மாமாவே வந்துவிட்டார். அதுவும் பெண் குரல். மருமகனைக் கண்காணிக்க வந்துவிட்டார். அவருடைய முகமே இதுயார் என்று கேட்டது. அவளுடைய பூர்வீகத்தைச் சொல்ல எனக்குப் பைத்தியமா? ''வந்து..... இவ..... என்.....'' என்று நான் தடுமாறுகையில் சிவகாமி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள்தான் அந்தச் சுந்தரி, ''நான் இரண்டு வீடு தள்ளியிருக்கிறேன். எங்க ஊரவர் போல இருந்ததும் விசாரிக்கலாம் என்று பார்த்தேன்'' என்று என்னைப் பிணையெடுத்தாள்.

''வா.... வா''

யார் என் மாமாவா இப்படிச் சொல்கிறார்? என்னால் நம்பவே முடியவில்லை. நான் ''மாமா'' என்பதைப் பார்த்து அவளும் ''மாமா'' என்று குழைந்தாள். அவள் கூத்தாடிச்சி என்று தெரிந்தால்.....துடைப்பக்கட்டு கண்களுக்குத் தெரியக்கூடிய இடத்தில்தான் கிடந்தது.

அப்புறம் அடிக்கடி அவளைக் கண்டேன். நான் இல்லாத வேளையிலும் வந்து விசாரித்துவிட்டுப் போகிறாள் போலிருக் கிறது. மாமாவோ இப்போது வீட்டை விட்டு அதிகம் வெளியே போவதில்லை. ''என்னை மேய்க்க'' வேண்டுமல்லவா?'' என்று எண்ணினேன்.

நாடக நாள் வந்தது. போனேன், முதல் சீட்டில் மாமா இருந்தார், திகைத்துப் போனேன்.

இப்போது அவர் பிரமச்சாரியாயில்லை. அந்தத் ''தேவடி யாள்'' என் மாமி, அவளை நான் வையவில்லை, எப்போதாவது நான் வாய் திறந்து சொன்னேனா ''நான் காதலிக்கிறேன்'' என்று? காதலித்தேனா நான்? எனக்கே நிச்சயமாய்த் தெரியவில்லை. சமவயதுள்ள என்னை அவள் ஏன் விரும்பப் போகிறாள்? அவள் எனக்கு மாமிக்குத் தான் சரி, ''இந்தப் பழம் புளிக்கும்'' என்கிற நியாயமல்ல, உண்மைதான்.

என் பாட்டியிருந்த இடத்தில் இப்போது என் மாமி மாஜ கிக்கா.... இல்லையில்லை... என் மாமி, மாமி, மாமி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்கும் தவம்

எஸ். அகஸ்தியர்

"ஐயா, உங்க இருக்கிறியளோ? "

குரல் கொடுத்துக் கொண்டு விறாந்தைக்கு வெளியே நின்று கொண்டிருந்தான் சின்னத்துரை.

"என்னடாப்பா?" என்று கேட்டவாறு வெளியே வந்தார். 'சக்கடத்தார்' குருசுமுத்தர்.

"அவே, உங்களைத் தான் கூட்டியரட்டாம்"

"ஆற்ராப்பா?"

"மரியானண்ணையும் பாக்கியமப்பாவும்"

மதியூகமில்லாதவன் தனது பலவீனத்தைக் காட்டிக் கொள்ளும் போது, அதில் கணை தொடுப்பது எளிது என்பதை அவர் அறிவார். சின்னத்துரையின் பேச்சிலிருந்துஅவர்களை முற்றாகப் புரிந்து கொண்ட குருசுமுத்தர் அதை வாறாகப் பயன்படுத்திக்கொண்டார். 'மொக்குக் கழுதை' என்று பெயரெடுத்த சின்னத்துரையின் 'திறமை' யையும் அவர் தெரிந்து வைத்திருந்ததால், எல்லாவற்றையும் அநுமானித்துக்கொள்வதில் அவருக்கு ஒன்றும் சிரமம் இருப்ப தில்லை.

அவர் இருந்த இடத்தை விட்டு எழுந்துவர ஐந்து நிமிஷங் களாவது பிடிக்கும். இந்த அளவிற்காவது இவரைப் பற்றித் தெரி யாதவர்கள் யாராவது இருந்தால், அவர்கள் அசல் 'மண்டூகங்'கள்; அதாவது, ஒன்றுமே தெரியாத கிணற்றுத் தவளைகள்.

சின்னத்துரை 'மொக்குக் கழுதை' என்றாலும் குருசு முத் தரைப் பற்றிய எடுபிடிகள் எல்லாம் தெரிந்துதான் இன்னும் அவர் 'கேற்'றடியில் நின்று கொண்டிருந்தான்.

'என்ரா'ப்பா, 'நான்' இல்லாட்டி இனி ஊருக்க ஒண்டுமே நடக்காதா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சும்மா' எரிந்து விழுந்துகொண்டே, சின்னத்துரையைப் பார்த்து, ''சரி, நீ போ. நான் உனக்குப் பிறகாலவாறன். நீ போற கையோட மரியானையும் அங்க கூட்டிக் கொண்டு வந்துவிடு'' என்றார்.

அவர் மனசில் உள்ளுர ஒரு மகிழ்ச்சி. ஊர் விவகாரங்களில் தலையிட்டுத் தீர்ப்பளிக்கக்கூடிய 'புரக்கிராசி' வேலையும் தெரியு மாதலால், அதையிட்டும் அவருக்கு ஒரு பெருமை.

ஒரு காலம் அவர் பொடியனாய் இருந்தபோது வயிற்றுப் பசி தாங்காது இறங்கிய தரகுத் தொழில் மூலம் ஓரளவு முன்னுக்கு வந்தாரென்றாலும், அதனால் அவர் கடைசியில் வெறுப்பும் விரக்தியும் கொண்டார் ஆயினும், அந்தத் தொழில் மூலம் கிடைத்த அனுபவமே அவரை இந்தளவுக்குக் 'கெட்டிக்கார'னாக்கியும் விட்டது. அவர் எந்தத் தொழில் மூலம் அனுபவம், கெட்டித்தனம், பெண் ஆகியவற்றை அடைந்தாரோ அந்தத் தொழிலே கடைசி யில் அவர் மானத்தையும் பறித்து நடு றோட்டில் விட்டுவிட்டது.

குருசுமுத்தருக்கு அப்போது பத்தொன்பது இருபது வயதி ருக்கும். வழக்கம் போல இரணைதீவுக் கடலுக்குச் சென்று மீன்கள் வாங்கிக் 'காவுதடி' யில் போட்டுக் கொண்டு அப்படியே நாச்சிமார் கோயிலடி, சிப்பித்தறை, தட்டாதெருவுக் கூடாக, குருநகரைத் தாண்டி வீட்டுக்குத் திரும்பும்போது; தோளின் பாரம் குறைந்து மடிப் பணம் பாரமாகிவிடும்.

எந்தக் கிராமத்துக்குப் போகாவிட்டாலும் குருநகருக்குள் ளால் செல்லவில்லையென்றால் அன்றைக்கு 'யாவாரம்' நடக்காத மாதிரித்தான். ஆகையால் அந்த ஊருக்குள்ளால் வராமல் யாவராம் செய்யவேமாட்டார். அவருடைய விடலைப் பருவத்திற்கேற்ப ஒரு 'வாலைக் குமரி' தனது தாயோடு சேர்ந்து நின்று தெருப் படலையோடு ஒட்டிக் கொண்டு அவரைப் பார்த்து வந்த பழக்கம், கடைசியாகக் காதலாக மாறியது. எப்படியும் அவளைக் குருநரி லிருந்து தமது ஊருக்கே 'கிளப்பி'க் கொண்டுவர வேண்டும் என்று அவர் துடித்துக் கொண்டதினால், அவர் தேன் சுவைக்கும் வண் டாக மாறினார்.

காவு கோலுடன் நெடுந்தூரம் நடந்து அலைந்த களைப்பில் வீட்டுக்கு வந்ததும் அவருடைய ஆச்சிக்குப் 'பெற்ற கடமை'க்காக ஏதாவது கொடுத்துவிட்டு, மேல் காலைக் கழுவிக் கொண்டு, 'காத்தான் கொட்டில்' கள்ளுத் தண்ணியையும் 'மண்டி' விட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியே கிப்பித்தறைப் பக்கம் போய் முஸ்பாத்தி பண்ணி விட்டு, இரவு பத்துப் பதினொரு மணிக்கே வீடு திரும்புவார்.

எப்போதாவது யாவாரம் நயமில்லாவிட்டால் தனது தம்பி ராசப்புவையும் கூட்டிக்கொண்டு கடலுக்குப் போவார். அங்கே பெரியபாடு, சித்தோடை, அகலமுனை, ஓடத்தலை, சேத்துப் புட்டி, மடத்துக்கரை, வெட்டோடை, கொடுக்கடி ஆகிய கடற் பரப்புக்களில் நீர் வகையைப் பார்த்துப் பத்துப் பதினைந்து பாடுகள் இழுத்துவிட்டு, வெள்ளம் வந்து ஆற்றில் விழுந்தவுடன் தோணியைச் சாய்த்துக் கொண்டு கரைக்கு வந்துவிடுவார்.

ஒரு நாள் காற்றும் மழையும் சீறிக் கொண்டதால் யாருமே அன்று கடலுக்குப் போகவில்லை. இதையறிந்த குருசுமுத்து ராசப்புவையும் கூட்டிக்கொண்டு எவருக்கும் தெரியாமல் 'தனித் தோணி' தாங்கிக்கொண்டு போனார்.

தனி உழைப்பில் பிடிக்கும் மச்சங்கள் மறுநாள் துறைமுக வாடியில் நல்ல விலைபோகும் என்ற 'வியாபாரமூளை' அவருள் ஆசைத் தீயை மூட்டிவிட்டது.

அன்று செக்கல் பொழுதோடு தொழில் செய்யக் கடலுக்குள் இறங்கியவர்கள், நடுச்சாமத்துக்கு மேலாகியும்சோறும் தின்னாமல் 'ஒரேபிடி' யில் நின்று வலை இழுத்தார்கள்.

காற்று அடங்கவில்லை; மழையும் நிற்கவில்லை. தம்பி ராசப்புவுக்குச் சலிப்புத் தட்டிவிட்டது. நித்திரையும் வந்து கண் களை மயக்கியது.

கப்பல் களத்தில் ஒருபாடு இழுப்பதென்றால் பெரும் 'பிர சவவேதனை' யாகும். எப்படியோ 'முக்கித்தக்கி' இழுத்துக் கொண்டே பாட்டைக் கூட்டி உமலுக்குள் போடுவதற்குப் பதி லாகக், கை தவறிக் கடலுக்குள் போட்டுவிட்டான். ராசப்பு. குருசுமுத்தருக்கு நெருப்புப் போலக் கோபம் வந்துவிட்டது.

"டேய் சனியனே, இந்தப்பாடுபட்டு ரத்தம் புழிஞ்சு பிடிச்ச மீனை அப்படியே கடலுக்குள்ள போட்டிட்டியேடா மடையா. டேய், கலியாணம் செய்து தந்தால் உன்ர பொஞ்சாதியையும் இப்படித்தான்ரா கை விடுவாய், என்ன?"

வாயில் வந்தபடியே 'புறு புறு'த்துக்கொண்டு வெற்றிலை வாயைக் குதப்பி, 'பொழிச்' சென்று வலைக்குள் துப்பினார், முத்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராசப்பன் இளையவன் என்றாலும் இளந்தாரியல்லவா? 'சுரீர்' என்று அவனுக்கு மூக்கு முட்ட ஏறிவிட்டது.

''சரியண்ணை பறஞ்சதுகாணும், இனி பேசாம உன் பாட்டில வலையை இழு. இல்லாட்டி அடி துறைக்குப் போவம்''

சினப்பு மேலிட, சீறிக்கொண்டு சொன்னான், ராசப்பு.

''என்னடா பயலே, என்னோட எதிர்த்துக் கதைக்க வெளிக் கிட்டிட்டியோடா?''

''உப்பிடிப்பட்ட உனக்கு என்ன மரியாதை செய்யிறது?''

''என்னடா சொன்னனி, இன்னொருக்கா அப்பிடிச் சொல் லடா பாப்பம்''

''அது தான் சொல்றன், என்ன மரியாதையெண்டு''

'பளார்'

எடுத்த வீச்சில் ராசப்புவின் கன்னத்தில் ஒன்று விட்டார், முத்தர்

''என்ர ஐயோ! என்ர காதுக்குறிஞ்சி வெடிச்சுப்போச் சுதணை, என்ரை ஆச்சியோய்.....''

குழறிக்கொண்டு கடலுக்குள் 'தொப்' என்று விழுந்தான், ராசப்பு.

அந்த அடியோடு ராசப்புவின் காது உண்மையில் செவி டாய்த்தான் போய்விட்டது. அதற்குப் பின் ஊரில் எல்லோரும் ''செகிட்டு ராசப்பு, செகிட்டு ராசப்பு'' என்று தான் அழைப் பார்கள்.

அன்றையோடு அவர் பாடு தொழில் மந்தம்; பிடிபாடும் அருந்தல்.

குருசுமுத்தர் அந்தச் சம்பவத்துக்குப் பின் நாளாவட்டத்தில் தொழிலையும் விட்டு விட்டார். தடி காவுவதையும் நிறுத்திக் கொண்டார்.

அது ஒரு 'எழியதொழில்' என்று தனக்குள் தீர்மானித்தே விட்டார்.

கொஞ்ச நாள் கழிய வயிறு கடித்தது. அந்த உபாதையால் 'சுறுட்டுச் சுத்திப் பாப்பம்' என்று கொழும்புத்துறைப்பக்கம் உள்ள சுறுட்டுக் கொட்டில்களுக்கு 'விஜயம்' செய்யத் தொடங்கி னார். அவை கூட அவர் வயிற்றை நிரப்பவில்லை. ஆனால் அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்போட்ட பெண்மணி இருந்தாளே, அந்த 'வைப்பு'க்கு மட்டும் என்னவோ வயிறு நிரம்பிக்கொண்டு வந்தது.

இந்த விஷயம் வெளிக்குத் தெரிந்து கை காலுக்குப் பொல் லாப்பு வந்து சேரமுன் புத்திசாலித்தனமாக அவர் தனது ஊருக்கே இரகசியமாக வந்து விட்டார். அவளும் 'இதை விட்டால் இனிக் கிட்டாது' என்று ஓடி வந்துவிட்டாள். கூடி வந்தவளை ஊரில் வைத்திருக்கக்கூட அவரால் முடியவில்லை. எனவே, கொழும்பு மா நகருக்குப் புறப்பட றெயில் ஏறிவிட்டார்.

அதற்குப் பின் அவருக்குக் கைகொடுத்து உதவியது ஒரு 'ஊர்ச்சக்கிடத்தார்' வேலை. அதிலிருந்துகொண்டே அவர் 'ஊர்த் தொண்டு' புரியலானார்.

சக்கடத்தார் குருசுமுத்தர் நடுக்குறிச்சிக்கு வந்து விட்டார். கூட்டம் பாக்கியக் கிழவன் வீட்டு முற்றத்தில் 'கலகலப்'பாக நடந்து கொண்டிருந்தது.

முத்தர் மெதுவாக நாரியை வளைத்துக் கைகளால் பிடித்துக் கொண்டு முன்னே வந்து கொண்டிருந்தார்.

பொறுத்த நேரத்தில் முத்தர் வந்திருக்காவிட்டால் இந்நேரம் மாரியானும் பொன்னுத்துரையும் பொல்லுகளால் மண்டை உடைபட்டிருப்பார்கள். அவரைக் கண்டதும் அமைதி நிலவியது.

''என்னடாப்பா, நீங்கள் மனிசர்களா அல்லது மிருகங்களா?'' என்றவர், 'கடல் நனைஞ்ச கால்புத்தி, இவங்களை விட்டுப் போகாது' என்று முணுமுணுத்துக் கொண்டார்.

யாரும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. இதைக் கண்ட தும் அவர் முகம் மகிழ்ச்சிப் பிம்பம் ஆகியது.

தம்முடைய கோட், சூட், ரை, சப்பாத்து ஆகியன அவர் களை ஊமைகளாக்கி விட்டன என்று யூகித்துக் கொண்ட அவர் முகத்தில் புன்னகை ஒன்று அரும்பியது.

சுமார் ஒருமணிநேரம் பேசிவிட்டு மரியானுக்கு மட்டும் ஏதோ 'சமிக்ஞை' காட்டியபின் எழுந்து சென்றார்.

அன்று இரவு அவருக்குத் தூக்கம் வரவில்லை. 'ஊர் குழம் பினால் உடையாருக்குத் தாயம்' என்பது அவருக்குத் தெரியும். அவரே ஊர்ப் புரக்கராசி - சக்கடத்தார்.

மரியானைப் புகழ்ந்து பேசிவிட்டால் அவன் தனக்கு உடந் தையாக இருப்பான் என்பதை அவர் அறிவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியானோ அவர் புகழ்ந்த பேச்சில் மயங்கி விட்டான்.

''அது உண்மைதானண்ணை. இவங்கள் எல்லாரும் போட்டு இழுக்கிற வலைக்கு முன்னால அவன் ஒருத்தன் பெரிய கரவலையக் கொண்டு வந்து போட்டு எல்லா மச்சங்களையும் பிடிச்சுக் கொண்டானாம். அதகால இவங்கள் ஆத்திரப்பட்டு அவன் பாவிக்கு நல்லா அடிச்சுப் போட்டாங்கள்''

''அவன் இவங்களில் வழக்கு வச்சிட்டான். வழக்கு இப்ப பெலப்பட்டுப் போச்சு. இந்த வழக்கில கட்டாயம் நாலைஞ்சு பேர் அம்புடுவாங்கள் போல கிடக்கு''

''அது சரி, இதில் என்ன வில்லங்கம் இருக்கு? ''

''இதில் ஒரு சங்கடம். இந்த வழக்குக்காகச் சேர்த்த காசு. என்னட்ட இருக்கட்டு உன்னட்ட இருக்கட்டுக் கொண்டு ஒருத் தனை ஒருத்தன் அடிச்சுக் கொண்டு சாகிறாங்கள். அதுக்காகத்தான் சின்னத்துரையை உங்களிட்ட அவசரமாக அனுப்பினனாங்கள்''

''ஓகோ அப்படியா சங்கதி? 'பெட்டியையும் திறப்பையும் சக்கடத்தார் குருசுமுத்தண்ணையிட்டக் குடுத்துவிடுங்கோ' வெண்டு நீ சொன்னால், அந்தப் பயல்களில் ஆர் மறுப்பான்?''

''அப்படித்தானண்ணை இப்ப எண்ணியிருக்கிறம்''

குருசுமுத்தர் வைத்த கண்ணியில் மீன்கள் சிக்கிவிட்டன.

எப்படியோ வழக்குகள் அமர்க்களமாக நடந்தன. 'எல்லாம் சக்கடத்தார் குருசுமுத்தரின் வாய் வீச்சுத்தான். என்று ஊர் முழுக்கப் பேசிக்கொண்டார்கள்.

'இந்த வழக்குக்கு எப்படியும் பத்துப் பதினையாயிரமெண் டாலும் கட்டாயம் வேணு' மென்று அவர் கண்டிப்பாகக் கூறி விட்டார். அவர்களோ வழிதெரியாது விழித்தனர்.

ஆனால், இந்த வழக்கிலிருந்து தப்ப வேணுமே?

இப்பொழுது குருசுமுத்தர் வீட்டில் ஒரே கும்மாளம்

'மாதக் கடைசியில் அவருடைய கடைக்குட்டிப் பெண் ணுக்குத் திருணம்' என்ற பேச்சு அடிபட்டது.

வழக்கு இறுகவில்லை. எல்லோரும் விடுதலை!

இந்தச் செய்தியால் மகிழச்சிப் பெருக்கில் உந்தப்பட்ட அவர்கள் தங்கள் அபிமானத்துக்குப் பாத்திரமான 'சக்கடத்தார்' குருசுமுத்தரைச் சூழ்ந்துவிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சக்கடத்தார் குருசுமுத்தருக்கு, ஜே!"

"எங்களுக்கு விடுதலை அளித்த வீரன் வாழ்க"

தெருவில் ஜனக்கூட்டம் நிறைந்துவிட்டது. யாரோ சனத்தை முடுகி வருவது தெரிந்தது.

கூட்டத்தை ஊடறுத்துக் கொண்டு ராசதுரை சக்கடத்தார் குருசுமுத்தரைத் தேடி வந்து கொண்டிருந்தான்.

"ராசதுரை, என்னப்பா சங்கதி?"

ராசதுரை ஒரு வெள்ளைக் காகிதத்தை அவரிடம் நீட்டினான்.

'வாழ்த்துப் பத்திரங்கூட நேரத்தோடு தயார்பண்ணி வைத் திருக்கிறான் நாலுபேருக்கு முன்னாலயல்லோ தரவேணும்... மோட்டுப் பயல்'

அந்த வாழ்த்துப் பத்திரம் ஜனநெரிசலால் கை நழுவிக் கீழே விழுந்தது.

"என்ராப்பா விஷயம்?" என்று மறுபடியும் ராசதுரையைக் கேட்டார், சக்கடத்தார்.

"அதிலதான் அம்மா எல்லாம் எழுதியிருக்கிறா, பாருங்கோ"

"உது கடிதமே? அம்மா என்ன எழுதியிருக்கிறா; வாயாலை சொல்லித் தொலையனப்பா"

"அது ஒரு கவலையான சங்கதி"

முத்தர் நெஞ்சு குபீரித்தது.

"அது என்ராப்பா கவலை, எங்க எடடா கடிதத்தை?"

"அந்தக் கடிதம், அவங்கட கையில் அம்புட்டுப் போச்சுது"

சக்கடத்தார் பேச வாய் எடுக்காமல் மௌனியாகினார்.

அந்தக் கடிதத்தை ஒருவன் தூக்கிப் பிடித்துக் கொண்டு வெறி பிடித்தவன் போல் ஆவேசமாக உரக்க வாசித்தான்;

பட்சமுள்ள பிராண நாயகருக்கு,

அவசரமாக எழுதுவது. இண்டைக்குக் காலத்தால் நீங்கள் கோட்டடிக்குப் போன பிறகு, பெட்டியிலிருந்த பத்தாயிரத்தையும் காணவில்லை. எங்கட வெறிக் குட்டியன்ர பொடியன்தான் களவாண்டிருப்பான். அந்தக் கள்ள வடுவாவை விடப்படாது. உடன் பொலிசில 'என்றி' பொட்டு அவனைப் பிடிச்சு 'லொக் கப்'பில போடச் சொல்லுங்கோ. பாவம், பாடுபட்டுழைச்சது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின்ர பணத்தை அதுகளுக்கே கொடுத்துவிடலாம். நாங்கள் அந்தச் சனங்களை ஏமாத்தினம். இப்ப இவன் எங்களை ஏமாத்திப் போட்டான். கொஞ்சமா, பத்தியிரம் ரூபாயல்லே?

உங்கள் பட்சமுள்ள

கு. சின்னம்மா

சக்கடத்தார் சதிரம் குல்லிட்டது.

மரியானையும் ராசதுரையையும் தவிர, அவருடன் அப்போது அங்கு எவரையுமே காணவில்லை.

சக்கடத்தாரின் 'பொடிச்சி'க்கு மாதக் கடைசியில் திட்ட மிட்டிருந்த கலியாணம் நடக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓநாய்கள் கவனம்

சு.இராஜநாயகன்

வாசலை நெருங்குவதற்கு ஏழு எட்டு அடிகள் இருக்கும் போதே, காலணிகளை ஒதுக்குப் புறமாகக் சுழற்றி விட்டு, உள்ளத்தைப் புனிதமாக்கி, ஒன்றுபட்ட மனத்தோடு ஆச்சிரமத்தை நோக்கி அடி எடுத்து வைத்த என்பவித்திரத்திலேயே நான் மிதந்து செல்கிறேன். அந்த நிலையில், என்கூட எனக்குப் பக்கத்தில் வந்து கொண்டிருந்த நண்பர்கள், என்னைப் பொறுத்த வரையில் அங்கில்லை.

உள்ளே நுழைகிறேன்.

''வாருங்கள்'' என்று வரவேற்கும் ஒரு குரல் என் காதுப் பறைகளை மெதுவாய்ச் சீண்டுகிறது.

யாழ்ப்பாணத்திலே சர்வ மதத்தினரும் தலைவணங்கும் ஆத்மீகமாய், அந்த ஆத்மீகத்திலே தன் பூர்வாசிரமத்தையே மறந்து விட்டுத் துல்லியமான ஓர் ஒளியாய் விளகிய 'பிள்ளையார் சுவாமி'யின் ஆச்சிரமத்துள் நான் நிற்கிறேன்.

நடுவிலே புகைந்து கொண்டிருந்த ஊதுபத்திக் கற்றையின் நறுமணத்தையும், புதிதாகச் சாணத்தால் மெழுகிடப்பட்டிருந்த தளத்தின் வாசனையையும் பிய்த்துக் கொண்டு, என் மூக்கில் ஆத்மீகம் பரிமளித்தது. கண்கள், அந்த ஆத்மீகத்தின் மூலத்தைத் தேடி, நான்கு ஓரங்களையும் இரண்டு முறை சுற்றி வந்து அதைக் காணாத ஏக்கத்தில் அங்கிருந்தோர் மேல்படிந்தன.

தெருவோரத்தில், ஒழுங்கையிலே நெடுஞ்சாணையாய்க் கிடந்து கால்களைத் தொட்டுக் கண்களில் வைத்துக் கொள்கிற பக்தர்களுக்கு, அவரவர் பக்குவத்துக்குத் தக்கபடி, ஆத்மீகத்தையோ - லௌகீகத்தையோ, ஆசியாக - வசையாக வழங்கி நின்ற ஆவல் இப்பொழுது கரைந்து கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரையிலே வரிந்து கட்டியிருந்த சால்வைகளோடு பல பெரிய மனிதர்கள் ஒரு புறமாக ஏதேதோ மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

நானும், என்னோடு வந்த நண்பர்களும், அங்கு முன்னரே வந்து கூடியிருந்த, எங்களுக்குத் தெரிந்த சிலரோடு ஒரு பக்கத்தில் அமர்ந்து கொண்டோம்.

எதிர்பார்ப்பு, அந்த ஆச்சிரமத்தின் புனிதமான சூழலிலே, நிமிஷங்களின் கழிவிலே பெருமலையாய்க் கனத்தது.

அரையிலிருந்த சால்வைவை அவிழ்த்து, மறுபடியும் இறுக வரிந்து கட்டிக் கொண்டே எழுந்து நின்ற ஒரு பெரிய மனிதர், ஒரு கல்லூரியில் அதிபராயிருந்து இளைப்பாறியவர், சுவாமிகள் இருக்கிற மான்தோல் ஆசனத்தைப் பார்த்து வணக்கஞ் செலுத்தி விட்டு ஆரம்பித்தார்.

"சுவாமிகளின் ஆசீர்வாதத்தோடு நாம் தொடங்கப் போகிற புனிதமான சேவைக்குரிய இந்த ஆலோசனைக் கூட்டத்தைத் தேவார பாராயணத்தோடு தொடங்குவோம்."

எனக்குப் பக்கத்திலிருந்து ஒருவரை அதிபர் பார்க்க, அவர் எழுந்து நின்று, "திருச்சிற்றம்பலம்" என்று தேவார பாராயணத் தைத் தொடங்குகிறார். எல்லோரும், என்னோடு வந்த ஒரு கத்தோ லிக்க நண்பர் உட்பட, எழுந்து நிற்கிறோம்.

இறுதியில், "எல்லா உயிர்க்கும் இறைவா போற்றி" என்று அங்கு நிலவிய புனிதத்தையே புனிதமாக்கி அமர்ந்தோம்.

நின்று கொண்டேயிருந்த அதிபர் மறுபடியும் தொடங்கினார்.

"சுவாமிகள் ஆசீர்வாதத்தோடு இந்தப் பெரிய கைங்கரி யத்தை, புனிதமான இத்தொண்டை ஆரம்பிக்கிற இந்தச் சந்தர்ப் பத்திலே, சுவாமிகள் இங்கு பிரத்தியஷமாக இல்லாவிட்டாலும் கூட, அவரது ஆசியும் கருணையும் எங்கள் மேல் கவிந்து, எம்மை வழி நடத்தி, வெற்றிதரும் என்பதில் எனக்கும், இங்குள்ள நண்பர் களுக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு. 'எங்கும் பிரகாச மாய்' இருக்கும் எங்கள் நடமாடுந் தெய்வத்தின் 'அலகிலா விளைாட்'டுக்களில் இதுவும் ஒன்று."

தன்னை மீறி வந்த புன்னகையில் திளைத்து, தன்னையே ஒரு கணம் மறந்து நின்ற அதிபர், புன்னகையைக் கலைக்காமலே தொடர்ந்தார்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எங்களை இங்கு கூட்டிய திருவருளின் நோக்கம் பற்றி எல்லோரும் அறிவீர்கள். அந்த நோக்கமே நமக்கெல்லாம் இடப் பட்ட பணியுமாகும். இந்தப் பணி, சுவாமிகளின் கருத்தாக எழுந்ததே எங்கள் பெரும்பேறாகும்.

''யாழ்ப்பாணத்திலேயுள்ள சாராயத் தவறணைகளை எல் லாம் பொதுசன வாக்கெடுப்பின் மூலம் ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதே எமக்குக் காட்டப்பட்டிருக்கும் நோக்காகும். இதற்குரிய பணி, இங்கு கூடியிருக்கிற, பொறுக்கி எடுக்கப்பட்ட எங்களைச் சார்ந்திருக்கிறது.''

அதிபர் கூறிய - நாங்கள் அங்கு வந்து கூடிய - நோக்கம் பற்றி எனக்கு முன்னரே தெரியும். இளமை வீறு தூண்ட, தேர்ந் தெடுக்க ஒரு துறை தெரியாத குருட்டுப் போக்கில், மக்களிடையே புகுந்து 'தொண்டு' செய்ய வேண்டும் என்று உள்ளே துடிக்கிற துடிப்போடு ஆசிரியனாகச் சேர்ந்து விட்ட அந்நிய நாட்கள். எங்கள் கல்லூரித் தலைவர் என்னையும், இன்னும் மூன்று ஆசிரி யர்களையும் 'பொறுக்கி' எடுக்கும் போதே, எம்முன்னால் வைக் கப்படப் போகிற இந்தப் பணி பற்றிச் சொல்லியிருந்தார். ஆனா லும், இதனை இந்த இளைப்பாறிய அதிபரின் பக்குவமிகுந்த குரலில் கேட்டபோது, உடலிலே ஒரு சிலிர்ப்பு; உள்ளத்திலே ஒரு பரவசம்; சூக்குமத்திலே (சுவாமிகளுக்குத் தெரிந்துவிடக் கூடாதே!) எனக்கே பிடிபடாத ஒரு பெருமை.

இப்பெருமையுள் மூழ்கி நான் வெளிப்படுகையில் பேச் சொலி கேட்கிறது:

''திருநெல்வேலி, சாவகச்சேரி, சங்கானை போன்ற இடங் களிலெல்லாம் உள்ள தவறணைகளே முதலில் எமது இலக்குக்கு உரியவை.....அதிலும் முதன் முதலில் திருநெல்வேலியே நமது மதுவிலக்குப் போர்க்களமாகும். ஒல்லாந்தருக்கு மாட்டுக்கறி கொடுக்க மறுத்துத் தாய்நாடு சென்று பேரும் புகழும் (ஓ, பேரும் புகழும்!) ஈட்டிய ஞானப்பிரகாசரது தாயகமான இக்கிராமமே எமது முதற்களமாவது மிகப் பொருத்தமானதும் உற்சாகந் தருவது மாகும்.''

சபையிலே, தம்மை மறந்த நிலையில் கைதட்டி, ஆச்சிர மத்தின் புனிதத்துக்குக் களங்கமாய் விடுமோ என்ற அச்சத்தில், இடையில் நிறுத்திவிட்ட சிலரின் அவலம் ஒரு கணம் தேங்குகிறது.

''இங்குள்ள எல்லோரும் இந்தத் தவறணை ஒழிப்பு - மது ஒழிப்புப் போராட்டத்தில் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் கிராமத்துக்குக் கிராமம் - இடத்துக்கிடம் செயலாளராக அந்த அந்த இடத்துக்குரியவரை நியமித்தல் பொருத்தமாகும் என எண்ணுகிறேன்.

''முதற் களமான திருநெல்வேலிக்கு, அவ்விடத்தைச் சேர்ந்த திருவாளர் செயலாளராக இருந்தால் மிக நல்லது என்பது என் அபிப்பிராயம்''

எல்லாக் கண்களும் என்மேல் படிகின்றன. அந்தரத்தில் பறப்பது போன்ற உணர்ச்சியில் நான் மிதந்து மீள்கிறேன்.

''அவரே பொருத்தமானவர்'' என்று பல குரல்கள் ஆசி களாக வந்து என்மேல் குவிகின்றன.

''எமது இப்போராட்டத்துக்குத் தூய்மையான உள்ளமும் சேவா உணர்ச்சியுமுள்ள இளைஞர்களே முன்னணியில் நிற்க வேண்டும். இது எவ்வளவு முக்கியமோ, அது போலவே எமக்கு நிதியும் முக்கியமானது. பிரசாரத்துக்கு, வாக்கெடுப்பின் போது போக்குவரத்துக்கு, தொண்டர்களின் உணவுக்கு என்று நாம் எதிர்பாராத விதத்தில் எத்தனையோ செலவுகள் முன் வந்து நிற்கும்.

''ஆனால் அதுபற்றி நாங்கள் யோசிக்கவே வேண்டிய தில்லை. காரணம் இதோ இருக்கிற திருவாளர் முத்துத்தம்பி அவர்களே நிதி சேர்க்கிற சிரம்மத்தை எங்களுக்கு வைக்காமல், முழுச்செலவையும் தாமே ஏற்றுக் கொள்ள முன் வந்திருக்கிறார். முதலில் சுவாமிகளின் ஆசீர்வாதத்தோடு இன்று அவர் தரப் போகிற தொகை.....''

முத்துத்தம்பியரை அதிபர் திரும்பிப் பாக்கிறார்.

அடக்கமே உருவாக, அரையில் கட்டிய தும்பைப்பூப் பரமாஸ் சால்வை அவிழ்ந்து விழுகிற நிலையில், நெற்றியில் துலங்கும் சந்தனப் பொட்டோடு முத்துத்தம்பியார் எழுந்து சட் டைப் பைக்குள் கைவிட்டு ஒரு 'செக்' கை எடுத்து கீழே தயாராக இருந்த வெற்றிலை பாக்குப் பழத்தின் மேல் வைத்து, பவித்திரமாக நீட்டுகிறார்.

மான்தோலுக்கு வணக்கஞ் செலுத்தி, அதிபர் அதனை வாங்கிக் கொள்கிறார்.

எதிர்பார்ப்பு, மௌனத்தில் புடைத்து நிற்கிறது.

அதிபர் 'செக்'கைப் பார்த்து விட்டு, ''ஓ, இரண்டாயிரம்! இரண்டாயிரம் ரூபா!'' என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கள் எங்களுள்ளே மின்சாரமாய் இறங்க, உடல் புல்லரித்தது.

அதிபரின் சொற்கள் உணர்ச்சியில் குழைந்து மறுபடியும் வெளிவந்தன.

"திருவாளர் முத்துத்தம்பியை இங்கு பலரும் அறிவார்கள். ஆனாலும் அவரை அறியாதவர்களுக்காக, அவரை அறிமுகப் படுத்தவேண்டியது கடமை. இந்தப் பெரியவள்ளல், இந்தத் தொகையையும் தந்து, இன்னும் தருவதாக வாக்களித்திருக்கிறார், தனக்குத் தானே குழி தோண்டுவது போல. ஏனென்றால் இவர் தான் இந்தக் குடாநாட்டிலுள்ள சகல தவறணைகளையும் குத்த கைக்கு எடுத்திருக்கிறவர். காந்தீயத்தின் மேலுள்ள தீவிரமான பற்றினால், தனக்குத் தானே குழி தோண்டுகிறவர் போல"

தலைவர் முடிக்கவில்லை. உணர்ச்சிப் பெருக்கில் எல்லோரும் "முத்துத்தம்பியர் வாழ்க!" என்று கோஷமிட்டார்கள்.

எல்லோரையும் கையெடுத்துக் கும்பிட்ட முத்துத்தம்பியரின் கண்களில் கண்ணீர் துளித்திருந்தது.

காந்தி என்ற மகாசக்தியின் பிடியில் என்னை இழந்து ஆறு ஆண்டுகளுக்கு முன் அந்தப் பேரொளி உலகை அந்தகாரத்தில் விட்டுச் சென்றபோது, யாழ்ப்பாணக் குடா நாடு முழுவதுமே யுகயுகாந்தரங்களாய்த் திரண்டு குவிந்த துக்கத்தின் உருவெடுத்து, பண்ணைக் கடலோடு சங்கமமாகச் செல்கிற சனசமுத்திரமாய்ப் பிரவகித்துச் சென்ற போது, அதில் ஒரு பரமாணுவாய், 'உடுத்தக் கதராடை இல்லையே' என்ற இல்லாமையின் அரிப்போடு சென்ற நான் இன்று கதராடை பூண்டு பிரசாரத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

உண்மை, அஹிம்ஸை என்பவற்றில் என்னைத் தோய்த்து காந்தீயத்தை எனது முழுமையான உயிர்ப்பாக்க எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை என் உயிரே இறுகப் பற்றிக் கொண்டிருந்தது. சிந்தனை, செயல், மூச்சு எல்லாவற்றிலுமே காந்தீயம் தோய்ந்து கிடந்தது.

இதற்குப் பின்னணியாய் அமைந்து, என்னை இந்தத் துறையிலே உந்திவிட்ட இன்னும் ஒரு சம்பவமும், பம்பரமாய் நாங்கள் செய்த பிரசாரத்தின் மத்தியிலே, நான் எனது கதராடையைப் பார்த்துக் கொள்ளுகிற சந்தர்ப்பங்களிலே அடிக்கடி என் மனத்திரையில் படங்காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஃ ஃ ஃ

ஆறுவருடங்களுக்கு முன், காந்தி என்ற காந்தி அணைந்த போது, பண்ணையை நோக்கிச் சென்ற சனசமுத்திரத்தில் என் னோடு மணியும் வந்து கொண்டிருந்தான். எங்களுக்கு முன்னால், ''வைஷ்ணவ ஜன தோவை'' இசைக்கும் இசையாகி, பெண்களின் கூட்டமொன்று இசையாகி, பெண்களின் கூட்டமொன்று வீதியின் ஒரு நீளத்தில் வழிந்துகொண்டிருந்தது.

ஊதுபத்தி, சாம்பிராணி என்பவற்றிலிருந்து கிளம்பிய வெண் புகை, அப்பெண்கள் அணிந்திருந்த வெள்ளைவெளேரென்ற உடைகளிலிருந்து பிறந்து, வானவெளியில் வியாபித்து நிற்கிற மகாத்மாவுக்கு அஞ்சலி செலுத்துவது போல மேலே பரவிற்று.

அந்தக் கூட்டத்தில் ஒருத்தி, நடை தளர்ந்து, வீதியின் ஓரத்தில், சாக்கடையின் விளிம்பிலே காலை வைத்தவள், ''ஐயோ'' என்று நான் கதற முன்னரே, சாக்கடையுள் குதித்துவிட்ட மணியின் தோளிலே விழுந்து துவண்டு கிடந்தாள்.

பின்னால் தங்கி, இரண்டு பெண்களோடு மணியும் நானுமாக அப்பெண்ணுக்கு முதலுதவி செய்த காரணத்தால், அடுத்த ஆண் டில் மணியையும் அந்தப் பெண் மாலாவையும் மணப் பந்தலில், ''கஸ்தூரிபாயும் காந்தியும் போல் வாழ்க!'' என்று வாழ்த்துகிற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

கல்யாணமான ஆறுமாதத்தில், உடற் பயிற்சி ஆசிரியராக இருந்த மணி, அதை உதறி விட்டு 'நேவி'யிலே சேர்ந்துவிட்டான். மூன்று மாதத்துக் கொருமுறை யாழ்ப்பாணம் வந்து போவான்.

ஒரு முறை அவன் வந்திருந்த போது அவனைத் தேடிப் போயிருந்தேன்.

உள்ளே ஏதோ கலவரம்.

''இதென்னடா உன் கோலம்?'' - மணியின் தகப்பனாரின் ஏக்கத்தில் குழைந்த கேள்வி.

''யூ, மை டியர் பப்பா, யூ மைன்ட் யுவபிஷினெஸ்''. தடுமாறுகிற வார்த்தைகளைத் தொடர்ந்து ஒரு பேய்ச் சிரிப்பு.

தொங்கிய முகத்தோடு மணியின் தகப்பனார் வெளியேறு கிறார். நான் வாசலில் நின்றதைக் காண அவர் கண்களில் நின்ற கண்ணீர்ப்படலம்.

நான் அறையினுள் எட்டிப் பார்க்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தில் வாந்தித்துவிட்ட சகதியின் மேல் அலங்கோலமாக முகட்டைப் பார்த்துக் கொண்டு, மணி கிடக்கிறான். ஒரு மூலையில் நின்று கட்டை விரலை வாயுள் திணித்துக் கடித்து அழுகையை அடக்கிக் குமுறிக் கொண்டு மாலா நிற்கிறாள். அவளது நிலையும் சாராய நெடியும் என்னை வெளியே தள்ளுகின்றன.

''ஐயோ, காந்தி! என்று ஓலமிடுகிற என் இதயத்தைப் பொத்திக் கொண்டு வெளியேறினேன்.

இந்த நினைவில் பிறந்த உத்வேகத்தில், என் கிராமத்திலும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் மட்டுமல்ல, இலங்கை முழுவதும் - உலகம் முழுவதும் உள்ள தவறணைகளை ஒழித்துக் கட்டிவிட வேண்டும் எள்ற ஒரு நினைவு என்னுள் மகாமேருவாய் வளர்ந்து நின்றது.

ஓ மாலா, உனக்கும் உன்
போன்ற பெண்களுக்கும் வாழ
வழி வகுக்கிறேன், பார்!

ஃ ஃ ஃ

நண்பர்களும், சுவாமிகள் வீட்டிலே கூடிக் கதைத்த பெரியவர்களும், நானுமாகத் திருநெல்வேலியில் மூலை முடுக்கெல்லாம் சென்று பிரசாரஞ் செய்தோம். 'மது விலக்கு', 'தவறணை ஒழிப்பு'ப் பிரசாரத்தில் என் கதர் வேஷ்டியும் சட்டையும் கசங்குவது தெரியாமல் உழைத்தேன்.

காந்தி மாஸ்ரர்! - சிறுவர்கள் எனக்கிட்ட செல்லப் பெயர்.

மாலை வேளைகளில், சாராயத்தால் - மதுவால் மறை முகமாக நைந்துபோன நோஞ்சான் சிறுவர்களோடு பிரசாரப் பவனி வரும் போது, காந்தியைப் பற்றி - மதுவைப் பற்றி 'காந்தி மாஸ்ர' ரிடம் கதைகள் கேட்பதில் அவர்களுக்கிருந்த உற்சாகத்தில், அந்தியில் விட்டுப் பிரியும் போது தம்மையும் மறந்து, 'காந்தி மாஸ்ரருக்கு ஜே!' என அவர்கள் கூவுவதைக் கேட்டு எனக்கு மயிர்க்கூச் செறியும்.

பொதுசன வாக்கெடுப்புத் தினம் வந்து சேர்ந்தது.

அதிகாலையிலிருந்து ஊரிலுள்ள ஆண்களையெல்லாம் கார் களில் இழுத்து வந்து, இதற்கென அமைத்திருந்த பந்தலுள் இருத்தினோம். முத்துத்தம்பியருடைய 'ஹில்மன்' காரும் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தலில் சிற்றுண்டிகள், சோடா, மோர், இளநீர் என்பன வழங்கும் சிறுவர்கள் சுறுசுறுப்பாக ஓடியாடினார்கள். முத்துத் தம்பியரின் காரில் தொண்டர்களுக்கு மத்தியான உணவு பொட்டலங்களாக வந்திறங்கியது.

நான் எனது வாக்கைப் போடச் சென்றேன்.

''ஏன் மாஸ்ரர், வராதவர்களின் வோட்டைப் போட யாரையாவது அனுப்புங்கோ. இஞ்சை நாங்க 'செக்' பண்ண மாட்டம். அனுப்புங்கோ'' என்று தேர்தல் அதிகாரியே என் காதுகள் சொன்னார்.

ஃ ஃ ஃ

''மாறாட்டம் செய்யலாமா?''

'காந்தி மகான் அதை ஒப்புவாரா?'

'சத்தியத்துக்கு இது விரோதமில்லையா?'

'மகாத்மா தம் வாழ் நாள் முழுவதும் விளைவின் பலாபலனை நோக்காது, அதை நாடும் வழியின் தூய்மையைத்தானே வலியுறுத்தினார்'

ஓ, மாலா!

ஃ ஃ ஃ

என் மனத்துள் நிகழ்ந்த இப்போராட்டம் நான் பந்தலுக்குத் திரும்பிய பிறகும் நின்று விடவில்லை. நண்பன் ஒருவனிடம் இது பற்றி மனமில்லாமலே பிரஸ்தாபித்தேன்.

''முடிவு நல்லதாயிருந்தா, நாங்க கள்ள வோட் போடுற தாலை யாருக்கு நட்டம்? இதிலே என்ன பிழையிருக்கும்?'' என்று, லிஸ்டைப் பார்த்து ஏதோ ஒரு எண்ணையும் பெயரையும் எடுத்துக் கொண்டு அவர் வாக்குச் சாவடிக்கு ஓடினார்.

வெற்றிப் பெருமிதத்துடன் அவர் திரும்பி வந்த போது, முத்துத்தம்பியரும் பந்தலினுள் நுழைந்து கொண்டிருந்தார்.

நண்பனிடம் விஷயத்தை அறிந்ததும் அவர் புன்னகைத்தார்.

''அப்பிடிச் செய்யிறதிலை தப்பில்லை. முடியுமானவரை செய்யுங்கோ இது பற்றிக் கதைக்கத்தான் நான் இப்ப வந்தது''

அங்கு நின்றவர்கள் எல்லாரும் வேறு வேறு பெயர்களில் சென்று (மகாத்மாவே, மன்னித்துக் கொள்ளுங்கள்) வாக்குப் போட்டு விட்டு வந்து, மறுபடியும் போனார்கள். மறுபடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் முடிந்து விட்டது.

எண்ணல்.

நான் உள்ளே போனேன். புன்னகையோடு அதிகாரி எனக்கு ஆசனந் தந்தார். உள்ளே முத்துத்தம்பியர் வந்த போது, அதிகாரி எழுந்து நின்று வரவேற்றார்.

எண்ணல் ஆரம்பித்துவிட்டது.

வெளியே, ''மது அரக்கன் ஒழிக!'', ''மகாத்மா காந்திக்கு ஜே!'' ''காந்தி மாஸ்ரர் வாழ்க!'' கோஷங்கள் ஒலித்துக் கொண் டிருந்தன.

எண்ணி முடிந்ததும் அதிகாரி எழுந்து, மகிழ்ச்சியோடு என் கையைப் பற்றிக் குலுக்கினார்:

''தேவையானதை விட மேலதிகமாக நானூறு வோட் கிடைச்சு உங்களுக்கு வெற்றி, மாஸ்ரர், வெற்றி!''

வெற்றியும் முத்துத்தம்பியரும் சூழ்ந்துவர வெளியே வருகிறேன். அவர் ''வெற்றி'' என்று கூவுகிறார்.

எல்லோரும் எங்களை மொய்த்துக் கொள்கிறார்கள். பல பெரியவர்கள் என்னோடு கை குலுக்கி முதுகில் தட்டுகிறார்கள். இரண்டு மாலைகள் என் கழுத்தில் வந்து விழுகின்றன.

ஓ, மாலா! வழி பிறக்கிறது.

அன்றிரவு, நித்திரையின்றிப் புரண்டு கொண்டிருந்த என் காதுகளில் ''ஜே'' கோஷமே ஒலித்துக் கொண்டிருக்கிறது.

வெற்றியின் வெறியில் இரண்டு நாட்கள் கழிந்து விட்டதே தெரியவில்லை.

மூன்றாம் நாளிரவு பதினொரு மணிக்கு மேல் ஒரு நண்பன் ஓடிவருகிறான்.

''மாஸ்ரர், உடனடியா ஒருக்கா வந்திட்டுப் போங்கோ!''

என்ன அவசரமோ, ஏதோ!

கையிலிருந்த ''சத்திய சோதனை''யை வைத்துவிட்டு அவனோடு ஓடிய நான் வீதியில் ஏறியதும், ''என்னவிஷயம்? என்று கேட்டு வைத்தேன்.

''வாருங்கோ வந்து பாருங்கோ!''

என்னடா, அப்படிப் பெரிய விஷயம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தியிலிருந்த வைக்கோல் கடையின் முன்னால் இருட்டில் நிற்கிற ஒரு காரை அவன் சுட்டிக் காட்டினான். அதிலிருந்து ஏதோ பொருள்களை இறக்கி உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

''பார்த்தீர்களா?''

''என்ன விஷயம்''

''சாக்குச் சாக்காய் சாராயம்''

என் தலையில் யாரோ சம்மட்டியால் அடிப்பது போலிருந்தது.

கிட்டச் சென்று பார்க்கிறேன்.

அந்த 'ஹில்மன்' கார்!

''தவறணையில் கிடைக்கிற லாபத்திலும் இப்படி விற்பனையில் கிடைக்கிற லாபம் இரண்டு மடங்கு'' என்ற நண்பன் என்னை வீட்டை நோக்கி இழுக்கிறான்.

எதிர்த்திசையிலிருந்து கனவேகமாக வந்த கார் ஒன்று எறிந்த ஒரு கண ஒளியில் கூர்ந்து கவனிக்கிறேன். 'ஹில்மன்' காரின் உள்ளே, தும்பைப்பூப் பரமாஸ் சால்வையால் முகத்தைத் துடைக்கிற பாவனையில் தன்னை மறைக்க முயல்கிறார். திருவாளர் முத்துத்தம்பி!

என்னுள்ளம் ஊளையிடுகிறது.

இன்னும் ஓயவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதை

நீர்வை பொன்னையன்

''இப்பதானே வாறாய் மோனை?''

பஸ்சிலிருந்து இறங்கிய வேலுப்பிள்ளையை வாஞ்சையுடன் கேட்கின்றார் அம்மான் கந்தையா.

''ஓம் அம்மான்''

புதிய றோட்டை ஆவலுடன் பார்த்தபடியே கூறுகின்றான் வேலுப்பிள்ளை.

''எப்பிடிச் சுகம்?''

''ஏதோ, கந்தசாமியாற்றை தயவாலை சுவமாயிருக்கிறன்.''

''சாடையாக் கறுத்துப் போனாய் போலை கிடக்கு ''.

''மாறை வெய்யிலெண்டால் கேக்க வேணுமே?''

''அட அநியாயமே!'' அம்மானுடைய குரலில் அனுதாபம்.

''அது மாத்திரமே? கருங்கல்லு உடைக்கிற வேலை.....''

''இதெல்லாம் அந்தப் படுபாவி கந்தசாமியாலை வந்த வினை.''

''அம்மான், நாங்கள் எப்பிடிக் கஷ்டப்பட்டாலும் பரவா யில்லை. இந்த றோட்டு வந்ததே போதும்.''

வேலுப்பிள்ளையின் வார்த்தைகளில் மன நிறைவு.

''உங்கடை சுவம் எப்பிடி அம்மான்? தேத்தண்ணிக் கடை யாவாரம் எப்பிடிப் போகுது?'

''இந்தப் புது றோட்டு வந்ததாலை எங்களுக்கு நல்ல வாய்ப்பு.''

''ஏன்?''

''மேற்கு ஊருகளிலையிருந்து சாமான்கள் எடுக்கிறதுக்கு எங்கடை இந்த யூனியனுக்குத்தான் எல்லாரும் வாறவை. யூனிய னும் நல்லாய் பெருத்திட்டுது. எனக்கும் நல்ல யாவாரம். ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூனியன் கட்டடத்தைப் பார்க்கின்றான் வேலுப்பிள்ளை.

பழைய சின்னக் கட்டடமிருந்த இடத்தில் நாலுமாடிக் கட்டிடம் கெம்பீரமாகத் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

கட்டிடத்தைப் பார்த்தபடியே அவன் நிற்கின்றான்.

''சரி நீ களைச்சுப்போய் வாறாய் மோனை போய் தண்ணி வென்னியைக் குடி. பிறகு சந்திப்பம்.''

''நான் வாறன் அம்மான்'' கூறிக்கொண்டு, பிரதான வீதியிலிருந்து கிளை விட்டுச் செல்லும் புதிய றோட்டில் காலடியெடுத்து வைக்கின்றான் வேலுப்பிள்ளை.

அந்த றோட்டில் கால் வைத்ததும் அவனுடைய உடலில் புல்லரிப்பு.

கண்களில் தேஜஸ்மயமான ஒளி.

அந்தப் புதிய றோட்டை ஆசை தீரப் பார்த்தபடியே நிற்கின்றான்.

''ஏன் மோனை மலைச்சுப்போய் நிக்கிறாய்? ஏதாவது வேணுமோ? அல்லது உனக்கு என்ன செய்யுது?''

அம்மான் பதைபதைத்துக் கேட்டுக் கொண்டு வேலுப் பிள்ளையை நோக்கி விரைகின்றார்.

''எனக்கு ஒண்டுமில்லையம்மான், நான் போட்டு வாறன்.''

''மூந்தி என்ன மாதிரி வாட்ட சாட்டமாயிருந்த பொடியள். இப்ப எவ்வளவு மெலிஞ்சு போச்சு?''

வேகமாக நடந்து கொண்டிருக்கும் வேலுப்பிள்ளையின் காதில் அம்மான் கந்தையாவின் ஆதரவான வார்த்தைகள் விழுகின்றன.

கையில் ஒரு பெரிய பார்சல் கர்மவீரனைப்போலத் தலையை நிமிர்த்தியபடியே நடந்து கொண்டிருக்கின்றான்.

றோட்டில் இரு மருங்கிலும் பச்சைப் பசேலென்று வளர்ந் தோங்கிய வாழை மரங்கள். வேலுப்பிள்ளையைத் தலைசாய்ந்து வரவேற்பது போல நிற்கின்றன அவை.

கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாகப் பார்த்தனுபவித்திராத அந்தக் காட்சியை அனுபவித்துக் கொண்டே நடக்கின்றான்.

''தம்பி வேலுப்பிள்ளை இப்பதானே வாறாய் மோனை?''

வாழைத்தோட்டத்துக்குள்ளிருந்து றோட்டில் வந்தேறிய பூதத்தம்பி குசலம் விசாரிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இப்பதான் வாறன் அண்ணை.''

''உதென்ன கையிலை?''

''அது புத்தங்கள்''

''என்ன, உவ்வளவு புத்தகங்களே என்னத்துக்கு?''

''ஓமண்ணை. அது நான் படிக்கிறதுக்கு.''

''இது நல்ல வேலைதான். சரி, நீ களைச்சுப்போய் வாறாய். அதைத்தாவன். நான் கொண்டந்து தாறன்.''

''வேண்டாமண்ணை. 'ஒரு அந்தர் வெண்காயத்தைச் சுமந்த எனக்கு இது பெரிய பாரமே?''

''அவங்கள் அந்த கந்சாமியனாக்களின்ரை அட்டகாசம் பொறுக்கேலாமல் கிடக்கு. எல்லாத்துக்கும் நான் பிறகு உன்ரை வீட்டை வாறன். ''

''இண்டைக்கு இரவைக்கு வா அண்ணை. மறந்து போகாதை''

''நான் கட்டாயம் வருவன். நீ கெதியாய் வீட்டை போமோனை.''

கந்தசாமி, இன்னும் உங்கடை ஆட்டம் அடங்கேல்லையே? உது எவ்வளவு நாளைக்கு போகுதெண்டு பாப்பம்.'

பூதத் தம்பியை விட்டகன்ற வேலுப்பிள்ளை மனதுக்குள் கூறியபடியே நடக்கின்றான்.

கந்தசாமி கோவில் வடக்கு வீதிக்கு வந்துவிட்டான் அவன்.

வேலுப்பிள்ளையைக் காண்கின்றார் கோவில் மனேச்சர் கந்தசாமி.

உடனே அவருக்குத் திகைப்பு!

பயத்தில் கைகால்கள் நடுங்குகின்றன.

தனது சால்வையால் தலையை மூடுகின்றார்.

கந்தசாமியைக் கண்டதும் வேலுப்பிள்ளையின் ரத்தம் கொதிக்கின்றது.

கோயில் பூங்கொல்லைக்குள் ஓடிப்போய் பதுங்குகின்றார் கந்தசாமி.

வேலுப்பிள்ளை தன்னை மறக்கின்றான்.

'டே கந்தசாமி, உன்னை இப்பவே துலைச்சுக்கட்டிப் போட்டு நானும்....'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையை உயர்த்துகின்றான்.

கையில் புத்தகப் பார்சல்.

அவனுடைய உணர்வில் தடை.

'வேலுப்பிள்ளை. நீ யாருடன் போராடுகின்றாய் என்ற தெளிவு முதலில் உனக்கு இருக்க வேண்டும்.

அடுத்தது எப்படிப் போராடப் போகின்றாய் என்ற திட்டமும் உன்னிடம் இருக்க வேண்டும். அப்படியென்றால் தான் நீ போராட்டத்தில் வெற்றி பெறுவாய்'

மாறை ஜெயிலில் இருக்கும் பொழுது, அவனுடைய சிங்கள நண்பன் பண்டாரா கூறியது வேலுப்பிள்ளையின் ஞாபகத்துக்கு வருகின்றது.

'தனி மனிதனை ஒழிக்கிறதாலை எங்கடை பிரச்சினையள் தீரப்போறதில்லை. எங்களைச் சுரண்டுகின்ற வர்க்கத்தை அழித்து நிர்மூலமாக்கிவிட்டு அதிகாரத்தை உழைக்கும் வர்க்கம் கைப்பற்றினால் தான் எங்கடை பிரச்சினையள் தீரும்.'

வேலுப்பிள்ளை ஜெயிலுக்குச் சென்று சிறிது காலத்தின் பின் அவனுடன் அறிமுகமான பண்டாரா கருங்கல்லு உடைத்துக் கொண்டிருக்கும் பொழுது கூறியது அவனுடைய மனதில் பளிச்சிடுகின்றது.

தனது வீட்டுக்குச் செல்கின்றான் வேலுப்பிள்ளை

அவன் இன்று வருவான் என்று அவனுடைய வீட்டாருக்கு எப்படித் தெரியும்?

வீடு பூட்டிக்கிடக்கின்றது.

'அவர்கள் தோட்டத்துக்குத்தான் போயிருக்க வேணும்.'

புத்தகப் பார்சலை அடுத்த வீட்டில் வைக்கின்றான்.

தோட்டத்தை நோக்கி அவனுடைய கால்கள் வேகமாக நடந்து கொண்டிருக்கின்றன.

வழியில் சங்கக்கடை.

அது இன்னும் திறக்கப்படவில்லை.

சங்கக்கடைக்குப் பக்கத்தில் ஒரு புதிய வாசிகசாலை.

வேலுப்பிள்ளைக்கு ஆச்சரியம்.

மகிழ்ச்சிப் பூரிப்பு.

வாசிகசாலைக்குள் அவன் செல்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கைந்து இளைஞர்கள் பத்திரிகை படித்துக் கொண்டிருக் கிறார்கள்.

'இப்ப எங்கடை ஆட்களுக்கு பத்திரிகை படிக்கக் கூட நேரமிருக்கு.'

புத்தகங்கள் நிறைந்த இரண்டு அலுமாரிகள் வேலுப்பிள்ளை யின் கண்களில் படுகின்றன.

அவனுக்கு ஆனந்தம்.

''எடே! எங்கடை வேலுப்பிள்ளை அண்ணை வந்திட் டாரடா!''

திடீரென ஒருவன் கத்துகின்றான்.

வேலுப்பிள்ளையை எல்லோரும் வியப்புடன் பார்க்கின் றனர்.

எல்லோருக்கும் உணர்ச்சிப் பரவச நிலை

அவர்களுடைய சேமநலன்களை அவன் அக்கறையுடன் விசாரித்தறிகின்றான்.

''அண்ணா. மறியல் வீட்டுச் சீவியம் எப்படி? நீ என்ன மாதிரி காலம் தள்ளினாய் எண்டதை எங்களுக்குச் சொல் லண்ணை.''

அவர்கள் ஆவலுடன் அவனைக் கேட்கின்றனர்.

தான் கற்றவற்றையும், தனது அனுபவங்களையும் அவன் அவர்களுக்குத் தொகுத்துக் கூறுகின்றான்.

அவனுடைய வார்த்தைகளில் எளிமை, தெளிவு, ஒரு வித வேகமும் உறுதியும்.

அவன் கூறிக்கொண்டிருப்பனவற்றை அவர்கள் உன்னிப் பாகக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களுடைய உடல்களில் புதிய ரத்தத்தின் வீறான பாய்ச் சல்.

உள்ளத்தில் செயல்படத் தூண்டும் வேட்கை.

வேள்வித் தீயில் தம்மை அர்ப்பணிப்பதற்குத் தங்களுக்குள் திடசங்கற்பம் செய்கின்றார்கள் அவர்கள்.

''இனி நீங்கள் படியுங்கோ. பிறகு சந்திப்பம். ''

பேசி முடிந்ததும் அவன் போவதற்கு எழுகின்றான்.

''ஏனன்னை அவசரப்படுகிறாய். இன்னும் சொல்லன்.''

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவனைவிட அவர்களுக்கு மனமில்லை.

'நான் இப்ப தோட்டத்துக்குப் போகவேணும், இரவைக்குச் சந்திப்பம்.''

''அப்ப நாங்களும் உன்னோடை வாறம்.''

''வேண்டாம் மோனையள். நீங்கள் இப்ப படியுங்கோ.''

உற்சாகத்துடன் அவன் தோட்டத்தை நோக்கிச் செல்கின்றான்.

புதிய றோட்டு பனங்கூடலைப் பிளந்து கொண்டு செல்கின்றது.

ரோட்டின் இரு பக்கங்களிலும் இடைக்கிடை புதிய வீடுகள்.

நான்கு ஐந்து வருடங்களுக்கு முன் இந்தப் பக்கத்தில் ஒரு வீட்டைக் கூடக் காணமுடியாது.

இரவு வேளைகளில் இந்தப் பகுதிக்கு வருவதற்கு அநேகருக்குப் பயம்.

பனம் கூடலைத் தாண்டி, செம்பாட்டு வெளியினூடாகச் செல்கின்றது ரோட்டு.

இந்த வெளி முன்பு தரிசு நிலமாகக் கிடந்தது.

இப்பொழுது இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பல கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன.

புது மண்ணில் பயிர்கள் செழித்து வளர்ந்திருக்கின்றன.

நிர்ச்சிந்தையாகச் சென்று கொண்டிருக்கும் வேலுப்பிள்ளையின் மனம் பழைய சம்பவங்களை இரைமீட்டுக் கொண்டிருக்கின்றது.

ஃஃ ஃஃ ஃஃ

ஐந்து ஆறு வருடங்களுக்கு முன்பு அவர்களுடைய தோட்ட நிலங்களுக்குச் செல்வதற்கு நல்ல பாதையில்லை.

கல்லும் முள்ளும் நிறைந்த ஒரு வண்டில் பாதை அவர்களின் தோட்டங்களின் விழிம்பில் வந்து நின்று விட்டது.

குழைக் கட்டுகளையும் எருக்கடகங்களையும் தங்களுடைய தலைகளில் சுமந்து செல்லும் பொழுது அவர்கள் பட்ட கஷ்டங்களைக் சொல்ல முடியாது.

அவர்களுடைய தோட்ட நிலங்களுக்கு மத்தியில் ஒரு ஒற்றையடிப் பாதைதான் சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நாளையில் இரண்டு மூன்று பேர்களிடம் தான் தண்ணீர் இறைக்கின்ற யந்திரங்கள் இருந்தன.

ஒற்றையடிப் பாதையால் அந்த யந்திரங்களை அல்லது ஆடு மாடுகளைக் கொண்டு செல்லும் பொழுது எத்தனை சண்டைகள் நடந்தன? எத்தனை பேர்களுடைய மண்டைகள் பிளந்தன?

ஒரு நாள் அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு பாதையைத் திறப்பதற்கு ஆலோசித்தார்கள்.

தங்களுடைய நிலங்களில் சிறிது பகுதியை பாதை எடுப் பதற்கு விட்டுக் கொடுப்பதற்கு எல்லோரும் சம்மதித்தனர்.

அவர்களுடைய தோட்டங்களின் மேற்குப் பக்கத்தில் ஒரு பிரதான வீதி. ஊரின் கிழக்குப் பக்கத்திலும் பிரதான வீதி. இரண் டையும் இணைக்க அந்தப் பாதையை எடுப்பதற்குத் தங்களின் நிலங்களில் ஒரு பகுதியை விட்டுக் கொடுக்க முன்வந்தார்கள் ஒவ்வொருவரும்.

கயிற்றைக் கட்டி வேலிகளை வெட்டிப் பாதையைத் திறப் பதில் வேலுப்பிள்ளையும் அவனது சகாக்களும் முன் நின்றுழைத் தார்கள்.

கந்தசாமி கோயிலடிக்குக் கிட்ட பாதை வந்தது.

கோவிலுக்கு வடக்குப் பக்கமாக இருந்த வேலியை வெட்டு வதற்கு வேலுப்பிள்ளையாட்கள் கயிற்றைக் கட்டினார்கள்.

"வேலி வெட்டக்கூடாது."

கோவில் மனேச்சர் கந்தசாமி திடீரென வந்து அவர்களை மறித்தார்.

ஏன் அவர்கள் கேட்டார்கள்.

"கோயிலுக்குப் பக்கத்தாலை ரோட்டுப் போட நான் விடன்."

"என்னத்துக்கு ?" வேலுப்பிள்ளை வியப்புடன் கேட்டான்.

"கோயிலுக்குப் பக்கத்தாலை றோட்டுப் போனால், நாலுபதி னெட்டுச் சாதியளும் அதாலை செத்த பிணங்களைக் கொண்டு போவங்கள். அப்ப கோயில் என்னவாகும்?"

"நல்லூர் கந்தசாமி கோயிலிக்கு இரண்டு பக்கத்தாலையும் றோட்டுகள் போகேல்லையோ?"

அமைதியாகக் கேட்டான் வேலுப்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது பட்டணம். இஞ்சை அப்பிடிச் செய்யேலாது. நான் விடன்."

"மறிக்கிறதுக்கு நீ ஆர்?"

சண்முகத்தின் குரலில் கடுமை.

"நான் ஆரெண்டோடா கேக்கிறாய்? உனக்கிப்ப சொல்ல வேணுமோடா?"

வெறி பிடித்தவராகக் கத்தினார் கந்தசாமி.

"கந்தசாமி அண்ணை. இது பொது விசயம். ஊர் ஆக்கள் எல்லாரும் ஒத்து நிக்கினை. இது ஊர் நன்மைக்குத்தானே. நீ இதிலை தலையிடாதையண்ணை." வேலுப்பிள்ளை பணிவுடன் கூறினான்.

"உன்ரை புத்திமதி எனக்குத் தேவையில்லையடா. நீ போய் உன்ரை வேலையைப் பாரடா. நான் சொன்னால் சொல்லுத் தான்"

"கந்தசாமி ஓடுற ஆற்றை உன்னாலை தடுத்து நிறுத்தே லாது. நீ குறுக்கை நிண்டியெண்டால் அது உன்னையும் அடிச்சுக் கொண்டுதான் போகும்."

"டே வேலுப்பிள்ளை வீண் கதை பேசாதை . போடா இந்த இடத்தாலை." தனது தொந்தி வயிற்றைத் தூக்கிக் கொண்டு துள்ளிக் குதித்தார் கந்தசாமி.

"நீ ஏன் மறிக்கிறாய் எண்டு எனக்குத் தெரியும்."

"உனக்கென்னடா தெரியும்?"

"இந்த றோட்டு வந்தால் இந்த ஊர் முன்னேறிவிடும். தோட்டம் செய்யிற நாங்கள் முன்னுக்கு வந்திடுவம். அப்பிடி நாங்கள் முன்னேறீட்டால் நாளைக்கு நீங்கள் எங்கடை தோளிலை ஏறிச் சவாரி செய்யேலாது எண்ட பயம் தான் உனக்கு."

"டே வேலா. வாயைப் பொத்திக்கொண்டு போடா, இல் லாட்டி..."

கையை ஓங்கியபடியே முன்னுக்கு வந்தார் கந்தசாமி.

"ஓய், என்ன காணும் வெருட்டிறீர்?"

"டே, மண்கொத்திப்பயலே ஓய் எண்டு என்னைக் கூப்பிட உனக்கு அவ்வளவு துணிவு வந்திட்டுதோடா?"

"டே கந்தசாமி. மல்லுக்கட்ட இப்ப எங்களுக்கு நேர மில்லை. உன்னை பிறகு பாத்துத்தாறமடா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னடா சொன்னாய்?''

கையை உயர்த்திக் கொண்டு மீண்டும் ஓடிவந்தார்.

''ஏலுமெண்டால் மறியடா, பாப்பம்! சண்முகம் கத்தியைத் தா, வேலியை வெட்டிறன்.''

வேலுப்பிள்ளை வேலியை வெட்டினான்.

கந்தசாமி ஓடி வந்து கத்தியைப் பிடித்தார்.

இருவரும் ஒருவருக்கொருவர் இழுபட்டனர்.

கந்தசாமியின் கையில் ரத்தம்.

''ஐயோ! என்னைக் கொல்லுறான்''

ஓலமிட்டுக் கொண்டு ஓடினார் கந்தசாமி.

கந்தசாமியைக் கொலை செய்ய முயன்றான் என்று வேலுப் பிள்ளையின் மேல் குற்றம் சுமத்தப்பட்டது.

வேலுப்பிள்ளைக்கு ஐந்த வரியம் கடூழியச் சிறை.

சிறைக்குப் போனது ஒரு வகையில் நல்லதென்று வேலுப் பிள்ளை எண்ணினான்.

அங்குதான் அவன் அந்த பண்டாராவைச் சந்தித்தான்.

எதிர்கால நல்வாழ்வில் பண்டாராவுக்கு எவ்வளவு நம் பிக்கை, உறுதி.

அவனும் ஓர் ஏழை விவசாயியின் மகன்.

நிலமற்ற விவசாயிகளின் உரிமைகளுக்காக ஒரு பெரிய நிலச் சொந்தக்காரனுடன் மோதியதால் அவன் சிறைக்கு வந்தான்.

பெரிய நிலச் சொந்தக்காரர்களைப் பற்றிப் பேசும் பொழுது அவனுடைய கண்கள் தீப்பிழம்பாகும்.

அவனுடைய திண்மையும் உறுதியும் வாய்ந்த உடலில் ஆவேசத் துடிப்பு.

பண்டாராவைச் சுற்றி எப்பொழுதும் ஒரே கூட்டம்.

கமகேயும் ரணதுங்காவும் அவனுடன் விவாதிக்கத் தொடங்கி விட்டால் அதற்கு ஒரு முடிவேயில்லை. இறுதியில் ஒரே முடிவுக் குத்தான் அவர்கள் வருவார்கள்.

எட்டாம் வகுப்புப் படித்த வேலுப்பிள்ளைக்குச் சிங்களம் சொல்லிக் கொடுக்கத் தொடங்கிய பண்டாரா அவனுக்கு உல கத்தைப் பற்றிய அந்தத் தத்துவத்தையே படிப்பித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேலுப்பிள்ளை, நாங்கள் இந்த நாட்டின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும், உழைப்பாளியள் எண்ட ரீதியிலை நாங்கள் எல்லாரும் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். எங்களை அடக்கி ஆளுகின்ற சுரண்டல் வர்க்கத்தை நிர்மூலமாக்குவதற்கு நீ உனது பங்கைச் செலுத்துவாய் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கு. அதற்கான நாடு பரந்த போராட்டம் நடக்கும் பொழுது ஒரு நாள் நாம் நிச்சயம் சந்திப்போம். நீ போய் வா."

வேலுப்பிள்ளை சிறைச்சாலையை விட்டுப் புறப்படும் பொழுது அவனுக்கு நம்பிக்கையுறுதியூட்டி பண்டாராவும் அவனது சகாக்களும் வழியனுப்பி வைத்தார்கள்.

வேலுப்பிள்ளை இப்பொழுது புதிய பாதையில் சென்று கொண்டிருக்கின்றான்.

ஃஃ ஃஃ ஃஃ

தோட்டக்கரைக்குத் தான் வந்துவிட்டதை உணருகின்றான் வேலுப்பிள்ளை.

அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தோட்டக் கிணறுகளில் தண்ணீர் இறைக்கும் யந்திரங்கள் ஓசையெழுப்பிக் கொண்டிருக் கின்றன.

சில தோட்டங்களில் உழுது கொண்டிருக்கும் உழவு யந்தி ரங்களின் பேரிரைச்சல்.

குழைக்கட்டுகளையும் எருப்பசளையையும் ஏற்றி வந்த லொறிகளிலிருந்து அவற்றைப் பறிக்கின்றார்கள் சில தோட் டக்காரர்கள்.

வேலுப்பிள்ளை 'பெரிய கிணத்தடித்' தோட்டத்துக்குச் செல்கின்றான்.

அவனைக் கண்டதும் அயல் தோட்டங்களிலுள்ளவர்கள் வந்து குவிகின்றனர்.

எல்லோரும் அவனைச் சூழ்கின்றனர்.

அவர்கள் உணர்ச்சிக் கொந்தளிப்பில் திணறுகின்றார்கள்.

"தம்பி வேலுப்பிள்ளை. எப்ப வந்தனி மோனை?"

சிறிது நேரத்தால், நாகலிங்கம் கனிவுடன் கேட்கின்றார்.

"காலமைதான் வந்தனான் அண்ணை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''புள்ளை நல்லாய் மெலிஞ்சு போனான். நிறம் கூட மாறீட்டுது.''

சரவணை அப்பாவின் குரலில் வேதனை.

''இதெல்லாம் அந்த நாசமாய் போன கந்தசாமியனாக்க ளாலை வந்தது. அவங்கள் பரிசாம்பலாய் போக.....''

செல்லம்மா அக்கா வயிற்றெரிச்சலுடன் திட்டுகின்றா.

''மறியல் வீட்டிலை சாப்பாடு எப்பிடி மோனை? அவங்கள் உன்னை அடிச்சு உதைச்சுக் கரைச்சல் பண்ணினவங்களே?''

''அங்கை என்னை ஏன் ஆரும் அடிக்கப்போகினை? சாப் பாட்டையும் ஒரு மாதிரிச் சமாளிச்சன். அதுகிடக்கட்டும். உங்கடை பாடு எப்பிடி?''

''இப்ப நீ பாக்கிறாய் தானே? எங்கடை பாடு பிழையில்லை. ஆனால் அந்தப் பாடேலை போவாங்களாலை தான் எங்களுக்கு நெடுகக் கரைச்சல்.''

''ஆர்? ஆரவங்கள்?''

''வேற ஆர்? அந்த கந்சாமியனாக்கள் தான்.''

''அவங்கள் என்ன செய்யிறாங்கள்?''

''நீ மறியலுக்குப் போன அடுத்த ஆடிமாதம், கந்தசாமி தன்ரை தோட்ட நிலங்களின்ரை குத்தகையைக் கூட்டிப் போட் டான்.''

''அதோடை நிண்டானே? கோயில் தோட்டக்காணிய ளின்ரை குத்தகையையும் கூட்டிப்போட்டங்கள். அவங்கள். ''

''நீங்கள் சும்மா இருந்தனீங்களே?''

''எங்களாலை என்ன செய்யேலும் மோனை. அவன் தானே கோயில் மனேச்சர். அதோடை அவனிட்டைக் கன தோட் டக் காணியள், பணம், ஆளணி எல்லாம் கிடக்கு.''

''இது நடக்குமெண்டு எனக்கு அப்பவே தெரியும்''

''தாங்கள் அந்த கோயில் காணியளைச் செய்யப்போற மெண்டு போன வரியம் மறிச்சுப்போட்டார்கள். இப்பவும் அந்த தோட்ட நிலங்கள் சும்மா கிடக்கு.''

''தோட்டம் செய்ய நிலமில்லையெண்டு எத்தினையோ பேர் அலைஞ்சு திரியினை. ஆனால். இவங்கள்.....''

''அதுக்கென்ன மேனை செய்யிறது?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கந்தையா அண்ணை. முந்தி அந்தத் தோட்ட நிலங்களிலை பயிர் செய்த நீங்கள் எல்லாரும் இப்ப திரும்பவும் அதே நிலங் களிலை பயிர் செய்ய வேண்டும்." வேலுப்பிள்ளை நிதானமாகக் கூறினான்.

"அவங்கள் விடுவாங்களே?"

"வலோற்காரமாய்ச் செய்யிறது தான்."

"அவங்கள் சும்மாயிருப்பங்களே?" சரவணையப்பா பயம் தொனிக்கக் கேட்டார்.

"அவங்கள் வரேக்கை பாப்பம். நீங்கள் பயப்பட வேண் டாம். கெதியிலை வேலையைத் துவங்கவேணும்."

"எங்கடை வயித்திலை அடிக்கிறதுக்கு அவங்கள் புது வழியளையும் பாவிக்கிறாங்கள்?"

"அதென்னப்பா புது வழி?"

"போனபோகம் நாங்கள் வெண்காயம் கிளப்பினம். அப்ப கோயில் தேர் செய்யிறதுக்கெண்டு ஒவ்வொருதரிட்டையும் ஒவ்வொரு அந்தர் வெண்காயத்தை எடுத்தாங்கள்"

வேலுப்பிள்ளையின் நெற்றியில் சுருக்கங்கள்.

"அது மாத்திமே? கோயில் மதில் போடுறதுக்கெண்டு ஒவ்வொருதற்றை வாழைத் தோட்டங்களுக்கையும் ஒவ்வொரு தலைவாழைக் குலையளை வெட்டினாங்கள்."

"நாங்கள் உருளைக் கிழங்கு வித்தபொழுது தலைக்கு இருபத்தைஞ்சு ரூபா வீதம் அவங்களுக்குத் தாரைவாத்தம். "

"இதுகளுக்கெல்லாம் அவங்கள் கணக்குக்காட்டினாங்களே? அதுவுமில்லை."

"ஏன் நீங்கள் கேட்கேல்லை?" ஆத்திரத்துடன் கேட்டான் வேலுப்பிள்ளை.

"நாங்கள் எத்தினை தரம் கேட்டம். அவங்கள் காட்டினால் தானே?"

"இப்ப நாங்கள் செத்தல் மிளகாய் விற்கப்போறம். அவங்கள் கோயில் மணிக்கூட்டுக் கோபுரம் கட்டிறதுக்குக் காசு சேர்க்கப் போறாங்களாம்."

"இனி ஒருதரும் ஒரு சதம் கூடக் குடுக்கக்கூடாது."

வேலுப்பிள்ளையின் குரலில் கடுமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவங்கள் எங்களைச் சும்மா விடுவாங்களே? எங்கடை தோட்டங்களை இரவிரவாய் அழிச்சுப்போடுங்கள்''

''குத்தகைக் காணியளுக்கை இருக்கிற எங்களைக் குடியெழுப்பிப் போடுவாங்கள்.'' சிலர் பீதியுடன் கூறினர்.

''இனி நாங்கள் ஒண்டுக்கும் பயப்பிடக்கூடாது. எங்கடை புது றோட்டைப் போடவிடாமல் கந்தசாமியனாக்கள் முட்டுக் கட்டையாய் நிண்டாங்கள். நாங்கள் அவங்களுக்குப் பயந்து சும்மா இருந்திருந்த மெண்டால் இந்த றோட்டு வந்திருக்குமே?''

வேலுப்பிள்ளையின் வார்த்தைகள் அவர்களுக்கு நம்பிக்கையூட்டின.

''இனி அவங்கள் எங்களோடை கரைச்சலுக்கு வந்தால் அவங்களை நான் துலைச்சுக் கட்டிப் போடுவன்.''

காத்திகேசு ஆவேசம் மேலிடக் கத்தினான்.

''நான் தூக்குக் கயித்துக்கு போனாலும் பறுவாயில்லை. அவங்கடை குடலை எடுத்து மாலையாய் போடுறனோ இல்லையோ எண்டு பாருங்கோ.''

கத்தியைச் சுழற்றிக்கொண்டு கதிரவேலு இரைந்தான்.

''கதிரவேலு, கந்தசாமியாக்களை மாத்திரம் கொலை செய்தாப்போலை எங்கடை பிரச்சினை எல்லாம் தீந்துபோமே?''

எல்லோரும் வியப்புடன் வேலுப்பிள்ளையைப் பார்த்தனர்.

''தீராமல்?''

கதிரவேலுவின் குரலில் வஞ்சினம்.

''அவங்களைப் போலை எத்தினையோ கந்தசாமியாக்கள் இந்த நாட்டிலை இருக்கிறாங்கள். அவங்கள் எல்லாரும் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவங்கள். உன்னாலை தனிய அவங்கள் எல்லாரையும் கொலை செய்ய முடியுமோ?''

கதிரவேலு பிரமித்துப்போய் நிற்கின்றான்.

''அந்த வர்க்கம் தான் இந்த நாட்டிலை எங்களைப் போலை உழைக்கிற எல்லாரையும் சுரண்டி, சூறையாடிச் சுகசீவியம் நடத்திக் கொண்டிருக்கு.''

''அப்ப நாங்கள் என்ன செய்யிறது?''

அவர்கள் சோர்வுடன் கேட்கின்றனர்.

''அந்த வர்க்கத்தை அழிச்சொழிச்சால் தான் உழைக்கிற எங்களுக்கு விமோசனம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதை எப்பிடிச் செய்யிறது?"

"அதுக்கெண்டு ஒரு பாதையிருக்கு. அது நீண்டபாதை. அந்தப் பாதையிலை நாங்கள் போகவேணும்."

"அதென்ன பாதை?"

"அது தான் போராட்டப் பாதை. உழைக்கிற வர்க்கத்துக்கும் அந்த உழைப்பைச் சுரண்டிற வர்க்கத்துக்குமிடையிலை நடக்கிற போராட்டம்."

"நாங்கள் தனிய அதை என்னண்டு செய்யிறது?"

"இந்த நாட்டிலை உழைக்கிற நாங்கள் எல்லாரும் ஒண்டு சேர்ந்து, எங்கடை தலைவிதியை எங்கடை கையிலை எடுத்துக் கொண்டு உறுதியாய் அந்தப் போராட்டப் பாதையிலை போனால்..."

"நாங்கள் தயார்" அவர்கள் அந்தரங்க சுத்தியுடன் கூறுகின்றனர்.

"நீங்கள் நினைக்கிற மாதிரி அது அவ்வளவு சுகமான பாதையல்ல."

"இப்பிடிக் கேவலமாய்ச் சீவிக்கிறதைவிட அப்பிடி ஒரு நல்ல வேலையைச் செய்யேக்கை செத்தாலும் பறுவாயில்லை."

கதிரவேலு உறுதியாகக் கூறுகின்றான்.

"அந்தப் பாதைக்கு முதல்படியாய், தோட்டம் செய்யிற நாங்கள் எல்லாரும் ஒண்டு சேர்ந்து ஒரு விவசாய சங்கத்தைத் துவங்கவேணும்."

"நாங்கள் எல்லாரும் தயார்." அவர்கள் கூறுகின்றார்கள்.

"அதுக்குப்பிறகு?" கார்த்திகேசுவின் கேள்வியில் அவசரம்.

"ஒரு வரியத்துக்கு முந்தி அந்த கோயில் காணியளிலை பயிர் செய்ய வேண்டாமெண்டு கந்தசாமியாக்கள் மறிச்சுப் போட்டாங்கள் தானே?"

"ஓம். மறிச்சாங்கள்."

"அந்தக் காணியள் ஒரு வரியமாய் சும்மாகிடக்கு."

வேலுப்பிள்ளை அவர்களைப் பார்க்கின்றான். அவர்கள் மத்தியில் ஒருவிதத் துடிப்பு.

"அந்தக் காணியளைச் செய்த ஆக்களுக்குப் பயிர் செய்ய நிலமில்லை. ஒரு வரியமாய் அவை கூலிப்பிழைப்புக்குப் போகினை. அதுவும் கிடைக்கிறது அருமை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்கள் படுகிற கஷ்டத்தை ஆருக்கு சொல்லுறது?"

சிலர் மனம் வெதும்பிக் கூறுகின்றார்கள்.

"அந்த சும்மா கிடக்கிற நிலங்களிலை முந்தி பயிர் செய்தாக்கள் வலோற்காரமாய் இப்ப பயிர் செய்யத் துவங்க வேணும்."

"கெதியாய் அந்தவேலையைத் துவங்குவம்." உத்வேக உணர்வுடன் கூறுகின்றான் காத்திகேசு.

"நாங்கள் எல்லாரும் ஒண்டு சேர்ந்து அவைக்கு உதவியாய் நிக்க வேணும்."

"நாங்கள் பத்து முறையும் தயார்."

காத்திகேசுவின் உறுதி நிறைந்த குரல் கெம்பீரமாக ஒலிக்கின்றது.

"எங்கை கந்தசாமியாக்கள் வந்து எங்களை மறிச்சுப் பாக்கட்டும் பாப்பம்?"

முருகேசு கத்தியை உயர்த்தி வீசிக்கொண்டு கத்துகின்றான். அங்கு கூடிநின்றவர்களை நோக்குகின்றான் வேலுப்பிள்ளை. அவர்களுடைய விழிகளில் புத்தொளி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திய தரிசனம்

சிற்பி

''புதிய சிந்தனையும் பரந்த மனப்பான்மையும் உள்ள வர்களுக்கு இந்தப் படம் நிச்சயமாகப் பிடிக்கும். உன்னுடைய நண்பன் குமாரதாசனிடம் இவை இருப்பதாகத் தெரியவில்லை... இன்றைக்கு இங்கு வருவாரா என்பது சந்தேகந்தான்''

படமாளிகையின் வாசலில் வைத்து என்னிடம் சொன்னான் நடேசன்.

எதுவுமே பேசாது அவனைப் பார்த்துவிட்டு, மீண்டும் என் கைக்கடிகாரத்தைப் பார்த்தேன்.

படம் தொடங்குவதற்கு இன்னமும் ஐந்து நிமிடங்கள் மட் டுமே இருந்தன.

நீண்டு கிடந்த வீதியைப் பார்த்தேன். குமாரதாசனின் உருவம் தென்படவேயில்லை.

''உழைக்கும் கரங்களும் ஒட்டிய வயிறும்'' என்ற வண்ணப் படம் ''குமரன்'' படமாளிகையிற் திரையிடப்பட்டிருந்தது. சர்வதேசப் பரிசுகள் பலவற்றைப் பெற்றிருந்த அந்தப் படத்தைக் குமாரதாசன், நடேசன், நான் ஆகிய மூவரும் ஒன்றாகச் சேர்ந்து பார்ப்பது என முடிவு செய்திருந்தோம்.

படமாளிகை வாசலில் ஒருவரை ஒருவர் சந்திப்பதாக ஏற்பாடு. நடேசனும் நானும் சற்று முன்பின்னாக வந்துவிட்டோம். குமாரதாசனை இன்னமும் காணவில்லை.

முதலாவது மணி அடித்தது.

''இனி உங்களுடைய ஆசனங்களிலை போய் இருங்கோ. படம் துடங்கினாப் பிறகு, ஆசனங்கள் வெறுமையாக இருந்தால், புதிதாக யாரையாவது கொண்டு வந்து இருத்திவிடுவோம்'' என ஒரு வகையான எச்சரிக்கை விடுத்தான் கடமையில் நின்ற ஊழி யன் ஒருவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் நடேசனைப் பார்த்தேன்.

''இனிக் காத்திருப்பதிற் பயனில்லை. வா, நாங்கள் ரெண்டு பேருமாவது படத்தைப் பார்ப்போம்'' என்றான் அவன். குமார தாசனைப் பற்றிய சில விபரங்களைச் சொல்லி, அவன் வந்தால், உள்ளே அழைத்து வரும்படி அந்த ஊழியனிடம் கூறிவிட்டு, நடேசனைப் பின்தொடர்ந்து ஆசனத்தில் அமர்ந்தேன்.

''அவர் வருவார் என்று இன்னமும் நீ நம்புகிறாயா?'' நடேசன் கேட்டான்.

''ஓம்'' என்று சொல்ல எனக்குத் துணிவு வரவில்லை.

''இல்லை'' என்று சொல்ல உள்ளம் இடம் கொடுக்க வில்லை.

குமாரதாசன் ஓர் எழுத்தாளன், சிறுகதைகள் எழுதி வருபவன். அவனுடைய கதைகள் எனக்குப் பிடிக்கும்; மிக நன்றாகவே பிடிக்கும்.

என்னைப் போல், இன்னும் பல இரசிகர்கள் அவனுக்கு உண்டு.

∴ ∴ ∴

அவனுடைய சிறுகதைகளை வாசிக்கத் தொடங்கினாற் போதும்; அவற்றை வாசித்து முடித்துவிட வேண்டும் என்ற ஆர்வம் வரவர அதிகரித்துக் கொண்டே போகும்!.

பிரச்சினைகளை நோக்கும் புதிய கோணம்; உண்மையா, கற்பனையா எனப் பிரித்துப் பார்க்க முடியாத வண்ணம் தொகுக் கப்படும் சம்பவக் கோவை; எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் எழுத்துக்களுடன் இசைக்கும் சத்திய இழை எல்லாம் அளவான முறையிற் கலந்து நின்று, அவனுடைய கதைகளுக்கு ஒருவித எழிலை, கவர்ச்சியை, கம்பீர்யத்தை அளித்து வருகின்றன என்று சொல்லலாம்.

வாசிக்கும் போது உன்னதமான உணர்ச்சிகள் கிளர்ந்தெழு வதும், வாசித்து முடித்த பின்னர், ஒருவித நிறைவு, 'ஒரு படி உயர்ந்துவிட்டோம்' என்ற உள்ளப் பூரிப்பு ஏற்படுவதும் பலர் சந்திக்கும் சத்தியமான அனுபவங்கள்!...

ஆனால் நடேசன் விதிவிலக்காக இருந்தான்.

''குடும்பம், கோவில், தர்மம் - இவைகளை விட்டால் எழுதுவதற்கு அவனுக்கு வேறு ஒன்றுமே இல்லை. அவருடைய

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒரு கதையை வாசித்தால், மற்றக் கதைகளை வாசிக்கத் தேவை யில்லை. ஒரே மாதிரியான கருத்துக்களை வெவ்வேறு சூழ்நிலை களில் வைத்துச் சொல்லுகிறார். அவ்வளவுதான்'' - குமாரதாசனைப் பற்றிய நடேசனின் கணிப்பீடு இது.

இலக்கிய விமர்சனத்தில் அவனுக்கு நாட்டம் அதிகம். மேல் நாடுகளில் உள்ளதைப்போல், தமிழில் இலக்கிய விமர்சனம் வளரவில்லையே என்ற கவலையும், அந்தக் குறையைத் தன்னால் நீக்க முடியும் என்ற நம்பிக்கையும் அவனிடம் நிறைய உண்டு. ஆங்கிலத்தில் உள்ள விமர்சன நூல்களை ஆழ்ந்து கற்று, அந்த அளவு கோலை வைத்துத் தமிழ் இலக்கிய ஆக்கங்களை விமர்சிப் பவன்.

''விஞ்ஞானம் வளர்ச்சியுடன் புதிய கருத்துங்கள். புதிய உத்திகள், புதிய பார்வைகள் என மேலை நாடுகளில் இலக்கியம் வீறுநடை போடுகின்றது. ஆனால், அன்றிலிருந்து இன்றுவரை எங்களுடைய எழுத்தாளர்களால், தாம் செல்லும் தடத்தை மாற்ற முடியவில்லை'' என அலுத்துக்கொள்ளும் நடேசனுக்குக் குமார தாசனின் கதைகள், கதைகளாகவே தெரிவதில்லை.

''ஒரு நாட்டின் பண்பாட்டைப் பிரதிபலிப்பதும் - அதை மேலும் செழுமைப்படுத்துவதும் அந்நாட்டின் இலக்கியம். வெளி நாட்டு அளவுகோலைக்கொண்டு எங்கள் இலக்கியத்தை விமர் சனம் செய்வது அவ்வளவு பொருத்தமில்லை'' என்பான் குமார தாசன்.

இருவரும் என் நண்பர்கள். இருவரின் திறமைகளையும் நான் நன்குணர்ந்தவன்.

இருவரையும் சந்திக்க வைத்து. மனம்விட்டுப் பேசச் செய்து நெருக்கமான உறவினை ஏற்படுத்த வேண்டும் என்பது என் விருப்பம். ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்வது அவர் களுக்கு மட்டுமல்லாமல் இலக்கியத்திற்கும் பெரும் பயன் விளை விப்பதாகவும் அமையக் கூடும்.

ஆனால், அவர்களைச் சந்திக்க வைப்பது இலகுவானதாகத் தெரியவில்லை.

நடேசனைக் சந்திப்பதற்கு குமாரதாசனுக்கு நாட்டமே இல்லை. ''புதிய தத்துவங்கள், சிந்தனைகள் என்று எதையெ தையோ சொல்லிக் கொண்டிருப்பது சிலருடைய பொழுது போக்கு. ஏழை எளியவர்களுக்காக இரக்கப்படுவதாகச் சொல்லிக் கொள்வதில் ஒரு திருப்தி''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நடேசன் அப்படியானவர்தான் என நீ நினைக்கிறாயோ?''

''வேறு மாதிரி நினைக்க என்னால் முடியவில்லை. தன்னுடைய ஆடம்பரத்தையும் சொகுசு வாழ்க்கையையும் அவர் இன்னமும் மாற்றிக்கொள்ளவில்லை. தான் சொல்லும் கருத்துக்கள் தன் வாழ்க்கைக்குப் பொருத்தமில்லை என்று நினைக்கிறார் போலை கிடக்கு. முதலில் மற்றவர்கள் திருந்தட்டும் என்று எதிர் பார்க்கிறாரோ?''

''நேரிலே சந்தித்து இதைப் பற்றியெல்லாம் பேசினா லென்ன? ஒருவரையொருவர் சரியாக விளங்கிக்கொள்ள வழி ஏற்படும். என் வீட்டிலேயே சந்திக்கலாம். நான் ஏற்பாடு செய்கின்றேன்.''

நீண்ட மௌனத்தின் பின் குமாரதாசன் சம்மதித்தான்.

படம் தொடங்குவதற்கான இரண்டாவது மணியும் அடித்து விட்டது. விளக்குகள் அணைக்கப்பட்டன.

செய்திச் சுருள் என்ற பெயரில் அமைச்சர்களும் அரசியல் பிரமுகர்களும் ''நடிக்கும்'' காட்சிகள் ஒன்றன் பின் ஒன்றாய் விரிந்து எரிச்சலூட்டிக் கொண்டிருந்தன.

அன்று காலையில் என் வீட்டில் நடைபெற்ற அந்த இலக்கியச் சந்திப்பு என் மனத்திரையில் ஓடிக்கொண்டிருந்தது.

''நீங்கள் இரண்டு பேருமே இலக்கியத்துறையில் இருந்தாலும், எப்போதும் எதிர் எதிராகவே நிற்பதைப்போல எனக்குத் தெரிகிறது'' என நான் ஆரம்பித்தேன்.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை'' எனச் சமாளிக்க முயன்றான் நடேசன்.

''கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. அவை ஆழமானவை என்பதை முதலில் ஒப்புக்கொள்வோம்'' என்ற குமாரதாசன் நடேசனைப் பார்த்துச் சொன்னான், ''மேல் நாட்டிலுள்ளவை தான் இலக்கியம். அவற்றைப் பின்பற்றித்தான் நாங்களும் இலக்கியங்களை ஆக்க வேண்டும் என்கிறீர்கள். செழிப்பான ஓர் இலக்கியப் பாரம்பரியம் எங்கள் நாட்டிலும் இருக்கின்றது என்பதை மறந்துவிட்டீர்களோ?

''மறக்கத்தான் விரும்புகிறேன். ஆனால், இன்னமும் மறக்கவில்லை. தமிழ் இலக்கியங்கள் எல்லாமே உணர்ச்சிக் கோளங்கள்.... அன்பு, காதல், இரக்கம், பக்தி, தன்மானம், தியாகம், வீரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பெயர்களில் ஒருவித வெறியை உண்டாக்குகின்ற இலக்கியங்கள்''

''மனிதனை மனிதனாக வாழ வைக்கும் புனிதமான உணர்ச்சிகள் இவை. வெறியூட்டுபவை என்று சொல்லி அவற்றின் மதிப்பைக் குறைக்கக்கூடாது.''

''சங்க காலம் தொடக்கம் எங்கள் காலம் வரை இந்தப் 'புனித' உணர்ச்சிகள் எங்களை ஒருவித அடிமை நிலைக்குத் தள்ளி விட்டன என்பதை மறுப்பீர்களா?''

''அடிமை நிலைக்கா?'' விளக்கம் கோரினான் குமாரதாசன்.

''ஓம் நாங்கள் குடும்பத்துக்கு அடிமை, சமயத்துக்கு அடிமை, சம்பிரதாயங்களுக்கு அடிமை, சமூகத்துக்கு அடிமை''

''அடிமை என்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது''

''வேறு எப்படி அதைச் சொல்லுவது? விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாங்கள் இவையெல்லாவற்றிற்கும் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும். மேல் நாட்டான் சந்திரமண்டலத்திற்குப் போகும் அளவுக்கு முன்னேறிவிட்டான். ஆனால், நாங்கள், குடும்பம், கோயில், பாவம், புண்ணியம் என்று ஒரே தடத்திலேயே சுற்றிவந்து கொண்டிருக்கிறோம்.''

''சந்திரமண்டலத்திற்குப் போவதுதான் முன்னேற்றமா? '' குமாரதாசன் கேட்டான்.

''அதை மறுப்பதென்றால், அறிவின் வளர்ச்சியை, விஞ்ஞானத்தின் சாதனைகளை எதிர்க்கின்றீர்கள் என்று தான் சொல்வேன்.''

குமாரதாசன் விளக்கினான், ''அறிவு வளரத்தான் வேண்டும்; விஞ்ஞானம் வளரத்தான் வேண்டும். அதே வேளையில் மனிதனிடமுள்ள நல்லுணர்ச்சிகள் தூண்டப்பட்டு அவையும் பங்குவமாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும்... உலகின் பல பாகங்களிலே கோடிக்கணக்கான மக்கள் வாழவே வழியின்றிப் பட்டினிச் சாவின் விளிம்பில் பரிதாபமாக நிற்கும் போது அவர்களைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், சந்திரமண்டல ஆராய்ச்சிக்காகக் கோடி கோடியாகக் கொட்டிக்குவிப்பது சரியானதாக எனக்குத் தெரியவில்லை.''

''அப்படியானால், முன்னேற்றம் என்று எதைக் கருதுகிறீர்கள்?'' நடேசனின் கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மனிதன் மனிதத்தன்மையுடன் வாழ்வது தான் முன்னேற் றம். யாரையும் புண்படுத்தாமல், யாருக்கும் தொல்லை கொடுக்கா மல், மற்றவர்களின் துன்ப துயரங்களில் அனுதாபத்துடன் கலந்து கொண்டு, தியாக மனப்பான்மையுடன் வாழவேண்டும். இத் தகைய வாழ்க்கையைச் சாத்தியமாக்குவது தான் முன்னேற்றம்.''

''துன்பங்களும் துயரங்களும் ஒருவருக்கு ஏற்பட்டால் தானே மற்றவர்கள் அவற்றிலே அனுதாபத்துடன் கலந்து கொண்டு ஆறுதல் சொல்லலாம்? சமநிலை என்பது இல்லாவிட்டால் தானே தியாகம் என்பதற்குத் தேவை ஏற்படும்? ஏற்றத் தாழ்வு அற்ற, துன்பம் என்பது என்ன என்றே அறியாத ஒரு சமுதாயம் உருவாகினால்...?''

''அது ஓர் இலட்சியக் கனவு. ஆனால்.....''

''தயங்காமல் சொல்லுங்கள்''

''அந்தக் கனவை நனவாக்குவது இலகுவான காரியம் அல்ல. அதற்காக அந்த இலட்சியத்தை விட்டுவிடவேண்டும் என்று சொல்வதாக நினைக்கக்கூடாது. மனிதனின் துன்பதுயரங்களைக் குறைக்கலாம். அறவே இல்லாதொழிக்க முடியாது. ஏனெனில் மூளையும் அறிவும் மட்டுமல்லாமல் உள்ளமும் உணர்ச்சியும் கூட அவனிடம் உண்டு... ஏற்றத் தாழ்வுகளும் ஏதோ ஓர் உருவில் சிறிய அளவிலாவது இருக்கும்.''

''இருக்கும் என்றால்? ''

''மனித இயல்பை வைத்துக்கொண்டு பார்க்கும் போது, அவை இருக்கும் என்றுதான் சொல்கிறேன். அதே வேளையில், மனிதப் பண்பு வளர்க்கப்பட்டால், அவற்றின் கொடுமைகள் குறையும். இந்தப் பண்பை வளர்க்கும் இலக்கியந்தான் எமக்குத் தேவை.''

''எங்களுக்கிடையேயுள்ள வேறுபாட்டின் அடிப்படைக்கே வந்துவிட்டோம். எந்த வகையிலும் ஏற்றத் தாழ்வற்ற, சமத் துவமான சமுதாயத்தை, துன்ப துயரங்களே இல்லாத சமு தாயத்தை உருவாக்குவது சாத்தியம் என்பது என்னுடைய நம் பிக்கை. திட்டமிடப்பட்ட இலக்கியம் மூலம் அதைச் சாதிக்கலாம்.''

''திட்டமிடப்பட்ட இலக்கியம் என்றால்.....? ''

''வர்க்க பேதமற்ற, சுரண்டலற்ற, சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவதற்கு மக்களைத் தயாரிக்க வேண்டும். அடக்கு முறைக்கு எதிராக மக்களைப் போர்க்கொடி தூக்கச் செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இந்த நோக்கங்களுடன் இலக்கியம் திட்டமிடப்படல் வேண்டும்.''

''அடக்குமுறைக்கு எதிராக என்றால்.....? ''

''முதலாளிகளுக்கு எதிராக, உயர்சாதியினருக்கு எதிராக, சமயத் தலைவர்களுக்கு எதிராக.... பாமர மக்களைத் தலை யெடுக்க விடாது நசுக்கி வருபவர்கள் இவர்கள்.''

''அத்தனை பேருமே அப்படியானவர்களா? பரந்த மனம் படைத்தவர்கள், நல்ல மனம் உடையவர்கள், இரக்க சிந்தினை கொண்டவர்கள் அவர்களிடையே இல்லையா?''

''இரண்டொருவர் இருக்கலாம். நான் மறுக்கவில்லை. ஆனால், பெரும்பாலானவர்கள் கொடுமைக்காரார்கள் தான். அவர்களுடன் சேர்த்துச் சிறுபான்மை நல்லவர்களும் அழிக்கப் படத்தான் வேண்டும்''

''சமுதாயப் பார்வை என்று சொல்லிக்கொண்டு சமுதா யத்தின் ஒரு பகுதியினரை அழிக்க முயலலாமா?.''

''அது தவிர்க்க முடியாது. மயிலே மயிலே இறகு போடு என்றால் அது போடாது''.

''தான் விரும்புபவற்றைச் சட்டங்களாக்கி, துப்பாக்கி முனை யில் அவற்றை அமுல்படுத்தும் சர்வாதிகாரியைப் போல் இலக்கிய கர்த்தாவும் செயற்பட வேண்டும் என்று விரும்புகிறீர்கள். சமு தாயம் என்பது கல்லாலும் சிமென்ராலும் கட்டப்பட்ட கட்டட மல்ல, நாம் விரும்பியபடி இடிப்பதற்கும், பின்னர் கட்டுவதற்கும்! மூளையும் அறிவும் மட்டுமல்ல உள்ளமும் உணர்ச்சியும் ஆன்மா வும் உடைய தனி மனிதர்கள் சேர்ந்தது தான் சமுதாயம். ஒவ் வொரு மனித இதயத்தையும் தனித்தனியாக அணுகி, நெகிழச் செய்து, படிப்படியாகப் பண்படுத்துவது தான் இலக்கியத்தின் பணி. நிர்ப்பந்தம் காரணமாக அல்லாமல், இதயபூர்வமாக ஏற்படும் மாற்றம் நிரந்தரமானதாக, உறுதியானதாக இருக்கும்.''

''ஜெற் விமானங்களின் காலத்தில் இருந்து கொண்டு, நீங்கள் மாட்டு வண்டிலிற் பிரயாணம் செய்ய விரும்புகிறீர்கள். நீங்கள் கருதும் மாற்றம் வரும்வரை காத்திருப்பதற்குப் புதிய தலை முறைக்குப் பொறுமையில்லை.''

''அவர்கள் அவசரப்படுகின்றார்கள் என்பதற்காக இலக்கியம் தடம் புரள வேண்டுமா? பலாத்காரப் புரட்சி வேண்டும் என்போர் அரசியலில் இறங்கட்டும். பொருளியல் வாழ்வு மட்டுந்தான் பெரிது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்போர் உற்பத்தித் துறைக்குச் செல்லட்டும் இலக்கிய கர்த்தா மனிதாபிமானத்தை வளர்க்கட்டும் .''

''இவ்வளவு நேரமும் கலந்து பேசியதன் பிறகு நாங்கள் இரு வேறு துருவங்களிலேதான் நிற்கிறோம்.... ''குமரன்'' தியேட்டரில் புதிய படம் ஒன்று ஓடுகிறது. அதைப் போய்ப் பார்ப்போம் பார்த்த பின்னர், என்னுடைய நிலைப்பாடு சரிதான் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள்'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தான் நடேசன்.

படம் பார்ப்பதற்குக் குமாரதாசனும் இசைந்தான்.

∴ ∴ ∴

செய்திகள் முடிந்து படம் ஆரம்பமானது.

குமாரதாசன் வந்துவிட்டானா என்பதை அறியும் ஆவலில் அங்குமிங்கும் பார்த்தேன்.

''உன் நண்பனையே நினைத்துக் கொண்டிருந்தால் படத் தின் மையக் கருத்தைப் புரிய முடியாமற் போய்விடும். அரைமணி நேர நித்திரைக்குப் பிறகும் கதையின் ஓட்டத்தைப் பிடித்துக் கொள்வதற்கு இது தமிழ் சினிமா அல்ல'' என்றான் நடேசன்.

பரந்த ஒரு பிரதேசத்தின் வயல் நிலங்களைத் தன் உடைமை யாக்கிய பண்ணையார் ஒருவர் செய்யும் அட்டூழியங்கள், அடக்கு முறைகள், அந்தரங்க வாழ்க்கையின் அலங்கோலங்கள். அவரு டைய பண்ணையில் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளான ஏழைத் தொழிலாளர்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள், வேதனைகள், தொழிற்சங்கத் தலைவன் ஒருவனால் உருவாக்கப் பட்ட ஒற்றுமை காரணமாக அந்தத் தொழிலாளர்கள் மேற்கொள் ளும் எதிர்ப்பு நடவடிக்கைகள், ஈட்டும் வெற்றிகள் சம்பந்தமான படம் அது.

நடிப்பு, படப்பிடிப்பு போன்றவை நன்றாகவே இருந்தன.

வயலில் வேலை செய்யும் பெண்கள், தம் பிஞ்சுக் குழந்தை களை வயல் வரப்பிற் கிடத்தி விடுவதும், குழந்தைகள் பசியால் கத் தும் வேளை, அருகே செல்லவிடாமல், பண்ணையாரால் அவர்கள் தடுக்கப்படுவதும் உருக்கமான காட்சிகளாக இருந்தன.

பண்ணையாரின் தடையை மீறி, தன் குழந்தைக்கு ஒருத்தி பால் கொடுத்ததைக் கண்ட அவர், இருவரையும் பிரித்து வைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை அருவருப்பையும் ஆத்திரத்தையும் ஊட்டியது. ஆனால் நம்பத்தக்கதாக அமையவில்லை.

ஒவ்வொரு நிகழ்ச்சியின் பின்னணியையும் முக்கியத்துவத்தையும் நடேசன் எனக்கு விளக்கிக் கொண்டிருந்தான்.

பண்ணையாரின் அட்டூழியங்கள் மிகைப்படுத்தப்பட்டு, வேண்டுமென்றே திணிக்கப்பட்டவை போல் தோன்றின.

தொழிற்சங்கத் தலைவனின் பேச்சுக்களும், எதிர்ப்பு நடவடிக்கைகளில் நேரடியாகக் கலந்து கொள்வதைத் தவிர்ந்த தந்திரமும், நடேசனைப் பற்றிக் குமாரதாசன் முன்னர் சொன்ன சில கருத்துக்களை நினைவூட்டிக்கொண்டிருந்தன.

ஒன்றும் பேசாமல், நடேசனின் விளக்கங்களைக் கேட்டுக் கொண்டிருந்த நான், குமாரதாசன் அங்கில்லாத குறையை நன்றாக உணர்ந்தேன்.

தாயிடம் பால் குடித்துக்கொண்டிருக்கும் குழந்தையை அப்படி முரட்டுத்தனமாகப் பறித்து எடுப்பவன், ஒன்றில், பைத்தியக்காரனாக இருக்கவேண்டும். சாதாரண மனிதன் எவ்வளவு தான் இரக்கமற்றவனாக இருந்தாலும், இப்படி அரக்கத்தனமாக நடக்க மாட்டான் - என அடித்துச் சொல்லியிருப்பான் குமாரதாசன்.

அப்படித்தான் ஒருவன் இருந்தாலும் இலட்சத்தில் ஒருவனாக கோடியில் ஒருவனாகத்தான் இருப்பான். அந்த ஒருவனை வைத்துக் கொண்டு, அத்தனை பேருமே இரக்கமற்ற அரக்கர்கள் எனக் கொள்ள முடியாது - என உரத்துச் சொல்லியிருப்பான்.

தொழிலாளர்களின் கஷ்டங்களை அவல வாழ்க்கையைப் பண்ணையாருக்கு எடுத்துச் சொல்வதிலோ அவர்களின் கோரிக்கைகள் எவை என்பதை விளக்குவதிலோ நாட்டமில்லாமல் அவரை எதிர்க்கும்படி தூண்டுவதிலேதான் தொழிற்சங்கத் தலைவன் குறியாக இருக்கின்றான். குமுறியெழும் மக்களும் அவன் சொற்படி நடப்பதற்குத் தயாராக இருப்பதாகச் சொல்கிறார்கள். முன்னர் பண்ணையாருக்கு அடிமையாக இருந்து அவஸ்தைப் பட்டவர்கள், இனி அந்தத் தலைவனுக்கு அடிமையாகப் போவது எந்த அளவுக்குப் புதிய சிந்தனையின் பிரதிபலிப்பாக இருக்கும்? எந்த வகையில் முன்னேற்றத்தைக் குறிக்கின்றது? என்றும் நிச்சயமாகக் கேட்டிருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடேசன் சொன்னான். ''படம் திரையிடப்பட்டுப் பல வாரமாகியும் கூட்டம் குறையவில்லை. மக்களின் ரசனையும் சிந்தனையும் புதிய திசையிற் செல்லத் தொடங்கிவிட்டன''

அதற்கு நான் ஒன்றும் பேசவில்லை.

''ஆட்களின் தொகையை மட்டும் வைத்துக்கொண்டு எதை யும் தீர்மானிக்கக்கூடாது'' என முன்பு ஒரு தடவை இதே நடே சன்தான் எனக்குக் கூறியிருந்தான்.

ஃ ஃ ஃ

அடுத்த நாள்

ஓர் அலுவலாக நான் பட்டணத்துக்குச் சென்ற போது. ஓட்டமும் நடையுமாகக் குமாரதாசன் போய்க்கொண்டிருந்ததைக் கண்டேன்!.

முதனாள் வருவதாக ஒப்புக்கொண்டவன் கடைசிவரை வரவேயில்லை. இப்போது அதைப் பற்றிச் சிறிதும் கவலைப் படாமல் எங்கோ சென்று கொண்டிருக்கிறான்.

அவன் எங்களை ஏமாற்றவில்லை; அவமானப்படுத்தி விட்டான்.

கோபத்துடன் அவனைக் கைதட்டி அழைத்தேன்.

''நின்று கதைப்பதற்கு நேரமில்லை. அவசரமான அலுவல் வா. சொல்லுகிறேன்'' என்றபடி அதே வேகத்துடன் நடந்தான்

நானும் அவனைத் தொடர்ந்தேன்.

வேதனைக் கோடுகள் அவன் முகத்தில் வெளிப்படையாகத் தெரிந்தன. முதனாள் நடந்த நிகழ்ச்சியை அவன் சுருக்கமாகச் சொன்னான்.

ஒப்புக்கொண்டபடி அவன் படம் பார்ப்பதற்கு வந்து கொண்டிருந்தான். படுவேகமாக அவனைத் தாண்டிச் சென்ற காரொன்று சற்றுத் தொலைவில், குழந்தையுடன் சென்று கொண் டிருந்த பெண்ணொருத்தியை மோதிவிட்டு, நிற்காமலே சென்று விட்டது. ஓடோடிச் சென்றான் குமாரதாசன். தாயும் குழந்தையும் இரத்த வெள்ளத்திற் கிடந்தனர். என்ன செய்வது எனத் தெரி யாமல், கூடி நின்றவர்கள் பதற்றப்பட்டுக் கொண்டிருந்தனர். துடித்துக் கொண்டிருந்த அந்த ஜீவன்களை ஆஸ்பத்திரியிற் சேர்த்தான் குமாரதாசன். அவசரசிகிச்சை மேற்கொண்ட டாக்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியாக ஆபத்து ஏதும் இல்லையென்றாலும் அடுத்த நாள் மாலைக்குப் பின்னர்தான் எதையும் நிச்சயமாகச் சொல்ல முடியும் எனக் கூறிவிட்டார். இரவு முழுவதும் குமாரதாசனும் மனைவியும் ஆஸ்பத்திரியிலேயே விழித்திருந்தது, வேண்டிய உதவிகளைச் செய்தனர்.

இரத்தம் செலுத்தினால் நம்பிக்கைக்கு இடமுண்டு எனச் சற்றுமுன்னர் தான் டாக்டர் சொல்லியிருக்கிறார். குமாரதாசனிடம் செலவுக்குப் பணமில்லை. மனைவியின் தாலிக்கொடியை அடகு வைப்பதற்காகத்தான் இப்போது அவன் போய்க் கொண்டிருக் கிறான்.

"அப் பெண்ணின் சொந்தக்காரர் யார் என்பதை விசாரித் தாயா? விபத்தைப் பற்றிப் பொலீசுக்கு அறிவித்து விட்டாயா? "

"அந்த வேலைகளை ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் கவனிப் பார்கள்..... எப்படியாவது அந்த இரண்டு உயிர்களையும் காப்பாற்றிவிட வேண்டும். அது தான் முக்கியம்."

தெய்வத்தின் நிழலிற் செல்வதைப் போல் நான் அவனுடன் சென்றேன்.

"வழியில் ஒரு சின்ன அக்சிடென்ற். ஒரு மாதிரிச் சமாளித் துப் போட்டு இஞ்சை வந்திட்டன். எனக்கு நேரம் தான் முக்கியம்" எனத் தியேட்டரில் நடேசன் சொன்னது என் காதில் மீண்டும் ஒலிக்கத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனங்காணி

பத்மா சோமகாந்தன்

கடுங்குளிரின் பிடி தளரத் தொடங்கிவிட்டது. மகிழ்ச்சியைப் போர்த்திக் கொண்ட மக்கள் குளிருக்கான போர்வையை உதறி விட்டு வசந்த காலத்தைச் சிரித்து மகிழ்ந்து வரவேற்கின்றனர்.

குளிருக்கான சுவெற்றர், லோஸ் பேர் கோட், கை காலுறை கள் அலமாரிக்குள் ஒதுங்கிக் கொண்டன. மெல்ல புதிய சூரிய ஒளி பரவசத்தை ஏற்படுத்தியது. குளிரில் ஒடுங்கிய மக்கள் கலகலப்பாக வெளியே உலாவத் தொடங்கினர்.

'ஸ்நோ' மூடி வெறிச்சோடிக் கிடந்த வீதிகள் புதுப் பொலி வுற்றன. சோடிகள் கைகளைப் பிணைத்தபடி கலகலப்பாக உலாவந்தனர்.

வேலைத்தாபனங்கள் ஜரூராக இயங்கின. 'நியோன்' ஒளி வெள்ளம் மொழு மொழு வென்று ஒளிவீசிக் களிகொண்டது. 'ரொறான்ரோ' நகரின் 'பார்லிமென்ட்' வீதி மட்டுமல்ல, எல்லா வீதிகளுமே சுறுசுறுப்பு -

கணேசு பிரமாண்டமான அக் கட்டிடத்துள் நேரத்தோடு நுழைந்து விட்டான். வேலையென்றதும் யந்திரமாகவே மாறி விட்ட கணேஷ் மேசை 'ட்றேயில்' கிடந்த கோவையை எடுத்தான். முதலாவது பத்திரத்தில் கண்ணோட்டம் சென்றது.

கனடிய மொழியில் வாழ்த்து தெரிவித்தபடியே கணேசுக்கு முன்னால் இருந்த ஆடம்பரமான சோபாவில், வந்தவர் அமர்ந்தார்.

அவர் கணேஷைப் பார்த்து.

''ஹலோ! ஹை! குட்மோனிங். டொக்டர், எனது மம்மி இந்த ஆஸ்பத்திரியில் கடுமை வருத்தமாக இருக்கிறார். இரண்டு மூன்று நாட்கள் கூட தாக்குப் பிடிக்கமாட்டார் என வார்ட் டொக்டர் கூறுகின்றார், மம்மி சுகமாகி வீடுவருவார் என எதிர்பார்த்தேன். நான் அதிர்ஷ்டமில்லாதவன் என நினைக்கிறேன்'' என சலன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்றிக் கனடிய மொழியில் கூறினான். அவன் நீண்டகாலக் கனடியப் பிரஜை என்பதை அவனது தோற்றம், பேசும் மொழி யின் சுளிவு நெளிவுகள் துலாம்பரமாக்கின.

'பாவம்! என்ன விதத்தில் நான் உங்களுக்கு உதவ முடியும்?' என்றான் கணேஷ் வெகு பணிவாக.

'கணேஷின் கனடிய மொழிப் பேச்சு அவனது காதுகளுக்கு இனிமை தரவில்லைப் போலும். கணேஷின் நிறத்தையும் கவ னித்தே அவன் தனது பேச்சை ஆங்கில மொழிக்கு மாற்றிக் கொண்டான்.

''சம்மர் பருவ காலத்தைக் கொண்டாட நாம் 'பிக்னிக்' செல்ல உள்ளோம். திரும்பி ஊர் வர இரு வாரங்கள் ஆகும். இடையில் மம்மியின் மரணம் ஏற்பட்டால்... அதற்கான செல வுக்கு இதோ 'செக்' தந்து விடுகிறேன். அவரின் இறுதி ஒழுங்கு களையும் இங்கே ஆஷ்பத்திரி நிர்வாகமே செய்ய வேண்டும். மலர்வளையம், சவப்பெட்டி, புதிய உடை, பாண்ட் மியூசிக் முதலியவற்றிற்கு தேவையான பணத்துக்கு 'செக்' கிலுள்ள தொகை போதும் தானே!'' என்றபடி தொகைக்குரிய 'செக்கைக் கிழித்தான்.

மனம் பரபரத்தது; கைகள் நடுங்கின. எனினும் 'செக்'கைப் பெற்றுக் கொண்டான் கணேஷ்.

துறவி சங்கரர் கூடத் தன் தாய்க்குக் கொள்ளி போட, உல கைத் துறந்த துறவியான பின்னரும் வந்தவராம். தாய்க்குக் கொள்ளி போட வேண்டியது தனது கடமை யென்றெண்ணி'- எனப் படித்திருக்கிறான் கணேஷ்.

ஆனால் அன்று அவன் மனம் என்ற குறளி இந்த மிஸ்ரர் லொக் தனது தாயாரின் மரணத்தை நன்கு தெரிந்து கொண்டும், இறுதி யாத்திரைக்கான ஒழுங்குகளைத் திட்டமிட்டு விட்டு அதற் கான செலவைச் செலுத்திவிட்டு சுற்றுலா செல்லும் அவர்களின் போக்கை எண்ணி அவன் மனம் திகைத்துவிட்டது.

தனது உதவியாளரான மிஸ் மார்க்கை அழைத்து 'செக்' கைப் பதிவு மெஷினில் போட்டு றிசீற்றை மிஸ்டர் லொக்கிடம் கையளிக்குமாறு சொன்னான்.

'சட்டி சுட்டதடா, கை விட்டதடா' என்ற ரீதியில் தான் அவனால் செயல்பட முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவளுக்கு வருத்தம் கடுமை; மரணப் படுக்கை. இவ்வுலகை விட்டு அவள் நீங்கும் நாள் இன்றோ நாளையோ இதைத் தெரிந்து கொண்டும். மகன், மனைவி, நண்பர் சகிதம் உல்லாசப் பயணம் புறப்படுகிறானே!

கணேசின் மனம் பதறியது; கைகால் ஓடவில்லை.

பெற்ற தாய் எங்கே? பிள்ளையின் மனம் எங்கே? விசித்திர மானது இந்தக் கனடிய தேசம்? தன்னை உருவாக்கி இவ்வுலகை அறிமுகம் செய்தவள் என்ற பற்றுப் பாசமும் அற்றுவிட்டதா இவர்களுக்கு? அதனால் இந்தப் போக்குகளை உள்வாங்கவே முடியவில்லை.

தேசங்கள் தோறும் பாஷைகள் வேறாகலாம்; பண்பாடு மாறலாம். பெற்ற தாய் பிள்ளையென்ற அடிப்படை ஊற்றும் மாற்றம் பெறலாமோ? - கணேசுக்கு அதிர்ச்சியாக இருந்தது,

ஃஃ ஃஃ ஃஃ

அவன் ஊரில் இருந்த போது அப்பாவின் நண்பர், ஒரு வயதான பண்டிதர். தினமும் வீட்டுக்கு வருவார். பழஞ்சேலை கிழிவதுபோன்று பறபறவென்று கதைத்தபடியே இருப்பார். அர்த்தமற்ற அவர் பேச்சைக் கேட்டுச் சகிக்காத பேரப்பிள்ளைகள் அவரை எங்காவது வெளியே உலாவி வருமாறு அனுப்பி விடு வார்கள். அவர் கணேசு வீட்டுக்கு வந்து வெளி விராந்தையில் இருந்து கொள்வார்.

'வெற்றிலைத் தட்டைக் கொண்டாடா, தம்பீ! என்பார்.

அவனுடைய ஆச்சி,

''பண்டிதர் வந்திட்டுவது. தட்டிலை கிடக்கிற வெத்திலை பாக்கையும் முடிச்சிப் போயிடும். இரண்டொரு வெத்திலையை இங்கை எடுத்து வைச்சிட்டுப் போடா தம்பீ!''

'பாவமெணை பண்டிதர்! தமிழைக் சப்பிச் சப்பி வெத்திலை யைத் துப்பட்டுமெணை' என்று சொல்லிவிட்டு வெத்திலைத் தட்டைத் தலைவாசல் திண்ணையிலை வைத்திடுவான். அங்கும் ஒரே 'வெந்திலைச் சமா' நடக்கும். இடையிலை அவனின் அப்பு வந்து,

''வாருங்காணும் பண்டிதர், எங்கட பனங்காணியைப் பாத் திட்டு வருவம்'' என இழுத்துக் கொண்டு போகும் வரை இடம் விட்டே எழும்பமாட்டார். வெற்றிலையைச் சப்பிச் சப்பி எத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகள், பழைய தொடர்புகள் மனதில் பதிந்த மண்ணின் கதைகள் கணேசின் நினைவில் அந்தப் பழைய பதிவுகள்....!

பட்டினத்தார் என்றொரு அடிகளாம். அவர் பெண்டுக ளெல்லாம் 'மாயப்பிசாசெண்டு' பாடினவர். எங்கட வாழ்க்கையும் இந்த உலகமும் வெறும் நீர்க்குமிழி போல 'டப்' பென்று மறைந் திடும், நிச்சயமில்லை என்று பட்டினத்தடிகளின் பாட்டுக்களைப் பண்டிதர் வாய்விட்டு உரத்து ராகம் போட்டுப் பாடுவார்.

பாட்டொன்றும் அவனுக்கு விளங்காது. ஆனால் அவர் சொல்கிற, இந்த உலகம் பொய். பற்று வைக்காதை என்பதெல்லாம் இந்தக் கனடாக்காரர்களுக்கு முதலிலேயே தெரியுமோ? .....! அல்லது இவர்கள் படித்து எழுதி வைத்த தைத்தான் பட்டினத்தார் பாடலென்று எங்களின் ஆட்கள் மொழிபெயர்த்து வைத்திருக் கினமோ? அவனுக்கொன்றும் விளங்கவேயில்லை. அவன் மனம் குழப்பமாடியது.

நெஞ்சு கனத்தது; ஊரிலே வீட்டில் அவனது ஆச்சி அப்புவின் நினைவைச் சுற்றி எண்ணங்கள் படர்ந்தன.

ஊர் நினைவு வந்தால் அவனுக்கு வேலை எதுவுமே ஓடாது. தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் கலவரங்களும் போரும் அவனது சிந்தனைக் குப்பையில் தீயைப் பற்ற வைத்துவிட்டது.

பாவம்! அப்புவுக்கு என்மீது எத்தனை பற்றும் பாசமும். நான் சிறுவனாயிருக்கும்போது, பனங்காணியைப் பார்க்க வா, எனத் தன்னுடன் கூட்டிப் போவார். அது ஒரே பனைக் காடாகக் கிடக்கும். அந்த மண்ணை அள்ளி நுகர்ந்து பார்ப்பது அவருக்குச் சந்தோஷமான சங்கதி. அடர்ந்த அந்தப் பனைக்கூடல் அருகில் தோட்டத்தோடு ஒட்டியது நமது வீடு.

நாலா பக்கமும் பசிய கம்பளத்தின் மத்தியில் பூவேலைப் பாடுபோல அழகும் செழிப்பும் அதில் மிளிர்ந்தது. மேற்குப் பக்கமும் தோட்டங்களும் துரவுகளும் நிறைந்தவெளி; அதனை யடுத்து இருப்பதுதான் எங்கள் பனங்காணி; அதற்கும் அப்பால் சுடலை.

அந்தச் சுடலையில் ஊர் மக்கள் சவத் தகனம் செய்வர். ஆனால் எமது குடும்பமோ, பரம்பரை பரம்பரையாக ஆறேழு தலைமுறைகளாக அந்தப் பனங்காணிக்குள்தானாம் பிரேதங்களை எரிப்பது வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலைத் தரிசிப்பதுபோல எனது அப்பு அந்தப் பனங் காணியைத் தினமும் போய்ப் பார்த்து வருவார்.

குழந்தையையும் அது உறங்கும் தொட்டிலையும் பார்த்துப் பெருமிதமடையும் தாயின் நிலையில் அப்புவும் தனது தந்தை, பாட்டன், பூட்டன், முப்பாட்டன் முதலியோர் துயில் கொள்ளும் அந்தப் பனங்காணியைப் புண்ணிய பூமியாகவே மதிப்பவர்.

அச்சங்கிலித் தொடர் அறக்கூடாதென்பதில் இறுக்கமான பிடிவாதமும் ஆவலும் அவருக்கு. என்னை அங்கே கூட்டிச் செல்லும்போதெல்லாம் தானும் அந்தப் பனங்காணித் துண்டுக் குள்ளேதான் அடக்கமாக வேண்டுமென எனக்குச் சொல்லாமல் சொல்லி வைப்பார்.

பொற்கோவிலுள் அடியெடுத்து வைக்கும் உணர்வில் அப்பு மிதப்பார்; அக்காணியின் ஸ்பரிசம் பட்டாலும் தெய்வீகப் பொலிவும் பாசமும் ஒட்டுவதாக நெகிழ்ந்துபோய் மகிழ்வார். என்னைப் பொறுத்தளவில் அது கரிய பனைகளையும் பசுமை யான ஓலைகளையும் கொண்ட வெறும் பனங்காணிதான். ஆனால் அதன் முக்கியத்துவத்தை சிறப்பை எனக்குச் சொல்லிப் பெருமிதங் கொள்வார் அப்பு.

அந்தப் பனங்காணி நிறையக் கருங்காலி போன்ற வைரமான பனைகள் வானளாவ உயர்ந்து நின்று அந்த மண்ணின் மகத்துவத்தையும் ..... அப்பகுதியைச் சேர்ந்த மண்ணின் மைந்தர்களின் வயிர நெஞ்சத்தின் உறுதிப்பாட்டை, உயர்ந்த பண்புகளைப் பிரதிபலித்தன.

நான் எனது சிறுவயதில் சிறுபிள்ளைத்தனமாக ஒரு நான் அப்புவிடம்,

"அப்பு! அப்பு! எங்கடை பனங்காணிக்கை கொஞ்சம் பனையளைத் தறிப்பமே?" என்று கேட்டேன்.

"ஏன்?" என்றார் அப்பு அதிர்ச்சியாக.

"கிரிக்கெட், புட்போல் விளையாட வசதியாயிருக்கும். நீங்கள் கால் ஓய உலாவி, எங்களோட வந்து நிண்டு கிரிக்கெட் பாக்க வசதியாயிருக்கும் தானே!" - என்றான்.

அப்புவுக்கு பெரிய கோபம் வந்துவிட்டது,

"பரம்பரை பரம்பரையா அப்பா, அப்பப்பா, தாத்தா, கொள்ளுத்தாத்தா, பேத்திமார் என்று அவையளைத் தகனஞ் செய்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திலை 'புட்போல்' விளையாட்டோ? விசர்ப்பெடியா. மனசால் அப்படி நினைச்சுக்கூடப் பார்க்காதே. எங்கடை அடிவழி மனிதரைப் போற்றி நினைத்து வழிபடும் இடமல்லவா? உன்ரை அப்புவும் நாளைக்கு மூச்சை விட்டா இந்தப் பனங்காணிக்கை தானே கொண்டந்து நீ எரிக்கவேணும்.''

''என்னப்பு சொல்லுறீங்க?'' வழுவிக் கீழே நழுவும் காற் சட்டையை இழுத்து முடிந்தபடி நான் கேட்டேன்.

''உறுதியாகச் சொல்லிப்போட்டன் நான் உயிரை விட்டா என்ரை உடம்பை; பரம்பரையான எங்கடை இந்தப் பனங் காணிக்கைதான் கொளுத்திச் சுடவேணும். என்ரை ஆத்மா அப்ப தான் சாந்தி அடையும்... செய்வேன் எண்டு சத்தியம் பண்ணடா?''

தலையில் அடித்துச் சத்தியம் வாங்கிக் கொண்டார்.

அவரது ஆசைத் துடிப்பெல்லாம் நரைகண்ட மீசையிலும் கைகால் ரோமங்களிலும் சில்லிட்டு நிமிர்ந்தது.

பாவம் அப்பு! என்னைத் தூக்கித் தழுவுவதிலும் அணைத்துக் கதைப்பதிலும் அவருக்கு எத்தனை மகிழ்ச்சி!!

சத்தியமாயெணை அப்பு என்று சொல்லி.... முடிக்கவும் என்னையறியாமல் கண்கள் கலங்கி ''ஓ! என்ரை அப்பூ.....!'' எனக் கதறிவிட்டேன்.

அப்பு என்னை இறுக அணைத்து முதுகைத் தடவினார்; அவரின் கண்கள் கலங்கிவிட்டன.

ஃ ஃ ஃ

கணேசுவின் மனக்குறளி ஒரு கணத்தில் ஊருக்குப் போய்ப் பழைய நிகழ்ச்சிகளில் லயித்து அவற்றைப் பசுமையாக்கி.....

'ஹை' மிஸ்டர் கணேஷ்! என்ன? ஏதாவது சுகயீனமா? ' என ஆங்கிலத்தில் விசாரித்தபடி வந்தாள் மிஸ் மார்க்.

''அரை நாள் லீவு போடவேணும் போல'' என்றான் கணேஷ்.

'என்ன? எங்கேயாவது' பிக்னிக் 'போகிறீர்களா? என்றாள்.

''சே! உடம்பு சரியில்லை. 'சிக்' என்றான் கணேஷ்.

அவன் தனது ஆஸ்பத்திரி அலுவலகத்தில் இருந்து புறப் பட்டபோது கையசைத்துப் புன்னகைத்தாள் அவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறையில் சிறிது நேரம் ஆறுதலாக இருக்கலாமென வந்தான். வீட்டு நினைவும் பனங்காணி நிகழ்வுகளும் மனதை ஆக்கிரமித் திருந்தன.

வெளியே வீதிகளிலே 'சம்மருக்'கான ஆரவாரங்கள்....! பொருட்கள் விற்பனை; வாங்குவோரின் கலகலப்பு...! பரபரப்பு!

சில நாட்களின் முன்புதான் அவனுடைய அப்புவின் கடிதம் வந்திருந்தது; அவனுக்கு வயசாகிறதால், தமக்கும் முதுமை வந்து விட்டதால் அவனது கல்யாணத்தைச் செய்து முடிக்க வேண்டு மெனவும் பெண் தேடுவதில் தாம் ஈடுபட்டிருப்பதாகவும் அப்பு எழுதியிருந்தார்.

மேலும் அந்தப் பனங்காணியிலும் குண்டுகள் போடப் பட்டதாகவும் வயிரப் பனைகள் என்பதால் அவை முறியவில்லை. இலேசாகச் சீவிக்கொண்டுதான் குண்டு போயிருக்கு எனவும் எழுதியிருந்தார்.

அறையில் தனிமை மனதை அரித்தது.

வேலைக்காக அலைந்து கொண்டிருக்கும் அடுத்த தொடர் மாடியில் வசிக்கும் பத்மநாதனிடம் போனான் கணேஷ்.

''வேலையிருக்குதெண்ட சுதியில் நீ உலாத்தித் திரிகிறாய்'' - என்றான் பத்மநாதன் ஆத்திரமாகக் கணேசைப் பார்த்து.

அங்கிருந்த மகாலிங்கம்,

''செய்தி தெரியுமோ?'' எனப் பீடிகை போட்டான்.

''ஆமி, றிவறெச'' நடவடிக்கையின் போது சனங்களெல்லாம் ஊரைவிட்டே கிளம்பி விட்டினமாம். குழந்தை குஞ்சு குமர் கிழடு பெண் ஆணென்று யாவருமே அகதிகளாகி வடமராட்சி, தென்ம ராட்சி, கிளிநொச்சி என ஓடிப்போய் விட்டினமாம்...

ஓட முடியாமல் களைத்து மூச்சடைத்து வழியிலேயே சிலர் செத்துப் போனார்களாம். உன்ரை அப்புவும் வழியில் களைத்து மயங்கி.....

செத்த உடலைப் பக்கத்தில் கிடந்த ஓலைகளையும் சுள்ளித் தடி குப்பைகளையும் போட்டுக் கொளுத்தித் தகனம் செய்திருக் கினமாம். ஆறேழு நாளுக்கு முந்தி நடந்து போச்சாம். வவுனியா வுக்கு வந்துள்ள என்ரை தங்கச்சி ஊர்ப் புதினங்களைச் சொன்ன போது டெலிபோனில் இதையும் சொன்னாள். உனக்கு ஓபீசுக்குக் கோல் எடுத்தேன்.....!!!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

∴ ∴ ∴

கணேசுவுக்கு மயக்கம் தெளிந்துவிட்ட போதிலும் தந்தை யின் கொடூர மணரம் அவனைக் குலுங்கிக் குலுங்கி அழ வைத்தது. தந்தையின் பனங்காணிப் பற்றும் அங்கே இறுதித்துயில் கொள்ள வேண்டுமென்ற விருப்பம் நிறைவேறாமற் போனதும் அவன் மனதை இடித்து உடைத்துக் கொண்டேயிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவோ நெருப்போ?

சோமகாந்தன்

புகையிலைக் கன்றுகள் கொய்யா இலைக் கூட்டை உடைத்துக் கொண்டு கூவத்தொடங்கிற சேவல் அளவுக்கு வளர்ந்து, தலையை வெளியே எட்டிப் பார்க்கிற காலம். நெல்லியடிச் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் றோட்டில் அரைச் கட்டை தூரத்தில் தெருவோரமாக கிளை பரப்பில் சடைத்து வளர்ந்திருக் கிறது, ஒரு சொத்திப் பூவரசமரம். அதனடியில் மாலை தோறும் குழைக்கடை கூடுவது வழக்கம். புகையிலை பயிராகும் போகத் தில் இந்தக் குழைக்கடையில் வடமராட்சித் தமிழ் வழக்கு பிறந்த மேனியாகக் காட்சி தரும்! சனசந்தடியும், சரளமான விரசப் பேச்சும் இரைச்சலும் சேர்ந்து நெல்லியடிக் கறிக்கடையை ஞாபக மூட்டும்! மேற்கிலும் கிழக்கிலும் இரண்டு மூன்று கட்டை தூரத்துக் கப்பாலிருந்தே குடியானவப் பெண்கள் பாவட்டங் குழையை யும், குயிலங் குழையையும் கட்டுகளாகக் கட்டித் தலையிற் சுமந்து கொண்டு வந்து குழைக்கடையில் பரப்புவார்கள். வளர்ந்து வரும் புகையிலைக் கன்றுகளுக்கு 'அட்டம்' தாழ்க்க பாவட்டங் குழை யும் குயிலங் குழையும் வாங்குவதற்காக ஊர்க் கமக்காரர்கள் அங்கு வந்து கூடுவார்கள்.

குழைக்கடை கூடிவிட்டால் முருகேசபிள்ளை தான் அங்கு முடிசூடா மன்னர் - கடந்த ஏழு வருடங்களாக இவர் தான் அங்கு தரகர். இவருக்கு எதிராக ஒரு பொடிப் பயல் கூட அங்கு வாலாட்ட முடியாது. குழைக்கடை மாத்திரம் இல்லை, அந்தச் சுற்றுவட்டாரமே இவருடைய குடும்பத்துக்கு குத்தகைச் சொத்து மாதிரி. கிராமச் சங்கத் தலைவர் இவருடைய பெரிய தகப்பன், விதானையார் இவருடைய ஒன்றுவிட்ட சகோதரன்; இவருடைய தாத்தாவின் அப்பா அவருடைய காலத்தில் இரு மரபுத்துய்ய வந்த பெரு நிலக்கிழார். இவரோ தனது காலத்தில் எடுப்புச் சாய்ப்பான ஆம்பிளை. ஊர் நாட்டாண்மைக்காரார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜன இரைச்சலை அமுக்கிக் கிழித்துக் கொண்டு கேட்கக் கூடிய சிம்மக்குரல். வேட்டைத் திருவிழாக் குதிரை வாகனம் போல மேலெழுந்து எட்டிப் பார்க்கிற மூக்கு. சொந்த ஊர்ப் புகையிலையில் சுருட்டிய 'சுத்தை'ப் பிரத்தியேகமாகச் சப்பிச் சப்பி உமிழ்ந்தபடி இருக்கும் வாய் குறைவெறியில் கொதித்து மின்னிக் கொண்டிருக்கும் பெரிய கண்கள். வாய்க்கால் ஓரமாக அடர்ந்து வளரும் அறுகம் புல்லுப் போல உரோமம் படர்ந்த நெஞ்சுக்கட்டு. பரணி பிடித்த புகையிலையின் கருமை காட்டும் உடம்பு, கள்ளு முட்டி பொல வயிறு; சற்றுத் தாழக்கட்டிய புழுதி மண்டிய வேட்டி; மேலே வரிந்து கற்றிய சவுக்கம் இவற்றோடு நெற்றியில் சந்தனப் பொட்டும் அணிந்திருந்தாரென்றால் அன்று நிச்சயமாக ஒரு வெள்ளிக்கிழமையாக இருக்கும். இவர்தான் தரகர் முருகேச பிள்ளை;

ஃஃ ஃஃ ஃஃ

குழைக்கட்டு ஒன்றுக்குத் தரகுக் கூலி ஐந்து சதம்தான். ஆனாலும் கள்ளுச் செலவுக்கும், காலை மாலைச் சாப்பாட்டுக்கும் எப்படியும் அவருக்கு நாளாந்த வரும்படி நாலு ரூபாவுக்குக் குறையாது. குழைக்கடைக் காலம் முடிந்தால் மாட்டுத் தரகு வரும். அத முடிந்தால் ஓலைத் தரகு. இதற்கிடையில் புகையிலை பயிராகி விடும். பிறகு புகையிலைத் தரகு.

தரகருக்கு வருவாய்க்கு வற்றில்லை. ஆனாலும் அன்றாடச் சம்பாத்தியம் அவருக்கு அன்றைக்கே சரி. முருகேசபிள்ளை நாளையைப் பற்றி இன்றைக்கே கவலைப்படாத பேர்வழி!

ஃஃ ஃஃ ஃஃ

குழைக்கடையில், புதிய குழைகள் வந்தபடியும் தரகர் தீர்த்து விட்டவை தோட்டங்களை நோக்கித் தலைச் சுமையாகச் சென்ற படியும் இருக்கின்றன.

குழைகொண்டு வந்த குடியானவப் பெண்களுக்கும் தரகருக்கு மிடையில் பேரம் தொடங்கி விட்டது.

"எங்கை..... செல்லாச்சி! நீயும் மற்ற அஞ்சுபேரும் சுப்பிர மணிய நயினாரோடை போறியளே?... ரெண்டே கால் போட்டி ருக்கு...."

"நம்மாணையாக்கும் கழுத்து அமத்த அமத்தச் சுமந்தந்த நோ மாறயில்லை நாம் இந்தப் பெரிய கட்டுகளுக்கும் ரெண்டே கால் போடுது....!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''குயில் எண்டால் சூடுதான்..... நீங்கள் பாவட்டையைக் கொண்டந்திட்டு..... உம் உம்.... ரெண்டு பணத்தைக் கூட வைச்சு வேண்டுங்கோ..... இந்தா... தூக்கு....''

குழைக்கட்டுகளைச் செல்லாச்சியின் தலையில் எடுத்து விடுகிறார் முருகேசபிள்ளை.

மேலும் புதிய குழைக்கட்டுக்கள் வந்து இறங்குகின்றன. பொன்னியும் அவள் அயல் வீட்டுக் கூட்டாளிப் பெண்களும் கொண்டு வந்தவற்றைக் கட்டுக் கட்டாகத் தூக்கிப் பார்க்கிறார் தரகர். பெண்கள் நெற்றி வியர்வையைத் துடைத்துக் கொள்ளுகிறார்கள்.

'ஓ! - பொன்னுவோ? உன்ரை விலைப்பருவங்கள் எப்பிடி?'' - தரகரின் கேள்வியில் சிலேடை சாயல் காட்டுகிறது.

தலைமயிரை அவிழ்த்துச் சிலுப்பி, கோதிமுடிந்தபடி பொன்னி தரகரை நிமிர்ந்து பார்க்கிறாள்.

முருகேசபிள்ளையின் முகத்தில் பதற்றம் இழையோடி மறைந்து, இலேசாக மலர்ச்சி விரிகிறது.

''உன்ரை கட்டுக்கு ரெண்டரை போடுறன்... மற்றவையின்ரை சிறுசு... ரெண்டேகால் தான் சரியே?''

கேள்வியையும், குறைச் சுருட்டையும் சேர்த்து எறிந்து விட்டு, உடனே வராத பதிலைத் தேடுவதற்காகக் கண்களைச் சட்டென்று பொன்னியின் முகத்தில் வீசுகிறார் தரகர். அப்பொழுதும் பதில் தயங்குகிறது. தரகரின் பார்வை சற்றுக் கீழே நகர்கிறது. பொன்னியின் கருங்காலிச் செதுக்குடம்பைக் கவ்விக் கிடக்கும் குறுக்குக்கட்டுக்கு மேலே மொழு மொழுவென்றிருக்கும் வழுக்கு மேனியில் அவர் கண்கள் மேய்கிறன.... அவள் கன்னத்தில், தோளில், புஜத்தில், இலையான் உட்கார்ந்தால் கூட நழுவி விழுந்து விடும்!

''நமக்குத் தெரியுந்தானே.... மற்றக்கட்டுகளுக்கும் நாயமாப் போடவாக்கும்...'' - பொன்னியின் வாய்மட்டுமல்ல. அவளுடைய கண்களும் இந்த வார்த்தைகளைப் பேசுகின்றன.

வெற்றிலைக் காவியேறிய ஈச்சங்கொட்டைப் பற்கள் கெஞ்சுகின்றனவா? கேலிசெய்கின்றனவா?

''நம்மைத்தானாக்கும்..... என்ரையையும் தீர்த்துவிடவன். கறிக்கடைக்கும் போகவேணும்.... இருளுது''. எதிர்ப்புறமிருந்து ஒரு குரல் இறைஞ்சுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன துடிக்கிறாய்?...பிள்ளை கிணத்துக் கட்டிலையோ?''

''நமக்கு எப்பவும் பகிடிதான்.... மத்தியானமும் சமைக் கேல்லை... அவர்கள் பனை இடுக்கிப்போட்டு வந்து சத்தம் போடப்போறார்... கொஞ்சம் கெதிப்பண்ணிவிட... வெள்ளெனக் கூட இதிலை இருக்கிறன்''.

''உம்....சரி, சரி, பொன்னு! மற்றவையின்ரைக்கு இன்னும் ஒரு பணத்தை வைச்சுத் தீர்த்திருக்கு....கொண்டு போங்கோ.... இஞ்சாரும் வேலுப்பிள்ளை! காசைக் குடுத்து அதுகளை வெள் ளென அனுப்பிவிடும்''

வேலுப்பிள்ளையைத் தொடர்ந்து பொன்னி முன் நடக்க மற்று ஐந்து கூட்டாளிப் பெண்களும் தொடர்கிறார்கள்.

''என்ரை மகராசன் கடவுள் போலை; சுணக்கமில்லாமல் சுறுக்காத் தீர்த்துவிட்டுட்டுது...''

சென்ற இரண்டு மூன்று கிழமைகளாக பொன்னி மீதும், அவ ளோடு வருபவர்கள் மீதும், முருகேசபிள்ளைக்கு விசேஷ அக் கறை தான். குழைக் கடையில் அவர்கள் அதிகம் சுணங்குவ தில்லை.

ஃ ஃ ஃ

பொன்னி சின்னப்பெண்: குழைக்கடைத் தொழிலுக்குப் புதுசு. மேற்சட்டையைக் களைந்துவிட்டு. குறுக்குக் கட்டு கட்டத் துவங்கி முழுசாக நாலுமாசங் கூட இன்னும் ஆகவில்லை!

பருவத்தைக் தாண்டி, நீண்டுவளர்ந்து, 'கெட்டு' வெடித்து, பூத்து, மிதந்து நிற்கும் புகையிலைச் செடிகள் வம்ச விருத்திக்கான வித்து விளைப்பதற்குத் தான் பயன்படும். இலைகள் சூம்பியும் விடும்: 'குருமன்' பூச்சி பிடித்த புகையிலைச் செடிகளோ. 'வெளு றி'ப் போய் விடும்; இப்படிப்பட்ட புகையிலைச் செடிகளைக் கூட பதப்படுத்தி உருசிபார்த்த அனுபவங்கள், இந்த ஏழு வருடத் தரகர் தொழிலில் முருகேசபிள்ளைக்கு ஏராளம்!

இளமையென்ற செழுந்தரையில் காலூன்றி, வாளிப்பாக வளர்ந்து, எழில் நிறைந்து, முறுவலித்து நிற்கும் பொன்னியைக் கண்டபோது, முருகேசபிள்ளைக்கு மதாளித்து வளர்ந்து, முறுக் கேறி, பாணி பிடித்த இலைகளைப் பரப்பிக் கொண்டு திறம் விளைச்சலுக்கு உதாரணமாகத் திகழ்ந்து நிற்கும் புகையிலைச் செடிதான் தோற்றங் காட்டிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை வெய்யிலின் மஞ்சளை வெற்றுத் தோளில் போர்த்தி நீலச் சேலையை நெஞ்சில் குறுக்கே கட்டி பசுமையான குழைக் கட்டைத் தலையில் ஏந்தி, வெற்றிலைச்சாறு உதட்டைச் சிவப் பாக்க பொன்னி நடந்து வந்த ஒய்யாரத்திற்கு, தரகர் முருகேச பிள்ளையின் தாபமுற்ற நெஞ்சம் தாளம் போடுகிறது. பொன்னி குழையை இறக்கு முன்பே, தரகர் குழையத் தொடங்கி விடுகிறார்.

''வலுவான கட்டு..... களைச்சிருப்பியே!.... இப்பிடிப் பாரத்தைச் சுமக்கிறதோ?....'' - அனுதாபம் உதடெல்லாம் வழிய தனக்கு இல்லாத உரிமையை வலிய வரவழைத்துக் கடிந்து கொள்கிறார்.

இறால் எறிகிறார்! சுறா இன்னும் கவ்வவில்லை!!

பொன்னிக்கு வெற்றிலைத் தாகம், குறுக்குக் கட்டின் இடுக்கி லிருந்த கொட்டைப் பெட்டியை, விரலைச் செலுத்தி எடுத்து விரிக்கிறாள். கொழுந்து வெற்றிலை முருகேசபிள்ளையின் கண் களைக் குத்துகிறது; கிறுக்கேற்றுகிறது.

''இஞ்சை பிள்ளை; பொன்னு..... வாயெல்லாம் புளிக்குது எனக்கும் எப்பன் வெத்திலை தா.....

பொன்னி முருகேசர் கையில் வெற்றிலை வைக்கிறாள்.

''கதையோடைகதை..... இண்டைக்கு உன்ரை குழையை நான்தான் எடுக்கப் போறன் பொன்னு..... தம்பியின்ரை தறைக்கு குழை வைக்க வேணுமெண்டவன் உன்ரை நல்லாயிருக்கு..... மற்றவையின்ரை போகட்டும். நீ கொஞ்சம் பொறு...''

''பின்னைச் சரியாக்கும்: நயினார்..''

பொன்னி கொடுத்த வெற்றிலையையும். வரப்போகிற ஏதோ இன்பத்தின் கற்பனையையும் சேர்த்து, தரகர் ஒரு கணம் அசை போடுகிறார்.

செல்லாச்சி கொஞ்சம் துடுக்குக்காரி.

''என்னவாக்கும் நாங்கள் வீட்டை போறேல்லையே?''

முருகேசபிள்ளை சமாளித்துக் கொண்டு, தரகில் விரைவு காட்டுகிறார்.

குழைகள் செல்லுகின்றன. புதுக்குழைகள் வருகின்றன:

அந்தி சரிந்து கொண்டிருக்கின்றது.

பொன்னி இருக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழைக்கடை கலைந்து முருகேசபிள்ளை புறப்பட, பொழுது மைம்மலாகி விட்டது. அரைச் சவுக்கத்தை அவிழ்ந்து உடம்பு வியர்வையைத் துடைத்துவிட்டு, உதறித் தோளில் போட்டுக் கொண்டு, அவர் முன்னே செல்ல, பொன்னி குழைக்கட்டோடு பின்னே நடந்தாள், பெருந்தெருவிலிருந்து இறங்கி, வெள்ள வாய்காலூடாக நடந்து தோட்டத்துப் பெருவரம்பில் கால் எடுத்து வைக்கும் பொழுது மேற்குப்புறப் பனை வட்டுக்குள்ளிருந்து முருகேசபிள்ளையின் பொட்டல் விழுந்த வழுக்கைத் தலை போல வளர்பிறை தன் களங்கத் திட்டுக்களுடன் எட்டிப் பார்த்தது. பனை வட்டுக்குள் இரண்டு நுங்குக் காய்கள் தேனிலவில் மின்னுகின்றன.

தோட்டம் வந்து விட்டது,

"இதிலை இறக்கு"

அவள் குழைச்சுமையை சரிந்து இறக்கினாள்.

"அந்த அவசரத்தில்...."

அவள் குறுக்குக்கட்டு அவிழ...

பனை வட்டு....

தேனிலவில் மின்னும் நுங்குகள்.....

முருகேசபிள்ளையின் குதிக்காற் குருதி குபீரென்று சீறிச் சிரசிலடிக்கிறது.

அவர் உணர்ச்சிகளும் கட்டவிழ.....

"சீ! கையை விட....."

தோளில் நெளிந்த பாம்பை உதறி எறிகிறாள்.

தீயைத் தொட்ட கை 'கரீ 'ரென்று சோர்ந்தது.

அடுத்து என்ன என்ற தீர்மானம் தோன்றாத இரண்டு கணங்கள் தீய்ந்து அமுங்குகின்றன.

"பொன்னு.... பொன்னு...." கேரலாகக் குரல் கரகரக்கிறது.

"தூ..."

நிலவையுங் கிழித்துக் கொண்டு பொன்னி என்ற நெருப்புச் சுடர் விர்ரென்று விரைந்து மறைகிறது.

ஃ ஃ ஃ

அடுத்த நாள் குழைக்கடையில் தரகர் பொன்னியைத் திரும்பியும் பார்க்கவில்லை. பொன்னியின் குழை மைம்மல் வரை காத்திருக்கிறது. மாலையில் வாடிச் சோர்ந்து வீடு செல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவு பொன்னி வீட்டில் அடுப்பெரியவில்லை.

இரண்டாவது நாள்.

பொன்னியின் குழைக்கட்டு வருகிறது. போகிறது. வீட்டில் அடுப்புத் தூங்குகிறது.

மூன்றாவது நாள்.

நிலைமை மாறவில்லை.

நாலாம் நாள்.

கூட வந்த நாலு பெண்களுக்கும் பொன்னி நடந்ததைச் சொல்லிவிட்டாள்.

குழைக்கட்டுகளை இறக்கும் பொழுதே அந்த நாலு பெண்களும், பொன்னியுடைய குழைக்கட்டும் தீர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தரகரிடம் விடுத்தார்கள்.

முருகேசபிள்ளை முடியாது என்று மூர்த்தண்ணியமாக மறுத்துவிட்டார்!

முடிவு? ஐந்து குழைக்கட்டுகள் அன்று விலைபோகவில்லை.

விளைவு? ஐந்து குடும்பங்கள் அன்று பட்டினி!

மறுநாள் அந்த ஐந்து குழைக்காரிகளின் கூட்டாளிப் பெண்களுக்கும் விஷயம் தெரிந்து விட்டது. பலன்? அத்தனை பேரும் அன்று பட்டினி!

அத்தனை பேருக்கும் விசாரங்கள் வேறு; இரசனைகள் வேறு; உணர்வுகளை வேறு; ஆசைகள் வேறு. ஆனால்..... அவர்களெல்லோருக்கும் வயிறு ஒன்று; பசி ஒன்று.

பசி, இயக்கமாகிறது, இயக்க மூலதனமாகிறது; இயக்க சக்தியாகிறது.

∴ ∴ ∴

குழைக்கடையில் தரகர் காத்திருக்கிறார். கமக்காரர்கள் காத்திருக்கிறார்கள். குழைக்கட்டுகள் வருகின்றன. அவற்றின் சொந்தக்காரிகள் அவற்றுக்கெதிரில் வரிசையாக உட்கார்ந்திருக்கிறார்கள். தரகர் தனித்தனியாக விலை தீர்க்கமுயல்கிறார்.

''பொன்னியின் குழைக்கட்டை முதலில் விலை தீர்க்க வேணும்.''

ஒரு பெண் குரல் எழுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இல்லாவிட்டால் ஒருத்தரும் விக்கமாட்டோம்.''

''நாளேலையிருந்து ஆரும் இந்தச் சந்தைக்குக் குழை கொண்டர மாட்டோம்.''

பெண் குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன.

குழை வாங்க வந்த சிறுகமக்காரர்கள் தரகர் முருகேசபிள்ளையின் முகத்தைப் பார்த்தனர். முதல் நாளும் அவர்களுக்குக் குழை கிடைக்காத ஏமாற்றம்.

''முருகேசண்ணை... கோவத்தைப் பாராமல் தீர்த்து விடுங்கோ... பாவம், கொண்டு வந்த குழையை அதுகள் திருப்பிக் கொண்டு போறதே?...''

ஒரு கமக்காரர் பாவம் பார்க்கும் தோரணையில் பரிந்து பேசுகிறார்.

தரகர் மௌனியாயிருக்கிறார்.

''வாருங்கோ போவம்!..... நாளைக்கு அடுத்த சந்தைக்குப் போவம்.''

குழைக்கட்டுகளைத் தூக்கிக் கொண்டு அந்தப் பெண்கள் புறப்பட்டு விட்டார்கள்.

கமக்காரர்கள் திகைத்து நிற்கிறார்கள். இந்தக் குழைக் கடைக்குக் குழை வராவிட்டால், நாலு கட்டைக்கு அப்பாலிருக்கிற அடுத்த சந்தையிலிருந்து கொண்டுவர கூலி அதிகமாகும். அதிகமானால் - விளைச்சல் நஷ்டமானால்....வயிறு? பசி?

''தரகர் கிடக்கிறார். குழைக்காரிகளைக் கூப்பிடுங்கோ....''

ஓர் இளங்கமக்காரன் முதல் குரலெடுக்கிறான். வேறு; குரல்களும் சாதகமாக ஒலிக்கின்றன.

''பொன்னி! செல்லாச்சி! வாருங்கோ! எல்லாரும் திரும்பி வாருங்கோ.''

நாட்டாண்மைத் தரகர் நாவடங்கி நிற்கிறார்.

அத்தனை கமக்காரர். அவர்களுக்கு உணர்வுகள் வேறு இரசனைகள் வேறு; ஆனால் வயிறு ஒன்று; பசி ஒன்று.

பசி வந்து விடுமே என்ற பயத்தில் கட்டுண்டு அவர்கள் சேர்ந்து நிற்கிறார்கள்.

அந்தப் பயத்துக்குப் பயந்து, நாட்டாண்மைத் தரகர் நாடியொடுங்கி நிற்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்ணிமா நெசவுக்குப் போகிறாள்

அன்புமணி

இருபது வருடங்களும் முன், அந்தக் கிராமத்திலேயே உள்ள விரல்விட்டு எண்ணக்கூடிய இரண்டொரு கல்வீடுகளில் இதுவும் ஒன்றாகத்தான் தலை நிமிந்து நின்றது. ஏனைய வீடுகள் இரண்டறை மண் வீடுகளாகவும், ஒற்றையறை ஓலைக் குடிசை களாகவும், நிலத்தோடு பதிந்து நின்றன. அக்கிராமத்தில் ஏற்பட்ட திடீர் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க முடியாமல் பின்தங்கிவிட்டது இந்த வீடு.

''சாப்பூடு'' எனப்படும் பெண்களுக்கே உரிய வீட்டின் மூன்றாவது அறையிலிருந்து கடகடவென்ற தையல் மெஷின் இடைவிடாத சப்தம் கேட்டுக்கொண்டிருக்கிறது. கொஞ்சங்கூட இடையீடு இல்லாமல் அச்சப்தம் கேட்பதால் உள்ளே வேலை மும்முரமாக நடைபெறுகிறது என்று யூகிக்கலாம்.

திடீரென்று குசினிக்குள் இருந்து ஒரு குரல் கேட்கிறது.

''பூர்ணிமா.... பூர்ணிமா....''

''இதோ வந்தேன் அம்மா.'' தையல் மெஷினின் சப்தம் நிற்கிறது. உள்ளேயிருந்தும் ஒரு பெண், நெற்றியில் தவழும் தலை மயிரைப் புறங்கையால் ஒதுக்கிவிட்டுக் கொண்டே வருகிறாள்.

குத்துவிளக்கு ஒன்று, மினுக்காத நிலையில் வெளிப்படுவது போலிருக்கிறது அவள் தோற்றம்.

''எந்த நேரமும் தையல் மெஷினிலேயே உட்கார்ந்திருக் காமல் வீட்டு வேலையையும் கொஞ்சம் கவனியம்மா'' என்கிறாள் தாயார்.

''இந்த வேலையையும் கவனித்தால் தானே அம்மா அன் றாடம் சாப்பாட்டுக்கு வழி பிறக்கும்'' என்று பூர்ணிமா வாய் திறந்து சொல்லவில்லை. அவள் மனம் நினைத்துக் கொண்டது. தாய்க்கு உதவியாகக் குசினி வேலையில் ஈடுபடுகிறாள் அவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியானம் ஒரு மணிக்கு மேல் பள்ளிக்கூடம் சென்றிருந்த சசி, கலா, மாலா எல்லோரும் வீட்டுக்கு வந்து விடுகின்றனர். வீடு ஒரே கலகலப்பாக இருக்கிறது. மத்தியானத்திற்கும் இரவுக்குமாகத் தாயார் செய்து வைத்திருந்த சாப்பாட்டில் ஒரு பகுதியை. எல்லோரு மாகப் பகிர்ந்து உண்கின்றனர்.

மூன்று மணியளவில், எல்லோரும் விச்சிராந்தியாக உட் கார்ந்து பேசிக்கொண்டிருக்க, பூர்ணிமா மீண்டும் தையல் மெஷி னில் உட்கார்ந்து கொள்கிறாள்.

பத்து ஆண்டுகளுக்கு முன் கார்த்திகேசு மாஸ்டரின் குடும்பம் என்றால் அந்த ஊரிலேயே ஒரு தனி மதிப்பு இருந்தது. அவர் அப்போது ஒரு தலைமை ஆசிரியர். படிப்பிலும் பண்பிலும் உயர்ந்தவர் என்ற காரணத்தால் கிராமத்தில் நடக்கும் சகல நிகழ்ச்சி களிலும் முக்கியத்துவம் வகித்து வந்தார் அவர்.

கார்த்திகேசு மாஸ்டரின் மூத்த மகள் பூர்ணிமா. ஹெட் மாஸ்டரின் மகள் என்பதால் மட்டுமல்லாது ஊரில் பெரிய மனித ரின் குழந்தை என்ற வகையிலும் அவளுக்குப் பெருமை ஏற் பட்டிருந்தது. பள்ளிக்கூடத்திலும் சரி, வெளியிலும் சரி ஏனைய பெண்களுக்கு மத்தியில் தலை நிமிர்ந்து வாழ்ந்து வந்தாள் அவள்.

பூர்ணிமாவுக்கு இப்போதும் ஞாபகம் இருக்கிறது. சித்திரை வருடம் வந்துவிட்டால் தங்கள் வீட்டிலேயே மருந்து நீர் காய்ச்சி எல்லோருக்கும் வழங்குவார்கள். மருத்து நீர் வாங்கவரும் பிள்ளை கள், அவர்கள் வீட்டின் அலங்காரத்தையும், அவர்களுக்காக சித்திரைக்கு என்று எடுத்த புதிய உடுப்புக்களையும் திறந்த வாய் மூடாமல் நின்று பார்த்துக்கொண்டிருப்பார்கள். அப்போதெல்லாம் கார்த்திகேசு மாஸ்டர் கொழும்பில் இருந்தே தன் பிள்ளைகளுக்கு வேண்டிய உடுப்புக்களை எடுத்து வருவார்.

ஆனால் இன்றோ, சித்திரை வருடத்திற்கென அதே பிள்ளை களுக்குத் தான் உடை தைத்துக் கொடுத்து வயிறு கழுவவேண்டி இருக்கிறது.

வாழ்க்கை நிலையற்றது என்பது உண்மைதான். இருந் தாலும் பூர்ணிமாவின் வாழ்க்கையில் ஏற்பட்ட திடீர் மாற்றம் தாங்கிக்கொள்ள முடியாததாக இருந்தது.

இருந்தாற்போலிருந்து ஒரு நாள் மாரடைப்புக்குப் பலி யானார் கார்த்திகேசு மாஸ்டர். என்ன நடந்தது என்பதை உணர் வதற்கு முன்பே அவர்கள் ஏழைகளாகிவிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைக் கடலில் உல்லாசப் படகில் பிரயாணம் செய்து வந்த கார்த்திகேசு மாஸ்டரின் குடும்பம் இப்போது உடைந்து போன படகுத்துண்டு ஒன்றில் ஒட்டிக்கொண்டு மிகுதிப் பிரயாணத்தைத் தொடர வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

கார்த்திகேசு மாஸ்டர் வாங்கிய சில ஏக்கர் வயல் நிலங்களின் வருவாயிலிருந்து குடும்பத்தை தாங்கிக் கொள்ள முடிகிறது என்றாலும், அவ்வப்போது சரிந்து விழும் நிலை ஏற்படும் போது முட்டுக் கொடுத்து உதவுகிறது பூர்ணிமாவின் தையல் வேலையிலிருந்து கிடைக்கும் வருவாய்.

கார்த்திகேசு மாஸ்டரின் மறைவுக்குப் பின், பூர்ணிமா ஆசிரியை வேலை ஒன்று தேடிக்கொண்டால் குடும்பத்துக்கு ஆதரவாக இருக்கும் என்று சிலர் ஆலோசனை கூறினர். பூர்ணிமா எஸ்.எஸ்.சி. பாஸ் செய்திருந்தாள். அத்தோடு அவ்வூர் மிஷன் பள்ளிக்கூடத்திலேயே அப்போது ஒரு ஆசிரியை பதவி காலியாக இருந்தது. விரும்பியிருந்தால் பூர்ணிமாவுக்கே அப்பதவி மிக இலகுவாகக் கிடைத்திருக்கும். ஆனால் பூர்ணிமாவின் அம்மா அதை விரும்பவில்லை. சிறப்போடு வாழ்ந்த தன் மகள் வேலை செய்வது குடும்பத்திற்கு கௌரவமில்லை என்று கருதினாள்.

ஆண்டுகள் சில உருண்டபின், பூர்ணிமா வேலை பார்த்துத் தான் ஆகவேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. ஆனால் அப்போது வேலை கிடைப்பது முயற்கொம்பாகிவிட்டது. சில காலத்திற்குப் பின் மாணவ ஆசிரியர் என்ற பெயரில் நூறு ரூபா சம்பளத்துடன் எஸ்.எஸ்.சி. படித்தவர்களுக்கு ஆசிரியர் நியமனம் கிடைத்து வந்தது. பூர்ணிமா அதையும் விடவில்லை. கடந்த இரண்டு வருடங்களாக மாணவ ஆசிரியர் பரீட்சை எடுத்துக் கொண்டே வருகிறாள். ஆனாலும் என்ன காரணமோ அவளைவிடத் தகுதி குறைந்தவர்களுக்கு எல்லாம் நியமனம் கிடைத்தும் அவளுக்கு மட்டும் இன்னும் நியமனம் கிடைக்கவில்லை.

இறுதியில் பொழுதுபோக்காக பயின்று வந்த தையற் கலையே பூர்ணிமாவுக்குக் கைகொடுத்தது.

சட்டை ஒன்றைப் பூரணமாகத் தைத்து முடித்ததும் பூர்ணிமா "அப்பாடா" என்று முதுகை நிமிர்த்திக் கொண்டு எழுந்தாள். அதே சமயம் "புள்ள" என்று குரல் கொடுத்துக்கொண்டே உள்ளே வந்தாள் கண்டு மணி அக்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வா கண்டுமணி" என்று கூறிக்கொண்டே உள்ளேயிருந்து ஒரு பாயை எடுத்துவந்து போட்டாள், நல்லம்மா- பூர்ணிமாவின் தாயார். கூடவே வெற்றிலை வட்டாவும் வந்து விட்டது.

வெற்றிலையை வாயில் குதப்பிக்கொண்டே பேச்சைத் தொடர்ந்தாள் கண்டுமணி.

"என்ன புள்ள, எங்கட சட்டை முடிஞ்சிரிக்கா?"

"சட்டை தைத்து முடிந்துவிட்டது அக்கா, இனிப் பூப்போட வேணும். நாளைக்குக் கொடுத்துவிடுகிறேன்.

"வருசமும் நெருங்கி வருகுதே. புள்ளைக்கு இனி வேலை நெருக்கடியாகத்தான் இருக்குமாக்கும்?"

"ஓம் அக்கா"

இது வரை மௌனமாக இருந்த நல்லம்மா இப்போது பேச்சில் கலந்து கொண்டாள்.

"என்ன செய்யிறது கண்டுமணி, நல்ல பூவேலை சலாரும் குறைவென்று எல்லோரும் இங்குதான் வாறாங்க"

"வருவாங்கதானே. அதுசரி புள்ளையிர சோதனைப் பாடு எப்படி?"

"இந்த முறையும் எடுத்திருக்கிறாள் கண்டுமணி. ஆனா முடிவு வரல்ல. வாற ஐப்பசி மட்டுல தான் முடிவு வருமாம்."

"ஏன் புள்ள. இப்பல்லாம் நெசவுக்கெண்டு பொம்புளப் புள்ளையளெல்லாம் போகுதுகளே. ஒரு சேலை நெய்து கொடுத்தா பத்து ரூபா கிடைக்குமாம். சில புள்ளையள் ஒரு நாளில் பத்து ரூபா உழைச்சிடுதுகளாம்."

"நெசவுக்குப் போகலாம் தான் கண்டுமணி. ஆனா நெச வுக்குப் போற புள்ளையளப்பத்தி ஒரு மாதிரியாகக் கதைக்கிறாங்க. அதனால் தான் அதுக்கு நான் பூர்ணிமாவை அனுப்ப விரும்ப வில்லை."

"அதுகும் மெய்தான், புள்ள. மான மரியாதைக்குப் பயந்தது களுக்கு அந்த வேலை ஒத்துவராது தான்."

பேச்சுத் தொடர்ந்து சிறிது நேரத்துக்குப் பின் கண்டுமணி போய்விட்டாள். ஆனால் கண்டுமணி தட்டி விட்ட வீணைத்தந்தி நல்லம்மாவின் இதயத்தில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

"நெசவுக்குப் போவதால் அப்படி என்ன குடி மூழ்கி விடப் போகிறது? மற்றவர்களைப்பற்றி நமக்கென்ன? நமது பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்காய்ப் போய் ஒழுங்காய் வந்தால் சரிதானே, ம். விதி இருந்து ஒரு ஐயாயிரம் சேர்த்துவிட முடியுமானால் கனகசபையையே பூர்ணிமாவுக்கு மாப்பிள்ளையாக்கிவிடலாம். நல்லம்மாவின் மனதில் சபலம் ஆசைக்குத் தூபம் போட்டது.

கனசபை, கார்த்திகேசு மாஸ்டரிடம் படித்த பையன், அவரிடம் நிறைய மரியாதை கொண்டவன். கார்த்திகேசு மாஸ்டரின் மனதிலும் அவனை மருமகனாக்கிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. தந்தையின் எண்ணம் பூர்ணிமாவுக்குத் தெரியாவிட்டாலும் கனகசபையின் அடக்கமான பண்பு அவளை மிகவும் கவர்ந்திருந்தது. எல்லாம் சுலபமாக முடிந்திருக்கும். அதற்குள் தான் பாழும் யமன் கார்த்திகேசு மாஸ்டரைக் கொண்டு போய்விட்டானே.

கனகசபை ஆசிரியர் பயிற்சியை முடித்துக் கொண்டு பயிற்றப்பட்ட ஆசிரியனாக வெளிவந்ததும் கல்யாண மார்க்கெட்டில் அவனுடைய விலை கிடுகிடுவென்று ஏறி விட்டது.

கனகசபையைப் பொறுத்தவரை அவன் மனம் பூர்ணிமாவை வெகுவாக விரும்பியது. சீதனம் எதுவும் இல்லாமலே அவன் பூர்ணிமாவைக் கைப்பிடிக்க விரும்பினான். ஆனால் கனகசபையின் பெற்றோர்தான் வீடு வளவு, காணியுடன். கைரொக்கமும் தரவேண்டும் என்று விடாப் பிடியாக இருந்தனர். பூர்ணிமாவுக்கு வீடு வளவு இருந்தது. காணி இருந்தது. கைரொக்கம்தான் இருக்கவில்லை. நெசவுத் தொழில் அதற்கு வழிகாட்டுகிறதா?

தாயும் மகளும் இரவு முழுக்க இந்தப் பிரச்சினையைப் போட்டு அலசினர். வேலையே பார்ப்பதில்லை என்றிருந்த பூர்ணிமா இப்போது தையல் வேலை செய்கிறாள். நெசவு வேலை அதை விட எந்தவகையில் மட்டம்? வேலை பார்த்துத் தான் ஆகவேண்டும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. தையலாக இருந்தால் என்ன? நெசவு வேலையாக இருந்தால் என்ன?

பூர்ணிமா நெசவுக்குப் போகத் தொடங்கிவிட்டாள்.

இஸ்மாயில் மரைக்காரின் நெசவு நிலையத்தில் பேச்சும் சிரிப்பும் கைத்தறிகளின் சத்தத்தையும் மீறிக்கொண்டு வெளியே கேட்டுக்கொண்டிருந்தது. இரண்டு பெண்கள் சேர்ந்தாலே பேச்சுக்குக் குறைவிருக்காது. பதின்மூன்று பெண்கள் ஒன்றாகச் சேர்ந்திருந்தால் கேட்கவாவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுக்கும் சிரிப்புக்கும் மத்தியில் வேலை மந்தமாக ஊர்ந்து கொண்டிருந்தது. இருந்தாலும் அந்த நெசவு நிலையத்துக்குப் பொறுப்பாக இருந்த அப்பாவி நெசவு ஆசிரியர் அவர்களுடைய பேச்சை நிறுத்த வழி தெரியாமல் சிவனே என்று தன் காரியத்தைக் கவனித்துக்கொண்டு இருந்தார்.

''அடியே, புடியே, அவளே, இவளே'' என்ற வார்த்தைப் பிரயோகங்கள் எல்லாம், மிகத் தாராளமாக உபயோகப்படுத்தப் பட்டன.

பூர்ணிமா இந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்ளாமல் தன் வேலையிலேயே கண்ணாக ஒரு தறியில் நெசவு செய்து கொண்டி ருந்தாள். அவள் அப்படி அமைதியாக வேலை செய்வதால் நெசவு ஆசிரியருக்கு அவள் மேல் மிகுந்த மதிப்பு ஏற்பட்டிருந்தது. இதை எப்படியோ மோப்பம் பிடித்து விட்ட வாயாடிப் பெண்கள் நெசவு ஆசிரியரையும், பூர்ணிமாவையும் சேர்த்து வம்பளக்கத் தொடங்கி விட்டார்கள். ஆனால் பூர்ணிமா இதைக் கொஞ்சமும் பொருட் படுத்தவில்லை.

பூர்ணிமா நெசவு நிலையத்தில் சேர்ந்த சில தினங்களுக் குள்ளேயே அங்கு நடைபெறும் பல்வேறு காரியங்களையும் கவனித்து அவர்களுடன் ஒட்டாமல் ஒதுங்கிக் கொண்டாள்.

நெசவுக்கு வரும் பெண்கள் அத்தனைபேரும் குடும்பத்தின் ஏழ்மை நிலையை முன்னிட்டே வருகின்றனர் என்பது எல்லோ ருக்கும் தெரிந்த விஷயம். இப்படி இருந்தும் சில பெண்கள் தங்களை நாகரிகச் சிட்டுகளாக ''மேக்கப்'' செய்து கொண்டு வந்தனர்.

நெசவு நிலையத்திற்குப் புதிதாக வரும் பெண்கள் வரும் போது குனிந்த தலை நிமிராத பெண்களாக வருவார்கள். ஆனால் சில நாட்களிலே அவர்களையும் தங்களைப் போன்ற வாயாடிப் பெண்களாக மாற்றி விடுவார்கள் மற்றவர்கள்.

பூர்ணிமாவின் சுபாவத்திற்கு இந்த இடம் ஒத்துவரவில்லை. இருந்தாலும் குடும்ப நிலையை முன்னிட்டு அவள் அங்கே வேலை செய்து வந்தாள்.

பூர்ணிமா நெசவு நிலையத்தில் சேர்ந்து இரண்டு வருடங்கள் ஓடி மறைந்துவிட்டன. ஓரளவு பணமும் கையில் சேர்ந்துவிட்டது. கனகசபையின் பெற்றோரிடம் இனித்தைரியமாகப் போய்க் கேட்கலாம் என்று நல்லம்மா சொல்லிக்கொண்டு இருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஒரு நல்ல நாளாக இருப்பதால் அன்றே கனகசபையின் வீட்டுக்குப்போய் வரன் கேட்பதென்று தீர்மானமாயிற்று. கனகசபை பூர்ணிமாவை மனப்பூர்வமாக விரும்பியதால், நல்லபடியாகவே எல்லாம் முடியும் என்று அவள் நம்பினாள்.

பூர்ணிமாவுக்கும் வயது இருபத்தெட்டுக்கு மேலாகி விட்டது. இனிமேலும் அவள் கன்னியாக இருப்பதற்கு இடம் வைக்க மாட்டார் இறைவன். அவளுடைய நல்ல குணத்திற்கு கனக சபையே அவளுக்குக் கணவனாகக் கிடைப்பான்.

நல்லம்மாவின் தாய் உள்ளம் என்னவெல்லாமோ கனவு கண்டது.

அன்று வெள்ளிக்கிழமை. நெசவு முடிந்து வாயாடிப் பெண் கள் எல்லோரும் ''காச் மூச்'' என்று சத்தம் போட்டுக்கொண்டு வெளியே வந்தனர்.

தெருவில் போகும் போது கூட இவர்கள் அட்டகாசம் ஓய்வதில்லை. யாராவது இவர்களைப் பார்த்துவிட்டால், இவர் களுக்குக் குஷி பிறந்துவிடும். பேச்சும் சிரிப்பும் இன்னும் அதிக மாகக் கேட்கும்.

இந்தக் கூட்டத்தோடு சேர்ந்து போக வேண்டிய இருக்கிறதே என்று தன்னை நொந்தபடி வந்து கொண்டிருந்தாள் பூர்ணிமா.

பஸ் நிலையத்திற்கு வந்து சேர்ந்ததும் மீண்டும் கலகலப்பு. எல்லோரும் ''கிளு கிளு'' த்துக் கொண்டே பஸ்ஸில் கும்பலாக ஏறி முன் சீட்டில் உட்கார்ந்துகொண்டனர். பூர்ணிமாவும் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டாள்.

பஸ் புறப்பட இன்னும் சில நிமிடங்கள் இருந்தன. அதற்குள் ட்ரைவர்களும் கண்டக்டர்களும் கூட சம்பாஷணையில் கலந்து கொண்டனர். பூர்ணிமாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. இத்தனை பேரும் இவர்களுக்கு நண்பர்களா?

பூர்ணிமா வீட்டிற்கு வந்ததும், அவள் தாயார் கனகசபை யின் வீட்டுக்குப் போக ஆயத்தமானாள். இரவு குறிக்கப்பட்ட சுபநேரத்தில் நல்லம்மா இறைவனை நன்கு வேண்டிக் கொண்டு புறப்பட்டாள்.

நல்லம்மா திரும்பும்பவரை பூர்ணிமாவுக்கு இருப்புக் கொள்ள வில்லை. இனியாவது இறைவன் தனக்கு நிம்மதியான வாழ்வைக் கொடுக்கமாட்டானா இனியாவது மனதுக்குப் பிடிக்காத இடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை செய்யும் துர்ப்பாக்கியம் தீராதா என்றெல்லாம் அவள் சிந்தனை விரிந்தது.

இரவு ஒன்பது மணியளவில் நல்லம்மா திரும்பி வந்தாள். ஆனால் அவள் கொண்டுவந்த செய்தி...?

''பூர்ணிமா, கனகசபையில் பெற்றோர் திருமணத்திற்குச் சம்மதித்துவிட்டனர். ஆனால் கனகசபைதான் ஒரே பிடியாக மறுத்துவிட்டான், எவ்வளவு தங்கமான பிள்ளை எப்படி மாறி விட்டான் பார்?

பூர்ணிமாவுக்கு மயக்கம் வரும்போல் இருந்தது. வெளியே சொல்லாவிட்டாலும் பூர்ணிமா அவனை மனமார நேசித்தாள், அவனும் அப்படியே தன்னை விரும்பினான் என்பதும் அவளுக் குத் தெரியும். ஆனால் இப்போது அவள் காதுகளில் விழுவது என்ன?

கிணற்றுக்குள் இருந்து பேசுவது போல் பூர்ணிமா கேட்டாள் ''அவர் மறுப்பதற்குக் காரணம் ஏதாவது தெரிந்ததாம்மா?''

''அதைக் கேட்காதே மகளே. அபாண்டம். நீ நடத்தை கெட்டவளாம். நெசவு ஆசிரியருக்கும் உனக்கும் ஏதோ தொடர் பாம். நெசவுப் பெண்களுடன் சேர்ந்து கெட்டுப் போய்விட்டா யாம். கண்ட கண்ட வாலிபர்களுடன் பேசுவதை இன்று அவனே பஸ் நிலையத்தில் கண்டானாம்.''

''போதும் அம்மா போதும். நம் விதி அப்படி இருக்கிறது. இதில் யாரையும் நோவதற்கு இடமில்லை.''

''வருத்தப்படாதே மகள். இது போனால் இன்னொரு இடம். நம்மிடந்தான் இப்போது தேவையான பணம் இருக் கிறதே.''

''வேண்டாம் அம்மா. அந்தப் பணம் தான் இப்போது என் வாழ்வைப் பாழடித்திருக்கிறது. இனி அந்தப் பணத்தாலும் என் வாழ்வை மீட்க முடியாது''.

பூர்ணிமா சொன்னது நல்லம்மாவுக்குப் புரியவில்லை.

பூர்ணிமா இன்னமும் நெசவுக்குப் போய்க்கொண்டே இருக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவம்

அ.முத்துலிங்கம்

'கந்தர் மடம் செல்லம்மா'

'அஞ்சு'

'கொட்டடி ஆச்சிப்பிள்ளை'

'அஞ்சு'

'கொக்குவில் வேலாயுதபிள்ளை'

'பத்து'

'சீட்டுக்கார நல்லாம்பிப் பகுதி'

'இருபது'

'சங்கக்கடை ரத்தினம் பெண்சாதி'

ஒவ்வொருவரும் வந்து காசைப் போடப்போட, சின்னத் துரை கொப்பியில் எழுதிக் கொண்டே வந்தார். துரையப்பாதான் பெயர்களை உரக்கச் சொல்லிக் கொண்டிருந்தார்.

குனிந்த தலை நிமிராமல், வெற்றிலைச் சுருளைக் கையிலே ஏந்தியபடி நின்று கொண்டிருந்தாள் அவள். அந்தச் சின்னஞ்சிறு உடலை எட்டுமுழச் சேலை ஒன்று ஈவு இரக்கமின்றிச் சுற்றிக் கொண்டு கிடந்தது.

சாமர்த்தியப்பட்ட பெண்ணுக்கு இயல்பாகவே ஏற்படும் புது நாணம் முகத்தைப்பூச, கவிதை நிழலாடும் கண்ளால் சிரமத்துடன் அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

பாவமாக இருந்தது.

சிறிய சிறிய கனவுகளுக்கெல்லாம் உயிர்கொடுக்க முனைந்து நிற்கும் அவள் முகத்தில் வியர்வை முத்து முத்தாகக் கோத்து நின்றது.

''சரி...சரி...சின்னத்தங்கச்சியை உள்ளே கூட்டிக் கொண்டு போங்கோ'' - வெள்ளித் தட்டத்தில் கிடந்த காசை எண்ணி அடுக்கியபடியே குரல் கொடுத்தார் சின்னத்துரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று கொண்டிருந்த அந்தப் பெண் குழந்தையின் சிறிய மார்பு மகிழ்ச்சியால் ஏறி இறங்கியது.

ராசாத்தி இன்னமும் அங்கேதான் நின்றாள். அந்தக் குசினிக் கதவின் பக்கத்தில், ஆடாமல் அசையாமல், வைத்த கண் வைத்த படி, இவ்வளவு நேரமாக அவள் நின்று கொண்டிருந்தாள்.

மனத்தின் வேதனைக் குழம்பில் அழுந்தி அழுந்தி, ஆற்றா மையுடன் வெளிவந்தது, ஒரு சூடான பெருமூச்சு.

குனிந்து, பொலிவிழந்து கிடக்கும் தன் அங்கங்களை ஒரு முறை பார்த்துக் கொண்டாள். மறுபடியும் புதுச்சேலை சரசரக்க அசைந்து செல்லும் தன் தங்கையைப் பார்த்தாள்.

எங்கோ, தூரத்தில், முன்பு எப்போதோ கேட்ட சோகநாதம், விரிந்து விரிந்து, கற்பனைக் கெட்டாத தூரம் வியாபித்து, தன்னை விழுங்குவது போலவும், அதனுள்ளே தான் ஒடுங்கி ஒடுங்கித் துரும்பளவாகி அமிழ்ந்து விடுவது போலவும், அவளுக்குப் பட்டது.

அந்த நினைவு அவள் மனத்தை என்னவோ செய்தது.....

எப்பிடி இது நடக்கும்?

அந்தச் சின்னஞ் சிறு உள்ளத்தை இந்தக் கேள்வி தான் நிறைந்து நின்று இம்சைப்படுத்தியது.

எப்பிடி நடக்கக் கூடும்?

நான் தானே..... அவளுடைய அக்கா..... நான்..... நான்தானே வயதுக்கு மூத்தவள்.....அப்ப.....நான் இன்னமும் ஏன் இப்படி.....இருக்கிறன்.....எனக்கு..... ஒரு வேளை..... .... ஒரு வேளை... .... ஏன்... ...

அறிவுக்கும், சிந்தனைக்கும் அப்பாற்பட்ட, கற்பனையின் பிடிக்குள் வளையாத, அகப்படாத ஒரு பொருளுக்குக் காரணம் கண்டு பிடிக்க முயன்றது அந்தப் பிஞ்சு உள்ளம்.

மெலிந்திருந்த தன் கைகளை முகத்தின் முன்னே நீட்டி ஒரு முறை பார்த்துக் கொண்டாள் ராசாத்தி. ஒட்டியிருக்கும் தன் மார்புச் சட்டை மீது நூல்போல ஊர்ந்து கிடக்கும் பின்னலைப் பார்த்தாள். மெல்லிய உரோமம் படர்ந்து வெளிறிக் கிடக்கும் கால்களை நோக்கினாள்.

அவளுக்குத் தன்மீதே அளவற்ற வெறுப்புப் பீறிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்துவிளக்கில், எண்ணெய் வற்றித் திரி மாத்திரம் எரியும் மணம் அடங்கலும் பரவியது.

அப்படியே தலையை மயக்கிக் கொண்டு வந்தது சுவரிலே ஆத்திரம் தீரத் தலையை முட்டி, இரத்தம் கக்கிச் செத்து விட லாமோ என்று கூட அவள் மனம் எண்ணியது.

எவ்வளவுதான் முயன்றும், கண்களில் பொங்கும் நீரை மாத்திரம் அவளால் அடக்க முடியவில்லை.

ஃஃ ஃஃ ஃஃ

கனகம்மா, ஆலாத்தித் தட்டத்தை எடுத்துக் கொண்டு வீட் டுக்குள் விரைந்தாள்; போகும் போது நின்று, ராசாத்தியைப் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே உள்ளே போனாள்.

'என்னத்துக்கு என்னை எல்லாரும் இப்பிடிப் பார்க்கினம்; ஏன் என்னைப் பார்த்துவிட்டு நாறிக் கிடக்கிற பிணத்தைப் பார்க் கிறது போல முகத்தைத் திருப்பினம்?

அம்மாதான் இப்படி என்றால் அப்பு.... .....ம்

'என்னைப் பெற்ற அம்மாவுக்கே என்னை விளங்கவில்லை என்றால் அவர்.....அவருக்கு என் வேதனை என்ன தெரியப் போகுது'

''எங்கை உன்ரை மூத்தவள்?'' குஞ்சியாச்சிதான் விசாரித் தாள்.

''உங்கினைதான் நிண்டுது'' - விரக்தியில் தோய்ந்து புறப் பட்டது அந்தப் பதில்.

ராசாத்தியின் கைகள் கதவை இறுக்கிப் பிடித்தன.

ஃஃ ஃஃ ஃஃ

சின்னத் தங்கச்சி இராமநாதன் கல்லூரியில் சேர்ந்து விட் டாள். அவள் இனிமேல் பையன்கள் படிக்கும் பள்ளியில் படிக்கக் கூடாதாம். ஆனால், ராசாத்தியின் பள்ளியை மாற்றத் தேவை யில்லை. அவளுடைய படிப்பைத்தான் எப்போதோ நிறுத்தியாகி விட்டதே.

சின்னத் தங்கச்சி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வீட்டுக்கு வரும் போதெல்லாம் அம்மா பம்பரம் போல் சுழல்வாள்; ராசாத்தி தான் ஓடி ஆடி, முழு வேலையையும் பார்ப்பாள் - சந்தோஷமாகத் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதாவது, சின்னத் தங்கச்சி, குளித்து விட்டு ஈரச் சேலை தடக்க குனிந்து வரும் போது மாத்திரம், ராசாத்தி தன்னை யறியாமலே தன்னுடைய மேனியையும் ஒரு முறை பார்த்துக் கொள்வாள்.

அப்போதெல்லாம் ஆழ்ந்த ஒரு பெருமூச்சு அவள் மனக் கிடங்கின் மறைவில் இருந்து வெளிவரும்.

∴ ∴ ∴

ஞாயிற்றுக்கிழமை பின்னேரமே சின்னதங்கச்சி விடுதிக்குத் திரும்பிவிட வேண்டும். வழக்கமாக அவளுடைய தாயார்தான் கொண்டு போய் அவளை பஸ்ஸிலே பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி விட்டு வருவாள். ஆனால், அன்று தாயாருக்கு கையிலே வேலை கிடந்தது. துணைக்கு ராசாத்தியை அனுப்பி வைத்தாள்.

மக்கியும் புழுதியும் நிறைந்த ஒழுங்கையில் இருவரும் பக்கத் திற்குப் பக்கமாக நடந்து கொண்டிருந்தார்கள். ராசாத்தியின் கையில் மட்டும் சின்னத்தங்கச்சியின் 'சூட்கேஸ்' கனத்துக் கொண் டிருந்தது.

சனசமூக நிலையத்தை ஒட்டியிருந்த கைப்பந்தாட்ட மைதா னத்தைக் கடந்த போது ஆயிரம் இளம் கண்கள் தங்களையே உற்றுப் பார்ப்பதை ராசாத்தி உணர்ந்தாள்.

அவளுக்குத் திகைப்பாக இருந்தது.

இப்படியான ஓர் அநுபவம் அவளுக்கு அதற்கு முன் ஏற் பட்டது கிடையாது; திரும்பித் தன் தங்கையைப் பார்த்தாள். ஒன்றுக்குமே பணியாத மிடுக்குடனும், அலட்சிய பாவத்துடனும், நிலத்தின் மேல் கண்களைப் பதித்தபடியே, அவள் நடந்து கொண் டிருந்தாள்.

மறுபடியும் நிமிர்ந்து பார்த்தாள். அத்தனை கண்களும் - அவ்வளவும் - அவளைத்தான், சின்னத் தங்கச்சியைத்தான், பார்த்துக் கொண்டிருந்தன.

மறுபடியும் தனியே அவள் திரும்பி வந்தபோது, எவருமே பார்த்ததாக, தற்செயலாகக் கண்ணிலே பட்டதாகக் காட்டிக் கொள்ளக்கூட, முன்வரவில்லை.

அவளுக்குத் திடீரென்று எல்லாமே விளங்கியது.

சங்கக் கடையில் கூப்பன் எடுப்பதற்கு அம்மா ராசாத்தி யைத்தான் அனுப்புவாள்; சின்னதங்கச்சியைத் தட்டித் தவறி ஒரு முறையாவது அனுப்பியது ஞாபகம் அவளுக்கு இல்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கூப்பன் கடகத்தைத் தலையிலே வைத்துக் கொண்டு, வாயிலே இரண்டு அரிசியை மென்று கொண்டு, பேர் பெற்ற கொக்குவில் புழுதியைக் கால்களினால் அளந்தபடி அவள் போய் வந்த இத்தனை நாட்களிலும் ஒருமுறையாவது அவளுக்கு இந்த மாதிரி நூதனமான அநுபவம் ஏற்பட்டது கிடையாது.

எண்ணெய் படிந்த அந்தக் தலையணையில் முகத்தைப் புதைத்தபடி விம்மி விம்மி அழுதாள்.

என்னைப் பார்க்கிறதற்கு அவ்வளவு அருவருப்பாயிருக்கா? பார்த்தவுடனேயே திரும்புற அளவுக்கு நான் வடிவில்லையா?

சின்னக்கா சொன்னவதானே என்ரை முகவெட்டும், சின்னத் தங்கச்சியின்ரை முகவெட்டும் ஒரே மாதிரி எண்டு, சின்னத் தங்கச்சி அப்பிடி என்ன திறம்?

பெண்மை அவளைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே இருந்தது.

ஃ ஃ ஃ

அன்று கனகு வந்திருந்தான்! எப்பொழுதுமே அவன் அப்படித்தான்; வந்தவுடனேயே போக வேண்டுமென்று துடிப்பான்.

ராசாத்திக்கு அவனிலே எப்போதுமே கொஞ்சம் விருப்பம்.

அவசர அவசரமாய் அடுப்பை மூட்டி, கோப்பி போட்டுக் கொண்டு வந்தாள். அவன் மௌனமாக அதை வாங்கிக் குடித்தான்!

ஆனால், கண்கள் மாத்திரம் அடிக்கடி, உள்ளே சாய்மனையில் சாய்ந்து ஏதோ படித்துக்கொண்டிருந்த சின்னத் தங்கச்சியின் பக்கமே திரும்பின.

கோப்பி குடித்து முடித்ததுதான் தாமதம், அவன் எழும்பி நின்று போகவேண்டும் என்றான்.

''சின்னத் தங்கச்சி'' - அம்மாதான் கூப்பிட்டாள்.

''வாற்றன் அம்மா''

''சின்னத் தங்கச்சி''

அவள் வரவேயில்லை!

''ராசாத்தி! சின்னத் தங்கச்சி ஏதோ படிக்கிறாள் போலை கிடக்கு. கோடியிலே இரண்டு மாதாளம்பழம் உன்றை மச்சானுக்கு ஆஞ்சிகுடு பாப்பம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளிக்கொண்டு ஓடினாள் ராசாத்தி; நாலே நிமிடத்தில் பருத்துச் சிவந்திருந்த இரண்டு பழத்தை ஆய்ந்து கொண்டு வந்து, மச்சானிடம் தானே நேரிலே நீட்டினாள்.

ஓடிய களைப்பில் அவளுக்கு மேல் மூச்சு, கீழ்மூச்சு வாங்கியது.

சைக்கிளிலே ஏறியிருந்த கனகு ''மாமி போட்டு வாறன்'' என்றான்; அப்படியே உள்ளே எட்டிப் பார்த்து மற்றுமொருமுறை ''வாறன்'' என்று கையை ஆட்டினான்.

சின்னத் தங்கச்சியும் சாய்மனையில் இருந்தவாறே சிரித்த படி கையை அசைத்தாள்.

கரடும் முரடுமான பூவரசங் கப்புடன் ஓட்டிக் கொண்டு நின்ற ராசாத்தியின் கண்களுக்குக் கனகுவின் உருவம் மங்கலாக - வெறும் மங்கலாகத்தான் - தெரிந்தது.

ஃ ஃ ஃ

நடுமத்தியான வெயில். ராசாத்தியின் நடையில் வேகத்திலும் பார்க்க அவளுடைய நெஞ்சந்தான் 'பக்பக்'கென அடித்துக் கொண்டது. பயமும் மகிழ்ச்சியும் போட்டி போட்டு அவள் நடுக்கத்தை அதிகரித்தன. கால் வேகும் சுடு மணலில் அவள் ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்த போது திருப்பித் திருப்பி ஒரே ஒரு முகம்தான் அவள் மனக்கண் முன்னே சுழன்றுகொண்டிருந்தது.

என்னத்துக்கு தேகம் இப்பிடி இரைக்குது; ஏன் என்ரை கை இப்பிடி நடுங்குது?

சற்று நின்று, தன்னை ஆறுதல்படுத்தி, திரும்பிப் பார்த்தாள். தூரத்தே, ஒழுங்கைத் திருப்பத்தில், சங்கக் கடையின் ஒரு பகுதி மாத்திரம் தெரிந்தது.

சற்று முன்பு, கூப்பன் கடகத்தைத் தலையில் வைத்துக் கொண்டு முடிந்துவிட்ட மார்புச் சட்டையுடனும், ஊத்தைப் பாவாடையுடனும், அவள் புறப்பட்ட போது, இப்படி ஒன்று நடக்கும் என்று, அவள் கனவிலும் நினைக்கவில்லை.

அதை நினைக்கவே அவளுக்கு என்னவோ செய்தது. - நம்பவே முடியவில்லை; ஒருவேளை இதுவெல்லாமே ஒரு கனவாக இருக்குமோ?

- கனவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கைகள் அவளையறியாமலே போய்க் கன்னத்தைத் தொட்டன. கையிலே இன்னமும் எச்சில் பட்டது போல் குளிர்ந்தது.

அவளுக்கே கூச்சமாக இருந்தது.

ச்சீ.....என்ன மாதிரி இருந்தது..... வெக்கமில்லை..... "ராசாத்தி, நீ என்னவடிவாய்!" இருக்கிறாய் - அவளுடைய வாழ்க்கை யிலேயே இப்படியான ஒன்றை அவள் கேட்டதில்லை; அப்படிப் பட்ட ஒரு புகழ்ச்சியைக் கேட்டது அது தான் முதற் தடவை.

நான் கூட வடிவாக இருப்பேனா?

அவளால் நம்பவே முடியவில்லை.

அரிசி அளந்து அளந்து தவிடு படிந்த அந்தக் கையினால் அவளுடைய தலையைத் தடவியபடியே அவன் சொன்னான். "ராசு..... நீ.....ஏன் உன்ரை தலையை இழுத்து ரட்டைப் பின்னல் போடக் கூடாது.... உனக்கு எவ்வளவு வடிவாய் இருக்கும்... தெரியுமே!"

அவளுக்கு வெட்கம் கவிந்தது.

குனிந்த அவள் கண்களில் மார்புச் சட்டை மீது குத்தியிருக் கும் புது ஊசி இரண்டும் தான் தட்டுப்பட்டன.

இரத்தினண்ணைதான் அதைக் குத்திவிட்டார்.

"ராசு... உனக்கு சட்டையை முடிஞ்சுவிட வெட்கமில் லையா?"

அவளுக்கு எவ்வளவு கூச்சமாக இருந்தது.

'ரத்தினண்ணை'

அதில் தான் என்ன இனிமை!

ஆட்கள் இல்லாத இடமாகப் பார்த்து, தனிமையில் அந்தப் பெயரை இன்னொருமுறை, உரக்க, ஆசைதீரச் சொல்லிப்பார்க்க வேண்டும் போலத் தோன்றியது.

- வீட்டிலே இன்றைக்கு மண்ணென்னை முடிந்திருக்குமா? முடிந்தால் இன்னொரு முறை கடைக்குப் போகலாம்!

"ராசு; பேணியைக் கொண்டுவா... இந்த அரிசியை அளந்து பாப்பம்."

பேணியைத் தேடிப் பார்த்துவிட்டு அம்மா... ரத்தினண் ணையை காணேல்லை என்றாள் ராசாத்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐமிச்சத்தோடு தாயார் அவளைத் திரும்பிப் பார்த்த போது, அவள், வெகு அக்கறையாக, கண்ணாடியின் முன்பு நின்று தலைக்கு இரட்டைப் பின்னல் போட்டுக் கொண்டிருந்தாள்.

இரவு.

சுவர் ஓரமாகப் போட்டிருந்த ஓலைப் பாயில் புரண்டு கொண்டிருந்தாள் ராசாத்தி.

ஒரு கணம் கனவு போலப்பட்டது; மறுகணம் யுகயுகாந் திரத்து நனவாகவும் தோன்றியது.

...அகன்ற மார்பு- அதை மறைத்து அடர்த்தியான உரோமம் - பச்சை குத்திய கைகள் - வெற்றிலைச் சிவப்பு உதட்டில் கூடிய சிரிப்பு - சுருள்சுருளான கேசம்....

'ரத்தினண்ணை'

அடிவயிற்றில் இருந்து உணர்ச்சிக் குழம்பு ஏறி மார்பை நிறைத்தது - என்னவென்று தெரியாத ஏதோ ஓர் உணர்ச்சி தேகம் அடங்கலும் கிளுகிளுப்பை உண்டு பண்ணியது.

இரத்தினண்ணையின் மார்பில் அவள் படுத்துக் கிடக்கிறாள். அதில் தான் எத்தனை சுகம்.

''ராசு... எங்கை என்னைப்பார்.... நீ என்ன வடிவாய் இருக்கிறாய்.''

மறுகணம் இனம் தெரியாத பீதி இதயத்தைக் கௌவியது.

உணர்ச்சிக் கொப்புளங்கள் எல்லாம் ஒன்றையொன்று விழுங்கி அவளை மேலே தள்ளின.

தேகமெல்லாம் மெல்லச் சிலிர்த்தது; குளிர்ந்தது. அவள் மேலே மேலே போய்க்கொண்டிருந்தாள்.

ஃஃ ஃஃ ஃஃ

தாயின் முகத்தில் தான் எத்தனை மகிழ்ச்சி. எவ்வளவு பெருமை. எங்கிருந்து தான் ராசாத்தியின் முகத்தில் இந்தத் திடீர்க் கவர்ச்சி பிறந்ததோ.

வெற்றிலைச் சுருளை ஏந்தியவாறு குனிந்தபடி அவள் நின்று கொண்டிருந்தாள்.

''நாச்சிமாகோவில் அன்னப்பிள்ளை''

''பத்து''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆனைப்பந்தியடி சுப்பிரமணியம் பகுதி''

''பதினைஞ்சு''

''சங்கக்கடை ரத்தினம் பெண்சாதி''

''.....''

உள்ளம் ஒரு கணம் பொங்கி அவிழ்ந்தது.

தூரத்தில், நிலைப்படிக்கு அருகில் சிரித்தபடியே கதைத்துக் கொண்டு அவன் நிற்கிறான் என்றது உள்ளுணர்ச்சி.

''பார்க்க வேண்டும் - ஒரு முறை ஆசை தீரப் பார்க்க வேண்டும்'' என்று உந்தித் தள்ளியது மனம்.

மிக்க சிரமத்துடன் கனத்துப்போன இமைகளைத் தூக்கி வைத்து நிறுத்த, அவள் எவ்வளவோ முயன்று பார்த்தாள்.

இருந்தும் முடியவில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மன் அருள்

அருள் செல்வநாயகம்

மாரிகாலம்; மார்கழி மாதம்; வழமைபோல் அடை மழை. ஆனால், மழை சோனாவாரியாகக் கொட்டிக் கொண்டே இருந்தது, கிழக்கு ஈழமே மாரிகாலத்தில் வழமை போலக் காணாத பெரு மழை. அமைதியாக உறங்கிக் கொண்டிருந்த மட்டக்களப்பு வாவியிலே ஒரு பரபரப்பு. முப்பது கல் தொலைவு நீண்டு பரந்த மட்டக்களப்பு வாவியின் நீர் மட்டம் படிப்படியாக உயர்ந்து கொண்டேயிருந்தது. அதன் பயனாக மட்டக்களப்பு வாவியிலே சுரந்த மழை வெள்ள நீர் தடம் புரண்டு ஓடலாயிற்று.

மட்டக்களப்பு வாவிக்கரையிலே இருந்த மாரி அம்மன் கோயிலைத் தொட்டாற்போல் வெள்ளநீர் ஓடலாயிற்று. மக்கள் துயர்தீர்க்கும் மாரி அம்மன், மண்டூர்க் கோட்டைமுனைக் கிராமத்துக் கரையிலே தடம்புரண்டோடும் வெள்ளத்தைப் பார்த்தவாறு அமைதியாகவே கொலுவீற்றிருந்தாள்.

வெள்ளம் மாரி அம்மன் கோயிலினுள் புகுந்துவிடுமோ என்ற அச்சம் அர்ச்சகருக்கு. ஆகவே, அவசரம் அவசரமாகப் பூசையை முடித்துக்கொண்டு பிரசாதத் தட்டுடன் வெளி மண்டபத்தினுக்கு வந்தார்.

மழை சோனாமாரியாகப் பெய்து கொண்டிருந்தது. மட்டக்களப்பு வாவியிலே வெள்ளம் பெருக்கெடுத்துப் பரவுகிறது. எங்கும் வெள்ள நீர் புகுந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் யார்தான் இப்பொழுது கோயிலுக்கு வரப்போகிறார்களென்ற நினைப்பு அர்ச்சகருக்கு. இருந்தாலும், முதியவரான நாகலிங்கம் மட்டும் கண்ணீர் சொரியத் தன்னை மறந்து வழிபட்டுக் கொண்டு நின்றார்.

அர்ச்சகர் வழமையாகத் தினமும் காணும் காட்சிதான் அது. எத்தனையோ ஆண்டுகளாக முதியவர் நாகலிங்கத்தை நாள் தவறாமல் மாரிஅம்மன் சன்னதியில் பார்த்து வருகிறார். அர்ச்சகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம் போல் அவருக்குப் பக்கத்திலே பிரசாரத்தை வைத்துவிட்டு உட்கோயில் கதவைப் பூட்டிக் கொண்டு வெளியேறினார். மாரிஅம்மன் கோயில் அர்ச்சகருக்கு அவர் வேதனை! பெரியவ ரான நாகலிங்கத்துக்கு அவர் வேதனை! எல்லார்க்கும் அவரர் வேதனை! இந்தப் பரந்த உலகில் வேதனையே இல்லாத மனிதன் தான் யார்?

பஞ்சடைந்த கோலம்! தலைமுழுவதும் வெண்மயிர். நீண்டு வளர்ந்த வெண்ணிறத் தாடி. இடையிலே இரண்டாக மடித்துக் கட்டிய ஓர் எட்டுமுழ வேட்டி. தோளினுக்குரிய துண்டு இடுப் பிலே. இரண்டு தலைமுறைகளைப் பார்த்து விட்ட முதுமைக் கோலமானாலும், கைத்தடியின்றி நடக்கும் தெம்பு, இருந்தாலும், தளர்ந்து போன முதுமைக் கோலம்.

இவ்வாறு தோன்றும் நாகலிங்கம் ஏழையல்ல! பரம்பரைப் பணக்காரக் குடும்பத்திலே தான் நாகலிங்கம் பிறந்தார். அதிலும் பெற்றவர்களுக்கு ஒரேயொரு மகனாகப் பிறந்ததனால் திரண்ட சொத்தினுக்கு ஏகவாரீசானார். நாகலிங்கம்.

இளமைப் பருவத்திலே மனைவியை இழந்த நாகலிங்கம் மறுமணம் செய்து கொள்ளவேயில்லை. ஒரே பேறான தனது செல்லமகளை வளர்ப்பதிலே காலமனைத்தையும் செலவிட்டார். அதன் பயனாகப் பொல்லாத மதுவிடம் தஞ்சம் புகுந்தார். நாகலிங்கத்தின் இளமைக்காலம் அனைத்தையும் மது ஆக்கிர மித்துக் கொண்டது.

நாகலிங்கம் மதுவுக்கே அடிமையாகிச் சதா குடித்தே அழிப் பதாக இருந்தாலும், அவரது சொத்துக்கள் கரைந்து விடாது. பல தலைமுறைகளுக்குப் போதுமானதாக அவரது சொத்துக்கள் பரவிக் கிடந்தன.

மானத்தைச் சதா பழித்துக் கொண்டிருக்கும் மாறாத வடு வுக்கு மருந்தாகத்தான் நாகலிங்கம் மது குடிக்கத் தொடங்கினார். கிராமத்திலே தலைகாட்ட முடியாத அவமானம். வெளியிலே நடமாட முடியாத வெட்கக்கேடு; ஆதலினால் குடியோடு ஐக்கியப் பட்டுச் சதா வீட்டிலே முடங்கிக் கிடந்தார் நாகலிங்கம். அதிற்றான் நாகலிங்கம் ஓரளவு அமைதி கண்டார். ஆறுதல் அடைந்தார்.

கால நீரோட்டத்தின் தாமதியாத விரைவின் பயனாகத் தான் நாகலிங்கம் சமூகத்தைப் புரிந்துகொண்டார். முதுமைக் காலத்திற் றான் உலகத்தை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆகவே நாகலிங்கம் குடியை மறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவத்தின் எழிற்கோலத்திலே மணம் பரப்பி நின்றாள் பேத்தி மரகதம். ஒரே பேறான மகளின் புதல்வியான மரகதத்தினுக்கு வாழ்வு அளிக்கமுடியாது போயிற்றே என்று வருந்தினார் நாகலிங்கம். அதன் பயனாகத்தான் மண்டூர்க் கோட்டை முனையில் அருளோடு குடி கொண்டிருக்கும் மாரிஅம்மனை மட்டும் நம்பித் தினமும் வழிபட்டுக் கொண்டு வந்தார்.

நாள் தவறினாலும் முதியவரான நாகலிங்கம் மாரி அம்மன் கோயிலினுக்குச் சென்று வழிபடத் தவறவே மாட்டார். சமூகமே ஒதுக்கி வைத்துத் தந்த பழியை மாரி அம்மனாற்றான் இனித் தீர்க்க முடியுமென்பது நாகலிங்கத்தின் அசையாத நம்பிக்கை. தள்ளாடித் தளர்ந்த முதுமைக் கோலத்திலும் மாரி அம்மனை வழிபட்டுத் தன் குறையை வாய்விட்டே கூறி, அழுது கண்ணீர் சொரிவார் நாக லிங்கம்.

"குறை இரந்து வேண்டுபவர்களுடைய குறையை
யெல்லாம் தீர்க்கும் மாரி அம்மனே! என்குறை
யைத் தீர்க்கமாட்டாயா? என் பேத்திக்கு வாழ்
வளிக்க உலகமாதாவாகிய உன்னாற்றான் முடியும்.
இந்த ஏழைக்கு இரங்கு தாயே! இரங்கு, மாரி
அம்மனே!"

என்று மாரி அம்மன் சன்னதியில் நின்று கண்ணீர் சோர வாய்விட்டே சொல்லி அழுவார் நாகலிங்கம்.

பருவமீதில் வண்ணப் பூச்சிலே எழிலாக நிற்கும் மரகதத் தினுக்குத் திருமணம் செய்ய முனைந்து மண்டூர்க் கோட்டை முனைக் கிராமத்திலே தோல்வி கண்டார் நாகலிங்கம். அயல் கிராமங்களிலும் ஒருவருக்குப் பின் ஒருவர் என்ற வகையிலே எத்தனையோ வரன்களைப் பார்த்தார். முடிவிலே அனைத்தும் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாததாகவே போயிற்று, திரண்ட தனது பணத்தினாற் கூட மரகதத்தினுக்குத் திருமணம் செய்து வைக்க முடியாது போயிற்று நாகலிங்கத்தால். இயன்றளவு முயன்று வரன் தேடுவதில் தோல்வி கண்ட நாகலிங்கம், பாரத்தை மாரி அம்மன்மீது போட்டார். அடியவர்களுக்கு அருள் சுரக்கும் மாரி அம்மனது அருளினை நாடினார் நாகலிங்கம். மாரி அம்மன் மீது அளவிடமுடியாத நம்பிக்கை வைத்ததனாற்றான், நாள் தவறாது அம்மனை வழிபட்டுக் குறையைத் தீர்த்து வைக்கும்படி வேண்டுவார். கருணையே உருவான மாரி அம்மன் எத்தனையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர்களுக்கு அருள் சுரக்கும்போது, இன்னும் அவள் நாகலிங்கத்தி னுக்கு அருளைச் சுரக்கவேயில்லை.

தனது மனக்குறையை மாரி அம்மனிடம் கண்ணீர் சொரிய நாகலிங்கம் முறையிட்டுக் கொண்டிருக்கும் போது கோயிலினுள் நுழைந்த துறவியான அவர் கேட்டார்.

ஒரு தடவையல்ல! பல தடவைகள் நாகலிங்கம் வாய்விட்டு அம்மனிடம் அழுத அவலக்குரலைக் கேட்ட துறவி தன்னை யறியாமலே கண்ணீர் சிந்தினார்.

தன்னுடைய ஏக்கக் குரலினுக்கு இன்னொரு மனிதக்குரல் கண்ணீர்விட்டுக் கொண்டிருப்பதை வெளியே வந்த நாகலிங்கம் பார்த்தார். காவி ஆடைபுனைந்து சடாமுடி தரித்திருந்த துறவியை நாகலிங்கம் உற்றுப் பார்த்தார். எங்கோ பார்த்த முகமாக இருக் கிறதேயென்று நன்றாக உற்றுப் பார்த்தார். முற்றுந்துறந்தவ ராயிற்றே என்றதனால் கை எடுத்து வணங்கிவிட்டு, தனது வீட்டினை நோக்கி நடந்தார்.

நாகலிங்கம் தள்ளாடியவாறு. அப்படியே கோயில் மண்ட பத்திலே சாய்ந்துவிட்டார். அவரது கண்களிலிருந்து கண்ணீர் பெருகி ஓடலாயிற்று.

கிழக்கு ஈழத்தின் தலைநகர் மட்டக்களப்பு. தலைநகரான மட்டக்களப்பினைச் சுற்றி வாவி பரந்துகிடப்பதனால், நகரப் பெயருடன் வாவி என்னும் பெயர் இணைந்து மட்டக்களப்பு வாவி என்று வழக்கமாகிவிட்டது.

மட்டக்களப்பு வாவியின் மேற்குக் கரையில் அமைந்த அழகிய ஊர் மண்டூர்க் கோட்டைமுனை. திரும்பிய பக்கமெல்லாம் பச்சைப் பசேலென்ற பசுமையான வயல்வெளிகள். உழுதுண்டு வாழ்வதிலே பரம்பரையாக இன்பம் கண்டவர்கள் மண்டூர்க் கோட்டை முனைக் கிராமத்து மக்கள்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழும் மண்டூர்ப்பகுதியின் கேந்திரஸ்தானமாக மண்டூர்க் கோட்டைமுனை துலங்கியது. ஆகவே மண்டூர்க் கோட்டைமுனையில் ஒரு கல்லூரி நிறுவப்பட வேண்டுமென்று மக்கள் அரசாங்கத்தை கோரினார்கள். அக்கோரிக் கையின் பயனாக மண்டூர்க் கோட்டைமுனையில் ஒரு கல்லூரி திறக்கக் கல்வி இலாகா தீர்மானித்தது. அதன் பயனாகக் கிழக்குப் பிராந்தியக் கல்வி அதிகாரி கல்லூரி அமைப்பதற்கான காணி யினைப் பார்வையிட வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டூர்க் கோட்டையிலுள்ள பகிரங்க வீதியிலே உள்ள பல காணிகளைக் கல்வி அதிகாரி பார்வையிட்டார். அவைகள் அவருக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. இறுதியாக நாகலிங்கத்தின் வீட்டினுக்கு அருகாக இருந்த காணி கல்லூரி அமைப்பதற்கு ஏற்றதாகக் கல்வி அதிகாரிக்குத் தோன்றியது.

பற்றைக் காடுகள் மண்டிக்கிடந்த அந்தப் பெரும் நிலப்பரப்புக் காணியைத் தந்துதவும்படி கல்வி அதிகாரி நாகலிங்கத்தைக் கண்டு நேரடியாகவே கேட்டார்.

வழமையான விலையைக் காட்டிலும், அதிகமான விலையென்றாலும், கொடுத்துக் காணியைக் குழந்தைகளின் நன்மைக்காக வாங்கிக் கல்லூரி நிறுவப் போவதாகத் தெரிவித்தார், கல்வி அதிகாரி.

பெரும் தனவந்தரான நாகலிங்கம், கிராமத்துக் குழந்தைகளின் உயர்கல்வியினை முன்னிட்டுக் கல்வி அதிகாரி கேட்ட காணியினைக் கொடுத்தார். பணம் பெறாமல் நன்கொடையாகவே நாகலிங்கம் காணியினைக் கையளித்தார். நாகலிங்கத்தின் வள்ளல் தன்மையை வெகுவாகப் பாராட்டி மகிழ்ந்தார் கல்வி அதிகாரி.

நிலம் கிடைத்த கையுடனே கல்வி அதிகாரி நடவடிக்கைகளைத் துரிதமாகவே மேற்கொண்டார். கல்லூரிக்கான கட்டிடங்கள் அமைக்கும் ஒப்பந்தம் கான்ட்ராக்டருடன் தயாராகியது.

கல்லூரிக் கட்டிடங்கள் அமைப்பதை மேற்பார்வை செய்யும் ஓவர்சியராக மாணிக்கத்தைக் கல்வி அதிகாரி நியமித்தார்.

கட்டிளங்காளையான மாணிக்கம் கல்வி இலாகாவின் கட்டிட ஓவர்சியராகப் பதவியேற்றவுடன் கையேற்ற முதலாவது வேலைத் திட்டம், மண்டூர்க் கோட்டை முனைக் கல்லூரிக் கட்டிட வேலையாகும்.

ஓவர்சியர் மாணிக்கம் உல்லாசப் பேர்வழி. சதா மடிப்புக் கலையாத ஆடைகள். வாலிபத்தின் முறுக்கல்லவா? அதற்கான அரும்பு மீசை. களைசொட்டும் அவனது சிவந்த முகத்தினுக்குக் கருமையான அரும்புமீசை தனியோர் வசீகரத்தைக் கொடுத்தது.

செக்கச் சிவந்த மாணிக்கத்தின் மேனிக்கு அலை அலையாகச் சுருண்ட கிராப்பு தனியோர் கவர்ச்சியைக் கொடுத்தது கடமையைக் கையேற்க வந்த மாணிக்கத்தை நாகலிங்கம் அன்புடன் வரவேற்றார். அவனுக்காகத் தன் வீட்டின் முன் அறைகளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லொன்றை ஒழித்துக் கொடுத்தார். தங்குவதற்கு இடம் கொடுத்த நாகலிங்கம் வேளைக்கு உணவு கொடுக்காது விடுவாரா?

நாகலிங்கத்தின் வீட்டிலே விருந்துச் சாப்பாட்டைத் தினமும் சுவைத்துக் கொண்டு கடமை பார்த்து வந்த மாணிக்கத்தினுக்கு வீட்டிலே வளைய வந்து கொண்டிருந்த சுந்தரி பெரும் விருந்தானாள்.

சுந்தரி என்ற பெயருக்கேற்பவே சௌந்தரவதியாக விளங்கினாள் சுந்தரி. சுகபோக வாழ்வும், செல்வச் சிறப்பும் குற்றமே காணமுடியாத சுந்தரியின் அழகினுக்கு மெருகு கூட்டிது.

நாகலிங்கத்தின் திரண்ட சொத்துக்காகவல்ல; சுந்தரி சௌந்தர அழகினுக்காக அவளை அடைய எத்தனையோ வாலிபர்கள் துடித்துக் கொண்டு நின்றார்கள்.

எந்தச் சீதனமும் வேண்டாம். சுந்தரியை மட்டும் தந்தாற் போதுமென்று பலர் ஒற்றைக்காலில் நிற்கவும் செய்தார்கள்.

மனைவி மறைந்தவுடன், மகளை வளர்ப்பதிலே தன் வாழ்க்கையைச் செலவிட்ட நாகலிங்கம், சுந்தரி கண்கலங்கப் பொறுக்க மாட்டார். அத்தனை அன்பாகச் சுந்தரியைத் தாலாட்டி வளர்த்தார் நாகலிங்கம். சுந்தரியைப் பற்றிப் பலமான திட்டங்களும் தீட்டியிருந்தார் நாகலிங்கம்.

தனது திட்டங்களைச் செயலாக்க நாகலிங்கம் தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார். நாகலிங்கம் தேர்ந்தெடுத்திருந்த மாப்பிள்ளை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் வைத்தியப் படிப்பை முடித்துக் கொண்டு விசேஷ பட்டம் பெறுவதற்காக இங்கிலாந்து சென்றிருந்தான். இங்கிலாந்திலே கல்வியை முடித்துக் கொண்டு ஊர் திரும்ப இன்னும் ஒரே வருடம் மட்டும் இருந்தது.

இங்கிலாந்தில் மாப்பிளை படிக்கும் அத்தனை செலவையும் நாகலிங்கமே ஏற்றுக் கொண்டிருந்தார். இன்னும் ஒரு வருடந்தான். பின்னர், மாப்பிள்ளை வந்துவிடுவான். மண்டூர்க் கோட்டை முனைக் கிராமமே வியக்கத்தக்கதாகத் திருமண விழாவை நடத்தவும் நாகலிங்கம் திட்டம் தீட்டியிருந்தார்.

நாகலிங்கம் நினைத்துத் தீட்டிய திட்டமொன்று; நடந்த திட்டமோ வேறொன்று.

சுந்தரியின் மோகன எழில் மாணிக்கத்தைக் காந்தம் போல் கவர்ந்து இழுத்தது. அதேபோல் மாணிக்கத்தின் வசீகரமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம் சுந்தரியைக் கவர்ந்து இழுத்தது. இருவரும் காதல் வயப்பட்டார்கள்.

பருவத்தின் பண்பிலே, வாலிப மயக்கத்திலே, காதல் என்னும் சக்தியிலே மாணிக்கமும் சுந்தரியும் இணைந்தார்கள், உள்ளத்தால் மட்டுமல்ல; உடலாலும் இணைந்தார்கள். இன்பமயமான அந்த இணைப்பு விபரீதத்தில் முடிந்தது. சுந்தரி இன்னோர் உயிரைச் சுமக்கலானாள்.

நிலைமையை நாகலிங்கம் அறிந்தபோது வெகுண்டெழுந்தார். நாகலிங்கத்தின் செல்வப் பெருக்கையும், செல்வாக்கையும் அறிந்திருந்த மாணிக்கம், தன்னை உயிருடனே சமாதி வைத்து விடுவாரென்ற பயத்தினால் இரவோடிரவாக ஊரைத் துறந்து ஓடினான். உத்தியோகத்தையும் உதறித் தள்ளிவிட்டு பிறந்த ஊரையும் துறந்து மாணிக்கம் ஓடினான்.

மகளின் நிலைமையினை அறிந்த நாகலிங்கம் கலங்கினார் குடும்ப கௌரவத்தினுக்கே களங்கத்தைத் தேடிவிட்டாளென்று அவர் சீறிச் சினக்கவில்லை. அரவணைத்தே உண்மையினைக் கேட்டறிந்தார்.

நடந்தது நடந்துவிட்டது. கறந்த பால் முலையில் ஒரு போதும் ஏறாதே! ஆகவே, கலங்கித்தான் ஆகப்போவது எதுவு மில்லையெனக் கண்ட நாகலிங்கம், குடும்ப கௌரவத்தைக் காக்க மாணிக்கத்தையே மருமகனாக்கிக் கொள்ளாத் தீர்மானித்தார்.

மாணிக்கத்தைத் தேடினார், தேடினார், ஈழமெங்குமே தேடினார்! மாணிக்கம் கிடைக்கவேயில்லை

ஊர்வாயை உலைவாயால் மூடமுடியுமா? சுந்தரியைப் பற்றிய வதந்தி காட்டுத் தீபோல் ஊரெங்கும் பரந்தது. மண்டூர்க் கோட்டைமுனையைக் கடந்தும் பரவியது. குடும்பப் பழிக்கு அஞ்சி நாகலிங்கம் நடைப்பிணமானார். எங்கும் வெளியே செல்லாமல்; வீட்டிலே அடைபட்டுக் கிடந்தார்.

தந்தையின் நிலையினைக் கண்ட சுந்தரி கலங்கினாள். கண்ணீர் விட்டுக் கதறினாள். எத்தனையோ தடவைகள் உயிரைப் போக்கிக் கொள்ளவும் முனைந்தாள். அதனால் இன்னும் பழி தந்தையை வாட்டுமெனக் கருதித் தற்கொலை செய்யும் எண்ணத் தைக் கைவிட்டாள். தன் வயிற்றிலே வளர்ந்துகொண்டு வரும் சிசுக்காக உயிரைக் கையில் பிடித்து கொண்ட நடைப்பிணமாக உலாவினாள். சதா கண்ணீர் சிந்துவதும், எண்ணி எண்ணி ஏங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதுமாக இருந்தாள் சுந்தரி, அந்த ஏக்கத்திலே காலமும் விரையலா யிற்று.

காலம் விரைந்தது. சுந்தரி சுமந்த தாய்மைப் பேற்றினுக்குப் பயன் கிடைக்கும் நாளும் நெருங்கியது. ஏக்கமே உருவாகிக் கருகிமெலிந்த உடம்பாதலினால் பிரசவவேதனையைத் தாங்க முடியாது சுந்தரி தவித்தாள். கைதேர்ந்த வைத்தியரை நாகலிங்கம் வரவழைத்தார். அவரது அரும் பெரும் முயற்சியின் பயனாக, தங்க விக்கிரகம் போன்ற ஒரு பெண் மகவைச் சுந்தரி பெற்றெ டுத்தாள்.

பெற்ற மகவை ஆசைதீரப் பார்த்து அன்பு முத்தமிட்டாள் சுந்தரி. அவ்வளவுதான். பிரசவ அறையிலேயே கண்களை மூடிவிட்டாள் சுந்தரி.

வைத்தியரால் சுந்தரியின் வயிற்றில் இருந்த குழந்தையைத் தான் காப்பாற்ற முடிந்தது. ஆனால், சுத்தரியைக் காப்பாற்ற முடியாது போயிற்று.

அருமை பெருமையாக வளர்த்த மகள் இறந்த அதிர்ச்சியை நாகலிங்கத்தால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. குடும்பத்துக்குப் பழி தேடிவிட்டாள் சுந்தரி என்று அவர் என்றுமே அவளைக் கண்டித்ததில்லை.

சுந்தரியின் திருமணத்துக்காக ஏலவே பல திட்டங்கள் அவர் தீட்டியிருந்தபோதிலும், சுந்தரி மாணிக்கத்தைத்தான் மணக்கப் போகிறேன் என்று ஒரு வார்த்தை கூறியிருப்பாளேயாகில், மறு பேச்சின்றித் திருமணத்தை நடத்தி வைத்திருப்பார். சுந்தரி கண் கலங்கப் பொறுக்காதவராயிற்றே நாகலிங்கம்.

சுந்தரியின் மறைவு குடும்பப் பழியை ஓரளவு துடைத்த தென்றாலும், அவள் விட்டுச் சென்ற குழந்தை அந்தப் பழியை இரட்டிப்பாக்கவே செய்தது. குடும்பப் பழியின் மங்காத சின்ன மாகவே சுந்தரியின் குழந்தை இருந்தது. அந்த வேதனை நாகலிங் கத்தை அணு அணுவாக வதைக்கலாயிற்று. அதிலிருந்து விடுபட நாகலிங்கம் மதுவிடம் தஞ்சம் புகுந்தார்.

நாகலிங்கத்தின் மனக்கவலையைப் போக்க மது அரக்கன் உற்ற துணைவனாகக் கைகொடுத்து உதவினான். மதுவுக்கு நாகலிங்கம் அடிமையாகிக் கொண்டு போனது போலவே, அவரது பேத்தியான மரகதமும் வளரலானாள்.

மரகதத்தை மிகவும் கண்காணிப்புடனே, பெருமையாகப் பாராட்டி வளர்த்தார் நாகலிங்கம். தாயைப்போல் பிள்ளை என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமல், மரகதம் வைராக்கியம் கொண்டவளாகவே வளர்ந்தாள். நாகலிங்கத்தை விட்டு விலகாமல், அவரது உயிர்போல் இயங்கிக் கொண்டு வந்தாள் மரகதம்.

காலம் நாகலிங்கத்துக்குத் தள்ளாத முதுமையையும், மரகதத் துக்குக் கன்னித் தன்மையையும் கொடுத்தது.

நாகலிங்கம் பேத்தி மரகதத்தினுக்கு வரன் தேடலானார். அப்பொழுதுதான் 'தகப்பன் பெயர் தெரியாதவள்' என்ற பழி அவரை மிகவும் வலுவாகத் தாக்கியது. திரும்பிய பக்கமெல்லாம், 'மரகதம் தகப்பன் பெயர் தெரியாதவள்' என்னும் வசை நாகலிங் கத்தை மோதியது. பொல்லாத அந்த வசையான பழியினை அவ ரது திரண்ட செல்வத்தாற் கூடத் துடைக்க முடியாது போயிற்று. அப்பொழுது தான் நாகலிங்கம் தன்னை உணர்ந்தார். தன் சமூகத்தை உணர்ந்தார். இந்த உலகத்தை உணர்ந்தார்.

தன் பணத்தின் சக்தியில்லாத தன்மையை உணர்ந்த நாக லிங்கம் குடியைத் துறந்தார்; மதுவை மறந்தார்.

பேத்தி மரகதத்தினுக்கு இனி மனித சமூகத்தினால் வாழ் வளிக்க முடியாது. மனித சமூகத்தை நம்புவதில் எந்தவிதமான பயனுமேயில்லையெனக் கண்ட நாகலிங்கம், எல்லாவற்றிலும் வல்லவளும், உலக மாதாவுமான மாரி அம்மனை நம்பத் தொடங் கினார். மனிதனால் ஆகாத முயற்சி தெய்வத்தாற்றானே கைகூடு மென நம்பினார் நாகலிங்கம். மகத்தான அந்த நம்பிக்கையின் பயனாக மண்டூர்க் கோட்டைமுனை மக்களின் குலதெய்வமான மாரி அம்மனை நாள் தவறாது வழிபடலானார். மாரி அம்மன் சந்நிதிக்குச் சென்று தன் குறையை மாரி அம்மன் முன்வைத்து, அருள் சுரக்கும்படி நாள்தோறும் வழிபட்டுக்கொண்டு வந்தார்.

மண்டூர்க் கோட்டைமுனை மாரி அம்மன் கோயில் மண்ட பத்திலே சாய்ந்த, துறவிவேடம் கொண்ட மாணிக்கம் வெள்ளத் தின் தாலாட்டுதலினால் கண்களைத் திறந்தார்.

துறவி மாணிக்கத்தின் கால்களை வெள்ளம் தழுவிக் கொண் டிருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் மண்டபத்தினுள் வெள்ளம் புகுந்துவிடுமெனக் கண்டதனால், துறவி மாணிக்கம் எழுந்து உள்மண்டத்தினுள் சென்றார். மண்டபத்தினுள் வரிசையாக இருந்த தூண்களில் ஒன்றில் சாய்ந்த துறவி மாணிக்கத்தின் சிந்தனை விரிந்துகொண்டேயிருந்தது.

நாகலிங்கத்தினுக்குப் பயந்து ஓடிய மாணிக்கம் கடல் கடந்து கோடிக்கரையில் இறங்கினார். வாழ்க்கையிலே விரக்தியுற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கம் தமிழகத்துக் கோயில்களையெல்லாம் நடையாகவே சென்று தரிசிக்கலானார். உணவு கிடைத்த இடத்தில் உண்டும், படுக்க நிழல் கிடைத்த இடத்தில் துயின்றும், தென்னாட்டுத் திருக்கோயில்களை யெல்லாம் தரிசித்துக் கொண்டே சென்றார்.

ஓர் ஆண்டா! இரண்டு ஆண்டா! இருபது ஆண்டுகளைத் தமிழ் நாட்டுத் திருக்கோயில்களைத் தரிசிப்பதிலே செலவிட்டார். நினைத்துப் பார்த்த மாணிக்கம் அதிர்ச்சியடைந்தார். அந்த அதிர்ச்சியின் இறுதிப் பயன் அவர் சடைமுடி தரித்த துறவி!

பற்றற்ற நிலையில் துறவியாக வாழ்ந்த மாணிக்கத்தினுக்குப் பின்னர்தான் சுந்தரியின் நினைவு எழுந்தது. அந்த நினைவும் கோயிலில் சுந்தரியைப் போன்ற மங்கை நல்லாள் ஒருத்தியைக் கண்டதனாற்றான் தோன்றியது.

ஒரு தடவை சுந்தரியை கண்களினால் காணவேண்டு மென்ற ஆசை துறவி மாணிக்கத்தினுக்கு எழுந்தது. ஆசைக்கு அணைபோட முடியாது அடிபணிந்த அவர் திரும்பவும் மண்டூர்க் கோட்டை முனைக்கு வந்தார்.

மண்டூர்க் கோட்டைமுனைக் கிராமத்தினுள் கால்வைத்த துறவி மாணிக்கத்தை முதலில் வரவேற்றது வெள்ளந்தான். ஆகவே மாரி அம்மன் கோயிலினுள் நுழைத்தார் நாகலிங்கத்தின் உருக்கமான வேண்டுகோளையும் கேட்டார்.

கோயிலினுள் புகுந்து நிற்கும் வெள்ளத்தைக் காண வந்த பலர், துறவி மாணிக்கத்தையும் கண்டு அளவளாவினார்கள். அதன் பயனாக நாகலிங்கத்தின் நிலைமையை விசாரித்து அறிந்தார்.

உண்மையை அறிந்த துறவி மாணிக்கம், தம் மகளினுக்கு வாழ்வு அளிப்பதா? இல்லையா? என்று சிந்திக்கலானார்.

''பற்றைத் துறந்து துறவியாக நிற்கும் எனக்கு இன்னும் எதற்குப் பற்று?'' என்றது மாணிக்கத்தின் மனம்.

''சுந்தரியைக் கெடுத்துக் குலப்பழியை உண்டாக்கினாய். அந்தப் பழி அவளது மகளையும் பிடித்துக்கொண்டது. அதனால் வாழ்வே கிடைக்காமல் பரிதவிக்கிறாள். பேத்தியின் வாழ்வைப் பொறுத்த ஏக்கத்தினால் நாகலிங்கம் சாவின் முனையில் நிற்கிறார். கடைசி காலத்தில் அவரை நிம்மதியாகச் சாகவிடவாவது உன் மகளை ஏற்றுக்கொள். தந்தை தம் மகளை ஏற்றுக்கொள்வதில் தயக்கம் எதற்கு?'' என்றது மாணிக்கத்தின் மனச்சாட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதுக்கும் மனச்சாட்சிக்கும் ஏற்பட்ட போராட்டத்திலே, துறவி மாணிக்கம் தத்தளித்துத் தடுமாறலானார். அந்தத் தடுமாற்றம் பல நாட்கள் நீடித்தது. அவர் இன்னும் முடிவினுக்கே வரவில்லை.

"பாவம், நாகலிங்கம்! சாகக் கிடக்கிறார்" என்று அனுதாபப் பட்ட அர்ச்சகரின் குரல் பல நாள் மனப்போராட்டத்தில் உழன்று கொண்டிருந்த துறவி மாணிக்கத்தை விழிக்கச் செய்தது.

மனச்சாட்சியினுக்கு வளைந்து கொடுத்த மாணிக்கம் தீர்க்க மான ஒரு முடிவினுக்கு வந்தவராக எழுந்து நடந்தார். அவரது கால்கள் நாகலிங்கத்தின் வீட்டினுக்கு அழைத்துச் சென்றன.

நாகலிங்கம் கண்களை மூடியவாறு படுக்கையிலே கிடந்தார். பக்கத்தே மரகதம் கண்ணீர் சொரிய நின்று கொண்டிருந்தாள்.

மரகதத்தைப் பார்த்தார் மாணிக்கம். உற்று நோக்கினார். சுந்தரியே நிற்பது போலிந்தது மாணிக்கத்தினுக்கு. தாயை உரித்து வைத்ததுபோல் மரகதம் நின்று கொண்டிருந்தாள்.

நாகலிங்கத்தை உற்று நோக்கிய மாணிக்கத்தின் கண்கள் கண்ணீரைச் சொரிய, வாய் "மாமா"! என்று குழைந்தது.

பழக்கப்பட்ட குரலைக் கேட்டது போல உணர்ந்த நாக லிங்கம் மெதுவாகக் கண்களைத் திறந்தார்.

"நான்... நான்...!" என்று தடுமாறிக் கண்ணீர் சிந்தினார் மாணிக்கம்.

காவி ஆடை புனைந்து, சடாமுடி தரித்துக் கண்ணீர் சிந்தும் மாணிக்கத்தை நாகலிங்கம் உற்று நோக்கினார்.

"நான்தான் மாணிக்கம். உங்களுக்கும் சுந்தரிக்கும் கொடிய துரோகமிழைத்த மகாபாவி. உங்கள் குடும்பத்துக்குப் பழியைத் தேடித்தந்த என்னை, உங்களது கடைசி காலத்திலாதல் மன்னித்து விடுங்கள்" என்று கண்ணீர் சொரியச் சொரியக் கூறினார் மாணிக் கம்.

"மாணிக்கம்....." என்று முணுமுணுத்தார் நாகலிங்கம்.

"மாணிக்கந்தான், மாமா..."

"மாணிக்கந்தான்!... என் மரகதத்தின் தந்தை மாணிக்கந் தான் !..."

"மரகதத்தின் தந்தையான கொடியபாவி மாணிக்கம் நான் தான், மாமா"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தகப்பன் பெயர் தெரியாதவள் மரகதம்!..... தகப்பன் பெயர் தெரியாத மரகதத்தினுக்குத் தகப்பன் வந்துவிட்டான்! என் மரகதத்தினுக்கு வாழ்வு கிடைத்து விட்டது; மாரி அம்மன் அருள் சுரந்தே விட்டாள்!"

"மாரி அம்மனது அருளேதான்!" என்று மாணிக்கத்தின் வாய் மெதுவாகக் கூறியது.

"மரகதம்!..... உன் தகப்பன், அம்மா!"

"அப்பா!" என்று கதறினாள் மரகதம்.

மாணிக்கம் சிலையாக நின்று கண்ணீர் வடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளியங் கொம்பு

குறமகள்

மணியடிக்கிறது.

எங்கும் செருப்பொலிகள்.

''என்ன பிள்ளை'' ஆசிரியை கமலா திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கிறாள். ''குழந்தைக்கு வருத்தம் கடுமையென்றார்களே. தேவையென்றால் இரண்டு நாள் லீவு எடுமன்''

தலைவியின் குரலில் ஒரு தவிப்பு. தனக்குப் பயந்து தான் ஆசிரியை கமலா வரமுடியாத சந்தர்ப்பத்திலும் கல்லூரிக்கு வருகிறாளோ, உலகம் தன்னை அரக்கி என்றல்லவா கூறப்போகிறது என்ற மன உளைச்சல்.

''பரவாயில்லை; தகப்பன் வந்து நின்றார். காலையில் 101^0 யில் காச்சல் இறங்கியிருக்கிறது. என்றாலும் அடிக்கடி ஏறிக்காய்கிறது'' குரலில் சோகம் இழையோடினாலும் முகத்தில் பணிவோடு வலிந்திழுத்த சிரிப்புக் காணப்படுகின்றது.

''வகுப்புக்கு வேலையைக் கொடுத்துவிட்டு போம். நான் கவனிக்கிறேன்'' தலைவியின் குரல் எவ்வளவுக்கு கனிய முடியுமோ அவ்வளவுக்கு கனிகிறது.

''தாங்ஸ். காய்ச்சல் கூடினால் டெலிபோன் பண்ணுவார்கள். அப்போ பார்ப்போம்'' நன்றி கண்களில் மின்னுகின்றது.

இன்னமும் ஒரு படி கீழே இறங்கித் தோழமை கொண்டாட வேண்டுமென்று உள்ளம் விழைந்தாலும், அதிகார பீடம் தன் நிலையை உணர்த்தி சுண்டியிழுக்கிறது, வேறு அலுவல்களிற் கவனம் செலுத்துவது போல் தலையைத் திருப்பிக்கொண்டே எதிர்புறத்தில் நடக்கிறார் அதிபர்.

ஒரு கணம் தயங்கிய கால்களை இழுத்துக் கொண்டே வகுப்பறையை நோக்கி நடக்கிறாள் கமலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஹலோ, மிஸஸ் நாதன்! குழந்தைக்கு சீரியஸ் என்று மிஸஸ் சின்னா சொன்னதே! பொய்யா? நாங்கள் மத்தியானம் வந்து பார்க்கலாமென்றல்லவா இருந்தோம்'' இரு ஆசிரியைகள் ஆவலோடு வழிமறிக்கிறார்கள். மிஸஸ் சின்னாவும் வருகிறாள்.

''காலையில் கொஞ்சம் குறைவு இனிப்படியும் போலத் தெரிகிறது. அது தான் வந்திட்டேன்'' அவள் கால்கள் தொடர்ந்து நடக்கின்றன. அதிசயப் பார்வைகள் அவளைத் தொடர்கின்றன. மீண்டும் பார்வைகள் சந்தித்த போது மின்னல் வேகத்தில் ஒரு வம்புத்தனம் தோன்றுகின்றது.

''அப்பாடி! குழந்தை மூடின கண்திறக்காமல் கிடக்குது என் கண்ணாலேயே கண்டேன் கொஞ்சம் குறைவாம் குறைவு''

''ஒரு வேலை அதிபரிடம் லீவு கேட்க பயப்படுகிறதோ''

''நல்ல பயம்? அவவே போகச் சொன்னாவே இப்போ''

''அதுக்கென்ன நின்று பாக்கிறதுக்கு ஒரு சோலி சுறட்டில்லாத சிறியதாய் தாங்கிப்பிடிக்க மிஸ்டர் நாதன். கவலையும் பொறுப்புமில்லைத்தானே! ''

''ஆஸ்பத்திரியிலும் பார்க்க பள்ளிக்கூடத்தில் நிம்மதி கூடத் தானே?''

''என்றாலும் பாசம் கூட வா இல்லை!''

அவர்களும் சாதாரணப் பெண்கள்தானே; பேசிக் கொண்டே வகுப்புக்களில் நுழைந்தனர்.

இரண்டாம் மணியடிக்கின்றது.

கல்லூரிக் கீதம் ஒலிபரப்பப்படுகின்றது.

கமலாவின் வகுப்பறையில் முப்பத்தைந்து மாணவிகள் அவர்களுள் இருபத்தெட்டு மாணவிகள் ஜீ.ஸீ.இ பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்பிவிட்டார்கள் பள்ளிவாழ்க்கையின் எல்லை அவர்களின் எதிர்கால வாழ்க்கையையே நிர்ணயிக்க போகும் காலம். நல்ல உத்தியோகம் படிப்பு அல்லது நல்ல உத்தியோகம் உள்ள கணவன் இரண்டையும் ஓரளவு தீர்மானிக்கக் கூடிய பரபரப்பான சூழ்நிலை. பத்துப் பதினொரு வருடப் பள்ளி வாழ்க்கையின் பலாபலன்களைக் காணத் துடிக்கும் உள்ளங்கள்.

டீச்சர் நீ வராதது பெரிய 'டல்'லாக இருந்தது.''

''குழந்தைக்கு வருத்தமென்று சொன்னார்களே''?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீங்கள் காட்டிவிட்ட வேலையெல்லாம் முடித்து விட்டோம் டீச்சர்''

''டீச்சர்; யோகாவும் ஜெயாவும் 'பொட்ணிப் பாடம் முழு வதும் 'ஹோம்வேக்' செய்யாமல் எழும்பி நின்றவை உங்கடை செல்லத்தாலைதான் நாங்கள் தங்களை மதிக்கிறதில்லையென்று. 'பொட்ணி டீச்சர் ஏசினவ'' இரு மாணவிகளும் எழுந்து மிக வருத்தத்தோடு தலை குனிந்து நின்றனர்.

கமலாவின் முகத்தில் வேதனை பரவுகின்றது.

''லட்சுமி எழும்பும், டீச்சர் அப்படிச் சொன்னாலும் நீர் அதை எனக்குச் சொல்லலாமா''

''எழும்புகிறாள் லட்சுமி, தலைகுனிகிறது. ''வெரி சொறி, டீச்சர்'' ஆனால் முகத்தில் வருந்துகின்ற உணர்ச்சியை விட நடிப்புத்தான் பிரதிபலிக்கிறது.

'சரி தனிமையாகப் பிறகு சந்தித்துக்கொள்ளலாம் என எணணுகிறாள் கமலா.

''கண்ணனுக்கு இப்போ எப்படி டீச்சர்? நேற்றுக் கடுமை என்று சொன்னார்களே. நீங்கள் வரமாட்டீர்களாக்கும் என நினைத் தோம்''

கமலா கனிவோடு அவர்களைப் பார்க்கிறாள்.

''இப்போ பரவாயில்லை நீங்களும் என் பிள்ளைகள் தானே என்று ஓடி வந்துட்டன்.''

பெருமிதம் கலந்த புன்னகை வகுப்பில் பரிமாறப்படுகிறது. தொடர்ந்து ஒரு நினைவும் ஓடுகிறது. காட்சி விரிகிறது. கல்லூரியின் ஆபிஸ் அறை. அதிபரின் முன் இரண்டொரு ஆசிரியர்கள் மாண வர்களின் தேர்ச்சி இதழுக்கு கையொப்பம் வாங்கிக் கொண்டிருக் கிறார்கள்.

''என்ன வகுப்பில பிள்ளைகளோடு வீட்டுக்கதை கதைக் கிறீர்களாம்?''

மௌனம் நிலவுகிறது

''பச்சை மிளகாய் இல்லை; உப்பில்லை என்றா?'' என்று. நினைக்கிறது. கமலாவின் உள்ளம்.

''பாடங்கள் நடாத்தும் போது, உதாரணக் கதைகள் சொல்லும் போது, சாதாரண வீட்டுச் சூழ்நிலைச் சம்பவங்களைச் சொல்லித்தானே மாணவருக்கு அறிவுறுத்த வேண்டும்'' என்று மெலிந்த குரலில் முணுமுணுக்கிறார் ஓர் ஆசிரியை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் மனம் விட்டுச் சிரிக்கிறார்.

ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே ஒரு தகர்க்க முடியாத வேலி இருக்க வேண்டும்; கடவுளுக்கு அடுத்தபடியாகத் தாம் வைத்து எண்ணப்பட்ட வேண்டும் என்று விரும்பும் ஒரு சார் ஆசிரியர்கள் மாணவிகள் தம்மைக் கண்டதும் சிங்கம், புலியைக் கண்டது போல் ஓடி ஒளிவதைக் கண்டு திருப்தியுறுவார்கள் அப்படிப்பட்டவர்கள், மாணவருடன் கலந்துரையாடி அவர்கள் கஷ்ட நஷ்டத்தையறிந்து தாயாக - சகோதரியாக - வேண்டிய விடத்துத் தோழியாக குறிப்பாகப் பாரதியாரின் நண்பனாய், மந்திரியாய் நல்லாசிரியனாய் - என்பது போல வாழ வேண்டு மென விரும்பும் மற்றொருசார் ஆசிரியர் மீது மாணவிகள் காட்டும் விசேட அன்பைக் கண்டு பொறாமையுற்றுத் தம் பாரம்பரியத் துக்குப் பங்கம் வந்ததேயென்று அதிபரிடம் வைத்த திரி அது.

ஆனால் ஆசிரியரின் வேலை திருப்திகரமாக இருக்குமட்டும் அதிபரிடம் அந்தத் திரி லேசில் புகையாது. அந்த மட்டில் நன்றி.

ஒவ்வொரு மாணவியின் வீட்டு நிலவரத்தை, சூழலை அறிந்து, அவர்களின் கல்வி பாதிக்கப்படும் தன்மையையோ அல்லது வசதிக் கட்டணம் வசூலிக்க வேண்டிய நிலையையோ தெரியவேண்டிய ஆசிரியர், வீட்டுக் கதைகள் கதைக்காமல் இருக்கலாமா? அது மாத்திரமல்ல மாணவிகளிடமிருந்து நம்பிக்கை யும் அன்பையும் வளர்ப்பதற்காக உங்கள் குழந்தைக்கு என்ன பெயர்? இப்போ நடப்பாளா? உங்களை தியேட்டரில் கண்டேனே டீச்சர்'' போன்ற சிறு அன்புக் கேள்விகளுக்குக் கூட பதிலளிக்கக் கூடாதா? அது வீட்டுக் கதையாக இருந்தாலும் கூட அதிலும் குமரப் பருவத்து மாணவிகள் - தம் மனந்திறந்து நம்பிக்கையுடன் தங்கள் பிரச்சனைகளை - சிக்கல்களை ஆசிரியருடன் கலந்துரை யாடுவதற்குச் சந்தர்ப்பமளிப்பதற்காக அவர்கள் உரிமையுடன் கேட்கும் கேள்விகளுக்கு - அது அதிகப் பிரசங்கித்தனமாக இருந் தாலும் கூட. ஏதோ சொல்லிச் சமாளிக்கத்தானே வேண்டும்? கேட்ட கேள்விக்குப் பதில் கிடைக்காமல் அந்த அன்புள்ளங்கள் சாம்புவதைச் சகிக்கமுடியுமா?

பாடம் தொடங்குவதற்கு மூன்றாம் மணியடிக்கிறது சிந் தனையறுகிறது.

''இன்று கைகேயி சூழ்வினை படலத்தில், 'தசரதன் துயரம்' பொழிப்புரை கேட்கிறது டீச்சர்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவியரிடையே சிறு குசுகுசுப்பு.

''இன்றைக்கு அது வேண்டாம் டீச்சர் ! முதுவேனிற் பருவ வர்ணனை படிப்போம்'' பல தலைகள் சேர்ந்தாடுகின்றன.

''அது நாளைய பாடமல்லவா? என்றாலும் 'முதுவேனிற் பருவம்', படிக்க விரும்புவோர் கரங்களை உயர்த்துங்கள்?''

கண்கள் பேசுகின்றன. ஒன்றும் பாக்கியில்லாமல் எல்லாக் கரங்களும் உயர்கின்றன. முகபாவங்கள் உள்ளதை அறிவிக் கின்றன.

கமலாவின் உள்ளம் நெகிழ்ந்து கசிகிறது.

ஆசிரியர் தான் வகுப்பு நடத்தும் போது மனோதத்துவத்தை அனுட்டித்து நடத்த வேண்டுமென்றால் மாணவிகள் அவர்களை யும் விஞ்சிவிட்டார்கள்!

இத்தனை அன்புள்ளங்களும், தசரதன் துயரத்தில் ஒன்றிக் குழந்தையின் நினைவால் ஆசிரியையின் முகத்தில் ஒரு துயரக் கோடும் பரவக்கூடாது என்று முனைந்து நிற்கின்றனவே உணர்ச் சியை உள்ளடக்கிக் கொண்டே.

''சரி, இது சனநாயக உலகமல்லவா, பாமா முதலில் முது வேனிற் பருவ வர்ணனையை இயற்றிய முகாந்தரம் சதாசிவ ஐயரைப் பற்றி சொல்லும் பார்ப்போம்''

பாடமும் ஆசிரியரும் மாணவரும் ஒன்றிவிடுகின்றார்கள்.

வகுப்பு முடிய மணியடிக்கிறது.

கமலா எழுந்து நிற்கிறாள்.

''தாங்க்யூ ரீச்சர் ''

''நல்ல வேலை ரீச்சர்! நாங்கள் பயந்துவிட்டோம். இந்தத் தவணைதானே இரண்டு வருடப் படிப்பையும் திருப்பிப் படிக்க வேண்டும். நீங்கள் வராவிட்டால் நாங்கள் குண்டுதான். பிறகு பள்ளிப் படிப்பும் போ. எல்லா போ. வீட்டிலிருந்து கொண்டு....''

''நாளெண்ண வேண்டியது தான்'' என்கிறாள் ஒரு துடுக்குக் காரி. சிரிப்பலை எழுகிறது.

உள்ளூர ரசித்தாலும் அந்த பகிடி தனக்குப் பிடிக்கவில்லை என்பதைக் காட்ட ஒரு கோபப் பார்வையை சிந்தி விட்டு, 'என்றா லும் மன்னிக்கப்படுகிறது' என்ற அர்த்தம் தொனிக்க முறுவலிக் கிறாள் கமலா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ரீச்சர் பிள்ளைக்கு சுகம் வரவேண்டுமென்று காலைமை கும்பிட்டனான், பின்னேரம் பிள்ளையாருக்கு ஒரு தேங்காய் உடைப்பன்''

''டீச்சர் நானும் மன்றாடினனான். பிறகு ஒரு செபமாலை சொல்லுவன்''

எத்தனை நம்பிக்கை அந்த முகங்களில்!

ஆசிரியையின் மன அமைதிக்காக ஆஸ்பத்திரியில் படுக்கையில் இருக்கும் குழந்தை மீது நம்பிக்கை. குழந்தையின் சுக நலனுக்குத் தங்கள் வேண்டுதல் மீது நம்பிக்கை. வேண்டுதல்கள் நிறைவேற்றப்படுமென்று ஆண்டவன் மீது நம்பிக்கை. எல்லாவற்றிற்கும் மேலாக தம் பரீட்சையின் பெறுபேற்றிற்கு ஆசிரியை மீது நம்பிக்கை. பரீட்சையின் எட்டுப் பாடங்களுள் நான்கு பாடங்களுக்குக் கமலாவே ஆசிரியர். அவர்களின் பெறுபேற்றின் நயநட்டதில் பெரும்பங்கு பெறவேண்டியவள் அவளே. அந்த இளம் உள்ளங்களின் நம்பிக்கைக்குத் துரோகம் செய்யக் கூடாது என்ற ஓர் எண்ணமே அவளை கல்லூரிக்குத் துரத்தியடித்தது என்பதை மற்றவர்கள் அறியாதவரை அது புரியாத புதிராகத்தான் இருக்கும். இத்தனை உள்ளங்களின் மொத்த நம்பிக்கையே ஒரு பலமான சக்தியாக அமைந்து சிதையில் கிடக்கும் பிணத்தை கூட உயிர் பெற வைத்திடுமே!

அந்த நம்பிக்கையை உறுதிகோலாகக் கொண்டு கரும் பலகையில் ஓடுகிறது கமலாவின் கை

a x b = ab அவள் சிந்திக்கிறாள்.

aயையும் bயையும் கூட்டினால் = a+b

aயிருந்து bயைக் கழித்தால் = a-b

aயையும் bயையும் பெருக்கினால் = a x b ஆக இருக்கக் கூடாது? ஏன் ab ஆக வேண்டும் அதுவும் ஒருவர் மீது வைத்த நம்பிக்கையே என ஓடுகிறது சிந்தனை.

டெலிபோன் மணியடிக்கும் போதெல்லாம் பரபரப்புடன் ரிசீவரைத் தூக்குகிறது அதிபரின் கை.

ஆனால் கமலாவுக்கு டெலிபோன் அழைப்பு வரவேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்பரவரி- 4

மு.தளையசிங்கம்

பெப்பரவரி- 4!

நமக்குச் சுதந்திர தினமாமே! சுதந்திரமோ இல்லையோ ஆனால் விரிவுரை வகுப்பு எதுவுமில்லாமல் எமக்கு விடுமுறை என்பது மட்டும் உண்மை - இனிப்பான உண்மை .

முதல் நாள் இரவே அடுத்தநாளை எப்படிக் கழிப்பது என்ற கேள்வி நம்மிடையே எழுந்து விட்டது.

''நான் கறுத்தக் கொடி கட்டப் போகிறேன்'' என்றான் நண்பன் தில்லைநாதன்

''போடா மடையா! இது யாழ்ப்பாணமல்ல பேராதனைச் சர்வகலாசாலை! தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்துக்காக மாணவர்கள் ஒன்றாகப் போராடும் போது நீ கறுத்தக் கொடி கரடி விடப் பார்க்கிறாயா? அனாவசியமாக ஏன் ஆத்திரத்தைச் சம்பாதித் துக் கொள்ள வேண்டும்?'' என்று சீறினான் சீவநாயகம்.

அப்போ நாளைப் பகல் முழுதும் அறையைப் பூட்டிக் கொண்டு நித்திரை கொள்ளப் போகிறேன். என் துக்கத்தைக் காட்டிக் கொள்ள'' என்றான் திரும்பவும் தில்லைநாதன்.

''எந்த நாளுந்தான் நீ தூங்குகிறாயே! அதிலென்ன புதுமை யும் துக்கமும்? நாளைக்கு நீ ஏதாவது வேலை செய்தால் தான் அது புதுமையாகவும் துக்கமாகவும் இருக்கும் என்று சொல்லி விட்டுச் சிரித்தான் சீவநாயகம்.

ஆனால் எனக்குச் சிரிப்பும் வரவில்லை, துக்கமும் வர வில்லை. இப்படிப்பட்ட விஷயங்களில் எல்லாம் அக்கறைப்படும் ஆள் நானல்ல.

சந்தர்ப்பம் எப்படி இருக்கிறதோ அப்படி நடந்து கொள்ளும் வழக்கம் என்னுடையது. திட்டமிட்டு வாழ்வது எல்லாம் வேடிக் கையான விஷயம் எனக்கு. எனவே அவர்களின் பேச்சில் நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைப்படவில்லை. அன்று வாசிகசாலையிருந்து எடுத்து வந்த மாபாசனின் முன்நூறு பக்க வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தில் படித்த முதல் பத்துப் பக்கத்தின் நினைவுதான் என்மனதை முற்றுகை இட்டுக்கொண்டிருந்தது. நாளை எப்படியாகத்தான் இருந்தால் என்ன? எனக்குத்தான் படித்துச் சுவைக்க இன்னும் இருநூற்றுத் தொண்ணூறு பக்கங்கள் இருக்கின்றனவே!

நான் மௌனமாக இருந்தேன். முன்பே அவர்களின் கொள் கைகளும் கோட்பாடுகளும் எனக்கு ஒத்துவராது என்று திடமாக வும் சொல்லி விட்டிருந்தேன்.

நண்பர்கள் விடவில்லை. என்னை ஒரு துரோகி என்றனர். உலகத்து மண்ணில் வாழாமல் அந்தரத்தில் வெறும் எண்ணங் களின் வெறுமையில் வாழும் அசடு என்றார்கள். சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு நிறத்தை மாற்றிக்கொள்ளும ஓணான் என்றார்கள். நான் பொறுத்துக் கொண்டேன். நாளை போன பின் அவர்கள் நல்லாக வந்து விடுவார்கள் என்று எனக்குத் தெரியும். அத்துடன் அவர் களின் நன் மதிப்பும் பாராட்டும் எனக்கு வேண்டியிருக்கவில்லை. அவர்களின் சுகதுக்கங்களில் நான் சம்பந்தப்பட விரும்பவில்லை. அவர்கள் அழுதால் என்ன? அடிபட்டால் என்ன? எனக்கேன் கவலை. நான் ஓணான் போல் என்ன, ஒட்டகம் போல் என்ன, எப்படியாவது வாழ்வேன். ஏதோ ஒரு வகையாய் வாழ்ந்து விட்டால் போதாதா? என் வேலையை நாளை நான் கவனித்துக் கொள்ளுவேன். எனக்காக வேலையில் மாபாசன் காத்துக் கிடக் கிறான். துக்கமாவது சுதந்திரமாவது ?

பெப்பரவரி - 4 விடிந்துவிட்டது

காலை ஒன்பது மணி .

கொழும்பில் சுதந்திர சதுக்கத்தில் பட்டாளத்து வீரர்கள் அணுவகுத்து வந்து கொண்டிருப்பர். கவர்ணர் ஜெனரல் அவர் களின் மரியாதையை ஏற்றுக்கொள்வார். பாடசாலை மாணவ மாணவிகள் விளையாடி வேடிக்கை செய்வர். கும்மாளம்! கொண் டாட்டம்!

அது கொழும்பில்! ஆனால் யாழ்ப்பாணத்தில்?

கடைகள் பூட்டப்பட்டு கறுத்தக் கொடிகள் கட்டப்பட்டிருக் கும். போக்குவரத்து குறைந்து மரண அமைதி எங்கும் நிலவி நிற் கும். துக்கம் அனுட்டிப்பவர் பலர் - போலிக்காக சிலர்! என்றாலும் பொதுப்படையாகத் துக்கந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் வினோதம் அது தானா? ஒருவர் இன்பத்தில் மற்றவர் துன்பம் அடைவது இயற்கையா? சீ! அதெல்லாம் எனக்கெதற்கு கையில் இருந்த புத்தக ஒற்றைகளுக்குள் கண்களை புதைத்துக்கொண்டேன் யார் என்ன பாடுபட்டாலும் எனக் கென்ன?

''கனகே! கனகே!''

எதிர் அறை நண்பன் வீரசேகராதான் என்னை அப்படிக் கூப்பிட்டான். நாசமாய்ப்போக; பூஜை அறைக்குள் கரடி மாதிரி! மனமில்லாமல் வெளியே எட்டிப்பார்த்த வண்ணம் ''என்ன வேண்டும்?'' என்று கேட்டுக்கொண்டேன்.

''வா பூந்தோட்டத்துக்குப் போவோம். ஒஸ்டின், பீட்டர், குலே, விக்கிரமா, திலக், குய்ண்டஸ் எல்லோரும் போகிறோம். நீயும் வா 'பைலா'ப் போட்டு குஷாலாக நேரத்தைப் போக்கிவிட்டு மத்தியான சாப்பாட்டுக்கு வந்துவிடலாம். இன்று தான் லீவாச்சே!'' என்று அவசர அவசரமாக கால் சட்டை பட்டன்களைப் போட்ட வண்ணம் அடுக்கினான் அவன்.

அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்க வேண்டுமே! மாபாசன் மேசையில் போய் விழுந்தான். அவசர அவசரமாக பெட்டிக் குள்ளிருந்த உடைகளைத் தேடத் தொடங்கின என் கைகள். முஸ்பாத்தி என்றால் எனக்கு உயிர்தான் அதற்கு முன்னே மாபா சானாலும் எதிர்த்து நிற்க முடியவில்லை.

சில வினாடிகளுக்குள் தொப்பி ஒன்றைத் தலையில் வேடிக் கையாய் மாட்டிக் கொண்டு கூட்டத்தோடு கூட்டமாய் ஆட்டம் போட்ட வண்ணம் பூந்தோட்டத்துக்குப் புறப்பட்ட என்னை தில்லைநாதனும் சீவநாயகமும் ஆத்திரத்தோடு பார்த்துக் கொண் டார்கள். அதற்குப் பதிலாக முகத்தைக் கோணலாக்கி கையை வளைத்து உடம்பை நெளித்து ஆடிய வண்ணம், ''வாவேன் மச்சான் 'கார்ட்ன்'ஸுக்குப் போவோம்'' என்று வேண்டுமென்றே கேட்டுக் கொண்டேன். அவர்களின் கோபம் எனக்கு இன்பத்தை கொடுத்தது. வாழத்தெரியாத மடையன்கள்! கிடைப்பதை அனுபவித்து விட்டுப் போவதற்குப் பதிலாக துக்கமனுஷ்டித்தல் கொடி கட்டல் என்ற கொள்கை எல்லாம் எதற்கு. சுத்தப் பைத்தி யங்கள்!

பூந்தோட்டத்தில் எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி ஒன்று ஏற் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டு வளைந்து சாலை ஓரம் - ஓங்கி வளர்ந்திருந்த பாம் மரங்களின் பக்கத்திலே கூட்டம் போட்டு நாம் ஆடிக் கொண்டி ருக்கும் போது நான்கு 'சாரி'யுடுத்த பெண்கள் நம்மைத் தாண்டி போனார்கள். நாம் என்ன கலாச்சாரத் தூதுவர்களா அவர்களுக்கு மரியாதை செய்து ஒதுங்கி நிற்க? வகுப்பில் விரிவுரையாளருக்கு முன்னாலேயே வம்பு செய்யும் மாணவர்களாகிய நமக்கும் பண்பாட்டுக்கும் இடையே ரொம்பத் தூரம்தான்.

"விஸ் - வீஸ் ! " என்ற விசில் அடித்தான் ஒருவன்

"ரத்துப்பாட்ட, நில்பாட்ட மனிக்ககே சாரி" என்று பாடினான் இன்னொருவன்.

"ஹ்ஹ்ஹோ!" என்று கூடிச் சிரித்தனர் மற்றவர்கள்.

விளைவும் விளையாட்டாகவே இருந்தது.

நீலச்சாரி நாணிக் கோணியது.

சிவத்தச் சாரி நம்மைத் திரும்பிப்பார்த்துச் சிரித்தது.

பச்சை, முகத்தைப் பொத்திக்கொண்டு குப்புறக் குப்புற விழுந்தது.

வெள்ளை - ஆமாம் சுத்த வெள்ளைச் சாரி தலையைக் குனிந்து கொண்டு தார்றோட்டை அளந்தது?

அது போதாதா?

உற்சாகம் எங்களுக்குப் பொங்கிவிட்டது. அவர்களைத் தொடர வேண்டுமென்ற பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தனர் சிலர். அதில் நானும் ஒருவன். ஆனால், உற்சாகம் இருந்தாலும் அந்த அளவுக்கு உசார் எல்லோரிடமும் இருக்கவில்லை. ஆக நான் உள்பட நான்கே நான்கே நான்குபேர் மட்டும் தயாராய் நின்றோம். அடுத்த நிமிடம் இடதுசாரி முன்னணிக் கட்சி ஒன்றை நாம் நால்வரும் அமைத்துக் கொண்டு அந்த நான்கு பெண்களை யும் பின் தொடரத் தொடங்கினோம்.

ஆரம்பம் வழக்கம் போலத்தான்.

நால்வருக்கும் துணையாக 'கிட்பாக்' ஒன்றைக் கஷ்டப் பட்டுக் காவிக்கொண்டு பின்னால் இழுபட்டுக் கொண்டு சென்ற அந்தச் சின்னப்பையனுடன்தான் முதலில் கதையை ஆரம்பித் தோம். பாஷை சிங்களம் தான். பெண்கள் அழகாக உடுத்திருந் தாலும் ஆங்கிலம் தெரிந்தவர்கள் போலத் தெரியவில்லை. ஏதோ சுயபாஷை ஆசிரியைகள் போலும்! அதற்காக நான்கூட கவலைப் படவில்லை. எனக்குத்தான் சிங்களம் பேசச் செவ்வையாகத்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தெரியுமே! அது மட்டுமா? 'சிங்களச் சட்டத்துக்கு ஜே' பாட வேண்டியிருந்தாலும் அந்த நேரத்தில் ஆயிரம் தடவை யாரும் கேட்காமலேயே போட்டிருப்பேன். கொள்கையும் கோட்பாடும் நமக்கெதற்கு. சந்தர்ப்பம் தங்கம் போன்றது. போனால் கிட்டாது பொழுதுபட்டால் வருமோ தெரியாது.

''தம்பீ! பைக்குள் ஏதாவது சாப்பிடக் கூடியதாய் இருக்குமா?'' என்று நம்மில் ஒருவன் அந்தத் தம்பியிடம் மெல்லக் கதைவிட்டான்.

தம்பி மட்டும் சிரிக்கவில்லை. அக்காமாரும் சேர்ந்து சிரித்தனர்.

அடுத்தவனுக்கு அது உற்சாகத்தை ஊட்டி விட்டது. ''எங்கிருந்து வாரீர்கள்?'' என்று தைரியமாக அக்காமாரையே கேட்டுக் கொண்டான்.

எல்லோரும் சிரித்தனர். ஆனால் நீலச்சாரிதான் பதில் சொல்லிற்று. ''கம்பொளையிலிருந்து. ஆனால் உங்களுக்கேன் அதெல்லாம்?'' என்று கேள்வி ஒன்றையும் கூடவே போட்டது.

அதையெல்லாம் சொல்லியா தெரிவிக்க வேண்டும்? எங்கள் பதில் வேறொன்றாகவே இருந்தது. ''நாம் கூடக் கம்பொளையிலிருந்து தான்'' என்றான் ஒருவன். நல்ல காலமாக அவனுக்குக் கம்பளை தெரிந்திருந்தது. தொடர்ந்து கம்பொளையைப் பற்றிக் கதைத்துக் கொள்ள எங்களுக்கு அது உதவியது.

பிறகு நம்மை அறிமுகப்படுத்திக் கொண்டோம். சர்வகலாசாலை என்றால் அதற்கு ஒரு மதிப்புத்தான் போங்கள்! அக்காமார் சும்மா அசந்து போனார்கள்!

நேரம் வளர்ந்தது போல் உறவும் வளர்ந்துவிட்டது. சில மணி நேரத்துக்குள் ஒரு பெரிய மரத்தின் கீழிருந்து அவர்கள் கொண்டு வந்த சாப்பாட்டை எல்லோரும் பகிர்ந்து சாப்பிட்டுக் கொண்டோம். ஏதோ வருடக்கணக்காய் பழகியவர்கள் போல் இருந்தது நாம் நடந்துகொண்ட விதம்!

சாப்பிடும்போது தான் நாம் ஒவ்வொருவரும் மனதுக்குள்ளேயே 'செலக்ஷன்' நடத்திக் கொண்டோம்.

சிவப்புச் சாரிதான் அதில் அழகு ராணி! விழிகளின் நோக்கும் இதழ்களின் அசைவும் ஒவ்வொரு நிமிடமும் அதைச் சொல்லிக் கொண்டன. ஆனால் அதற்கு நான் போட்டி போடவில்லை! நான் விட்டுக் கொடுத்து விட்டேன். எனக்கு ஏதோ தாராள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பான்மை அப்படி ஒன்றும் இருக்கவில்லை. நான் வேண்டா தற்கு காரணம் அவளின் வெறும் பொம்மை அழகேதான். சுவை என்னைப் பொறுத்தவரை விசித்திரமானதுதான்!

நீலச் சாரி! அது ஒரு தினுசு! கதைப்பதற்கு அதைப்போல யாராலும் முடியாது. என்னைப் பொறுத்தவரையில் அந்தச் சிவப்பு நல்லது தான். நான் இரண்டொரு சிங்களம் பேசிவிட்டால் போதும். அவள் மீதியைப் பார்த்துக் கொள்வாள். என்றாலும் ஏனோ எனக்குப் பிடிக்கவில்லை!

பச்சைச் சாரி! அம்மாடியோவ்! நெசவுப் பள்ளிக்கூடத்தில் படிப்பதை விட்டுவிட்டு எங்கோ மருதானை முடுக்கொன்றில் வாழவேண்டியவள் அவள். மாபாசனின் றோட்டோரக் காதலி களைத் தான் அவள் எனக்கு நினைவூட்டினாள். அவளின் கன்னத் தில் படர்ந்திருந்த அந்தத் தேமல்? பார்வையும் அங்க அசைப்பும் எங்கெல்லாமோ என்னை எடுத்துச் சென்றாலும் அந்தத் தேமல் என்னைப் பயமுறுத்தவே செய்தது. விட்டுவிட்டேன்.

வெள்ளைச் சாரி! உள்ளே இருந்த உள்ளத்தின் தூய்மையை எடுத்துக் காட்டியது அந்த உடுப்பே. சாடையான கருமையான நிறம். நால்வருக்குள்ளும் குறைவாகப் பேசியவள் அவள் தான். சாந்தத்தின் சாயல் அவளின் விழிகளில் படர்ந்திருந்ததை முதல் பார்வையிலேயே கண்டு கொண்டேன். என்றாலும் அப்படியான வேளைகளில் சாந்தத்தையும் அமைதியையும் தேடக் கூடாது தான். அதுதான் பச்சைச்சாரியையே சுற்றி வந்தனர் நண்பர்களில் இருவர். ஆனால் எனக்கு ஏனோ இவளையே தான் பிடித்துக் கொண்டது.

சாப்பிடும் போதே அவளைச் சாடி உட்கார்ந்து கொண் டேன். பச்சைச்சாரிக்காரி என்னைத் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டாள். ஆனால் அந்த தேமல்தான் என்னை பயமுறுத் தியது. அவளைப் பார்க்காதவன் போலவே அருகிலிருந்தவளுடன் கதையை ஆரம்பித்தேன்.

''உங்கள் பெயர் என்ன''?

''தயாவதி'' - மெல்லச் சொல்லிவிட்டு வாழைப்பழத் தோலை உரிப்பவள் போல் பாவனை செய்து கொண்டாள் அவள். அத்துடன் என் பெயரைத் திருப்பிக் கேட்குமளவிற்கு இன்னும் அவளுக்குத் தைரியமும் வரவில்லை.

''நீங்கள் எங்கு படிப்பிக்கிறீர்கள்?'' நான் தொடர்ந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வட்டாப்பொள நெசவுப் பாடசாலையில்''

என்றாலும் எனக்கும் அவளுக்குமிடையே ஏற்பட்ட உறவு இன்னும் நெருக்கமாக வளரவில்லை. அவள் இன்னும் வெட்கப் பட்டுக் கொண்டாள். அதற்குள் ''படம் பார்க்கப்போவோமா?'' என்று நண்பன் ஒருவன் திட்டம் ஒன்றைப் போட்டான்.

ஆனால் காசு?

எல்லோர் 'பேர்சு'களும் மெலிந்தே இருந்தன.

என்றாலும் பச்சைச்சாரிக்காரி அந்தத் திட்டத்தைத் தூக்கிப் பிடித்துக் கொள்ளத் தவறவில்லை. அத்துடன் சிவப்புச்சாரி எங் களுக்கு டிக்கட் வாங்கித் தருவதாகவும் வாக்களித்தாள். ஆனால் அவர்களின் கஷ்டகாலத்துக்கு நேரந்தான் இல்லை, அப்போது இரண்டு மணிக்கு மேலாகிவிட்டிருந்தது. கண்டிக்குப் போகுமுன் 'மெட்னிஷோ' ஆரம்பித்துவிடும். அத்துடன் ஆறு மணிக்கு முன் அவர்கள் வீடு திரும்பிவிட வேண்டியும் இருந்தது.

அந்தச் செய்தி எனக்குத்தான் சந்தோஷத்தை அளித்தது. அங்கேயே இருந்து கொண்டு அவளுடன் ஆண்டுக்கணக்காய் கதைத்துக் கொண்டிருக்க வேண்டும் போல் என் மனம் துடித்தது. மரங்களில் இருந்து உலர்ந்து விழுந்த சருகு இலைகளின் சல சலப்பு, மெல்லத்தவழந்து வந்து தயாவதியின் கன்னத்து மயிரைத் தடவிச் செல்லும் அந்தத் தென்றல் காற்றின் குளுகுளுப்பு, மத்தியான வேளையில் அமைதி, அந்த அமைதியைக் குலைக்காம லேயே அங்குமிங்கும் இருந்து மோன இசை எழுப்பிய பறவை களின் சத்தம் எல்லாம் என் இதயத்திலே இன்ப அலைகளை எழுப்பிவிட்டன. என்றாலும் இரண்டொரு மணித்தியாலங்கள் சென்று எல்லோரும் மெல்ல உலவியவண்ணம் பூங்காவின் இடது கோடியிலிருந்த அந்த மேட்டு நிலத்தின் மறைவுக்குச் சென்ற பின்புதான் அந்த இன்ப அலைகளின் கொந்தளிப்பை என்னால் உணர முடிந்தது.

ஜோடி ஜோடியாய் நாம் ஒவ்வொரு மூலையிலும் உட் கார்ந்து கொண்டோம். என்னைப்போலவே மற்றவர்களும் தங்கள் தங்கள் ஜோடிகளைத் தேடிக்கொண்டுவிட்டனர். இனி எல்லாம் இரகசியந்தான். இத்தனை நேரம் நிலவிய பொதுப்பேச்சு எப் போதோ நின்று விட்டது.

என் பக்கத்தில் இருந்த தயாவதியின் கைகளை எடுத்து நான் பிசைந்து கொண்டேன். அவள் திடீர் என்று தத்துவம் பேசத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிவிட்டாள்! பாசம் சிலரிடம் சோகத்தைத்தான் கிளறும் போலும்!

"வாழ்க்கையே ஒரு வேடிக்கைதான்". என்றாள் அவள்!

"ஏன்?" என்று நான் கேட்டேன்.

"நேற்று நாம் எங்கேயோ இருந்தோம். இன்று இங்கே எத்தனையோ நாட்கள் பழகியவர்கள் போல் நடந்து கொள் கிறோம். ஆனால் நாளை?"

நாளை! அது எனக்கு அவ்வளவு பிடித்துக்கொள்ளவில்லை. நான் ஒரு சந்தர்ப்பவாதி. ஒப்புக்கொள்கிறேன். நேற்று நடந்தது நேற்றோடு போகட்டும். நாளை நடப்பதை நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம். இன்று நடப்பது எப்படி இருக்கிறதோ அப்படியே நாமும் அமைந்து கொள்வது தான் எனக்குபிடித்தம். அதனால் தான் கொள்கை கோட்பாடு எதுவும் எனக்கு பிடிப்பதில்லை இப்போது இவன் இப்பொன்னான நேரத்தை நாளை நடக்கப் போவதைப் பற்றிய நினைவில் செலவழிக்கப் பார்க்கிறாள்! பைத்தியம்!

தயா! ஆறுமணிக்கு இன்னும் இரண்டு மணித்தியாலங்கள் இருக்கின்றன. அதற்குள் எத்தனையோ செய்துவிடலாம் நாளை யைப் பற்றி நாமேன் கவலைப்பட வேண்டும்? என்று நான் பதில் சொல்லிக் கொண்டது அதனால் தான்.

"இன்று நல்ல நாள்! சுதந்திர தினம். நமக்கு நல்ல தினந் தான்" என்று அடுத்து அவள் பேச்சைத் திருப்பியது தனது மனதிலே மிதந்த சோகத்தை ஆழ்த்தும் எண்ணத்தோடுதான் என்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. எப்படியாய் இருப்பினும் எனக்கு அது சந்தேகந்தான். நாளையைப் பற்றிக் கவலைப்படாமல் இன்று நடப்பதைப் பார்த்துக்கொள்ளலாம் அல்லவா?

"ஆமாம். தயா! சுதந்திர தினம் என்வாழ்வில் ஓர் இன்ப தினம் தான்" என்று பதிலிறுத்துக் கொண்ட என் கண்முன்னே யாழ்ப்பாணத்தில் நடைபெறும் கடையடைப்பும் கறுப்புக் கொடி ஊர்வலமும் விடுதியில் துக்கம் அனுஷ்டிக்கும் தில்லை நாதனும் சீவநாயகமும் பவனி சென்றார்கள். பாவம் எல்லாம் பைத்தியங் கள்! கொள்கை ஒன்றுக்காக வாழ்ந்தால் இப்படி அருகில் ஒரு தயாவதியை வைத்துக்கொண்டு வாழ்க்கையைச் சுவைக்க முடி யுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஞ்சிய நேரத்தை அவளோடு சேட்டை செய்து கழித்த நான் வாழ்க்கையின் சுவைமிக்க பகுதிகளைத் தொட்டு விட்டேன் என்று பெருமிதப்பட்டுக் கொண்டேன். ஆனால் உண்மையான வாழ்வின் அர்த்தத்தையும் சுவையையும் அறிந்தது ஆறுமணியான பின் வெளியே வந்து பேராதனைச் சந்திக் கடை ஒன்றில் தேனீர் அருந்தும் போதுதான்.

மேசைக்கடியில் நம் கால்கள் நான்கும் ஒன்றை ஒன்று தொட்டுத் தடவிப் பிசைந்து கொள்ளும் வேளையில் அவள் தழுதழுத்த குரலில் என் விலாசத்தை சோகம் கலந்த ஆவலோடு கேட்டுக் கொண்டாள். ஆனால் ''கனகரத்தினம்'' என்று நான் என் பெயரை சொல்ல முன்பே வாயடைத்துப் போய் கண்ணீர்விட்டு ஏனோ அவள் அழத் தொடங்கிவிட்டாள்!

காரணம்?

பிறகு தான் புரிந்தது

நான் அவளைக் காதலிக்கவில்லை. அவளைத் தவிர அங்குள்ள வேறு யாருமே காதலைப்பற்றி கனவுகூடக் காணவில்லை! மாறாக இது ஒரு வித பொழுதுபோக்கு என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அவளின் உள்ளம் மட்டும் அதை ஒப்புக் கொள்ளவில்லை. சில மணி நேரந்தான் என்னுடன் அவள் பழகிக் கொண்டாலும் அந்தச் சில மணிநேரத்துக்குள் அவளுக்கு என் மேல் அளவில்லாத அன்பு ஏற்பட்டுவிட்டது. அந்த அன்பை அடிப்படையாக வைத்து என்னைக் காதலித்து கல்யாணம் செய்யவும் அவள் கனவு கண்டிருக்கிறாள்! ஆனால் அந்த கனவை எல்லாம் உடைந்து விட்டது 'கனகரத்தினம்' என்ற என் பெயர்!

''கனகரத்தினமா? அப்போ நீங்க ஒரு தமிழனா?'' என்று கண்ணீர் ஆறாகப் பெருக அவள் கேட்ட போது எனக்குத் தில்லைநாதனோ சீவநாயகமோ அல்லது கடையடைப்போ கறுத்த கொடியோ சொல்ல முடியாத கருத்தை என் இருதயத்துக்குள் ஈட்டி போல் புகுத்தி விட்டது.

சுதந்திரம் நம் நாட்டில் ஒரே ஒரு இனத்தின் சொத்தாக மட்டும் ஆகிவிடவில்லை இரண்டு இனங்களுக்கிடையே தீராத பகையையும் வெறுப்பையும் வளர்த்து ஒன்றை ஒன்று ஒதுக்கும் அளவுக்கும் அது செய்து விட்டது! அதன் காரணமாய் சாதி, சமயம், பாஷை என்ற வித்தியாசங்கள் எதுவும் இல்லாத காதல் கோட்டைக்குள்ளேயே கையை வைக்கும் அளவுக்கு இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் இனத் துவேஷம் வளர்ந்து விட்டது. இனி அதற்குக் கொள்ளை அடிப்பதும், கொலை செய்வதும் குரூரமான செயலாகத் தெரியாது!

அதற்குப் பிறகு தயாவதி என்னுடன் பேசவில்லை. பேச வேண்டியதை கண்ணீராக அழுது வடித்தாள்! அதைப் பார்த்த அந்தப் பச்சைச் சாரிக்காரி சிரித்தால் ''தமிழன் என்றால் அழ வேண்டுமா?'' என்று அவள் ஆச்சரியப்பட்டாள். தயாவதியின் போக்கு அவளுக்குக் கொஞ்சமும் புரியவில்லை. அவளுக்கு வேண்டியிருந்தது சில மணிநேரப் பொழுதுபோக்குத் தான் அதற்கு சிங்களமோ தமிழோ தடையாகப் போவதில்லை. ஆனால் தயாவதி விரும்பி நீடித்த பரஸ்பர ஒற்றுமைக்கு இரு இனத்தவர் களுக்கிடையே இனி இலங்கையில் இடமுண்டா?

உண்டு திகதி மாறினால்... பெப்பரவரி -4க்குப் பின் வேறொன்று வந்தால்!

அந்த நன்னாளின் நினைவிலே என்னை மறந்து விடுதி திரும்பிய நான் கொள்கை ஒன்றைக் கொண்ட புதிய மனித னாகவே மாறிவிட்டேன்.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிப்பாரா?

பவானி ஆழ்வாப்பிள்ளை

"மூர்த்தி, நான் பெற்ற ஒரே பிள்ளை நீயப்பா? என் ஆசை, கனவு! கற்பனை எல்லாம் உன்னைப் பொருளாகக் கொண்டவை தானே! நீ வாழ்வில் துன்பத்தைத் தேவையை உணராது வாழ் வதற்கென்றால் எந்தத் தியாகமும் எனக்கும் பெரிதாக தோன்ற வில்லை. என் இதயம் துடிப்பதே உன் நினைவால் மூர்த்தி! அந்த இதயம் வெடித்து நான் இறக்க வேண்டுமென்றால் அந்த குலம் கெட்டவளை மனங்குளிர மணந்துகொள், உன்னைப் பெற்ற வர்கள் ஊரில் தலைதூக்க முடியாது சிறுமைப்பட்டு, மனமுடைந்து சாவது தான் சந்தோஷம் என்றால் அவளை மணந்து கொள்!... எங்கே, என்னைப் பார் மூர்த்தி, அவளை மறந்துவிடுவேன் என்று ஒரு வார்த்தை சொல்லி என் மனங்குளிரச் செய்யடா!... ஒரு வார்த்தைதான்!... பெற்றவள் கெஞ்சுகிறேன்..." மூர்த்தி அந்தக் காட்சியை நினைவு கூரச் சகியாதவன் போல் கண்களை இறுக மூடிக்கொண்டான். பெற்றவளின் மனதை மகிழ்விக்க மூர்த்தி அந்த ஒரேயொரு வார்த்தையைக் கொடுத்து விட்டதால் இன்று உள்ளமும் உணர்வுமிழந்த உருவமாய் உலவுகின்றான். அன்று மூர்த்திக்குப் பெருஞ்சோதனை. அவன் சுமை ஒன்றும் புதிதல்ல. யுகயுகமாய் இரு உணர்ச்சிகளுக்கிடையில் நிகழும் போராட்டம் தான் - ஒன்றைக் கடமை என்பர்! மற்றதைக் காதல் என்பர்! கதைகளில் படித்திருக்கிறான் மூர்த்தி. சினிமாவில் பார்த்திருக் கிறான். நேரில் கண்டுமிருக்கிறான். அவனுடைய ஐந்து நண்பர்கள் இருந்தார்கள். அவர்களில் நால்வர் காதலை மறந்து கடமை பெரிதெனக் கவலையற்றுக் கல்யாணமும் செய்து கொண்டார்கள். எஞ்சிய நண்பன் ஒருவன் தான் காதலித்து வெற்றி கண்டான். ஆனால் அவன் காதலித்தவளோ அந்தஸ்துள்ளவள், அழகுள்ள வள், ஆஸ்தியுள்ளவள் - எல்லா விதத்திலுமே அவனுக்கு ஈடு கொடுத்தாள். இந்நிலையில் காதலுக்குத் தோல்வி ஏது? பிச்சை யைக் கூடப் பாத்திரமறிந்து தான் இடச்சொல்லி விட்டார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவர்கள். காதலையையும் அப்படித்தான் இடமறிந்து மதிப் பிட்டுக் கொடுக்க வேண்டுமோ?

அந்தச் சம்பவம் நடந்து இன்று ஆறு மாதங்கள் சென்று விட்டன. நாளை உதயத்தில் சுசீலாவுக்குத் திருணம். குலம், கோத்திரம் பார்த்துத் திருமணம். உலகின் உதயவேளையில் சுசீலாவின் வாழ்வும் மூர்த்தியின் வாழ்வும் அஸ்தமித்து இருள் பாய்ந்துவிடும். வீட்டு மாடியிலே அவன் அறையில் மூர்த்தியின் உருவம் சாய்வு நாற்காலியில் கிடந்தது. அவன் உணர்வோ தெருக்கோடியில் சுசீலாவின் கல்யாணக்களை தோய்ந்த வீட்டை நோக்கி ஓடிவிட்டது. மூர்த்தி கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஒன்பது. நாதஸ்வர கீதம் திறந்த ஜன்னலூடே காற்றில் மிதந்து வந்தது. மேள ஒலி அவன் இதயத்தை பிளப்பது போல் இருந்தது. மனதில் பட்ட பச்சைக்காயம் ரணமாக வலித்தது. மூர்த்தி எழுந்து ஜன்னலை அறைந்து மூடினான். சுசீலாவின் குணத்திலே குறை வில்லை என்றாலும் பிறப்பிலே குறைவைத்து விட்டார் படைத்த கடவுள். அவளின் நிலையை அறிந்தும் தன் பெற்றோர்கள் சம்மதிக்க மாட்டார்களென்று தெரிந்தும் மூர்த்தி தன்னுள்ளத்தை நெகிழவிட்டான். எண்ணும் திறனென தனக்கு இருந்ததெல்லாம் அவளை சுற்றி படரவிட்டான். தன் அறிவின் எச்சரிக்கைக்குப் புறம்பான முடிவைக் கொண்டுவிட்டான். ஆனால் அந்த முடிவைப் பின்பற்றிச் செல்லக் கூடிய தருணத்தில் துணிவிழந்த கோழையாகி விட்டான்.

சுசீலா ஒளிவு மறைவு அற்றவள். அவள் மூர்த்தியிடம் எதையும் மறைக்கவில்லை.

''மூர்த்தி, ஏழ்மையிலும் நான் கண்ட நிறைவே நான் தரக் கூடிய நிதியம். குணமே நான் தரும் குலம். ஆனால் நமது சமூகம் கொடுமை வாய்ந்தது. மூர்த்தி, எண்ணித்தான் துணிந்தீர்களா? அல்லது இவை உணர்ச்சி வேகத்தில் பேசும் வார்த்தைகளா ?''

''நான் துணிந்துவிட்டேன் சுசி. உலகம் வேகமாக முன் னேறுகிறது. அந்த முன்னேற்றப் பாதையில் சாதி வரம்புகள் நிலைத்து நிற்க முடியாது. நாளைய உலகம் நம்மைத்தான் ஆதரிக் கும் சுசீ. இதில் சிந்திப்பதற்கு என்ன இருக்கிறது?'' எவ்வளவு நம்பிக்கையோடு மூர்த்தி அன்று பேசினான். இன்று மனச்சாட்சி யின் பாதை தாங்காது புழுப்போல் நெளிகிறான். சுசீலா அவனை நம்பினாள். ஆமாம்! அவன் திண்மையில், திடசித்தத்தில் நம் பிக்கை வைத்தாள். இன்று அவள் எண்ணத்தில் ஒரு கணம் கூட நிலைக்கத் தகுதியற்றவன் ஆகிவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தியின் மனம் கலாசாலை நாட்களை நோக்கித் தாவியது. எத்தனை இன்பமான நாட்கள் அவை. அந்த வாலிப சமூதாயத்திலே காதலுக்கு எதிர்ப்பு இல்லை. ஆதரவு தான் கிடைத்தது. அந்தக் கவலையற்ற வாழ்க்கையோட்டத்தில் பெற்றோர்கள் எதிர்க்கக்கூடுமென்ற சிறு நினைவு கூடத் தேய்ந்து விட்டது. வாழ்க்கையின் பரிதாபமே இதுதான். சீர்திருத்தக் கருத்துக்களைச் சிந்தையாய்க் கொண்ட இளைஞர் உலகம் சாதி சமய வேற்றுமைகளை மதிப்பதில்லை அவை இன்றைய சந்ததிக்கு அர்த்தமற்றவையாய்த் தோன்றும். அதனால்தான் பழைமையில் ஊறிய புதிய சந்ததியின் மனப்போக்கு அதற்கு விளங்குவதில்லை. ஆசார அனுஷ்டானங்களில் ஊறிய பழைய சமூக திட்டத்தை போற்றி வாழும் முதிய சந்ததி சமூக சீர்திருத்தத்தை ஆதரிப்பதில்லை. சாதியை ஒழிப்பது சத்தியத்தை அழிப்பதை ஒக்கும் என்றெண்ணும் சந்ததி அது. அதனால்தான் கடமையைப் பாசத்தைக் காட்டி களங்கமற்ற இளம் உள்ளங்களைச் சிதைத்துவிடுகின்றது. மூர்த்தியின் தந்தை கண்கலங்கக் காலில் விழாத குறையாகக் கெஞ்சினார்.

''மூர்த்தி உனக்கு வாழ்க்கையில் எல்லா வசதிகளையும் அளிக்க முடியாது போய்விடுமோ என்ற பயத்தால் எனக்கு வேறு குழந்தையே பிறக்காது பார்த்துக் கொண்டேன். விளையாட்டல்ல, மூர்த்தி. உண்மைதான். கடைசியில் எனக்கு நீ செய்யும் உபகாரம் இதுதானா? மானத்தோடு வாழ்ந்துவிட்டேனப்பா! மானத்தோடு என்னைச் சாகவிடு மூர்த்தி!'' மூர்த்திக்கு மனம் தாளவில்லை. அவர் பச்சையாய்த் தன் உள்ளத்தைத் திறந்து காட்டியது அவனை என்னவோ செய்தது உள்ளத்தில் கொப்பளிக்கும் ஆற்றாமைதானே அவரை அப்படிப் பேசச் செய்தது.

''அப்பா... அப்பா.... நீங்கள் விரும்பியபடியே செய்கிறேன் அப்பா!'' மூர்த்திக்கு அப்பொழுது தன் குரலே வேற்று மனிதனின் குரல்போல், விசித்திரமாக ஒலிப்பது போல் தோன்றியது. மூர்த்தி சற்றே உடம்பை நெளிந்து கொடுத்தான். பெற்றோருக்கு நிம்மதி அளித்துவிட்டவன் தன் நிம்மதியைப் பறிகொடுத்துவிட்டான். அவன் இதயத்தில் செதுக்கப்பட்ட அந்த உயிரோவியத்தை என்ன முயன்றும் அவனால் அகற்றிவிட முடியவில்லை. சுசீலா தான் அவனைப் பற்றி என்ன நினைத்திருப்பாள். அன்றொருநாள் அவளிடம் பெரிதாக வீரம் பேசினானே!

''மூர்த்தி, எங்கள் இருவரை மட்டுமன்றி, இது உங்கள் பெற்றோரையும் சுற்றத்தையும் சம்பந்தப்பட்ட விஷயம். எங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகம் அப்படிப்பட்டது. எனக்காக எந்த எதிர்ப்பையும் சமாளிக்கும் உறுதி உங்களுக்குண்டா? எனக்காக ரத்த பாசத்தின் பிணைப்பைக் கூட உதறி விடமுடியுமா உங்களால்?'' சுசீயின் உள்ள அடித்தளத்திலே இந்த அச்சம் சதா அரித்துக்கொண்டிருந்தது. நியாயமான அச்சந்தானே! மூர்த்தி அவளுடைய விரிந்த கண்களை, சற்றே திறந்த உதடுகளைப் புருவ வளைவைப் பார்த்துப் பாசத்தோடு, பெருமையோடு சிரித்தான்.

''சுசீ, தாழ்வில் நீ கண்ட திருப்திதான் வாழ்வில் எனக்கும் வேண்டியது. எனக்குச் சுற்றமும் சூழலும் இனி நீதானே? ஒருவருக்கொருவர் துணையாக வாழ்வது போதாதா? சுசீ? என் மேல் அத்தனை அவநம்பிக்கையா உனக்கு?'' அத்தனையும் சொற்கள் தான். வெறும் வெற்றுச் சொற்கள் தான். அன்று அந்தச் சிறுமிக்கு இருந்த அறிவு, தைரியம் - அவற்றில் ஒரு துளி கூட அவனுக்கு இல்லாமல் போய்விட்டது. அவள் உள்ளத்தின் நம்பிக்கை, ஆசை, கனவு, அத்தனையையும் குழிதோண்டிப் புதைத்துவிட்டான். சுசீலா அவனை நோகவில்லை; குற்றம் கூறவில்லை: வெறுக்கவுமில்லை.

''மூர்த்தி, உங்கள் பெற்றோரின் மனக்கசப்பின் அடிப்படையிலே நம் வாழ்வை அமைத்துக் கொள்வதால் சுகமில்லை. உங்கள் மனைவியாக வருபவள் உங்கள் குடும்பத்தை வாழ்விக்க வருபவள் - குடும்பத்தை குலைக்க வருபவள் அல்ல. வருந்தாதீர்கள். காலம் உங்கள் உள்ளக்காயத்தை ஆற்றிவிடும்'' அறிவு வார்த்தைகளை உருவாக்கி உதிர்த்தது. ஆனால் உள்ளமோ உடைந்து சுக்கலாகிக் கொண்டிருந்தது. அடக்க முடியாது கண்களில் பொங்கிய கண்ணீர் துடைக்கத் துடைக்கப் பெருகியது.

''சுசீ! உன்னை எப்படி மறப்பேன் சுசீ! உன்னை எப்படி மறப்பேன்?'' சட்டென்று அவள் கைகளைப் பற்றித் தன் மார்பிலே புதைத்துக் கொண்டான், சுசீ இன்னொருவன் உடைமையாவதா? முடியாது! முடியவே முடியாது! வெறி பிடித்தவன் போல் அவளை இமையாது பார்த்து நின்றான்.

''சுசீ, உனக்களித்துவிட்ட இதயத்தை வேறெந்தப் பெண்ணுக்கும் என்னால் கொடுக்க முடியாது. சுசீ! எனக்கு மிக அருகில் இருந்த நீ இன்று அணுக முடியாத இலட்சியம் ஆகிவிட்டாய். என் நெஞ்சில் நிலைத்த உன் நினைவிலேயே நான் வாழ்வில் திருப்தி காணுவேன். நீ என்னை மறந்து சந்தோஷமாக வாழவேண்டும். சுசீ... மறுபிறவி என்று ஒன்றிருந்தால்!...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபிறவி! தொடுவானம்போல உரு விளங்காத புரியாத மறுபிறவியை நினைத்து ஆசையை, உள்ளத்தாபத்தைத் தணித்துக் கொள்ள முடியுமா?

மூர்த்தி பெருமூச்சு விட்டான். மெல்லிய நாதஸ்வர ஒலி அடங்கி வெகு நேரமாகவிட்டது. வெளியே பால் நிலவு காய்ந்து கொண்டிருந்தது. உலக இருளுக்கு ஒளி ஏற்ற ஒரு நிலவு உண்டு! -அவன் உள்ள இருளுக்கு?.... ஏன் இல்லை? சுசீயின் நினைவு, அவன் உள்ளத்தில் என்றும் சிரிக்கும் சுசீயின் அழகு முகம் அவன் வாழ்வில் இருளென்பதே இல்லாமற் செய்துவிடும்.... விடிய ஆறு மணிக்குக் கோயிலில் முஹூர்த்தம் என்று கேள்விப்பட்டிருந்தான். கல்யாண வீட்டுக்காரர் எல்லோருமே தூங்கியிருப்பார்கள். உலகமே உறங்கிவிட்டது. ஆனால் அவன் உள்ளத்திற்குத்தான் இனி உறக்கமென்பதில்லையே! சுசீலா தூங்குவாளா? அல்லது அவனைப்போல் நினைவுகளால் அலைப்புண்டு தவித்துக் கொண்டிருப்பாளா? சுசீலாதான் அதற்குள் திருமணத்திற்குச் சம்மதிப்பாள் என்று அவன் நினைக்கவில்லை. அதற்குள் அவனை அவளால் மறக்க முடிந்ததா? ஏன் மறக்கக்கூடாது? அவனை நினைத்து அவள் ஏன் உருகவேண்டும்? நம்பி வந்தவளை நட்டாற்றில் விட்டுவிட்டான். ஏளனத்திற்கு, அவமானத்திற்கு, அவதூறுக்கு ஆளாக்கிவிட்டான். அவனுக்காக அவள் வாழ்வெல்லாம் நிராதரவாய். நிறைவற்றவளாய் அலையவேண்டும். என்று நியதியா? ஆமாம். சுசீலா அவனை மறக்கத்தான் வேண்டும். அதுதான் அவனுக்குத் தகுந்த தண்டனை. ஆனால்.... ஆனால் மூர்த்தியால் தான் அவளை மறக்க முடியவில்லையே! அவன் அவளை மறக்க விரும்பவில்லையே! அன்று அவள் சொன்ன வார்த்தைகள் இன்று போல் அவன் காதில் ஒலித்தன.

''மூர்த்தி, உங்கள் மனைவியாய் வாழ நான் கொடுத்து வைக்கவில்லை. இருந்தும், நீங்கள் என்னை -என்னை மட்டுமே காதலிக்கிறீர்கள் என்ற நினைவே எனக்கு நிறைவளிக்கும். நான் எதற்காகவும் வருந்தவில்லை. நான் எங்கு சென்றாலும், என்ன வானாலும் உங்கள் நினைவுதான் என்னை வாழ்விக்கும். மறவாதீர்கள்!'' சுசீலா ஆழ்ந்து, உணர்ந்து வாழ்பவள். வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் ஏதோ அற்புதத்தை, ஜீவரகஸ்யத்தை உணர்பவள். அவளுக்கா இந்தக் கொடுமை நடக்கவேண்டும்?.... கடவுளே சுசீலாவின் அந்த வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவன் காதில் ஒலித்தன. இலைகளினூடே தென்றலின் முணுமுணுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புப்போல அவள் குரல்தான் அந்த வார்த்தைகளை அவன் காதில் வந்து ஓதிற்று. ஏனோ மூர்த்திக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. சுசீலா அருகிலிருப்பது போன்ற பிரமை ஏற்பட்டது. மூர்த்தி தன் இதயத்தை அமுக்கிப் பிடித்தான். முகத்தைக் கரங்களில் புதைத்துக் கொண்டான்.

''ஐயோ சுசீ!'' உள்ளத்தைப் பிளந்து எழுந்தது அவ்வேதனைக் குரல். ''ஐயோ சுசீ!'' பாவம்! அவன் வேறென்ன சொல்ல முடியும்? வார்த்தைகளில் வடிக்க முடியுமா அந்த வேதனையை? சொல்லித் தெரியமுடியுமா அந்த இதயத்தின் வலி? அனுபவித்தல்லவா அறியவேண்டும்!

''மூர்த்தி, மனச்சாட்சி ஒன்றின் முன்தான் மனிதன் இவ்வுலகில் மண்டியிட வேண்டும். மனச்சாட்சியின் சொற்படி வாழ்வை அமைப்பவன் தெய்வத்தின் வழி நடப்பவன் ஆவான்.'' மீண்டும் சுசீயின் அதே ரகஸ்யக்குரல் மூர்த்தி உடம்பைச் சிலிர்த்துக் கொண்டான். ஏன் இன்று மட்டும். இந்த எண்ணங்கள் அவன் நினைவில் தோன்றுகின்றன? சுசீயைப்பற்றி எத்தனையோ இனிய நினைவுகள், இன்பக் கதைகள் எல்லாம் இருக்க, இன்று மட்டும் இந்தச் சில வார்த்தைகள் அவன் நினைவில் ஓங்குகின்றன. சுசீ நாளை இன்னொருவனை மணக்கப் போகிறாளென்றா? இல்லையில்லை. சுசீ உள்ளமும் உணர்வுமாக என்றும் அவனுக்கே உரியவள். அவளை மணக்கப்போகிறவன் - பாவம் - அவள் உடலைத்தானே ஆளப்போகிறான்? ஆமாம், அவள் தன்னை மறந்து விட்டாள் என்று நினைத்தது மடத்தனம். சுசீ தன் காதலின் நினைவை என்றென்றும் மறக்கமாட்டாள்! மறக்க முடியாது. இந்த நினைவு மூர்த்தியின் நொந்த மனதிற்கு ஏதோவொரு நிறைவளித்தது...

'சலக் .....சலசலக்!.....' மூர்த்தி திடுக்கிட்டுச் சப்தம் வந்த பக்கம் திரும்பினான். 'சலசலக்.... சலக்!' மூடிய யன்னல் கண்ணாடியின் வெளிப்புறத்தில் சிறு கற்கள் மோதி விழுந்தன. யாரோ வெளியே நின்று அக்கற்களை எறிந்து அவன் கவனத்தைக் கவர முயல்கிறார்கள் போலும்! மூர்த்தி எழுந்து யன்னலைத் திறந்தான் - அங்கே.....அங்கே....

''சுசீலா!'' மூர்த்தி மெல்லக் கூவினான். ஆமாம்! அவன்தான்! கரிய போர்வையால் முக்காடிட்டு இருந்தாள். நிமிர்ந்து மேல் நோக்கிய அவள் முகத்தில் நிலவொளி வீசியது. மூர்த்தி திரும்பிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிகளை இரண்டு எட்டில் கடந்து வெளியே ஓடினான். அவள் நின்ற இடத்தில் அவளைக் காணவில்லை! பிரமையோ என...

''மூர்த்தி?'' மெல்ல இழைபோல் அவள் குரல் இருளிலிருந்து எழுந்தது.

''உண்மையாக நீயா சுசீ? இங்கு எப்படி வந்தாய்? உன்னைத் தேடமாட்டார்களா?''

''இல்லை மூர்த்தி, தலையிடி என்று சீக்கிரமே தூங்கச் சென்று விட்டேன். எல்லோரும் தூங்கிவிட்டார்கள். அறைக் கதவைப் பூட்டிச் சாவியை எடுத்து வந்தேன். விடியுமட்டும் என்னைத் தொந்தரவு செய்யமாட்டார்கள். அவர்கள் எழுந்திருக்கு முன் திரும்பிவிடுவேன்.''

''சரி , இங்கே நிற்கவேண்டாம். உள்ளே வா சுசீ. வீட்டில் என்னைத் தவிர ஒருவரும் இல்லை. அப்பா, அம்மா வெளியூர் போய்விட்டார்கள். வா!'' அறையினுள் மூர்த்தி விளக்கை ஏற்றினான். சுசீலா கண்களைக் கூசிக்கொண்டு அவனுக்கெதிரே சுவரில் சாய்ந்து கொண்டான்.

''நாளைக்கு எனக்குத் திருமணம்...'' பாதி தனக்குள்ளும் பாதி உரத்துமாய் முணுமுணுத்த சுசீலா மூர்த்தியை நிமிர்ந்து நோக்கினாள்:

''மூர்த்தி, நான் திருணம் செய்து கொள்ளப் போகிறேன் என்றதும் ஆச்சரியப்பட்டீர்களா? என் தாயின் திருப்திக்காக, இந்த சமூகத்தில் வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்காகத் திருணம் செய்து கொள்ள உடன்பட்டேன். என் உள்ளத்தையும் உணர்வையும் உங்கள் ஒருவரால் தான் தொடமுடியும். ஆனால்.... ஆனால்... இன்று என் உடலைக் கூட இன்னொருவன் தொடநேரும் என்ற நினைப்பையே என்னால் தாங்க முடியவில்லை. மூர்த்தி, நான் உங்களுக்குரியவள். என் உள்ளமும் உணர்வும் உடலும் உங்களுக்குரியவை. என் வாழ்வு உங்களோடு ஆரம்பித்து உங்களோடு முடிவதொன்று. உங்களுக்குள்ளே அது என்றென்றைக்குமாய் ஒன்றிவிடட்டும். மூர்த்தி, ஆண்டவனுக்கு அர்ப்பணமாகி விட்ட மலர் பொன்தட்டில் இருந்தாலும் புழுதியில் வீழ்ந்தாலும் புனிதம் குறையாது மூர்த்தி!'' அவள் நிறுத்திவிட்டு அவனைப் பார்த்தாள்.

''நீ என்ன.... சொல்கிறாய் சுசீ?'' அவன் குரல் நடுங்கியது.

''உங்களுக்குப் புரியவில்லையா மூர்த்தி? இல்லை. உங்களுக்கு நன்றாகப் புரிகிறது. மூர்த்தி, காதலித்தவனையே கணவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாகக் கொள்வது தான் கற்பெனில், இந்த என் முடிவு கற்பு நெறிக்குச் சிறிதும் புறம்பானதல்ல மூர்த்தி.....''

''உண்மையாகவா சுசீ?'' கற்பனைக்கெட்டாத சுகம் என்று ஒன்று இருந்தால் மூர்த்தி அதை அக்கணம் உணர்ந்தான். சுசீலா ஓடிவந்து அவனருகே மண்டியிட்டாள்.

''மூர்த்தி, நேர்மையே உருவான உங்கள் சுசீலா ஒழுக்கந் தவறிப் பேசுகிறாள் என்று நினைக்கிறீர்களா? இல்லை. என் மனச்சாட்சிக்கு மதிப்புக் கொடுத்ததால் தான் உங்களிடம் வந்திருக் கிறேன். உங்கள் உரிமையை இப்பொழுது ஏற்றுக்கொள்ளுங்கள். நமது வாழ்வை இக்கணமே வாழ்ந்து முடித்துவிடுவோம். கோடி இன்பங்களையும் ஒரு கணத்தினுள் குவித்துக்கொள்வோம். நாளை சுசீலா நடைப்பிணமாகிவிடுவாள்....''

சட்டதிட்டத்தைச், சாதிவரம்புகளை மதித்தவர்கள் மனித இதயங்களை மதிக்கவில்லை. அதனால் சுசீலா இன்று பண்பிழந் தவளா? ஒழுக்கம் கெட்டவளா? வழுக்கிவிழுந்தவளா? அன்றி இது தான் வாழும் வீரமா?

சுசீலா துடிக்கும் உதடுகளை பல்லால் அழுத்திப்பிடித்தாள்.

''மூர்த்தி..... மூர்த்தி மானசீகமாய் மட்டுமன்றி என்னால் என்றுமே உங்களோடு வாழமுடியாது. ஆனால் ... இந்தக் கணம் உங்களோடு வாழ்கிறேன். இதை அறிந்தால் உலகம் என்னைக் கேவலமாய்க் கருதும்; பகிஷ்கரித்துவிடும். ஆனால்... கடவுள் என்னை மன்னிப்பார் இல்லையா?''

''சுசீ!'' மூர்த்தி அவளை இறுக அணைத்துக் கொண்டான். ''நிச்சயமாக நம்மை மன்னிப்பார்!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் இன்பம்

உதயணன்

செங்கதிர்கள் இருளின் வயிற்றைப் பிளந்தெறிந்ததால் அடி வானம் தேய்ந்து செந்நிறமாக காட்சி தந்தது.

மணி ஆறரை!

கந்தசாமி புரண்டு படுத்தான். அவன் கொஞ்சம் முன்னதாகவே எழுந்து விடுவதால் அவனுடைய வீட்டில் ஏதாவது புதுமையாக நடந்து விடப் போகிறதா? தலையைத் தூக்கி ஒரு நோட்டம் விட்டான். அடுப்புப் புகைந்து கொண்டிருந்தது; கோப்பியாகும்.

தங்கம் வாசற்படியில் உட்கார்ந்து தங்களது மூன்றாவது 'படைப்பை' மடியில் வைத்து தலைவாரிக் கொண்டிருந்தாள். கழுதை கெட்ட கேட்டுக்கு குஞ்சம் ஒன்றுதான் குறைச்சல்.

கந்தசாமி வலது பக்கமாகத் திரும்பிப் படுத்தான். கன்னம் 'சில்'லென்று இருந்தது. தலையணை ஈரம்! ஆமாம். இனி அவன் வடிப்பதற்குக் கண்ணீரே இல்லை; எல்லாவற்றையும் வடித்து விட்டான். சாட்சி, நனைந்து போன அந்த தலையணை. இனி அவன் வணங்குவதற்குத் தெய்வமே இல்லை. எல்லாத் தெய்வங் களையும் வணங்கிவிட்டான். சான்று நைந்து போன அவனுடைய உள்ளம். இனி அவன் சிந்தித்துப் பார்க்க ஒரு வழியுமே இல்லை. எல்லா வழிகளிலும் சிந்தனையைச் செலுத்திப் பார்த்து விட்டான் ஆதாரம், தனது சிந்தனா சக்தியைப் பற்றி அவனுக்கு இருந்த நல்லெண்ணம்.

அவனுடைய ஐந்தாவது சிருஷ்டி தவழ்ந்து வந்து அவனு டைய கால் கட்டைவிரலைக் கடித்து, முளைத்து வரும் பல்லின் பலத்தைக் காட்டியது. கந்தசாமி குழந்தையைத் தூக்கித் தனது பக்கத்தில் படுக்க வைத்தான். பாயின் முரட்டுப்புல் குழந்தையின் முதுகுப் புண்ணை உராஞ்சியதால் அது வீறிட்டுக் கத்தியது. குழந்தையைத் தூக்கி தன் நெஞ்சியில் உட்கார வைத்துவிட்டுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித்தான். நல்லவேளை சிந்திப்பதற்கு பணம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லாமல் இருந்ததே.

குழந்தையின் உடம்பு எல்லாம் கிரந்திப் புண். பிறந்த ஊராக இருந்தால் அளவெட்டிப் பரியாரியார் இருக்கவே இருக்கிறார். இங்கு கொழும்பில்? ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக அவனுக்கு நேரமில்லை. நேரமிருந்தாலும் மருந்துக்கும் பத்தியத்திற்கும் சத்துள்ள உணவிற்கும் மற்றது இல்லை - பணம்!

''வேலைக்குப் போகவில்லையா? மணி ஏழாகிவிட்டது'' என்று சொல்லிக் கொண்டு வந்த தங்கம் கோப்பியை அவன் அருகில் வைத்தாள்.

''போக வேண்டியதுதான்'' என்று எழுந்த கந்தசாமி அவளைப் பார்த்து சிரித்தான். அவன் சிரித்தது உள்ளம் பொங்கிய களிப்பினால் அல்ல - வெள்ளம் தலைக்கு மேல் போய்விட்டதாம் இனி அழுதென்ன சிரித்தென்ன என்ற நினைவினால். அந்தச் சிரிப்பு அவனையும் அவளையும் ஏமாற்றிவிட்டு தன்னுயிரை மாய்த்துக் கொண்டது.

கந்தசாமி காலைக்கடன்களை முடித்து கொண்டு வந்து வெற்றி முரசு கொட்டும் மூன்றாவது வாரமாக அந்த காற்சட்டையை அணிந்துக்கொண்டான்.

'விரைவில் இன்னொரு காற்சட்டை தைத்துக் கொள்ள வேண்டும்' என்று வழக்கம்போல அன்றும் எண்ணிக் கொண்டான். அந்த எண்ணத்தை அடித்துப் புரட்டி விழுத்தி விட்டு பாய்ந்தது ஒரு பெருமூச்சு.

வேலைக்குபோகிறவாராச்சே என்று சதம்சதமாகப் பொறுக்கி தங்கம் வாங்கி வைத்திருந்த மூன்று தோசைகளையும் பிள்ளை பரிவாரத்திற்கு பகிர்ந்தளித்து விட்டுப் பிதாவாகப் புறப்பட்டான் கந்தசாமி.

தாழ்வாரத்தில் ஒட்டிக்கொண்டிருந்த யுத்த காலத்தில் பலத்த பந்தோபஸ்துடன் ஈழத்திருநாட்டிற்கு வந்து சேர்ந்த வாகனத்தை – சைக்கிளை வெளியே இழுத்து அதன் முதுகை - ஆசனத்தை தட்டிக்கொடுத்தான். காற்சட்டைக் கால்களை காலோடு சேர்த்து சுற்றி ஒரு 'கிளிப்'பைக் கொழுவி விட்டான்; காற்சட்டை சைக்கிளில் மாட்டிக்கொள்ளக் கூடாது என்பது ஊர் அறிந்த காரணம். அவன் மட்டிலும் தெரிந்த சில பல காரணங்களும் இருக்கலாம்.

தங்கம் வாசலில் வந்து நின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தசாமிக்கு விஷயம் விளங்கி விட்டது

'கணவன்மார்களே! நீங்கள் வெளியே புறப்படும் சமயமாக வாசலில் குறுக்கே வந்து நின்று உங்கள் மனைவியர் ஒரு புன்ன கையை வலுக்கட்டாயமாக உங்கள்பால் விட்டெறிந்தால் அடுத்து வர இருக்கும் ஒரு பேராபத்திற்கு முகம் கொடுக்கத் தயாராகுங்கள். அவர்களைத் தொட்டுத் தாலிகட்டிய அந்தப் பழைய கணக்கைக் கூட்டிப்பார்த்து ஆறுதலடையுங்கள். மிஞ்சிமிஞ்சிப் போனாலும் அவர்களுடைய கோரிக்கை ஒரு புடைவையாகவோ ஒரு புன் னகையாகவோ தான் இருக்கும். 'ஆகட்டும்' என்று சொல்லி வைத்தால் போதும். வாக்கைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் இல்லை. கண்ணீர்க் குண்டுகளுக்குப் பயந்து உங்கள் பலவீ னத்தை வெளிப்படுத்தாமல் தைரியமாக நடந்து விட்டால் உங்கள் வர்க்கத்தினரின் மானத்தைக் காத்த பெருமையைப் பெறுவீர்கள்.

''தங்கம் .... !'' கந்தசாமி சிரமப்பட்டு ஒரு சிரிப்பை இழுத்து வந்து தன் முகத்தில் மேயவிட்டான். எங்கள் நிலை தான் உனக் குத் தெரியுமே. கடன்காரர்களால் பகல் நேரத்தில் வீட்டுக்குவரவே முடியவில்லை. பொறுத்ததோடு இன்னும் ஒரு மாதம் பொறுத்துக் கொண்டால், நீ கேட்ட சேலையை வாங்கி விடலாம்.''

தங்கத்தின் முகத்தில் எவ்விதமான உணர்ச்சியின் பிரதி பலிப்பும் தெரியவில்லை. பெண்ணல்லவா?

''அதுவும் போக'' கந்தசாமியே தொடர்ந்தான். ''மற்றவர்கள், வசதியுள்ளவர்கள் ஆடம்பரமாகத் தான் வாழ்வார்கள். அதைப் பார்த்து நாமும் ஆசைப்பட்டால் முடியுமா? பிள்ளைகளுக்கே உருப்படியான சட்டை எதுவும் இல்லை. உன்னை இந்தக் கோலத்தில் காண்பதில் எனக்கு மட்டும் திருப்தியா என்ன? என்னவோ கெட்டகாலம் சேலையை அடுத்த மாதம் வாங்கிக் கொள்ளலாம் 'ம்' என்று சொல்லு, நான் நிம்மதியாக வேலைக்கு போய் வரலாம்'' கந்தசாமி நிறுத்தினான்.

''உங்களுக்கு எப்பொழுதுதான் இந்தப் பஞ்சப்பாட்டு தொலையப் போகிறதோ தெரியாது. வருஷம் பன்னிரண்டு மாதம் உங்களுக்குத்தான் கொள்ளையும் கோதாரியும். இனிமேல் உங் களை ஒன்றும் கேட்காமல் தெருவால் போகிறவன் வருகிறவனை சேலைவாங்கித் தரச்சொல்லிக் கேட்கட்டுமா?''

''நீயுமா தங்கம்?'' என்றான் 'சீஷர்' பாணியில். அவனுடைய முகத்தில் பரிதாபம் இடம் பிடிக்க அகத்தில் வேதனை குடிபுகுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீயுமா? நிலைமைதெரிந்த நீயுமா என்னை வதைக்கிறாய்?'' என்றவன் தன் கண்களில் ஜென்மன் பெறும் முத்துக்களை மனைவி கவனித்து விடக் கூடாது என்று சைக்கிளில் ஏறி வேகமாக மிதித்தான்.

'அவளும் தான் எத்தனை காலத்திற்கு பொறுப்பாள்? என்னுடைய தங்கம் தங்கமானவள்.'

கந்தசாமியை - கந்தசாமியையா - தாங்கமுடியாமல் அந்தப் பழைய சைக்கிள் நெழிந்தது. பின் சில்லு ஒன்பதாவது கம்பியையும் முறித்து பின்னரும் சாமகீதம் பணிவுடன் பாடலுற்றது. கந்தசாமி திருவுளம் இரங்கி சைக்கிளை விட்டு இறங்கி அதைத் தள்ளிக் கொண்டு நடந்தான்.

கந்தசாமிக்கு முன்னால் போய்க் கொண்டிருந்த ஒருவன் தனது காற்சட்டைப்பையில் கையை விட்டு கைகுட்டையை வெளியே எடுத்தான். அதோடு ஒரு மடித்த காகிதமும் சேர்ந்து வந்து தெருவில் விழுந்தது.

''ஐயா...!'' என்று குரல் கொடுத்தபடி கந்தசாமி அதை எடுத்து விரிந்தான். அது ஒரு நூறு ரூபா நோட்டு. அதற்கிடையில் உரியவன் தெரு மூலையில் திரும்பிவிடவே கந்தசாமி நோட்டை ஆகாய வெளியில் பிடித்துப் பார்த்தான். சந்தேகமில்லை. இது ஒரு கள்ள நோட்டு!

நேர்மை வேணடா மென்றது
வறுமை வேண்டு மென்றது
உள்ளத்தில் ஒரு மின்னல்!

'...வருஷம் பன்னிரண்டு மாதமும் உங்களுக்குத்தான் கொள்ளையும் கோதாரியும்..... வருஷம் பன்னிரண்டு மாதமும் உங்களுக்குத்தான் கொள்ளையும் கோதாரியும் .... வருஷம் பன்....'

கந்தசாமி நடந்தான் எதிரே ஒரு பொலீஸ்காரன் வந்தான் கந்தசாமியை ஏதோ ஒன்று எச்சரிக்கை செய்தது. அந்தக் கள்ள நோட்டை எட்டாக மடித்து சட்டைப்பை அடியில் போட்டுக் கொண்டு குனிந்தபடி நடந்தான். பொலிஸ்காரன் போய்விட்டான்.

கந்தசாமி மேலும் நடந்தான். எதிரே அவனுக்கு கடன் கொடுத்த ஒருவன் வந்தான். கந்தசாமி பயந்துபோய் சைக்கிளைத் தெருவோரத்தில் நிறுத்தி விட்டு ஒரு சந்தில் நுழைந்து மறைந்து கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலீஸ்காரனைக் கண்டு கள்ளநோட்டை மறைத்த கந்தசாமி கடன்காரனைக் கண்டு தன்னையே மறைத்துக்கொண்டான். ஏன் கந்தசாமியும் இந்த சமூதாயத்தில் ஒரு 'கள்ளநோட்டு'த் தானா? அவனைப் போன்றோர் மனிதரோடு மனிதராக வெளிப்படையாக வாழ முடியாதா?

இங்கு கந்தசாமியைப் பற்றியும் ஒரு வார்த்தை குறிப்பிட வேண்டும். அவன் நடுத்தர வகுப்பில் வந்து விடிந்தவன் - ஒரு குமாஸ்தா!

∴ ∴ ∴

வழக்கம் போல அலுவலகத்தில் ஒரு கட்டுப்பணத்தையும் அதற்குரிய பத்திரங்களையும் ஒப்புக்கொண்டான் கந்தசாமி. அந்தப் பதினாராயிரம் ரூபாவையும் வங்கியில் கொண்டுபோய் கட்டிவிட்டு வர வேண்டும். அவனுடைய உள்ளத்தில் மெல்லிய கீறல் விழுந்து துடித்தது. அவனுக்குச் சிந்திக்க நேரமில்லை. மனைவியிடமும் மற்றவர்களிடமும் மதிப்பாக வாழவேண்டு மென்றால் பொய்யும் புரட்டும் செய்யத்தான் வேண்டுமென்று எண்ணியதோடு துணியவும் செய்தான்.

அந்தக் கள்ளநோட்டை எடுத்து அதில் அடையாளமாக ஒரு சிலுவைக் குறியைப் போட்டு அதை நோட்டுக் கட்டுக்கு நடுவில் திணித்தான். ஒரு நல்ல நோட்டை எடுத்துத் தான் வைத்துக் கொண்டு நடந்தான்.

ஐயோ. அந்த அரை மணி நேரமாக அவனுடைய மனம் துடித்த துடிப்பு! ஏதாவது விபரீதமாக நடந்துவிட்டால் நாளைக்கு தங்கத்தின் கதி...? பிள்ளைகளின் நிலை...? 'தங்கத்தின் மீது ஆணை! இனிமேல் இந்த வேலையை நான் செய்யவே மாட் டேன்' என்று எண்ணியவனாய் வங்கிப் படிகளில் இறங்கினான் - கையில் நல்ல நோட்டுடன்!

அந்த ஒரு நாள் ஆவது அவனுடைய குடும்பத்தை இன்ப மாக இருக்க வைப்போம் என்ற நினைவு போலும், கடைதெருவில் இறங்கினான் கந்தசாமி.

எல்லோருக்கும் வரிசையாக உடுப்பு வாங்கினான். நல்ல உணவுப் பொருட்களை தேடி வாங்கினான். தங்கத்திற்கு ஒரு 'கிலிட்' சங்கிலி, தனக்கொரு ஜப்பான் பேனா, மூத்ததுக்கொரு ரிபன், இளையதிற்கு ஒரு கிலுகிலுப்பை – இன்னும் எத்தனையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைக்காரனுக்கு ஒன்றேகால் ரூபா கடன் வேறு வைத்து விட்டுத் திரும்பினான் கந்தசாமி.

அன்றிரவு கந்தசாமி சாவதானமாக இருந்து கூப்பன் கடைக்கு எவ்வளவு காய்கறிக் கடைக்கு எவ்வளவு என்று எதிர் வரும் சம்பளப் பணத்திற்கு பங்கீட்டுக் கணக்கு போட்டுக் கொண் டிருந்தான். அன்றைக்கு குளித்து முழுகி வயிறார உண்டதால் பிள்ளைகள் எல்லோரும் உறங்கி விட்டனர்.

தங்கம் வெற்றிலை மடித்து கந்தசாமியின் வாயில் வைத்து விட்டுச் சிரித்தாள். பலநாட்களுக்குப் பிறகு அவளுடைய விழிகள் அவனை -

''ஏன் சிரிக்கிறாய்? '' என்று அவளுடைய கன்னத்தைக் கிள்ளப் போனான் கந்தசாமி.

''ஆமாம் இன்றைக்கு இவ்வளவு பணம் ஏது?'' என்று தங்கம் கேட்டாள்.

கந்தசாமி அவளிடம் பொய் சொல்லவில்லை உண்மையை யும் சொல்லவில்லை சிரித்து மழுப்பினான். பேச்சை வேறு துறைக்கு மாற்றினான்.

''இன்றைக்கு நீ மிகவும் அழகாக இருக்கிறாய்'' என்று கொஞ்சினான்.

''போங்க..... ! '' என்று அவள் கடைக்கண்ணால் அவனை நோக்கினாள். அவன் அவளை இழுத்து தன் மடியில் படுக்க வைத்தான் அவள் நெளிந்தாள்.

∴ ∴ ∴

விடிந்தது.

கந்தசாமி படுக்கையை விட்டு எழவில்லை; எழ முடிய வில்லை. அவனுக்கு நல்ல காய்ச்சல் முதல் நாள் வெயிலில் அலைந்ததன் விளைவு.

தங்கம் குடிநீர் போட்டுக் கொடுத்தாள். அதைக் குடித்து விட்டு, வீடு தேடி வந்த கடன்காரனின் வசைகளை வாங்கிக் கொண்டு கிடந்தான்.

மூன்றாம் நாள் காலை அவனுடைய வீட்டு வாசலில் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து அவன் வேலை பார்த்த கடை முத லாளியே இறங்கி வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எப்படியப்பா கந்தசாமி சுகம்?"

"இப்போ பரவாயில்லை சார்" என்று பயபக்தியுடன் பதில் தந்தான் கந்தசாமி.

"அவசரப்படாமல் நன்றாகச் சுகம் வந்ததும் வேலைக்கு வா. இது இந்த மாதச் சம்பளம். உனக்கு நெருக்கடியாக இருக்கு மென்று இருபத்தைந்து ரூபா மேலதிகமாக வைத்திருக்கிறேன். அதை அடுத்த மாதச் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளலாம்" என்று சொல்லி ஒரு உறையை தங்கத்திடம் கொடுத்தார்.

முதலாளி போய் விட்டார்.

கந்தசாமி உறையை வாங்கி ஆவலோடு பிரித்து உள்ளே இருந்த ஒரே ஒரு நோட்டை வெளியே எடுத்தான். அதன்..... வலது பக்கம் மேல் மூலையில் ..... ஒரு சிலுவை அடையாளம் இருந்தது.

ஒரு நூறு ரூபா நோட்டு !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்து

நவம்

'தன்னை மறத்தல்' என்பது ஒரு பெரிய சங்கதி தான். தன்னை மறந்த நிலையில் ஒருவர் செய்கின்ற செயலும் பெரிய சங்கதி தான்.

இந்த நியதிக்குச் சரவணமுத்துவே இதோ 'சாலுங்கரி'யாக இருக்கின்றான். அவனோடு கூட, நாகண்டாப் போடியையும் சேர்த்து கொள்ள வேண்டியதுதான்.

ஃ ஃ ஃ

வயற் காட்டு தெம்மாங்கு காற்றிலே குதி போட்டு மிதந்தது...

''வாம்போ தலைகாணி, வாய்க்காலோ பஞ்சு மெத்த ஓ....
நாகங் குடைபிடிக்க நற்பாம்பு தாலாட்ட ஓ...
சீரிச்சோ நாகமது, சிவந்ததோ கண்ணிரெண்டும் - ஓ...
பாம்பால 'சும்மாடு' படத்தால, 'மொக்காடு' ஓ....
வீசினான் கையை விரித்தான் சடைமுடியை - ஓ....
சங்கு முழங்குதடா, சங்கரனார் கோயிலிலே - ஓ...
கொக்கும் பறக்குதடா, குளக்கரைக்கும் அப்பாலே - ஓ...''

தன்னை மறந்த உணர்ச்சி வேகத்தோடு 'தெம்மாங்கு' க்கு இசைவடிவம் கொடுத்துக் கொண்டிருந்தான் சரவணமுத்து.

இனிமையான வைகறைப் பொழுதாலோ; வயிற்றைக் குழுமையாக நிறைத்திருந்த 'தண்ணிச் சோற்றாலோ' வலுவோடு வேலை செய்ததால் ஏற்பட்ட 'தெம்பாலோ' மட்டும் அவனுக்கு இந்த உற்சாகம் ஜனிக்கவில்லை.

அதற்கு வேறு ஒரு 'காரண' மும் இருந்தது.

அவள் -

அவளை இயக்கும் ஆதார சுருதி - நாகாத்தை சற்று நேரத்துக்கு முன்னர்தான் சங்கீதத்தை அவன் செவிகளில் 'பெய்து'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு கெண்டைக்கால், வயற்சுழியில் புதையப் புதைய லாகவ நடைபோட்டுச் சென்றிருந்தாள்.

சுழியில் புதைந்த அவளுடைய ஒவ்வோர் அடியும், சரவண முத்துவின் பம்மிப் பருத்த மார்பை தாண்டிக் கொண்டு அவன் இதயத்தின் மீது 'மலர்த்தடத்தை'ப் பதித்து, விட்டிருந்தது. 'களுக்,' 'களுக்' என்ற இன்ப சுருதியோடு அவள் அடிபெயர்த்து வைத்த ஒய்யாரம்; சிற்சில சமயம் சுழியில் ஆழப் புதையுண்ட தன் கால்களை அவள் மீட்பதற்குச் செய்த பிரயத்தனம்; அதி லிருந்து பிறந்த பரதம்; கை என்ற வாழைக் குருத்து ஒய்யார லயத்தோடு வீசித் துவண்ட கோலம்; அதில் குதிபோட்ட கண் ணாடி வளையல்களின் 'கலீர்' 'கலீர்' என்ற சங்கீதம்; பனை ஓலைப் பெட்டியைத் தாங்கியிருந்த அந்தத் தலையின் கலைக் கோலம்; எதேச்சையாக நெற்றியில் விழுந்து கிடந்த கூந்தல் இழைகள், அள்ளி முடித்திருந்த கொண்டைக்குத் திருஷ்டி பட்டு விடாமல் 'கவசம்' போல் காத்து நின்ற முக்காடு; தளிர் மேனியை இறுக்கிப் பற்றியிருந்த சட்டை; பாதி வயிறு வெளியில் தெரிய முந்தானையை இடுப்பில் அள்ளிச் செருகியிருந்த காம்பீர்யம் இவையெல்லாம் சேர்ந்து சரவணமுத்துவைப் 'பாடு! பாடு!' என்று பணித்தன.

பாடி விட்டான்.

நாகாத்தை அவன் பார்வையிலிருந்து மறைந்து விட்டாள். அதுவரை இடுப்பில் வைத்திருந்த கையை எடுத்து ஓய்ந்திருந்த மண்வெட்டிக்கு வேலை வைத்தான் சரவணமுத்து.

மண்வெட்டிக்கு மட்டும் தான் அவள் வேலை வைத்தானா? மனத்துக்கும் சற்று வேலை வைத்தான்.

அடுத்தநாள் இரவு நடை பெறப்போகும் 'சுபத்திரை கல் யாணம்' அவனுடைய நெஞ்சுக் 'களரி' யில் கூத்தாடியது. கூத்தில் அவனுக்குத் தரப்பட்ட பாத்திரம் அர்ஜுனன்! தன்னை ஒரு நிஜ விஜயனாகவும், நாகாத்தையைச் சுபத்திரையாகவும் 'ஒப்பனை' செய்து துள்ளியது அவன் உள்ளம். தான் வேலை செய்து கொண்டிருந்த மண்வெட்டியையே ஒரு கணம் தூக்கிப்பிடித்து விஜயனின் வில்லாக அதைப் பாவனை செய்து பார்த்துக் கொண் டான் சரவணமுத்து...

இந்த 'வீர' நினைவுக்கு மத்தியில் வயிற்றைக் குமட்டும் ஒரு காட்சியும் படரத்தான் செய்தது சரவணமுத்துக்கு! அந்த காட்சி யின் 'பாத்திர'மான 'வேடன்' நாகண்டாப் போடியையும், அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிலிருந்து வீசும் சாராய நாற்றத்தையும் நினைத்த போது வயிற்றைக் குமட்டியது சரவணமுத்துக்கு.

சுபத்திரை கல்யாணத்தில் ஓர் உபகாட்சியாக வரும் அருச்சுனன் பாசுபதம் பெற்ற வரலாற்றில் சிவன் வேடனாக உருமாறி வில் விஜயனை பரீட்சிக்கின்றார். இந்தக் காட்சியில் வேடனாக வருபவன் நாகண்டாப் போடி. இந்த வேடுவ நாகண்டானுக்கு நாகாத்தை மீது ஒரு கண் இருப்பது ஊரறிந்த ரகசியம். சரவண முத்துவுக்கு இந்த 'ரகசியம்' இப்பொழுது நினைவுக்கு வந்து அவன் உள்ளத்தில் அபசுரத்தை இசைத்தது.

சற்று முன்னால் தன்னுடன் பேசிவிட்டுச் சென்ற நாகாத்தை கூட இந்த 'வேடன்' விவகாரத்தைப் பற்றியும் நினைவுபடுத்தி 'கெதியில் இதற்கு ஒரு முடிவுகட்ட வேண்டும்' என்று கேட்டு விட்டுச் சென்றிருந்தாள்.

சரவணமுத்து அதற்குச் சொன்ன பதிலும் அவனுக்கு இப்போ ஞாபகம் வந்து சற்று ஆறுதல் தந்தது.

''நாளைக்குக் கூத்து இருக்கிறது. கூத்தில் சுபத்திரையைக் கல்யாணம் முடிக்கிறான் அர்ச்சுனன். அது முடிஞ்ச கையோடு இந்த 'சுபத்திரை'க்கும் தாலி கட்டுகிறான் இந்த 'அருச்சுன' மகாராசன்! ....

மனவயலைத் தோண்டிக் கொண்டிருந்த நினைவு மண் வெட்டியில் திடீரென்று ஒரு தடங்கல்!

நாகாத்தை பரக்கப் பரக்க ஓடி வந்து கொண்டிருந்தாள். அவளுடைய தோற்றத்தில் காணப்பட்ட கலவரம் சரவணமுத்துவை ஒரு கணம் நிலைகுலைய வைத்து விட்டது.

தலையில் கட்டியிருந்த சால்வையை அவிழ்த்து முகத்தில் ஊறியிருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டான் சரவண முத்து.

'என்ன நாகாத்தா? போன கையோடு திரும்பி விட்டாய்?''

''நானாகத் திரும்பவில்லை அந்த 'நாசமறுவான்' தான் திருப்பி விட்டான்! ''

'ஆர் நாகண்டானா?'

'அந்தப்' புறக்கி'தான். இவ்வளவு நாளாக வாய்ச்சேட்டை யோடு அந்த வழிசல் விட்டிரிந்துச்சி. இப்ப கையைப் புடிச்சி இழுக்கிற மட்டில் வந்திற்று!' என்று பதட்டத்துடன் கூறிய நாகாத்தா சற்று முன்னால் தனக்கு நேர்ந்த 'விபத்தை'ப்பற்றி ஒன்றுவிடாமல் கூறிமுடித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷயம் இது தான்

சரவணமுத்துவை சந்தித்து விட்டு, பரந்த அந்த வயல் வெளியைத் தாண்டி வந்து கொண்டிருந்தாள் நாகாத்தை.

சற்று முன்னம் சரவணமுத்து அவளுக்குக் கொடுத்திருந்த வாக்குறுதி. அவள் உள்ளத்தில், வளர்ந்து வரும் கதிர் பறியா வேளாண்மைப் பயிர்போல் பசுமையாகத் தலையசைத்துக் கொண்டிருந்த வயல்வெளிக்குச் சற்று தள்ளிக் காணப்பட்ட பற்றைக் காட்டின் மத்தியில் ஒரு கூட்டம் தென்னைமரங்கள். வயல் நீரில் தத்தி திரிந்த 'பனையான்' விரால் மீன்களைக் கொத்தித் தின்ன எங்கிருந்தோ ஒரு கூட்டம் கொக்குகள் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தன.

தென்னங் கூட்டத்தின் மத்தியில் நாகண்டான் நல்ல 'நிற கலை'யில் விழுந்து கிடக்கிறான். அவன் வாய், நானே அருச்சுன னடி! நாராணன் தங்கையே கேளும் பெண்ணே! என்ற 'சுபத்திரை கல்யாண'க் கூத்துப்பாட்டை பாடிக்கொண்டிருக்கிறது. அவனுக் குப் பக்கத்தில் சரிந்து கிடந்த ஒரு 'முழுசில்' கால்வாசிக்குக் குறைவாகச் சாராயம்.

காலையிலிருந்தே 'கேஸ்' ஏற்ற தொடங்கியிருக்கிறான்.

சரவணமுத்துவின் உறுதி மொழியிலும், அவன் சத்தம் போட்டுப் பாடிய அந்த வயற்காட்டுத் 'தெம்மாங்'கிலும் தன் னைப் பறிகொடுத்து விட்டு வந்து கொண்டிருந்தாள் நாகாத்தை. இடையிடையே அந்தத் 'தெம்மாங்கின்' அடிகளையும் வாய்க்குள் 'முணுமுணுக்க' அவள் மறக்கவில்லை.

....பாம் பால சும்மாடு. படத்தால மொக்காடு! வீசினாள் கையைவிரித்தாள் சடைமுடியை....! அப்பப்பா! பெருமை அவளுக்குப் பிடிபடவில்லை.

தெம்மாங்கில் வர்ணிக்கப்பட்டபடி தன் கையை ஒரு முறை வீசிப்பார்த்துக் கொள்கிறாள் அவள்.

என்ன இது?

வீசிய அவள் கை திரும்ப அதன் நிலைக்கு வரவில்லை!

ஒரு வலுவான கரம் அவள் கரத்தை அழுத்திப் பிடித்து நிறுத்திக் கொண்டிருந்தது

'ஆய்' என்று கத்தி விடுகிறாள் நாகாத்தை. ஒரு கணம், ஒரே ஒரு கணம். அதற்குள் அவள் நிலைமையைப் புரிந்து கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகிறாள். தெம்மாங்கின் இறுதி அடி 'பளிச்' என்று நினைவுக்கு வருகின்றது. 'விரித்தாள் சடைமுடியை.'

அந்த இறுதி அடி ஆணையிட்டபடி விரித்தாள் தன் சடை முடியை!

தன்னை இறுகப் பற்றியிருந்த அந்த முரட்டுப் பிடியிலிருந்து ஒரு 'திமுறு' திமுறினாள். விடுதலை! நாகண்டான் நெரிந்த 'நெரி'யில் அவள் குறுத்துக்கை சிவந்து விடுகின்றது கண்ணாடி வளையல்களும் நொருங்கி விடுகின்றன.

கைமட்டுமா சிவந்தது? கண்களும் தாம். நாகண்டாவின் கண்களும் சிவந்துதான் இருந்தன போதையில்!

'நாகாத்தா! இப்பதான் வாறியா? நாக்கு 'விழுந்த' நிலையில் பிறந்தது கேள்வி

'சீ?' - நாகாத்தை அந்த இடத்தை விட்டு ஓடிவிடுகின்றாள்.

ஃ ஃ ஃ

கோவில் வீதியின் மத்தியில் குடை விரித்து நின்றது கூத்துக் களரி பழைய காலம் போல், 'களரி'யைச் சுற்றி வாழைக் குற்றியில் பந்தம் எரியவில்லை. 'டியூப் பல்ப்'புகள்தாம் 'எரிந்து' கொண்டிருந்தன. 'களரி'யைச் சுற்றி மணல் தெரியாத அளவுக்கு ரசிக கோடிகள், குழுமியிருந்தனர்.

'களரி' 'உறங்காமல்' இருப்பதற்காக 'மத்தாளம்' கம்பீரமாகப் 'பேசி'யது. அண்ணாவியாரும், அவரது கோஷ்டியினரும் எப்போதோ அரங்கேறிய 'கட்டுப்பெட்டி' நாடகத்திலிருந்து நல்ல துள்ளல் மெட்டில் சில பாட்டுக்களைப் பாடிக் கொண்டிருந்தார்கள்.

விஸ்வநாதன் - ராமமூர்த்தி ஈடுகொடுக்க முடியுமா இந்த 'மெட்டு'க்கு ?

கூத்து ஆரம்பமாகின்றது.

'கட்டியகாரன் களரிக்குள் குதிக்கிறான் வெள்ளைச் சால்வையைத் திரையாக விரித்து, கட்டியக்காரனை மறைத்துப் பிடிக்கின்றனர் இருவர். பகல் வெற்றி கொழுத்தப்படுகின்றது. களரிக்கு வெளியில் சீன வெடி 'படபட' வென்று முழங்குகின்றது. அண்ணாவியார் அற்புதமானதொரு 'தாளக்கட்டு' வைக்கின்றார். மத்தளம் முழங்க சல்லாரி ஒலிக்க காலில் கட்டிய 'சலங்கை' 'கலீர் கலீர்' என்று குலுங்க கட்டியக்காரன் என்ற 'பபூன்' கூத்தாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றான். அண்ணாவியார் ஆட்டுவிக்க அவன் ஆடுகின்ற ஆட்டம் 'களரி'யில் கலகலப்பை ஏற்படுத்துகின்றது.

'தாளக்கட்டு' அமர்களம் ஓய்கின்றது. மறைத்திருந்த சால்வைத் திரை அகற்றப்படுகின்றது.

'கட்டியக் காரன் வந்தான் கைதனில் பிரம்பும் கொண்டு.... என்று மேல் உச்சஸ்தாயியில் 'தம்' பிடித்துப் பாடிக்கொண்டு 'களரி'யில் தாளம் பிசகாமல் ஆடி வருகின்றான் கட்டியகாரன்.

அவனுடைய உறவினர்களும், நண்பர்களும் 'களரி'க்குள் புகுந்து கழுத்தில் கடதாசி மாலைகளையும் தோளில் சால்வை களையும் 'பரிசாக'ப் போட்டு மகிழ்க்கின்றனர். சிலர் அவனு டைய இடுப்பிலும் சால்வையைக் கட்டி விடுகின்றனர். கொஞ்சம் நெருங்கிய நண்பர்கள் பிளாக்ஸுக்குள்ளிருந்து கொஞ்சம் 'அம் பாரை'யை ஊற்றிக் கொடுத்து கூத்துக்கலைஞர்களை உஷார்ப் படுத்தவும் தவறவில்லை!

அதையடுத்து 'சுபத்திரை கல்யாண'க் கதை ஆரம்பமா கின்றது. வில் விஜயன், பரந்தாமன், சுபத்திரை, சேடிப் பெண்கள் என்று கதாபாத்திரங்கள் 'களரி'யில் தோன்றுகின்றனர். அவர்களுக் கும் அதே வெள்ளைத்திரை மறைப்பு; பகல்வெற்றி; சீன வெடி முழக்கம்; கடதாசி மாலை கௌரவம்; சால்வை அணிவிப்பு; அண்ணாவியாரின் தாளக்கட்டு தொடர கூத்தின் மெயின் கதை ஆரம்பிக்கிறது. ஒவ்வொரு பாத்திரமும் தத்தம் வீர பிரதாபங்களை பாட்டிலும், ஆட்டத்திலும் காட்டிக்கொண்டு செல்கின்றனர்.

காட்சி மாறுகின்றது.

அர்ஜுனன் தவக்கோலத்தில் வீற்றிருக்கிறான். பன்றி ஒன்று குறிக்கிட்டு அவன் தவத்தைக் கலைக்க எத்தனிக்கின்றது. தவக் கோலத்திலிருந்து கண்விழித்த அர்ஜுனன் தன் காண்டீபத்தில் கணையைப் பொருத்தி பன்றி மீது குறிவைக்கின்றான். திடீரென்று அந்தக் கணத்தில் தோன்றிய வேடன் ஒருவனும் அதே பன்றிக்கு குறிவைத்து எய்கின்றான். இருவருடைய கரங்களும் ஏககாலத்தில் பன்றியின் உடலைத் துழைத்து அதன் உயிரை வாங்கி விடுகின் றன. யாருடைய அம்பினால் பன்றி இறந்தது? என்பதில் வேடனுக் கும், விஜயனுக்கும் தர்க்கம் பிறக்கின்றது. வாய்த் தர்க்கம் முற்றி கைகலப்பில் முடிகின்றது. இருவரும் ஒருவரை ஒருவர் மோதிக் கொள்ளுகின்றனர். விஜயனின் பிடியிலிருந்து வேடன் தப்புவதும் அந்த வேடனுக்குத் தன் வில் முறியுமட்டாக விஜயன் அடிப்பதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னால் அவனுடைய பக்தியையும் தீரத்தையும் வியந்து வேடனுருவில் வந்த சிவன் அவனுக்குப் 'பாஸ்பதம்' தருவதும் கதை.

இங்கோ 'களிரி'யில் கதை முற்றாக மாறுகின்றது.

வேடன் ஓடவுமில்லை; 'பாஸ்பதம்' அருளவுமில்லை; சுருண்டு விழுந்தான்! குருதி களரியில் பீறிட்டுப் பாயத் துடிதுடித்துப் புரண்டான்! கூத்துக்களரி இரத்தக் களரியாயிற்று.

நாகாத்தைக்காக, நாகண்டாப் போடியை ஒரு வெறித் தனத்தில் பழிதீர்த்துக்கொண்டான் சரவணமுத்து!

விடிய விடிய நடக்கவேண்டிய கூத்து அன்று பாதியிலேயே முடிந்தது!

ஃஃ ஃஃ ஃஃ

நாகண்டாப் போடி உலக மேடையில் கூத்து ஆடுவதற்காகத் தான் போட்ட 'மனித வேஷத்தை'க் கலைத்து விட்டு இந்த உலகத்தை விட்டே சென்று விட்டான்!

உலக மேடையில் கூத்தாடுவதற்காகப் புதிதாக ஒரு வேஷத்தைப் போட்டுக்கொண்டு நின்றான் சரணவமுத்து!

அவன் ஏற்க இருக்கும் பாத்திரம் குற்றவாளி!

நாகாத்தையும் கூத்தாடத் தயாராகிக் கொண்டு தான் இருக்கிறாள். அவள் ஏற்க இருக்கும் பாத்திரம் - கண்ணீர் நிறைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளன் நாடி!

காவலூர் ராசதுரை

''ஏனப்பா இப்பொழுதெல்லாம் நீ ஒன்றும் எழுதுவதில்லை''

ஆமாம் வெகுகாலமாக ஒன்றும் எழுதாமல் இருந்து விட்டேன். அப்படி இருந்தால் சரிப்பட்டு வராது. உடனே உட்கார்ந்து ஏதாவது எழுத வேண்டும்.

என்னத்தை எழுதுவது? சிறுகதையா? கட்டுரையா? நாடகமா?

நாடகத்துக்குக் கிராக்கி அதிகம் தான் எடுத்த எடுப்பிலே எழுதுவதற்கு நாடகம் சரிப்பட்டு வராது. அனுபவமும் போதாது. இன்னும் கொஞ்ச காலம் போகட்டும்.

கட்டுரை எழுதுவோமா? சே! எனக்கு பிடிக்காத விசயம் அது.

சிறுகதை?

இப்போதைக்குச் சிறுகதை ஒன்றை எழுதுவோம்.

மூன்று நாலு கதைக்குக் 'கரு' இருக்கிறது. எதை எழுதுவது?

'ஜீவமலர் என்ற கதையை எழுதினால் என்ன? ஊஹூம்! இன்னும் கொஞ்சகாலம் அது மனசில் கிடந்து வளர வேண்டும் சிறுகதை எழுதுவது குழந்தை பெறுவதைப் போல உயிர் விழுந்து, கருவளர்ந்து உந்தி பருத்து, இனி முடியாது என்ற அவஸ்தையில் பிரசவிக்க வேண்டிய சங்கதி. சுமை இறங்கியதும் என்ன சுகம்!

அடே நல்ல கற்பனை. சிறுகதையைப் பற்றிக் கட்டுரை எழுத நேர்ந்தால் இந்த உபமானத்தை உபயோகிக்க வேண்டும் கட்டுரையே எழுதுவோமா? கட்டுரை வேண்டாம்.

வேறேந்த கதையை எழுதுவது? முதலில் எந்த பத்திரிகைக்கு எழுதுவது என்று தீர்மானித்து விட வேண்டும். கட்டுப் பெட்டிப் பத்திரிகை, முற்போக்குப் பத்திரிகை, பெண்கள் படிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகை, குழந்தைப் பத்திரிகை, கிழவர் பத்திரிகை இப்படி வகை வகையான பத்திரிகைகள் இருக்கின்றன. வெறுமனே ஆன்ம திருப்திக்காக இப்பொழுது கதை எழுத உட்காரவில்லை நான்.

''இஞ்சேருங்கோ; அம்மா எழுதின காயிதத்துக்கு இவ்வளவு நாளாய் மறுமொழியே எழுதேல்லை. பேனாவை கொஞ்சம் தாறியளா? ''

''இவ்வளவு நாளும் இருந்துட்டு நான் எழுத உட்கார்ந்ததும் தான் உனக்கு எழுதவேணும் போல இருக்காக்கும். சனியன்! உம்! இந்தா! சனியன்! என்ற சொல் வாபஸ், இல்லாட்டா யார் சனியன் என்ற ஆராய்ச்சியை ஒரு அரை மணித்தியாலத்துக்குப் பிறகு செய்வோம். இப்ப அழுது கிழுது தொல்லை கொடுக்காதே! நான் கதை எழுத வேணும், கதை.''

சிவபூசையில் கரடி மாதிரி! இந்தச் சூழ்நிலையில் மனிதன் எழுத முடியுமா? எதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன்... நாசமாய் போக!

எந்தப் பத்திரிகைக்கு எழுதுவது என்று யோசித்துக் கொண் டிருந்தேனாகும். ஆமாம். எந்தப் பத்திரிகைக்கு எழுதுவது? நம்ம கே.பி. யுடைய பத்திரிகைக்கு அனுப்பினால் மனுசன் சீக்கிரமாக பிரசுரித்து விடுவான். ஆனால் பணம் தான் வராது.

பணமில்லாமல் பேருக்காக மட்டும் எழுதின காலமெல்லாம் மலை ஏறி விட்டது. 'மலை ஏறி விட்டது' என்ற பிரயோகம் எப்படி ஆரம்பமாகியிற்று?

மனைவியுடன் யாரோ ஒரு பெண் பேசும் குரல் கேட்கிறது. யாராக இருக்கும்? எதிர் வீட்டு சரஸ்வதியாக இருந்தால் ஒரு முறை கண்குளிரப் பார்க்க வேண்டும். கொள்ளை அழகு. நமக்கும் ஒரு பெண் வந்து வாய்த்ததே! உடல் உணர்ச்சியைத் தீர்க்க ஒரு பெண், உள்ள உணர்வுகளைப் பசியாற ஒரு பெண், விழியால் அழகை விருந்து கொள்ள ஒரு பெண் என்றிருந்தால்.....?

எல்லாத்துக்கும் சோறு போடுவது யார்? சே! அழகான கற்பனையில் லயித்திருக்கையில் இந்தப் பூவுலகத்து எண்ணங்கள் வந்து எம்மைப் பாழடிக்கின்றனவே.

'யாரங்கே? மண்ணுலகத்து நினைவுகள் நம்மை அணுகா வண்ணம் தகுந்த நடவடிக்கை எடு! போ! ''

'ம்... பிறகு... கற்பனை ஒடுதில்லையே! சட்டைப்பைக்குள் சிகரெட் இருக்கா பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகரெட்டைக் காணோம்; சில்லறைக் காசுகளையும் காணோமே யார் எடுத்திருப்பார்கள்? சில்லறை இருக்கிறதா?

'மனுசி'யின் நாடியைத் தடவினால் ஒரு சிகரெட் வாங்க ஆறு சதம் பறிக்கலாம். இந்தச் சாக்கில் அவளோடு பேசிக் கொண்டிருக்கும் பெண் யார் என்பதையும் பார்த்து விடலாம்.

சிகரட் ஒரு 'தம்' அடிச்சாத்தான் கதை எழுத 'மூடு' வரும் இப்ப என்ன அவசரம்? ஆறுதலாக எழுதலாம்.

எழுதித்தான் என்ன கிழிச்சோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை எங்கே?

செந்தூரன்

காலை மூன்று மணி பறங்கி மலைத் தோட்டம் ஏழாம் நம்பர் 'லயத்தில்' உள்ள சுப்பையா நாயக்கரின் 'காம்பிராவி'ல் கொழுந்து கணக்குப்பிள்ளையிடம் கைமாற்றாக வாங்கிய 'அலாரம்' கணீர் என்று ஒலித்தது. வழக்கத்திற்கு மாறாகத் தூங்காமலே கனவு கண்டு கொண்டிருந்த சுப்பையா நாயக்கர் மணியோசை கேட்டதும் எழுந்து விட்டார். எழுந்தவர் சும்மாயிருக்கவில்லை. நாள் முழுவதும் உழைத்த களைப்பால் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்த மனைவியையும், பிள்ளைகளையும் திட்டிக் கொண்டே எழுப்பினார் சுப்பையா.

''சனியனுங்கோ! நேரம் போச்சேன்னு கொஞ்சமாவது யோசனை இருக்கா? வெறகு கட்ட மாதிரில்ல ஆயியும் பிள்ளைகளும் கெடக்குதுக. ஏ.... புள்ளே, மீனாட்சி! எந்துருடி! எந்திரிச்சி அடுப்புப் பத்த வைச்சிப் புளிச்சாறு கட்டிடு, விடிஞ்சு வெள்ளக் கோழி கூவிடிச்சே, காது கேக்கலே? காதுல என்ன மத்துக் கட்டையா வச்சு அடைச்சிருக்கு? என்று சத்தமிட்டுக் கொண்டே மீனாட்சியை எழுப்பினார் நாயக்கர்.

''என்னங்க! என்னிக்கும் இல்லாத புதுமையா இன்னிக்கு என்னா வந்திரிச்சு? காலங்காத்தாலே எந்திரிச்சு ஏன் இப்படி சத்தம் போடுறிங்க? என்றாள் அரைத் தூக்கத்திலிருந்த மீனாட்சி.

''ஆமாடி. வந்திரிச்சு? நமக்கு நல்ல காலம் இன்னிக்கு தான் பொறக்கப்போவுது. இன்னிக்கே கண்டியிலே போய்ச் சத்தியம் செஞ்சிப்புட்டா, நாமெல்லாரும் இந்த நாட்டிலே 'பெரசை' ஆயிரலாமுடி. வரச்சொல்லி 'கண்டுரோலர்' எழுதியிருக்காருன்னு நேத்துச் சொன்னேனே; அறிவில்லே, மூதேவி, ஏந்துருடி! அடியே செகப்பி ! நீயும் ஆயோடு சேர்ந்து தூங்காம சட்டுப்புட்டுனு வேலையைப் பாரு. ஆறு மணி பஸ்லே போவணும். தேத்தண்ணி, கீத்தண்ணி குடிச்சுறாதீங்க; அப்புறம் பஸ்சிலே வாந்தி எடுப்பிங்க''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பட பட வென்று கூறிக்கொண்டே வெளியில் சென்றார் நாயக்கர்.

சுப்பையா நாயக்கருக்கு அன்று நிலை கொள்ளவில்லை. ஆமாம் இருக்காதா என்ன? எத்தனை ஆண்டுகள் அந்த ஒரு கடிதத்திற்காக அவர் தவியாய்த் தவித்தார். ஓராண்டா, ஈராண்டா? பத்தாண்டுகள் எப்படியோ ஓடி மறைந்துவிட்டன. அவருடைய பாட்டன் இந்தியாவிலிருந்து வந்தது ஏதோ உண்மை தான். சுப்பையாவின் தந்தையோ கடலைப் பற்றிக் கேள்விப்படாமலே தேயிலைக்கு உரமானார். சுப்பையாவுக்குக் கடல் என்ன நிறம் எப்படி இருக்கும் என்று கண்டவர்கள் சொல்லக் கேள்வி தானே யன்றி கண்டதேயில்லை. ஈழத்தின் மத்திய பகுதியில் இருக்கும் ஒரு தேயிலைத் தோட்டத்தில் உழைக்கும் ஒரு தொழிலாளி தான் நாயக்கர். சுமார் பதினொறு ஆண்டுகளுக்கு முன்னர் - பிரசா உரிமைச் சட்டம் வந்த புதிதில் - தம்மையும் தம் குடும்பத்தையும் இலங்கை பிரசைகளாய்ச் சேர்த்துக் கொள்ளுமாறு மனு போட்ட வர்களில் அவரும் ஒருவர். மனு போட்டதும் உரிமை கிடைத்து விட அவரென்ன இலட்சாதிபதியா? எத்தனை விசாரணைகள்? எவ்வளவு பணம் செலவு. அலைச்சல்? அப்பப்பா, அவர் தம் பிறப்புரிமையைப் பெறும் பொருட்டு பஸ்களுக்கும் கடிதம் எழுதுபவர்களுக்கும், தபால் அலுவலகத்திற்கும் கொடுத்த பணம் இன்று அவரிடம் இருந்தால் குறைந்தது ஐந்து ஏக்கர் தேயிலை தோட்டத்திற்காவது அவர் அதிபதியாக இருந்திருப்பார்! பாவம் இத்தனை இன்னல்களுக்கு பின்னர், ஒரு நாள் அந்தக் கடிதம் வந்தது.

''உனக்கும் உன் குடும்பத்தாருக்கும் பிரசா உரிமை தரப் படும். கண்டியில் வந்து பிரசா உரிமைக் கமிசனர் முன்னிலையில் சத்தியம் செய்து, பிரசா உரிமை 'சர்டிபிகேட்'டைப் பெற்றுக் கொள்ளவும்'' என்று தேதியும் குறிக்கப்பட்டிருந்த கடிதம் கிடைத் தால் சொல்ல வேண்டுமோ?

தோட்டத்துப் பெரிய கங்காணி, கண்டாகய்யா, கிளாக் கரையா முதலியோருக்கெல்லாம் பிரசா உரிமை கிடைக்கு முன்னர் தமக்குக் கிடைக்கப் போவதில் அவர் உள்ளம் பூரித்தது. அந்த மகிழ்ச்சியில் பூத்த கோபத்தில் தான் காலையில் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார்.

பதினாறு கல் தொலைவில் இருக்கும் கண்டி நகருக்குச் செல்வதென்றால் தோட்டத்து மக்களுக்குத் தனி உற்சாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயக்கர் மாத்திரம் அதற்கு விதிவிலக்கா? ஓட்டல் சாப்பாடு உடம்புக்கு ஒத்துக் கொள்ளாதல்லவா? அதனால் பகல் உணவுக் காகப் புளிச்சாதம் கட்டிக்கொண்டு, புதிய ஆடைகளையும் அணிந்து, குடும்பத்தோடு காலை 5.45க்கு நல்ல நேரம் பார்த்து வீட்டைத் தாளிட்டுக் கொண்டு புறப்பட்டார். அன்று வேலைக்குச் செல்வதற்காகக் காலையிலேயே எழுந்து 'பிரட்டு'க்குச் சென்று கொண்டிருந்த தம் நண்பர்களிடம் தாம் செல்லும் விடயத்தைக் கூறி விடை பெற்றார். 'பிரட்டு'க்குச் சென்று கொண்டிருந்த பெரிய கணக்குப்பிள்ளையும் வழியில் சந்தித்தார்.

''என்ன நாயக்கர். எங்கிட்டு இப்பிடிக் குடும்பத்தோட விருந்தாடக் கிளம்பிட்டே?'' என்று வியப்புடன் கேட்டார் கணக்குப்பிள்ளை.

''விருந்தாடி ஒண்ணுமில்லீங்க. கண்டிக்கு, பிரசா உரிமைத் தர வரச்சொல்லியிருக்காங்க, கணக்குப்பிள்ளையா அதுக்குத்தாங்க போறோம்'' மகிழ்ச்சியோடு கூறினார் நாயக்கர்.

''ஓகோ! அப்படியா சங்கதி. நீ கொடுத்து வெச்சவன் நாங்களும் தான் எழுதி எழுதி, ஒரு இழவையும் காணோம்.'' பொறாமையோடு வெளிவந்தன கணக்குப்பிள்ளையின் சொற்கள்.

''எல்லாம் ஏழுமலையான் கண் பார்த்ததுங்க, இல்லாட்டி எனக்கு இப்போதைக்கு இந்தப் பாக்கியம் கிடைக்குப் போவுதுங் களா? சரிங்க..... பஸ்ஸுக்கு நேரமாகுதுங்க நான் வாரேங்க ''என்று விடை பெற்றார் நாயக்கர்.

நாயக்கரின் அவசரத்தைப் பஸ் போக்குவரத்துச் சபை அறியவில்லை போலும், அன்றைக்கென்று பஸ் பத்து நிமிடங் கள் தாமதித்தே வந்தது. அதற்குள் நாயக்கர் இலங்கைப் போக்கு வரத்துச் சபையையே சபித்துக் கொட்டிவிட்டார். வழக்கமாக காரசாரமாகப் பேசாத நாயக்கர் அன்று சிறிது கடுமையாகவே ஏசினார்.

'''மடப்பயலுக? நேரங்காலத்திற்கு வந்து தொலையிறானுங் களா? அரசாங்க உத்தியோமின்னா அவிங்க நினச்சபடி நடக்க நாங்க என்ன ஏமாளிங்களா? இவங்களுக்கு ஒரு 'பெட்டிசன்' எழுதிப்போட்டாத்தான் சரிப்படும்'' என்று உரிமையோடு திட்டிக் கொட்டினார். ஆமாம், இன்னும் சிறிது நேரத்தில் அவரும் இந் நாட்டில் உரிமையோடு பேசப்போகிற பிரசைதானே? அதனை இப்போதே போக்குவரத்துச் சபையில் ஒத்திகை செய்து பார்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டியும் வந்தது, எதோ பதினைந்து இருபது ஆயிரங்கள் கொடுத்து வாங்கிய தமது சொந்தக்காரில் ஏறி இருக்கப்போகும் உற்சாகம் அவருக்கு. 'பஸ் சாரதியும் டிக்கட் கலக்டரும் தமது சேவகர்கள்' என்ற எண்ணம் உரிமையைப் பெறுமுன்னரே அவர் உள்ளத்தில் தோன்றிவிட்டது. எவ்வளவுதான் உரிமை உடையவ ராயினும் டிக்கட் கலக்டருக்கு அவர் தோட்டக்காரனாகத்தான் காட்சியளித்தார், பாவம்!

''ஏய், வாந்தி போடற மனுஷனல்லாம் பின்னுக்குப்போ!'' என்று தமக்குத் தெரிந்த தமிழில் அவரிட்டக் கட்டளை, நாயக் கரையும், குடும்பத்தையும் வண்டியின் இறுதி ஆசனத்துக்கே அனுப்பிவிட்டது. நாயக்கருக்கோ அவரின் கட்டளை கோபத்தை கிளறியது. இருப்பினும், குடும்பத்தோடு வந்தபடியால் தகராறுக் குச் செல்ல மனம் கூசியது. அமைதியாக இருந்து விட்டார்.

மலைகளையும், ஆறுகளையும் கடந்து தேயிலைத் தோட் டங்களினூடே வளைந்து வளைந்து செல்லும் சாலையில் ஓடிக் கொண்டிருந்தது வண்டி. சாலையின் இருமருங்கிலும் அழகாய்ப் பச்சை பசேலென்று காட்சி தந்த தேயிலைச் செடிகள் தமக்கு உணவளித்துப் பாதுகாக்கும் இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு இந்நாட்டு உரிமை கிடைக்கப் போகிறது என்ற மகிழ்வில் கம்பீரமா கக் காட்சி தந்தன. அவற்றைப் பார்க்கும் போதெல்லாம் நாயக் கரின் உள்ளம் பூரித்தது. அப்பொழுது எழுந்த பூரிப்பில் அவர் தம் மையே மறந்தார். மகிழ்ச்சியின் எல்லையும், வண்டியின் வேகமும் அவரது எண்ணத்தை எங்கோ இழுத்துச் சென்றன.

∴ ∴ ∴

அடேயப்பா! முதன் முதலில் பிரசா உரிமை மனுப்போடும் பொழுது, 'தமக்கு இந்நாட்டில் உரிமை கிடைக்காது' என்றே கருதினார் நாயக்கர். அவர் ஈழத்தில் பிறந்ததற்கு 'ருசு' இல்லை. அவரது தந்தை செய்த தவறினால் பெயரில்லாத 'பிறப்புச்சாட்சிப் பத்திரம்' தான் 'கச்சேரி'யில் இருந்தது. அதை வைத்துக்கொண்டு எப்படி வாதாடுவது? ஒன்றுமே அவருக்குப் புரியவில்லை. இருப் பினும், 'ஒரு கை பார்த்துவிடுவோம்" என்று தான் எல்லோரையும் போல் மனுப் போட்டார். 'இந்த ஊர் இல்லாட்டி வேறே எங்கே தான் தள்ளுவான்? அதையும் பார்ப்போமே' என்ற அசட்டுத் தைரியம் அவர் உள்ளத்தில் அப்பொழுது இருந்தது. துணிந்து விட்டார் நாயக்கர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகள் ஆறு. எங்கும் பிரசா உரிமைப் பேச்சிலேயே உருண்டோடின. ஒருநாள் சுப்பையா நாயக்கரையும், குடும்பத் தாரையும் மூன்றாம் முறையாக விசாரிக்கக் கமிஷனர் வரப் போவ தாகக் கிடைத்த கடிதத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே உரிமை கிடைத்து விட்டதாக எண்ணினார். நாட்டுரிமையென்ன அவ் வளவு மலிவாகக் கிடைத்துவிடக் கூடிய கடைச்சரக்கா? அதுவும் நாயக்கரைப் போன்ற ஒரு தொழிலாளிக்கு! விசாரணை நடத்து வோருக்கு ஆயிரம் ஆயிரமாக 'லஞ்சம்' கொடுத்தவர்களுக்கே உரிமை கிடைக்கப் பல ஆண்டுகள் செல்லும் போது இவருக்கு உடனே நாட்டுரிமை கிடைத்துவிட்டால், தொழிலாள வர்க்கத் துக்கே விமோசனம் கிடைத்த மாதிரித்தானே? வழக்கம்போல் அன்றும் விசாரணை நேரத்தில் அடுக்கடுக்காகக் கேள்விகள் கேட்கப்பட்டன. நாயக்கரும் சிந்தித்தே பதில் அளித்தார். சில கேட்கத் தகாத கேள்விகளும் கூடக் கேட்டார்கள். அவர்கள் - தமது பொழுதைப் போக்குவதற்காக. சுப்பையாவுக்கு அவர்களது 'பகிடி' எப்படித் தெரியும்? மிகவும் பயபக்தியோடு பதில் கூறினார்.

"ஆமாம்பா, உன் பொம்பளையை நீ உண்மையாகத்தான் கல்யாணம் முடித்தாயா?" விசாரணையின் இறுதிக்கட்டத்தில் கேட்கப்பட்ட மிகவும் முக்கியமான கேள்விகளில் ஒன்று இது.

"என்னங்க இப்படி கேட்டுட்டீங்க? நம்ம மாரியம்மாவுக்குத் தெரியுங்க! ஆத்தா கோயில்லதாங்க நான் தாலி கட்டினேன்!! நம்ம தோட்டத்திலே எல்லாருக்கும் வெத்தலை பாக்குவச்சேங்க!!!"

"ஓகோ அப்படியா! நீங்க ரெஜிஸ்டர் பண்ணலையா?"

"அதெல்லாம் இப்ப வந்ததுதானுங்களே. அந்தக் காலத் துலே அதெல்லாம் ஏதுங்க? தமக்குத் தெரிந்த வரலாற்று உண் மையை அடிப்படையாக வைத்துப் பதில் கூறினார் நாயக்கர். பாவம்! வரலாற்றுக்கும், பிரசா உரிமைச் சட்டத்திற்கும் தொடர் பில்லையென்பது அவருக்கு எங்கே தெரியப்போகிறது? "

"சரியப்பா, உன்னுடைய முதல் பிள்ளையும், மூன்றாம் பிள்ளையும் இலங்கையில் பிறந்தாங்கன்னு 'புரூவ்' பண்ணறே. இரண்டாவது பிள்ளைக்கு 'புரூவ்' இல்லையே?" பெரியதோர் உண்மையைக் கண்டுபிடித்தார் உதவி விசாரணையாளர்.

"இது அநியாயமுங்க, எம் மவன் கந்தையா பொறந்த அன்னிக்கே தோட்டத்து டாக்டரய்யாகிட்டே சொன்னேனுங் களே" பரிதாபமாகக் கூறினார் நாயக்கர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு அதெல்லாம் தெரியாது. உனக்குப் பிரசா உரிமை தரத் தகுந்த புரூவ் இல்லை என்று ஒரே அடியாகக் கூறி, நாயக்கரை வெளியே செல்லுமாறு பணித்தார். எதையோ எதிர்ப்பார்த்த விசாரணையாளர்.

சோர்ந்த முகத்தோடு வெளியே வந்த சுப்பையாவைக் கண்ட விசாரணையாளரின் கார் சாரதி ''மெய்யே விசாரணை முடிஞ்சுதோ?'' என்று அக்கறையோடு கேட்டார்.

''ஆமாய்யா. 'புரூவ்' இல்லையாம், பிரசா உரிமையும் இல்லையாம்'' சுப்பையாவின் பதில் வெறுப்பாகவே இருந்தது.

''ஓ அதுவே, நானொண்டு சொன்றேன், கேப்பியோ?''

''என்னையா? சொல்லித் தொலை.''

''இங்கார், அவைக்கு ஓராயிரம் இருந்தால் கொடுமன். சரி பண்ணி விடுவினம்''. உரிமைபெற குறுக்குவழியைக் காட்டினார். அந்த சாரதி.

''ஆ... ஆயிரமா... அடேங்கப்பா, நான் எங்கிட்டையா போவேன்? மூன்று பிள்ளைகளையும் மூணு எடத்திலே ஒக்கார வைச்சாலும் அவ்வளவு கெடைக்காதே!'' என்று ஏங்கித் தவித்தார் நாயக்கர்.

''பின்ன ஏனப்பா வந்த நீ ? எங்கடை ஐயா, அவை உன்னைப் போல ஆள்கிட்டத்தான் ஆயிரம், மற்ற இடங்களிலெல்லாம் அஞ்சாயிரம் குறையாது. அப்படித்தானே பிரசா உரிமை வேண்டினம். ''உண்மையை ஒளிவு மறைவின்றிக் கூறினார் சாரதி.

சுப்பையா நாயருக்கருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இந்த நாட்டிலே பிறந்து, இங்கேயே வளர்ந்து, காடு மலைகளைச் சீர்படுத்தி, நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த வெய்யில், மழை, பனி எதையுமே பாராமல் ஈழவள நாட்டை உயர்த்துவதற்குப் பாடுபட்ட அவர் - இன்று நாடற்றவராக நிற்பதா? திகைத்துப்போய் நின்றார் நாயக்கர்.

''ஏனப்பா நிக்கறே? நேரமல்ல போகுது. ஓடிப்போயி எண்ணூறாவது பார்த்துவா. நான் ஐயாகிட்டச் சொல்றேன்'' என்று நாயக்கரின் அமைதியைக் குலைத்தார் சாரதி.

ஏதோ முடிவுக்கு வந்த நாயக்கர், ''சரி'' என்று அவசரமாக வீட்டுக்குச் சென்றார். சற்று நேரத்திற்குப் பின்னர் நூறு ரூபா நோட்டுக்கத்தைகள் ஐந்துடன் திரும்பினார். அந்தப் பணத்தைச் சாரதியிடம் கொடுத்து, ''ஐயா, நீங்க தான் எப்படியாவது இதைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்து, பிரசா உரிமை எடுத்துத் தரணும்'' என்றார் அழாக் குறையாக.

இப்படி எத்தனை இன்னல்கள்? எண்ணவே முடியாது. அத்தனையும் தன்னை இந்த நாட்டில் உரிமையோடு வாழத் தகுதி உடையவனாக ஆக்கிக் கொள்ளத் தானே? எத்தனை பேருக்கு எப்படி எப்படிப் பணம் கொடுக்க முடியுமோ அந்த வழிகளிலெல்லாம். தாம் அறியாமலே, தம்மால் இயன்ற தொகை களைக் கொடுத்தார். பெரிய இடங்களில் பத்தாயிரம் என்றால், நாயக்கரைப் பொறுத்தமட்டில் பத்து ரூபாயாக இருந்தது. எந்த வழியிலாவது உரிமை பெற்றுவிட்டால். நாட்டில் தலை நிமிர்ந்து திரியலாமல்லவா? பிறகு, யார் இவரை கள்ளத்தோணி என்று அழைக்கப் போகிறார்கள்? நம்பிக்கையைத் தளரவிடவில்லை நாயக்கர். தொடர்ந்து முயற்சி செய்தார். பலனும் கிட்டியது. அதனை அனுபவித்தான் தனது குடும்பத்தோடு இன்பம் கண்டு கொண்டே, கண்டியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார் அவர்.

∴ ∴ ∴

பஸ் கண்டி நிலையத்தில் நின்றதும், அன்று வண்டி மிக விரைவில் வந்து விட்டதாக அவர் உணர்ந்தார். உரிமை வேட்கை வண்டியின் வேகத்தையே அதிகரித்துவிட்டது - அவரளவில்! மக்கள் நெருக்கம் மிகுந்த, அழகுமிக்க கண்டி நகரை முன்பின் கண்டறியாத தம் மனைவி மக்கள், வழி தவறி விடக்கூடாதே என்று எண்ணிய நாயக்கர் அவர்களைத் தம்முடனே அழைத்துக் கொண்டார்.

''ஏ....புள்ளைங்களா, அங்கிட்டு இங்கிட்டுப் பராக்குப் பார்க்காம என் பின்னுக்கே கையைப்புடிச்சுகிட்டு வாங்க'' என்று கட்டளை இட்டார். கணவன் கூறுவதில் மிகப் பெரிய உண்மை யைக் கண்ட மீனாட்சி, ''சரிங்க'' என்று தலையசைத்தவளாய் அவரைத் தொடர்ந்தாள்.

பலரையும் கேட்டுக் கேட்டுக் கண்டி ''கச்சேரி'' இருக்கு மிடத்தைக் கண்டு பிடிப்பதற்குள் கண்டி நகரையே பலமுறை வலம் வந்துவிட்டார். அப்படி வழி தெரியாமல் கண்டியைச் சுற்றியதில் அவருக்கோ, மனைவி மக்களுக்கோ ஒரு சிறிதேனும் களைப்பு ஏற்படவில்லை. உரிமை கிடைக்கப் போகும் உற்காசத் தோடு, அந்நகரும், அங்கு காணப்பட்ட காட்சிகளும் அவர் களுக்குப் புதிதாகவே தோன்றின. புத்தரின் தந்தம் இருந்ததாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படும் ''தலதாமாளிகா''வும், கண்டி நகரை அழகுபடுத்தும் ''தெப்பக்குளமும்'' பூங்காக்களும் சிலைகளும் அவர்களை வியப்பில் ஆழ்த்தின. ஒருவாறு முன்னர் சென்ற வழியிலேயே 'கச்சேரி' யைக் காலை 10.30 மணியளவில் நாயக்கரும் குடும்பத் தாரும் வந்தடைந் தனர்.

அன்று, 'கண்டி, இலங்கைப் பிரசா உரிமை' அலுவலகத் திற்கு முன்னால் பல குடும்பங்கள் தமது உரிமைக்குரிய சாட்சிப் பத்திரத்தைப் பெறுவதற்காகக் காத்திருந்தன. அவற்றோடு நாயக் கரின் குடும்பமும் பெருமையோடு கலந்து கொண்டது. வந்திருந்த குடும்பங்களனைத்தும் பணம் படைத்த குடும்பங்களாகவே காட்சியளித்தன. அவர்கள் பேச்சு, நடை, உடை பாவனை, அனைத்தும் தோட்டத்திலே உரிமையாளர்களாகவும், பெரிய ஸ்தாபனங்களின் உரிமையாளர்களாகவுமே அவர்களைக் காட் டின. இத்தகைய செல்வக் குடும்பங்களோடு வேறு எத்துறை யிலும் எந்நேரத்திலும் சரிநிகர் சமானமாக இருக்கக் கனவு கூட கண்டிராத நாயக்கர், இன்று உரிமையை நிலைநாட்டப் போகும் பொழுது அவர்களோடு சமமாக இருப்பதை கனவிலே கண்டு உச்சி குளிர்ந்தார். தம் மகிழ்ச்சியை மனைவியிடம் கூறித் தம்மைப் பற்றிப் பெருமைப்பட்டுக் கொள்ளவேண்டும் என்று அவர் உள்ளம் அவரைத் தூண்டியது.

''அடியே, மீனாட்சி! பாத்தியாடி, வந்திருக்கிற பெரிய புள்ளிகள்? அவுங்களோட நமக்கும் பிரசா உரிமை கெடைக்கப் போவுதுடி இப்ப தெரிஞ்சுக்க, இந்த நாயக்கர் மனம் வெச்சா ருன்னா எதையும் செஞ்சுபுட்டுத் தான் சும்மா இருப்பாரு... ஆ..மா!'' என்று இழுத்த நாயக்கர், தமது சுருண்டு வளைந்துள்ள மீசையை ஒரு முறை தடவிக் கொடுத்தார்.

''ஆ....மா, சும்மா இருங்க, யாரும் பார்த்தா, ஏதும் நெனப் பாங்க'' என்று அவ்விடத்தில் தன்னுடைய குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றினாள் மீனாட்சி.

இலங்கைப் பிசா உரிமை சாட்சிப் பத்திரத்தைப் பெற்ற குடும்பங்கள் ஒவ்வொன்றாக மகிழ்வோடு சென்று கொண்டிருந் தன. நேரம் நெருங்க நெருங்க நாயக்கரின் மனமும் 'பட பட' வென அடித்தது. சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் அவரை, ''சுப்பையா யாரு?''- என்ற குரல் விழிப்படையச் செய்தது.

''நான் தான், ஐயா!'' - உட்கார்ந்திருந்த நாயக்கர் பயபக்தி யோடு எழுந்து பியூனை வணங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குள் முறுவலித்த சேவகன், ''உள்ளே போகலாம்'' என்றான்.

கமிஷனரின் அறைக்குள் சென்ற நாயக்கருக்கு உடம் பெல்லாம் நடுங்கியது. 'பயாஸ்கோப்பில் பார்த்த சிவபெருமான் இருக்கும் கைலாசமலைக்குத் தாம் வந்து விட்டதாக' அவர் நினைத்தார். தாம் இந்நாட்டில் உரிமையோடு வாழ உரிமை அளிக்கப்போகும் தெய்வமே அவர்தானே! அவரை அப்படியே சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கவேண்டுமென்றே அவர் எண்ணி னார். ஆனால், 'கமிஷனர்' பேசத் தொடங்கவே அவ்வெண் ணத்தைக் கைவிட்டு ''நமஸ்காரங்கையய்யா!'' என்றார், இரத்தத்தில் ஊறிய பண்போடு.

''நமஸ்காரம். நீ எந்தத் தோட்டம்?'' - அதிகாரத்தோடு கேட்டார் கமிஷனர்.

''நான் பறங்கிமலைத் தோட்டங்கய்யா.'' பணிவோடு பதில் கூறினார் நாயக்கர்.

''ஓ...யெஸ், குட் ஓம் பேரு?''

''எம் பேரு சுப்பையா நாயக்கர்' அவ பேரு மீனாட்சிங்க.''

''இன்னொரு முறை திருப்பிச் சொல்லு; ஓம் பேரு?''

''சுப்பையா நாயக்கர் தாங்க'' தன் பெயரை மீண்டும் கேட்டதில் நாயக்கருக்கு சொல்ல முடியாத மகிழ்ச்சி.

''அப்படியா, இன்னிக்கு நாங்க கூப்பிட்டது பறங்கிமலை சுப்பையா - எட் கங்காணிதானே? அவன் சம்சாரம் பேரு தெய் வானை.''

சம்மட்டியால் தலையில் அடிப்பது போல் இருந்தது நாயக் கருக்கு. ''ஐயா! எனக்குத் தாங்க வரச்சொல்லி கடுதாசி வந்திச்சு!'' என்றார் அழாக்குறையாக.

''எங்கே? அந்த கடுதாசியைக் கொண்டு வா'' என்ற கமிஷ னர் அழைப்புக் கடிதத்தை வாங்கிப் பார்த்தார். நாயக்கரின் உள் ளமோ ஏதேதோ எண்ணித் தவித்தது. நன்றாகப் பார்த்து முடித்தார் கமிஷனர்.

''சுப்பையா, கோவிக்க வேணாம், இது நம்ப 'கிளாக்கர்' செய்த குத்தம். ஒனக்குப் 'பிரசா உரிமை இல்லை'ன்னு அனுப் பிட்டான். அவங்க கடுதாசி ஒனக்கு வந்தது. கோபிச்சுக்கவேணாம். நீங்க போகலாம்'' என்று அரைகுறைத் தமிழில் கூறிய கமிஷனர். கோபமாக மேசை மணியைத் தட்டிச் சேவகனை அழைத்தார்.

Digitized by Muthu Tamil Foundation
noolaham.org | aavanaham.org

கமிஷனர் ஏதோ சாதாரணமாக மன்னிப்புக் கேட்டு விட்டார். தமக்கே உரிய முறையில். ஆனால், நாயக்கருக்கோ, அவரது ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு அம்பாக உள்ளத்தில் பாய்ந்தது. எண்ணிய எண்ணங்கள், கட்டிய கோட்டைகள், அத்தனையும் ஒரு நொடிப் பொழுதில் தூள்தூளாயின. தலைசுற்றியது. கீழே விழந்து விடாமல் இருக்க மீனாட்சி உரிமையோடு அவரை அணைத்து வெளியே அழைத்து வந்தாள். உலகமே அவரை எண்ணி நகைப்பதாக அவர் எண்ணினார். திரும்பிய பக்கமெல் லாம், ''கள்ளத்தோணி! கள்ளத்தோணி!!'' என்ற சத்தம் கேட்ப தாக அவரது பேதை உள்ளம் எண்ணித் தடுமாறியது. ஏதேதோ பிதற்றினார். சிரித்தார், அழுதார். வெளியில் நின்றவர்களில் சிலர் அவருக்காக அநுதாபப்பட்டனர்; சிலர் சிரித்தனர்.

பணம் படைத்த பிரபு ஒருவர், ''இந்தத் தோட்டக்காட்டுச் சனியங்களே இப்படித்தான். எதையும் ஓர் ஆளுக்கு நாலு ஆளுங் களை விசாரிக்காம வந்து, நம்ம இந்தியக்காரன் மானத்தையே வாங்குதுங்க'' என்றார். இலங்கையன் என்ற உரிமையை நிலை நாட்ட வந்த இடத்தில் பாரத நாட்டு உரிமையையும் இழந்துவிட மனமில்லாமல்.

அலுவலகத்தினின்றும் தள்ளாடித் தள்ளாடி வெளியில் வந்த நாயக்கர் ஒரு மரத்தடியில் தம்மையும் மறந்து இருந்துவிட்டார். தொடர்ந்து வந்த மீனாட்சியும் பிள்ளைகளும் அழுதுகொண்டே அவரைச் சுற்றி அமர்ந்தனர். ஒன்றும் புரியாத நிலையிலேயே இருந்தார் அவர். நாட்டுரிமையைத் தான் மேலிடத்தாரால் பறிக்க முடிந்ததேயன்றி அவரது அன்பு நிறைந்த குடும்ப உரிமையை யாராலும் பறிக்க முடியவில்லை. மனைவி மக்களை அப்படியே கட்டித் தழுவிக் கொண்டு அழுதார் நாயக்கர். எங்கிருந்தோ அவர் அழுகையை அடக்கிக் கொண்டு மணியோசை ஒன்று கேட்டது. அவ்வோசை வந்த திக்கை நோக்கி மெதுவாக நடந்தார் நாயக்கர்.

காடாகக் கிடந்த இந்த நாட்டை வற்றாத வளங்கொழிக்கும் நாடாக உயர்த்தி உலக அரங்கிலே அதனைக் காட்சிக்கு வைத்த அவ்வேழைத் தொழிலாளிக்கு இன்று இந்நாட்டிலே உரிமை யில்லை! ஆனால், எங்கிருந்தோ வந்த புத்தரின் தத்துவத்திற்கு இன்று இந்நாட்டில் கௌரவ உரிமை! அது மட்டுமா! மக்கள் அனைவரும் போற்றி புகழும் 'தலதாமாளிகை' எழுவதற்கும், பெரகரா என்ற யானை விழா நடப்பதற்கும் அத் தந்தம் உரிமை பெற்று திகழ்வதை - ஈழத்து உரிமையையும் பாரத நாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையும் இழந்த நாயக்கர் எப்படி அறிவார்? தலதாமாளிகை நெருங்க நெருங்க நடுப்பகல் பூசையின் மணியோசை "டாங்.....! டாங்.....!!" என்று பலமாக ஒலித்தது. ஒவ்வொரு ஒலியும் "உரிமை எங்கே? உரிமை எங்கே?" என்று நாயக்கரின் செவியில் மாத்திரமல்ல, மலைநாடு முழுவதுமே கேட்பது போல இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணை

இ.நாகராஜன்

அர்த்தசாமம் கடந்து விட்ட அகாலவேளை.

உலகில் ஒவ்வொரு அணுவையும் தனது கருங்கல் வண்ணக் கொடுங் கரங்களாற் பற்றி பிடித்துக் கொண்டிருக்கும் இருளை உதாசீனஞ் செய்து பயன் கருதாத கருமயோகி போல் ஓடிக் கொண்டிருக்கிறது புகை வண்டி.

இப்போது மதவாச்சியைத் தாண்டி வவுனியாவை நோக்கி நொடிக்கு நொடி முன்னேறுகிறது. அந்த வண்டியில், குருஷேத்திரப் போர்க்களத்தில் குற்றுயிரும் குறை உயிருமாக விழுந்து கிடந்த கௌரவ - பாண்டவ படையினர் போல் நித்திரையைத் தட்டிக் கழிக்கத் திராணியற்று வசதியாகக் குந்தியிருந்து கொண்டும் நடை பாதையில் கையிற் கொண்டுவந்த பத்திரிகைகளை விரித்துச் சரிந்தும் ஒழுங்கற்று உறங்குகிறார்கள் பலர். இருக்கை வசதி குறைந்துவிட்டாலும் - நித்திரையின் உபத்திரவத்தாற் செயலிழந்து கோழித்தூக்கம் தூங்குகிறார்கள் சிலர். பிரயாணம் செய்கின்றோமே என்ற சுரணையற்றுக் கிடக்கும் அந்தக் கூட்டத்திற்கு விதிவிலக் கானவன் போல கண்கள் நித்திரையை வேண்டிக் கெஞ்ச விழித் திருக்கிறேன்.

கால சமுத்திரத்திற்குள் மணித்தியாலங்கள் ஐந்துக்கு மேல் கழிந்திருக்கலாம். திட்டவட்டமாகக் கூறிவிடுவதற்கில்லை. இது வரை புறப்பட்ட இடத்திருந்து சுமார் நூற்று ஐம்பது மைல்கள் கழிந்துவிட்டன. போகவேண்டிய இடத்திற்கு இன்னும் நூறு மைல்கள் வரை எஞ்சியுள்ளன. இந்த இடைவெளி குறுகக் குறுக, சஞ்சலமும் அதிகரிக்கிறது. என்னைக் காட்டிக்கொள்ளக் கூடாது என்று நான் இட்டுக்கொண்ட வேடம் பல்லிளித்து விடுமா?

வெளிச்சத்துக்காகப் போடப்பட்ட ஜன்னற் கண்ணாடி வெளியிருளை இரசமாக ஏற்று உருவத்தை ஓரளவு சுட்டிக் காட்டுகின்றது. அந்த உருவம் : கருங்குன்றைத் தலைகீழாகக் கவிழ்த்து விட்டதாய்; தூக்கக் கலக்கமும், துன்ப நினைவுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிக் குலவும் விழிகள்; அவற்றின் கீழ் வேதனையின் கறைபோல ஒட்டிக்கொண்டிருக்கும் கருவளையம்; அரையில் வெளுத்தாலும் அசையாத துவர் ஏறிய காவி வேட்டி; தோளில் வேட்டியின் வண்ண துண்டு; வளர்ந்து கற்றையாகிச் சிங்கத்தின் பிடரிபோல் வளைந்து நெளிந்து சுருண்டுகிடக்கும் சிகை; அந்தச் சிகையை பின்னணியாகக் கொண்ட நெற்றி; அந்த நெற்றியில் பாலைப் பழிக்கும் வண்ண விபூதிப் பூச்சு; அரையங்குலப் பரிமாணத் துக்குச் சந்தனப் பொட்டு. கதிர்காமத்திலிருந்து வரும் அசல் சாமியார் தான், அதில் எள்ளத்தனையும் சந்தேகம் வேண்டிய தில்லை.

நாகரிகத்தின் வாரிசுகள் என்று மேளமடித்துக் காட்டும் 'பொடியன்கள்' குறுக்கும் மறுக்குமாக நடமாடும் பெட்டியில் இந்தப் பிகிருதியா? இதைக் காணிவல் காட்சியிலல்லவா வைக்க வேண்டும்? ஆம்; அது தான் நான் வேண்டுவது. உலகத்திலிருந்து கொண்டு உலகத்தைவிட்டு ஒதுங்கிய என்னை எப்படியாவது சொல்லி, எங்காவது வைக்கட்டும். இந்த உருவம் இரண்டொரு வரை அப்படிக் கதைக்கத் தூண்டியது. கதைத்திருக்கிறார்கள். காதுகள் கேட்டிருக்கின்றன. இதுவரை என்னைத் தெரிந்த இரண் டொருவர் கடந்தும் சென்றிருக்கிறார்கள். அவர்களும் அப்படிச் கருதியிருக்கலாம். எனக்குப் பிடித்ததும் அது தான். என்னை எவரும் இனங் கண்டு பிடிக்கக் கூடாது. இந்த இன்றைய என் உரு மாற்றத்தில் ஒரு வெற்றி; நல்ல வேடம். அதில் மனம் இலயித்துக் கொள்ள இதழ்க்கடையில் குறுநகைபூத்து நெளிகிறது. அப்பப்பா திருப்தி!

என்ன திருப்தியா?

ஃஃ ஃஃ ஃஃ

திருப்தியென்பது மனித இதயத்துக்குச் சாசுவதமான ஒன்றல்ல. அந்தத் திருப்தி மட்டும் கிடைத்திருந்தால் நான் இந்தப் பிரயாணத்தை மேற்கொண்டிருக்க வேண்டியதில்லை! நீரும் புல்லும் கிடையாது மேய்ப்பாளனின் கண்காணிப்புக்குத் தப்பிய வெள்ளாட்டுக் குட்டிபோல கொழும்பு நகர் ஜன வெள்ளத்துக்குள் எற்றுண்டு அலைந்து கொண்டிருந்தேன். புறப்பட்ட இடத்தையே மீண்டும் நாடவேண்டியிருக்கிறதென்றால் நிம்மதி கிடைத்துவிட்டது என்று பெருமைப்படுவதில் அர்த்தமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிக்கொண்டிருந்த வண்டியின் வேகம் குறைகிறது. உட் கொண்ட உணவின் ஒரு பகுதியைக் கழிவாக்கி வாயால் கக்கிக் கொண்ட பின் புதிய உணவென்ற பிரயாணிகளை உட் கொள்ள விழையும் பெரிய வெளவால் போன்று வவுனியாவைக் கண்ட தும் வண்டி நின்று விடுகிறது.

'பிளாட்பாரத்'தையடுத்த தண்டவாளத்தை விடுத்து அடுத்த தடத்திற்றான் வண்டி நிறுத்தப்பட்டிருக்கிறது. வழக்கமாகக் கொழும்பு வண்டியும் யாழ்ப்பாண வண்டியும் அனுராதபுரியிற்றான் சந்தித்துக் கொள்ளுவன. இன்று இங்குதான் சந்திக்கவேண்டியிருக்கிறதெனப் பேசிக் கொள்கிறார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து வருகின்ற வண்டியில் எனக்குத் தெரிந்தவர்கள் இருந்துவிட்டால் என்செய்வது! அங்கங்களை உள்ளடக்கி வெறும் ஓடாகக் காட்சி தரும் ஆமையாக மூலை யோடு மூலையாகக் குறண்டிக் கொள்கிறேன்.

யாழ்ப்பாண வண்டி கடகடவென்ற ஓசையை எழுப்பிக் கொண்டு வந்து நிற்கிறது. அதிலிருந்து இறங்குகிறார்கள் சிலர்; ஏறுகிறார்கள் சிலர். என்னை எப்படித்தான் மறைத்துக் கொண் டாலும் கட்புலன்கள் மிகமிக விழிப்பாகவே இருக்கின்றன. அதோ அந்த வண்டியிலும் தெரிந்தவர்கள் சிலர் இருக்கத்தான் செய்கிறார் கள். தங்கள் தங்கள் அலுவல்களை மேற்கொள்ள அவகாசம் இன்றித் தவிக்கும் மனிதப் புழுக்களுக்கு என் விஷயத்தில் கவன மில்லாமலிருக்கட்டும். ஆனால் அவர்கள் கண்ணில் நான் தென் படக்கூடாது. அது தான் என்னுள் கப்பிக் கவிந்திருக்கும் பிர திக்ஞை.

முன் வந்த வண்டியை விட, பின்வந்த வண்டியைத்தான் முதலில் அனுப்புகிறார்கள். அந்த இடம் சூனியமாகின்றது. அப்பப்பா! அந்தச் சூனியத்துள் என் உள்ளம் பூரணம் பெறு கிறது. ஒன்றின் அழிவிலே தான் இன்னொன்று ஆகிறது என் பார்களே, அந்த உண்மையும் இப்படித்தான்!

நானிருக்கும் பெட்டியில் அவசரம் அவசரமாக ஒருவர் ஏறுகிறார். அவரைத் தொடர்ந்து கொட்டுகிற பனிக் குளிருக்கு இதமாக முக்காடிட்ட இன்னோர் உருவம் வருகிறது. முதலில் வந்தவர் சுற்றிலும் நோட்டம் விட்டபோது, தூங்கி வழியும் மனித மந்தைகள் கண்களில் பட்டிருக்க வேண்டும். எனக்குப் பக்கத் திலே மூன்றாம் வகுப்புப் பெட்டியில் நீட்டி நிமிர்ந்து படுக்கைக்கே டிக்கட் பெற்றுக் கொண்டாவர் போல் சர்வ சுதந்திரமாக ஒருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறங்குகின்றார். வந்தவர் அவரைத் தட்டி ''கொஞ்சம் காலை மடக்குங்கோ இங்கே ஒரு பெண்பிள்ளை உட்கார வேண்டும்'' என்று கேட்டுக் கொள்கிறார். சொப்பனத்தில் இலயித்துக் கிடந்த அவர் மூக்கால் அழுதபடி கால்களை மடக்கிக் கொள்கிறார். ஆனால் அந்தப் பால்குடிக்கும் பூனை தன் கண்களைத் திறக்கவில்லை.

பெண்ணென்ற அந்த முக்காடிட்ட உருவம் உட்கார்ந்து கொள்ள, வந்தவர் கண்ணாடிப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்த என் முதுகில் கையைப் போட்டு ''நீங்கள் யாழ்ப்பாணத்துக்குத் தானே?'' என்கிறார். திரும்பிப் பார்க்காமல் என்வாய் ''ஆம்'' என்கிறது.

''எனக்கு அவசரமான வேலை. வர முடியவில்லை. இவள் தனியே வருகிறாள். யாழ்ப்பாணம் வரை பார்த்துக் கொள்ளுங்கள்!''

இதென்ன அவஸ்தை, ஆசாபாசங்களைக் கல்லி எறிந்து விட்டு என்னையே நான் அடக்கி ஒடுக்கிக் கொள்ளும் நிலையில் புதிய சுமையொன்று வந்து அழுத்துகிறதே என்று மனம் நினைத் துக்கொள்கிறது. வாயால் எந்தவித பதிலும் வெளிவரவில்லை, வண்டி புறப்படுவதற்காக மணி ''டாண் டாண்'' என்று ஒலிக்கவே பெண்ணை வண்டியில் ஏற்ற வந்தவர் அவசரமாக இறங்குகிறார். வண்டி நகரும் போது கூடக் கையைக் காட்டிப் ''பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று அவர் கூறத் தயங்கவில்லை.

பிரயாணஞ் செய்த ஒரு சில மனித ஜந்துக்களும், பொருள் களும் வெளியே வழிந்து போக, வேறு மூட்டை முடிச்சுகளையும் மனிதர்களையும் இரையாகக் கொண்ட வண்டி தினறிப் பெருமூச் சுடன் புறப்படுகிறது. கைதேர்ந்த தாளக்கணக்குத் தெரிந்த சங்கீத விற்பன்னனைப் போல் ''சுக் சுக்'' என்று வண்டி இடும் ஒலி, சுதிசேர்ந்த தாலாட்டுப் பாடலாக அமையும் போது ஓணான் போல் ஆடிக்கொள்ளும் பெட்டியிலிருப்பவர்கள் உறங்காமலிருக்கத் தயாராகவில்லை.

இருளின் மை வண்ணத் திரையைக் கிழிக்கும் இராட்சதக் கண்ணால் பார்த்துக் கொண்டு வண்டி ஓடிக்கொண்டிருக்கிறது. தண்டவாளத்தின் ஓரங்களில் அமைந்த ஒரு சில கட்டடங்கள் மின்மினிப் பூச்சிகளின் ஒளிச் சன்னங்களை நினைவூட்டிக் கொண் டிருப்பது தெரிகிறது. கிளைத்துச் சடைத்து நெடித்து ஒன்றோ டொன்று தழுவி நிற்கும் மாபெரும் விருட்சங்கள் இருளின் ஆதீனத்தைக் கைலாகு கொடுத்து வரவேற்பது போன்ற காட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடறுத்துச் செல்லுகிறது வண்டி. புதிதாக ஏறியவர்களும் உறக்க விட்டத்துக்குள் அகப்பட்டுவிட்டார்கள்.

என் ஒப்புதலைப் பொருட்படுத்தாது சுமத்தப்பட்ட சுமை யான அந்தப் பெண்ணின் முக்காடு தூக்கக் கலகத்தினால் கலைந்து அவளது தோளிற் சரிந்து விழுகின்ற வேளையில் வண்டியிலுள்ள வர்கள் உயிரிருந்தும் பிணமாகி விட்டார்களே என்ற நம்பிக்கையிற் சிறிது திரும்பிப் பார்க்கின்றேன். அங்கே காண்பது? இப்படி நடக்குமா? வினாக்கள் மனமரத்திருந்து உதிருகின்றன. என்ன விந்தை?

எதையெதைத் தவிர்த்து ஒதுக்கித் - தள்ளி விட வேண்டு மென்று எதிர்பார்க்கின்றோமோ; அதுவே தேடிவந்து நமது காலடியில் அகப்படுவது போன்ற நிலையேற்பட்டு விடுகிறதே! ''ஒன்றை நினைக்கினது வொழிந்திட்டொன்றாகும், அன்றி யது வரினும் வந்தெய்தும் - ஒன்றை, நினையாத முன்வந்த நிற்பினு நிற்கும், எனையாளு மீசன் செயல்''. இப்படி ஆன்றோர் கூறுகின் றனர். நிதர்சன உண்மை எதார்த்த வாதம் என்றெல்லாம் சொல்லிக் கொள்பவர்களுக்கு இந்தக் கருத்தில் இசைவிருக்காது. மூடக் கருத் துக்கள் இவையென்று சாதிப்பர். ஆனால் நான் வெறுக்கிறேன். ஒதுக்குகிறேன்; ஒதுங்கி ஒதுங்கி ஓடுகிறேன். அது என் காலடியில் வந்துவிட்டதென்றால் இதன் கருத்து என்னவோ?

நான் துணையாகச் செல்ல வேண்டியவள் கண்ணம்மா! கண்ணம்மாவுக்கா நான் துணை? அவளுக்குத் துணையாக வாய்த் திருப்பவன் என்னைத் துணையாக்கிவிடுகிறானே!

அந்தக் கண்ணம்மா?

சிங்கத்தின் பிடரிபோல் அசிங்கமாக வளர்ந்து கிடக்கும் சிகையும், தாடியும், அதற்கேற்ற உடையும் என்னை நிச்சயமாக அவளுக்குக் காட்டிக் கொடுக்கவில்லை. காட்டிக்கொடுக்காமலும் விடலாம். நல்ல உருமாற்றந்தான் இருந்தும் அவளை யாரென்று அறிந்துகொண்டு ஒரே வண்டியில் நானும் அவளும் ஒரே பெட்டி யிற் செல்வதென்றால் அதுவும் இன்னும் தொண்ணூறு மைல் செல்ல வேண்டும்! இந்த நிலையில் எப்படி அவள் என்னைக் கண்டுபிடிக்கமாட்டாள் என்று நம்புவது? தப்பித்தவறி என்னால், என்ன செய்த போதும் மாற்றமுடியாத என் குரல் காட்டிக் கொடுத்துவிட்டால்....?

அவள் அந்த வண்டிப் பெட்டியில் சுகமாகக் கண்ணயரு கிறாள். இப்போதைக்கு அவள் விழிக்கப்போவதில்லை. இத்துணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வால் கண்களின் துணைகொண்டு அவள் உருவைக் கணிக்கின்றேன்.

வெட்டிய அப்பிள் துண்டு நெற்றி; பழுத்துச் சற்றுக் காய்வுற்ற தக்காளியின் வண்ணம்; அலை பாயும் சுருண்ட சிகையை, அள்ளி அழகாக முடிந்திருந்தாள். குறுகுறுக்கும் நாகப்பழக் கண்கள் மூடியிருந்த போதிலும் அவற்றைத் தம்முள் சிறைப்பிடித்த போளைக் குமிழிகள் எல்லாம் அப்படியே தானிருக்கின்றன. ஆனால் அவளது அடிவயிறு சற்றுக் கனத்து உப்பியிருக்கின்றது. கர்ப்பிணி அவள். இது தான் முன்னுக்கும் பின்னுக்குமுள்ள மாற்றம்.

காலத்தோடு ஒரு வருடம் உருண்டோடிச் சென்றுவிட்டது. அந்த இடைக் காலத்துக்குள் எத்துணை மாற்றங்கள்! அதனையொட்டி எத்துணைச் செயல்கள் நடந்து முடிந்துவிட்டன.

'நான்' என்ற பண்டத்தை திறந்து - சத்திரசிகிச்சை செய்து அதனுள் முட்டையிட்டுப் பல்கிப் பெருகியிருக்கும் நாசக் கிருமிகளை வெளிக்குக் கொண்டுவந்து விட்டால் தனி மனிதனைச் சுற்றிச் சுழன்றுவரும் ஆசாபாசத்தின் அடித்தளத்தை இலகுவில் அறிந்துவிடலாம், அப்படி அறிந்துவிடத் தேவையற்றவருக்கு என் வேடம் வெளுத்துவிட்டாற் பரவாயில்லை. ஆனால் கந்தையா என்ற இப்பிரகிருதி செத்துத் தொலைந்திருப்பான் என்று நம்பியவர்களுக்கு நம்பிக்கை பாழாகக்கூடாது. அப்படி எவரெவர் நம்பிக்கை உடைபட்டுப் போனாலும் பரவாயில்லை! என்னருகில் இருந்து கொண்டு என்னைத் தெரிந்து கொள்ளாமலே வரும் இவளுக்கு நான் யார் என்று என்றைக்குமே தெரிந்துவிடக்கூடாது.

நெடுங் கதையாகக் கூடிய நீளமான சம்பவ அங்கங்களைக் கொண்ட தொடர் நாடகமல்ல எங்கள் வாழ்க்கை. ஒரேயோர் அங்கத்தை - ஒரேயொரு சுவையை மையமாகக் கொண்டு சுற்றிச் சுழன்று வரும் உயிர்த் துடிப்புள்ள ஓரங்க நாடகம் இது. அந்த நாடகத்தின் மிக முக்கிய பாத்திரம் அவள்.

∴ ∴ ∴

மலாயாவிலிருந்து பென்ஷனியராக வந்த ஆறுமுகம் எங்கள் வீட்டுக்கு எதிர் வீட்டுக்கு வராமலிருந்தால் கண்ணம்மாவுடன் கந்தையாவின் கதை பிணைந்திருக்கவேண்டியதில்லை. என்ன செய்ய? ஏதோ பலம்பொருந்திய ஒரு சங்கிலித் தொடர்பு - எப்படியோ ஒன்றோடொன்று - பின்னிப் பிணைந்து கொள்ள -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுக்கமான நெருக்கம் உண்டாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

இக்காலத்தில் ''யங்கி ஸ்டைல்'' என்று சொல்லுகிற ''றிப் பயர் குறோப்'' வைத்துக் கொண்டு ஊரைச்சுற்றி வளைய வரும் நவநாகரிக இளவட்டங்களைப் போலன்றி - பருவத்துக்குரிய குரங்குச் சேட்டைகளைத் தவிர்த்துத் திரிந்த என்னை ஆறுமுகம் தனது கடைசிப் பையன் கண்ணனுக்கு ''டியூசன்'' ஆசிரியராக நியமித்துவிட்டார்.

ஆரம்பத்தில் இதனைத் தடுத்திருந்தால் இந்தச் சாமியார் வேடத்துடன் உலைய வேண்டியதில்லை. ஊரை வெறுத்து நேசமும் பாசமும் ஊட்டிய பெற்றோரை விடுத்து இப்படியெல் லாம் தன்னைத்தான் மறைத்து வாழவேண்டிய நிர்ப்பந்தத்துக்கும் இடமேயில்லை! இதயத்தில் இரத்தம் கசிகிறது.

அதெல்லாம் பழைய கதைதான்! இருந்தும் அந்தப் பழை மையிற் கால்கொண்டு தான் இந்தப் புதுமைக்கு வரவேண்டி யிருக்கிறது. காலத்தை எதிர் நீச்சலடித்துக் கடந்து ஓராண்டுக்கு முன்சென்றுவிட்டால் கை தேர்ந்த சைத்திரிகனது கரத்தின் நுட்பத் தாலாகி மெருகு குன்றாது - இன்றும் புதுமையுடன் எழில் தரும் அஜந்தாவின் வர்ணச் சித்திரங்கள் போன்ற காட்சிகள் பளிச்சிடும். உயிர்த் துடிப்புள்ள அக் காட்சிகள் இதோ சலனப் படமாக என்முன் விரிகின்றன.

பென்ஷனியர் ஆறுமுகம் அன்று வீட்டிலில்லை. கண்ணம் மாவின் தாயார் அடுக்களையிலே வேலையில் ஈடுபட்டிருக்கலாம். அதைப் பற்றிய அக்கறை எனக்கில்லை. சுட்டித்தனம் மிகுந்த கண்ணனை அதட்டி அடக்கிப் பாடஞ் சொல்லிக்கொடுப்பதே ஒரு சாதனை. அந்தச் சாதனையிற் காணும் வேதனையில் ஆழ்ந்து கொண்டிருக்கும்போது.....

''களுக்'' என்ற சிரிப்பொலி என் காதுகளைச் சாடியது. இல்லை, தேனருவியாகப் பாய்ந்தது. நிமிர்ந்து பார்த்தபோது அங்கு நின்றவள் கண்ணம்மா. அந்தியின் செவ் வண்ணக்குழம்பு அவள் மேனியில் பொதிந்து கிடந்தபோதும் அவள் மேனிக்கு மெருகூட்ட அலங்காரம் செய்யத் தவறவில்லை. அழகுடன் அலங்காரம் கூடிவிட்டால் சலனபுத்தி படைத்தவர் மயங்கக்கூடும். விஸ்வாமித்திரனான யான் புலனை வெட்டித் திருப்பிப் - பாடத்தில் கண்ணனைப் புகுத்துவதிலேயே கவனம் செலுத்திக் கொண் டிருந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன மாஸ்டர் பேசுகிறீர்களில்லை!"

.....

"மாஸ்டர் உங்களுக்குக் காது கேட்காதா"

என் மௌனத்தை மீண்டும் அவள் களைந் தெறிந்து விட்டாள். தொடர்ந்து அவளே பேசினாள்:

"உங்களிடம் கதைப்புத்தகங்களிருந்தால் கொடுக்கின்றீர்களா?" என்று குயிலிசையில் கேட்டுக் கொண்டாள். முதன் முதல் அவள் விடுத்த வேண்டுகோள் இது. இயற்கையிலேயே புத்தகங்களை மற்றவர்களுக்கு வழங்கி அவர்களையும் புத்தகப் பைத்தியமாக்குவதில் எனக்கொரு நிறைவுண்டாவது வழக்கம். இந்தப் பட்டியல் நீளுவதை விரும்பாமலிருப்பேனா? அந்த நன்னோக்கின் காரணமாக,

"நாளைக்குக் கொண்டு வந்து தருகிறேன்" என்றேன்.

இலட்சையும் இயற்கையில் சங்கோசமும் கொண்ட எனக்குத் தொடர்ந்து அந்தப் பருவக் குமரியுடன் பேசுவதென்றால் என்னவோ போலிருந்தது.

தனது நெஞ்சுக்குக் குறுக்கே அரசினர் காரியங்களில் "பியூன்கள்" மாட்டியிருக்கும் பட்டிபோல் அமைந்து, விழுந்து கிடந்த பின்னலைத் தட்டி முதுகில் நெளியவிட்டுக் கொண்டு அவள் நடந்துவிட்டாள். நடக்கும்போது அவளது பாளைச் சிரிப்பில் பற்கள் மின்னுகின்றன. கண்கள் எதையோ தேடுகின்றன.

அந்த அன்னநடை? அதில் இழைந்தோடும் இலாவண்யம் எல்லாம் சிந்தையைத் திணறடித்து முன்பு யான் கண்டிராத புதுமையை -புதிய- அனுபவத்தை எனக்கு ஊட்டியே விட்டது. அதில் இராமர் வேடம் போட்டு மறைக்கவோ, மரக்கறி வாதம் செய்து மறுக்கவோ நான் விரும்பவில்லை. வெறுமனே புத்தகத்தை அவள் கேட்கவில்லை என்பது அவளது செயலில் - பாவனையில் எல்லாம் துலாம்பரமாக எனக்குத் தெரிந்தேவிட்டது. அவள் உள்ளே புகுந்துவிட்டாள். புதிய அனுபவமும் அதில் இழைந்துவரும் எண்ணமும் நெஞ்சில் கப்பிக் கவிந்துவிட்டதன் பலனாக இரவைப் பகலாக்கி நெளிந்து கொண்டிருந்து - மறுநாள் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னராகவே அங்கு ஆஜராகிவிட்டேன். சுருதி சுத்தமான இனிய பண்ணைக் காதுகள் பருகத் துடித்தன.

அப்பப்பா! கையோடு கொண்டுவந்த புத்தகத்தைப் பெறுவதில் எவ்வளவு ஆவல் அவளுக்கு! அதைச் சாக்காக வைத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு என்ன என்னவோ வெல்லாம் அளந்து கொட்டினாளே. ஊரறிந்த எழுத்தாளர்களைப் பற்றியும், அவர்களது கதைகள், அவர்கள் கையாளும் நடை, கரு, உரு இப்படியெல்லாம் அவள் பேசிப்பேசி நேரத்தைக் கொன்று கொண்டிருந்தாள். அந்தச் சாக்காட்டில் நெஞ்சு கனன்றது. ஏதோ புரியாத புதிர் விடுபடுவது போன்ற பிரமை... மகுடி கேட்ட நாகமானேன். கண்ணனுக்கு இந்தப் பேச்சு வாதம் தன் போக்கில் எதையாவது செய்து என்னை ஏமாற்றக்கூடியதாக இருந்தது. நானும் இப்போது அவனது ஆசிரியனாக இருக்கத் தயாரில்லைத்தான்.

வளர்ப்பானேன்?

அன்று அரும்பிய எமது நட்பு மலர்ந்தது. ஒன்றோடொன்று மிகக் நெருக்கம் குறைந்து ஒன்றிக்கொள்ள வேண்டிய வேளை...

உலகம் இருவருக்கிடையே மட்டும் தங்கியதல்ல. பரந்து செறிந்த அதன் வெளியில் எத்தனை எத்தனையோ ஜந்துக்கள், அதிலும் மனிதனின் அற்ப புத்திக்கு எட்டாதன எதுவுமேயில்லை. அதன் பலன் மூன்றாம் பேர்வழிக்குத் தெரியாதது என்று கருதிய விடயம் எப்படித் தான் புகைந்ததோ? குறுகிய காலத்துக்குள் பீரங்கி வெடிபோல் உலகம் முழுவதும் கேட்டு விட்டபோது நெருக்கடி சொல்லி முடியாது.

இருவர்க்கிடையேயும் ஏற்பட்ட பலரக வேறுபாடு நிமிர்ந்து நின்று சாதிக்க முடியாத பலவீனத்தைத் தந்து கொண்டிருந்தது. பலவீனத்தைத் தாண்டி நான் முன்னேறியிருப்பேன். எனினும் என்னை இளைஞன் என்று தெரிந்தும் தனது வீட்டுக்குள் அனுமதித்த கண்ணியவான் ஆறுமுகத்தின் கண்ணீரைத் துடைத்து விடவே யான் முனைந்தேன். அந்த வஞ்சமற்ற உள்ளத்தைக் கொல்ல நினைக்க கூடாது.

ஊரெல்லாம் உறக்கத்தின் சிலந்தி வலைக்குள் அகப்பட்டுக் கொண்டு, படுக்கையில் நெளியும் யாமம், என்னைப் பெற்று வளர்த்து என்ன என்னவோ கனவு கண்ட தந்தையைத் - தாயை எல்லாம் விட்டுப் பிரிந்து கிளம்பிவிட்டேன். வெறுமனே திடீரென நான் கிளம்பியிருந்தால் தேடியிருக்கலாம். அது தேவையில்லாத வாறு சரியான வழியில் நான் கையாண்ட தந்திரம் அதில் உண்டு. எழுதிய கடிதமும் அதை உறுதி செய்யும். அந்தக் கடிதத்தைப் படித்திருப்பார்கள். தேடியிருக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புள்ள பெற்றோருக்கு,

''பாசமும் நேசமும் ஊட்டி வளர்த்து படிப்புச் சொல்லிக் கொடுத்து ஆளாக்கிய உங்கள் மகன் உங்களை விட்டுப் பிரிகின்றான் என்று நீங்கள் வேதனையில் வெதும்பாதீர்கள். அவரவர்களுக்கு ஏற்பட்ட நியதியின் பலனே அவரவர்களுக்குக் கிட்டுகிறது. ஏன்? எதற்கு? என்ற வினாக்களுக்கு விடையை இங்கு விளக்குவதில் அர்த்தமில்லை. இதோ இக்கடிதத்துடன் காட்சி தரும் ''பொலிடோல்'' மருந்துப் புட்டி என் செலவு சாவுடன் சங்கமித்து விடும் என்பதை உங்களுக்கு உறுதிப்படுத்தும். எங்கேயாவது என் பிணத்தைத் தேட முற்படாதீர்கள்! அதிலும் வெற்றி காணமாட்டீர்கள்! ஏனெனில் எனது பிணம் இந்த ஊரின் எல்லையிலேயே தங்காது.

உங்கள் மகன்.

இப்படியெல்லாம் எழுதிவிட்டு நான் ஓராண்டை எங்கெங்கெல்லாமோ கழித்துப் பெற்ற தாயும் பிறந்துள பொன்னாடும் நெஞ்சில் மீண்டும் கிளர்ச்சியை ஊட்டித் தொடர்பு கொண்டழைக்கக் கிளம்பியிருக்கிறேன். செத்துத் தொலைந்தவன் என்று கருதிய நான் மீண்டும் உயிருடன் தோன்றி, விடுபட்டுப் போன சிக்கலைப் பெரிதாக்கிக் கொள்ளக் கூடாதென்ற நிலையுடன் ஆளே உருமாறிச் செல்கின்றேன்.

அந்த உருமாற்றம் கொண்டவனை என்றைக்காவது காணக் கூடாதவள் அவள். அவள் இதோ இன்னும் தூங்கிக்கொண்டே என்னருகிலிருக்கிறாள். தூக்கக் கலக்கத்திலும் அவளது சோபிதம் குறைந்ததாகவில்லை. வண்டியின் ஆட்டத்துடன் அவளது நெஞ்சுக்குக் குறுக்கே கிடக்கும் சேலை ஒரு புறம் சரிந்துகொள்கிறது. அங்கே கிடப்பது தாலி. அவளது வாழ்வுக்கு வேலியாக அவளது குடும்ப அந்தஸ்தை, பெருமையையெல்லாம் நிலைநாட்ட ஆறுமுகம் அவர்கள் கண்ணீரால் அமைத்துக் கொண்ட வேலி இது. அந்த வேலியை அவள் நிச்சயம் என்னை இனங்கண்டு கொண்டால் நீக்கிவிடலாமல்லவா? அதில் கடுகளவும் சந்தேகமே வேண்டியதில்லை. அப்படியானால் நான் மனிதனா?

அந்த நிலைக்கு நான் காரணமாவதா? சே! எதையெதை நல்லதென்று நினைத்து இது வரை சாதித்து வந்தேனோ அது என்றைக்கும் முறியடிக்கப்படக்கூடாது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவனியாவை விட்டுக் கிளம்பிய வண்டியின் வேகம் சிறுகச் சிறுகக் குறைகிறது. அடுத்து ஒரு புகையிரத நிலையம் வரவிருக் கிறது. ஓமந்தைக் காட்டின் நடுவே அமைந்த அந்த நிலையத்தில் வண்டி நிற்கும்போது அவள் கண் விழித்துக்கொள்வாள். இயற்கை யிலேயே சரள சுபாவமுடைய அவன் வேற்றாளிடம் பேசி உதவி கோருவதற்குப் பின்னிற்கமாட்டாள்.

அப்படியானால் என்னுடன் அவள் பேச வேண்டிய நிர்ப் பந்த மேற்படவே செய்யும். இந்தப் பெட்டியில் தொடர்ந்து அவளருகில் இருக்கக்கூடாது. இதோ வண்டி ஆடி அசைந்து கதிகுறைந்து நிலையத்தை வந்தடைகிறது. அவசரம் அவசரமாக எழும்புகிறேன். முற்றாக அந்த வண்டி நிற்கிறது. அதிக பிர யாணிகள் அந்த நிலையத்தில் இறங்கப்போவதில்லை. இரண் டொருவர் இறங்குகிறார்கள். அந்த இரண்டொருவரில் ஒருவனாக இறங்கிக்கொள்கிறேன்.

வேறு பெட்டியில் ஏறிக்கொண்டு எனது பிரயாணத்தைத் தொடர்வதிலும் அர்த்தமிருப்பதாகத் தெரியவில்லை. ஏன்? எதற்கு? செத்துவிட்ட பல பிரச்சினைகள் உயிர்கொண்டு நல்ல கருத்துக்கு இடையூறு செய்யக்கூடாது!

செத்துத் தொலைந்திருப்பான் என்று கருமாதிகளைச் செய்து முடித்திருப்பார்கள். அந்த இடத்தில் மீண்டும் உயிரை ஸ்தாபித்து - இதோ செல்லும் கண்ணம்மாவின் வாழ்வுக்குச் சோதனையைத் தேடித்தருவதா? கூடாது. உள்ளக் குறுகுறுப்பிற் புறப்பட்ட இடத்துக்கு மீண்டும் வர முயன்றேன். அந்த முயற்சியில் சூனியம் உருவாகும் போது நிறைவை எதிர் பார்க்கலாமா? இனிச் சூனி யத்தில் நிறைவு காணுவதுதான் எனக்குப் பிடித்தமானது!

வண்டி என்னைப்போன்ற சில மனித மந்தைகளையும், மூட்டை முடிச்சுகளையும் கக்கிவிட்டு ஒரேசீரான வேகத்தில் அவசரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. துணையற்றுச் செல்லும் அவளுக்குத் துணையாகித் துன்பத்தைக் கொடுக்காத நான் சற்று நின்றுவிட்டு வெளியே வருகிறேன்.அப்பப்பா! என்ன இருள். இருமருங்குமுள விருட்சங்கள் இருள் முழுவதையும் இங்கேதான் ஒன்றாகத் தேக்கி வைத்திருக்கின்றனவோ? இது என்ன செய்யும்? இருளாகிவிட்ட நெஞ்சுடன், இருளை ஊடறுத்துப் புறப்பட்ட திசையை நோக்கி நகருகிறேன். அவளுக்கு வண்டியிலிருப்பவர்கள் துணைபுரிவர். இந்த இருளை ஊடறுத்துச் செல்லும் எனக்குத் துணை தேவையேயில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பு

நந்தி

கைகளை மடக்கிக் காப்புக்களை நெஞ்சோடேயே வைத்துப் படுத்திருக்கிறாள் குழந்தை பூமணி. பக்கத்தில் ஒரு சாக்குக் கட்டிலில் இருந்தவாறே தனது மகளின் முகத்தில் வழியும் புன்னகைச் செல்வத்தை அனுபவிக்கிறான் சண்முகம்.

அவள் கனவு காண்கிறாளோ?

ஆமாம், பாதி நித்திரை தான். பிஞ்சு விரல்கள் மற்றக் கையின் காப்பைத் தடவிப் பார்த்துக் காவல் செய்கின்றன.

அடேயப்பா, அந்தக் காப்புக்களை வாங்க எவ்வளவு அடம் பிடித்தாள் அவள். தமிழர் நாகரிகத்தின் குட்டிப் பெண்ணல்லவா? நகை ஆசை இல்லாமல் போகுமா?

முகத்தில் மீண்டும் ஒரு மலர்ப் புன்னகை. 'பூமணி, இந்தப் புன்னகை வளர்ந்து, பூரித்துப் பக்குவமாகி...'

சண்முகத்திற்குச் சிந்தனையை வளர்க்க ஆனந்தமாக இருந்தது. பெருமையும் ஓரளவு வெட்கமும் கூட.

அவனுடைய மகள் குமரியாகும் போது மிக மிக கவர்ச்சியாக இருப்பாள். அவன் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நல்லவன் கையில் கொடுத்து....

அவள் கைகளை மெல்லத் தொடுகிறான்.

-''ம் ம் ம்'' - ஒரு முனகல்.

இன்னும் ஒரு தரம்....செல்லமாக-

ஒரு திடுக் காட்டிய அசைவு.

வட்டக் கருவிழிகள் மடல்கள் பிளந்து உருண்டன.

அவன் கைகளை வெடுக்கென இழுத்துக் கொண்டான்.

''களவெடுக்கிறாய் ய் ய்'' கோபச் சிணுங்கல்.

''இல்லையடி குஞ்சு. நான் இனித் தொடமாட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா காப்பு வாங்கித் தந்தவர் களவெடுப்பாரா?''

''அப்ப ஏன் தொட்டே ஏ ஏ''

''ஆசைக்கு''

''ஆசைக்கா?'' வெடுக்கென்று ஒரு கேள்வி.

''ஓ''

''பொய், களவெடுக்க.....''

''குஞ்சுன்ரை காப்பை நான் களவெடுப்பேனா?''

''ம் ம் ம்''. குழந்தை மறுபடியும் கனவு உலகில் வழுக்கி விழுந்து மகிழ்கிறது.

அன்றுதான் அவன் ஒரு ஜோடி காப்பு வாங்கிப் போட்டான். 'கற்பூர, பீங்கான், பிளாஸ்டிக், நைலோன் வளையல்களுக்கும் தமிழ் நாட்டின் பொற்காப்புக்கு மிடையே பேதமை தெரிகிறதே இந்த நான்கு வயசுப் பெட்டைக்கு!''

சிந்தனை இன்பத்தைத் தான் அள்ளிக் கொட்டுகிறது.

'மனம் இருந்தால் வறுமை சின்ன விஷயம். சுருட்டுக் கொட்டில் முதலாளியிடம் நான் வாங்கிய கடன் காசு ரூபா நூற்றைம்பது என்ன காசு? பத்து மாதம் கொஞ்சம் இறுக்கிப் பிடித்தால் கட்டி முடிக்கலாம். நூற்றைம்பது ரூபாய்க்காக ஒரு பச்சைக் குழந்தையின் துளிர் மனத்தைத் துவள விடலாமா?'

''இந்தாங்க நீங்க அவளுக்கு அதிகம் செல்லம் கொடுக் கிறீங்க'' சண்முகத்தின் மனைவி அன்று காலையில் கண்டித்தாள். ஆனால் அவள் உதடுகளிலும் கண்களிலும் குறும்பு வர்க்கப் புன்னகை அவன் செயலையே ஆமோதித்தது.

''காப்பு ஏது?''

''செய்விச்சனான்.''

''காசு?''

''கடன் வாங்கினேன்.''

''கடனா?''

''ஓ.''

''திருப்பிக் கொடுப்பது?''

''மாசம் பதினைந்து ரூபாயாக பத்து மாசத்தில்.''

''முடியுமா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முடியாதா? நல்லம்மா நான் இனிமேல் மத்தியானச் சாப்பாட்டுக்கு வீட்டை வரயில்லை. அந்த ஒரு மணித்தியாலத்திலை ஐம்பது அறுபது சுருட்டினால் ஒரு நாளைக்கு அறுபது சதம் அதிகமாக உழைக்கலாம்."

"சாப்பிடாமலா?"

"ஐஞ்சு மணிக்கு வந்து சாப்பிடுறேனே."

"இந்தக் கயிட்ட மெல்லாம் எதற்கு?"

"அதற்கு -" என்று சுட்டிக் காட்டுவது போல பூமணியின் பக்கம் திரும்பினான் சண்முகம்.

"என்ரை அப்பா வாங்கித் தந்தவர்" - கைகளை பரத நாட்டிய கமல முத்திரையில் பிடித்தவாறே காப்புக்களைக் காட்டிப் புழுகிக் கொண்டிருந்தாள் பூமணி.

"என்ரை அப்பா" என்ற போது தனது மகள் அன்பைச் சந்தனமாகக் குழைத்துத் தனது உடலெல்லாம் பூசியது போல் சிலிர்த்தது சண்முகத்திற்கு.

பூமணியைச் சுற்றி அயல் வீடுகளின் ஜயா, புஷ்பா, வரதா, வாணி.... எல்லாமாக ஏழு எட்டுப் பெண் குழந்தைகள் சதுரங்க விளையாட்டுக் காய்கள் போலக் குந்தியிருந்தனர்.

பூமணி ஒரு இராசாத்திக் காயாக அவர்கள் மத்தியில் இருந்தாள். கைகளில் ஒரு சோடி தங்கக் காப்பு.... தலையில் மகுடம் என்ற யோசனையோ?

மற்றப் பிள்ளைகளின் கைகளில் தங்கம் இல்லாமலில்லை. அவர்களின் கழுத்துக்களில் கூட சின்னஞ் சிறு சங்கிலிகள். இவை தாம் ஒன்றுமறியாத பூமணியக்குத் 'தங்கக் காப்பு' ஆசையை மனதில் விதைத்தன. ஆனால் இன்று இந்தப் புத்தம் புதிய சோடிக்குத் தான் மகிமை. அது குழந்தை உலகமல்லவா?

சண்முகத்தின் கண்மணி பூமணிக்குக் காப்பு வந்த செய்தி புதிசாகவே இருக்கின்றது. இரு கிழமைகள் கூட காலத்தின் எல்லையில் மறையவில்லை..... சாகவில்லை.

∴ ∴ ∴

கைகளை மடக்கிக் காப்புக்களை நெஞ்சோடேயே வைத்து...

கைகளை மடக்கி அப்படியே வைத்திருக்கிறார்கள். குளிப்பாட்டி, பூச்சட்டை மாட்டி, சாந்துப் பொட்டு இட்டு.... முகத்தில் அதே கனவுச் சிரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாரென் நித்திரையிலை படுத்திருக்கிறது போலை தானை கிடக்கிறாள்.''

''என்னக்கா, மூன்று நாள் காய்ச்சல் தானே'' தனது மூக்கைத் துடைத்து முந்தானையில் துடைக்கிறாள் மற்றவள்.

''எங்களுக்கே மனம் பதறுகுது எண்டால், பெத்தவளுக்கு எப்படி இருக்கும்?''

இனத்தவரின் இப்படியான பேச்சுக்கள் சண்முகத்தின் உள்ளத் தீயில் எண்ணெய் வார்க்கின்றன. சவப்பெட்டியில் பக்கத்தில் அப்படியே இருந்து விட்டான்.

'குஞ்சு.....உன்ரை அப்பா பக்கத்தில் இருக்கிறார். அப்பா காப்பு வாங்கித் தந்தவரல்லாவா?.....'

மூளை சிந்திக்க இதயம் அழுதது.

'குஞ்சு...நீ இனிப் பேசமாட்டாயா? அப்போ, அப்பா என்று கூட கூப்பிட மாட்டாய்? ஏன் அப்படித் தானே....? இதயம் சிந்திக்க அவன் குழந்தையைப் போல் அழுதான்.

யாரை நோவது? விதியையா? விதியின் தூதனாக வந்த பரிகாரியையா? அல்ல பரிகாரியின் உருவில் தான் விதி வந்ததோ!

மூன்று, நான்கு நாட்களுக்கு முன் பூமணிக்கு மெல்லிய காய்ச்சல். அடுத்த நாள் சாப்பாட்டை மறுத்து விட்டாள். தொண்டையில் நோவு. யாழ்ப்பாண பெரிய ஆஸ்பத்திரிக்குப் போக முத்திரைச் சந்தையடி பஸ் நிறுத்தும் இடத்தில் சண்முகம் நின்றான். அவன் இடது தோளில் பூமணி சாய்ந்திருந்தாள். வலது கை அவள் முதுகைத் தடவிக் கொடுக்கிறது.

பஸ் வரவில்லை.

பரிகாரி தம்பிப்பிள்ளை தான் செம்மணி ரோட்டில் வந்தார்.

நோயாளி பக்கம் - பரிகாரி சம்பாஷணையும், பரிசோதனையும் சந்தியிலேயே நடந்தது. கழுத்தை வருடி முதுகைத் தடவி குழந்தையின் கையைப் பிடித்து மணிக்கட்டு நாடியின் மேல் தனது வலது விரல்களை வைத்து நாதஸ்வர மேதையைப் போல் தொட்டும் தொடாமலும் மாற்றி மாற்றி விரலடித்து.....

''கழுத்தில் இரு வாய்வுக் கட்டிகள்'' - நான்கு சின்ன வார்த்தைகளில் விளக்கமாக 'டயக்னோசிஸ்', கை மருந்துக்கு ஆலோசனையும் அனுமானமும் கையோடயே கிடைத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சே! பரிகாரி குழந்தையின் வாயைத் திறந்து கொஞ்சம் பார்த்திருக்கக்கூடாதா? அல்லது அந்த பஸ் தான் கொஞ்சம் முந்தி வந்திருக்கக் கூடாதா? விதியோ வியாதியோ மூன்று நாட்களிலேயே முத்தி முறுகி குழந்தையின் தொண்டையை இயமக் கைகளுடன் இறுக்கியது.

ஆஸ்பத்திரிக்குக் கார் பிடித்து ஓடினார்கள். அங்கே நெளிந்த வெள்ளித் தகடால் மெல்ல நாக்கை அமுத்த வாயைத் திறந்து வெளிச்சம் பிடித்துப் பார்த்து..... தொண்டைக் கரப்பனாம்.

'சே!.. கடைசி நேற்றாவது வந்திருக்கப்படாதா? வேதனை யுடன் டாக்டர் கேட்டார்.

பரிசோதனை அறையை விட்டு வெளியே வரும்போது கங்காணி பரஞ்சோதி - நல்லூர்ப் பையன் - ''என்ன சண்மு கண்ணை பிள்ளையைக் கொன்று போட்டாய்'' என்று கவலை யுடன் ஆனால் முரட்டுத்தனமாக அங்கலாய்த்தான்.

இந்தக் கேள்விகளின் ஒலி அலைகள் எல்லாம் இப்போது அவன் காதுகளில் அங்குசங்களாகக் கிழிக்க இதயம் உளறியது. நல்லம்மாவின் தமையன் மார்க்கண்டு காப்பைக் கழற்ற கையை விலக்குகின்றான்.

''மச்சான் சுடலையில் கழற்றலாம்'' என்று கூறி 'ஓ' வென்று கதறினான் சண்முகம். சவப்பெட்டி மூடப்பட்டது.

''ஊரார் கிடங்கு வெட்ட உற்றவையோ மண்போட்டார் அயலார் கிடங்கு வெட்டஅந்நியரோ மண்போட்டார்.....''

வீட்டுப் பெண்களின் ஒப்பாரி கேள்விகளாக, சண்முகம் விடை தெரியாது திணறினான்.

''வாய்க்காலோ மெத்தை?

வரம்போ தலைக்கணை?''.... ஒரு தனி வயோதிப ஒப்பாரி கம்மிய குரலில் கிணற்றடியிலும் தொடர்ந்து கேட்டது. மனக் கவலை துலாமிதிக்கச் சண்முகம் அழுதுகொண்டே சூத்திரப் பாவையைப் போல் சாய்ந்தான்.

உறவினர் வீட்டுச் சோறு பரிமாறப்படுகிறது.

வாணி வீட்டுச் சோறா?

ஐயா, புஷ்பா, வரதா, வாணி.....

பூமணி?

அவள் காப்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மச்சான் சுடலையிலை காப்பைக் கழற்ற மறந்து போனோம்" மார்க்கண்டு ஏங்கினான்.

"நீ கழற்றுவாய் என்றிருந்தேன்."

"நீ கழற்றுவாய் என்றல்லோ நினைச்சேன்."

"என்ன கதைக்கிறியள், காப்பைக் கழற்றவில்லையா?" நல்லம்மாவும் கேட்டாள்.

"என்ன விலை?" - சபையில் ஒருவர் செலாவணி மதிப்பில் நிலைமையைக் கணிக்கப் பார்க்கிறார்.

".....''

அடுத்த நாள் விதானை, சுகாதார வைத்தியர், நீதிபதி முதலி யோரைக் கண்டு சவக்குழியைத் தோண்டிச் சவத்திற்குப் போட்ட காப்பைக் கழற்ற அனுமதி பெற்றார்கள்.

ஃ ஃ ஃ

மார்க்கண்டு மயானத்தின் ஏகாந்த அமைதியைக் கலைக்க விரும்பாதவன் போல் குழியை மெல்லத் தோண்டிக் கொண் டிருந்தான்.

பக்கத்தில் குந்தியிருந்த சண்முகத்தின் இதயம் நிறை மாதக் கருப்பையின் பிரசவத் துடிப்பைப் போல் அவதியுடன் சுருங்கிச் சுருங்கி விரிந்தது. 'செத்த பிறப்பல்லவா? விபரீத பிரசவமல் லவா?' யோசனை உணர்ச்சிகளை மடக்கித் திருப்ப, அதே இதயம் சில வேளைகளில் மௌன விரதம் இருந்தது.

அவன் பலவாறு சிந்தித்துக் கொண்டிருந்தான். சவப்பெட்டி திறக்கப்பட்டது.

சண்முகத்தின் கண்ணீர்த் திரையூடாகச் சவம்.... அல்ல. அவன் மகள் பூமணிதான் தெரிகிறாள்.

கைகளை மடக்கி, காப்புகளை நெஞ்சோடேயே வைத்து....

அந்தக் கைகளை மெல்லத் தொடுகிறான்.

"குஞ்சு"

".....''

கைகளை வெடுக்கென உதறி இழுத்துக் கொள்கிறான். அவள், அப்பா வாங்கிக் கொடுத்த காப்புகளைத் தன் நெஞ் சோடேயே வைத்துக் கிடக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டியை அமைதியாக மூடிவிடுகிறான் அவன். குழியும் நிரம்புகிறது.

சண்முகத்தின் கண்ணீர் நனைந்த முகந் தசைகளின் சோக அசைவுகளோடு -

அவன் உதடுகள் படபடக்கின்றன.

''குஞ்சு, அப்பா உனக்குக் காப்பு வாங்கித் தந்தவர்.... களவெடுப்பாரா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்ம ஞானி

கே.வி. நடராஜன்

வயிரவ கோவிலடி வாசலில் பஸ் ஒன்று தங்கிப் போகும் அசுரத்தொனி ஊருக்குள் எதிகரொலிக்கிறது.

யாரோ எவரோ என்ற அசுவாரசியத்துடன் ஊர் திரும்பிப் படுத்துக் கொட்டாவி விடுகின்றது.

உழைக்கும் மக்கள் நித்திராதேவியை இறுக அணைத்து இன்பம் அனுபவிக்கும் அந்த வேளையில் யார் வந்தாலென்ன? ஊர் அரைத் தூக்கத்திற் சுகிக்கிறது.

பஸ்ஸை விட்டிறங்கிய வித்துவான் கந்தசாமி வெகு சிரமத்தினூடே தன் கைக்கடிகாரத்தைப் பார்க்கிறார். மணி பன்னிரண்டே முக்கால் என்பதை நெருப்புக்குச்சி வெளிச்சத்தில் நீச்சலடித்த கடிகார முட்கள் தெரிவிக்கின்றன.

சாதாரணமாக அவர் கையிலிருந்த கடிகாரம் அவருக்கே தெரியவில்லை என்பது ஆச்சரியந்தான்! உள்ளுணர்வுப் 'பெண்டுலத்'திற்கு அது இருப்பது தெரியும். ஆனால் வெளியே இருள்...

கொடிய இருளின் கோரத் தாண்டவம் எங்கும் குறைவில்லாமல் அரசோச்சுகிறது. அதன் அடக்குமுறைச் சட்டத்திற்கு அடி பணிந்து விட்டது போல கரிக்கும்பமாக காட்சியளிக்கிறது வடக்கம் பிராய்க் கிராமம்.

காரிருளின் கோரப்பிடியிற் கருகித்தெரிந்த ஊரை ஒரு முறை திரும்பிப் பார்க்கிறார். அவருடைய அகத்தையும் புறத்தையும் அந்தகாரமான இருள் சொந்தம் கொண்டாடியதால் எங்கு செல்வோம் என்ற மனப்பிரமை அவருக்கு. ஒளியுண்ட விழிகளை உறுத்தும் இருளுடன் ஐக்கியப்படுத்துவதற்காக இமைகளை அப்படி மளமளவென்று வெட்டிப் பிரித்து நிலைமையைச் சரி செய்ய முயலுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய நெஞ்சில் நிரம்பி வழியும் வியாகூல இருளுக்கும் தன் விழிகளால் வெட்டிப் பார்த்து விழி திறக்க நினைக்கின்ற அந்த வெளியிருளுக்கும் வித்தியாசம் இல்லை.

கலங்கிச் சுருங்கிய 'நஷனல்' உடுப்பை இலேசாக உதறித் தட்டிவிடுகிறார்; சிலும்பிச் சின்னாபின்னப்பட்டிருந்த தலைமயிர்க் கூட்டத்தை ஒரு நிரைப்படுத்த விரும்பியவராய் வலக்கை விரல்கள் ஐந்தையும் அதற்குள் விட்டுக் கோதிக் கொள்கிறார்.

கையில் ஏதோ ஒன்று, எதுவாக இருப்பினும் கனக்கும் பொருள் என்பது கைமாற்றிக் கொண்டு செல்வதிலிருந்து தெரி கிறது. காலின் செருப்பு குதிகளை முத்தமிடுமோசை நிசியின் அமைதியினால் தூரத்தில் கேட்கிறது. அது வித்துவான் ஊருக்குள் இறங்கிவிட்டார் என்பதைக் கட்டியங்கூறிச் சொல்வதாயமைகிறது.

பழக்கப்பட்ட தெரு என்ற மமதையில் பாதையைப் பார்க் காமலே நடக்க முயற்சிக்கின்றார்.இடைக்காலத்தில் எத்தனை எத்தனையோ குண்டு குழிகளைத் தன்வசம் சேர்த்துக் கொண்ட அத்தொரு அவரையொரு அசல் குடிகாரனாக்கிக் கொண்டே நீண்டு செல்கிறது!

அதனாலென்ன? அதையொன்றும் அவர் மனம் பொருட் படுத்தவில்லை, கனகம்! அவருடைய மனைவி. அவருக்குப் பாலிய வயது முதற்கொண்டே நன்றாகத் தெரிந்தவள் தானே. அவளே அவரை இடறித் தூக்கி எறிந்து விட்டிருக்கும் போது....

குண்டு குழிகளில் அவர் கால்கள் இடறுப்படுவதால் உடல் குலுங்கத்தான் செய்கிறது. ஆனால் அவர் மனம் இரைமீட்கும் அந்த மொட்டைக் கடிதத்து விவகாரத்திலேயே நிலைத்திருக் கின்றது.

அதிலோர் வார்த்தை நெஞ்சில் உளிகொண்டு செதுக்கியது போல் அங்கு நிலைப்பட்டுவிட்டது. இன்னமும் அவ்விடத்தில் உதிரம் பொசிந்து கொண்டேயிருக்கிறது 'அதற்கு உன் அம்மாக் காரியும் உடந்தையாயிருக்கிறாள்' என்பது தான் அது.

இனந்தெரியாத யாரோ ஒரு யமனால் எழுதப்பட்ட அக்கடி தத்தில் தாயைப்பற்றி இழுத்துவிட்டிருப்பது விடுபடாத வெறும் புதிராகவே பட்டது.

பெற்றதாய் பிள்ளைக்கு இப்படியும் செய்வாளா? எந்தத் தாய்தான் இந்தக் கொடூரமான ஈனத்துரோகத்திற்கு உடந்தையாக இருக்க முடியும்? அப்படிப்பட்டவளுடைய சொந்த வாழ்க்கை...? ஐயோ அம்மா;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசை மீட்ட ஆட்டிற்குத் திடீரென்று இரைப்படுவான் வியாதி கண்டமாதிரியாகிறது.

தாயைப் பற்றிய நினைவைத் தொடர்ந்து நினைக்காமல் இடைக்கொள்ளையாக அதைச் சாகடித்துவிட்ட அவர், மனதைத் திருப்பி மனைவிமேல் மேயக்கட்டுகிறார். பயிரும் ஆடும் அவருடையது. கயிற்றை வேறு தாராளமாக இளக்கிக் கட்டிவிடுகிறார். எப்படி மேய்ந்தாலென்ன?

அம்மானுடைய ஆட்டைத்திவசம் முடிந்த அடுத்த நாள் என்பது அவருக்கு நன்கு ஞாபமிருக்கிறது. அதைத் தொடர்ந்து. அவருடைய வாழ்க்கையின் கதையை உள்ளூர் இருட்டில் யாரோ ஒளித்திருந்து பகடி பண்ணிப் பேசுவது போன்ற ஒரு சலனம் மனத்திற் பிரமை ஊட்டுகிறது.

உண்மை ஊருக்குத் தெரியாமல், இப்படியொரு மொட்டைக் கடிதம் வந்திருக்க நியாயமில்லை. அதிலும் அவரை மாப்பிள்ளையாக அடையவிரும்பி ஏமாந்தவர்களுக்கு இதைவிட வேறு சந்தர்ப்பம் எப்போது கிடைக்க முடியும்?

அடுத்த நாள் -

ஆட்டைத்திவசத்திற்குச் சமைத்த சட்டி பானைகளைத் துப்புரவாக்கி வைத்துவிட்ட சுற்றத்தார் வித்துவானைச் சூழ்ந்து கொள்ளுகிறார்கள்.

அவர்களுக்கென்ன? அடுத்த விருந்தையும் நாட் குறித்து வைத்து விட்டால் வயிற்றைச் சற்று ஆசுவாசமாக இளக்கி விட்டுக் கொண்டு வரலாம் என்ற நினைப்பு.

கலியாணப் பேச்சு 'வெற்றிலைச்சமா'வுடன் ஆரம்பமாகிறது. பழஞ்சோற்றுப் புளிச்சல் எதிரெடுப்பிற்குத் தன்னை ஈடு கொடுத்துச் சமாளிக்க முடியாத பொக்கை வாய்க்கிழவரொருவர் பேச்சைத் தொடக்கி வைக்கின்றார்.

'ஏன்ரி பிள்ளை விசாலம்' இந்தப் பொட்டை கனகத்தின் சங்கதியைத்தான் சொல்லுறன்; தாய் தகப்பனில்லாத பிள்ளையை நெடுக வீட்டிலை வைச்சுக் கொண்டு..... பொடியனும் வந்து நிற்குது இப்ப கதைச்சாத்தானே நல்லது என்ற பெரியவர், எல்லுப் போல தேத்தண்ணி குடித்தால் தேவையில்லை என்ற பாணியில் அந்தப் பெரிய ஏவறையைத் தொண்டைக்குள் இருந்து வெளியே தள்ளினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அதுக்கு நான் என்னண்ணை செய்ய?..... நானும் தான் நாண்டு கொண்டு நிக்கிறன். அவர் ஓமெண்டு சொல்லாமலுக்கு...' என்று இழுத்தாள் வித்துவானின் தாய் விசாலம்.

எல்லோரும் கதைத்துப் பேசி ஆடும் நாடகம் தான் என்பது வித்துவானுக்குத் தெரியும். என்றாலும் அவருடைய மனச்சாட்சியே அவரைக் குத்திக் காட்டியபோது கனகத்தைக் கைப்பிடிப்பதற்குச் சம்மதம் தெரிவித்து விட்டார். அதைத் தொடர்ந்து தேநீர் விருந்தொன்று சமிபாட்டிற்கு எல்லோர் வயிற்றிலும் இன்பமாகச் செல்கிறது.

இந்த லீவு முடிந்து போவதற்குள்ளாகவே வித்துவானுக்கும் கனகத்திற்கும் திருமணத்தை முடித்துவைத்து விட்டார்கள். வயது மூப்பிளமையில் இருவருக்கும் எவ்வளவோ உண்டு. பத்தாண்டுகளை முதலில் உருட்டித் தள்ளிவிட்ட வித்துவானுக்கு முப்பது வயதுக்காரி ஒத்துவரமாட்டாளா?

திருமணம் வெகு சிறப்பாக நடக்காவிட்டாலும் மட்டுக்கு மட்டாக வெகு கச்சிதமாக நடந்தேறியது. ஆனால் ஒரு சங்கதி: அது ஒரு துக்குறி மாதிரி ஆகிவிட்டது. எல்லோருடைய வயிறுகளும் பகீரென்று பற்றி எரியத்தான் செய்தன: தவணைக் கணக்கைக் கூடக் கலியாண உற்சாகத்தில் கனகம் மறந்து போய் விட்டாளா?

கனகம் அன்றைக்கென்றே தாலி கழுத்தில் ஏறிய உடனேயே தன்னைச் சுற்றிக் கரிவட்டம் போட்டுக் காவல் செய்து கொண்ட சங்கதியிருக்கிறதே...

மூக்கின் கொழுந்தில் யாரோ ஓங்கிக் குத்தியது போலிருந்தது. மேற்படி சங்கதியைக் கேட்ட வித்துவானுக்கு. தீட்சை கேட்ட அவருக்குத் தூக்கம் மாத்திரைகளைச் சாப்பிட்ட அயர்வு தட்டிற்று வாழ்க்கையில். வெட்கம் வேறு அவரைப் பிடுங்கித் தின்றதால் 'லீவு முடிந்து போய் விட்டது' என்று சொல்லி அடுத்த நாளே கிளம்பிப் போய் விட்டார்.

நாற்பது வயதை எவ்வளவு நாணயத்துடன் கழித்த மனிதன்! ஊருக்குள் இருப்பது கூடத் தெரியாது. அவருடைய பிரம்மச்சரியத்தில் இதுவரையில் ஒரு தவறேனும் ஏற்பட்டிருக்குமா?

கலகெதரையின் குளிர்காற்றில் கனகத்தின் நினைவு அடிக்கடி தலை காட்டத்தான் செய்தது, இடையில் ஒரு தரம் போய்வர வேண்டுமென்ற ஆசையுந்தான், என்றாலும் எங்கே ஒழிகிறது? இலக்கியச் சொற்பொழிவு என்று கதா ஏதாவது ஒன்று இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டேயிருக்கும். கடைசியில் ஒரேயடியாக பள்ளிக்கூட லீவு விட்ட பின்பு போய் விடுவோம் என்று தீர்மானித்திருந்தவரை, திடுதிப்பென்று வந்த மொட்டைக் கடிதம் கட்டித் தூக்கி வந்து ஊருக்குள் எறிந்து விட்டதென்றால்....

வெட்கக்கேடான சங்கதி, அவருடைய அறிவுக்கும் பெருமைக்கும் இப்படி ஒரு இழுக்கைக் கனகம் உண்டாக்கி விட்டாள்.

அவரால் அதை நம்பவே முடியவில்லை. என்றாலும் மனம் குழம்பிப் போய்விட்டது. சோகச் சாயல் அவர் முகத்தில் தானாகவே வந்து கவியத்தொடங்கி விட்டது.

வித்துவான் என்பதால் சந்தேகம் விட்டு விலகியிருந்து விடுமா? அன்பு அதிகமாகச் செலுத்தப்பட்ட இடத்தில் சும்மா ஒரு கீறு விழுந்தாலும் போதும். சந்தேகம் தானாகவே செழித்து வளரும்.

அவருடைய ஆண்மைக்குச் சவால் விட்ட அந்தமொட்டைக் கடிதத்தை மறுபடியும் ஒரு முறை பைக்குள் கைவிட்டு நெருடிப் பார்க்கின்றார்.

அது விரிபுடையனாகச் சரசரக்கிறது.

'கட்டிய மனைவி கள்ளப் புருஷன் கனகசபையுடன் சோரம் போகிறாள் என்றால் எட்டி நின்று கேட்டு விட்டுப் போகக்கூடிய சமாச்சாரமா?

'வெட்டிக் கொலை செய்ய வேண்டியது தான்!

'இல்லையேல், நானாவது செத்தொழிய வேண்டியது தான்'

பல நினைவுகள் குதியாட்டமிட வித்துவான் கால்களை எட்டிப் போட்டு நடக்கிறார்.

'அப்படிச் செய்யவில்லையென்றால், காலமெல்லாம் சொள்ளைக் கதைகள் பேசி எள்ளி நகையாடுமே ஊரும் உலகமும், தலைநிமிர்ந்து நடக்கத்தான் முடியுமா ஊருக்குள் என்று திரும்பவும் தன்னைத்தானே கேட்டுக் கொண்ட வித்துவானின் நடையிலே மீண்டும் வேகம்.

இருட்டை எதிர்த்துப் பிரித்துக் கொண்டு நடக்கும் வித்துவானின் முன்னே சற்றுத் தொலைவில் சென்று கொண்டிருக்கிறதே ஓர் உருவம். அது.....?

குரல், குரல்வளைக்குட் சாம்பியது. அவருடைய திடப்படுத்தப்பட்ட நெஞ்சுகூட சற்றுநேரம் வெலவெலத்துப் போய்விட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டது. வித்துவான் திகைத்து நின்று நோட்டமிட்டார். பேய், பிசாசைக் கண்டாற்கூட ஏற்படமாட்டாத திகில் ஒரு கனப் பின்னத்தில் அவரை உலுக்குகின்றது.

மனித உருவமென்று நிதானித்த பின்னர் செருப்பைக் கழற்றிக் கைகளில் எடுத்துக் கொள்ளுகிறார். தூரத்தில் செல்லும் அந்த உருவத்தைத் தொடர்ந்து செல்லும் முயற்சியது.

கடுகதி வேகத்தில் நடக்கும் அந்த உருவம் அடிக்கொருதரம் பின்னும் முன்னுமாக இருட்டைத் துழாவிப்பார்த்துக் கொண்டே நடக்கின்றது.

மொட்டைக் கடிதம், சரித்திர தஸ்தாவேஜாக விரிகிறது பிரம்மச்சரியத்தின் இந்திரியப் புலனடக்கம் அவரை எள்ளி நகையாடுகின்றது. ஒழுக்க சீலம் சம்மட்டியாக அவருடைய மண்டையை ஓங்கி அறைந்து பிளக்கின்றது. அந்த மண்டைப் பிளவில் முன்னால் நடக்கும் உருவம் கனகசபையாக மிடுக்கு நடை போடுகிறது... அவருடைய சேதனச் செயலையும் மீறி, அவருடைய உடல் அதன் பாரத்தை இறக்கி, அந்த உருவத்தின் பின் இறகாகப் பறக்கிறது... அவரும் சமீபமாக வந்துவிடுகிறார்.

வேலிப் போட்டுக் கூடாக முதுகை வளைத்து உள் வளவுக்குள் தன்னை இழுத்துக் கொண்ட கனகசபை வித்துவானின் வீட்டிற்குள் புகுந்து விடுகிறான்!

இருவரையும் தொலைத்துத் தலை முழுகி விடுவதென்ற வீறாப்புடன் தொடர்ந்து வந்த வித்துவான் ஏன் அப்படி வேலிப் பொட்டடியில் கல்லாய்ச் சமைத்து போயிருக்கிறார்.

வேலியைப் பிரித்து சென்ற பிணத்திற்கு இளநீர் வெட்டி வைத்து அழுங் காட்சி.

பொட்டிற்குள் வித்துவானின் உடல் இலகுவாகப் புகுந்து முன்னேறுகிறது. கதவு மூடாமற் சார்த்தப்பட்டிருக்கிறது. வீட்டிற் குரியவன் போன்று கனகசபை உள்ளே நுழைந்தான். கதவு உள்ளே சார்த்தப்படுஞ் சப்தம் கேட்கின்றது.

வித்துவானின் உள்ளம் ஒரு கணம் குழம்பிய குளமாகின்றது. மறுகணம் தாமரை இலை நீராகிறது. அடுத்தகணம் தாமரை இலை நீர் குளத்து நீருடன் கலந்து கலங்குகின்றது. கலங்கிய குளத்தின் நீர்த்துளி ஒன்று தாமரை இலையிலேறி நித்திய ஜாலம் காட்டுகிறது.

கதவை வெளிப்புறமாகப் பூட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றொநாள் வித்துவானுக்கும் கனகத்திற்கும் விவாகம் முடித்து வைத்த சமூகம் அங்கு கூடி நிற்கிறது. அவர்களுடைய உள்ளங்களில் துவேஷம் குடிகொண்டிருக்கின்றது. ஆனால், வித்துவான் மிக அமைதியாகச் சில வார்த்தைகளில் விஷயத்தை விளக்கி, வீட்டைத் திறந்து காட்டுகிறார்.

கனகமும், கனகசபையும் வெலவெலத்து, நடுநடுங்கி விழி களை நிலத்திற் புதைத்து நிற்கின்றார்கள்.

கூட்டத்தில் நின்ற கிழவர்களிற் சிலர் தூ! மானங் கெட்ட சவங்கள்'' என்று துப்பல் மூலம் ஆத்திரத்தைக் காட்டுகிறார்கள்.

வித்துவான் பிரம்மஞானியின் பரிபக்குவ நிலையுடன் வார்த் தைகள் தளம்பாமல் மிகவும் நிதானமாகச் சொன்னார்: 'உங்க ளுக்கு விருப்பமெண்டால் ஊரறிய வாழ்கிறது தானே? ஏன் ஒளிப்பு மறைப்பு? நான் வருகின்றேன்.''

ஊரைத் திரும்பிக் பார்க்காமல் வித்துவான் நடக்கத் தொடங் குகிறார்.

அந்த துன்பப்பட்ட கௌதம முனிவரே தன் மனைவி அகலிகையைக் கல்லாகச் சமைத்தார். அகலிகை, ஸ்ரீ ராமனின் கால்வண்ணம் படும்வரையிற் சிலையாகத் தவமிருந்தாள்.

ஆனால் கனகத்தின் மேல் தனக்கிருந்த உரிமையை சமூகத் தின் முன்பாக உதறிவிட்டு, அவளுக்குப் புதுவாழ்வு அளித்து ஊரைவிட்டுத் தூரத் தூர நடந்து கொண்டிருக்கும் வித்துவான்...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சைக்காரி கடன்காரியான கதை

சசி பாரதி சபாரத்தினம்

வீதி வீதியாக அலைந்து. வீடு வீடாகத் திரிந்து. கஷ்டப் பட்டுச் சேர்க்கும் பணத்தை எல்லாம் - நாலுகாசாவது மிச்சமில் லாமல் - சாப்பாட்டுக்காகக் கடைக்காரனுக்குக் கொட்டி அழ வேண்டி இருக்கிறதே என்று கவலைப்பட்டுக் கொண்ட பிச்சைக் காரர்கள். ஒரு நாள் கூடி, ஒரு தீர்மானத்துக்கு வந்தார்கள்.

இத் தீர்மானப்படி தங்கம், இனிமேல் பிச்சைக்காகக் கையேந் தும் தொழிலைவிட்டு, சமையல் தொழிலை மேற்கொள்ள ஒப்புக் கொண்டாள். ஒரு வெள்ளிக்கிழமை நல்ல நாளாகக் கணிக்கப்பட் டுக் கூட்டுறவுப் பாணியில் தங்கம் சமையல் கடையை ஆரம் பித்தாள்.

இடம்: பலதெருக்களும் சந்திக்கின்ற 'றவுண்ட் எபவுட்' போலவும் பயன்படும் ஒரு 'சதுக்கம்'.

ஒரு வார காலமாக எல்லாப் பிச்சையர்களிடம் இருந்தும் சிறு சிறு தொகையாகப் பணத்தைச் சேர்த்துத் தனது கடைக்கான ஆயத்தங்களைச் செய்துவந்தாள் தங்கம்.

மரக்கறிச் சந்தை, மீன் சந்தை, இறைச்சிக் கடைகளுக்குத் தங்கம் சென்று மலிவாகவும் கழிவுகளை இலவசமாகவும் பெற்றுச் சமையல் கடையை ஆரம்பித்து மிகக் கச்சிதமாக நடத்தி வந்தாள். சாப்பாட்டுக்காரருக்கு இது ஓர் அற்புத விருந்தாய் இருந்தது. சுற்றுவட்டாரக் கடைத் தெருக்காரர்கள் தங்கத்திற்கும் சாப்பாட்டு வாடிக்கையாளர்களுக்கும் 'சபாஷ்' கொடுத்தார்கள்.

அவள் சிரமத்திற்குக் கூலியாகச் சிறு இலாபமும் கிடைத்து வந்த போதிலும், ஒருவார காலத்திற்குத் தான் கடை ஒழுங்காக நடந்தது.

ஒருவாரத்திற்குப் பின்னால் சிறிது சிறிதாக வாடிக்கைகள் குறைந்து கொண்டே போய்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் தங்கம் 'கடை'யை முற்றாகவே மூடிக் கொண்டாள். பின்னர் திறக்கவேயில்லை.

எனவே தங்கம் பழையபடி கையேந்தும் தொழிலை ஆரம் பிக்கலானாள்.

ஒரு நாள் கடை வாசலில் நின்ற தங்கத்தைப் பார்த்து ஒரு முதலாளி கேட்டார்:

"என்ன தங்கம், பழையபடி தொடங்கி விட்டாய்..... என்ன நடந்தது...?"

"அதை ஏன் கேட்கிறீங்க முதலாளி. ஒரு கிழமையா ஒழுங்கா யிருந்தாங்க. பிறகு கடன் வைக்க ஆரம்பிச்சு, ஒவ்வொருத்தனாக மறையத் தொடங்கிவிட்டாங்கள். நான் இப்ப மரக்கறிச் சந்தை யிலும் மீன்சந்தையிலும் கடன்காரியாப் போனன், அது தான்...." என்று இழுத்தாள் தங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபேட்சகர் அம்பலத்தார்

எஸ். எல். சவுந்தரநாயகம்

மண்மாதாவின் மகிழ்ச்சிப் புன்னையுடன் காலை புலர்ந்தது. இரவு, கமக்காவலுக்குச் சென்றிருந்த நான் வீட்டுக்கு வந்தேன்.

கொஞ்சம் சுடச்சுட தேநீர் குடித்தேன். சற்றுநேரம் சிரம பரிகாரம் செய்தேன். மீண்டும் கமத்திற்கே போக வேண்டி யிருந்தது.

காரணம், கமத்திற்குத் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது. குளத்திலே தண்ணீர் குறைந்த கோடைகாலம். ஒறுப்புத் தண் ணீரை ஒவ்வொருவருடைய கமத்திற்கும் 'முறை' வைத்துத்தான் விநியோகித்தார்கள்.

நான் பயிர்ச்செய்கை பண்ணியிருந்த கமத்திற்கு பதினாறு மணித்தியாலங்களில் தண்ணீர் பாய்ச்சி முடிக்க வேண்டும்.

குறிக்கப்பட்ட நேரத்தில் என் வயலுக்குப் பாயவேண்டிய தண்ணீர், எனது கவனயீனத்தினால் வியர்த்தமாக தரிசு நிலங் களிலே பாய்ந்து விட்டால் - அவ்வளவுதான்!

விழலுக்கு நீர் பாய்ச்சிய அந்தப் பொன்னான நேரத்திற்குப் பதிலாக மீண்டும் தண்ணீர் பாய்ச்ச முடியாது. கண்டிப்பாக மற்றவர்கள் அநுமதிக்க மாட்டார்கள்.

மனிதனுக்கு நாளாந்தம் பற்பல கடமைகள் குறுக்கிடலாம். அவைகளில் ஒன்று முக்கியமான முதற் கடமையாயும், மற்ற வைகள் அடுத்தபடியாகவுந்தான் அமைந்திருக்கும். முக்கிய கடமையை முதலிலும் மற்றவைகளை அடுத்தும் செய்து நிறை வேற்றுகிறவர்கள் தாம் வாழ்க்கையில் வெற்றி காண்கிறார்க ளென்பது அனுபவந்தந்த படிப்பினைதானே!

அன்று, பல கடமைகள் இருந்தன. தண்ணீர்ப் பாய்ச்சல் தான் முதற் கடமையாயிருந்தது. எனவே, கமத்திற்குப் புறப் பட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வேளையில்....

'அம்பலம் அம்மான்' கையிலே ஒரு கடதாசிச் சுருளுடன் என்னத்தேடி வந்தார்.

''வாருங்கள் அம்மான்! ஏதும் அலுவலா!'' - வரவேற்று விசாரித்தேன்.

''ஓம் ராசா! இந்த இடாப்பை யொருக்கால் எழுதித்தா தம்பி!'' - அவர் பதில் பகர்ந்தார்.

'மத்தியானம் போலே எழுதினாலென்னம்மான்....? வயலுக்குத் தண்ணீர். பாயுது....'' -நான் மறுக்காமல் மறுத்தேன்.

''இண்டைக்குக் காலமை கட்டாயமாய்க் கொண்டரச் சொல்லி விதானை சொன்னவன் ராசா! நேரஞ் செல்லாது..... இரண்டெழுத்துத்தானே! கிறுக்கிவிடு அப்பு!'' - அவர் வற்புறுத்தாமல் வற்புறுத்தினார்.

அதற்கு மேலும் மறுப்பது அழகல்லவென்று இடாப்பை வாங்கி நிரப்பினேன். பிரதான குடியிருப்பாளர் கையொப்பம் போட வேண்டிய இடத்தைச் சுட்டிக்காட்டினேன். வழமைப்படி 'விரற்சீல்' அடித்தபின் இடாப்பையும் கூப்பன்களையும் அம்பலம் மான் வாங்கிக் கொண்டார்.

''நீ வயலுக்குப் போகவேணுமெண்டு பறக்கிறாயப்பு! போய்வா, தம்பியை ஆறுதலாகக்..... காணவேணும்! ஒரு அ...லு...வ...ல்...'' - அவர் வசனத்தை ரப்பராக்கி, நோய் குணமின்றியே தலையையும் சொறிந்து காட்டினார்.

''அப்படியென்றால் பின்னேரம்....?''

''....கட்டாயம் வீட்டை வா ராசா! இப்ப உதிலை கொஞ்சம் வந்திட்டுப்போ...'' - சிரசாலே 'சிக்னல்' காட்டி சிறிது தூரம் - அதாவது படலையடி வரையும் அழைத்துக் கொண்டு போனார்.

நிலத்தைக் காற் பெருவிரலாற் கிளறிக் கிளறி, கண்களை ஏறச்செருகி, நேருக்கு நேர் பார்க்காமல் எங்கேயோ பார்த்த வண்ணம், வியர்த்து விறுவிறுத்து, மரணவேதனைக்கு ஒத்திகை நடத்தி, குரலில் பீதியைத் தேக்கியவராக-

''நானும் இந்தமுறை 'நொம்பர்' வேலை கேக்கிறன் ராசா.... நேற்றுக் காசும் கட்டிப்போட்டன்'' என்று சொன்னார்.

அவர் எமது வட்டாரத்துக்கு ஒரு அங்கத்துவ அபேட்சகராக கி.ச. தேர்தலில் போட்டியிடப் போவதைத் தான் இயன்றவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கி, 'வீ.சி, மெம்பர்' என்ற ஆங்கிலப் பதத்தை 'நொம்பர்' ஆக்கி அப்படிச் சொன்னாரென்று ஊகித்துக்கொண்டேன்.

"என்னம்மான் உங்களுடைய கதை....? நம்மூரில் போட்டியே வேண்டாமென்றல்லவா அன்றைக்கொரு பொதுக் கூட்டம் கூடி சுந்தரத்தை ஏகமனதாய்த் தெரிவு செய்து விட்டோம், ஏன் நீங்களுந் தானே அந்தக் கூட்டத்திலிருந்தீர்கள். அப்படியென்றால், உங்களுடைய விருப்பத்தைக் கூட்டத்திலே சொல்லியிருக்கலாமே!

"போனதடவை 'துரைராசா' வை அனுப்பினோம். அதற்கு முதல்முறை 'ஐயாத்துரை'யை விட்டோம். இந்த முறை சுந்தரம். அடுத்த முறையும் அப்படித்தான். சில போது உங்களையே அனுப்பவுங்கூடும். பொதுநலசேவைக்குத் தகுதியான ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படல் வேண்டும். அளித்தும் வருகிறோம். ஒரு பதவியை ஒருவரே சதாகாலமும் பார்க்கவேண்டுமென்கிற காலந்தான் மலையேறிவிட்டதேயம்மான்!

"பணத்தாலும் மதுவாலும் வாக்குரிமையை கொள்வனவு - விற்பனவு பண்ணி திறமைக்குச் சமாதிகட்டுவதற்காக 'தேர்தல் போட்டிமுறை' யைப் பயன்படுத்துவதிலும் பார்க்க நமது முறை சிறந்ததல்லவா அம்மான்! ஈழ நாட்டின் ஸ்தல ஸ்தாபன ஆட்சிச் சரித்திரத்திலேயே நம் வட்டாரத்துக்கு இது வரையில் தேர்தல் போட்டி நடைபெறவில்லையேயம்மான். அதையேன் நீங்கள் புதிதாக உண்டாக்குகிறீர்கள்? போட்டி மூலம் தெரிவுசெய்தாலும் ஒருவரைத்தானே தேர்ந்தனுப்புவோம். அந்தத் தெரிவை போட்டியில்லாமலே தெரிந்துவிட்டால் நேரமும் பணமும் மிச்சப்படுவதுடன் ஊரில் பகைமையும் வளராதல்லவா!

"நீங்கள் போட்டிபோடுவது சரியில்லையம்மான். காசு கட்டினால் பரவாயில்லை. நியமனப் பத்திரத்தைத் தாக்கல் செய்யாமல் விட்டுவிடுங்கள். நான் சொல்லுவதில் பிழையிருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களுடைய அறிவுக்கெட்டிய வரையில் சிந்தித்துப்பாருங்கள்..... இம்மாதிரி வேலைகளுக்கு சிறிதளவாவது படிப்பும் உலக அநுபவமும் உள்ளவர்கள் தான் போகவேண்டும். இன்னுஞ் சிறிது விளக்கமாகச் செல்வதென்றால்... ஒரு கிராமச்சங்கத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் எல்லா அங்கத்தவர்களுமே கிராமச்சங்கத்தலைவர் பதவியை வகிக்கத் தக்க தகுதியுடையவர்களாயிருக்க வேண்டும். அப்படியென்றால் தான் அந்தச் சங்கத்தில் ஊழல்கள் தலைக்காட்டாமல் நிர்வாகம் செவ்வனே நடை பெற்று கிராமங்கள் நலமடையும்....."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒரு குட்டிச் சொற்பொழிவாற்றிவிட்டு அம்மானின் அபிப் பிராயத்தை எதிர்நோக்கினேன். அம்மான் பேச்சை ஆரம்பித்தார்:

"அப்பிடிச் சொல்லாதை ராசா! படிச்சவங்களெல்லாம் இப்ப என்னத்தையப்பு வெட்டி நட்டவங்கள்....? வெண்டாலும் சரி தோத்தாலுஞ்சரி.....எனக்கும் ஒரு ஆசையாய்க் கிடந்தது...."

"சரி! எப்படியோ நீங்கள் அங்கத்தவராகி விட்டீர்களென்று வைத்துக்கொள்வோம். உங்களாலே 'சேமன்' வேலை பார்க்க முடியுமோ?" - தனது முயலுக்கு மூன்றே கால்களென்று பிடி வாதம் பண்ணிய அம்மான், எனது கேள்விக்கு சரியான பதிலி றுக்காவிடினும் சப்பைக் கட்டுப் பதிலாவது தரமுடியாமல் திக்குமுக் காடினார்.

"சரி! எல்லாத்துக்கும் பின்னேரம் வீட்டுக்குவருகிறேன்..... ஆறுதலாக கதைப்போம்" என்று அவரையும் அனுப்பி விட்டு நானும் கமத்திற்குப் போனேன்.

ஃ ஃ ஃ

ஆயிரம் முட்டைகளிட்டுவிட்டும் ஆர்ப்பாட்டம் பண்ணாத ஆமையாக, தானுண்டு தன் கருமமுண்டென்று அடங்கி வாழ்ந்த அம்பலம் அம்மானையே ஆட்டும் பொழுது தான் 'பதவியாசை' யின் பரிபூரண வடிவந்தெரிகிறது.

அவரின் ஆசை, வன்னிநாட்டிலேயே ஒற்றுமையுள்ள கிராமென்று பெயரடிபட்ட எங்கள் ஊரின் மானத்தையல்லவா வாங்கப் பார்க்கிறது. எந்தப் பிரச்சினைகளையும் துப்பாக்கி முனை யிலே குண்டு வீசித் தீர்க்க முனையும், போட்டியும் பொறாமை யும் நிறைந்த நாகரிக மனிதர்கட்குச் சவால் விடுவதைப்போல, ஒற்றுமையின் சிகரத்திலே கூட்டுறவுக்கோர் முன் மாதிரியாகத் திகழ்ந்து வரும் நம் சிற்றூரின் ஒற்றுமையையல்லவா சின்னா பின்னமாக்கப் பார்க்கிறது.....

அம்பலமம்மானின் நெஞ்சில் முகிழ்த்த இந்தத் தகாத ஆசைக்கு எந்தச் சுயநல புலிகள் வித்திட்டு வேடிக்கை பார்க்கிறார்களோ!

வயலுக்கு தண்ணீர் பாய்கிறவரையிலும் இவ்வண்ணமான சிந்தனைக் குமிழிகள் என்மனக் குளத்திலே தோன்றி மறைந்து கொண்டிருந்தன.

ஃ ஃ ஃ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மாலை சுமார் எட்டு மணியளவில் அம்பலம்மானின் வீட்டுக்குச் சென்றேன். நான் 'கேற்'றடியில் போகும் பொழுதே, அம்மானுக்கும் மாமிக்குமிடையில் பலத்த விவாதமொன்று நடை பெறப் போகிறதென்பதை அவர்களின் ஆரம்பமொழிகள் கட்டி யங் கூறின.

அம்பலமம்மானின் ஆசையின் பிறப்பிடத்தையும் அடிப் படைக் காரணத்தையும்; அந்த விவாதம் வெளிப்படையாக்கப் போகிறதென்பதை - நூலின் பாயிரமாக - அவர்கள் முன்னுரை முரசறைந்தது.

எனக்கு என்றுமே ஒற்றுக் கேட்கும் பழக்கமில்லையென்ற பொழுதிலும், நான் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சந்தர்ப் பம் ஒற்றுக் கேட்க வைத்தேவிட்டது. ஓர் ஒதுக்குப் புறமாக கரந்துறைந்து கொண்டேன். அவர்களின் சர்ச்சை தொடங்கியது...

''காலைமை கோழி கூவப் போன நீ இவ்வளவு நேரமும் என்னணை செய்தாய்?''

''நான்... பழைய விதானையாரைக் கண்டாப் போலை.... அவர்.....''

''எந்தப் பழைய விதானையாரெணை?''

''எந்தப் பழைய விதானையார்?'' கந்தனெண்ட கறுத்தப் பழைய விதானையார் - நம்மடை குணுவாயில் பழைய விதானை யாரை அவவுக்குத் தெரியுமெண்டோ...

''குணுவாய்ப்'' பழைய விதானைார் என்னணை மொட்டந் தலைக்கு முடிசூட்டினவர் - இல்லைக் கேக்கிறன்!''

''இஞ்சேர் கோவியாதை..... கதையைக் கேளு! கேட்டுப் போட்டுப் பேந்து.....''

''சரி சொல்லு''

''அவர் என்னை 'நொம்பர்' வேலைகேட்கச் சொல்லி முந்தாநாத்து ஒரே பிடியாப் பிடிச்சிட்டார். நானும் முகம் மறுக்க ஏலாமை வாக்குக் குடுத்திட்டன் ஏன் - உனக்கு ஒளிக்கவேணுமே? நேத்துக் காசும் கட்டிப் போட்டன்.....''

''உனக்கேனணை உப்பிடி மூளை கெட்டுது? சொல்லுவார் சொன்னால் கேட்பவருக்கு மதியென்னணை...? அண்டைக் கெல்லோ ஊராக்கலெல்லா மொத்து அவன் சுந்தரப் பொடியனை போட்டியில்லாமை தெரிஞ்சு விட்டவை. இப்ப நீ போட்டி போடப் போறனெண்டால், அவனோடையில்லை ஊரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோடை தான் போட்டி போடப் போறாய்! நல்லாய் யோசித்து பார்...ஒரு துண்டு உனக்குப் போடுவினமே நீ வெண்டாப் போலைத்தான்.....''

''போட்டி போடத்தான்ரி போறேன் இந்த முறை நான் சுந்தரனை வெல்ல இல்லையென்றால் உன்ரை காலுச் செருப் பாலை அடி! ஊரவங்கள் புடுங்கி அடிக்கிறதையும் பாப்பமே. ஒரு துண்டுக்கு நூறு ரூபா குடுத்தென்றாலும் வெல்லத்தான் போறன்ரி சின்னாச்சி! இருந்துபார் உன்ரை சின்னக் கண்ணாலை...!''

''அது சரியெணை! உனக்கேனுந்த ஊர்ப்பொல்லாப்பு? நூறு உறுவாவென்னுறாய்... நூறு செப்புச் சல்லி உன்னட்டைக் கிடக்கேயெணை? பழைய விதானை உன்னைப் பேய்க்கூத்து ஆட்டுகிறான், நீயும் ஆடுகிறாய், ஆடு! ஆடு! ஆடி அரங்கேத்து ''

''அந்தாளை உனக்குத் தெரியாதடி... அந்தாள் தங்கக்கம்பி. முந்தநாத்தும் நேத்தும் இண்டைக்கும் எனக்கு மட்டும் மூண்டு போத்தல் சீல் எடுத்துத் தந்தவர். நேத்துச் சுப்பனுக்கும் செல்ல னுக்கும் தலைக்கு இருவத்தஞ்சு உறுவாக் குடுத்துத்தான் எனக்கு உதவிக்கு விட்டவர், காசு கட்ட. ஒரு துண்டுக்கு நூறல்ல ஆயிரம் வந்தாலும் சில வழிச்சு உன்னை நொம்பராகக் காட்டி நான் முத்து வேலற்றை மகன் ராமலிங்கமில்லை. நீ இதொண்டையும் இருந்து பார் அம்பலம் எண்டு பெத்த புள்ளையின்ரை தலையிலையடிச்சுச் சத்தியம் பண்ணுகிறான் மனுஷன்''

''போனக் கிழமை புள்ளையள் பசியிலை கிடந்து சாகேக்கை கூப்பனுமெடுக்க வழியில்லையெண்டு ஒரு மரக்கால் நெல்லுத் தரச்சொல்லிக் கெஞ்சினபோது வராத இரக்கம் இப்ப வந்திட்டுதோ பழைய விதானைக்கு? அவன் உன்னை பேயனாக்கிறான்.....''

''எடியே சத்தம் போடாதை மெல்லக் கதை.... அவர் இந்த முறை 'சேமன்' வேலை கேக்கப் போறார். சுந்தரன் நொப்பராய்ப் போனானென்றால் அவருக்குத் துண்டு போடமாட்டான். அதுக் குத்தான் என்னைப் புடிச்சவர். வேறை ஆக்களிலை அவருக்கு நம்பிக்கையில்லை. நான் மட்டுமில்லை இன்னம் ஏழு பேரை நொப்பராக்கிறதுக்கு மனுஷன் காசு சிலவழிச்சு வேலை செய்யுது... மனுஷன் கட்டாயம் வெல்லும். 'நான் சேமனாய் போன னென்டால் பெரிய வேலைகளிலை நாலஞ்சை உனக்குத் தருவன் நீ ஆற்றையும் பேரிலை போட்டு செய். வாறதிலை எனக்கும் ஏதன் தரப்புறியமென்றால் தா' எண்டு மனிசன் சொல்லுறான். நீ விசரி விசியம் விளங்காமை....! உதைச் சொல்லிறியே! அந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய மனிசன் - இந்தச் சதம் பெறாத அலுவலுக்கு என்ரை கால்லை விழுந்து கும்பிடுறதெண்டால்? அவ கதை பேசுறா கதை....''

இந்தளவில அம்பலஅம்மானின் மகன் கோபால் குறுக்கிட்டு ''எணை ஆச்சி! அப்பு பழைய விதானையாருக்கு நோட்டோ ஈடோ எழுதிக் குடுத்தவரெண்டு, மத்தியானம் செல்லம் மான் கதைச்சுதெணை...'' என்று எரிகிற நெருப்பில் பெட்றோலைக் கொட்டினான். மாமியைக் கேட்க வேண்டுமா?

''உன்-னாணை! மெய்யணை சண்டாள மனிசா! என்ன எழுதிக்குடுத்த நீ - என்னண்டு எழுதிக் குடுத்த நீ?''

''என்னண்டு - குள நண்டு! அவர் சிலவழிக் கிறாரெண்டால் நமக்கு மன அறிவில்லையே! நம்மடை கையிலையும் வேண் டாமே? அது தான் - அவர் வேண்டாமெண்டுதான் சொன்னவர் - அந்தப் புளியடித் துண்டை ஈடு போலக்காட்டி....''

''துலைச்சுத் தலைமுழுகிப் போட்டாயெண்டு சொல்லு! எத்தினை பவுணுக்கெணைவைச்ச நீ? ஆரட்டை எழுதினது?''

''நானென்ன பேயனே கனக்க வெய்க்கிறதுக்கு! நூறு பவுணுக்கு (ஆயிரம் ரூபாய்)த்தான் வெச்சநான். நம்மடை சித்தம்பலம் பிறக்கிறாசியார் தான் எழுதினவர்....''

''நாய்க்கு ஏழுகடலுக்கங் காலை புளியமிலை மட்டுக் காணிகிடக்குதெண்டு பழங்கதை. அதைப்போல ஆக உள்ள முதுசொம் அந்தப் புளியடித்துண்டு இரண்டு ஏக்கர்தான். அதுகும் முடிஞ்சிது மற்றவையைப் போல வதுவைக்காணி கீணியெடுத்து வெட்டிச்செய்ய உனக்குச்சதை காணாது. இரண்டு குமர் வீட் டோடை கிடந்து கிழடு பத்துதுகள். நண்டுங் குஞ்சுமாய்க் கிடக்கிற இந்தப் பச்சை மண்ணுகளை என்ன செய்யிறது? நாளைக்கு நீ கண்ணை மூடிவிட்டாயெண்டால் இதுகளின்ரை கெதியென்ன? அவர் நொம்பராப் போறாராம் நொம்பராய்.....த்தூ! நீயும் ஒரு மனிசனே?''

''பொத்தடி வாயை! புள்ளைப் பெத்த எனக்கு வளக்கத் தெரியும்; கடன்பட்ட எனக்கு இறுக்கத்தெரியும். இந்தக் கட னெல்லாம் இரண்டு கொந்தராத்து வேலையோடை பறக்குமடீ சின்னாச்சி பறக்கும். காணி ஈடுவெச்ச கதைகிதை வெளியிலை வந்துதோ-? 'மேடர்' தான் செய்வன். ஓ! அவவுக்கு ஆளைத் தெரிய இல்லை....''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாமிக்கு அடிப்பதற்கு எழும்பிய அம்மான் முற்றத்திலே குப்புற வீழ்ந்துவிட்டார். மீண்டும் எழும்புவதற்கு முற்றத்து முருங்கை மரத்தை ஊன்றுகோலாகப் பிடிப்பதற்கு அவர் பண்ணிய பிரம்மப்பிரயத்தனங்கள் வியர்த்தமாகி விட்டன. முருங்கையைப் பிடிப்பதற்கு அவரால் முடியவே முடியவில்லை.

படுத்த படுக்கையிற் கிடந்தபடியே -

''மோனை! பெரியபுள்ளை! அந்தப் புள்ளிக்கோழிப் பேட்டை அறுத்துக் கறிகாச்சு! மத்தியானமும் சோறு தின்ன இல்லை.....கெதியாய்க் காச்சு!'' என்று, மூத்தமகள் கமலாவிடம் கேட்டுக்கொண்டார்.... வாந்தியெடுக்கவும் ஆரம்பித்துவிட்டார்..... அறிய வேண்டியதனைத்தையும் அறிந்துவிட்ட நானும் வீடு சென்றேன்.

ஃ ஃ ஃ

மறுநாள். அம்பலமம்மானின் தேர்தல் அபேட்சக விவகாரத்தைப் ஆலோசனைக்கெடுப்பதற்காக - சங்கப்பற்றுகளற்ற ஒரு பொதுக் கூட்டம் கூடினோம். அம்பலமம்மான், செல்லன், சுப்பன் மூவருக்கும் அழைப்பு விடுத்தும் அவர்கள் கூட்டத்திற்கு வரவில்லை.

நானும் வேறு சிலரும் தனிப்பட்ட முறையில் அம்மானைச் சந்தித்து தடுத்துப்பார்த்தோம். அவர் அசைந்து கொடுக்கவில்லை. அபேட்சகர் நியமனப் பத்திரத்தைத் தாக்கல் பண்ணி தேர்தல் போட்டிக் களத்தில் குதித்துவிட்டார்.

'தேர்தலில் போட்டியிடுவது அவரின் உரிமை. அவரைப் போட்டியிட வேண்டாமென்று நாமேன் தடுக்க வேண்டும்? அவருக்குத் தகுந்த பதிலை மக்கள் கூறட்டும்' என்று அவர் வழியில் விட்டுவிட்டோம்.

தேர்தல் பிரசாரம் அசுர வேகத்தில் நடைபெற்றது. எங்களுடைய வட்டாரத்தைச் சேராத பல 'பெரியபுள்ளிகள்' அம்மானுக்காக இரவு பகலாக வேலை செய்தனர். அம்மான் காணி ஈடுவைத்தெடுத்த ஆயிரம் ரூபாவும் தண்ணீரில் போட்ட உப்பாகியது... குறித்த தினத்திலே 'போட்டி' அமைதியாக நடந்தேறியது. இரண்டாம் வட்டாரமாகிய எமது வட்டார அங்கத்தவராக சுந்தரம் அமோக வெற்றியீட்டினார்.

அம்பலமம்மானின் தேர்தல் சின்னமான ஆட்டுக்கு நேரே தவறுதலாகக் கூட யாரும் புள்ளடி போடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்ல - அம்மானின் அரசியல் குருவான முத்து வேலர் - இராமலிங்கம் என்னும் பழைய விதானையாரும் அங்கத் தவராக முடியவில்லை...

குறுக்குவழியிலே கி.ச.தலைவராக வருவதற்குக் கற்பனை பண்ணிய அவருடைய எண்ணக் கனவு, கனவாகவே கலைந்து விட்டது.

சூழ்ச்சி, சுயநலம், பதவிப்பித்துகள் படுதோல்விகண்டன.

உண்மை, நேர்மை தகுதிகள் முழுவெற்றி பெற்றன.

பணத்தைக் கொண்டும், மதுவைக் கொண்டும் வாக்கு வேட்டையாடியவர்கள் மண்ணைக் கௌவினார்கள்.

வாக்குரிமையின் மகத்துவத்தை எமது வட்டார மக்கள் மட்டுமல்ல. எமது கிராமசபையைச் சேர்ந்த பதின்மூன்று வட்டார வாக்காளர்களுமே உணர்ந்து விட்டார்களென்பதை தேர்தல் போட்டிகள் தெளிவாக நிரூபித்துவிட்டன.

ஃ ஃ ஃ

பழைய விதானையார் தோல்வியைக் கண்டு துஞ்சவில்லை. அவர் பாசி பிடித்த பணக்காரர். ஆயிரம் புள்ளிகளுடைய மானுக்கு ஒரு புள்ளி குறைந்ததினால் குடி முழுவிடும்?

அம்பலமம்மான் - எருமை மாட்டைக் கண்டு, அந்தளவு தானும் வரவேண்டுமென்று மூச்சுப்பிடித்து முக்கிய தவளை....

"அடியே அடியே! அலுவலைப் பாரடி! உந்த நூறு பவுணும் இரண்டு கொந்தறாத்து வேலையோடை என்ரை சேமன் எடுத்துத் தருவாரடி... என்ரை பழைய விதானையார், முத்து வேலர் - இராமலிங்கம் சேமனாயிருக்கும் போது எனக்கென்னடி பயம்?"

- இவ்வாறாக..... அம்பலமம்மான் பேசியும் அழுதும் சிரித்தும், மலைப்பிஞ்சுகளை எடுத்தெறிந்து விளையாடியும் வருவதாக ஊரிலே கதையடிபட்டது.

"எனக்கு விசரெண்டு எந்த விசரன் சொன்னவன்... இல்லைக் கேக்கிறன்?"

- இப்படியாக அம்பலமம்மான் மற்றவர்களைக் கேட்பது முண்டு. கேட்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் காலை வரும்

பொ.தம்பிராசன்

லொறி திடீரென்று நின்றது.

''திருப்பதி'' - குரல் மெதுவாக ஒலிக்கிறது.

பதிலில்லை.

''டேய் தம்பி, திருப்பதி! எழும்படா!''

அமைதியும் ஒரு பயங்கர மௌனமும் நிறைந்திருந்த அந்தக் காட்டுப் பிரதேசத்தில் லொறி டிரைவர் முத்தையாவின் குரல் கணீரென்று கேட்டது.

முறிகண்டிப் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைத்துக் கற்பூரம் கொளுத்தி விட்டு, திருநீறு சந்தனத்தை நெற்றியில் அப்பி 'டிரைவ'ர் முத்தையாவுக்கும் கொடுத்த பின்பு, மிச்சமிருந்த இரண்டு கலவைகளையும் விரல்களால் வழித்து, லொறியின் முன் முகப்பில் பூசிவிட்டு, லொறிக்குள் அடுக்கப்பட்டிருந்த மூட்டைகளை ஒதுக்கிப் படுக்க இடந்தேடி, பனிக்குளிரை அகற்ற மூட்டைகளின் அணைப்பில் சூட்டி நாயைப் போலச் சுருண்டு படுத்திருந்த லொறியின் 'கிளினர்' திருப்பதி தென்னம் வண்டு, வேகத்துடன் கண்களைத் தாக்கியது போலத் துடித்துப் பதைத்து எழுந்தான்.

கண்களைக் கையால் கசக்கிவிட்டுச் சுற்று முற்றும் பார்த்தான்.

''என்ன அண்ணை; ஏன் லொறியை நிப்பாட்டினிங்க''

''திருப்பதி கீழே இறங்கு. ரோட்டிலை நிற்கிற இந்த எருமையைத் திரத்து. மரமாட்டம் நடுரோட்டில் நிக்கிது - தரித்திரம்!''

லொறியின் ஒரு மூலையில் செருகியிருந்த துவரங்கம்பை எடுத்துக் கக்கத்தில் இடுக்கியவாறு மூட்டைகளை மிதித்துக் கொண்டு கீழே குதித்து இறங்கினான் திருப்பதி.

துவரம்கம்பின் அடி வேதனை தாங்காது நகர்ந்து, நகர்ந்து ரோட்டின் கரையில் ஒதுங்கிப் பாதையை விட்டு விலகினது, அந்த எருமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ரைட்! லொறியை எடண்ணை!"

லொறி உறுமிக்கொண்டு கிளம்பியது.

மீண்டும் முன் சாய்ந்திருந்த மூட்டையருகில் சென்றான். அவனுடைய எண்ண மெல்லாம் முப்பத்தாறு மணி நேரத்திற்குள் கொழும்பு சென்று, வீடு திரும்பிட வேண்டும் என்பது தான். வாசிகசாலை ஆண்டு விழா நாடகத்தில் பங்குபற்ற வாக்குக் கொடுத்தபடியால் அதைக் காப்பாற்ற வேண்டும் என்ற கவலையே தவிர வேறு எதுவுமில்லை.

வெங்காய நெடி மூக்கைத் துளைக்கிறது. மடியில் வைத்திருந்த மூக்குப் பொடியை எடுத்து, ஒரு சிட்டிகையை மூக்கில் அடைத்து விட்டுக் கைவிரல்களை உதறிவிட்டுக் கொண்டான் திருப்பதி.

லொறி ஓடிக்கொண்டே இருந்தது.

நினைவு அலைகள் நித்திரைச் சோம்பலை விரட்டி விட்டன.

உரும்பிராய் சந்தியைக் தாண்டிச் சற்று வடக்குப் பக்கம் சென்றால் கண்ணில் தென்படுவது தான் அந்தப் 'பெட்ரோல் ஷெட்'. அதற்கும் அப்பால் சற்றுத்தூரம் சென்றால் அமைதியான ஒரு பெரிய கல் வீட்டைக் காணலாம்.

அந்த வீடு பொன்னாச்சிக்குச் சொந்தம். பொன்னாச்சி வீட்டுக்குச் சொந்தம்போல அந்தக் கிராமத்து மக்களுக்குக் காட்சி கொடுக்கிறது அந்த வீடு.

பொன்னாச்சிக்கிழவியின் கணவன், ஆசைப் பிள்ளை தன் வாழ்நாளில் ஏதாவது சாதித்திருந்தால், ஒன்று மலைநாட்டில் ரம்புக்கணைத் தோட்டத்தில் கண்டக்டராக இருக்கையில் உழைத்த பணத்தினால் கட்டிய இந்த வீடும், இரண்டாவதாக அநாதையாகத் திரிந்த திருப்பதியைப் பொன்னாச்சிக்குத் தொட்டாட்டு வேலை செய்ய விட்டு வளர்த்த கதையையும்விட வேறு எதுவும் குறிப்பிட்டுச் சொல்வதற்கில்லை.

இந்த இரண்டில் திருப்பதி வீட்டை விட்டே போய் விட்டான். மற்றது போக இன்னும் சில நாட்களே இருக்கின்றன!

கணவன் இறந்ததினால் கிடைத்த பணத்தைக் கொண்டு வட்டிக்கு விட்டு, இறுக்கமாக வாழ்ந்து திருப்பதியையும் தன்வயிற்றையும் வளர்த்து வந்தாள் பொன்னாச்சிக் கிழவி.

கிராமத்தில் கிழவிக்கு இனசனங்கள் நிறைய இருந்துங் கூட இதுவரையில் எவரிடமும் எந்த உதவியையும் நாடியதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மிகவும் கிட்டின உறவினர்கள் பொன்னாச்சிக் கிழவியிடமிருந்து எதிர்பார்த்துக் கொண்டே இருந்தார்கள். ஒன்றை.

- அது தான் கிழவியின் மரணச் செய்தி!

கிழவியின் மரணத்தினால் அவர்களுக்கு நிறைய இலாபம் இருக்கிறது. அந்த வீடும், அதைச் சுற்றியுள்ள தோட்டந் துரவுகளும்....

மூப்பின் எல்லைக் கோட்டைத் தாண்டிய சில 'கிழடு கட்டைகள்' அடிக்கடி டாக்டரைச் சந்திக்க பட்டணத்து ஆஸ்பத்திரிக்குப் படையெடுத்துச் செல்லுவார்கள். இது அப்படியொன்றும் நடக்கமுடியாத சங்கதியல்லத்தான். அதைப் பார்க்கும் பொழுதெல்லாம் பொன்னாச்சிக் கிழவிக்கு மனதை என்னவோ செய்யும். தொடக்கத்தில் உடல் நலத்தைப் பற்றிய இந்தக் கவலை கிழவிக்கு இருக்கத்தான் செய்தது. ஆனால் திருப்பதி வந்தநாள் தொடக்கம், இந்த மனக்கவலை அவளை விட்டகன்று விட்டது. மனதில் ஒருவித சாந்தி.

முன்னால் வந்த ஏதோ ஒரு வாகனத்துக்கு இடம் விட்டுக் கொடுத்ததால் லொறி பள்ளத்திலிறங்கி ஒரு தடவை தேகத்தைக் குலுக்கி எடுக்கிறது.

முற்றாக நினைவுத்தொடர் அறுந்து விடவில்லை.

ஆனால் இன்று -?

பொன்னாச்சிக் கிழவியை நினைத்து, மனம் துயர எண்ணங்களில் ஊசலாடுகிறது.

ஒரு வருடத்துக்கு முன் வீட்டை விட்டு வெளியேறி வந்து விட்டவன் தான் திருப்பதி; வீட்டை விட்டு வெளியேறி விட்டவன் என்பதை விட, வீட்டை விட்டுத் துரத்தப்பட்டவன் என்பதே பொருத்தமானதுமாகும்.

பாசம் என்பது பொல்லாத உணர்ச்சி; அது மைல் கற்களினால் மாத்திரம் துண்டிக்கப்பட்டு விடுவதில்லை.

மூடி வைக்காத வெண்ணெயைப் போல, அவனது உள்ளம் எங்கோ ஒரு மூலையில் வாழும் அந்தக்கிழவிக்காக....

லொறி வவுனியாவை வந்தடைந்தது.

டிரைவர் முத்தையா லொறியை நேராக வவுனியா பெட்ரோல் நிலையத்தில் கொண்டுபோய் நிறுத்தினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மட்டினி ஷோ' பார்த்துவிட்டு வெளியே வருபவன் போல, கண்களைக் கசக்கிக் கொண்டு லொறியை நெருங்கி வந்தான், பெட்ரோல் அடிப்பவன்.

''டாங்கி நிறைப் பார்த்துப் போடப்பா''

'சரி' என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினான், பெட்ரோல் அடிப்பவன்.

''திருப்பதி வா, கோப்பி குடிப்பம்!'' - முத்தையா கிளீனரை அழைத்தான்.

இருவரும் எதிரே விடிய விடியத் திறந்திருக்கும் ஒரு தேனீர்க் கடைக்குள் நுழைந்தார்கள்.

''அப்பு, ரெண்டு வெறுங் கோப்பி போடு, கடிக்கக் கிடிக்க ஏதாவது இருக்கே?'' முத்தையா கேட்டான்.

''ஏன் தம்பி இண்டைக்கு இவ்வளவு நேரம்? யாழ்ப்பாணத் திலை இருந்து பிந்தி வெளிக்கிட்டிருக்கிறீங்கபோல இருக்கு.....'' கடைவாசலில் குந்திக் கொண்டு, சுருட்டுப் புகையை ஊதிக் கொண்டிருந்த கிழவன் இதைக் கேட்டுவிட்டு பதிலை எதிர்பார்க் காமல் இரண்டு 'வெறும்' கோப்பி போட ஆரம்பித்தான்.

கிழவனைவிட பார்வைக்கு மூத்த சுவர்க்கடிகாரம் இன்றைய அமெரிக்க கடிகாரத்தைப் போல் தன்னுடைய சிரமமான வேலை யான மணி பன்னிரண்டையும் அடித்துத் தள்ளியது. சத்தம் கணீரென்று கேட்டது.

கோப்பி குடித்துவிட்டுப் புறப்பட்டார்கள். திருப்பதி மூட்டை களின் மேல் இம்முறை வளையமாய்ப் படுத்துப்பார்த்தான்.

''உஸ்.... அம்மாடி! என்ன பனி; என்ன குளிர்'' - அவன் வாய் என்னவோ முணுமுணுத்தது.

நாளை இந்நேரம் இங்கு திருப்பி விட்டால் கட்டாயம் நேரத் திற்கு விழாவிற்குப் போய் விடலாம் என்று கணக்கிடுகிறது அவன் மனம்.

சிட்டிகைப் பொடியை கையில் எடுத்து ஓர் இழுவை இழுத்து விட்டு 'மவ்ளரால்' காதை மூடிக் கட்டிக் கொண்டான்.

பொன்னாச்சிக் கிழவியுடன் இருக்கையில்தான், திருப்பதிக்கு 'கிளீனர்' உத்தியோகம் கிடைத்தது. அடுத்தவீட்டு முத்துவின் தயவால் நாயகம் கம்பனியில் சேர்ந்தான். எழுபத்தைந்து ரூபா சம்பளத்தில் சேர்ந்தவன் இன்று ஏதோ தொண்ணூறு ரூபா எடுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் அளவிற்கு வந்து விட்டான். கொழும்பிற்குப் போய் வரும் படிச் சம்பளம் வேறு.

வாரத்திற்கு இரண்டு தடவையாவது திருப்பதி யாழ்ப்பாணத் திலிருந்து கொழும்பிற்கு லொரியில் செல்ல வேண்டியதாக வரும். யாழ்ப்பாணத்திலிருந்து வெங்காயம், வாழைக்குலை போன்ற பொருட்களும் கொழும்பிலிருந்து சரக்கு சாமான்களும் எடுத்து வரவேண்டியதே அவனுக்கும், முத்தையாவுக்கும் லொறிக்கும் வேலை. இதனால் அவனுக்கு நிம்மதியான நித்திரை கிடையாது. மூட்டை மேலும் கடை விராந்தையிலும் படுப்பது அவன் தொழில் விதியாகப் போய்விட்டது. இதையிட்டு அவன் முன் கவலை அடைந்ததேயில்லை.

ஆனால் இன்று தங்கமணியை இந்த நிலையில் விட்டு விட்டா?

மீண்டும் சம்பவக் கோவைகள் நிழலாட்டம் போடுகின்றன.

'அர்டன்டன்' தங்கமணியைப் பெரிய ஆஸ்பத்திரியில் தெரியாதவர்களே இல்லை. அவளுக்கு அங்கு கிடைத்த 'பெயர் அவளுக்கே வியப்பாக இருந்தது. அவளுடைய தாய், தேங்காய் விற்று வயிற்றை வளர்த்துக் கொண்டிருக்கையிலே தங்கம் எட்டு வயதில் சிவகுருநாதரின் வீட்டில் வேலைக்கு அமர்ந்தாள். தன் தாய் கார் விபத்தில் மாண்ட பிறகு டாக்டரிடமே இருந்து விட்டாள். அவள் 'பெரிய பிள்ளை'யாகி முட்டையும் நல்லெண்ணையும் விழுங்காமலே வளர்ந்து வரும் உடம்பைக் கண்டு ஏங்கிய டாக்டர் அவர்கள், தன் மகனின் எதிர்காலத்தை நினைத்து அஞ்சியோ என்னவோ யாழ்ப்பாணத்து பெரிய ஆஸ்பத்திரியில் 'அற்டன் டனா'கச் சேர்த்து விட்டார்.

தங்கமணியின் கையில் நாலு காசு புரளத் தொடங்கியது.

தங்கமணி ஆஸ்பத்திரியில் சேர்ந்து ஒரு சில மாதங்களுக்குள் யாருக்கும் கிடைக்காத 'பெயர்' எடுத்தாள். அங்கு வேலை பார்க்கும் 'மைனர்கள்' தொடக்கம் கிழடுகள் வரை அவளிடம் பல் இளித்துக் குழைந்து கதைப்பதைக் கண்ட மற்றும் 'அற்டன்டுகள்' வாயில் வந்த விதமெல்லாம் 'குசுகுசு'த்தார்கள். அதைக் கண்டு தங்கம் சற்றுக்கூடத் தயங்கவில்லை. அவர்கள் பார்க்கத் தக்க தாகவே பழகிவந்தாள்.

பொன்னாச்சி மாரடைப்பால் ஒரு வாரம் ஆஸ்பத்திரியில் இருக்கையில் தங்கமணி வேலைபார்க்கும் வாட்டில் தான் படுக்கை கிடந்தது. அந்த வாரமும் 'லீவு' போட்டு விட்டு நேரா நேரம் போய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவியைப் பார்த்து வந்தான் திருப்பதி. இதனால் திருப்பதிக்கும் தங்கமணிக்கும் ஒரு வித அந்நியோன்னிய மன ஒற்றுமை ஏற் பட்டது. இவர்கள் பழகும் விதத்தைக் கண்ட பொன்னாச்சி 'நல்ல சோடி' என்று சொல்லாவிட்டாலும் மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

''என்னடா, ஏன் தங்கத்தை இன்னும் காணோம்?''

- ஒரு நாள் இப்படி திடுதிப்பென்று கேட்டாள் பொன்னாச்சி.

''அவளுக்கு இன்று லீவாம். படத்துக்குப் போவதாகச் சொன்னாள்.

''நீ போகவில்லையா?''

பொன்னாச்சி கேட்ட இக்கேள்விக்கு என்ன சொல்வதே என்றே தெரியாமல் தலைகுனிந்து சிரித்தான்.

ஆறு மணிக்கப்பாலும் நிற்கும் திருப்பதி ஐந்தரைக்கு புறப் பட்டதும் பொன்னாச்சிக்கு விஷயம் விளங்கிவிட்டது.

தங்கமணியைப் பொன்னாச்சிக் கிழவிக்கு மிகவும் பிடித் திருந்தது. மருந்து கொடுக்க வரும்போது தன் ஊர்க்கார நர்ஸிடம் தங்கத்தைப் பற்றி விசாரிக்க வேண்டும் என்று எண்ணியிருந்தாள். ஒருநாள் கேட்டும் விட்டாள். நர்ஸ் சொன்ன விபரத்தைக் கேட்ட பொன்னாச்சிக் கிழவி அடுத்த நாள் வீடு திரும்ப இருந்தவள், இன்னும் இரண்டு நாள் அதிகம் தங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது.

திருப்பதி அடுத்த நாள் வந்தான்

தங்கமணியுடன் ஒரு தொடர்பும் இருக்கக் கூடாது என்று மிகவும் கண்டிப்பாகத் தெரிவித்தாள் கிழவி.

''அவள் ஒரு 'வேசை'யாம். ராத்திரித்தானே எல்லாம் தெரிஞ்சுது. அவளைப் பற்றி இந்த ஊரே சிரிக்குதாம். நீ அவ ளோட வச்சியிருக்கிற சிநேகத்தை மறந்து விடு'' என்று உபதேசம் புரிய ஆரம்பித்தாள்.

'ஓர் இரவு மனித மனத்தில் இவ்வளவு விச வித்தையா விதைத்து விடும்?''

பொன்னாச்சி கிழவியின் இந்தத் திடீர் திருப்பம் திருப்பதியை இப்படித்தான் சிந்திக்க வைத்தது.

அவன் பேசவில்லை. கிழவியின் குணம் அவனுக்குத் தெரியும். ஒன்றும் பேசாமலே போய்விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவி பொன்னாச்சி வீடு திரும்பிய மூன்று நாட்களுக்குள் இச் செய்தி ஊரில் பரவிட்டது.

"ஆச்சி, உன்ரை திருப்பதி ஆஸ்பத்தியிலே ஆரோ கங்காணி ஒருத்தியுடன் தொடர்பாம். அவளே தஞ்சமெண்டு படுத்திருக் கிறானாம். நேற்று செல்லம்மான் சந்தியிலே கதைப்பதாகச் சொன்னார்" என்று குஞ்சக்கா கூறியதைக் கேட்ட கிழவியின் நெஞ்சத்தில் புயல் கிளம்பியது.

செய்தி செல்லம்மானின் வாய்க்கு எட்டி விட்டது என்று அறிந்த கிழவி இனி இந்த ஊரிலே இருப்பவர்களுக்கெல்லாம் தெரிந்துவிடப்போகிறது என்று துடித்தாள்.

அன்றிரவு திருப்பதியுடன் நடந்த தர்க்கத்தின் பிறகு அவன் அந்த வீட்டுப்படி மிதிக்க தேவையில்லை. இன்றுடன் அவன் போய் ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டது. தங்கமணியைக் கட்டிக்கொண்டு யாழ்ப்பாணத்திலேயே இருந்து விட்டான்.

நீண்ட பெருமூச்சு விட்டான் திருப்பதி. லொறி கொழும்புக்கு - புறக்கோட்டைக்குப் போய்ச் சேரும் பொழுது காலை ஏழுமணி திருப்பதி எதிர்பார்த்ததை விட அரை மணி நேரம் முன்னரே வந்தடைந்ததையிட்டு மகிழ்ந்தான்.

முத்தையா வெங்காயம் கொண்டு வந்த குறிப்பிட்ட ஸ்டோருக்கு லொறியைச் செலுத்தினான். கடை மூடப்பட்டிருந்தது. அங்கு நிற்கும் காவலாளியிடம் கூறிவிட்டு இருவரும் பிரிந்தனர். நாளை இரவு நடக்க இருக்கும் நாடகப் பாத்திரத்தின் வசனங்களை அவன் மனதில் மனனம் பண்ணிப் பார்த்தான்.

எப்படியாவது நாளை இரவுக்குள் போய்ச் சேர்ந்து விட வேண்டுமென்று மனதிற்குள் சொல்லிக்கொண்டான்.

வருஷா வருஷம் நடக்கும் அந்த ஆண்டு விழாவில்....

திருப்பதி தன் முழுத்திறமையையும் கவனத்தையும் செலுத்தி அந்த வாசிகசாலை ஆண்டு விழாவை வெற்றிகரமாக நடத்தி வைக்கத் தீர்மானித்தான்.

∴ ∴ ∴

கிராமத்தில் எந்த விழா நடந்தாலும் ஒரே குதூகலம் தான். அதுவும் வாசிகசாலை ஆண்டு விழா என்றால் அன்று ஒரே கொண்டாட்டம். சங்கீதம், நடனம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் இருக்கையில் கொண்டாட்டத்திற்கு கேட்பானேன்? நாற்சந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனையில் இராணுவத்தாரால் எரிக்கப்பட்ட கடை அருகில் இருக்கும் அரச மரத்தடியில், குந்திக்கொண்டு தினமும் 'நியூஸ்' பரப்பும் சில பெரியோர்களுக்கு அன்று ஒரே வேட்டை, போங்க! அவர்கள் தினமும் அங்கு 'கதைச்சுச்' சிரிக்க எடுத்துக் கொள்ளும் முதல் விஷயம் அக்கிராமத்துக் குமரிகளைப் பற்றியதாகத்தான் இருக்கும்.

இவர்களின் அகராதிப்படி இந்த இரண்டு மூன்று தலை நரைச்சான் குஞ்சுகளின் புதுவித அர்த்தப்படி தங்கள் தங்கள் வீட்டுப் பிள்ளைகளைத் தவிர, மற்றப் பெண்கள் எல்லோருமே குறிப்பாக கிராமத்து குமரிகள் எல்லாருமே...!

இப்பேர்ப்பட்ட விழாக்கள் மூலம் தான் தங்கள் தங்கள் கதை கட்டிவிட்ட பாத்திரங்களைக் காணும் சந்தர்ப்பம் கண் எதிரே கிடைக்கும். அவர்களுடைய சந்தோஷத்தைப் பற்றி சொல்லவே வேண்டியதில்லை. தோற்றத்தில் இன்றோ நாளையோ என்று படுகிழவர்களாகக் காட்சி தந்தாலும் அந்த 'வியாதி' மட்டும் இருந்தாலும் இவர்களை விட்டுப்போகாது போல் தெரிந்தது.

திருப்பதி மறுநாள் மாலை யாழ்ப்பாணம் திரும்பியதும் தங்கமணியை அழைத்துக் கொண்டு பஸ்சில் விழாவிற்குப் புறப் பட்டான்.

வாசிகசாலையில் பொருத்தப்பட்டிருந்த ஒலிபரப்பி, தனது முழுத்திறமையையும் காட்டிக்கொண்டிருந்தது. நாலாபக்கத்தி லிருந்தும் சந்திக்கு கூட்டம் வந்து கொண்டிருந்தது. குந்திக் கொண் டிருந்த பெரியவர் ஒருவர் திருப்பதியையும் கண்மணியையும் கண்டதும் எழுந்தே விட்டார். இளைஞர்கள் அவனைக் கண்டதும் கட்டித் தழுவினார்கள். வந்தடைந்த அந்த சொற்ப நேரத்திற் கெல்லாம் பல நினைவுகள் திருப்பதியின் மனதில் மின்னல் போல் ஓடி மறைந்தன.

தங்கமணியை அழைத்து பெண்களுக்கென்று விடப்பட்ட பகுதியில் அவளை விட்டு விட்டு, மேடையை நோக்கிப் பின் பக்கம் நடையைக் கட்டினான் திருப்பதி.

தங்கமணியின் முகத்தில் அப்பியிருந்த 'பவுடர்' வெளிச் சத்தில் மினுமினுத்தது. அங்கு வந்த பெண்கள் அவளை வெறித்து பார்த்து கொண்டிருந்தனர்.

சேலைக்கார வேலன் நேற்றுத்தான் புதிதாகக் கொண்டு வந்த 'ரூபி சியர்' சேலை அணிந்து வந்த பெண்களில் சிலருக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கமணியும் அதே சேலையை உடுத்திருப்பதைக் கண்டதும் பொறாமை ஏற்படத்தான் செய்தது. அவள் அருகில் வந்த சிலர் எழுந்து சற்றுத் தள்ளி அமர்ந்தனர். வேறு பகுதியில் இருந்த பெண்கள் அவளைப் பார்த்து ஏதோ காதுக்குள் குசுகுசுத்தனர் அக்கூட்டத்திலிருந்த ஒருத்தி எழுந்து வெளியே அவசர அவசர மாகச் சென்றாள். சற்று நேரம் கழித்து அக்கிராமத்து பெரியவர் ஒருவருடன் அதே பெண் வந்து கொண்டிருந்தாள். அவை ஒன் றையும் கவனியாமல் மேடையைப் பார்த்துக் கொண்டிருந்தான் தங்கமணி.

"இந்தா உன்னைத்தான்.....!"

தங்கமணி கவனிக்கவில்லை.

"இந்தா, ஏய்; உன்னைத்தான். எழுந்து அங்கே போய் அந்தக் கயித்துக்கு வெளியே இரு! உம்...." கிராமத்து வழக்கப் படி ஒரு பகுதியினருக்காக ஒதுக்கப்பட்டிருந்த இடத்தைச் சுட்டிக் காட்டினார் அந்தப் பெரியவர்.

தங்கமணி அதிர்ந்து போய்விட்டாள். அவமானம் முகத்தைச் சிறுக்க வைத்தது.

கூடியிருந்த பெண்கள் வாய்விட்டுச் சிரிக்கும் சிரிப்பின் ஒலி, தலை குனிய வைத்தது.

கண்கள் திருப்பதியைத் தேடின.

"ஏன் இருக்கிறாய் இம்! ஒழும்பு"

அவள் அசையவில்லை. உடலெல்லாம் வெயர்த்து ஒழு கியது.

மனம் - மரத்த நிலை.

திருப்பதியையே மீண்டும் தேடினாள்.

கத்திக்கத்திப் பொறுமை இழந்த அந்தப் பெரியவர் அவளரு கில் விரைந்து சென்றார்.

கூட்டத்தில் ஒரு வகைப் பரபரப்பு.

"அவளைத் தொடாதே. நிறுத்து!" தொண்டை கிழிய வெளிவந்த இக்குரலைக் கேட்ட ஒலிபரப்பியும் கூட்டத்துடன் சோந்து அமைதியானது.

பொன்னாச்சிக் கிழவி பெண் புலியைப் போலச் சீறிக் கொண்டு எழுந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவளைத் தொட நீ யார்? அவளை வெளியே போகச் சொல்ல உனக்கு என்ன உரிமை. திமிர். உம்! சொல்லு''

கிழவியின் கண்கள் உரோசத்தால் சுற்று முற்றும் சுழல் கின்றன. கூடியிருந்த பெண்கள் பெட்டிப் பாம்பாகி விட்டனர்

பொன்னாச்சி தொடர்ந்து சொன்னாள்:

''அவள் இப்ப என்ரை மருமேள். ஓம், இப்ப அவள் என்ரை மருமேள்தான்! வாடி போவோம்!'' - கூட்டத்தில் நுழைந்து தங்க மணியின் கைகளைப் பற்றி இழுத்தவண்ணம் தெருவில் இறங்கி நடந்தாள் பொன்னாச்சிக் கிழவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேற்றப்பட்டான்!

பிரேம்ஜி

அன்று குளிர் 'பட பட' என அடித்துக் கொண்டிருந்தது. இரவு பூராவும் கவிந்து கிடந்த பேயிருட்டு சிறிது சிறிதாக விலக முனைந்தது. கீழ் வானம் வெளுக்க ஆரம்பித்தது. எங்கோ உரக்கக் கூவிக் கொண்டிருந்த சேவலின் குரல் குடங்கிக் கிடந்த அவன் காதுகளில் துளாவியது. அந்தக் குரல் பட்டினி கிடக்கும் மனித இனத்தின் அபயக் குரலாக ஒலித்தது. வேலை ஸ்தலத்திலும் வீட்டு ஓரத்திலும் புழுப்போல் துடிக்கும் மனித குலத்தை எதிர்நோக்கி யுள்ள கோரத்தின் அபாய அறிவிப்பாக அது அலறியது.

அவன் துடித்தெழுந்தான். படுத்த சாக்கையும் - தலை வைத்த மரக்குத்தியையும் ஒரு மூலையில் போட்டான். மறுபக்கத்தில் சோர்ந்து துவண்டு கிடந்த தன் மனைவியை தட்டி எழுப்பினான். தூக்கத்தை முறித்து அலட்டிப் புடைத்துக் கொண்டு எழுந்தாள். சத்து வாங்கப்பட்ட சக்கைகள் அந்த இரண்டு மனிதப் பிராணி களும்.

அவசர அவசரமாக காலைக் கடனை முடித்துவிட்டு, கசக்கிப் போட்டிருந்த கந்தல் வேட்டியை எடுத்துக் கட்டிக் கொண்டான். பானையிலே எஞ்சியிருந்த பழங்கஞ்சியை குடித்ததும் குடியாதது மாக வாயில் ஊற்றிவிட்டு புறப்பட்டான். இந்த ஆரவாரத்தில் எலும்புக் குவியல்களாக மூலை ஒதுக்கில் சுருண்டு கிடந்த குழந் தைகள் விழித்துக் கொண்டன. அவர்களின் கூச்சலையும் பொருட் படுத்தாது அவன் வெளியேறினான். இரண்டு பையன்களுக்கு ஜுரம் ஆக்ரோஷமாக அடித்துக் கொண்டிருந்தது. அவர்களுக்கு ஏதாவது மருந்து வாங்கி வருவதற்காக நகரத்திலிருந்த ஒரு வைத்தி யரிடம் அவன் சென்று கொண்டிருந்தான்.

வைத்தியர் வீட்டை அடைந்ததும் அங்குமிங்கும் தன் விழி களை ஏவி விட்டான். அப்போதுதான் கொட்டாவி விட்டுக் கொண்டு கால் கைகளை வீசி எறிந்தபடி படலையை நோக்கி வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தார். அவருக்கு முன்வந்த நாய் அவனை வரவேற்றது. அதன் பிசாசு போன்ற தோற்றத்திலும், வெறிபிடித்த குரைப்பிலும் அவன் மிரண்டுபோய் நின்றான். அந்த நாய் அகங்காரம் பிடித்த ஒரு பட்டாளத்தின் விஸ்வருபமாக நின்றது.

பெரிய இடத்துப் பேர்வழிகள் தங்கள் செல்வத்தை - சொத்து சுதந்திரத்தை காப்பாற்றுவதற்காக நாய்களை வளர்க்கிறார்கள். அவர்களின் ஆட்சியும் துப்பாக்கிப் படை நாய்களை வைத்துத் தன் ஆதிக்கத்தை காப்பாற்றுகிறது.

வைத்தியரிடம் தன் குழந்தைகளின் நிலைமைகளைப் பற்றி பிரலாபித்தான். செல்வக் குழந்தைகளின் உயிரைக்காப்பாற்ற மருந்து கேட்டான். வைத்தியரை கூட்டிப் போக அவனிடம் எங்கே பணம் இருக்கப் போகிறது. வைத்தியரும் ஏதோ குளிசைகளை ஒரு சரையிலும் வேறோரு கலரையும் தயார் செய்தார் அவற்றை கொடுத்தவாறே பணத்திற்காக ஒரு கரத்தை நீட்டினார். அவன் வேட்டி முடிப்பைப் பார்த்தான். முடிச்சுக் காணப்படவில்லை. திகைத்துப் போனான் மருந்துக்காக முதல் நாள் இரவு அடுத்த வீட்டில் எடுத்தக் கடன் அவனுக்கு ஞாபகம் வந்தது. அவன் அவசரத்தில் அதை மறந்துவிட்டான்.

''ஐயா பணத்தை வீட்டில் விட்டு வந்து விட்டேன். சாயந் தரம் வந்து தருகிறேன்'' என்றான்.

வைத்தியர் இரு கரங்களையும் பின்வாங்கினார். அவர் பார் வையில் முறைப்பும் கழுகுத் தன்மையும் தொனிந்தது ''பணத்தை கொடுத்து விட்டு எடுத்து போ'' அவர் குரலில் கரடு முரடு காணப் பட்டது.

குழந்தையின் பயங்கரமான நிலையை எடுத்துச் சொன்னான்; உயிர் பிச்சைக்காக மன்றாடினான். ஆனால் மனிதம் என்று சொல்கின்றார்களே அது துளிகூட எங்கும் ஊறவில்லை. மனித இதயங்களை வெறும் சல்லடையாக்கிவிட்ட இந்த சமுதாயத்தின் அந்த வைத்தியரும் ஒரு பிராணிதானே. பணம் அவர் உள்ளத்தை கொன்று விட்டது. மனிதத் தன்மையை இழந்த கோடானு கோடி மனித மரக்கட்டைகளில் அவரும் ஒருவர்.

அவன் திரும்பினான் ஆத்திரமும் - ஏமாற்றமும் மரத்துப் போய் இருந்த அவன் உள்ளத்தில் நச்சரித்தன. அவன் வெறுப் பெல்லாம் பைத்தியக்காரனின் மீது பொதுக்கிட்டது. பாவம் அவன் ஏழை. உலக இயல்பை - சமுதாய உண்மையை அறியாதவன். தானும் தன்னைப் போன்ற லட்சோப லட்சம் மக்களும் அதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தின் கோளாறுக்கு பலியானவர்கள் என்பது அவனுக்கு எங்கே தெரியப்போகிறது. நல்லவர்கள் - நல்லவர்களாக வாழப் பிறந்தவர்கள். இந்த சமுதாயத்தில் கெட்டவர்களாக்கப்படுகிறார்கள் - வாழ்வு மறுக்கப்படுகிறார்கள் என்ற போதம் அவனுக்கு இன்னும் வரவில்லை.

தலை கிறுகிறுக்க முயல்பாச்சலில் அவன் கால்கள் தாவின. வீட்டில் குழந்தைகள் தாங்க முடியாத ஜுரத்தால் துடித்துக் கொண்டிருந்தார்கள். மனைவியோ திக்பிரமை பிடித்தவள்போல தன் செல்வங்களை ஏக்கத்தோடு பார்த்தபடி இருந்தாள். ஈக்கள் 'படைத்தாக்குதல்' நடத்திக் கொண்டிருந்தன. முடை நாற்றம் வேறு.

அழுக்குப் பிடித்து கிடந்த துணியில் முடிச்சுப்போட்டு வைக்கப்பட்ட பணத்தை அவசர அவசரமாக அவிழ்த்தான். அந்த இரண்டு ரூபா நோட்டை மனைவியிடம் நீட்டி வைத்தியரிடம் போகுமாறு கூறினான்.

''பணத்தை மறந்து விட்டேன் வைத்தியர் மருந்து தர மறுத்துவிட்டார்'' என்றான்.

எங்கோ மணி 'டாங் டாங்' என்று அடித்து முடித்தது. கதிரவனும் வானத்தின் உச்சியை நோக்கி தாவ முயன்று கொண் டிருந்தான். காற்று உஷ்ணம் ஏறிப்போய் ஜுரம் பிடித்த அந்த குழந்தைகளின் அனல் கக்கும் மூச்சுடன் போட்டி போட்டிக் கொண்டிருந்தது. வேலைக்குச் சுணங்கி விட்டது. குழந்தைகளின் உடம்பைத் தொட்டுப் பார்த்தான். கொல்லன் பட்டடை மாதிரி கனன்றது. வெறி பிடித்தவன் போல வெளியேறினான். அவன் மனைவியும் நடக்க ஆரம்பித்தாள். கைக்குழந்தை கதறியது. அன்னை போய்விட்டாள்.

வேலை ஸ்தலத்தில் சுணங்கியதற்காக அதிகாரி அவன் மீது சடைத்தார். இது மாதிரி சுணங்கினால் கல்தா கொடுத்துவிடுவதாக பயமுறுத்தினார். அதன் பிறகு.

''மேன்மை தங்கிய மகாராணியார் எங்கள் நாட்டிற்கு விஜ யம் செய்கிறார். அப்போது இங்கும் வருவார். எங்கள் 'றெஸ்ட் ஹவுஸை' புனர் நிர்மாணம் செய்யுமாறு அரசாங்கம் உத்திர விட்டுள்ளது. இன்றே வேலை ஆரம்பித்தாக வேண்டும்.'' கூடி யிருந்த தொழிலாளிகள் பரக்கப் பரக்க விழித்தார்கள். அவர்கள் முகங்களில் ஒரு வித வேண்டா வெறுப்பும் அசூசையும் ரேகை கிழித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகராணியார் வருவது எங்கள் நாடு செய்த தவப் பாக்கியம். நகரம் பூராவும் நாம் தோரணமும் - தோப்பும் போட வேண்டும். வீதிகளெல்லாம் தீபாலங்காரம் எடுக்க வேண்டும். மேன்மை தங்கிய ராணியாருக்கு விஸ்வாசமுள்ள பிரஜைகளாக நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்" அவர் ஏதோ மேடைப் பிரசங்கிபோல அடுக்கிக் கொண்டே போனார்.

தொழிலாளர்களுக்கு இது ஒன்றுமாய்ப் புரியவில்லை. அரசாங்கம் அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளமோ அரை வயிறு நிரம்பவும் போதாது. நித்தம் பட்டினியும் - பரிதவிப்பும் தான் வாழ்வெல்லாம். கடுமையான உழைப்பு அவர்கள் மென்னியைப் பிழிந்து உதிரத்தை குடித்துவிட்டிருந்தது. குமுறும் ஆத்திரம் - கொந்தளிக்கும் அதிருப்தி - இது தான் அவர்கள் வாழ்வுப் பிதுரார் ஜிதம். இந்த நிலையில் கடுமையாக உழைக்க வேண்டுமாம் - யாரோ ராணியார் வருகிறாராம். இதெல்லாம் அவர்களுக்கு அந்த உழைத்துக் கெட்ட பஞ்சையர்களுக்கு ஆத்திரத்தைத்தான் கொடுத் தது. முகத்தை முறைப்பாக வைத்துக் கொண்டார்கள்.

அன்று வேலை முடிந்து அவன் வீடு திரும்பிக் கொண் டிருந்தான். ஏதாவது ரொட்டித்துண்டு வாங்கிப் போவதற்காக ஒரு கடைக்குள் புகுந்தான். யாரோ இருவர் ஆவேசமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவன் தன்னை அறியாமலே உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"ராணியார் இலங்கைக்கு வருகிறாராம். பொலனறுவைக்கும் வருவார். இங்கு றெஸ்ட் ஹவுஸில் ஒரு நாள் தங்குவார்" என்றார் ஒருத்தர்.

"ஆ. வருகிறாரா அந்த அம்மையை தரிசிக்கும் பேறு நமக்கெல்லாம் கிட்டும்" புளகாங்கிதமடைந்தவர் போல ராஜ விசுவாசத்துடன் மற்றவர் கூறினார்.

"ஆம் கிடைக்கும் - நிச்சயமாகக் கிடைக்கும். ஏழை மக்க ளின் கண்ணீரிலே, ரத்தக் குழம்பிலே அவர் பவனி வருவார்" அவன் வார்த்தைகள் சூடேறிக் கொண்டிருந்தன.

"அப்பா அப்படிப் பேசாதே, அவர் நம் மகாராணி"

"யாருடைய மகாராணி, இந்த நாட்டின் ராமசாமிகளின் - மீனாட்சிகளின் ராணியா? சுதுபண்டாக்களின் - சோமாவதிகளின் மகாராணியா? எங்களை அடக்கி ஆண்ட - ஆளும் கூட்டத்தின் ராணி அவர். மலாயாவிலும், கென்னியாவிலும் மனித வேட்டை யாடும் சாம்ராஜ்ய தலைவெட்டிகளின் ராணி அவர்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன் நீ அவ்வளவு ஆத்திரப்படுகிறாய்? ''

''ஆத்திரமா - எங்களை சுரண்டிய, சுரண்டும் பைசாச சாம்ராஜ்யத்தின் முடிசூட்டிய பிரதிநிதி இந்த ராணி. அவர்கள் ஆதிக்கம் இன்று கரைந்த மண்ணாகிறது. சாய்ந்துவரும் சாம்ராஜ் யத்தை, இடிந்துவரும் ஏகாபதிபத்தியக் கோட்டையை காப்பாற் றவே லட்சோபலட்சம் செலவில் 'பரலோகபவனி' ஆரம்பித்துள் ளார்கள். இங்கும் இவருக்கு தண்டனிட 20 லட்சம் ரூபாவாம். பொலநறுவா றெஸ்ட் ஹவுஸில் ஒரு இரா தங்குவதற்கு 85 ஆயிரம் ரூபா. கக்கூசுக்கு 40 ஆயிரம் ரூபா'' அவன் கொதிப் பேறியவன் போல ஆக்ரோஷத்தோடு பேசிக் கொண்டிருந்தான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்த சுப்பனுக்கு தூக்கி வாரிப்போட்டது. 'யாரோ ஒருத்தி, ஒரு இரவு தங்க 85 ஆயிரம் ரூபா'' இது அவன் இதயத்தை பிளந்தது. ஜுரமேறிய குழந்தைகளின் ஞாபகம் வரவே 'விர்' என்று வெளியேறி நடந் தான். வீட்டை சமீபத்ததும் ஏதோ கூக்குரல் அவன் காதுகளில் ஒலித்தது. குடிசையைச் சுற்றி ஒரு சிறு ஜனக்கூட்டம் கூடியிருந் தது. திடீர் திப்பென்று மக்கள் கூட்டத்தை இடித்து தள்ளிக் கொண்டு உள்ளே போனான். குழந்தைகள் பிணமாகிக் கிடந்தன. அவன் மனைவி 'சந்திரமதி' போல தலைவிரி கோலமாக அந்த உயிரற்ற உடலங்களை கட்டித் தழுவிக் கதறிக் கொண்டிருந்தாள்.

அவன் சிறிது நேரம் மூச்சுப் பேச்சில்லாது நின்றான். ராணி யார் வருகை பற்றி கடையில் நடந்த பேச்சு - இங்கு வைத்திய வசதியில்லாது செத்துக் கிடந்த குஞ்சலங்கள் - அவன் சிந்தனை நீண்ட நேரம் ஸ்தம்பித்து நின்றது.

தொலைவிலுள்ள ஒரு சவக்காட்டில் அந்த இரு உடல்களும் - பெற்று வளர்த்த தங்கங்களின் பிரேதங்களும் தாக்கப்பட்டன. அதன் மீது ஒரு பிடி மண்ணை அள்ளி வீசினான். அவனது - அவனைப் போன்ற மனித ஜெந்துக்களினது அபிலாஷை, வாழ் வெல்லாம் வெறும் பிணக் காடுதான். அந்த மோனத்தை அறிந் தவன் போல அவன் வீடு திரும்பினான்.

வழக்கம் போல எல்லாம் ஓடிக்கொண்டிருந்தது. ராணியார் வருகைக்காக ஆரம்பித்த திருத்த வேலைகள் ஜரூராக நடந்து கொண்டிருந்தன.

அன்று அவன் 'றெஸ்ட் ஹவுஸி'ன் கூரையில் ஏறி வேலை செய்து கொண்டிருந்தான். கீழேயிருந்தபடி அதிகாரி ஏதோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசர அவசரமாக உத்தரவு பிறப்பித்துக் கொண்டிருந்தார். சிம்ப சொப்பனம் கேட்டது போல நடுங்குற்ற அவன் கால் தவறியது. உடல் புரண்டது. தரையிலே ஒரு பிடி ரத்தம் கொட்டிக்கிடந்தது. அவன் ஆஸ்பத்திரிக்கு மூர்ச்சித்த நிலையில் எடுத்துச் செல்லப் பட்டான்.

இரு வாரங்களுக்குள் ஆஸ்பத்திரியிலிருந்து சீட்டுக் கிழிந்தது. ஆறு மாதங்களுக்கு எந்த வேலையும் செய்ய முடியாது. இடிப்பு ஒடிந்துவிட்டிருந்தது.

டாக்டர்கள் பத்திரத்தோடு நஷ்டஈடு கோரி அவன் மனுப் போட்டான். கவலையீனம் காரணம் என்று அதிகாரிகள் தீர்ப்புக் கட்டினர். குடும்பத்துடன் பல நாட்கள் பட்டினி கிடந்த அவன் அதிகாரிகளிடம் கருணைக்காக மன்றாடினான். இறுதியில் ரூபா 250 கொடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது. அக்கம் பக்கத்து வீட்டாரிடம், லேவாதேவிக்காரிடம் அவன் பட்ட கடனுக்கு இது 'ஆனைக்கு அவல்' போன்றது.

விட்டுப் போயிருந்தார்கள். உணவிற்கே பணமில்லை. இந்த நிலையில் கொட்டாவிவிட்ட படியே திண்ணை ஓரத்தில் சாய்ந்து கிடந்தான். உயர்ந்து நெட்டையாக இருந்த இருவர் வந்தார்கள். அவர்கள் தொழிற்சங்க ஊழியர்கள். அவனுடன் பல மணிநேரம் பேசிவிட்டுப் போனார்கள். நல்ல நஷ்டஈடு கிடைக்கலாம் என்று ஒரு தெம்பு அவன் உச்சளத்தில் அவனை அறியாதே ஏற்பட்டது.

அன்று கடன் கொடுத்தவர்கள் வந்து அவனை பயமுறுத்தி வந்த அந்த ஊழியர்கள் சங்கம் மூலம் நடவடிக்கை எடுத்தார்கள். தொழிலாளிகள் கூட்டம் கூடி தக்க நஷ்டஈடு கொடாவிட்டால் செயலில் இறங்க நேரிடும் என்று அறிவித்தார்கள். இதைக் கேட்ட அரசாங்கம் சீறியது. முக்கிய தொழிலாளிகள் சிலரை நீக்குவதாக அறிவித்தல் செய்தது. இதை எதிர்த்து தொழிலாளர் வேலை நிறுத்தம் ஆரம்பித்தனர். இறுதியில் நிர்வாகம் பணிந்தது. தொழி லாளர்களை, நீக்குவதில்லை என்றும், சுப்பனுக்கு ரூபா 1000 நஷ்டஈடு கொடுப்பதாகவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

தொழிலாளிகள் அன்று ஊர்வலம்.போய்க் கொண்டிருந் தார்கள். வெற்றிவிழா நடத்தினார்கள். ஊர்வலம் சுப்பனுடைய குடிசையை நெருங்கிக் கொண்டிருந்தது. ஆர்ப்பரித்து புளகாங்கித மடைந்த சுப்பன் தன்னை சமாளித்தவாறு எழுந்து தெருவோரம் வந்தான். நஷ்டஈடாக கிடைத்த ரூபா 1000 இல் ரூ 100ஐ எடுத்துக் கொண்டு ஊர்வலத்தின் முகப்புக்குப் போனான் தலைமை வகித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து கொண்டிருந்த தலைவரைக் கட்டித் தழுவிக் கொண்டே சங்க நிதிக்கு என்று கூறி ரூபா 100 நோட்டைக் கொடுத்தான். தொழி லாளர்கள் கோஷம் போட்டு ஆரவாரித்தனர்.

''நாம் ஒன்றுபட்டால் நமது சக்தியை யாராலும் ஒடுக்க முடியாது. உலகத்தைப் படைத்துக் காக்கும் மகாசக்தி நாம். தூங்கிக் கிடக்கும் உழைப்பாளி வர்க்கம் விழித்தால் ஆளும் வர்க்கம் அழியும். எமது ஒற்றுமையை வளர்க்க வேண்டும்'' என்று தலைவர் கூறினார். தொழிலாளர் நெஞ்சில் ஒரு வீறு பீறிட்டது. குருதி ஓட்டத்தில் ஒரு வீராப்பு கரை புரண்டது.

நாட்கள் ஓடின. ராணியார் வருகை ரத்துச் செய்யப்பட்டது. 'அப்பாடா' என்றது அவன் உள்ளம். அன்னிய ராணி வருவதற்கு கொட்டி அளக்கப்படும் லட்சோப லட்சம் ரூபா மிஞ்சிவிடும் என்று அவன் பூரித்தான்.

மாதங்கள் கழிந்தன. ராணியார் வருகை பற்றி மீண்டும் நாடாளும் கூட்டம் அல்லோல கல்லோலம் செய்தது. இந்த செய்தி கேட்டு அவன் இருதயம் மீண்டும் குறுகுறுத்தது. ராணியார் வருகையை ரத்து செய்யுமாறு தொழிலாளர் சங்கத்தில் ஒரு தீர்மானமும் கொண்டு வந்தான்.

அன்று ஒருநாள் காலை. மணி 10 இருக்கலாம். நல்ல சுகம் இன்னும் இல்லை. படுத்துவிட்டபடியே மனைவியுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தான்.

திடீர் தொப்பென்று 'பூட்ஸ்' சப்தம் கேட்டது. கதவை நோக்கி முகத்தை திரப்பினான். ஐந்துதாறு பொலீஸ் சூரர்கள் 'திபு திபு' என உள்ளே வந்தார்கள்.

'நீதான் சுப்பனா?'

'ஆமா, நான்தான்'

'நீ தொழிற்சங்கத்தில் சேர்ந்திருக்கிறாயா?'

'ஆமா'

''இன்னும் சில நாட்களில் மேன்மை தங்கிய மகாராணியார் இங்கு வருகிறார். அபாயகரமான பேர்வழிகளை வெளியேற் றும்படி அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.''

''நான் ஒன்றும் அப்படிப்பட்டவனல்ல . நான் அப்பாவி''

''நீ சங்கத்தில் சேர்ந்துள்ளாய். நீ பயங்கரமானவன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் உதடுகளில் சிரிப்பு பூத்தது. கேலிச் சிரிப்பு அது. சங்கத்தில் சேர்ந்தது குற்றமா? சங்கம் தானே அவனுக்கு வாழ் வளித்தது.

அவன் லாரியில் ஏற்றப்பட்டான். கணவனும் ஆசை மனை வியும் சட்டத்தால் பிரிக்கப்பட்டனர். அவள் கண்ணீர் துளிகளை சிந்திக் கொண்டே மரக்கட்டை போல விறைத்து நின்று கொண் டிருந்தாள்.

லாரி 'குபீர்' என்று நகரத்தைக் தாண்டி ஓடியது. அவனுக்கு ஊர் பிரஷ்டம், அவன் 'ஆபத்தானவன் - பயங்கரவாதி' 'சூரியன் அஸ்தமியாத சாம்ராஜ்யம்' என்று இறுமாப்புற்ற ஏகாதிபத்தியம் அவனைக் கண்டு கலங்கியது. அந்த தொழிலாளியின் - அவன் போன்ற தொழிலாளி வர்க்கத்தினரில் தனது சாவின் முடிவைக் காண்கிறது சாம்ராஜ்யம்.

மயானத்தை லாரி தாண்டிக் கொண்டிருந்தபோது அவன் வெளியில் பார்வையைச் செலுத்தினான். அவனுடைய குழந்தை கள் புதைக்கப்பட்ட குழி அவன் கண்களில் பட்டது. கண்ணீரைப் 'பொல பொல' எனக் கொட்டினான். அவன் நட்ட ரோசாச் செடி பூத்து, மலர்க் கொத்துகள் தொங்கிக் கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாணைக் கூறை

அ.ஸ. அப்துஸ்ஸமது

இருபுறமும் இடியப்பத் தட்டுக்களை அடுக்கினாற் போல, இரு காதுகள் நிறைய பத்துக்சோடி அல்லுக்குத்துகளும் அசைந்தாட ஹாஜறா உம்மா சொன்னாள், ''ஒண்டி என்ர வயித்தில பொறந்த புள்ள இப்ப இஞ்சினீர் ஆயிற்றான்; என்ர ஆசை தீர அவனுக்கு ஒரு கலியாணம் முடிச்சிற்றனெண்டா, மத்தநாள் கண்ண முடினாலும் கவல இல்லடி பாத்தும்மா''.

''எனக்குத் தெரியாதா ராத்தா, நீ பட்ட பாடும் உன் மக னுக்குக் கட்டின காசும்! எப்படியோ காரியத்தில வெத்தி எடுத்திற் றாய், இண்டக்கி வைரம் அள்ளிக்குடுத்து எடுக்கிற மாப்பிள்ளை உன் மகன்'' - இப்படிப் பதில் கூறினாள் பக்கத்துவீட்டுப் பாத் தும்மா.

''ஓமோம், இருபத்தைந்தேக்கர் காணி, இருபத்தையாயிரம் காசு, பெரீய கல்வீடு, இவ்வளவும் இல்லாம இந்த ஹாஜருகிட்ட யாரும் வந்து அணுகமுடியாது; மாப்பிள்ளை கேட்டு ஆட்கள் வந்தா ஊட்டுக்கு முன்னால பத்துக் கார் கெடக்கவேணாமா? இவ்வளவெல்லாம் அந்தஸ்து இல்லாத வங்களோட நமக்கென்ன சம்பந்தம்?''

''நம்முட ஊருல இவ்வளவு குடுத்து ஆர்ராத்தா, இந்த மாப்புளய எடுக்கப்போறாங்க? எங்கபார்த்தாலும் உப்புத் தண்ணி யில இறால் வெளஞ்சமாதிரி குமர்க்கூட்டம். சுத்தி உடுத்த புடவை யும், பின்னிவிட்ட கொண்டையும் தான் மிச்சம். இவளெல்லாம் இந்த மாப்பிள்ளையைக் கனவும் காணமுடியாது; நீ ஒண்டும் யோசியாத, காரில காசும் கட்டிக்கி ஆள்வரும். நான் போக்கிற்று வாறன் ராத்தா'' என்று கூறிக்கொண்டு பாத்தும்மா நகர்ந்தாள்.

ஹாஜறாவுக்கு முதல் பிறந்தது நான்கும் பெண்கள். ஐந்தா வதுதான் இந்த எஞ்சினியர் ஸவாஹிர். மகனின் இந்த உயர் நிலையைக்கண்டு சந்தோஷப்பட அவள் கணவர் முஹாந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஹிதீன் போடி கொடுத்துவைக்கவில்லை. பதினைந்து வருஷங்களின் முன்னே அவரை இஸ்றாயில் அழைத்துக் கொண்டார். கொஞ்சம் நிலபுலன்கள் கிடந்ததால் ஹாஜரு அவற்றையெல்லாம் விற்று மகனை மேல் படிப்புக்கு விட்டாள்.

இந்த ஊரில் பெரிய படிப்புப் படித்துப் பட்டம் பெற்றவன் ஸவாஹிர்தான். கைநிறையச் சம்பளம் வாங்குகிறான். இவன்ர தகுதிக்குகேற்ற சீதனமும் சீர்வரிசைகளும் வாங்கிக் கொண்டு தானே விவாகம் ஆகணும் என்பது ஹாஜறாவின் தணியாத தாகம். ஒரு நாள் அவளுடைய ஆசையும் நிறைவேறத்தான் செய்தது.

பையனோ எஞ்சினியர்; தங்கை என்றும் குடும்பம் என்றும் அல்லுத்தொல்லை இல்லாதவன் என்றால் பெண் பெற்றவர்கள் சும்மா இருப்பார்களா? பக்கத்து ஊர் நெய்ந்தக்கண்டு வட்டா விதானை, ஹாஜறாவின் நிபந்தனைகளுக்கெல்லாம் கட்டுப்பட்டு, அவனது கனவை நனவாக்க முன்வந்தார். மாப்பிள்ளையோ, உம்மாவின் விருப்பங்களை அனுசரித்தும், மனிதகோடிகள் அனைவருக்குமே உள்ள பொருளாசைக்கு வசப்பட்டம், தன் மோதிர விரலை மாமனாரிடம் நீட்டிவிட்டான். அதாவது தனது சம்மதத்தைத் தெரிவித்து மோதிரத்தை ஏற்றுக்கொண்டான். நிச்சயார்த்தம் ஆயிற்று.

ஹாஜறா உம்மாவுக்குப் பூமி மலர்மெத்தையாயிற்று. எண்ணமெல்லாம் இன்பக் கிளுகிளுப்பு. மாப்பிள்ளை கேட்டு வந்தவர்கள் கொண்டுவந்த துதல், மஸ்கத், வாழைப்பழம் இத்தியாதியை, வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்ற வித்தியாசம் இன்றி ஊரெல்லாம் பகிர்ந்தாள். ஏன் தெரியுமா? கொழுத்த சீதனத்துடன், மகனுக்கு அயலூரிலிருந்து மாப்பிள்ளை கேட்டு வந்த செய்தி எல்லோருக்கும் தெரிய வேண்டாமா? அதற்காகத் தான். பக்கத்து வீட்டுப் பாத்தும்மாவுக்கு இப்பவே கலியாண வேலை தொடங்கிற்று. இந்த அலுவல்களிலெல்லாம் ஹாஜறாவுக்கு ஒத்தாசையாக இருப்பவள் அவள்தானே.

மறுநாள் பின்னேரம் எஞ்சினியர் ஸவாஹிர் திண்ணையில் கிடந்த சாய்மனையில் சாய்ந்தபடி பத்திரிகை படித்துக் கொண்டிருந்தான். அப்பொழு பத்து வயதுச் சிறுமியொருத்தி ஓடிவந்து, சிறு பொட்டலம் ஒன்றை அவனிடம் நீட்டினாள். அந்தப் பிள்ளையை அவன் இதற்குமுன் கண்டிருக்கிறான். ஆனால் யாரென்று தெரியாது. கைநீட்டிப் பொட்டலத்தை வாங்கியபடி, "நீ யாரும்மா?" என்று கேட்டான். எந்தப் பதிலுமில்லாமல் சிறுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிட்டாய்ப் பறந்துவிட்டாள். ஒன்றும் புரியாதவனாக பொட்டலத்தை அவிழ்த்தான் ஸவாஹிர். அந்தப் பொட்டலத்துள் சிறு குழந்தைக்கான இரு பட்டுச்சட்டைகளும், கடிதமொன்றும் இருந்தன. சட்டைகள் மிகப் பழையவை. பாதுகாத்து வைக்கப் பட்டவை. கடிதத்தை விரித்துப் படித்தான் ஸவாஹிர்.

அன்புள்ள மச்சான்!

உங்கள் மாமி மகள் சுபைதாவை, இந்தவேளையில் உங்களுக்கு நினைவிருக்க நியாயம் இல்லை. அந்தப் படு போக்கிரிதான் இதை எழுதுகிறேன். உங்களுக்குப் பெண் நிச்சயார்த்தம் ஆயிற்று என்று கேள்விப்பட்டேன். என் வாழ்த்துக்கள்! இந்த மங்கள கரமான நேரத்தில் உங்களுடைய நிம்மதியையும் மகிழ்ச்சியையும் குலைக்க நான் வரவில்லை.

எனினும் இந்தக் கல்யாண விஷயமாக எனது உம்மாவுக்கும், உங்களது உம்மாவுக்கும் ஒரு ஆகிறத்துக் கடன் உண்டு, அந்தக் கடனை நாமிருவரும் ஒத்து இம்மையிலேயே அழித்து விடுவது சௌஜன்யமானது என்று கருதி இதை எழுதுகிறேன்.

ஆமாம் நான் தன்னறிவு பெற்றுத் தாய்முகத்தைப் பார்க்கு முன்னமேயே அவள் இவ்வுலகைத் துறந்துவிட்டாள். நான் இம்மண்ணுலகில் மனிதப் பிறவி எடுத்த ஏழாம் நான். உங்கள் தாயார் என் தாயாரிடம் ஒரு சங்கற்பம் செய்து கொண்டார். அதன் சான்றுதான் இத்துடன் வரும் சட்டைகள். ஆம்! நாமிருவரும் விவாகப் பக்குவத்தை அடைந்ததும் என்னைத் தன் மருமகளான ஏற்பதாகச் சங்கப்பித்து இந்தச் சட்டைகளை உங்கள் சார்பாக சாணைக்கூறையாக வழங்கினார் உங்கள் அன்னை. சாணைக்கூறையாக வழங்கியவற்றை, விவாகக்கூறை வரும்வரை பாதுகாத்து வைக்க வேண்டுமாம் என்று என் மூத்தம்மா, என் உம்மா மவுத்தான பின்பும் இதனைக் கருத்தோடு பௌத்திரப் படுத்தினாள். அனுபவ அறியும், சம்பிரதாயங்களில் உள்ள நம்பிக்கையும் எவ்வளவு அர்த்தபுஷ்டியானவை!

நீலம், பச்சை வர்ணத்தில் அமைந்த இவ்விரண்டு சட்டைகளையும் பாருங்கள், பதினெட்டு ஆண்டுகள் பூரணமாகக் கழிந்தும் அதன் அழகும் ஜொலிப்பும் சற்றேனும் மங்கிவிடவில்லையே. ஏனெனில் இது அசல் சீனாப்பட்டு. பூச்சி சில்க் சீலையொன்றின் வண்ணமும் அழகும் இத்தனை ஆண்டாகியும் இன்னும் மாறவில்லை. மனிதனுடைய சொற்களும் நிலைமைகளும் எவ்வளவு மாறிவிட்டன. பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாணைக்கூறை என்ற இச்சம்பிரதாயம்; நம்பிக்கை நிறைந்தது. இதில் வாக்குறுதி மீறப்பட்டால் மறுமையில் இறைவன் முன் வழக்காடல் நிகழும் என்பார்கள். இது உண்மையாயின் மறுமை யில் என் உம்மா உங்கள் உம்மாவுடன் வழக்காட நாமிருவரும் சாட்சிகளாக இருப்போமல்லவா? உங்கள் தாய் வாக்குறுதி மீறினார். நீங்கள் அதற்கு அனுசரணையாக இருந்தீர்கள் என்ற இவ்வழக்கு எவ்வளவு சுவாரஸ்யமானது.

சாணைக்கூறை போட்டவன்தான் சந்தூக்குக் கூறையும் போடவேண்டும் என்பது மற்றோர் ஐதிகம். அதாவது ஒரு பெண் இறந்ததும் அவளுடைய பாடையை மூட, அவளது விவாகக் கூறையைப் பயன்படுத்துவது நம்வழக்கம். ஒரு பெண்ணுக்கு சாணைக்கூறை போட்டிருந்தவர்தானே சந்தூக்குக் கூறையும் வாங்கி இருப்பார்.

மச்சான்! சாணைக்கூறையை நீங்கள் போட, விவாகக் கூறையை இன்னொருவர் கொண்டுவர, சந்தூக்குக் கூறையை மற்றொருவர் கொண்வரும்படியான துரதிர்ஷ்டம் என் வாழ்க் கையில் நிகழ்ந்துவிட்டால், இந்த முதற் கூறையோடு என் வாழ் வுக் கதையும், முற்றுப் பெற்றுவிடுவது எவ்வளவு சௌகரியம். பதினெட்டு வருடங்கள் என் மனதில், நாற்பது திரியிட்ட குத்து விளக்காகப் பிரகாசித்துக் கொண்டிருந்த ஒருவரை ஒரு நாள் திடீரென இழப்பது இதயம் தாங்கமுடியாத ஒரு சோதனைதான். மறப்பதும் மன்னிப்பதும் மனிதமனங்களின் இயல்பான தொழி லல்ல. காரணங்களை வருவித்து அவற்றை நாம் செயற்கையாகச் செய்கிறோம் அவ்வளவுதான்.

முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதாக எண்ணு வீர்கள். கூழுக்கு வழியில்லாத ஒருவன் பாற்சோறு தின்னக் கனவு காண்பது எவ்வாறு? நீங்கள் இந்தப் பெரிய படிப்புப் படித்திரா விட்டால், அல்லது நான் இந்த ஏழ்மை நிலைமை எய்தி இரா விட்டால், உங்களுடைய விவாகக் கூறை எனக்குரியதுதானே. அதுவே சந்தூக்கு மூடவும் ஆகி இருக்குமல்லவா?

எனது முற்றத்தில் மலர்ந்த கொடி மல்லிகைப் பூக்கள், மற்றொருத்தியின் கொண்டையில் சரமாகச் சூடி இருப்பதைப் பார்ப்பது துயரமே. வறுமை காரணமாக, அம்மலரை நான் சூடும் திராணியற்று, அதனை மற்றொருத்திக்கு விற்றுவிட்ட எனக்கு, பொறாமை ஏன்? ஆசை ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ சாணைக்கூறையான இரு சட்டைகளையும் என் இதயத்தைப் பெயர்த்தளிப்பது போல, உரியவரிடம் ஒப் படைத்து விட்டேன். இதனை நானே விரும்பிச் செய்தபடியால் மறுகையில் என் தாயும் உங்கள் தாயும் வழக்காட நியாயமில்லை அல்லவா?

இனி உள்ளது, உங்கள் உம்மா என் உம்மாவிடம் கொடுத்த வாக்குறுதிதான். நெல்லைக் குத்தி அரிசியைக் கண்டால் உமியைப் புடைத்துத் தள்ளிவிடுவதுதானே. உங்கள் உம்மா உங்களை அரிசியாகக் கண்ட போது, நான் உமியாகிவிட்டேன். உமி இப் பொழுது குப்பையில் கிடக்கிறது. நான் உமியான காரணத்தினால் உங்கள் உம்மா கொடுத்த வாக்குறுதியும் உமியாயிற்றா? நெய்ந்தக் கண்டு வட்ட விதானையிடம் கொடுத்த வாக்குறுதி மட்டும் வைர மானதா? இந்நிலையில் உங்கள் பெற்றதாயை எவ்வாறு விடு விக்கப் போகிறீர்கள்?

என் உம்மா மவுத்தானதும், என் வாப்பா வேறு விவாகம் செய்ய விரும்பாமல் எனக்காகத் தன் வாழ்வைப் பரித்தியாகம் செய்தார். என்னை எஸ். எஸ். ஸி. வரை படிப்பித்தார். எனக்காக ஒரு அழகிய வீட்டைக் கட்டினார். நான் கண்கலங்காமல் ஆத ரித்தார். அவரால் முடிந்தது இவ்வளவே. இதற்காக அவர் செய்த தியாகங்கள் அதிகம். இந்த அந்தஸ்தில் ஒரு எஞ்சினியரை நான் எப்படிக் கனவு காணமுடியும்?... அந்தக் கூட்டுக்கலவியிலே கவிதை கொண்டுவர வேண்டும்.... என்ற பாரதி பாடலைப்போல, நான் கவிதை தருவேன். காசுதர என்னால் முடியாது! காணிதர என்னால் இயலாது மச்சான்! இந்தப் பிச்சைக்காரிக்கு இனி ஆண் துணையே தேவை இல்லை. ஏனெனில் உங்களை மனதில் வைத்துக்கொண்டு மற்றொருவரை மஞ்சத்தில் வைத்துக் கொஞ்சி விளையாடும் விந்தை எனக்குத் தெரியாது! ஆதலால் உங்க ளுடைய தாயின் இரண்டாவது வார்த்தையை நிறைவேற்றி இன்பமாக வாழுங்கள்!

அன்பின் சுபைதா.

இரவு கலியாண முற்றாய்ப்புக்காக, பெண் வீட்டிலிருந்து வந்த இனிப்பு வகைகளை ஒரு தட்டில் வைத்து எடுத்துக் கொண்டு "இதத் திண்டுபார் மகன்!" என்று கூறியபடி ஸவாஹிரிடம் வந்த ஹாஜறா, மகனின் நிலையைக் கண்டாள். கண்கள் கலங்கியபடி எதையோ இழந்துவிட்டவனைப் போல உட்கார்ந்திருந்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸவாஹிர். முன்னால் இருந்த ரீபோவில் இரு சட்டைகளும் கடிதமும் கிடந்தன.

''என்னமகன் இது! பேயறஞ்ச மாதிரி இருக்காய்!'' என்று கேட்டபடி சட்டைகளைக் கையில் எடுத்தாள் ஹாஜறா. அவளுக்கு எல்லாம் விளங்கிவிட்டது. சொல்லி வைத்தாற்போல பாத்தும் மாவும் வந்து சேர்ந்தாள்.

''அடியே பாத்தும்மா, இஞ்சப்பாத்தாய, புதினத்த. இந்த முகாந்திரம் போடியிர பெண்டாட்டி இதுக்கெல்லாம் அசை கிறவளா?'' என்று பிரலாபிக்கத் தொடங்கினாள். விஷயம் பாத்தும் மாவுக்கும் தெரிந்ததுதான். எனவே அவளுக்கும் எல்லாம் விளங்கி விட்டது. ''என்ன தம்பி இது? கழிஞ்சிபோன கண்ணறாவிய கழுத்தில சுத்திக்கி அழுகிறதா? உட்டு வீசிற்று மத்த அலுவலைப் பாருங்கள்!'' என்று அவளும் பதிலுக்குப் பாடினாள். ஸவாஹிர் பொங்கிவரும் வேதனையைக் தாழமுடியாதவனாக பாத்தி மாவைப் பார்த்து,

''என்ன ராத்தா! கதக்கிறயள். பதினெட்டு வருஷமா ஒரு பெண் வச்சிக்கிருந்த நம்பிக்கையை நீங்களெல்லாம் சேர்ந்து நாசம் பண்ணிற்றீங்க! நானும் அதுக்கு உடன்பட்டவனாயிற்றன். இது போக, என் மாமியிடம் என் உம்மா ஒரு சங்கற்ப வாக்குறுதி அளித்திருக்கா, அதையாவது நான் காப்பாற்ற வேண்டாமா?''

''என்ன தம்பி சங்கற்பம்! எல்லாம் சந்தர்ப்பம் தானே! நீ கூட நேத்திராவு உன்ர மாமனாரிடம் விரலை நீட்டி மோதிரத்தை வாங்கிக் கொண்டாய்! ஒரு சபையில் நாலு பெரியவங்க முன்னால், நீ செய்த சங்கற்பத்தை இப்ப மாத்தப் போறாயா? நீ ஒரு படிச்சபுள்ள - நான் ஒரு மடச்சி பேசுறன். யோசிச்சுப் பாரு....'' பாத்திமா இப்படிக் கூறினாள்.

''ராத்தா! நான் படிச்சவன், பெரிய சம்பளம் எடுக்கிறவன். அதனால் தானே என் உம்மா, மாமியிடம் கொடுத்த வாக் குறுதியை அழிக்கிறேன். என் மாமி மகளின் நம்பிக்கையை மோசம் செய்கிறேன். நான் கற்றதன் விளக்கம் இதுதானா? சுபைதா போன்ற பணம் மட்டும் இல்லாத ஒரு பெண், ஒரு எஞ்சினியரைக் கணவனாகப் பெறும் தகுதி அற்றவள் என்று என் தாய் முடிவு செய்த காரணம் என்ன?'' அவதான் இதே சுபைதா வுக்குச் சங்கற்பம் செய்து சாணைக் கூறை போட்டா! இந்தச் சம்பிரதாயத்தையும் அது வளர்த்த நம்பிக்கையையும் மீற நான் தயார் இல்லை ராத்தா!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன் தம்பி! நீ நேத்திராவு கையை நீட்டி மோதிரத்தை வாங்கிக் கொண்டாயே அதுவும் சம்பிரதாயந்தானே! இதனால் இன்னொரு பெண்ணின் மனத்தில் ஒரு ஆசைக்கனலை வளர்த்து விட்டு, தப்பப் பார்க்கிறாய்?''

''என்ர அல்லாவே! என்ர புள்ளங்கி என்னமோ தூள் போட்டுட்டாளுகள். மகுறம் நடந்துபோச்ச. யா முஹ்ஹிதீன் ஆண்டவரே! கப்பலைக் கரைசேர்த்த நீங்கள் தான் என்ரபுள்ளயயும் காப்பாத்தவேணும்!'' இவ்வாறு கூறிப் பிரலாபித்தாள் ஹாஜறா.

ஸவாஹிரின் தலை சுழன்றது. உலகம் முழுவதுமே அவனை நோக்கிக் கேள்வி கேட்பது போன்றிருந்தது. கல், மண், கட்டிடக் கலையில் நிபுணத்துவம் பெற்ற அவன், பொன், மண், பெண் எனும் மூன்றையும் அறியாதவனாகவே நின்றான். ஒரு நிமிஷத்தில் அவன் ஒரு முடிவுக்கு வந்தான். கையில் கிடந்த மோதிரத்தைக் களற்றி உம்மாவின் கையில் கொடுத்தான். அவன் கால்கள் நடந்தன. ஆம்! சுபைதாவின் வீட்டைநோக்கி அவன் கால்கள் நடந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவு திறந்தது

சில்லையூர் செல்வராசன்

கதவு திறந்தது. ஆபீஸ் பையன் கடிதங்களைக் கொண்டு வந்து மேசையின் மீது வைத்து விட்டுச் சென்றான்.

செல்வநாயகன் ஒரு கடிதத்தைப் பிரித்துப் படித்தான். இதயத்தைப் பிழிந்தெடுத்த சோகசாலைகளிலே தோன்றிய ஒரு கோரப்புன்னகை அவன் கடைக் கோணங்களில் மலர்ந்தது. காதலியின் காரணமில்லாத உள்ளக்குமுறலை எழுத்து வடிவத்திலே பார்த்துச் சிரித்தான். ஆம்! பாக்கியத்தின் கடிதம் தான் அது. ''என்னைக் காதலிப்பதாகக் கூறி ஏமாற்றிவிட்டுப் புது மலர்களிலே மதுவருந்துகிறாயே'' என்று கதாபாத்திரம் சொல்வதாக எழுத்தாளர்கள் வரையும் அந்தக் கொடூரச் சொற்கள் கடிதத்தில் இடம் பெறவில்லை. அப்படி எழுதியிருந்தாலும் அதற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கமாட்டான் - பெண்களுக்குச் சந்தேகம் இயற்கை தானே என்ற எண்ணத்தால். ஆனால், கடிதத்தில் சிதறிக்கிடந்த அந்தக் கருத்துக்களை, அந்த வார்த்தைகளைத்தான் நோக்கி அந்த வார்த்தைகளை மறுபடி ஒருமுறை முணுமுணுத்தன - அவன் உதடுகள்.

'நீர் ஒரு புரட்சி மோகன் ஆனால் நான் ஒருசாந்த குமாரி ''பாக்கிய'' வாழ்வு வேண்டும் எனக்கு. நீர் தமிழனுக்குச் சிங்கக் கொடி வேண்டாம் எனப் புரட்சிப் பிரசாரம் செய்கிறீர், தனியாட்சி வேண்டும் - தமிழாட்சி வேண்டும் எனக்கோஷம் செய்கிறீர் - மேடைகளிலே. ஆனால் நான் அதை விரும்பவில்லை ஏனெனில் என் தந்தை முதல் பல தமிழர்கள் வெளியூர்களில் வியாபாரிகள். சிங்களவரின் கையை எதிர்பார்த்து நான் நம் ஜீவியம் நடக்கிறது. கொடி தகாததாயிருக்கலாம். ஆனால் உம் தந்தை போன்ற தமிழ்த் தலைவர்கள் இருக்கத்தக்கதாக நீர் நான் அதற்கெதிராகக் கிளம்ப வேண்டும் என்று அர்த்தமில்லை. ஓர் வார்த்தை அது தான் என் கடைசி வார்த்தை. உமது புரட்சியில் காதல் அல்லது எனது காதலன் இரண்டில் எது வேண்டும்? தோழமையா? விரோதமா?''

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவனுடைய கை விரல்களுக்கிடையே அந்தக் கடிதம் கசங்கியது. ஆனால் அவன் உள்ளம் மலர்ந்தது. அவன் சிரித்தான்.

முன்பெல்லாம் ''கண்ணே'' என்று அன்புடன் தான் அவளை அழைப்பான். ஆனால்.....இன்று? அவள். உள்ளக்கண் குருடாகி விட்டதே!

ஃ ஃ ஃ

இரவு பன்னிரெண்டுமணி. பாக்கியத்தின் அறையில் விளக்கு அணைக்கப்படவில்லை. அது தன் பாட்டிற்கு எரிந்து கொண் டிருந்தது. பாக்கியம் கட்டிலிற் படுத்திருந்தாள். கண்கள் மூடி யிருந்தன. ஆனால் உறங்கவில்லை.

கதவு திறந்தது அவன் வந்தான். அவள் வழித்தாள். அவர்கள் சந்தித்தனர். அவன் மேனகா துஷ்யந்த நாடகம் நடத்திக் காண்பிக்க அங்கு வரவில்லை. தன் வாழ்க்கைப் பிணைப்பிலிருந்து விடுபட அங்கு வந்தான். அவன் சாந்தமாகப் பேசத் தொடங்கினான்.

''நான் எண்ணை நீ தண்ணீர். இரண்டும் கலந்து கொள்ளா மல் பிரிந்துதான் இருக்கும். நீ என்போக்கை விரும்பவில்லை!'' நான் செய்ய வேண்டியது என்ன என்பது தான் என் சிந்தனை யைத் தவிர நீயோ பிறரோ அதைப்பற்றி என்ன எண்ணுவார்கள் என்பதல்ல. நீ விரும்பாததற்கு காரணம் உன் சுயநலம்''

வர வர அவன் வார்த்தைகளில் சூடேற ஆரம்பித்தது. அவள் எழுந்து உட்கார்ந்தாள்.

''தந்தை வியாபாரத்தை விட்டுவிட்டால், நடைக்கொரு குலுக்கும், வெளிக்கொரு பகட்டும், விழிக்கொரு சிமிட்டும், மொழிக்கொரு பசப்பும் செய்து உலவ முடியாதல்லவா? ஒரு சிறு தியாகம் செய்ய உன்மனம் ஒப்பவில்லை சீ! நீ ஒரு தமிழச்சியா? தியாக பூமி என்று புகழப்படும் தமிழ் நாட்டில் பிறந்தவளா நீ?''

கொந்தளித்த கடல் அடங்கியது போல, அவன் கொதித்த வார்த்தைகள் அடங்கின. அவள் பதிலுக்கு பத்திரகாளி வேசம் போடவில்லை. வெட்கத்தால் தரையை நோக்கித் தாழ்ந்தது அவள் தலை.

''பாக்கியம்! என் தந்தை போன்ற தமிழ்த் தலைவர்கள் யாவரும் பதவிப் பித்தர்கள்! சுயநலவாதிகள்!! பரசிரம ஜீவிகள்!!! ஆகவே என்போன்ற இளைஞர்கள் யாவரும் கிளம்ப வேண்டும். விதை முளை போடுவதற்கு ஒவ்வோர் மழைத்துளியும் உதவி

Digitized by Arunachala Foundation
noolaham.org | aavanaham.org

புரியவில்லையா? நீ என்னை எனக்காகக் காதலித்தாய் என்றிருந் தேன். ஆனால்.... பாக்கியம்!... என்னை என் கொள்கைக்காக கடத்திவிட்டாயே! கடலினும் பெரிது காதல்! ஆனால் காதலினும் பெரிது கடமை! தமிழனுக்கு உழைப்பது எம் கடமை! நான் தோழமை பூண்டுவிட்டேன் பாக்கியம் உன்னோடு அல்ல - கடமையுடன்;என் வாழ்விலிருந்து நீ விடைபெறுகிறாய். போய் வருகிறேன். உன் வாழ்க்கையை விட்டே! வந்த நம் பாக்கியம்!''

மறுபடி கதவு திறந்தது. அவன் வெளியேறினான். அவன் இதயக் கதவும் திறந்தது. அதிலிருந்து அவள் வெளியேறிக் கொண்டிருந்தாள்.

நீர் துளிர்த்த அவள் கண்கள் நிலத்தை நோக்கின. கடிகாரத் தில் 'டங்' என்ற ஒரு ஓசை நிலத்தை நோக்கிய கண்கள் நிமிர்ந்து நோக்கின. நேரம் பன்னிரெண்டரை அரை நாளிக்கைக்கு முன் இறுகப் பற்றிக் கட்டி முத்தமிட்டுக் கொண்டிருந்த கடிகாரத்தின் பெரிய முள்ளைச் சிறிய முள்ளை கீழே வீழ்த்திவிட்டது. அவன் அவளை விலக்கியது போல.

மூன்று தினங்களுக்கு முன் செல்வநாயகத்தின் தந்தை அவ ளிடம் வந்திருந்தார். அவருக்கு அவர்களின் காதலைப் பற்றி நன்கு தெரியும். ஆனால் அவர் அதற்குக் குறுக்கே நிற்கவில்லை. ஏனெில் அவள் ஒரு பணக்கார வியாபாரியின் மகள். ஆதனம் ஸ்ரீதனம் அபரிமிதமாகக் கிடைக்குமென்ற எண்ணம் - அவருக்கு.

வந்தவர் ''அவன் அரசியல் சூழலிலே சிக்கிச் சிதையப் போகிறான். அவன் மனதில் நீதான் மாற்றிவிட வேண்டும்'' என்றார் - பாக்கியத்திடம்.

''அவர் உறுதிபடைத்த நெஞ்சராகிற்றே'' அவள் சந்தேகக் குரலில் கேட்டாள்.

''மாற்ற வழியுண்டு பாக்கியம். நீ ஒன்று செய். அவன் தனது போக்கை மாற்றிக் கொள்ளாவிடில், நீ அவனைக் காதலிக்க முடியாது என்று சிறிது கடூரமாக ஒரு கடிதம் வரைந்துவிடு. பிறகு பையன் உன் காலடியில் வந்து விழுந்துவிடுகிறான்.''

சிக்கலைக் குலைப்பதற்கு அவர் கூறிய வழி இது. அவளும் இயைந்துவிட்டாள். கடிதம் என்ற கத்தி, அவர்களின் வாழ்க்கை யைப் பிணைந்திருந்த காதற் கயிற்றை அறுத்துவிட்டது.

மறுபடியும் ''டாங்'' என்ற அந்த ஓசை அவள் சிந்தனை உலகிலிருந்து விடுபட்டாள். நிமிர்ந்தாள் ஒரு மணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் ஐந்து நிமிடங்களில் அந்த ஊசிகள் மறுபடியும் ஒன்று சேர்ந்துவிடுமே! ஆனால் அவனும் அவளும்? அந்த ஊசிகள் ஒன்று சேருவதை ஆசையுடன் பார்த்தாள் ஆனால் ஒன்றும் தெரியவில்லை. ஏனெனில் இருள் சூழ்ந்துவிட்டது காரணம்? கவனிப்பாரற்று எரிந்து கொண்டிருந்ததால் எண்ணை தீர்ந்து போய்விட, விளக்கு அணைந்துவிட்டது - அவள் வாழ்க் கையைப் போல கண்ணில் துளிர்ந்த நீரை அவள் துடைத்துக் கொண்டது அந்த இருட்டில் யாருக்குத் தெரியப் போகிறது.

∴ ∴ ∴

நாயகத்தின் தந்தை, பாக்கியத்திடம் உதவிக்குச் சென்ற தற்குக் காரணங்கள் இல்லாமலுமில்லை.

அதோ அவன் மேடையில் நின்று, சிங்கத்திற்கெதிராகக் கிளம்ப வேண்டுமென்று சிங்கம்போற் கர்ச்சிக்கிறான் ஆம்! செல்வ நாயகன் தான்.

ஆனால் கூட்டம் தடுக்கப்படுகிறது. தடையுத்தரவு பிறப்பிக் கப்படுகிறது. தடுப்பவர்கள் ஜனநாயக அரசாங்கத்தவர்கள் ஆட்சி பீடத்தவர்களின் பிரதிநிதியாக ஒரு தமிழன் தான் கூட்டத்தைத் தடுக்க வந்திருந்தான். தமிழன் கையாலேயே அவன் தொண்டையை நெரிக்கும் தந்திரம் இது. பின்பு நாம் துரோகம் செய்யவில்லை. உங்கள் இனம் உங்களைக் காட்டிக் கொடுத்தது என்று அரசாங்கம் காரணம் காட்டலாமல்லவா?

கூட்டத்துக்குத் தடைபோட வந்த ''தரகர்'' வேறு யாரு மில்லை செல்வநாயகத்தின் தந்தைதான். கூட்டம் கலைகிறது. தந்தையும் மைந்தனையும் தவிர.

''குடும்பப் பெயரைக் கெடுக்கப் புல்லுருவிகளுடன் சேர்ந்து கூச்சலிடுகிறாய்.''

'குறியில்லாத கூக்குரல் கொள்கையில்லாத கூச்சல் - நீங்கள் போடுவது.'

''தமிழ்த் தலைவன் சீர்திருத்தவாதி என்று ஊர்பூராவும் உங்களைப்பற்றிப் பேசுகின்றனரே! சீர்திருத்தவாதியின் வாயிற் சிந்தும் சொற்களா இவை?''

'சீர்திருத்தம் ஊருக்கு! நமக்கல்ல உனக்காக நான் என் பதவியை விட்டு விடுவதா? வேண்டாம் நாயகம் நான் தந்தை என்ற ஹோதாவிற் கூறுகிறேன். அரசியல் மேடையில் தந்தை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் என்ற பேதம் பாராட்ட முடியாது நீ கைது செய்யப்படுவாய். நானே கைது செய்ய வேண்டி ஏற்பட்டு விடும். என் கடமை அது. நீ தன் பாதையிலிருந்து விலகிக் கொண்டால் தான் உனக்கு நன்மை.''

''இல்லை நீங்கள் உங்கள் பதவியிலிருந்து விலகிக் கொண்டால் தான் தமிழனுக்கு நன்மை.''

இது தந்தைக்கும் மகனுக்குமிடையில் நடந்த உரையாடல் இப்போது அவன் போய்விட்டான். தந்தையின் மனக்கதவு திறந்தது. கடமை, பாசம் என்ற இரு பயில்வான்களும் உள்ளே சென்று மற்போர் நடத்தினர். பாசம் சிறிது தலைதூக்கியது.

''காதலின் முன்னே தேசபக்தி பறந்துவிடும்'' என்று எண்ணினார் நாயகத்தின் தந்தை. அது தான் அவர் அவளிடம் சென்று உதவிகோரியதற்குக் காரணம். ஆனால் அவர் எதிர்பார்ப்பதற்கு மாறாக விஷயங்கள் நடந்துவிட்டன. அவன் தன் காதலைத் தியாகம் செய்துவிட்டான் என்று அறிந்ததும் அவருடை மனம் கல்லாகி விட்டது. அவரும் தன் பாசத்தைத் தியாகம் செய்து விட்டார்.

ஃஃ ஃஃ ஃஃ

அன்று அவனுடைய கட்சி மாநாடு. அறிஞர்கள் பேசினார்கள். அவனும் பேசினான்.

''மொழி ஒரு நாட்டின் விழி! அதை உயர்த்த வழி தமிழரசு ஒன்றுதான். ஆனால் நாம் கோடிட்ட ஒரு குட்டிச் சிங்கக் கொடியை மண்டியிட்டுக் குடங்கிக் கிடக்கின்றோம். அடிமையாக்கும் கொடி, அருகில் கோடிட்ட கோடி, அருவருக்கத் தகுந்த கொடி நமக்கு வேண்டாம்.

உங்கள் முன் இரண்டு வழிகள்! ஒன்று நிபந்தனையற்ற சரணாகதி! மற்றுமொன்று புரட்சிப் புதுவழி. பிந்தியது கடியது ஆனால் வீரர் வழி அது. புன்மை இருட்கணங்களைப் 'புஸ்'வாணமாக்கிவிட்டு கிளம்புங்கள் போரொலியுடன்! எங்கே!? நடக்கட்டும் உங்கள் நற்பணி! தொடங்கட்டும் உரிமைப் போர்ப்படை எதிர்ப்பு! கேட்கட்டும் வெற்றிக் கோஷம்! வீழட்டும் வெறி பிடித்த ஆட்சி!''

இது அவன் பேச்சில் ஒரு பகுதி. திடீரெனக் கூச்சல்கள் ஆர்ப்பாட்டங்கள் சண்டைகள். கூட்டத்தின் மீது தடையுத்தரவு! செல்வநாயகன் கையில் விலங்கு! தமிழ் நாட்டிலே பிறந்தும் தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானமற்றுப் போன அத்தமிழ் நீதிபதி, மாத வருவாய்க்காக, குற்றமற்ற தமிழனை அனுப்பிய இடம் சிறை ஜெயில் கதவு திறந்தது - அவனை வரவேற்க!

உரிமைக்காகப் போராடி, உண்மையை எடுத்துக்கூறி, தாய் நாட்டின் தரத்தை உயர்த்த முயற்சித்ததற்காக அவனுக்கு 6 மாதச்சிறைத் தண்டனை - வெலிக்கடைச் சிறையில் அல்ல - தமிழ்நாட்டிலேயே சிறை.

கூட்டத்தில் ஏற்பட்ட எதிர்ப்புகளையும், ஆர்ப்பாட்டங்களை யும் அடக்கிய 'தீரப்', பணிக்காக அவன் தந்தைக்கு உதவிப் பொலிஸ் சுப்பிரின்ரென்டென்ட் என்ற பட்டம் வெறுமனேயல்ல - பாராட்டுக் கூட்டங்களுடன்.

மறியற் கூண்டின் சிறு துவாரங்களினூடாக இயற்கையழகை ரசித்துக் கொண்டிருந்தான் - நாயகன். இயற்கையின் ஒவ்வோரசை யும் ஆறு மாசங்களின் முன் நடந்தவைகளை அவன் ஞாபகத்திற்கு கொண்டு வந்து காட்டியது.

கதவு திறந்தது காவற்காரன் ''ஆறுமாசங்கள் கடந்துவிட்டன தம்பி இன்று உனக்கு விடுதலை'' என்றான் சந்தோஷத்துடன் நாயகன் திரும்பினான் ''உண்மையாகவா?'' என்று கேட்டன - கண்கள்.

திறந்து கிடந்த கதவினூடாக தொலையில் ஒரு கோபுரம் தெரிந்ததும், அதிலே ஒரு கொடி கம்பீரமாகப் பறந்து கொண் டிருந்தது. தமிழனின் தன்மானக் கொடியல்ல - அது. சிங்க(ள)க் கொடி! தமிழ் நாட்டுக் கோபுரத்தில் வேறு கொடி. காற்று ஒரு முறை பலமாக வீசியது. கொடி கிழக்கும் மேற்குமாகக் கூனி ஆடி வளைந்துவிட்டு நிமிர்ந்தது. ஆறு மாசங்களின் முன் சிறிது வளைந்து கொடுத்துவிட்டு இப்போது நிமிர்ந்து நிற்பதைக்காண அவன் மனம் வெதும்பியது.

ஒரு சிரிப்பொலி. சிங்கம் சிரித்தது. அவன் மனக் கண்முன் பாக்கியமும் சிரித்தாள். கேலிச் சிரிப்புகள்! அவனால் அக் காட் சியைச் சகிக்க முடியவில்லை. திரும்ப அந்தத் துவாரங்களினிடம் அடைக்கலம் புகுந்து விட்டான். இயற்கையன்னை அவன் மனத்தைப் பறித்துக் கொண்டாள்.

கதவு திறந்தது. ஆனால் அவன் வெளியேறவில்லை. உள் ளேயேயிருந்து விட்டான் - வெளி உலகுக்கும் வேதனைச் சிறைக்கும் வித்தியாசம் கிடையாது என்ற எண்ணத்தால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் 1950 தொட்டு 1960 வரையிலான காலகட்டத்தை முற்போக்குக் காலம் என வகுத்துக்கொள்வர். ஈழத் தமிழ்ச் சமூகத்தின் விடிவை நோக்கி, அதாவது சமூகப் பிரச்சினைகளான வறுமை, சாதிய அடக்குமுறை, சமூக ஏற்றத்தாழ்வு, இனவொடுக்கள் என்பவற்றுக்கு எதிராக மக்களைச் சமூகப் புரட்சிக்கு ஒன்றிணைக்கின்ற பணியை இக்காலகட்டத்துப் படைப்பாளிகள் முன்னெடுத்துள்ளார்கள். இந்நூல் 38 முற்போக்குக் காலகட்டத்துப் படைப்பாளர்களின் சிறுகதைகளின் தொகுப்பாகும்.

pbd
101002002
MUTPO KALA SERUKA
Rs.800.00

ISBN 978-955-659-xxx-x

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Design & Printed by: KP (Pvt) Ltd. E-mail: kumbhlk@gmail.com